ஆயிரமடங்கு ஆசிர்வதிப்பார்

2. அநேக ஜாதி ஜனங்களுக்கு
கடன் கொடுக்கும் ஜனமாய் ஆசிர்வதிப்பார்

3. விசுவாச மார்கத்தார் ஆபிரகாமின்
ஆசிர்வாதம் பெற்று வாழ்ந்திடுவார்கள்

4. நீதிமான் தலையின் மேல் ஆசிர்வாதங்கள்
எந்நாளும் தங்கி வாழவைக்கும்

5. உண்மையுள்ள மனுஷர் எல்லாருமே
பூரண ஆசிர் பெற்று மகிழ்வார்.

6. பரலோக ராஜ்யம் சுதந்தரிக்க
பரிசுத்த ஜனமாய் ஆசிர்வதிப்பார்

11. உலகம் வேண்டாம் செல்வம்

உலகம் வேண்டாம் செல்வம் வேண்டாம்
உன்னத(ர்) சீயோன் (இயேசு) போதும் போதும்
அல்லேலூயா(3) தேவனுக்கே
அல்லேலூயா(3) ராஜானுக்கே

1. அழிந்து போகும் ஆஸ்தி வேண்டாம்
ஆகாத அறிவும் வேண்டாம்
ஆஸ்தி வேண்டாம் அறிவும் வேண்டாம்
அன்புள்ள இயேசு போதும் போதும்

2. பாழாக்கும் பாவம் வேண்டாம்
பாழ்கடிக்கும் பொய்யும் வேண்டாம்
பாவம் வேண்டாம் பொய்யும் வேண்டாம்
பரிசுத்த இயேசு போதும் போதும்

3. சோதோமின் இன்பம் வேண்டாம்
எகிப்தின் மேன்மை வேண்டாம்
இன்பம் வேண்டாம் மேன்மை வேண்டாம்
என் இயேசு ராஜா போதும் போதும்

4. ஜீவனத்தின் பெருமை வேண்டாம்
சீரழிக்கும் சினிமா வேண்டாம்
பெருமை வேண்டாம் சினிமா வேண்டாம்
பரலோக ராஜா போதும் போதும்

5. கண்களின் இச்சை வேண்டாம்
மாம்சத்தின் இச்சை வேண்டாம்
வேண்டாம் வேண்டாம் இச்சை வேண்டாம்
இனிமையான இயேசு போதும் போதும்

6. அழியவைக்கும் ஆசை வேண்டாம்
ஆராதிக்க சிலையும் வேண்டாம்
ஆசை வேண்டாம் சிலையும் வேண்டாம்
ஆவியான இயேசு போதும் போதும்

C-Maj/CoolBeat/T-104

12. ஏசு பிறந்தார் ஏசு பிறந்தார்

ஏசு பிறந்தார் ஏசு பிறந்தார்
மாட்டு தொழுவத்திலே –2

ஆராரிரோ அல்லேலூயா –2

1. மானிடர் பாவங்கள் போக்கிடவே
மாமன்னர் பிறந்தார் தொழுவத்திலே
ஆராரிரோ அல்லேலூயா –2

2. அதிசயமானவர், நித்தியபிதா
அமைதியின் மன்னர் அவர் பெயரே
ஆராரிரோ அல்லேலூயா –2

3. ஆலோசனை கர்த்தர் வல்லமை தேவன்
நம்மோடு இருப்பவர் இம்மானுவேலர்
ஆராரிரோ அல்லேலூயா –2

4. ஞானிகள் வந்து ஆராதித்து
பொன்தூபம் வெள்ளைபோளம் தந்தனரே
ஆராரிரோ அல்லேலூயா –2

5. சகல ஜனங்களின் சந்தோசமாய்
தாவீதின் ஊரில் பிறந்தவரே

G-Maj/S.Rock/T-100

13. கிருபாவரம் தருகின்ற தேவா

கிருபாவரம் தருகின்ற தேவா
திருப்பாதம் அண்டி தொழுகின்றேன் நாதா

வாழ்த்துகின்றேன் போற்றுகின்றேன் – 2
வாழ்நாளெல்லாம் உம்மை வணங்குகின்றேன்

1. என்னை உமக்காய் தருகின்றேன் தேவா
ஏற்றுக்கொண்டு கழுவி என்னை நிலைநிறுத்தும்
பண்படுத்தி என்னை பயன்படுத்தும்

2. உம்மைபோல நன்மைகள் செய்யும்
வரம் வேண்டும் தந்து என்னை பலப்படுத்தும்
வல்லமையாய் என்னை செயல்படுத்தும்

3. அழிந்துபோகும் ஆத்துமாக்களை
ஆதாதயம் செய்யும் வரம் கொடுத்து வழி நடத்தும்
சபைதனிலே என்றும் நிலைநிறுத்தும்

E-Maj/Disco/T-110

14. பரிசுத்த ஆவியானவரே

பரிசுத்த ஆவியானவரே
உம் வரங்கள் எனக்குத்தாரும்
எனக்குத்தாரும்–2
வரம் கனிகள் எனக்குத்தாரும்

1. ஞானத்தைப் போதிக்கும் வசனங்களும்
அறிவை உணர்த்தும் வசனங்களும்
–எனக்குத்தாரும்

2. கடுகு போன்ற விசுவாசமும்
குணமாக்கும் வரங்களையும்
–எனக்குத்தாரும்

3. அற்புதம் செய்கின்ற சக்தியையும்
தீர்க்கதரிசனம் உரைப்பதையும்
– எனக்குத்தாரும்

4. ஆவியைப் பகுத்து அறிவதையும்
பற்பல பாஷைகள் பேசுவதையும்
– எனக்குத்தாரும்

5. பாஷைகள் வியாக்கனம் பண்ணுவதும்
ஆகிய ஒன்பது வரங்களையும்
– எனக்குத்தாரும்

6. அன்பு, சந்தோஷம், சமாதானம்
நீடிய பொறுமை, தயவு, நற்குணம்
– எனக்குத்தாரும்

7. விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்
ஆகிய ஒன்பது கனிகளையும்
– எனக்குத்தாரும்

A-Maj/Dance-16/T-100

15. பெலன் தரும் தெய்வமே

பெலன் தரும் தெய்வமே
தேவ பெலன் தாருமே–2

1. ஆவியினால் ஆராதிக்கும்
பெலன் தாருமே
ஆனந்தமாய் பாடிடும்
பெலன் தாருமே

2. உன்னத்தின் பெலனை
இன்று தாருமே
உண்மையாக என்றும் வாழ
பெலன் தாருமே

3. கோலியாத்தை வென்றிடும்
பெலன் தாருமே
தாவீதைப் போல் போரிடும்
பெலன் தாருமே

4. எதிரியை துரத்திடும்
பெலன் தாருமே
கிதியோனாய் செயல்படும்
பெலன் தாருமே

5. துதியினால் ஜெயம் பெரும்
பெலன் தாருமே
யோசபாத்தாய் செயல்படும்
பெலன் தாருமே

16. உன்னத தேவன் மறைவிலிருக்கும்

உன்னத தேவன் மறைவிலிருக்கும்
எனக்கு பயமில்லை
வல்லவர் நிழலில் தங்கும்
எனக்கு என்றும் பயமில்லை.

ஆமென் அல்லேலூயா –3.

1. தேவனை நோக்கி அடைக்கலம்
கோட்டை–நம்பிக்கை என்பேனே,
கொள்ளை நோய்க்கும்
வேடன் கன்னிக்கும்
என்னை தப்புவிப்பார் –ஆமென்

2. அடைக்கலமான தேவன்
எனக்கு தாபரமாய் உள்ளார்
பொல்லாப்பு வாதை
அணுகாது என்னை
என்றும் காத்திடுவார் –ஆமென்

3. தேவனை நோக்கி கூப்பிடும் நேரம்
எனக்கு பதில் தருவார்,
ஆபத்து நேரம் என்னோடு இருந்து
என்னைக் காத்திடுவார்–ஆமென்

4. சிங்கத்தின் மேலும், பாம்பின் மேலும்
நடந்தே சென்றிடுவேன்,
தேவனை நம்பி உயர்ந்த அடைக்கலம்
என்றும் பெற்றிடுவேன் –ஆமென்

5. தேவனிடத்தில் வாஞ்சையாய்
இருக்கும்-என்னை விடுவிப்பார்
அவர் நாமத்தை அறிந்த எனக்கு
உயர்ந்த அடைக்கலம் தந்திடுவார் –ஆமென்

17.ஆபத்து நேரத்தில் காத்திடும்

ஆபத்து நேரத்தில் காத்திடும் தேவன் நீரே
அதிசயமாகவே நடத்திடும் தெய்வம் நீரே

1. அஞ்சமாட்டே ன் எதிர்த்திடுவேன்
சாத்தானை மிதித்திடுவேன்,ஆண்டவரே
உம்மாலேதான் தைரியமாய் வாழ்கிறேன்

2. என்னை நோக்கி கூப்பிடு நீ
சீக்கிரமாகவே வந்திடுவேன்,என்றெனக்கு
வாக்கு செய்தீர் எதற்குமே அஞ்சிடேனே

3. வழிகளிலே எனக்காக தூதர்களை
அனுப்பும் தேவா என் பாதம் கல்களிலே
இடறாமல் காத்திடுவார்

A-Maj/Waltz/T-145

18. நீர் சொல்ல ஆகுமே நீர் சொல்ல

நீர் சொல்ல ஆகுமே
நீர் சொல்ல நிற்குமே
நீங்கதான் தெய்வமய்யா–2

உம்மாலே ஆகாத காரியம் ஏதுண்டு
எல்லாமே உம்மாலே ஆகுமய்யா–2

1. கோலை நீர் நீட்டச்சொன்னீர் –2
தண்ணீரும் மதிலாக பிளந்ததய்யா
ஜனங்களும் நடையாக கடந்தாரைய்யா–2
–உம்மாலே

2. மலையை நீர் அடிக்கச் சொன்னீர்–2
தண்ணீரும் நதியாக வந்ததய்யா
ஜனங்களின் தாகமும் தீர்ந்ததய்யா–2
–உம்மாலே

3. ஜாடியை நீர் நிரப்பச் சொன்னீர் –2
தண்ணீரும் ரசமாக மாறினது
மணவீட்டார் குறைகளும் நீங்கினது–2
–உம்மாலே

4. கல்லை நீர் புரட்டச் சொன்னீர் –2
மரித்தோனை உயிரோடு எழும்பச் செய்தீர்
மார்த்தாளை மரியாளை மகிழச் செய்தீர்–2
–உம்மாலே

E-Maj/P.Rock/T-100

19. உம்மையே ஆராதிப்பேன்

உம்மையே ஆராதிப்பேன்
உம்மையே நமஸ்கரிப்பேன்
உம்மையே உயர்த்திடுவேன்
உமக்கே ஊழியம் செய்வேன்

1. அதிசய தேவன் நீரே
ஆலோசனை கர்த்தர் நீரே
ஆயிரம் ஆயிரமாய்
அற்புதங்கள் செய்பவரே—உம்மை

2. தாயின் கருவில் காத்தவரே
தந்தையைபோல் சுமந்தவரே
ஆயுள்வரையும் காப்பேன் என்றீர்
ஆனந்தமாய் பாடசெய்தீர்

3. மகிமையுள்ள தேவன் நீரே
மகத்துவமானவரே
மாட்சிமையுள்ளவரே
மன்னிப்பதில் வள்ளவரே—உம்மை

4. முதலாளி தேவன் நீரே
வேலைக்கார பிள்ளை நானே
எல்லாமே பார்த்துக்கொள்ளும்
என்னுடைய தந்தை நீரே

5. சர்வ வல்ல தேவன் நீரே
சாவாமையுள்ளவரே
சாத்தானை வென்றவரே
சந்தோஷம் தருபவரே

6. யேகோவா ஷம்மா நீரே
என்னோடு இருப்பவரே
யேகோவா ரப்பா நீரே
சுகம் தரும் தெய்வம் நீரே (வைத்தியரே)

D-Maj/Waltz/T-125

20. கலங்காதே திகையாதே

கலங்காதே திகையாதே
கர்த்தர் உன்கூடவே இருக்கிறார்–2

1. வெண்கலக் கதவுகள்,
இருப்பு தாழ்பாள்கள்
உடைத்து நொறுக்கி வழியை
கொடுக்கும், கர்த்தர் உண்டு

2. உனக்கு விரோதமாய்
உருவாகும் ஆயுதங்கள்
தடுத்து அழித்து பாது
காக்கும் கர்த்தர் உண்டு

3. மலைகள் விலகிடும்
குன்றுகள் அகன்றிடும்
மாறாத, விலகாத கிருபை
அளிக்கும் கர்த்தர் உண்டு.

4. கர்த்தரின் நாமமே
பலத்த துருகமே
நீதிமான் ஓடி சுகமாய்
தங்கிட கர்த்தர் உண்டு.

5. கண்ணீர்கள் துடைத்திட
கஷ்டங்கள் தீர்த்திட
மேகத்தில் சிக்கீரம் வந்துன்னை
காத்திடும் கர்த்தர் உண்டு

G-Maj/Polka/T-100

21. ஜெபம் கேளும் தகப்பனே

ஜெபம் கேளும் தகப்பனே ஜெபித்திடவே
வரம் தாரும் தகப்பனே துதித்திடவே

ஜெபித்திட துதித்திட வரம்
தரும் தகப்பனே நன்றி–3

1. மோசேயை போல
புசியாமல் குடியாமல்
ஜெபித்திடும் வரம் வேண்டுமே
– ஜெபித்திட

2. எஸ்தரைப்போல என்
சொந்த ஜனத்திற்காய்
ஜெபித்திடும் வரம் வேண்டுமே
– ஜெபித்திட

3. தானியேல் போல
மூன்று வேளையிலும்
ஜெபித்திடும் வரம் வேண்டுமே
– ஜெபித்திட

4. பரிசுத்த ஆவியால்
மறுபாசை பேசி
ஜெபித்திடும் வரம் வேண்டுமே
– ஜெபித்திட

5. ஆத்தும பாரத்தால்
அழுது புலம்பி
ஜெபித்திடும் வரம் வேண்டுமே
– ஜெபித்திட

6. முழுமனதுடனே
முழங்காலில் நின்று
ஜெபித்திடும் வரம் வேண்டுமே
– ஜெபித்திட

7. தரிசனம் அடைய
தளராமல் தொடர்ந்து
ஜெபித்திடும் வரம் வேண்டுமே
– ஜெபித்திட

G-Maj/Waltz/T-140

22. என்னை நடத்தும் இயேசுவே

என்னை நடத்தும் இயேசுவே
உம்மை துதிக்கும் வேளையில்

உம் கிருபை தாருமே – 4

1. அதிகாலை நேரத்தில்
தேடிடும் கிருபையை
அனுதினம் எனக்குத் தாருமே
– இயேசுவே –2

2. சாத்தானின் சதிகளை
முறியடிக்கும் கிருபையை
சாகும் வரை எனக்குத் தாருமே
– இயேசுவே –2

3. பகலில் பறக்கும் அம்புக்கும்
பாழாக்கும் நோய்க்கும்
விலக்கி என்னை பாதுகாத்திடும்
– இயேசுவே –2

4. பரிசுத்த வாழ்க்கையை
பாதுகாத்து வாழ்ந்திட
பரிசுத்த ஆவி தாருமே
– இயேசுவே –2

5. நன்மை செய்யும் திராணியை
செயல்படுத்தும் கிருபையை
தகுந்த இடத்தில் செய்ய வைத்திடும்
– இயேசுவே –2

F-Maj/Cool Beat/T-104

23. அன்புள்ள தேவன் உன்னோடு

அன்புள்ள தேவன்
உன்னோடு இருக்கின்றார்
அணைத்து அணைத்து
நடத்தியே சென்றிடுவார்

கலங்காதே திகையாதே
கண்மணிபோல் உன்னை
காத்திடுவார்–2

1. பாசமாய் உன்னை பார்த்திடுவார்
பரிசுத்தமாக்கி நடத்திடுவார்
– கலங்காதே

2. வியாதியில் சுகத்தை பெற்றிடுவாய்
துன்பத்தில்இன்பம் அடைந்திடுவாய்
– கலங்காதே

3. கடன் தொல்லை கஷ்டங்கள் மாற்றிடுவார்
கீழாக்காமல்மேலாக்கி நடத்திடுவார்
– கலங்காதே

4. சத்துருவை கீழாக்கி முடக்கிடுவார்
சாபம் நீக்கி சந்தோசம் தந்திடுவார்
– கலங்காதே

F-Maj/Cool Beat/T-104

23A. அன்புள்ள தேவன் என்னோடு

அன்புள்ள தேவன்
என்னோடு இருக்கின்றீர்
அணைத்து அணைத்து
நடத்தியே சென்றிடுவீர்

கலங்கேனே திகையேனே
கண்மணிபோல் என்னை
காத்திடுவீர்–2

1. பாசமாய் என்னை பார்த்திடுவீர்
பரிசுத்தமாக்கி நடத்திடுவீர்
– கலங்கேனே

2. வியாதியில் சுகத்தை தந்திடுவீர்
துன்பத்தில் இன்பம் அடைந்திடுவேன்
– கலங்கேனே

3. கடன் தொல்லை கஷ்டங்கள் மாற்றிடுவீர்
கீழாக்காமல் மேலாக்கி நடத்திடுவீர்
– கலங்கேனே

4. சத்துருவை கீழாக்கி முடக்கிடுவீர்
சாபம் நீக்கி சந்தோசம் தந்திடுவீர்
– கலங்கேனே

5. பகலில் மேகத்தை நிறுத்திடுவீர்
இரவில் வெளிச்சமும் தந்திடுவீர்
– கலங்கேனே

F-Maj/Waltz/T-144

24. என் தேவனே, என் இயேசுவே

என் தேவனே, என் இயேசுவே
தூய ஆவியே துதித்திடுவேன்

1. எனக்குள்ளே வாசம் செய்கின்ற தேவா
என்னைக் கொண்டு உம் சித்தம் செய்திடுமே 2

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

2. என் ஆலயத்தில் வாழ்கின்ற காற்றே
உம் பிள்ளையாக எனை நடத்திடுமே – (2)

3. என்னோடு இருக்கும் என் இயேசுவே
உமை போன்ற ஊழியம் தந்திடுமே – (2)

4. முடிவாக என்னை மூவல்ல தேவா
உம்மோடு பரலோகில் சேர்த்திடுமே – (2)

F-Maj/6/8 TAb-1 /T-103

25. தேவனே என் அடைக்கலம் நீரே

தேவனே என் அடைக்கலம் நீரே
இயேசுவே, என் பெலனும் நீரே

துதித்து (–4) துதித்து பாடுவேன்–2
மகிழ்ந்து (–4) போற்றி பாடுவேன்–2

1. ஆபத்து காலத்தில்கூட
இருந்து காத்து வந்தீரே–2
அனுகூலமாக எனக்கு
துணை நின்றீரே –2

2. பூமி, மலை சமுத்திரத்தில்
சாய்ந்து போனாலும் –2
வெள்ளங்கள்பெருகினாலும்
பயப்படமாட்டேன் –2

3. தேவனுடைய நகரத்திலே
ஓர் நதியுண்டு –2
உன்னத மக்களின்
கூடாரத்தை மகிழ்ச்சியாக்கிடும் –2

4. சேனைகளின் தேவன் நம்
நடுவில் இருக்கிறார் –2
அதிகாலை நேரம் நமக்கு
துணை செய்கிறார் –2

5. சண்டைகளை தடுத்து
தேவன் ஓயப்பண்ணுகிறார் –2
சமாதானம் தந்து நம்மை
மகிழப் பண்ணுகிறார் –2

6. தேவபாதம்அமர்ந்திருந்து
அறிந்து கொள்வோம் –2
இயேசுவே தேவன் என்று
உணர்ந்து கொள்ளுவோம் –2

26. அதிகாலை நேரம் ஆண்டவரை

அதிகாலை நேரம்
ஆண்டவரை துதிப்பேன்
துதிப்பேன் துதிப்பேன்
துதித்திடுவேன்–2

1. இரவெல்லாம் பாதுகாத்த
இரக்கத்தின் தேவனை – துதிப்பேன்

2. பகல் எல்லாம் பாதுகாக்கும்
பரலோக தேவனை – துதிப்பேன்

3. உடன் இருந்து வழி நடத்தும்
உன்னத தேவனை – துதிப்பேன்

4. சிங்கங்களின் கெபியினிலே
காத்திட்ட தேவனை – துதிப்பேன்

5. அக்கினியில் அழியாமல்
அணைத்திட்ட தேவனை – துதிப்பேன்

27. எல்லாம் அறிந்தவரே என்

எல்லாம் அறிந்தவரே
என் இதய தெய்வமே
என்னை மன்னியுமே –2

நான் என்ன செய்தேன்,
நான் என்ன செய்வேன்
எல்லாம் அறிவீரே
என்னை மன்னியுமே

1. இதுவரை நான் செய்த பாவங்களை – 2
இனி ஒருபோதும் செய்யாமல் தடுத்திடுமே

2. உம்மைவிட்டு தூரமாய் போய்விட்டாலும்
உன்னதரே உம்மோடு சேர்த்திடுமே

3. பாவத்தின் கோரத்தால் அழிந்துபோனேன் – உம்
பரிசுத்த இரத்ததாலே கழிவிடுமே

A-Maj/Waltz/T-165

28. வல்லமை அனைத்தும் தந்து

வல்லமை அனைத்தும் தந்துவிட்டார்
ஊழியம் செய்ய தயக்கம் ஏன் ?

மனுசனே மனுசியே
சிந்தித்து நீ செயல்படு –2

1. பரலோகில் உன் பெலன் பெருகிட நீ
ஊழியம்செய், – நீதிமானே நீதிமாளே
சிந்தித்து நீ செயல்படு –2

2. உனக்குள்ள உன் கீரிடத்தை பெற்றுகொள்ள நீ
ஊழியம்செய் – சகோதரா சகோதரி
சிந்தித்து நீ செயல்படு –2

3. எஜமானின் பாத்திரமாய் பயன்பட நீ
ஊழியம் செய் – பாத்திரனே பாத்திரரே
சிந்தித்து நீ செயல்படு –2

4. பெற்று கொண்ட தாலந்துகள் பெருகிட நீ
ஊழியம் செய் – உத்தமனே உத்தமியே
சிந்தித்து நீ செயல்படு –2

5. தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்திட நீ
ஊழியம் செய் – பிரியனே பிரியமே
சிந்தித்து நீ செயல்படு –2

6. மலையின்மேல் உன்பாதம் அழகாய் மாறிட
ஊழியம் செய் – வாலிபனே கன்னிகையே
சிந்தித்து நீ செயல்படு –2

7. பிதாவினால் கனம்பெற இயேசுவுக்கு
ஊழியம் செய் – ஊழியனே ஊழியரே
சிந்தித்து நீ செயல்படு –2

29. என்னை காண்கின்ற வல்லமை

என்னை காண்கின்ற
வல்லமை தேவா
உம்மை பாடி துதித்திடுவேன்
பாடி துதித்திடுவேன்
பாரில் உள்ள நாளெல்லாம்

1. வானத்தில் ஏறி பறந்தாலும்
பாதாளம் சென்று படுத்தாலும்
உம்மை விட்டு எங்கே ஓடுவேன்
என்னை காணும் தேவன் நீரே.

2. நடக்கையும் படுக்கையும் சூழ்ந்துள்ளீர்
உட்கார்ந்து எழுதலை அறிந்துள்ளீர்
என் நினைவுகள் அறிபவரே
என்னை காணும்தேவன் நீரே

3. என் தாயின் கருவில் கண்டவரே
விநோதமாய் என்னை படைத்தவரே
நித்திய வழி நடத்தும் ,
என்னை காணும் தேவன் நீரே

4. வழியில் பள்ளம்கல் கிடந்தாலும்
பாதம் இவைகளில் இடறாமல்
காத்திடும் வல்லவரே
என்னை காணும் தேவன் நீரே

5. செங்கடல் எதிரில் நின்றாலும்
யோர்தான் பொங்கி ஓடினாலும்,
வழிதனை தருபவரே,
என்னை காணும் தேவன் நீரே

D-Maj/Waltz/T-145

30. மன்னிக்கின்ற மாதெய்வமே

மன்னிக்கின்ற மாதெய்வமே
மன்னியுமே மைந்தன் எமை

எங்கு நான் செல்வேன்
உம்மை விட்டு
ஏற்றுக் கொள்ளும்
என் தெய்வமே

1. என்சிரசின் கொடும் சிந்தையாலே
உம் சிரசில்முள் முடி சூடினேன்

2. எந்தன் வாயின் வீண்பேச்சினால்
உம் வாயில் காடி குடிக்கச் செய்தேன்

3. என் உடலில் (சரீர) இச்சையாலே
உம் உடலில் காயங்களே (சவுக்கடியே)

4. என் கைகள் செய்த குற்றத்தாலே
உம் கையில் ஆணி பதிய செய்தேன்

5. எந்தன் நெஞ்சின் சதிமோசத்தால்
உம் நெஞ்சில் ஈட்டி பாய செய்தேன்

6. என் கால்கள் செய்த பாவத்தாலே
உம் காலில் ஆணி பாய செய்தேன்

7. கோபத்தால் உம்மை நோக செய்தேன்
பாவத்தால் உம்மை பலியாக்கினேன்

31. அதிகாலை (ஆராதனை) நேரம்

அதிகாலை (ஆராதனை)
நேரம் ஆண்டவர் சமூகம்
நாடி தேடி ஓடிவந்தேன்
நாதன் இயேசுவை பாடிடுவேன்.

1. இரவெல்லாம் காத்த இரட்சகர் இயேசுவை
இதயம் முழுமையாய் துதித்திடுவேன்

2. செட்டையின் நிழலில் அடைக்கலம் கொடுத்த
ஜெயத்தின் தேவனை துதித்திடுவேன்

3. காலையில் புதிய கிருபையை அளித்து
காக்கும் கர்த்தரை துதித்திடுவேன்

4. செங்கடல் பிளந்து வழிதனைக் கொடுத்த
வல்ல தேவனை துதித்திடுவேன்

32. அந்தி சந்தி மத்தியான

அந்தி சந்தி மத்தியான வேளையிலும்
ஆண்டவரே உம்மை நான் பாடிடுவேன்
பாடிடுவேன் நான் பாடிடுவேன்

அல்லேலூயா நான் பாடிவேன்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா –4

1. இம்மட்டும் காத்த எபிநேசரே இனிமேலும்
காக்கும் இம்மானுவேலே – அல்லேலூயா

2. கண்ணீரை போக்கும் கருணை தேவா
காலமெல்லாம் காக்கும் அருமை தேவா

3. என் பாவம் சுமந்த ஏசுபரா
என்னோடு இருக்கும் யெகோவாஷம்மா

4. மூன்றாம் நாள் உயிர்த்த மகிமை தேவா
மூச்சுள்ள வரையில் பாடிடுவேன்

5. மேகத்தில் வந்து என்னை சேர்க்கும் தேவா
சீக்கிரம் வாரும் வாஞ்சிக்கிறேன்

33. ஓடி ஓடி உன் சமூகம்

ஓடி ஓடி உன் சமூகம் தேடிதேடி நான் வந்தேன்
தேவாதி தேவன் ராஜாதி ராஜன்
என் வாழ்வின் சந்தோஷமே – நீர்

தாயைப்போல தேற்றிடுவீர்
தந்தைபோல சுமக்கின்றீர்

D-Maj/Waltz/T-130

34. உமக்கு ஏற்றவனாய் என்னை

உமக்கு ஏற்றவனாய் என்னை மாற்றிடுமே
உம்சித்தம் செய்திட கிருபை ஊற்றிடுமே

1. உம்மிடம் விசாரித்து
செயல்பட செய்யுமே

தேவனே என்தேவனே;
இயேசுவே என் இயேசுவே–2

2. விசுவாச வீரனாய்
வாழ்ந்திட செய்யுமே –தேவனே

3. பகைவனை நேசிக்கும்
பக்குவம் தாருமே –தேவனே

4. ஊழியம் செய்திட
வாஞ்சையை தாருமே –தேவனே

5. ஆலயத்தின் மேலே
அக்கரை தாருமே –தேவனே

6. என்னோடு இருந்து நீர்
என்னை நடத்துமே –தேவனே

7. குடும்ப அன்பிலே நிலை
பெறச் செய்யுமே –தேவனே

35. துன்பம் மாற்றி இன்பம் தருவார்

துன்பம் மாற்றி இன்பம் தருவார் இயேசு
என்றும் மாறா இன்பம் தருவார் இயேசு

அழியாத இன்பம் வாடாத இன்பம்
பரிசுத்த இன்பம் அது பரலோக இன்பம்

1. வருத்தப்பட்டு பாரம் சுமக்க வேண்டாம்
வருந்தியழைக்கும் இயேசுவண்டைவாராய்
வேகம் நீ வந்தால் வருத்தம் நீங்கி செல்வாய்
சாபம் நீங்கி சமாதானம் பெறுவாய் –துன்பம்

2. பரிசுத்த வாழ்க்கையின் முடிவு
பரலோக பாக்கியம் ஐயா; (அம்மா)
பாவத்தில் நீ வாழ்ந்தால் பாதாளம் சேர்வாய்
பரலோக வாழ்க்கை பெற வாராய்.

3. ஆண்டவர் இயேசு தான் தெய்வம்
அவரன்றி இரட்சிப்பு இல்லை
உன் பாவம் போக்க சிலுவையில் மரித்தார்–2
உயிர் தந்தஇயேசுவிடம் வாராய்
உன்வாழ்க்கை செழிப்பாக மாற

F-Maj/Polka Pop/T-100

36. உம்மைத் தவிர எனக்கு

உம்மைத் தவிர எனக்கு யாருமில்லை
உம்மாலே தான் நான் வாழுகிறேன்

1. சுகமாக்கும் தெய்வம்
நீங்க தானய்யா
விடுவிக்கும் தேவனும்
நீங்க தானய்யா

2. பாவங்களை மன்னிப்பவர்
நீங்க தானய்யா
பாதைக்கு வெளிச்சமும்
நீங்க தானய்யா

3. ஜெபம் கேட்கும் தகப்பன்
நீங்க தானய்யா
பதில் கொடுக்கும் தேவனும்
நீங்க தானய்யா

4. அற்புதமும் அதிசயமும்
நீங்க தானய்யா
அரவணைக்கும் அன்னையும்
நீங்க தானய்யா

5. ஆபத்தில் காப்பவரும்
நீங்க தானய்யா
ஆயுளை கூட்டுவதும்
நீங்க தானய்யா

6. என்னோடு இருப்பவர்
நீங்க தானய்யா
என்றுமே மாறாதவர்
நீங்க தானய்யா

37. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
துதி பாத்திரா பாத்திரா ஸ்தோத்திரம்

1. புதிய ஆண்டு (நாளை) தந்தீரே ஸ்தோத்திரம் –2
புதிய கிருபை தருபவரே ஸ்தோத்திரம் –2

2. வாக்குதத்தம் தந்தவரே ஸ்தோத்திரம்
வாக்கு மாறா தேவனே ஸ்தோத்திரம்

3. கடன் வாங்க காப்பவரே ஸ்தோத்திரம்
கடன் கொடுக்க செய்பவரே ஸ்தோத்திரம்

4. மேலாக்கும் தேவனே ஸ்தோத்திரம்
மேன்மையாக வைப்பவரே ஸ்தோத்திரம்

5. உயர்வாக்கும் தேவனே ஸ்தோத்திரம்
உண்மையாக நடத்திடுமே ஸ்தோத்திரம்

6. விசுவாசம் துவக்கினீரே ஸ்தோத்திரம்
இறுதிவரை நடத்துவீரே ஸ்தோத்திரம்

7. பழைய மனிதன் அழித்தீரே ஸ்தோத்திரம்
புதிய மனிதன் ஆக்கினீரே ஸ்தோத்திரம்

8. பரிசுத்தமாக்கீனீரே ஸ்தோத்திரம்
பரலோகம் தருபவரே ஸ்தோத்திரம்

9. காண்பவரே காப்பவரே ஸ்தோத்திரம்
காலமெல்லாம் நடத்துவீரே ஸ்தோத்திரம்

10. வானத்திலே வருபவரே ஸ்தோத்திரம்
வானில் என்னை சேர்ப்பவரே ஸ்தோத்திரம்

G-Maj/Polka/T-105

38. தடையை நீக்கும் கர்த்தாவே

தடையை நீக்கும் கர்த்தாவே
தாழ்ந்து உம்மை துதிக்கிறோம்
தாயைபோல தேற்றிடும்
தகப்பனைப்போல் சுமந்திடும்

அல்லேலூயா அப்பாவுக்கு அல்லேலூயா

1. வேதனையால் என் நெஞ்சம் நோகுதையா
வேதனையை நீக்கும் தெய்வம் நீர்தானையா
வேதனை நீக்கி ஆறுதல் கொடுத்து – என்–2
ஆனந்தமாய் பாடிட உதவிடுமையா–2

G-Maj/Disco/T-105

38A. வல்லமையை தாருமையா

வல்லமையை தாருமையா வல்லவரே–2
வரங்களை தாருமையா நல்லவரே–2

தாருமையா வரங்களை;
ஊற்றுமையா. வல்லமையை–2

இப்போதே ஊற்றிடுமே... ஐயா –2
என்மீது ஊற்றிடுமே

G-Maj/BlueRock/T-100

39. அகிலத்தைப் படைத்து ஆள்பவரே

அகிலத்தைப் படைத்து ஆள்பவரே
அதிசயம் அற்புதங்கள் செய்பவரே–2
முடவனையும் நடக்கச் செய்தீர்
குருடனையும் பார்க்கச் செய்தீர்–2

உம்மையே போற்றுவோம்
உம்மையே புகழ்வோம்
உம்மையே வாழ்த்துவோம்
உம்மையே வணங்குவோம்

1. உம்முடைய மகா பலத்தினாலும்
நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும்
வானத்தையும் பூமியையும்
உண்டாக்கினீர் உண்டாக்கினீர்
–உம்மையே

2. மாமிசமான யாவருக்கும்
தேவனாகிய கர்த்தர் நீரே
உம்மாலே செய்யக்கூடாத
அதிசயங்கள் ஒன்றுமில்லை
–உம்மையே

3. லாசரை உயிரோடு எழுப்பினீரே
தண்ணீரை திராட்ச ரசமாக்கினீரே
எங்களுடைய வியாதியையும்
சுகமாக்க உம்மாலாகும் (வல்லவரே)
–உம்மையே

4. உயிருள்ளவரைக்கும் உமக்காக
வாழ்ந்திட எங்களை அர்ப்பணிக்கிறோம்
வரங்களினால் கனிகளினால்
நிரப்பி எம்மை பயன்படுத்தும்
–உம்மையே

D-Maj/LatinDiscoUser/T-100

40. என் ஆண்டவரை நான் துதிப்பேன்

என் ஆண்டவரை நான் துதிப்பேன்
என் ஆயுள்வரையும் துதிப்பேன்

துதிப்பேன் துதிப்பேன் உமையே – 2
துதித்திக்கொண்டே நான் இருப்பேன்– 4

1. தேவாதி தேவனை துதிப்பேன் – 2 என்
தேவைகள் எல்லாம் பெறுவேன் – 2
–துதிப்பேன்

2. இயேசுவே உம்மையே துதிப்பேன்– 2 உம்
இரக்கததை அடைந்திடத் துதிப்பேன்–2
–துதிப்பேன்

3. பரிசுத்த ஆவியைத் துதிப்பேன்–2 நான்
பரிசுத்தமாகிடத் துதிப்பேன் – 2
–துதிப்பேன்

4. பரலோக தேவனை துதிப்பேன்–2 நான்
பரலோகம் சேர்ந்திடத் துதிப்பேன் – 2
–துதிப்பேன்

G-Maj/Polka/T-100

41. தேவனைத் துதியுங்கள்

தேவனைத் துதியுங்கள் அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்-ஆ,ஆ,ஆ,ஆ

1. அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில்
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா

தேவனைத் துதியுங்கள் அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்-ஆ, ஆ, ஆ, ஆ

2. அவர் வல்லமை விளங்கும் ஆகாய
விரிவைப்பார்த்துத் துதியுங்கள் - அல்லேலூயா

3. அவர் வல்லமையுள்ள கிரியைகளுக்காக
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா

4. மாட்சிமை பொருந்திய மகத்துவத்திறச்காய்
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா

5. எக்காளத் தொனியோடே அவரைத் துதியுங்கள்
வீணை சுரமண்டலத்தோடே - அல்லேலூயா

6. தம்புரோடும் நடனத்தோடும் - துதியுங்கள்
யாழோடும் தீங்குழலோடும் - அல்லேலூயா

7. ஓசையுள்ள கைத்தாளங்களோடும்
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா

8. பேரோசையுள்ள கைத்தாளங்களோடும்
அவரைத் துதியுங்கள் - அல்லேலூயா

9. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத்
துதியுங்கள் அல்லேலூயா ஆமேன்-
அல்லேலூயா

C-Maj/Waltz/T-140

42. இயேசு என்ற திரு நாமத்திற்கு

இயேசு என்ற திரு நாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்

1. வானிலும் பூமிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித் துதித்திடும் நாமமது

2. வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திரு நாமமது
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே

3. பாவத்திலே மாளும் பாவியைமீட்க
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது
உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது

5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடை முற்றும் அகற்றிடும் நாமமது

C-Maj/Disco/T-120

43. போற்றுவோமே போற்றுவோமே

போற்றுவோமே போற்றுவோமே
எம்தேவரீரை இவ்வேளையிலே நன்றியுடனே - 2

1. துங்கன் ஏசுவே தூயா உமக்கே துதிகள்
சாற்றிடுவேன் - மங்கா புகழும் மகிழ்ந்து போற்றி
எங்கும் துதித்திடுவேன்
கங்குல் அற எங்குமே ஒளி
மங்கிடாமலே தங்கிடவேண்டும்.

2. ஆழ்ந்த சேற்றினில் அமிழ்ந்த எம்மையே
அணைத்து எடுத்தோனே - ஆழி தன்னிலெம்
பாவமெறிந்த அன்னை உத்தமனே
அன்றும் இன்றும் என்றும் துதிப்பேன்
மன்னவனையே மண்ணதினிலே

3. பாவம் போக்கியே சாபம் மாற்றியே
ரோகம் தொலைத்தோனே - துரோகி என்னையே
சுத்திகரித்த தூய மன்னவனே
தூயா நேயா காய மாற்றியே
கருணாநிதியே பரிகாரியே

4. பாரிலென்னையே பிரித்தெடுத்தோனே
தாவி வந்தோனே - அகமதினிலே
ஆவி ஈந்திட அருள் நிறைந்தோனே
தரிசனம் தந்த தேவனே
பரிசுத்தமாய் பாரில் ஜீவிக்க

5. பூரணர் ஆகவே பூவில் வாழ்ந்திட
கிருபை அளித்தோனே -
புகழை விரும்பேன் மகிழ்வேன் தினமே
மகிமை செலுத்திடுவேன்
கோனே தேனே கோதில்லாதோனே
கானம் பாடியே துதித்திடுவேன்

D-Maj/Polka/T-110

44. கோடா கோடி ஸ்தோத்திரம்

கோடா கோடி ஸ்தோத்திரம் பாடி
கிறிஸ்துவின் அன்பை ருசிப்போமே

அனுபல்லவி

சேற்றிலிருந்து தூக்கியெடுத்துத்
தேற்றியணைத்துக் காத்துக் கொண்டாரே-
தேவசுதன்

1. பாவியை மீட்க பரன் சித்தங் கொண்டார்
பரலோகம் துறந்து பாரினில் பிறந்தார்
பரமனின் வேழையைத் தேடி வந்தாரே
பாதம் பணிந்தேன் பதில் ஏதுமுண்டோ பூவுலகில்

2. தேவனின் சித்தம் செய்யும்படியாய்
தாசனின் கோலம் தாமெடுத்தணிந்து
தற்பரன் நொறுக்கச் சித்தங் கொண்டாலும்
தம்மை பலியாய் தத்தம் செய்தாரே எந்தனுக்காய்

3. ஆடுகளுக்காய் உயிர்தனைக் கொடுத்து
கேடு வராது காக்கும் நல் மேய்ப்பன்
இன்றுமென் மேலே வைத்த நேசத்தால்
என்றென்றும் நன்றி கூறித் துதிப்பேன இறையவனை

4. தாவீது கோத்திரச் சிங்கமாய் வந்தும்
சாந்தத்தால் என்னைக் கவர்ந்து கொண்டாரே
தாழ்மையான ஆட்டுக்குட்டியுடனே
தங்கியிருப்பேன் சீயோன் மலையில் நித்தியமாய்

5. குயவனின் கையில் களிமண்ணைப் போல
குருவே நீர் என்னை உருவாக்குமையா
மாசற்ற மணவாட்டியாய் என்னைக்
காத்துக் கொள்ளும்படி கருணை கூர்
ஐயா ஏழை என்னை

45.துதியில் தேவா வருவாய்

துதியில் தேவா வருவாய் - நான்
துதித்துத் துதித்து உம்மைப் பாடி மகிழ்ந்திடவே

அனுபல்லவி
தூயவர் கோமானே துணைபுரிமானே
தூய்மை கிடைக்குமென்று துதிக்கிறேன் நானே

1. துன்பம் இந்நேரம் - உம்மைத்
தொடரத் தொடரப் பேயின் கோபம் மிகுந்திடுதே
இன்பம் மிகுதே தம்பிரான் பாதம்
கெம்பீரம் பாடி அம்பரமேக

2. கலங்குதே இந்நேரம் - என்
கலமும் துலக்கமின்றி மயங்கித் தியங்குகின்றேன்
காடிதான் தேனோ கல்வாரி மலையில்
கருதுவோர் பருகும் கானாவூர் ரசமே

3. அகமே வரந்தருவாய் - நான்
அல்லும் பகலும் உம்மைப் பாடி மகிழ்ந்திடவே
தியாகஞ் செய்யவே ஏகோவா பாதம்
தாகம் மிகுந்தேன் ஏழையிந்நேரம்

4. ஆறு லட்சம் பேரில் - நடு
உதித்து உதித்துச் சென்ற அதிரூப பொரூபா
கூறினீரல்லோ கூடியிருக்கக்
கொற்றவர் சேவை குறைவின்றி ஓழுக

5. மகிபன் இயேசு துரையே
மகிழ்ந்து மகிழ்ந்து தினம் பாடித் துதித்து வரும்
மங்கையர் கானம் மாசில்லாதல்லோ
தங்கப் பொன்னேசு சர்வாதிகார

G-Maj/Polka/T-100

46.ஜெகமதில் உதித்த ஜெய

ஜெகமதில் உதித்த ஜெய ஜோதியே - நரர்
சேயர்கள் துதித்திடும் திருவடியே

அனுபல்லவி
பாரில் பரனாக நீரே
பாவிகட்காய்ப் பலியானீர்
அன்பால் என்னை ஆட்கொண்டீரே
அதிரூப சுந்தரனே

1. பாவயிருள் நீக்கிப் பாரினிலே - பரன்
பாவிகள் பாவம் போக்க பலியானீரோ
சாபத்தை முற்றும் தொலைத்திடவே
சக்தியாக உயிர்த்திட்டிரோ
அரூபா சொரூபா அற்புதனே
ஆனந்த பொற்பரனே

2. எந்தனின் நீதியெல்லாம் கந்தையல்லோ நீர்
எந்தனின் சிறப்பான தாரகமே
அன்பே ஆனந்தப் பேரொளியே
ஆதியந்தமில்லாப்பரனே
கதியே நிதியே கருணாகரா
காத்திடும் புகலிடமே

3. ஏழையென்னில் தாகம் கொண்டதாலே - எழில்
ஏகன் எனக்கு திவ்யாகாரமே
தாகமிஞ்சி வாடுறேனையா
தனியானேன் இத்தாரணியில்
காசினியில் நேசரைப் போல்
காணுவேனோ கல்வாரியின் காந்தரூபா

4. எப்போ உம்மைக் கண்டு
மகிழ்ந்திடுவேன் - அண்ணல்
இயேசுவே இன்பமான மணவாளனே
கன்மலைவெடிப்பில் தங்குமென்
உத்தமியே என்றழைக்கும் சத்தம்
கேட்கும் கீதம் ஆ!
இன்பமே கூறிடீரோ அன்பரே

D-Maj/6-8 Balled/T-120

47.துதிக்கிறோம் தேவனே உம்

துதிக்கிறோம் தேவனே உம் நாமமதையே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் அல்லேலூயா
அல்லேலூயா (7)

1. தேவனே நீர் பெரியவர், தேவனே நீர் வல்லவர்
தேவனே நீர் மகத்துவர், தேவனே நீர் நல்லவர்

2. கர்த்தர் இரக்கமுள்ளவர், கர்த்தர் உருக்கமானவர்
கர்த்தர் சாந்தமுள்ளவர், கர்த்தர் கிருபை மிகுந்தவர்

3. கர்த்தர் ஆவியானவர், கர்த்தரே வான் அக்கினி
கர்த்தர் தேற்றவாளன், கர்த்தர் உன்னத பெலன்

4. இயேசுவே நீர் இரட்சகர் இயேசுவே நீர் வைத்தியர்
இயேசுவே நீர் அற்புதர், என்றுமே மாறாதவர்

5. இயேசுவே மணவாளன் - சீக்கிரம் வருகிறார்
இயேசுவே வாரும் வாரும் ஸ்தோத்திரம் ஆமென்
ஆமென்

48. ஸ்தோத்திர துதி மகிமை

ஸ்தோத்திர துதி மகிமை
எந்நாளும் என் கர்த்தருக்கே
ஆவியினால் நல் கருத்துடனே
என் ஆண்டவரைப் பாடுவேன்

1. புது ஜீவன் புது பெலன் புது கிருபை
புதிய நல் ஆவியும் அளித்தாரே
பழையவைகள் ஒழிந்தனவே
புதுமையாய் மாற்றினாரே

2. கண்களும் கர்த்தரை நோக்கிடவே
பரத்தின் ஒத்தாசை அளித்தாரே
இராப்பகலாய் கண்ணுறங்காமல்
காத்திடும் கர்த்தரவர்

3. நன்மையும் கிருபையும் தொடர்ந்திடவே
நீதியின் பாதையில் நடத்தினாரே
புது எண்ணெயால் அபிஷேகித்து
பாத்திரம் நிரம்பச் செய்தாரே

4. ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே
நன்றியினால் உள்ளம் நிறைந்திடுதே
ஜீவன் என்னில் நிலைத்திருக்கும் வரை
என் தேவனேத் துதித்திடுவேன

F-Maj/GospelShuffle/T-85

49. துதியுங்கள் நம் தேவனே

துதியுங்கள் நம் தேவனே
போற்றுங்கள் வல்லவரை - 2
தூதர்கள் போற்றிடும் தூய தேவனே
பாடிடுவோம் - 2

1. பாவச் சேற்றில் இருந்த என்னை
பாசத்தால் அவர் இழுத்துக் கொண்டார் 2
பாரமான பாவசுமைதனையே
பரமன் நீக்கினார் - 2

2. கடந்த வாழ்நாளில் கர்த்தர் என்னை
கண்மணி போல் பாதுகாத்தார்
காலமெல்லாம் உம்மை நினைத்திடுவோம்
கருத்தாய் பாடிடுவோம் - 2

3. தாயின் கருவில் இருந்த என்னை
தள்ளிடாமல் எடுத்தணைத்தார்
தாகம் தீர ஜீவ தண்ணீரையும்
தயவாய் தந்திட்டார் - 2

50.துதித்திடுவேன் தூயவர்

துதித்திடுவேன் தூயவர் இயேசுவை
தூய ஆவியால் நிறைந்து மகிழ்ந்து
துதித்துப் போற்றிடுவேன்

1. அக்கினி சோதனை
அலை மோதும் போதும்
உம்மாலேசேனைக்குள்பாய்ந்திடுவேன்
உம்மாலே மதிலைத் தாண்டி சென்றிட
பெலனும் ஈந்தீரே - உம்மை
போற்றாமல் துதியாமல் இருப்பேனோ - 2 துதி

2. முன்னும் பின்னும் உம் வழியை
அறியாமல் திகைக்கும் வேளையில்
செம்மையான பாதையில் நடக்க
வழியையும் காட்டினீரே - உம்மைப்
போற்றாமல் துதியாமல் இருப்பேனோ - 2 துதி

3. பெருவெள்ளம் சீறி மோதுகையில்
பெருங் கன்மலையின் நிழலுமானீர்
உறுதியாய் உம்மில் நிலைத்து நிற்க
உறைவிடம் அளித்தீரே - உம்மை
போற்றாமல் துதியாமல் இருப்பேனோ - 2 துதி

4. யோர்தான் போன்ற சோதனைகள்
பிரவாகித்து வரும் வேளையிலே
மனம் பதறாமல் நிலைத்து நின்று
கனி தரச் செய்தீரே - உம்மைப்
போற்றாமல் துதியாமல் இருப்பேனோ - 2 துதி

D-Maj/SlowRock/T-125

51.ஜாதிகளே எல்லோரும் கர்த்தரை

ஜாதிகளே எல்லோரும் கர்த்தரை
ஏகமாய் துதித்துப் போற்றிடுங்கள்

அனுபல்லவி
தேவன் அளித்த நன்மை பெரியதே
கர்த்தரின் உண்மை என்றும் மாறிடாதே

1. இன்றைய தினம் கூடி உம்மைப் போற்றி பாடிட
ஈந்தளித்தீர் உந்தன் கிருபை
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
என்றும் அவர் துதி பாடி மகிழ்வோம்

2. ஜீவன் சுகம் பெலன் யாவும் இயேசு தந்தார்
சேதமின்றி எனைக் காத்தாரே
ஜீவியப் பாதையிலே தேவை தந்து
ஜெய கீதம் பாட ஜெயமளிப்பார்

3. பாவ சாப ரோகம் முற்றும் என்னில் நீக்கி
சாவு பயம் யாவும் போக்கினார்
சோதனை வேதனை சூழ்கையிலே
சோர்ந்திடாமல் தாங்க பெலனளிப்பார்

4. எந்தன் பாவம் யாவும் மன்னித்து மறந்தார்
சொந்தப் பிள்ளையாக மாற்றினார்
நாடியே வந்தென்னை ஆதரித்து
வாக்களித்தார் நித்திய ஜீவன் ஈந்திட

5. வானம் பூமி யாவும் மாறிப் போகும் ஓர் நாள்
வானவரின் வாக்கு மாறாதே
நீதியின் சூரியன் தோன்றிடும் நாள்
சேர்த்திடுவார் ஆவலாய்க் காத்திருப்போரை

D-Maj/Disco/T-115

52. ஸ்தோத்திரம் இயேசு நாதா

ஸ்தோத்திரம் இயேசு நாதா
துதி உமக்கே ஸ்தோத்திரம்
என் இதயம் உம்மையே சாரும்
ஏழையின் ஜெபம் கேளும்
அதுவே பேரின்பம்

1. அத்தி மரங்களெல்லாம் -
ஒன்றாய்த் துளிர்விடா நேரம்
ஆட்டு மந்தையிலும் -
இன்றும், முதல் இழந்தாலும்
ஆச்சரியமாய், நடத்துவீரே,
அற்புதரே தேடி வந்தேன்
ஏழையின் ஜெபம் கேளும்

2. நியாயம் இழந்தாலும்
நீரே நீதி செய்வீர்
காயம் ஆறிடவே
எந்தன் சகாயரானீரே
ஆற்றிடுவீர், போற்றிடுவேன்
ஆதி அன்பை நாடி வந்தேன்
ஏழையின் ஜெபம் கேளும்

3. அந்தகாரமதில் எந்தன்
நிந்தை மாற்றிடுவீர்
எந்த வேளையிலும் -
இரட்சகர், எந்தன் கரம் பிடிப்பீர்
உந்தன் கிருபை தந்தருள்வீர்
வந்தேன் நாடி இந்த வேளை
ஏழையின் ஜெபம் கேளும்

53. இஸ்ரவேலின் துதிக்குள்

இஸ்ரவேலின் துதிக்குள்
வாசம் பண்ணும் தேவனே
இந்நேரம் அடியாரின் துதிகள்
மத்தியில் இறங்கி வந்திடுமே

1. உம் வாசல்களில் துதியோடும்
உம் பிரகாரத்தில் புகழ்ச்சியோடும்
உம்மைத் துதித்திடவே பிரவேசித்திட்டோம்
உயர்த்தியே போற்றுகிறோம் - 2

2. இஸ்ரவேலின் எக்காளம் மகா
ஆரவாரத்து முழக்கத்தின் மேல்
எரிகோவின் அலங்கம் விழுந்தது போல்
இப்போ சத்துருவின் கோட்டைகளை
இடித்து தகர்த்திடுமே - 2

3. எதைக் குறித்தும் கவலைப்படாமல்
எல்லா விண்ணப்பமும் ஏறெடுங்கள்
என்று ஸ்தோத்திர ஜெப வேண்டுதலோடு
இப்போது எல்லா புத்திக்கும் மேலான
உம் சமாதானம் ஈந்திடுமே - 2

4. ஆசாரியர் லேவியர் ஒருமித்தும்மை
ஏக சத்தமாய் துதித்துப் பாடிடவே
ஆலயம் மகிமையால் நிரம்பினது போல
ஆலயமாய் எம்மை பூவில் காண
உம் மகிமையால் நிரப்பிடுமே - 2

5. உம் கிருபையின் மகிமைக்குமே
எம்மை புகழ்ச்சியாய் முன் குறித்தீர்
எம் சுதந்தரத்தின் அச்சாரமாக
எம்மை மீட்கவே முத்தரித்தீரே
உம் ஆவியானவரால் - 2

E-Min/OffBeat/T-136

54. துதிப்பதும் ஸ்தோத்தரிப்பதும்

துதிப்பதும் ஸ்தோத்தரிப்பதும்
எங்கள் சந்தோஷமே
ஜெபிப்பதும் வேதம் வாசிப்பதும்
எங்கள் சந்தோஷமே

1. எங்கள் உள்ளமதிலே இயேசு வந்ததினால்
எங்கள் சந்தோஷமே
இந்த லோகம் தராத சந்தோஷமே
எங்கள் சந்தோஷமே

2. காலை எழுவதும் பாடி மகிழ்வதும்
எங்கள் சந்தோஷமே
புது கிருபையால் தினம் நிறைவதும்
எங்கள் சந்தோஷமே

3. பரிசுத்த ஆவியில் ஜெபம் பண்ணுவதும்
எங்கள் சந்தோஷமே
பரன் இயேசுவில் களிகூறுவதும்
எங்கள் சந்தோஷமே

4. இயேசு ராஜனையே பாடிப் போற்றுவதும்
எங்கள் சந்தோஷமே
அவர் சுவிசேஷத்தை பறை சாற்றுவதும்
எங்கள் சந்தோஷமே

5. விசுவாசத்தின் நல்ல போராட்டமே
எங்கள் சந்தோஷமே
பெரும் வெற்றியுடன் பரம் சென்றிடவே
எங்கள் சந்தோஷமே

6. கடைசி எக்காள தொனி கேட்டிடவே
எங்கள் சந்தோஷமே
கண்ணிமைப் பொழுதில் மறுரூபமாவதும்
எங்கள் சந்தோஷமே

E-Maj/Disco/T-115

55. சரணம் சரணம் சரணம்

1. சரணம் சரணம் சரணம்
சரணம் சச்சிதானந்தா
சரணம் சரணம் சரணம்
சரணம் நித்தியானந்தா
சத்திய வழியும் ஜீவனுமான
சற்குரு ஆனந்தா
நித்திய வாழ்வினை தந்திட
வந்த நிர்மல ஆனந்தா

அல்லேலூயா ஓசன்னா! - 4
அல்லேலூயா அல்லேலூயா
ஓசன்னா! ஓசன்னா!
அல்லேலூயா அல்லேலூயா
ஓசன்னா! ஓசன்னா! - 8

2. தருணம் தருணம் தருணம்
தருணம் தற்பரனே தருணம்
தந்தையின் அன்பை தந்திட்ட
எங்கள் சற்குருவே சரணம்
விந்தை மனிதரை ஒளிதனில்
நடத்திட உதவிடுவாய் சரணம்
தருணம் இதுவே மீட்பினை
பெற்றிட செய்திட்டோம் சரணம்-அல்லேலூயா

3. சரணம் சரணம் சரணம்
சரணம் சச்சிதானந்தா
சரணம் சரணம் சரணம்
சரணம் நித்தியானந்தா
முத்தி முதலாய் இருந்த
எங்கள் முன்னவனே சரணம்
சித்தி பெற்றிட சித்தம்
செய்திட பணிந்திட்டோம் சரணம்-அல்லேலூயா

56. நன்றியால் துதி பாடு

நன்றியால் துதி பாடு
நம் இயேசுவை
உள்ளத்தால் என்றும் பாடு

வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர்

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும்- நன்றி

2. துன்மார்க்க ஏதுவான வெறி கொள்ளாமல்
தெய்வ பயத்தோடு என்றுமே
ஆவியினால் என்றும் நிறைந்தே
சங்கீத கீர்த்தனம் பாடு- நன்றி

3. சரீரம், ஆத்துமா ஆவியிலும்
சோர்ந்து போகும் வேளையில் எல்லாம்
துதி சத்ததால் உள்ளம் நிறைந்தால்
தூயரின் பெலன் கிடைக்கும் -நன்றி

4. செங்கடல் நம்மைச் சூழ்ந்து கொண்டாலும்
சிலுவையின் நிழலுண்டு
பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்துவிடும்

5. கோலியாத் நம்மை எதிர்த்து வந்தாலும்
கொஞ்சமும் பயம் வேண்டாம்
இயேசு என்னும் நாமம் உண்டு
இன்றே ஜெயித்திடுவோம்

A-Maj/Disco/T-125

57. தேவனை உயர்த்தித் துதி

தேவனை உயர்த்தித் துதியுங்கள்
அவர் நாமத்தைப் போற்றியே
தேவனின் செயல் அதிசயமென்று
அதிசயமென்று சொல்லி

1. கொடியவரின் சீறல் கடுமையாய் வரினும்
திட பெலனும் ஏழைக்கடைக்கலமுமானார்
படும் பலவந்தர் ஆரவாரமென்றும் ஆரவாரம் என்றுமே

2. இவரே நம் தேவன் இவர் நம்மை இரட்சித்தார்
இவரின் ரட்சிப்பினால் களி கூர்ந்திடுவோம்
இவர் பகைவனை வென்று கீழ்ப்படுத்தி
வென்று கீழ்ப்படுத்தினார்

3. கர்த்தரையே நம்பி சத்தியம் கைக்கொண்ட
உத்தம ஜாதியே உட்பிரவேசியுங்கள்
பக்தருக் கென்று பலத்த நகரம் பலத்த நகரம் உண்டு

4. அன்னியர் ஆள்வதில்லை இந்நிலம் தன்னில் நம்மை
மன்னாதி மன்னனே நம் மகிபனாயிருப்பார்
மன்னரும் தேவ சமாதானந் தங்கும்
சமாதானம் தங்கிடுமே

5. புனிதராய் மரித்தோர் பூரித்தெழும்புவார்
பனிபோல் கிருபையை பக்தரின் மேல் பொழிவார்
இனி உலகத்தில் இன்னல் பெருகிடும்
இன்னல் பெருகிடுமே

6. மறைவிடமுமுண்டு மன்னனின் ஜனத்திற்கே
குறை விசாரிக்கும் கோபத்தின் நாளிலே
அறைக்குள் மறைந்து ஆனந்திக்கும் சபை
ஆனந்திக்கும் சபையே

7. சிறந்த விருந்தொன்று சீயோன் மலையின் மீது
அருந்த யாவருக்கும் ஆயத்தமாக்குவார்
நிந்தையை நீக்கிக் கண்ணீரைத் துடைத்துக்
கண்ணீரைத் துடைத்திடுவார்

C-Maj/Disco/T-120

58. துதியே துதியே துதியே துதியே

துதியே துதியே துதியே துதியே
துதியுமக்கே துதியே (2)

1. தூத கணங்கள் தூயவர் உந்தன்
பாத சேவை செய்து பணிந்தும்மைத் துதிக்கும்
வேத முதல்வனும் நீர்

2. அண்டசராசரம் அனைத்துமே ஒன்றாய்
விண்டலாதிபா வியந்தும்மைத் துதிக்கும்
மண்டலாதிபனும் நீர்

3. பரிசுத்ததர் யாவரும் பரமனே உம்மைத்
தரிசிக்க நாடி தாழ்ந்தும்மைத் துதிக்கும்
பரிசுத்த தேவனும் நீர்

4. அந்தகாரத்தின் அடிமைகளுக்கு
சுந்தர ஒளியை சுடரிடச் செய்ய
வந்த குமாரனும் நீர்

5. மீட்கப்பட்டவர் ஆனந்தங் கொண்டு
பாட்டுகள் பாடி மகிழ்ந்தும்மைத் துதிக்கும்
ஆட் கொண்ட நாதனும் நீர்

6. கர்த்தாதி கர்த்தனே இராஜாதி ராஜனே
நித்தியமான எம் தேவாதி தேவனே
துத்தியம் செய்திடுவோம்

59. பாடுவேன் நான் என்றும் புதுப்

பாடுவேன் நான் என்றும் புதுப் பாடல்கள்
தேடுவேன் நான் என்றும் தெய்வ சிநேகமே

அனுபல்லவி
தியாகத்திலே சங்கீதமே
சிநேகத்திலே ஆனந்தமே

1. வேதனையால் எந்தன் உள்ளம்
சோர்ந்திடும் போது நாதா
உம் அருகே வந்திடுவேன்
தங்கிடுவேன் உம் கைகளிலே்

2. லோக பாரம் மாறிடுமே
துன்பங்களும் நீங்கிடுமே
உந்தன் ராஜ்யம் நித்தியமதே
சேர்த்திடுமே சொர்க்க ராஜ்யம்

3. கல்வாரியைக் கண்டிடுவேன்
காருண்யவான் என் நாதனே
காலமெல்லாம் உம் சேவைக்கே
ஜீவிப்பேன் நான் என் இயேசுவே

E-Maj/Disco/T-115

60. ஆதியும் நீரே அந்தமும் நீரே

ஆதியும் நீரே அந்தமும் நீரே
மாறிடா நேசர் துதி உமக்கே
தேவ சபையில் வாழ்த்தி புகழ்ந்து
எந்நாளும் துதித்திடுவோம்

1. தூதர்கள் போற்றும் தூயவரே
துதிகளின் பாத்திரர் தேவரீரே
உந்தனின் சமூகம் ஆனந்தமே
உந்தனைப் போற்றி புகழ்ந்திடுவோம்

2. வல்லமை ஞானம் மிகுந்தவரே
வையகம் அனைத்தையும் காப்பவரே
ஆயிரம் பேர்களில் சிறந்தவராம்
ஆண்டவர் இயேசுவில் மகிழ்ந்திடுவோம்

3. செய்கையில் மகத்துவம் உடையவரே
இரக்கமும் உருக்கமும் நிறைந்தவரே
பரிசுத்த ஸ்தலத்தில் துதியுடனே
பரிசுத்த தேவனை வாழ்த்திடுவோம்

4. ஆண்டவர் இயேசுவை தொழுதிடுவோம்
ஆவியில் நிறைந்தே களித்திடுவோம்
உண்மையும் நேர்மையும் காத்தென்றுமே
உத்தம தேவனை பணிந்திடுவோம்

5. ஸ்தோத்திர பலிதனை செலுத்திடுவோம்
பாத்திரர் அவரை உயர்த்திடுவோம்
மகிமையும் கனமும் துதிகளையே
செலுத்தியே இயேசுவை துதித்திடுவோம்

E-Maj/Dance/T-110

61. தேவ ஜனமே பாடி துதிப்போம்

தேவ ஜனமே பாடி துதிப்போம்
தேவ தேவனை போற்றுவோம்
துதிகள் என்றும் ஏற்றியே
அவரைப் பணிந்திடுவோம்

1. சென்ற நாளில் கண்ணின் மணிபோல்
காத்த தேவனை துதித்திடுவோம்
நீதி தயவு கிருபை நல்கும்
ஜீவ தேவனை துதித்திடுவோம்

2. வானம் பூமி ஆளும் தேவன்
வாக்கை என்றுமே காத்திடுவார்
அவரின் உண்மை என்றும் நிலைக்கும்
மகிமை தேவனை துதித்திடுவோம்

3. கர்த்தர் நாமம் ஓங்கி படர
தேவ மகிமை விளங்கிடவே
தேவ சுதராம் சேவை செய்து
தேவ ராஜனை வாழ்த்திடுவோம்

4. தம்மை நோக்கி வேண்டும் போது
தாங்கி என்றுமே ஆதரித்தார்
மறந்திடாமல் உறங்கிடாமல்
நினைத்த தேவனை துதித்திடுவோம்

5. நமது போரை தாமே முடித்து
ஜெயமே என்றும் அளித்திவார்
சேனை அதிபன் நமது தேவன்
அவரை என்றும் போற்றிடுவோம

62. கர்த்தரின் பல நன்மைகளை

கர்த்தரின் பல நன்மைகளை எண்ணி
கருத்துடனே துதித்திடுவேன்
களிகூர்ந்து மகிழ்ந்திடுவேன்

1. நடந்து வந்த வழிகளெல்லாம்
நல்லவரின் கரம் சுமந்ததுவே
ஆறுதல் ஆதரவும் அளித்தாரே
ஆபத்திலே உற்ற துணையவரே

2. வஞ்சகன் வீசின வலைகளிலே
சிக்கிடாமல் பாதுகாத்தனரே
தாயினும் மேலாக நேசித்தாரே
தாரணியில் என் தஞ்சமும் அவரே

3. ஜெயமான பாதைகளில் செல்ல
சேனை வீரராய் முன் செல்லுவாரே
கண்ணை என் மீது வைத்திடுவாரே
கற்பிப்பாரே தேவ ஆலோசனைகள்

4. தூயனின் அன்பிலே நாளும் வளர
தூய ஜீவியத்திலும் முன்னேற
தருவாரே தினம் கிருபைகள்
தயங்காது பாடு சகித்திடவே

5. மரண இருளில் நடந்தாலும்
பரமன் என்னோடே இருப்பாரே
பரத்திலே பல வீடு உண்டே
சிகரத்தில் நிற்பேன் அவரோடே

D-Maj/Rumba/T-105

63. தொழுகிறோம் எங்கள் பிதாவே

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

அனுபல்லவி
பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

1. வெண்மையும் சிவப்புமானவர் - உண்மையே உருவாய்க்
கொண்டவர் - என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம்

2. தலை தங்கமயமானவர் - தலை மயிர் சுருள்
சுரளானவர் - பதினாயிரம் பேரில் சிறந்தவர்
பதினாயிரமாம் சரணம் சரணம்

3. கண்கள் புறாக்கண்கள் போல - கன்னங்கள் பாத்திகள்
போல - சின்னங்கள் சிறந்ததாலே
எண்ணில்லாத சரணம் சரணம்

4. கரங்கள் பொன் வளையங்கள் போல - நிறங்களும்
தந்தத்தைக் போல - கால்களும் கல் தூண்கள் போல
காண்பதாலே சரணம் சரணம்

5. சமஸ்த சபையின் சிரசே - நமஸ்காரம் எங்கள் அரசே
பிரதான எம் மூலைக் கல்லே
ஏராளமாம் சரணம் சரணம்

6. அடியார்களின் அஸ்திபாரம் - அறிவுக்கெட்டாத
விஸ்தாரம் - கூடி வந்த எம் அலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம்

7. பார்த்திபனே கன ஸ்தோத்திரம் - கீர்த்தனம் மங்கள
ஸ்தோத்திரம் - வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமேன் ஆமேன்

A-Maj/Disco/T-110

64. துதித்துப்பாடிட பாத்திரமே

துதித்துப்பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

ஆ! அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

1. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மை காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே

2. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிக பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே

3. இந்த வனாந்திர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே

4. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே

C-Min/Disco/T-105

65. ஸ்தோத்திரம் துதி பாத்திரா

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்

அனுபல்லவி
காத்தீரே என்னை கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் என்னையும் உமக்காக
கொடுத்தீர் உமையும் எனக்காக

1. வான ஞான வினோதா - துதியே துதியே
துதித்திடுவேன் - எல்லாக் குறையும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே - அல்லல் யாவும்
அறுத்தீரே - அலையும் என்னையும் மீட்டீரே

2. நம்பினோரை காக்கும் தேவா - துதியே துதியே
துதித்திடுவேன் - அம்புவி யாவையும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே - எம்பரா எல்லாம்
ஈந்தீரே - நம்பினோர்க் குந்தன் தயவாலே

3. கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத் துதியே
துதியே துதித்திடுவேன் - அண்ணலே உந்தன்
அருளாலே - அடியாரை கண்பார்த்தீரே
மன்னா எமக்கும் நீர் தானே
எந்நாளும் எங்கள் துணை நீரே

4. தீயோன் அம்புகள் தாக்காதே எம்மைத் துதியே
துதியே துதித்திடுவேன் - தேவனே நீர் உந்தன்
சிறகாலே - தினமும் மூடிக் காத்தீரே
தீதணுகாதும் மறைவினிலே
தேடியுமதடி தங்கிடுவேன்

5. அல்லேலூயா ஸ்தோத்திரமே - துதியே துதியே
துதித்திடுவேன் - அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியாதிருப்பேனோ
அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையே துதித்திடுவேன்

C-Maj/Waltz/T-140

66. ஸ்தோத்திரம் இயேசுநாதா

1. ஸ்தோத்திரம் இயேசுநாதா உமக்கென்றும்
ஸ்தோத்திரம் இயேசுநாதா
ஸ்தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
திருநாமத்தின் ஆதரவில்

2. வான தூதர் சேனைகள் மனோகர
கீதங்களால் எப்போதும்
ஒய்வின்றி பாடித்துதிக்கப் பெறும்
மன்னவனே உமக்கு

3. நின் உதிரமதினால் திறந்த நின்
ஜீவ புது வழியாம்
நின் அடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்

4. இத்தனை மகத்துவமுள்ள பதவி
இப்புழுக்களாம் எங்களுக்கு
எத்தனை மா தயவு நின்கிருபை
எத்தனை ஆச்சரியம்

5. இன்றைத் தினமதிலும் ஒருமித்துக்
கூட உம் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காய்
உமக்கென்றும் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

6. நீரல்லால் எங்களுக்குப் பரலோகில்
யாருண்டு ஜீவ நாதா
நீரேயன்றி இகத்தில் வேறொரு
தேற்ற மில்லை பரனே

67. எந்தக் காலத்திலும் எந்த

எந்தக் காலத்திலும் எந்தநேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன்(2)
எந்த வேளையிலும் துதிப்பேன்

1. ஆதியும் நீரே அந்தமும் நீரே
ஜோதியும் நீரே
என் சொந்தமும் நீரே

2. தாய் தந்தை நீரே தாதியும் நீரே
தாபரம் நீரே என்
தாரகம் நீரே

3. வாழ்விலும் நீரே தாழ்விலும் நீரே
வாதையில் நீரே
என் பாதையில் நீரே

4. வானிலும் நீரே பூவிலும் நீரே
ஆழியில் நீரே
என் ஆபத்தில் நீரே

5. துன்ப நேரத்தில் இன்பமும் நீரே
இன்னல் வேளையில்
மாறதவர் நீரே

6. தேவனும் நீரே என்
ஜீவனும் நீரே
ராஜராஜனும் என் சர்வமும் நீரே

C-Min/Waltz/T-140

68. எண்ணிலடங்கா ஸ்தோத்திரம்

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் - தேவா
என்றென்றும் நான் பாடுவேன்

அனுபல்லவி
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

1. வானாதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உம்மைப் போற்றுமே

2. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனித் தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுமே

3. நீரினில் வாழ்கின்ற யாவும்
நிலத்தின் ஜீவ ராசியும்
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே்

4. வால வயதுள்ளோரும் - மிகும்
வயதால் முதிர்ந்தோர்களும்
பாலகர் தம் வாயினாலும்
பாடி உம்மைப் போற்றுவாரே

F-Maj/Waltz/T-140

69. காலையும், மாலை எவ்வேளை

காலையும், மாலை எவ்வேளையும் கர்த்தரைக்
கருத்துடன் பாடிடுவேன்

அனுபல்லவி
பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்,
என தூதர் பாடிடும் தொனி கேட்குதே

1. கர்த்தர் என் வெளிச்சம் ஜீவனின் பெலனும்
கிருபையால் இரட்சிப்புமானார் - அஞ்சிடாமல் கலங்காமல்
பயமின்றி திகிலின்றி அனுதினமும் வாழ்ந்திடுவேன்

2. எனக்கெதிராய் ஓர் பாளைய மிறங்கி என்மேல் ஓர்
யுத்தம் வந்தாலும் - பயப்படேன் எதிராளி நிமித்தமாய்
செவ்வையான பாதையில் நடத்திடுவார்

3. ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன் என்றும்
தம் மகிமையைக் காண - ஜீவனுள்ள நாளெள்ளாம் தம்
ஆலயத்தில் தங்குவதை வாஞ்சித்து நாடிடுவேன்

4. தீங்கு நாளில் தம் கூடார மறைவில் தேடி சேர்த்தென்னை
மறைப்பார் - உன்னதத்தில் மறைவாக ஒளித்தென்னைப்
பாதுகாத்து உயர்த்துவார் கன்மலைமேல்

5. எந்தன் முகத்தை தேடுங்கள் என்று என் கர்த்தர்
சொன்னதினாலே - தம்முகத்தைத் தேடுவேனே கூப்பிடும்
என் சத்தம் கேட்டு தயவாகப் பதிலளிப்பார்

6. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என் கர்த்தர் என்னைக்
சேர்த்துக் கொள்வார் - எந்தன் உள்ளம் ஸ்திரமாக
திடமாக கர்த்தருக்கே என்றென்றும் காத்திருக்கும்

7. எனக்காக யாவும் செய்து முடிப்பார் என் கர்த்தர் வாக்கு
மாறிடார் - தமக்கென்றும் பயந்திடும் பக்தர் யாவர்
விருப்பமும் தவறாமல் நிறைவேற்றுவார்

C-Maj/Disco/T-115

70. போற்றிடுவேன் பராபரனைச்

1. போற்றிடுவேன் பராபரனைச்
சாற்றிடுவேன் சர்வ வல்லவரை
ஸ்தோத்திர பாத்திரன் இயேசுவையே
நேத்திரமாய் என்றும் பாடுவேன்

ஆ! ஆர்ப்பரித்தே அகமகிழ்வேன்
ஆண்டவர் அன்பதை எங்கும் கூறுவேன்
கண்மணி போல் கருத்துடனே
கைவிடாமல் என்னைக் காத்தனரே

2. எத்தனையோ பல நன்மைகள்
இத்தனை ஆண்டுகளாய் அளித்தார்
கர்த்தரே நல்லவர் என்பதையே
கருத்துடனே ருசித்திடுவேன்

3. பயப்படாதே என்றுரைத்தனரே
பரிசுத்த ஆவியானவரே
வெள்ளம் போல் சத்துரு வந்திடினும்
விரைந்தவரே கொடியேற்றினார்

4. பொருத்தனைகள் துதி பலிகள்
பணிவுடன் செலுத்தி ஜெபித்திடுவேன்
ஆபத்துக் காலத்தில் கூப்பிடுவேன்
ஆண்டவரே செவி கொடுப்பார்

5. நித்தமும் போதித்து நடத்தி
நித்திய ஆலோசனை அளிப்பார்
முடிவிலே மகிமையில் சேர்த்திடுவார்
நித்தியமாய்

C-Maj/Disco/T-115

71.இயேசுவின் நாமம் ஓங்கிடவே

இயேசுவின் நாமம் ஓங்கிடவே
நேசமுடன் புகழ் பாடிடுவோம்
காசினியில் நிகர் வேறதற்கில்லை
தாசர்கள் நாம் துதி சாற்றிடுவோம்

வானமும் பூமியும் யாவையுமே
வார்த்தையினால் உண்டாக்கினவர்
என்னை மண்ணென்று நினைவாக்கினவர்
எனக்கென்றும் சொந்தமவர்

1. அற்புதமாம் அதிசயமாம்
ஆண்டவர் இயேசுவின் நாமமிதே
பேய் நடுங்கும் கடும் நோய் அகலும் - நல்
பேர் புகழ் ஓங்கிடும் நாமமதே

2. வாழ்ந்திடும் வானோர் பூதலத்தோர்
வாழ்த்தி வணங்கிடும் நாமமதே
மானிடரின் முழங்கால் மடங்கும் - மெய்
மேன்மை உயர் திரு நாமமதே

3. சாவு பயங்கள் நீங்கிடவே
சத்துரு மேல் ஜெயம் பெற்றிடவே
சோதனையில் பல வேதனையில் - என்
சொந்த அடைக்கல் நாமமதே

4. வந்துன்னைச் சேர்ப்பேனென்றுரைத்த
வல்ல கிறிஸ்தேசுவின் நாமமிதே
நீடூழியாய் நித்ய ராஜ்ஜியத்திலே - தம்
நாமமதை நான் போற்றிடுவேன்

C-Maj/DiscoT-120

72. கர்த்தரைப் பாடியே போற்றிடு

கர்த்தரைப் பாடியே போற்றிடுவோமே
கருத்துடன் துதிப்போம் இனிய நாமமதை
கடலின் ஆழம் போல் கருணையோடிரக்கம்
கரையில்லை அவரன்பு கரையற்றதே

இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
இயேசுவை போல் வேறு நேசரில்லையே

1. கொடுமையோர் சீறல் பெருவெள்ளம் போல்
அடிக்கையில் மோதியே மதில்களின் மீதே
பெலனும் இவ்வேழைக்கும் எளியோர்க்கும் திடனாய்
வெயிலுக்கு ஒதுங்கும் விண் நிழலுமானார்

2. போராட்டம் சோதனை நிந்தை அவமானம்
கோரமாய் வந்தும் கிருபையில் நிலைக்க
தேவ குமாரனின் விசுவாசத்தாலே நான்
ஜீவித்து சேவிக்க திடமளித்தார்

3. கல்லும் முள்ளுகளுள்ள கடின பாதையிலே
கலக்கங்கள் நெருக்கங்கள் அகமதை வருத்த
எல்லையில்லா எதிர் எமக்கு வந்தாலும்
வல்லவர் இயேசு நம் முன் செல்கிறார்

4. சீயோனை சிறப்புடன் சேர்த்திட இயேசு
சீக்கிரம் வரும் நாள் நெருங்கி வந்திடுதே
முகமுகமாகவே காண்போமே அவரை
யுகயுகமாகவே வாழ்த்திடுவோம்

E-Maj/Rumba/T-105

73. நிகரே இல்லாத சர்வேசா

நிகரே இல்லாத சர்வேசா
திகழும் ஒளி பிரகாசா

அனுபல்லவி

துதிபாடிட இயேசுநாதா
பதினாயிரம் நாவுகள் போதா

1. துங்கன் இயேசு மெய் பரிசுத்தரே
எங்கள் தேவனை தரிசிக்கவே
துதிகளுடன் கவிகளுடன்
தூய தூயனை - நெருங்கிடுவோம்

2. கல்லும் மண்ணும் எம் கடவுளல்ல
கையின் சித்திரம் தெய்வமல்ல
ஆவியோடும் உண்மையோடும்
ஆதி தேவனை வணங்கிடுவோம்

3. பொன், பொருள்களும் அழிந்திடுமே
மண்ணும் மாயையும் மறைந்திடுமே
இதினும் விலை பெரும் பொருளே
இயேசு ஆண்டவர் திருவருளே

4. தேவ மைந்தனாய் அவதரித்தார்
பாவ சோதனை மடங்கடித்தார்
மனிதனுக்காய் உயிர்கொடுத்தார்
மாளும் மாந்தரை மீட்டெடுத்தார்

5. கொந்தளித்திடும் அலைகளையும்
கால் மிதித்திடும் கர்த்தரவர்
அடங்கிடுமே அதட்டிடவே
அக்கரை நாமும் சேர்ந்திடவே

6. ஜீவன் தந்தவர் மரித்தெழுந்தார்
ஜீவ தேவனே உயிர்த்தெழுந்தார்
மறுபடியும் வருவேனென்றார்
மா சந்தோஷ நாள் நெருங்கிடுதே

C-Maj/8Beat/T-100

74. உம் பாதம் பணிந்தேன்

உம் பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரைப் பாடுவேன் - ஏசையா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே

1. பரிசுத்தமே பரவசமே பரனே சருளே
வரம் பொருளே - தேடினதால் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்தீர்

2. புது எண்ணையால் புது பெலத்தால் புதிய கிருபை
புதகவியால் - நிரப்பி நிதம் நடத்துகின்றீர்
நூதன சாலேமில் சேர்த்திடுவீர்

3. நெருக்கத்திலே உம்மையழைத்தேன் நெருங்கி
உதவி எனக்களித்தீர் -திசை கெட்டெங்கும்
அலைந்திடாமல் - தீவிரம் வந்தென்னை தாங்குகின்றீர்

4. என் முன் செல்லும் உம் சமுகம் எனக்கு அளிக்கும்
இளைப்பாறுதல் - உமது கோலும் உம் தடியும்
உண்மையாய் என்னையும் தேற்றிடுதே

5. கனிசெடி நீர் நிலைத்திருக்கும் கொடியாய் அடியேன்
படர்ந்திலங்க கிளை நறுக்கி களை பிடுங்கி
கர்த்தரே காத்தென்னைச் சுத்தம் செய்தீர்

6. என் இதய தெய்வமே நீர் எனது இறைவா! ஆருயிரே
நேசிக்கிறேன் இயேசுவே உம்
நேசமுகம் என்றும் கண்டிடுவேன்

7. சீருடனே பேருடனே சிறந்து ஜொலிக்கும் கொடுமுடியில்
சீக்கிரமாய்ச் சேர்த்திடுவீர்
சீயோனை வாஞ்சித்து நாடுகிறேன

C-Maj/DiscoT-120

75. தூய தேவனை துதித்திடுவோம்

தூய தேவனை துதித்திடுவோம்
நேயமாய் நம்மை நடத்தினாரே
ஓயாப்புகழுடன் கீதம் பாடித் தினம்
போற்றியே பணிந்திடுவோம் - அல்லேலூயா

1. கடந்திட்ட நாட்களில் அவர் கரங்கள்
கனிவுடன் நம்மை அரவணைத்தே
நம் கால்களை கன்மலையின் மேல் (2)
நிறுத்தியே நிதம் நம்மை வழி நடத்தும்

2. யோர்தானைப் போல் வந்த துன்பங்களை
இயேசுவின் பெலன் கொண்டு கடந்து வந்தோம்
அவர் கரத்தைக் பிடித்துக் கொண்டே
பரிசுத்த பாதையில் நடந்திடுவோம் - தூய

3. கழுகுக்குச் சமமாய் நம் வயது
திரும்பவும் வால வயதாகும்
புது நன்மையால் புது பெலத்தால்
நிரம்பியே நம் வாயும் திருப்தியாகும்

4. தாவீதுக் கருளின மாகிருபை
தாசராம் நமக்குமே தந்திடுவார்
எலிசாவைப் போல் இருமடங்கு
வல்லமையால் நம்மை அபிஷேகிப்பார் - தூய

5. நலமுடன் நம்மை இதுவரையும்
கர்த்தரின் அருள் என்றும் நிறுத்தியதே
கண்மணிபோல் கடைசி வரை
காத்திடும் கர்த்தரைப் போற்றிடுவோம் - தூய

76. துதிசெய் மனமே நிதம் துதிசெய்

துதிசெய் மனமே நிதம் துதிசெய்
துதிசெய் இம்மட்டும் நடத்தின உன் தேவனை
இன்றும் என்றும் நன்றி மிகுந்த மனதோடே

1. முன்கால மெல்லாம் உன்னைத் தம் கரமதில் ஏந்தி
வேண்டிய நன்மைகள் யாவும் உனக்களித்தாரே

2. ஏகிடும் வழியில் பாடுகள் பல நேர்ந்தபோதும்
ஏசுபரன் உன்காவலனாய் இருந்தாரே

3. சோதனை பலவாய் மேகம்போல்
உன்னை சூழ்ந்தாலும்
சேதமுறாமல் முற்றிலும் காக்க வல்லோரை

4. தாய் தந்தை தானும் ஏகமாய் உனை மறந்தாலும்
தூயரின் கையில் உன் சாயல் உள்ளதை நினைத்தே

5. சந்ததம் உன்னை நடத்திடும் சத்திய தேவன்
சொந்தம் பாராட்டி உன்னுடன் இருப்பதினாலே

F-Maj/DiscoT-110

77. ஆனந்தமாய் நாமே

1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

ஆத்துமாவே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்தரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணி போல் எம்மைக் காத்தாரே
கவலைகள் போக்கி கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம்

3. படகிலே படுத்து உறங்கினாலும்
கடும் புயல் அடித்துக் கவிழ்ந்தாலும்
கடலையும் காற்றையும் அமர்த்தி எம்மைக்
காத்தாரே அல்லேலூயா

4. யோர்தானைக் கடந்தோம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்த்தோம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே
என்றென்றுமாய் வாழுவோம்

5. பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரத்தில் முடிகிறதே
விழிப்புடன் கூடி தரித்திருப்போம்
விரைந்தவர் வந்திடுவார்

E-Maj/DiscoT-110

78. எந்தன் அன்புள்ள

1. எந்தன் அன்புள்ள ஆண்டவர் ஏசுவே நான்
உந்தன் நாமத்தை போற்றிடுவேன்
உம்மைப்போல் ஒரு தேவனை
பூமியில் அறிந்திடேன்
உயிர் தந்த தெய்வமே நீர்

ஆ! ஆனந்தம் ஆனந்தமே!
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
ஏசுவே எந்தன் ஆருயிரே

2. பெற்ற தாயும் என் தந்தையுமானவரே
மற்றும் எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும் நீரே
வாக்கு மாறாதவரே

3. உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தை நம்பிடுவேன்
உம்மையல்லாதிப் பூமியில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வமே நீர்- ஆ

4. எந்தன் சிருஷ்டிகரே உம்மை நினைத்திடவே
தந்த வாலிப நாட்களிலே
இந்த மாய உலகத்தை வெறுத்திட அளித்தீரே
பரிசுத்த ஜீவியமே

5. பொன் வெள்ளியுமோ பெரும் பேர் புகழோ
பண ஆஸ்தியும் வீண் அல்லவோ
பரலோகத்தின் செல்வமே என் அருள் ஏசுவே
போதும் எனக்கு நீரே

79. நன்றியால் பாடிடுவோம்

நன்றியால் பாடிடுவோம்
நல்லவர் இயேசு நல்கிய எல்லா
நன்மைகளை நினைத்தே

1. செங்கடல் தனை நடுவாய்ப் பிரித்த
எங்கள் தேவனின் கரமே
தாங்கியே இந்நாள் வரையும்
தயவாய் மாதயவாய்

2. உயிர்ப்பித்தே உயர்த்தினார் உன்னதம் வரை
உடன் சுதந்திரராய் இருக்க
கிருபையின் மகா தானமது வருங்
காலங்களில் விளங்க

3. ஜீவனை தியாகமாய் வைத்த பலர்
கடும் சேவையில் மரித்தார்
சேர்ந்து வந்து சேவை புரிந்து
சோர்ந்திடாது நிற்போம்

4. மித்ருக்களான பலர் நன்றியிழந்தே
சத்துருக்காளயினாரே
சத்தியத்தை சார்ந்து தேவ
சித்தம் செய்திடுவோம்

5. அழைக்கப் பட்டோரே நீர் உன்னத
அழைப்பினை - அறிந்தே வந்திடுவீர்
அளவில்லா திரு ஆக்கமிதனை
அவனியோர்க்களிப்பீர்

6. சீயோனை பணிந்துமே கிறிஸ்தேசு
இராஜனாய் சீக்கிரம் வருவார்
சிந்தை வைப்போம் சந்திக்கவே
சீயோனின் இராஜனையே

80. போற்றி துதிப்போம்

1. போற்றி துதிப்போம் எம்தேவ தேவனை
புதிய இதயமுடனே
நேற்றும் இன்றும் என்றும்
மாறா இயேசுவை நாம் என்றும்
பாடி துதிப்போம்

இயேசுவென்னும் நாமமே - என்
ஆத்துமாவின் கீதமே
என் நேசரேசுவை நான் என்றும்
ஏற்றி மகிழ்ந்திடுவேன்

2. கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரம் கொண்டு
மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன்

3. யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந்தழிந்து மாளாதே
ஆர்ப்பின் ஜெய தொனியோடே பாதுகாத்த
அன்பை என்றும் பாடுவேன்

4. தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னையவர் கையில் தந்து
ஜீவ பாதை என்றும் ஓடுவேன்

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி, ஆத்துமாவும் தேகம் யாவுமின்று
ஈந்து தொண்டு செய்குவேன்

E-Maj/DiscoT-115

81.துதி கீதங்களால்

துதி கீதங்களால் புகழ்வேன்
உந்தன் நாம மகத்துவங்களை
இயேசுவே இரட்சகா
உந்தன் நாமம் எங்கள் ஆறுதல்

1. தினந்தோறும் உம் கானங்களால்
நிறைந்திடுமே எங்களை நீர்
திரு உள்ளமதுபோல் எம்மை மாற்றிடுமே
கனிவோடெங்களை உந்தன் காருண்யத்தால் - துதி

2. அலை மோதும் இவ் வாழ்க்கையிலே
அனுகூலங்கள் மாறும் போது
வழி காட்டிடுமே துணை செய்திடுமே
கனிவோ டடியார்களைக் காருண்யத்தால் - துதி

82. அல்லேலூயா கர்த்தரையே ஏக

1. அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரேதுதியுங்கள்
வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் ஏசுவைத்துதியுங்கள்

பல்லவி

ராஜாதி ராஜனாம் ஏசுராஜன் பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா அல்லேலூயா தேவனைத் -துதியுங்கள்

2. தம்புரோடும். வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் ஏசுவைத் துதியுங்கள்

3. சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத்துதியுங்கள்
அக்கினியே. கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்

4. பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை ஏசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்

5. ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலையலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தைப் பரிசுத்தர்கள் நிரப்புவார் துதியுங்கள்

83. நம் தேவன் அன்புள்ளவர்

நம் தேவன் அன்புள்ளவர்
நம் தேவன் பரிசுத்தர்
நம் தேவன் நீதிபரர்,
நமக்காய் ஜீவன் தந்த ஏசு அவரே (2)

1. நன்மை ஏதும் ஒன்றும் நம்மில் இல்லையே
என்ற போதும் நம்மை நேசித்தாரே
ஆ... அந்த அன்பில்மகிழ்வோம்
அன்பரின் பாதம் பணிவோம் -2 - நம்

2. அத்திமரம் துளிர் விடாமற் போனாலும்
திராட்சைச் செடி கனி கொடாமற் போனாலும்
ஆ... அவர் காயம் நோக்குவோம்
அதுவே என்றும் போதுமே -2- நம்

3. வான மீதில் ஏசு இறங்கி வருவார்
தேவ தூதர் போல மகிமை அடைவோம்
ஆ... எங்கள் தேவா வாருமே
அழைத்து வானில் செல்லுமே -2 - நம்

4. அல்லேலூயா கீதம் நாம் என்றும் பாடுவோம்
ஆண்டவரோடென்றும் நாம் ஆளுகை செய்வோம்
ஆ... அந்த நாள் நெருங்குதே
நினைத்தால் நெஞ்சம் பொங்குதே -2 - நம்

E-Maj/DiscoT-120

84. போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம்

போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம்
பொற்பரன் இயேசுவையே
புவியில் அவர் போல் வேறில்லையே

1. தந்தையைப்போல் தோளினிலே
மைந்தரெமைச் சுமந்தவரே
எந்நாளுமே அவர் நாமமே
இந்நிலத்தே நாம் துதித்திடுவோம் - போற்

2. கன மகிமை புகழுடைய
கருணையால் ஜெநிப்பித்ததாலே
கனலெரியின் சோதனையில்
கலங்கிடுமோ எம் விசுவாசமே - போற்

3. ஞாலமெல்லாம் கண்டதிசயிக்க
ஆவியின் அபிஷேகத்தாலே
ஏக சரீரமாய் நிறுத்த
இணைத்தனரே நம்மைத்தன் சுதராய் - போற்

4. ஆதி அப்போஸ்தல தூதுகளால்
அடியாரை ஸ்திரப்படுத்தி
சேதமில்லா ஜெயமளித்தே
கிறிஸ்துவின் நற்கந்தமாக்கினாரே - போற்

5. சீயோனே மாசாலேம் நகரே
சீரடைந்தே திகழ்வாயே
சேவிப்பாயே உன் நேசரையே
சிறப்புடனே இப்பார்தலத்தை - போற்

C-Maj/Rumba/T-110

85. நான் பாடும் கானங்களால்

நான் பாடும் கானங்களால்
என் இயேசுவைப் புகழ்வேன்
எந்தன் ஜீவிய காலம் வரை
அவர் மாறாத சந்தோஷமே - நான்

1. பாவ ரோகங்கள் மாற்றியே
எந்தன் கண்ணீரைத் துடைப்பவரே
உலகம் வெறுத்தென்னைத் தள்ள
பாவியாம் என்னை மீட்டெடுத்தீர் - நான்

2. இளமை பிராய வீழ்ச்சிகள் இல்லை
யாதொரு பயமுமில்லை
அவர் ஸ்நேக தீபத்தின் வழியில்
தம் கரங்களால் தாங்கிடுவார் - நான்

3. நல்ல போராட்டம் போராடி
எந்தன் ஓட்டத்தை முடித்திடுவேன்
விலையேறிய திருவசனம்
எந்தன் பாதைக்குத் தீபமாகும் - நான்

E-Maj/Fusion/T-110

86. தூயாதி தூயவரே உமது

தூயாதி தூயவரே உமது
புகழை நான் பாடுவேன்

பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ளவரை நின்புகழ் பாடவேண்டும்

1. சீடரின் கால்களைக் கழுவினவர்
செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே- பாரில்

2. பாரோரின் நோய்களை நீக்கினவர்
பாவி என் பாவ நோய் நீக்கினீரோ- பாரில்

3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிட பெலன் தாருமே- பாரில்

4. பரலோகில் இடமுண்டு என்றவரே
பரிவாக எனைச் சேர்க்க வேகம் வாருமே- பாரில்

C-Maj/Rumba/T-110

87. தினம் தினம் இயேசு

தினம் தினம் இயேசு நாயகனை
மனம் மனம் மகிழ்ந்து பாடுவேன்
மகிழ்ந்து பாடுவேன்

ஆனந்தமாக என் நேசர் மார்பில்
அன்போடு சாய்ந்து அகமகிழ்வேன் - தினம்

1. கருவில் என்னைத் தெரிந்து கொண்டு
கருத்தாய் அவரைப் பாட வைத்தார் - ஆனந்த

2. வலையை எனக்காய் சாத்தான் விரிக்க
வழியை மாற்றி அழைத்துச் சென்றார் - ஆனந்த

3. மன்னவர் இயேசு என்னுள் இருக்க
மனிதன் எனக்கு என்ன செய்வான் - ஆனந்த

4. அல்லல் நீக்கி மார்பில் அணைத்தார்
அல்லேலூயா பாடுகிறேன் - ஆனந்த

F-Maj/DiscoT-110

88. எந்தன் நாவில் புதுப்

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார் (2)

ஆனந்தம் கொள்ளுவேன்
அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில்
அல்லேலூயா(2)

1. பாவ இருள் என்னை வந்து
சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய்
என்னை தேற்றினார்

2. வாதை நோயும் வந்தபோது
வேண்டல் கேட்டிட்டார்
பாதைக்காட்டி துன்பமெல்லாம்
நீக்கி மீட்டிட்டார்

3. சேற்றில் வீழ்ந்த என்னையவர்
தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம்
கொண்டு மாற்றினார்

4. தந்தை தாயும் நண்பர்
உற்றார் யாவுமாயினார்
நிந்தை தாங்கி எங்குமவர்
மேன்மை சொல்லுவேன்

5. இவ்வுலக பாடு என்னை
என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக்
காண காத்திருக்கிறேன்.

89.கீத சத்தத்தால் கெம்

கீத சத்தத்தால் கெம்பீரமாகவே
கீர்த்தனம் செய்வேன் கர்த்தரை என்றுமே
ஆனந்தமாகவே ஆர்ப்பரிப்புடனே
நித்யானந்தரை நான் நிதமும் பாடுவேன்

1. வீணையினாலும் தம்புருவினாலும்
கின்னரத்தாலும் என் நாவினாலுமே - 2
சுரமண்டல தொனியும் முழங்க
சீரேசு நாதனை சிறப்பாய் பாடுவேன்

2. பத்து நரம்பும் போதாதென்றெண்ணியே
மெத்தவும் மனம் துதியால் நிறைந்தே - 2
உத்தம ஆசீர் உள்ளத்தில் பெற்றிட
உன்னத தேவனை உயர்த்தித் துதிப்பேன்

3. நானிலந்தன்னில் நல் ஏசுவின் எல்லா
நன்மைகளையும் ஒவ்வொன்றாய் எண்ணியே - 2
நன்றியினாலென் இதயம் பொங்கிட
நடனமாடியே ஆவியில் மகிழ்வேன்

4. தேவ ஆவியால் இன்னிசை நாதங்கள்
ஏக சத்தயமாய் இசைந்திலங்கிட - 2
தேவ மகிமை மேகமாய் இறங்க
தேவாதி தேவனை புகழ்ந்து போற்றுவேன்

5. தேவ சேவைக்காய் மகிமை சாட்சியாய்
ஜீவன் சுகம் என் பெலன் மீந்தே - 2
மேள வாத்திய மங்கள கீதங்கள்
எக்காள தொனியால் எங்கும் முழங்கவே

6. ஜெயங்கொண்டோனாய் சீயோன் சிகரத்தில்
ஜெய வீரனாம் ஏசுவுடனே நான் - 2
தேவ சுரமண்டலம் கரத்தில் ஏந்தியே
ஜெயத்தின் கீதங்கள் களிப்பாய் பாடுவேன் ... கீத

D-Maj/Waltz/T-140

90. கோடா கோடி ஸ்தோ

கோடா கோடி ஸ்தோத்திரம் ஏறெடுப்போம்
இராஜாதி இராஜன் தேவாதி தேவன்
இயேசுகிறிஸ்துவுக்கே மகிமை

1. பரிசுத்தவான்கள் சபை நடுவே
தரிசிக்கும் தேவ சமுகத்திலே
அல்லேலூயா அல்லேலூயா
ஆவியில் பாடி மகிழ்வோம்
ஆண்டவர் இயேசுவைக் கொண்டாடுவோம்

2. கிருபாசனத்தண்டை நெருங்குவோம்
திருரத்தம் கரத்தில் ஏந்தி நிற்போம்
அல்லேலூயா அல்லேலூயா
கண்டேன் சகாயம் இரக்கமே
கர்த்தர் கிருபை என்றும் உள்ளதே

3. குருவி பறவை வானம்பாடியே
கவலையின்றிப் பறந்து பாடுதே
அல்லேலூயா அல்லேலூயா
அற்புதமான சிருஷ்டிகரே
அந்த விசுவாசம் கற்றறிந்தோம்

4. கவலைப்படாதீர்கள் என்றுரைத்தீர்
காட்டுப் புஷ்பத்தை உடுத்துவித்தீர்
அல்லேலூயா அல்லேலூயா
ஆடை ஆகாரம் தேவை எல்லாம்
அன்றன்று தந்தெம்மை ஆதரித்தீர்

5. கணக்கில்லா நன்மைகள் கர்த்தர் செய்தீர்
கருத்துடன் பாடி நன்றி கூறுவோம்
அல்லேலூயா அல்லேலூயா
தேவ குமாரன் வந்திடும் நாள்
தூய முகம் கண்டு கெம்பீரிப்போம்- கோடா

A-Maj/Disco /T-120

91.ஆனந்தமாக அன்பரைப்பாடுவேன்

ஆனந்தமாக அன்பரைப்பாடுவேன்
ஆசையவரென் ஆத்துமாவிற்கே
ஆசிகளருளும் அனந்தனந்தமாய்
ஆண்டவர் இயேசு போல் யாருமில்லையே

இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் இகத்தில் வேறு எங்குமில்லையே
இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் வேறு எங்குமில்லையே

1. தந்தை தாயுமுன் சொந்தமானோர்களும்
தள்ளிடினும் நான் தள்ளிடுவேனோ
தாங்கிடுவேனென் நீயின் கரத்தால்
தாபரமும் நல்ல நாதனுமென்றார் - இயேசு

2. கிறிஸ்து இயேசு பிரசன்னமாகவே
கிருபையும் வெளியாகினதே
நீக்கியே சாவினை நற்சுவிசேஷத்தால்
ஜீவன் அழியாமை வெளியாக்கினார் - இயேசு

4. ஒப்பில்லாத நம்பிக்கை சந்தோஷமும்
மகிழ்ச்சியின் கிரீடமாகவே
அப்போஸ்தலர் தம் ஊழியத்தாலே
ஆதி விஸ்வாசத்தில் வளர்ந்திடுவோம் - இயேசு

5. அழுகையின் தாழ்வில் நடப்படுவரே
ஆழிபோல் வான்மழை நிறைக்குமே
சேர்ந்திட பாதத்தில் தேவனின் சந்நிதி
ஜெயத்தின் மேல் ஜெயமடைந்திடுவோம் இயேசு

D-Maj/S.Rock /T-120

92.என் தேவனே உம்மை உயர்

என் தேவனே உம்மை உயர்த்திடுவேனே
உம் நாமத்தை என்றும் துதித்திடுவேனே

1. ஏழைக்கு பெலனான கர்த்தர் நீரே
எளியவனுக்கும் திடனான தேவன் நீரே
பெருவெள்ளத்தில் தப்பிக் கொள்ள அடைக்கலம் நீரே
வெயிலுக்கு ஒதுங்கிக் கொள்ள நிழலானோர் நீரே- என்

2. மரணத்தை ஜெயமாக விழுங்கினீரே
மானிடரின் கண்ணீரைத் துடைப்பவரே
நம்பினோரின் நிந்தைகளை நீக்குபவரே
நித்தம் நித்தம் அதிசயங்கள் செய்பவர் நீரே - என்

3. உமக்காக என்னை உருவாக்கினீரே
உதிர கிரயம் ஈந்து என்னை மீட்டவரே
பெயரை சொல்லி பூரணமாய் அழைத்துக் கொண்டீரே
புதிய தொன்று என்னிலே செய்திட நீரே - என்

4. கல்விமானின் நாவை எனக்குத் தருபவரே
காலைதோறும் கற்றுக் கொள்ள செய்பவரே
நீதியின் கரத்தால் என்னைத் தாங்குபவரே
நித்திய நித்திய வெளிச்சமாக இருப்பவர் நீரே - என்

F-Maj/Disco /T-120

93. தேவ தேவனைத் துதித்திடு

தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒரு மனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்தி போற்றிடுவோம்

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தருக்கே
அல்லேலூயா இராஜனுக்கே

1. எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண்மணி போலக் காத்தருளும்
கிருபையால் நிதம் வழிநடத்தும் - அல்

2. சபையில் உம்மை அழைத்திடுவோம்
சகாயம் பெற்று வாழ்ந்திடுவோம்
சாத்தானை என்றும் ஜெயித்திடுவோம்
சாகும் வரையில் உழைத்திடுவோம் - அல்

3. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
நன்மை கிருபை தொடர்ந்திடவே
வேத வசனம் கீழ்ப்படிவோம்
தேவ சாயலாய் மாறிடுவோம்- அல்

4. வானத்தில் அடையாளம் தோன்றிடுமே
இயேசு மேகத்தில் வந்திடுவார்
நாமும் அவருடன் சேர்ந்திடவே
நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வோம் - அல

94. பாடி துதித்து போற்றி

பாடி துதித்து போற்றி புகழ்வோம்
தேவாதி தேவனையே முழு மனதுடனே
இன்றும் என்றுமே

1. பாவத்தைப் போக்கினாரே
பாதையும் காட்டினாரே
ஞானம் மீட்பும் அவரே
மெய்யான புகலிடமே ...பாடி

2. சிலுவை சுமந்தாரே
பாடுகள் சகித்தாரே
யாவும் நமக்காயே
பாதம் பணிவோமே ...பாடி

3. மாறாத மகத்துவமே
மங்காத ஒளி விளக்கே
மகிமை நிறைந்தவரை
மகிழ்ந்து மனமதிலே ...பாடி

4. வானம் பூமியாவிலும்
கர்த்தரே பெரியவர்
அகிலமும் படைத்தாரே
அவர்க்கிணை அவரே ...பாடி

5. ஆதியும் அந்தமுமே
அல்பா ஓமேகாவுமே
வருவேன் என்றுரைத்தாரே
அவரோடே ஏகிடுவோம் ...பாடி

95. துதித்திடுவோம் தூயவர்

துதித்திடுவோம் தூயவர்
இயேசுவையே

1. புது ஜீவனால் எம்மை புதுமையாய் மாற்றும்
திருச்சித்தம் செய்திடவே - உம்
மகிமையின் ஆவியால் நிறைந்தே மகிழ
மாதயவீந்திடுமே - துதித்

2. கடும் புயல்களிலே கலங்கிடா தெம்மை
காத்திடும் கர்த்தரவர் - திருக்
கரங்களை நீட்டி மறைவிடம் ஈந்து
மனமதைத் தேற்றினாரே - துதித்

3. சுத்தர்களுடனே சீர் பொர்ருந்திடவே
நித்தமும் கிருபை ஈந்தார் - தம்
ஜீவனையீந்து சாவினை ஜெயித்து
சேயராய் மாற்றினாரே - துதித்

4. சிலுவை சுமந்தவர் பின் சென்றிடுவோம்
சேவையும் செய்திடவே உயர்
பெலமதை யீந்து பயமதை நீக்கி
பறந்திட கிருபை செய்வார் - துதித்

5. அவர் வரும் வேளையை அனுதினம் நோக்கி
ஆயத்தமாகிடுவோம் எம்மை
அழைத்தவரே கரம் படித்தவரே என்றும்
அன்புடன் நடத்திடுமே - துதித்

96. துதிக்கின்றோம் தூயா

துதிக்கின்றோம் தூயா திரியேக தேவனே தேவா
துதி கேட்டு மகிழ்வீர் என் இயேசுவே

அனுபல்லவி
மகிமையின் தேவனே நீதியின் ராஜனே
உம் சித்தம் செய்யவே தந்தேன்

1. அபிஷேகம் தந்தெம்மை
சாட்சியாய் மாற்றிடுமே
வல்லமை வரங்களால் நிரப்பிடுமே
உலகம் மாமிசம் சாத்தானை
ஜெயித்த எம் தேவா
உத்தமர் இயேசுவே வந்திடுவீர்
உத்தமராகவே எந்தனை மாற்றிட
இயேசுவே உம் கிருபை தந்திடுவீர் - 2

2. தேவைகள் நிறைந்திட்ட
உலகினில் வாழுகிறோம்
தேவைகள் அனைத்தும் தந்திடுவீர்
மகிமையின் தேவனே
குறைவெல்லாம் நிறைவாக்கிட
சோர்ந்திடாதெம்மை நடத்திடுமே
ஆத்தும ஆதாயம் செய்திட எம்மையும்
இயேசுவே உம்மைப் போல் மாற்றிடுமே - 2

3. அவமானம் நிந்தைகள்
பாடு சகித்திடவே
பெலன் தந்திடும் தேவா வந்திடுவீர்
மரணமோ ஜீவனோ
நாசமோ மோசமோ நாதா
உமதன்பை பிரித்திட இயலாதல்லோ
எமக்காக நித்தமும் வேண்டுதல் செய்திடும்
இயேசுவே ஜெய பாதை நடத்திடுவீர் - 2

97. தேவாதி தேவனை

தேவாதி தேவனை ஸ்தோத்திரம் செய்வின்
ராஜாதி ராஜனை ஸ்துதிச்சிடுவின்
அவன் ஏக ரட்சகனல்லோ
அவன் அல் புதவானல்லோ

1. தன்றே தய ஜீவனெனக்காள் நல்லது
என்றெ அதரங்கள் நின்னே எந்நும் ஸ்துதிச்சிடும்
என்றெ ஜீவகாலம் (3) எந்நுமே - தேவாதி

2. நாசகாமாய குழியில் நின்னென்னே
நாதன் வீண்டெடுத்த கிருபையாலிது
எந்நும் பாடிடுமே (3) எந்நுமே - தேவாதி

3. காகள நாதம் வானில் கேட்டிடும்
என்றெ கர்த்தன்றெ வரவிங்கலோர்த்திடும்
லோகம் பிரமிச்சிடுமே, பூமி நடுங்கிடுமே
ஞான் அல்லேலூயா பாடிடுமே - தேவாதி

A-Maj/Polka/T-120

98. துதி துதி என் மனமே

துதி துதி என் மனமே
துதிகளின் உன்னதனை
தூத கணங்கள் வாழ்த்தி புகழ்ந்திடும்
வானவர் இயேசுவின் நாமமதே

1. பாவமாம் காரிருள் மூடிடும் வேளை
இரட்சிக்க தீபமாய் வந்தார்
அற்புதமாய் நம்மை நடத்திடும் இயேசு
அன்பரின் காயங்கள் கண்டே - துதி

2. கல்வாரியில் அன்று சிந்தின இரத்தம்
கழுவிடும் பாவங்களை
கண்ணீரைத் துடைக்கும் அவரது அன்பு
கல்மம் கரைந்திடுமே - துதி

3. சீக்கிரமாய் இதோ வருகிறேன் என்றவர்
சீக்கிரம் வந்திடுவார்
உன்னத தேவனின் மகிமையைக் காண
உள்ளமும் ஏங்கிடுதே - துதி

C-Maj/8 Beat/T-120

99. துதிகளின் பாத்திரனே

துதிகளின் பாத்திரனே
துதிதனை ஏந்தி நின்றோம்
தூயாவி அருள் தாருமே
துதிகளின் பாத்திரனே

1. கடந்த எம் நாட்கள் எல்லாம்
கருணையாய் நடத்தினீரே
கருத்துடன் மா தயவை
கனிவுடன் பாடிடுவோம் - துதிகளின்

2. ஆபத்து நாளிலே
ஏற்ற சகாயர் நீரே
அதிசயம் செய்பவரே
துதிகளை செலுத்துகின்றோம் - துதிகளின்

3. முற்றுமாய் பலியாகவே
அர்ப்பணித்தோம் எம்மையே
ஆளுகை செய்திடுவீர்
ஆசீரை அளித்திடுவீர் - துதிகளின்

4. பாவங்கள் போக்கி அவர்
சாபங்கள் மாற்றினாரே
பரிசுத்த மீட்பதனை
பரமனே அளித்தனரே - துதிகளின்

5. மகிமையின் விண்ணரசர்
மகத்துவ தேவனவர்
மகிமையாம் கனமதனை
மகிழ்வுடன் செலுத்துகின்றோம் - துதிகளின்

B-Maj/Waltz/T-140

100. திரியேக தேவனை

திரியேக தேவனைத் துதித்திடுவோம்
நிதம் அவர் நாமத்தை உயர்த்திடுவோம்
நீடித்த நாட்களாய் நிறைத்தெம்மையே
நித்தமும் நடத்துவார்

மீட்பரும் நீரே மேய்ப்பரும் நீரே
மேன்மையும் மகிமையுமே
மாறிடா நல் இயேசுவே

1. பாவத்தில் ஜீவித்த காலத்திலே
பரிவுடன் இரட்சிக்க வந்தவரே
நீங்காத விசுவாசப் பாதையிலே
தாங்கினீர் உம் தயவால் - மீட்பரும்

2. சோதனை சூழ்கையில் ஜெயக்கொடியாய்
சோர்ந்திடும் உள்ளத்தில் மாபெலனாய்
தனிமையில் ஏற்றதோர் தோழனுமாய்
கனிவாய் கரம் பிடித்தீர் - மீட்பரும்

3. அபிஷேகம் செய்து எம் சிரசதனை
ஆனந்த சந்தோஷத்தால் நிறைத்தே
அகமதில் இன்பக் கீதம் அளித்தே
மகிமையில் முடி சூட்டுவீர் - மீட்பரும்

4. எக்காள நாதம் வானில் முழங்க
ஏகிடுவார் சுத்தர் இயேசுவுடன்
அழிவற்றோராய் அவரோடிணைந்தே
ஆளுவோம் சீயோனிலே - மீட்பரும்

D-Maj/8 Beat/T-120

101. இயேசு ராஜனின்

இயேசு ராஜனின் திருவடிக்கு
சரணம் சரணம் சரணம்
ஆத்மா நாதனின் மலரடிக்கு
சரணம் சரணம் சரணம்

1. பார் போற்றும் தூய தூய தேவனே
மெய் ராஜாவே எங்கள் நாதனே
பயம் நீக்கும் துணை யாவும் ஆனீரே- சரணம் (3)

2. இளைப்பாறுதல் தரும் வேந்தனே
இன்னல் துன்பம் நீக்கும் அருள் நாதரே
ஏழை என்னை ஆற்றி தேற்றி காப்பீரே- சரணம் (3)

3. பெலவீனம் யாவும் போக்கும் வல்லோரே
பெலனீந்து வலக்கரம் பிடிப்பீரே
ஆவி ஆத்துமா சரீரத்தை படைக்கிறேன்-சரணம் (3)

4. உந்தன் சித்தம் செய்ய அருள் தாருமே
எந்தன் சித்தம் யாவும் என்றும் ஒழிப்பீரே
சொந்தமாக ஏற்று என்னை ஆட்கொள்ளும்-சரணம்(3)

5. அல்லேலூயா பாடி வந்து துதிப்பேன்
மனதார உம்மை என்றும் போற்றுவேன்
அல்லேலூயா அல்லேலூயா ஆமென்- சரணம் (3)

102. ஜீவதேவனை துதித்திடுவோம்

ஜீவதேவனை துதித்திடுவோம் நாம்
இராஜ இராஜனை வாழ்த்திடுவோம் நாம்
பரம அருளைத் தினமும் பெறவே
பரமனை நிதம் துதிப்போம்

1. சென்ற நாட்களில் அடைக்கலமாய்
தாங்கி நம்மை ஆதரித்தார்
ஜீவன் சுகமும் பங்குமானார்
தேவ தேவனை துதித்திடுவோம்

2. தீங்கு நாளில் துணையிவரே
சோர்ந்த வேளையில் தாங்கினாரே
தேவ வார்த்தையை மகிமைப்படுத்தி
மகிழ்ச்சி அளித்தார் துதித்திடுவோம்

3. அன்பின் தேவனை துதித்திடுவோம்
அகிலமெல்லாம் சாற்றிடுவோம்
தாழ்வில் நம்மை நினைத்த தேவனை
வாழ்த்தித் துதித்துப் பாடிடுவோம்

4. அழைத்த பாதையில் நடத்திடுவார்
புதிய பெலனால் நிரப்பிடுவார்
முடிவு வரையும் காக்கும் தேவனை
அநுதினமே துதித்திடுவோம்

5. வானில் இயேசு தோன்றிடுவார்
வாரும் என்றே அழைத்திடுவோம்
மாசற்றோராய் மகிமை தேவனை
இன்றும் என்றும் துதித்திடுவோம

F-Maj/8 Beat/T-120

103. கர்த்தரை நான் எக்காலமும்

கர்த்தரை நான் எக்காலமும் ஸ்தோத்தரிப்பேன்
அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்

1. கர்த்தருக்குள் எந்தன் ஆத்துமாவும்
களித்து மேன்மை பராட்டிடுதே
ஒருமித்தே நாம் உயர்த்திடுவோமே
கருத்தாய் அவர் நாமமே - கர்த்தரை

2. தூய பரன் முகம் நோக்கிடுவார்
சூரிய சோபையாய் மாறிடுவார்
ருசிக்க இன்பமே இயேசுவின் அன்பே
சுகிக்க நல்லவரே - கர்த்தரை

3. ஜீவனை யீந்தார் தம் சாவினாலே
வேதனை நீக்கினார் நோவினாலே
அற்புதமாய் எந்தன் ஜீவியமதையே
தற்பரன் மாற்றுகிறார் - கர்த்தரை

4. தேற்றி அப்போஸ்தல தூதுகளால்
மாற்றிடுவார் அவர் ரூபமதாய்
ஊற்றுடுவார் புது ஜீவன் எந்நாளும்
ஏற்றுவார் ஜெயக் கொடியே - கர்த்தரை

5. அக்கினியின் ஊடே நடந்திடினும்
விக்கினமின்றியே நான் துலங்க
ஆக்குவார் பொன்னினும் என் விசுவாசம்
மிக்கதோர் மகிமையதாய் - கர்த்தரை

6. சீயோனே உன் பெலன் தரித்திடுவாய்
வீற்றிடுவாய் எழுந்தெருசலேமே
உன்துயர் நீக்கிடும் இன்ப மணாளன்
வந்திடும் வேளையிலே - கர்த்தரை

104. அடவி தருக்களின் இடையில்

1. அடவி தருக்களின் இடையில்
ஒரு நாரகம் எந்த வண்ணம்
விசுத்தரின் நடுவில் காணுந்நே
அதி ஸ்றேஷ்டனாம் யேசுவினே

வாழ்த்துமே என்றெப்ரியனே
ஜீவ காலமெல்லாம் ஈமரூ யாத்றயில்
நந்நியோடேஞான் பாடிடுமே (2)

2. பனிநீர் புஷ்பம் சாரோனின் அவன்
தாம்ரயுமே தாழ்வரயில்
விசுத்தரில் அதி விசுத்தனவன்
மா சௌந்தர்ய ஸம்பூர்ணனே - வாழ்த்துமே

3. பகர்ந்த தைலம் போல் நின் நாமம்
பாரில் சௌரப்பியம் விசுந்நதால்
பழி துஷிசிநிந்ந நெருக்கங்களில்
என்னெ சுகந்தமாய் மாற்றிடனே - வாழ்த்துமே

4. மனக்ளேஷ தரங்ஙங்ஙளால்
துக்க ஸாஹகரத்தில் மூங்ஙும்போள்
திருக்கரம் நீட்டி எடுத்தணச்சு
பயப்படெண்டா எந்நுரைசவநே-வாழ்த்துமே

5. திருஹிதம் இஹெ திகச்சிடுவான்
இதோ ஞான் இப்போள் வந்நிடுந்நெ
என்றெ வேலயே திகச்சு கொண்டு
நின்றெ முன்பில் ஞான் நிந்நிடுவான்-வாழ்த்துமே

105. என் ஏசுவே நீர் செய்திட்ட

என் ஏசுவே நீர் செய்திட்ட
எண்ணற்ற நன்மைகளை
எண்ணியே எந்நாளும் நன்றியுடனே
துதித்துப் போற்றிடுவேன் - ஆஹா

1. கடந்த வாழ் நாளெல்லாம்
கருத்தாய் ஆதரித்தீர்
கைவிடாதென்றும் தவறாமலென்னை
கனிவாய் நடத்தினீர் - என் ஏசுவே

2. துன்பப் பெருக்கினிலே
துணையாய் நின்றீரல்லோ
சிறுமை ஏற்ற நாட்களுக்கீடாய்
பெரும் மகிழ்ச்சி ஈந்தீர் - என் ஏசுவே

3. வாக்குத் தத்தங்களெல்லாம்
நாள்தோறும் நிறைவேற்றி
காத்ததால் உம்மை வாழ்த்திடுவேன்
நாதனே என்றென்றுமே - என் ஏசுவே

4. அழைத்த அழைப்பினில்
அசையா பர்வதம் போல
நிலையாய் நிற்க உயர் பெலனாய்
நித்யரே விளங்கினீர் - என் ஏசுவே

5. இந்த மா நன்மைகட்காய்
என்ன பதிற் செய்குவேன்
என்னையே உமக்கென்றும் தந்தேன்
ஏற்றுக் கொள்வீர் இயேசுவே - என் ஏசுவே

E-Maj/Polka/T-110

106. வான் புகழ் வல்ல தேவனையே

வான் புகழ் வல்ல தேவனையே நித்தம்
வாழ்த்தியே துத்தியம் செய்திடுவோம்
காத்திடும் கரமதின் வல்லமையை என்றும்
கனிவுடன் பாடியே போற்றிடுவோமே

1. யாக்கோபின் ஏணியின் முன்நின்றவர்தாம்
யாக்கோபின் தேவனின் சேனை அவர் தாம்
யாத்திரையில் நம்மை சூழ்ந்திடும் கர்த்தர்
நேத்திரம் போல் பாதுகாத்திடுவாரே - வான்

2. பட்சிக்கும் சிங்கங்கள் வாயிலிருந்து
இரட்சித்தாரே வீர தானியேலின் தேவன்
அற்புத அடையாளம் நிகழ்த்தியே நித்தம்
கர்த்தன் தன் சேனை கொண்டு காத்திடுவாரே-வான்

3. உக்கிரமாய் எரியும் அக்கினி நடுவில்
சுற்றி உலாவின நித்திய தேவன்
மகிமையின் சாயலாய் திகழ்ந்திடும் கர்த்தர்
முற்றும் தம் தாசரைக் காத்திடுவாரே- வான்

4. சிறைச் சாலைக் கதவுகள் அதிர்ந்து நொறுங்க
சீஷரை சிறை மீட்டார் சத்திய தேவன்
சத்ருவின் எண்ணங்கள் சிதறுண்டுமாள
சேனைகளின் கர்த்தர் காத்திடுவாரே- வான்

5. அழைத்தனரே தம் மகிமைகென்றே எம்மை
தெரிந்தெடுத்தாரே தம் சாயலை அணிய
வழுவவிடாமலே கர்த்திடும் தேவன்
மாசற்றோராய் தம்முன் நிறுத்திடுவாரே- வான்

6. மகத்துவ தேவன் வானில் ஆயத்தமாக
மகிமையாய் நிற்கிறார் சடுதியாய் இறங்க
மணவாளன் வருள் வேளை அறியலாகாதே
மணவாட்டி சபையே நீர் விழிப்புடனிருப்பீர்- வான

F-Maj/BlueGrass/T-120

107. நாதன் அருளிய பெரும்

நாதன் அருளிய பெரும் கிருபைகட்காய்
நன்றியால் என்னுள்ளம் பொங்கி வழிந்திடுதே
நாவினால் பாடிப்போற்ற நாட்கள் போதுமோ
நல் பாதைதனில் தொடர்ந் தென்னை நடத்தியதால்

அன்பின் நேசரே நான்
உம்மைப் போற்றுவேன்
எண்ணில்லாத நன்மைகட்காய்
அல்லேலூயா பாடிடுவேன்

1. இயேசுவே நீர் எந்தன் பக்கம் இல்லாதிருந்தால்
சோதனையால் வெள்ளத்திலே மாண்டிருப்பேன் நான்
நிந்தை துன்ப துயர நேரங்களிலும் உம்
நீதியின் வலக்கரத்தால் என்னைத் தாங்கினீர் -அன்பின்

2. மீட்டுக் கொண்டீர் மானிடரின் நடுவினின்று
நீதியின் கனியாய் மகிமையில் துலங்க
நற்குல திராட்சைக் கொடியாய் உம்மோடிணைந்து
நாதனே உம் தோட்டத்திலே நானும் நிலைக்க-அன்பின்

3. மேலோகத்தில் உம்மையல்லாது யாருண்டெனக்கு
பூலோகில் நீரல்லாது வேறாசையில்லையே
உம் ஆலோசனையின்படி என்னை நடத்தி
உந்தன் மகிமையிலே ஏற்றுக் கொள்வீர் - அன்பின்

4. ஓட்டம் முடித்த பரிசுத்தர் பரத்தில்
ஓய்ந்திருக்கிறார் தங்கள் அறைகளிலே
தாரணியில் நானும் எந்தன் ஓட்டம் முடிக்க
தேகம் ஆத்துமா ஆவியையும் ஒப்புவிக்கிறேன் -அன்பின்

108. கர்த்தரின் கிருபைகளை

கர்த்தரின் கிருபைகளை
என்றென்றும் பாடிடுவோம்
அவர் திருநாமத்தை
ஒருமித்து உயர்த்திடுவோம்

1. சந்ததம் அவர் புகழ் ஓங்கிடவே
சபையாம் நம்மை அழைத்தாரே
சாற்றிடுவோம் நம் துதியினையே
சர்வ வல்லவராம் இயேசுவுக்கே - கர்த்தரின்

2. ஜீவன் சுகம் பெலன் யாவும் ஈந்து
சேதமின்றி நம்மைக் காத்தாரே
பூரிப்புடனே நாம் பாடிடுவோம்
புதிய பெலத்தால் நிறைந்திடுவோம் - கர்த்தரின்

3. மரண பள்ளத்தாக்கில் நடந்திடினும்
மாபெரும் தீங்குக்கும் அஞ்சேனே
சோர்ந்து போகாமல் ஜெயம் பெறவே
கர்த்தரின் கிருபை எம்மோடிருக்கும் - கர்த்தரின்

4. ஜெய கெம்பீரமாய் நாம் பாடிடுவோம்
ஜெயம் முழங்க துதித்திடுவோம்
அல்லேலூயா நாம் ஆர்ப்பரித்தே
அல்லும் பகலும் பாடிடுவோம் - கர்த்தரின்

5. பொன்னிலும் விலையேறப் பெற்றதாம் நம்
நல் விசுவாசத்தைக் காத்துக் கொள்வோம்
மாற்றுவார் சாயலை அந்நாளிலே
மாண்புடனே அவர் மகிமையிலே - கர்த்தரின்

G-Maj/Polka/T-122

109. என் இயேசுவின் சந்நிதியில்

என் இயேசுவின் சந்நிதியில்
என்றும் கீதங்கள் பாடிடுவேன்
என்னைக் காத்திடுமே அவர் நாமமதை
துதி கீதங்கள் பாடிடுவேன்

1. கண்ணீர் அவர் துடைத்திடுவார்
தம் கரங்களால் தாங்கிடுவார்
எந்தன் கல்வாரி நாயகன் இயேசுவாலே
எல்லாப் பாவங்கள் அகன்றிடுமே- என்

2. பரமன் குரல் கேட்கும் போது
பரமானந்தம் அடைந்திடுவேன்
எந்தன் அவசியங்கள் அவர் கிருபையாலே
அதிசீக்கிரம் கிடைத்திடுமே - என

110. துதிப்பேன் துதிப்பேன்

துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்
காலா காலமெல்லாம் என்னை காத்தவரை
நான் உள்ளவும் துதிப்பேன்
துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்

1. பாவங்கள் பல நான் செய்திட்டாலும்
பாவி என் மீது அன்பைச் சொரிந்து
என்னை மீட்டு காத்து நடத்திய
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

2. நண்பர்கள் பகையாய் மாறிட்டாலும்
துன்பங்கள் துயரங்கள் சூழ்ந்திட்டாலும்
என்னைத் தேற்றி அன்பு கூர்ந்த
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

3. வாழ்விலே உம்மை நான் ஏற்றிடவே
தாழ்விலும் என்னை நீர் தாங்கிடவே
ஏழை நானே பாதம் பணிந்து
எந்தன் இயேசுவைத் துதிப்பேன

E-Maj/Polka/T-110

111. ஆயிரம் ஆயிரம் பாட

1. ஆயிரம் ஆயிரம் பாடல்களை
ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களே
யாவரும் தேன்மொழி பாடல்களால் (2)
இயேசுவைப் பாடிட வாருங்களே

அல்லேலூயா! அல்லேலூயா!
என்றெல்லாரும் பாடிடுவோம்
அல்லல் இல்லை! அல்லல் இல்லை!
ஆனந்தமாய் பாடிடுவோம்

2. புதிய புதிய பாடல்களை
புனைந்தே பண்களும் சேருங்களே
துதிகள் நிறைந்த கானங்களால்
தொழுதே இறைவனைக் காணுங்களே

3. நெஞ்சின் நாவின் நாதங்களே
நன்றி கூறும் கீதங்களாம்
மிஞ்சும் ஓசைத் தாளங்களால்
மேலும் பரவசம் பாடுங்களே

4. எந்த நாளும் காலங்களும்
இறைவனைப் போற்றும் நேரங்களே
சிந்தை குளிர்ந்த ஆண்டுகளாய்
சீயோனின் கீதம் பாடுங்களே

E-Maj/8 Beat/T-130

112. எக்காலத்தும் கர்த்தர்

எக்காலத்தும் கர்த்தர் இயேசுவை 2
எந்தன் துணையாய் ஏற்றிடுவேனே
உயர்வோ தாழ்வோ எந்நிலையோ
எந்தன் தஞ்சம் இயேசுவே - எக்

1. மண்ணின் வாழ்வும் மாயையாகுமே
மனிதன் காண்பது பொய்யாகும்
மாறிடா நேசர் இயேசுவே (2)
மாறாத அன்பு என்றும் போதுமே- எக்

2. அலைகள் மோதி எதிர்வந்தாலும்
கலங்கிடேனே வாழ்க்கையிலே
அசையா எந்தன் நம்பிக்கை
நங்கூரம் எந்தன் இயேசு போதுமே

3. அவரை நோக்கி ஜெபிக்கும் போது
அருகில் வந்து உதவி செய்வார்
கைவிடாமல் கருத்துடன்
காத்தென்னை என்றும் நடந்திடுவார்

4. தேவ பயமே ஜீவ ஊற்று
மரண கண்ணிக்கு விலக்கிடுமே
தேவ பாதையில் நடந்திட
தேவாவியானவர் உதவி செய்வார்

5. முன்னறிந்து அழைத்த தேவன்
முடிவு வரையும் நடத்திடுவார்
தேவ சாயல் மாறியே
தேவாதி தேவனை தரிசிப்போமே

G-Maj/8 Beat/T-112

113. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

1. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் இயேசுவுக்கே துதி
சாற்றிடுவோம் என்றுமே
சேற்றிலிருந்தெம்மை மீட்டெடுத் தென்றும்
ஆற்றியே தேற்றுவதால்

இன்ப இயேசுவின் திவ்விய நாமத்தை 2
துன்பம் சூழும் எவ்வேளையிலும்
நன்றியோடு நாம் பாடிடுவோம்

2. தண்ணீரைக் கடந்திடும் வேளையிலும் அவர்
நம்மோடு இருப்பேன் என்றார் (2)
அக்கினி சூளையில் நடந்திடும் வேளையில்
விக்கினம் சூழாதென்றார்

3. கஷ்டங்கள் நஷ்டங்கள் சூழ்ந்திடும் வேளையில்
சோர்ந்திடா பெலன் அளிப்பார் (2)
நாளும் நம் குறைகள் யாவையும் கண்டு
நல்குவேன் கிருபை என்றாா - இன்ப

4. திகையாதே கலங்காதே என்றுரைத்தார் அவர்
திக்கற்றோராக விடார்
பயப்படாதே சிறுமந்தை என்றழைத்தார்
பாரில் நம் மேய்ப்பனவா - இன்ப

5. சிங்கத்தின் குட்டிகள் தாழ்ச்சிசியடைந்தாலும்
பங்கம் வராது காப்பார்
நம்மையே மீட்க தம்மையே ஈந்து
தரணியில் மாண்டுயிர்த்தார் - இன்ப

6. சீயோனின் ராஜனாய் சீக்கிரம் வந்துமே
சீயோனின் சேர்த்திடுவார்
மன்னவன் இயேசுவை சந்திக்கும் அந்நாளில்
மகிமையின் சாயல் அணிவோம்-இன்ப

114. புத்தம் புதிய பாடல் தந்தார்

புத்தம் புதிய பாடல் தந்தார்
நித்தம் அவரைத் துதித்திடவே

1. காலையில் கூவிடும் பறவைகளும்
மாலையில் கூப்பிடும் விலங்குகளும்
இன்பமாய் இயேசுவைத் துதிக்கின்றன
என்னையும் துதித்திட அழைக்கின்றன

2. மரங்களில் மோதிடும் தென்றல் காற்றும்
பாறையில் மோதிடும் கடலலையும்
துள்ளியே களிப்புடன் துதிக்கின்றன
என்னையும் துதித்திட அழைக்கின்றன

3. காகங்கள் கரைந்திடும் குரலையும் கேட்டு
படைத்தவர் மகிழ்ந்திடும் வேளையிலே
பாவி என் பாடலின் துதி கேட்டு
என் தேவன் களித்திட மகிழுவேன் நான்

4. உள்ளத்தில் பாவங்கள் இருக்கும் வரை
உண்மையாய் துதித்திட முடியவில்லை
கல்வாரி இரத்தத்தால் கழுவப் பெற்றேன்
இன்பமாய் இயேசுவைத் துதித்து வாழ்வேன

F-Maj/Polka/T-110

115. துதி உமக்கே இயேசு நாதா

துதி உமக்கே இயேசு நாதா
வாழ்த்திடுவோம் உம்மையே

அனுபல்லவி
நித்தமும் காக்கும் உம் கிருபைகளையே
எண்ணியே துதித்திடுவோம்

1. ஆதி அந்தமில்லா அனாதி தேவனே
அடைக்கலமானீர் எமக்கு நீரே
மாறா விசுவாசத்தை எமக்கு தந்தீரே
எண்ணியே துதித்திடுவோம் - துதி

2. கடந்த நாளெல்லாம் வழுவாமல் எம்மை
காருண்யத்தாலே காத்தீரே
வல்லதேவனே உம் வாக்குகளையே
எண்ணியே துதித்திடுவோம் - துதி

3. தாயினும் மேலாய் அன்பு கூர்ந்தீர்
தந்தை போல் எம்மை சுமந்தீரே
ஜீவனைத் தந்த உம் அன்பினையே
எண்ணியே துதித்திடுவோம் - துதி

4. ஜெயம் பெற்றோராய் சேவை செய்து
ஜீவனை வைத்தே துதித்திடவே
நித்திய ஜீவனை எமக்குத் தந்தீரே
எண்ணியே துதித்திடுவோம் - துதி

5. உன்னதர் உந்தன் மகிமையைக் காண
சீயோனை எமக்குக் காட்டினீரே
இயேசுவே உந்தன் வருகையில் நாளை
எண்ணியே துதித்திடுவோம் - துதி

F-Maj/8 Beat/T-120

116. ஆனந்தமே பரமானந்தமே

ஆனந்தமே பரமானந்தமே இயேசு
அண்ணலை அண்டினோர்க்கானந்தமே

1. இந்தப் புவி ஒரு சொந்தமல்ல வென்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே
இக்கட்டுத் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு,
இங்கேயே பங்காய் கிடைத்திடினும் - ஆனந்தமே

2. கர்த்தாவே நீரெந்தன் காருண்யக் கோட்டையே
காரணமின்றி கலங்கேனே யான்
விசுவாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே - ஆனந்தமே

3. என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்க்,
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது,
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெயக் கீதம் பாடி மகிழ்ந்திடலாம் - ஆனந்தமே

4. கூடார வாசிகளாகும் நமக்கிங்கு,
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ
கைவேலையல்லாத வீடொன்றை மேலே தான்,
செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ -ஆனந்தமே

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையைத்
துன்பத்தினூடே அனுப்பிடுவார் - ஆனந்தமே

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குகிறேன்
என் நேசர் தன்முக ஜோதியதேயல்லால்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை - ஆனந்தமே

G-Maj/S.Rock/T-120

117. பார் போற்றும் வேந்தன்

1. பார் போற்றும் வேந்தன் இப்பாழ் உள்ளம் வந்தார்
பூரிப்பால் உள்ளம் யாவும் மூடினார்
பரிசுத்தவான்களோடு இணைந்தார்
இந்த வாழ்க்கை என்றும் இன்ப வாழ்க்கையே

அல்லேலூயா கீதம் நான் என்றும் பாடுவேன்
ஆர்ப்பரித்து உள்ளம் மகிழ்ந்து பூரிப்பேன்
ஜீவனுள்ள மட்டும் என்றும் கூறுவேன்
அல்லேலூயா! அல்லேலூயா

2. பாவ மேகம் யாவும் கலைந்து சென்றதே
பரிசுத்த ஜுவாலை கவர்ந்து கொண்டதே
உடல் பொருள் ஆவி ஆன்மா யாவுமே
இயேசுவின் சிலுவை அடிவாரமே - அல்

3. தாழ்மை உள்ளம் கொண்டு பின் செல்வேன் நானே
கந்தல் அல்லவோ என் நற்செயல் எல்லாம்
உள்ளத்தில் கிறிஸ்து வந்து தங்கவே
வல்லதேவன் காட்டும் சுத்தக் கிருபையே! - அல்

4. நாள்தோறும் நாதன் வழியை ஆசிப்பேன்
விட்டு வந்த பாவக் கிடங்கிற்கு செல்லேன்
என் முன்னே அநேக சுத்தர் செல்கிறார்
இப்பாதையே எந்தன் ஜீவ பாதையே!

118. அவர் எந்தன் சங்கீதமானவர்

அவர் எந்தன் சங்கீதமானவர்
பெலமுள்ள கோட்டையுமாம்
ஜீவனின் அதிபதியான அவரை
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்துவோம்

1. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூதர் கணங்கள் போற்றும் தேவன் அவரே
வேண்டிடும் பக்தர்களின் குறைகள் கேட்கும் (2)
திக்கற்ற பிள்ளைகளின் தேவன் அவரே (2) - அவர்

2. இரண்டு மூன்று பேர் எந்தன் நாமத்தினால்
இருதயம் ஒருமித்தால் அவர் நடுவில்
இருப்பேன் என்றவர் நமது தேவன் (2)
இருகரம் தட்டி என்றும் வாழ்த்திடுவோம் (2) - அவர்

3. வானவர் கிறிஸ்தேசு நாமம் அதை
வாழ்நாள் முழுவதும் வாழ்த்திடுவோம்
வருகையில் அவரோடு இணைந்து என்றும் (2)
வணங்குவோம் வாழ்த்துவோம் போற்றிடுவோம் (2)-அவர்

E-Maj/Disco/T-110

119. துதிப்பதே என் தகுதியல்லோ

துதிப்பதே என் தகுதியல்லோ
துதித்திடுவேன் என் இயேசுவை

1. வேதம் நிறைந்த இதயம் தந்தார்
ஜெபம் நிறைந்த நேரம் தந்தார்
கண்ணீர் நிறைந்த கண்கள் தந்தார்
கருணை நிறைந்த கரங்கள் தந்தார்

2. வியாதி நேரத்தில் வல்லமை தந்தார்
சோதனை நேரத்தில் ஜெயம் தந்தார்
கைவிட்ட நேரத்தில் ஜீவன் தந்தார்
ஆரோக்கிய நேரத்தில் அடைக்கலம் தந்தார்-துதிப்பதே

3. மனதில் நிறைந்த மகிழ்ச்சி தந்தார்
தூய்மை நிறைந்த பார்வை தந்தார்
சிந்தனை நிறைந்த ஊழியம் தந்தார்
செயல் நிறைந்த திட்டங்கள் தந்தார் - துதிப்பதே

4. ஆபத்து நேரத்தில் அடைக்கலம் தந்தார்
பெலவீன நேரத்தில் பெலன் தந்தார்
செய்தி நேரத்தில தூது தந்தார்
பாடிய நேரத்தில் பரவசம் தந்தார்

5. வளம் நிறைந்த வாழ்வு தந்தார்
மகிமை நிறைந்த தாழ்மை தந்தார்
அன்பு நிறைந்த ஆட்கள் தந்தார்
ஆவி நிறைந்த அறிவு தந்தார் - துதிப்பதே

6. சாட்சி நிறைந்த ஜீவியம் தந்தார்
சத்தியம் நிறைந்த சபை தந்தார்
இயேசுவில் நிறைந்த ஞானம் தந்தார்
ஒளி நிறைந்த வழி திறந்தார் - துதிப்பதே

120. ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்

ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
இயேசு தேவனை என் ஜீவனுள்ள
நாட்களெல்லாம் ஸ்தோத்தரிப்பேனே

1. உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலியை
இயேசுவின் நாமத்தினாலே செலுத்துகின்றேன் யான்

2. பாவக்கறை நீங்க என்னை முற்றிலுமாக
உம் சுத்தமுள்ள இரத்தத்திற்குள் தோய்த்ததினாலே

3. என்னுடைய காயங்களை உம் காயங்களாலே
என்றைக்குமாய் தீர்த்ததினால் ஸ்தோத்தரிப்பேன் யான்

4. ஆகாயத்து பட்சிகளை போஷிக்கும் தேவன்
தினமும் என்னை போஷிப்பதால் ஸ்தோத்தரிப்பேன்யான்

5. நாளைத் தினம் ஊன் உடைக்காய் என் சிந்தைகளைக்
கவலையற்ற தாக்கினதால் ஸ்தோத்தரிப்பேன் யான்

6. சீக்கிரமாய் வந்திடுவேன் என்றுரைத்தோனே
சீக்கிரமாய் காண்பதினால் ஸ்தோத்தரிப்பேன் யான்

F-Maj/8 Beat/T-120

121. கர்த்தரை நான் எக்காலமும்

கர்த்தரை நான் எக்காலமும் ஸ்தோத்தரிப்பேன்
அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்

1. கர்த்தரை நான் தேடினேன்
அவர் தம் ஒளியை வீசச் செய்து
எந்தன் பயங்கள் யாவற்றையும்
நீக்கி என்னை விடுத்தாரே! - கர்த்தரை

2. சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாக இருந்திடினும்
கர்த்தரை தேடும் பிள்ளைகட்கு
குறைவின்றி நன்மைகள் கிடைத்திடுமே - கர்த்தரை

3. நீதிமானை அணுகிடும் துன்பங்கள்
அநேகமாக இருந்திடினும்
கர்த்தர் நல்லவர் என்பதையே
ருசித்துப் பார்த்திட செய்கின்றார் - கர்த்தரை

4. அன்பின் இதயம் கர்த்தரை துதிக்குமே
அல்லேலூயா என்றும் பாடிடுமே!
கர்த்தரின் கரம் நம்மைக் காத்ததினால்
கருத்துடன் இன்றும் ஸ்தோத்தரிப்போம் - கர்த்தரை

122. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

ஸ்தோத்திரம் (4)
ஸ்தோத்திரம் (4)
ஸ்தோத்திரம் இயேசு தேவா
ஸ்தோத்திரம் துதி உமக்கே.. தேவா

1. கருவில் கண்டீர் ஸ்தோத்திரம் தேவா
தெரிந்து கொண்டீர் ஸ்தோத்திரம் தேவா
என்னை அழைத்தீர் ஸ்தோத்திரம் தேவா
உந்தனின் சேவை செய்ய.. தேவா!

2. எனக்காய் வந்தீர் ஸ்தோத்திரம் தேவா!
சிலுவையில் மரித்தீர் ஸ்தோத்திரம் தேவா!
இரத்தம் சிந்தினீர் ஸ்தோத்திரம் தேவா!
என்னை இரட்சிக்கவே.. தேவா!

3. உயிர்த்தெழுந்தீர் ஸ்தோத்திரம் தேவா!
பரலோகம் சென்றீர் ஸ்தோத்திரம் தேவா!
வரங்கள் அளித்தீர் ஸ்தோத்திரம் தேவா!
உமக்கென்றும் வாழ்ந்திடவே தேவா!

4. எக்காளம் தொனிக்கும் ஸ்தோத்திரம் தேவா!
தூதர்கள் சூழ ஸ்தோத்திரம் தேவா!
மறுபடி வருவீர் ஸ்தோத்திரம் தேவா!
பரலோகம் கொண்டு செல்ல.. தேவா!

G-Maj/UK.Pop/T-130

123. துதி கீதமே பாடியே

துதி கீதமே பாடியே
வாழ்த்தி வணங்கிடுவோம்
ஜோதியின் தேவனாம்
இயேசுவைப் பணிந்திடுவோம்

1. தந்தைப் போல் நம்மைத் தாங்கியே
தோளில் ஏந்தி சுமந்தனரே
சேதம் ஏதும் அணுகிடாமல்
காத்த தேவனை துதித்திடுவோம்-துதி

2. காரிருள் போன்ற வேளையில்
பாரில் நம்மைத் தேற்றினாரே
நம்பினோரைத் தாங்கும் தேவன்
இன்றும் என்றுமாய்த் துதித்திடுவோம்

3. பஞ்சைப் போல் வெண்மை ஆகிட
பாவம் யாவும் நீக்கினாரே
சொந்த இரத்தம் சிந்தி நம்மை
மீட்ட தேவனைத் துதித்திடுவோம் - துதி

4. கட்டுகள் யாவும் அறுத்துமே
கண்ணீர் கவலை அகற்றினாரே
துதியின் ஆடை அருளிச் செய்த
தேவ தேவனைத் துதித்திடுவோம்- துதி

5. வானத்தில் இயேசு தோன்றிடுவார்
ஆயத்தமாகி ஏகிடுவோம்
அன்பர் இயேசு சாயல் அடைந்து
என்றும் மகிழ்ந்தே வாழ்த்திடுவோம் - துதி

D-Maj/Waltz/T-140

124. தோத்திரம் பாடியே

தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

1. அற்புதமான அன்பே - என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும் மாறா தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே

2. ஜோதியாய் வந்த அன்பே - பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்ய மதுர அன்பே - தோத்திரம்

3. மாய உலக அன்பை நம்பி
மாண்ட என்னை கண்டழைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே - தோத்திரம்

4. ஆதரவான அன்பே - நித்தம்
அன்னை போல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னதமான தேவ அன்பே
உள்ளம் கவரும் அன்பே - தோத்திரம்

5. வாக்கு மாறாத அன்பே - நித்தம்
வார்த்தையுரைத் தென்னை தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே - தோத்திரம்

D-Maj/Disco/T-115

125. தேவ தேவனை நாம்

தேவ தேவனை நாம் ஏகமாய்ப் பாடி போற்றிடுவோம்
இயேசுவின் நாமத்தினால்
பாவ ரோக சாபம் நீங்கவே
விடுதலையும் அடைந்தோம் - என்றென்றுமாய்

1. உலகம் தரக்கூடா சமாதானமும்
சந்தோஷமும் தந்தார் இயேசு ராஜன்
மண்ணுலகில் ஜீவித்தாலும்
விண்ணுலகின்பத்தை அனுபவிக்க
இந்த நற்பாக்கியம் ஈந்தாரே - தேவ

2. துன்பமோ துக்கமோ தொல்லைகளோ
தொடர்ந்து வந்தாலும் திகிலடையோம்
சீயோனின் அரண்களைப் போல்
அசையாது நாம் வாழ்ந்திடுவோம்
சேனையதிபன் நம்மோடிருக்க - தேவ

3. எரிகோவைப் போல் பல எதிர்ப்புகளும்
எழும்பி வந்து நம்மைத் தடுத்தாலும்
முன் வைத்த காலை பின் வைப்பீரோ
வாலிபரே இப்போர் முனையில்
வல்லமையோடவரைத் துதிப்போம் - தேவ

4. மாமிச சிந்தையால் ஆவியிலே
மரணமும் விழுகையும் நேர்ந்திடுமே
பயப்படுவீர் நீர் பயப்படுவீர்
பட்சிக்கும் தேவன் நம்மோடிருக்க
பரிசுத்த சிந்தையில் பலப்படுவீர் - தேவ

5. சீயோனுக்காய் இதோ சீக்கிரத்தில்
ஸ்ரீயேசு ராஜனும் தோன்றிடுவார்
அல்லேலூயா! ஆர்ப்பரிப்போம்!
ஆனந்த நாள் வேகம் நெருங்கிடுதே
ஆனந்தாய் அவரைச் சந்திப்போம் - தேவ

D-Min/Disco/T-120

126. ஆயிரம் ஸ்தோத்திரமே

ஆயிரம் ஸ்தோத்திரமே
இயேசுவே பாத்திரரே
பள்ளத்தாக்கிலே அவர் லீலி
சாரோனிலே ஓர் ரோஜா

1. வாலிப நாட்களிலே - என்னைப்
படைத்தவரை நினைத்தேன்
ஏற்றிய தீபத்தால் இதயமே நிறைந்தது
இயேசுவின் அன்பினாலே - ஆயிரம்

2. உலக மேன்மை யாவும்
நஷ்டமாய் எண்ணிடுவேன்
சிலுவை சுமப்பதே லாபமாய் நினைத்தே
சாத்தானை முறியடிப்பேன் - ஆயிரம்

3. சிற்றின்ப கவர்ச்சிகளை
வெறுக்கும் ஓர் இதயம் தந்தீர்
துன்பத்தின் மிகுதியால் தோய்வுகள் வந்தாலும்
ஆவியால் மகிழ்ந்திடுவேன் - ஆயிரம்

4. பலவித சோதனையை
சந்தோஷமாய் நினைப்பேன்
எண்ணங்கள் சிறையாக்கி ஏசுவுக்கு கீழ்ப்படுத்தி
விசுவாசத்தில் வளர்வேன் - ஆயிரம்

5. இயேசுவின் நாமத்திலே
ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
அல்லேலூயா ஸ்தோத்திரம் இயேசுவே வாரும்
என்றென்றும் உம்மில் வாழ - ஆயிரம்

E-Maj/Rumpa/T-105

127. இயேசுவைப் போல்

1. இயேசுவைப்போல் அழகுள்ளோர்
யாரையும் இப்பூவினில்
இதுவரை கண்டதில்லை
காண்பதுமில்லை

பூரண அழகுள்ளவரே பூவில் எந்தன்
வாழ்க்கையதில் - நீரே போதும் வேறே
வேண்டாம் - எந்தன் அன்பர் இயேசுவே
மண்ணுக்காக மாணிக்கத்தை
விட்டிட மாட்டேன்

2. சம்பூரண அழகுள்ளோர் என்னை ஷ
மீட்டுக் கொண்டீரே
சம்பூரணமாக என்னை உந்தனுக்கீந்தேன்

3. எருசலேம் குமாரிகள் எந்தனை
வளைந்தோராய் - உம் மேல் உள்ள எந்தன்
அன்பை நீக்க முயன்றார் - பூரண

4. லோக சுகமேன்மை எல்லாம் எந்தனைக்
கவர்ச்சித்தால் - பாவ சோதனைகளெல்லாம்
என்னை சோதித்தால்- பூரண

5. நீர் மேல் மோதும் குமிழியைப்
போல் மின்னும் ஜட மோகமே
என்மேல் வந்து வேகமாக மோதியடித்தால்

6. தினந்தோறும் உம்மில் உள்ள
அன்பு என்னில் பொங்குதே
நேசரே நீர் வேகம் வந்து என்னைச் சேருமே

E-Maj/Waltz/T-135

128. என் தேவனே என்

1. என் தேவனே என் அப்(அன்)பனே - என் இருதயம்
உம்மை துதிக்கும் கர்த்தாவே மகிமையாய் கீர்த்தனம்
பண்ணி உம்மை பாடுவேன் - உமது ஆலயத்தின் நேராய்
பணிந்து உம்மை ஸ்தோத்தரித்து உண்மையினிமித்தம்
கிருபையினிமித்தம் உந்தனின் நாமத்தை துதிப்பேன்

பல்லவி
உம் வார்த்தையை என்றும் மகிமை படுத்தினீர்
உம் நாமத்தை என்றும் உயர்த்தி கூறுவேன்

2. நான் கூப்பிட்ட அந்நாளிலே எனக்கு உத்தரவருளினீர்
ஆத்துமாவில் பெலன் தந்து என்னை தைரியப்படுத்தினீர்
உமது வார்த்தை கேட்கும் போது
ராஜாக்கள் உம்மை துதிப்பார்கள்
கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதால்
கர்த்தரின் வழியை பாடுவார்கள் - உம்

3. நீர் உயர்ந்தவராயினும் தாழ்மையுள்ளவனை நோக்குகின்றீர்
மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்துஅறிகின்றீர்
துன்பத்தின் நடுவில் நடந்தாலும்
தேவனே என்னை உயிர்ப்பிப்பீர்
சத்துருவின் கோபத்துக்கு விரோதமாக
உமது கையை நீட்டுவீர் - உம்

4. எனக்காக யாவற்றையும் இரட்சிப்பின்
கர்த்தர் செய்து முடிப்பார்
கர்த்தாவே உம் கிருபை
என்றென்று முள்ளதால் ஸ்தோத்தரிப்பேன்
வலது கரத்தால் இரட்சிப்பீர் நேசரே உம்மை போற்றுகிறேன்
உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக - உம்

129. தூயாதி தூயரே துதிக்குப்

தூயாதி தூயரே துதிக்குப் பாத்திரரே
துதிக்கிறோம் உம்மையே முழு மனதோடே

1. கேரூபீன்கள் சேராபீன்கள் ஓய்வில்லாமல் துதிக்கும்
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
அனுதினம் அடியார் அகமகிழ்ந்தே நாம்
அன்போடே பணிவோம் அவர் பாதம் வீழ்ந்தே - தூயாதி

2. எரிகோவின் கோட்டையே இடிந்து வீழ்ந்ததுவே
இஸ்ரவேலின் துதிகளின் ஓங்கிய சத்தத்தால்
எதிர் வரும் தடைகளை தகர்த்தியே வீழ்த்துவோம்
எண்ணில்லா துதிகளை ஓயாமல் செலுத்தி - தூயாதி

3. இருள் சூழ்ந்த உலகில் இன்னல்கள் வந்தாலும்
இறுதி வரை நாம் நிலைத்திருப்போமே
மரணமே வந்தாலும் உண்மையைக் காத்து
மகிழ்வுடன் பெறுவோம் ஜீவக்கிரீடமே - தூயாதி

4. பலத்தினால் அல்ல பராக்கிரமத்தினால் அல்ல
ஆவியினாலே ஆகும் என்றாரே
அதினதின் காலத்தில் நேர்த்தியாய் நடக்கும்
அமர்ந்திருந்து அவர் செயல்களை அறிவோம் - தூயாதி

5. விசுவாச துரோகம் நேரிடும் காலம்
விசுவாசம் தந்து விழித்திருப்போம் நாம்
விரைந்து வரும் நம் இயேசு மணாளனை
விண்ணிலே சந்திக்கும் காலமிதல்லவோ - தூயாதி

E-Maj/Polka/T-110

130. நான் நேசிக்கும் தேவன்

நான் நேசிக்கும் தேவன் இயேசு
என்றும் ஜீவிக்கிறார்
அவர் நேற்றும் இன்றும் நாளை
என்றும் மாறாதவர்

நான் பாடி மகிழ்ந்திடுவேன்
என் இயேசுவை துதித்திடுவேன்
என் ஜீவிய காலமெல்லாம்
அவர் பாதத்தில் அமர்ந்திருப்பேன்

1. கடலாம் துன்பத்தில் தவிக்கும் வேளையில்
படகாய் வந்திடுவார்
இருள்தனிலே பகலவனாய்
இயேசுவே ஒளி தருவார்- நான்பாடி

2. பாவ நோயாலே வாடும் நேரத்தில்
மருத்துவராகிடுவார்
மயங்கி விழும் பசி தனிலே
மன்னாவைத் தந்திடுவார் - நான்பாடி

3. தூற்றும் மாந்தரின் நடுவில் எந்தனை
தேற்றிட வந்திடுவார்
கால் தளர ஊன்று கோலாய்
காத்திட வந்திடுவார் - நான்பாடி

4. நேசர் என்னோடு துணையாய் ஜீவிக்க
நான் இனி கலங்கிடேனே
எந்தனுக்கே காவல் அவர்
நான் உடல் அவர் உயிரே - நான்பாடி

131. கர்த்தரின் ஜனமே கைத்

கர்த்தரின் ஜனமே கைத்தாளமுடனே
களிகூர்ந்து கீதம் பாடு
சாலேமின் ராஜா நம் சொந்தமானார்
சங்கீதம் பாடி ஆடு அல்லேலூயா! அல்லேலூயா!

1. பாவத்தின் சுமையகற்றி கொடும்
பாதாள வழி விலக்கி
பரிவாக நம்மை கரம் நீட்டிக் காத்த
பரிசுத்த தேவன் அவரே அல்லேலூயா - 2

2. நீதியின் பாதையிலே அவர்
நிதம் நம்மை நடத்துகின்றார்
எது வந்த போதும் மாறாத இன்ப
புது வாழ்வைத் தருகின்றாரே அல்லேலூயா - 2

3. மறுமையின் வாழ்வினிலே - இயேசு
மன்னவன் பாதத்தினிலே
பசி தாகமின்றி துதி கானம் பாடி
பரனோடு நிதம் வாழுவோம் அல்லேலூயா - 2

132. இணையில்லா நாமம்

இணையில்லா நாமம் இயேசுவின் நாமம்
இன்பமே தங்கும் இதயமே பொங்கும்
இன்னல்கள் தீரும் என் மனம் மாறும்

1. பாவத்தின் கூரை முறித்திடும் நாமம்
பாடுகள் ஏற்ற இயேசுவின் நாமம்
சாபப் பிசாசை ஜெயித்தவர் நாமம்
சந்ததம் ஓங்கிடும் நாமம்
பல நோய்ப் பிணி தீர்க்கும் ஔஷதம் அதுவே
பக்தர்கள் அடைக்கல நாமம் - இணை

2. லோகத்தின் ஆசை வெறுத்திடும் நாமம்
லோகத்தை மீட்கும் இயேசுவின் நாமம்
ஜீவனை கொடுத்த இரட்சகர் நாமம்
ஜீவனோடெழுந்தவர் நாமம்
அதை யார் மறைத்திடுவார் மனுக்குல விளக்கே
அணைந்திடா ஒளி திரு நாமம் - இணை

3. அண்டிடுவோரை அணைத்திடும் நாமம்
அன்பின் சொரூபி இயேசுவின் நாமம்
வேண்டுதல் கேட்கும் வல்லவர் நாமம்
வேதனை தாங்கிடும் நாமம்
இதை நம்பியே வாரும் பாவங்கள் தீரும்
இன்றும்மை அழைத்திடும் நாமம் - இணை

4. அழியாமை ஜீவன் அளித்திடும் நாமம்
அற்புதம் செய்யும் இயேசுவின் நாமம்
விண்ணுலகினிலே சேர்ந்திடும் நாமம்
மண்ணுலகோர் நம்பும் நாமம்
மிகச் சீக்கிரம் வருவேன் என்று வாக்குரைத்த
மீட்பர் நல்மேய்ப்பரின் நாமம் - இணை

133. இன்ப இயேசுவின்

இன்ப இயேசுவின் இணையில் நாமத்தை புகழ்ந்து
இகமதில்பாடிட தருணமிதே
இயேசுவைப் போல் நல் நேசரில்லை
இன்றும் என்றென்றும் அவர் துதி சாற்றிடுவேன்

1. நித்தியமான பர்வதமே உந்தனில் நிலைத்திருப்பேன்
நீங்கிடாதென்னை தோளின் மேலும் சுமந்தே
நித்தம் நடத்துகிறீர் என்னையும் உம் ஜனமாய்
நினைத்தே - ஈந்தீர்
உன்னத வெறிப்படுத்தல் நிறைவாய்- இன்ப

2. பாவத்தில் வீழ்ந்து மரயையிலே ஆழ்ந்து நான்
மாள்கையிலே - பரிந்து தேவ அன்பினைக் காட்டியே
பசமாய் பார்த்தெடுத்தீர் பாரில் பரிசுத்தராகுதற்காய் - மிக
பரலோக நன்மைகளால் நிறைத்தீர் - இன்ப

3. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல்
என் ஆத்துமா உம்பொன் முகம் காணவே
வாஞ்சித்து கதறுதே வானிலும் இந்தப் பூவிலும் நீர் -என்
வாஞ்சைகள் தீர்ப்பவராய் நினைத்தே- இன்ப

4. சீயோனிலே நீர் சிந்தை வைத்தீர்
சேர்தத்தொன்றாய் கட்டுதற்காய்
திவ்வியபிஷேகம் தந்தெமை நிறுத்தி
சேர்த்தீரே சுத்தருடன்
சேதம் வராமல் காத்ததினால் - உம்மை
சேவிப்போம் நித்திய நித்தியமாய்- இன்ப

5. ஆர்ப்பரிப்போடே ஸ்தோத்தரிப்போம்
அன்பரை உளம் கனிந்தே
அற்புத ஜெயம் ஈந்தீரே அளவில்லாத ஜீவனை அளித்தே
அல்லேலூயா துதி கன மகிமை - உம்
நாமத்திற்கே நிதம் சாற்றிடுவோம்- இன்ப

D-Maj/Disco/T-125

134. இயேசுவின் நாமமே

இயேசுவின் நாமமே!
கிறிஸ்தேசுவின் நாமமே!
வானம் பூமிதனில்
மகிமையோடிறங்கும்
உன்னதர் நாமமே!-இயேசு

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா - 2

1. மாந்தர் போற்றும் நாமம் - விண்
தூதர் வாழ்த்தும் நாமம்
பூவுலகோர் போற்றும்
மேன்மையான நாமம் -இயேசுவின்

2. பாவம் போக்கும் நாமம் - தூய
வாழ்வளிக்கும் நாமம்
நித்திய ஜீவனருளும்
ஈடில்லாத நாமம் - இயேசுவின்

3. பேய் நடுங்கும் நாமம் - கடும்
நோய் அகற்றும் நாமம்
நேற்றும் இன்றும் என்றும்
மாறிடாத நாமம் -இயேசுவின்

4. இனிமை தங்கும் நாமம் - தீய
இன்னல் மாற்றும் நாமம்
இருளின் பயங்கள் நீக்கும்
ஈடில்லா நாமமே -இயேசுவின்

5. சாவை வென்ற நாமம் - பாவ
சாபம் போக்கும் நாமம்
சர்வ வல்ல நாமம்
இயேசுவின் நாமமே -இயேசுவின்

D-Maj/8 Beat/T-115

135. இயேசுவின் நாமத்தில்

இயேசுவின் நாமத்தில் நாம்
கூடிடும் சமயங்களில்
பேசுவார் தியானத்திலே
அவர் தம் கிருபைகள் அளிக்க

1. மலைகள் விலகினாலும்
மாபர்வதம் நிலை பெயர்ந்தும்
என்றும் மாறாத அவர் கிருபைகள்
தம் மக்களுக்காறுதலே - இயேசு

2. சீயோனில் அவர் நம்மையே
சிறுமந்தையாய் சேர்த்திடுவார்
நித்திய ராஜ்யத்தை தந்திடுவார்
சத்திய பாதையில் நடந்ததினால் - இயேசு

3. கஷ்டங்கள் கவலைகளில்
அன்புக்கரம் நம்மை தாங்கிடுமே
கஷ்டங்கள் மாறிடுமே
நாதன் இயேசுவின் நாமத்தினால் - இயேசு

136. இயேசுவின் நாமம்

இயேசுவின் நாமம் அன்பின் நாமம்
இன்பம் சுரந்திடும் மதுர நாமம்

1. கூனர் நிமிர்ந்திட
   செவிடர் கேட்டிட
   பாவம் போக்கிடும்
   பரலோக நாமம் - இயேசு

2. சாத்தான் வீழ்ந்திட
   சத்தியம் ஓங்கிட
   சபையில் நிறைந்திடும்
   புண்ணிய நாமம் - இயேசு

3. வஞ்சகம் நீங்கிட
   தஞ்சம் பெற்றிட
   வாஞ்சையில் நிறைந்திடும்
   புனித நாமம் - இயேசு

4. வறுமை நீக்கிட
   அருமை பெற்றிட
   வளத்தில் நிறைந்திடும்
   வல்ல நாமம் - இயேசு

5. அநீதி நீக்கிட
   நீதி பெற்றிட
   குருதி சிந்திடும்
   குறைவில்லாத நாமம் - இயேசு

6. உண்மை வளர்ந்திட
   ஊக்கம் உயர்ந்திட
   உரிமை நிறைந்திடும்
   உன்னத நாமம் - இயேசு

7. அறுவடை பெருகிட
   ஆட்களை அழைத்திட
   ஆவியைப் பொழிந்திடும்
   ஆனந்த நாமம் - இயேசு

137. ஆ! கர்த்தாவே உம்

1. ஆ! கர்த்தாவே உம் கிரியை காணும் போது
சொல்லொண்ணா ஆச்சரியமடைந்தேன்
விண்மீன்களும் இடி முழக்கங்களும்
உம் வல்லமையை காட்டுகின்றதே

பல்லவி
என் ஆத்துமா பாடும் இரட்சகா தேவா
நீர் எத்தனை பெரியவர்! -2

2. சோலை, வனம். பூங்கா வழி செல்கையில்
பைங்கிளிகளில் பாடல் கேட்கையில்
மலையுச்சியின் மேல் நின்று கீழ் நோக்குகையில்
மென் காற்றருவியால் மகிழ்ந்திருக்கையில

3. பின்னும் பிதா தன் சுதனை குருசில்
தந்த விந்தை விளங்கவில்லை
என் பாவம் போக்கவே அவர் மரத்தில்
ரத்தம் சிந்தி ஜீவன் விட்டார் - என் ஆத்துமா

4. ஒவ்வொரு நாளும் உன் கிருபையினால்
உமது ஞானம் வியந்து மகிழுவேன்
உமது கிருபையால் என் பாவம் நீங்க
என் விண்ணப்பம் உம் கரத்தில் வைத்தேன

5. ஆர்ப்பரிப்போடவர் திரும்ப வந்து
விண் வீட்டில் சேர்க்கையில் மா ஆனந்தம்
அப்போ முன் வணங்கிப் பணிந்து நீரே
ஆ! எத்தனை பெரியவர் என்பேன்

G-Maj/S,Rock/T-120

138.பக்தரே வாரும் ஆசை

1. பக்தரே வாரும் ஆசை ஆவலோடும்
நீர்ப் பாரும். நீர்ப் பாரும், இப்பாலனை
வானோரின் இராஜன்,
கிறிஸ்து பிறந்தாரே

சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
இயேசுவை

2. தேவாதி தேவா, ஜோதியில் ஜோதி
மானிட தன்மை நீர் வெறுத்தலீர்!
நித்திய குமாரன்,
ஒப்பில்லாத மைந்தன்!

3. மேலோகத்தாரே மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடிப்போற்றுமேன்
விண்ணில் சந்தோஷம்
மண்ணில் சமாதானம்
சாஷ்டாங்கம் செய்ய வாரும், (3) இயேசுவை

4. இயேசுவே வாழ்க இன்று ஜென்மித்தீரே
புகழும் ஸ்துதியும் உண்டாகவும்
அன்பின் சொரூபி அருள் அவதாரம்
சாஷ்டாங்கம் செய்ய வாரும், (3) இயேசுவை

139. ராக்காலம் பெத்லகேம்

1. ராக்காலம் பெத்லகேம் மேய்ப்பர்கள்
தம் மந்தை காத்தனர்,
கர்த்தாவின் தூதன் இறங்க,
விண் ஜோதி கண்டனர்

2. அவர்கள் அச்சங் கொள்ளவும்
விண் தூதன் "திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவென்

3. தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் கிறிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்

4. இதுங்கள் அடையாளமாம்
முன்னணை மீது நீர்
கந்தைப் பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்"

5. என்றுரைத்தான் அசணமே
விண்ணோரம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்

6. மா உன்னதத்தில் ஆண்டவா.
நீர் மேன்மை அடைவீர்
பூமியில் சமாதானமும்
நல்லோர்க்கும் ஈகுவீர்

E-Maj/Polka/T-110

140. ஆனந்த கீதங்கள்

ஆனந்த கீதங்கள் எந்நாளும் பாடி
ஆண்டவர் ஏசுவை வாழ்த்திடுவோம்

1. புதுமை பாலன்திருமனுவேலன
வறுமைகோலம் எடுத்தவ தரித்தார்
முன்னுரை படியே முன்னணை மீதே
மன்னுயிர் மீட்கவே பிறந்தாரே

2. மகிமை தேவன் மகத்துவ ராஜன் அடிமை
ரூபம் தரித்திர லோகம்
தூதரும் பாட மேய்ப்பரும்
போற்ற துதிக்குப் பாத்திரன் பிறந்தனரே

3. மனதின் பாரம் யாவையும் நீக்கி
மரண பயமும் புறம்பே தள்ளி
மா சமாதானமும் மா தேவ அன்பும்
மாறா விஸ்வாசமும் அளித்தாரே

4. அருமை ஏசுவின் திருநாமம்
இனிமை தங்கும் இன்னல்கள்
நீக்கும்கொடுமை பேயின் பெலன்
ஒடுக்கும்வலிமை வாய்ந்திடும் நாமமிதே

5. கருணை பொங்க திருவருள் தங்க
கிருபை பொழிய ஆர்ப்பரிப்போமே
எம்முள்ளம் இயேசு பிறந்த பாக்கியம்
எண்ணியே பாடிக் கொண்டாடிடுவோம்

F-Min/Disco/T-140

141. பிறந்தார், பிறந்தார்

பிறந்தார், பிறந்தார்
வானவர் புவி மானிடர்
புகழ் பாடிட பிறந்தார்

1. மாட்டுத் தொழுவம் தெரிந்தெடுத்தார்
மாதேவ தேவனே
மேன்மை வெறுத்தார் தாழ்மை தரித்தார்
மா தியாகியாய் வளர்ந்தார் - பிறந்தார்

2. பாவ உலக மானிடர் மேல்
பாசம் அடைந்தவரே
மனக்காரிருளை எம்மில் நீக்கிடும் மெய்
மாஜோதியாய் திகழ்ந்தார் - பிறந்தார்

3. பொறுமை, தாழ்மை, அன்புருக்கம்
பெருந்தன்மை உள்ளவரே
மரணம் வரையும் தன்னை தாழ்த்தினதால்
மேலான நாமம் பெற்றார் - பிறந்தார்

4. கந்தைத் துணியோ கர்த்தருக்கே
கடும் ஏழ்மைக் கோலமதோ
விலையேறப் பெற்ற உடை அலங்கரிப்பும்
வீண் ஆசையும் நமக்கேன- பிறந்தார்

5. குருவைத் தொடரும் சீஷர்களும்
குருபோல மாறிடுவார்
அவர் நாமம் தரித்தவர் யாவருமே
அவர் பாதையில் நடப்போம் - பிறந்தார்

6. இயேசு பிறந்தார் உள்ளமதில்
இதை எங்கும் சாற்றிடுவோம்
புசிப்பும் குடிப்பும் தேவ ராஜ்யமல்ல
பரன் ஆவியில் மகிழ்வோம் - பிறந்தார்

G-Maj/8 Beat/T-120

142. இயேசு பாலனாய்

இயேசு பாலனாய் பிறந்தார்

அனுபல்லவி

இயேசு தேவனே பெத்லகேமிலே
ஏழைக் கோலமாய் முன்னணை
புல்லணை மீதிலே பிறந்தார்

1. உன்னதத்தில் தேவ மகிமை
பூமியிலே சமாதானமும்
மானிடரில் பிரியம் உண்டாவதாக
என்று தேவ தூதர் பாடிட - இயேசு

2. விண்ணை வெறுத்த இம்மானுவேல்
விந்தை மானிடவதாரமாய்த்
தன்னைப் பலியாகத் தந்த ஒளி இவர்
தம்மை பணிந்திடுவோம் வாரும் - இயேசு

3. ஓடி அலைந்திடும் பாவியைத்
தேடி அழைக்கும் இப்பாலகன்
பாவங்களின் நாசர் பாவிகளின் நேசர்
பாதம் பணிந்திடுவோம் வாரும் - இயேசு

4. கைகள் கட்டின தேவாலயம்
கர்த்தர் தங்கும் இடமாகுமோ
நம் இதயமதில் இயேசு பிறந்திட
நம்மை அளித்திடுவோம் வாரும்- இயேசு

5. அன்பின் சொரூபி இப்பாலனே
அண்டி வருவோரின் தஞ்சமே
ஆறுதல் அளித்து அல்லல் அகற்றிடும்
ஆண்டவரை பணிவோம் வாரும் - இயேசு

C-Maj/8 Beat/T-120

143. இயேசு மானிடனாய்ப்

இயேசு மானிடனாய்ப் பிறந்தார்
இந்த லோகத்தை மீட்டிடவே
இறைவன் ஒளியாய் இருளில் உதித்தார்
இந்த நற்செய்தி சாற்றிடுவோம்

1. மேய்ப்பர்கள் இராவினிலே - தங்கள்
மந்தையைக் காத்திருக்க
தூதர்கள் வானத்திலே தோன்றி
தேவனைத் துதித்தனரே - இயேசு

2. ஆலோசனை கர்த்தரே இவர்
அற்புதமானவரே
விண் சமாதான பிரபு சர்வ
வல்லவர் பிறந்தனரே- இயேசு

3. மாட்டுத்தொழுவத்திலே- பரன்
முன்னணையில் பிறந்தார்
தாழ்மையைப் பின்பற்றுவோம் அவர்
ஏழ்மையின் பாதையிலே-இயேசு

4. பொன், பொருள், தூபவர்க்கம்
வெள்ளைப் போளமும் காணிக்கையே
சாட்சியாய் கொண்டு சென்றே – வான
சாஸ்திரிகள் பணிந்தனரே - இயேசு

5. அன்னாளும் ஆலயத்தில் - அன்று
ஆண்டவரை அறிந்தே
தீர்க்கத்தரிசனமே கூறி
தூயனைப் புகழ்ந்தனளே - இயேசு

6. யாக்கோபில் ஓர் நட்சத்திரம் இவர்
வாக்கு மாறாதவரே
கண்ணிமை நேரத்தில் நம்மை
விண்ணதில் சேர்த்திடுவார் - இயேசு

144. சந்தோஷ விண்ணொளியே

சந்தோஷ விண்ணொளியே
இயேசு சாந்த சொருபி
அவர் பள்ளத்தாக்கின் லீலி
சாரோனின் ரோஜா பாரில் மலர்ந்துதித்தார்

1. இன்ப பரலோகம் துறந்தவர்
துன்பம் சகித்திட வந்தவர்
பாவ மனிதரை மீட்டவர்
பலியாகவே பிறந்தார் - சந்தோ

2. பூலோக மேன்மைகள் தேடாதவர்
பேரும் புகழும் நாடாதவர்
ஒன்றான மெய் தேவன் இயேசுவே
என் ஆத்ம இரட்சகரே - சந்தோ

3. ஜீவன் வழி சத்தியம் எல்லாமிவர்
தேவாதி தேவ சுதன் இவர்
இயேசு அல்லாமல் வேறு யாருமில்லை
இரட்சண்யம் ஈந்திடவே - சந்தோ

4. ஆடம்பர வாழ்வை வெறுத்தவர்
அண்ணல் எளிமையாய் வாழ்ந்தவர்
எம்மைத் தம்மைப் போல மாற்றிடும்
இயேசுவைப் பின்பற்றுவோம் - சந்தோ

5. எங்கள் சமாதானப் பிரபு இவர்
இயேசு அதிசயமானவர்
வேதம் நிறைவேறும் காலமே
வேகம் வருகின்றாரே - சந்தே

145. என் மீட்பர் கிறிஸ்து பிறந்தார்

என் மீட்பர் கிறிஸ்து பிறந்தார்
எனக்கென்ன ஆனந்தம்
என் மீட்பர் இயேசு உதித்தார்
எனக்கென்ன பேரின்பம்

1. பூலோகமெங்கும் ஓர் செய்தி
மேலோகமெங்கும் விண் ஜோதி
நரர் வாழ்ந்திடவே பெரும் நீதி
நீர் வாரும் மெய்ஜோதி - என்

2. உந்தன் மகிமையை என்றென்றும் சொல்வேன்
உந்தன் கிருபையின் மேன்மையைக் கண்டேன்
நித்திய ஜீவ கிரீடம் என்றே
பரலோக வாழ்வின்றே - என்

3. ஆ! அல்லேலூயா துதி பாடு
அன்று அமலன் பிறந்தான் பாடு
மோட்ச வாசலை திறந்தான் பாடு
எந்நாளும் புகழ் பாடு - என்

146. இது அதிசயமே எனக்கான

இது அதிசயமே எனக்கானந்தமே
இன்ப பரலோகம் துறந்தெனக்காய்
இகத்தில் இயேசுவே மனுவாய் உதித்தார்

1. விண்ணையும் துறந்து இம்மண்ணுலகில்
என்னையும் எண்ணியே தம் மனதில்
தாழ்மையின் ரூபமே தாம் எடுத்து
தயாபரனாய் தோன்றினார் - தேவ - இது

2. மானிடர் மன இருள் நீக்கிடும் மெய்
மாப்ரைபையோடிலங்கும் மகிபன்
மண்ணுயிர் மீட்கவே தன்னுயிரைத்
தந்தாரே விந்தையிதே - கர்த்தர் - இது

3. சமாதான பிரபுவாய் ஜெகத்தில் வந்தே
சமாதானம் எனதுள்ளமே பொழிந்தார்
நன்றியோடே நானும் பாடிடுவேன்
தற்பரன் இயேசுவையே - எந்தன் - இது

4. பறந்திடும் பறவைக்கும் கூடு உண்டே
பதுங்கிட நரிக்கும் ஒர் குழியுமுண்டே
இயேசுவுக்கோ தலை சாய்த்திடவோ
எங்குமோர் ஸ்தலமுமில்லை - பூவில் - இது

5. சாந்தமும் தாழ்மையும் நீதியுமே
சிறப்புடன் விளங்கிடுதே அவரில்
இந்நுகமே எனக்கெந்நாளுமே
சொந்த மென்றேற்றிடுவேன் என்றும் - இது

E-Maj/Disco/T-115

147. சிலுவையின் நிழலில் அனு

சிலுவையின ் நிழலில் அனுதினம் அடியான்
சாய்ந் திளைப்பாறிடுவேன் ஆ.... ஆ

அனுபல்லவி

சிலுவையின் அன்பின் மறைவில்
கிருபையின் இனிய நிழலில் - 2
ஆத்தும நேசரின் அருகில் - 2
அடைகிறேன் ஆறுதல் மனதில் - 2

1. பாவ பாரச் சுமையதால் சோர்ந்தே
தளர்ந்த என் ஜீவியமே ஆ... ஆ - 2
சிலுவையண்டை வந்ததினால்
சிறந்த சந்தோஷங் கண்டதினால் - 2
இளைப் படையாது மேலோகம் - 2
ஏகுவேன் பறந்தே வேகம் - 2

சிலுவை

2. எவ்வித கொடிய இடறுக்கும் அஞ்சேன்
ஏசுவை சார்ந்து நிற்பேன் ஆ... ஆ - 2
அவனியில் வியாகுலம் வந்தால்
அவரையே நான் அண்டிக்கொண்டால் - 2
அலைமிக மோதிடும் அந்நாள் - 2
ஆறுதல் அளிப்பதாய்ச் சொன்னார் - 2

சிலுவை

3. இன்பம் சுரந்திடும் திருமொழி கேட்டேன்
இன்னல்கள் மறந்திடுவேன்-ஆ... ஆ - 2
திருமறை இன்னிசை நாதம்
தேனிலும் இனிய வேதம் - 2
தருமெனக்கானந்த சந்தோஷம் - 2
தீர்க்குமென் இதயத்தின் கிலேசம்(தோஷம்) - 2

சிலுவை

148.சிலுவை சுமந்த உருவம்

சிலுவை சுமந்த உருவம்
சிந்தின இரத்தம் புரண்டோடியே
நதி போலவே பாய்கின்றதே
நம்பி இயேசுவண்டை வா

1. பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணாய் நிலையான சந்தோஷம்
பூவில் கர்த்தாவின் அன்பன்டை வா - சிலுவை

2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்மம் நஷ்டமடைந்தால்
லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்
லாபம் ஒன்றுமில்லையே - சிலுவை

3. பாவ மனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார் பாவப்
பரிகாரி கர்த்தர் இயேசு நாதர்
பாவம் எல்லாம் சுமந்தார் - சிலுவை

4. நித்திய ஜீவன் வாஞ்சிப்பாயோ
நித்திய மோட்ச வாழ்வில்
தேடி வாராயோ பரிசுத்த ஜீவியம்
தேவை அதை அடைவாய் - சிலுவை

5. தாகமடைந்தோர் எல்லோருமே
தாகத்தைத் தீர்க்க வாரும்
ஜீவத் தண்ணீரான கர்த்தர் இயேசு நாதர்
ஜீவன் உனக்களிப்பார் - சிலுவை

149. கல்வாரியே கல்வாரியே

கல்வாரியே கல்வாரியே
ஒப்பற்ற கல்வாரியே
கல் மனம் மாற்றிடும்
கனிவுள்ள கல்வாரியே - கல்

1. தேவனின் நித்ய அன்பு
இயேசுவில் தொனிக்கின்றதே
வேதனையின் இரத்தம் தாரையாய்
சிந்துது மானிடனே உனக்காய் - கல்

2. காயங்கள் ஐந்ததுவும் ஐந்து
கண்டத்தை இரட்சிக்கவே
நாயகனை நம்பி ஜீவனுக்குள் செல்ல
தீயனைத் தள்ளிவிடு - கல்வாரியே

3. பாவத்தை மட்டுமல்ல - உன்
நோயையும் நீக்கிடுமே
பயத்தை நீக்க, விசுவாசம் கொண்டு
பட்சமாய் அவரண்டைவா- கல்வாரியே

4. சாத்தானின் தலையையும்
சிலுவையில் நசுக்கினார்
சகலத்தையும் ஜெயித்தவர்
சீக்கிரம் வருகிறார் - கல்வாரியே

150. கொல்கதா மேட்டினிலே

1. கொல்கதா மேட்டினிலே
கொடூர பாவி எந்தனுக்காய்
குற்ற மில்லாத தேவ குமாரன்
குருதி வடிந்தே தொங்கினார் - கொல்

2. பாவ சாபங்கள் சுமந்தாரே
பாவியை மீட்க பாடுபட்டார்
பாவமில்லாத தேவ குமாரன்
பாதகன் எனக்காய் தொங்கினார் - கொல்

3. மடிந்திடும் மன்னுயிர்க்காய்
மகிமை யாவும் இழந்தோராய்
மாசில்லாத தேவ குமாரன்
முன்றாணி மீதினில் தொங்கினார் -கொல்

4. இரத்தத்தின் பெருவெள்ளம் ஓட
இரட்சிப்பின் நதி என்னில் பாய
ஆதரவில்லா தேவ குமாரன்
அகோரக் காட்சியாய் தொங்கினார் -கொல்

5. கல்வாரி காட்சி இதோ
கண்டிடுவாயே கண்கலங்க
கடின மனமும் உருகிடுமே
கர்த்தரின் மாறாத அன்பிலே - கொல்

6. உள்ளமே நீ திறவாயோ
உருகும் சத்தம் நீ கேளாயோ
உன் கரம் பற்றி உன்னை நடத்த
உன் நெஞ்சை ஆவலாய் தட்டுகிறார்-கொல்

C-Maj/Waltz/T-160

151. என்ன தியாகம் என்

என்ன தியாகம்
என் கல்வாரி நாயகா
என்னையும் உம்மைப்போல்
மாற்றிடமே

1. விண்தூதர் போற்றிடும் உம்
பிதாவையும் விட்டிறங்கி வந்தீரே
மாட்டுக் கொட்டிலோ வாஞ்சித்தீரைய்யா
மானிடர் மேல் அன்பினால் - என்ன

2. ஜெனித்த நாள் முதலாய் -
கல்வாரியில் ஜீவனை ஈயும் வரை
பாடுகள் உம் பங்காய்க் கண்டீரைய்யா
பாவியை மீட்பதற்காய் -என்ன

3. தலையைச் சாய்த்திடவோ உமக்கு ஓர்
ஸ்தலமோ எங்குமில்லை
உம் அடிச்சுவாட்டில் நான் செல்லவோ
முன் பாதைக் காட்டினீரே - என்ன

4. பாடுகளல்லவோ உம்மை மகிமையில்
பூரணமாய்ச் சேர்த்ததே
உம்மோடு நானும் பாடு சகிப்பேன்
என் ஜீவனையும் வைத்தே - என்ன

5. இன்பம் எனக்கினியேன் என் அருமை
இயேசு தான் என் பங்கல்லோ
நேசரின் பின்னே போகத் துணிந்தேன்
பாசம் என்னில் வைத்ததால் - என்ன

152. பாராயோ கல்வாரி

பாராயோ கல்வாரி சிலுவையில்
தூய தேவ அன்பை

பல்லவி

அழைக்கிறார் இயேசு உன்னை
நம்பியே நீயும் வா

1. பாவத்தில் உழன்று மாண்டிடாதே
அழியும் பூலோகம் சீக்கிரத்தில்
இரட்சண்ய நாளதில் வந்திடாயோ
தள்ளாது தம்மிடம் சேர்த்திடுவோர்

2. கலக்கும் உலகம் அஞ்சிடாதே
கல்வாரி குருசை நோக்கியே பார்
உனக்காக யாவும் செய்திட்டாரே
உன்னையும் தந்திடு கர்த்தரிடம்

3. கைவிடும் மாந்தரை நம்பிடாதே
நம்பிக்கை நாயகர் இயேசு உண்டே
தாயினும் மேலாய் நேசித்திடும்
இயேசு போதும் என்றென்றுமே

4. தவிக்கும் உள்ளம் ஓர் நாளிலே
தஞ்சம் உனக்குண்டு இயேசுவிடம்
தயங்காதே என்றும் கலங்காதே
கர்த்தர் தம் கரத்தால் அணைக்கிறார்

153. ஜீவ நதியின் நீரோடைப்

ஜீவ நதியின் நீரோடைப் போல்
கல்வாரியின் இரத்தம் பாய்ந்திடுதே
என் இயேசுவே உம் தயவால்
என் வாழ்வில் என்றும் அமைதியே

1. கர்த்தர் என் பெலனும் கேடகமாய்
கருத்துடன் காத்திட அழைத்ததால்
கண்ணீர் கவலை நீங்கிடவே
களிப்பின் ஊற்றாய் மாற்றினீரே - ஜீவ

2. இயேசுவின் கரத்தின் கருவியாய்
நன்மை செய்ய அழைத்ததால்
வழுவாத வல்லமை வசனங்களை
வானவர் தந்து மாற்றினீரே - ஜீவ

3. சிலுவை சிந்தனை ஞானமாய்
சிறந்து விளங்க அழைத்ததால்
பழுதில்லாத உம் பலன்களை
பரத்தில் சேர்க்க மாற்றினீரே - ஜீவ

4. சபையின் மேன்மை சாட்சியாய்
சிறந்து விளங்க அழைத்ததால்
சந்தோஷ நதியின் வாழ்க்கையை
நாடெங்கும் பரப்ப மாற்றினீரே - ஜீவ

5. சீயோனின் சிறந்த சிகரமாய்
செழித்து வளர அழைத்ததால்
எக்காளம் தொனிக்கும் நேரத்தில்
மறுரூபம் ஆக மாற்றுவீரே - ஜீவ

E-Maj/8 Beat/T-90

154. பிளவுண்ட மலையே புகலிடம்

1. பிளவுண்ட மலையே புகலிடம் ஈயுமே
பக்கம் பட்ட காயமும்,
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவதோஷம் யாவையும்
நீக்கும் படி அருளும்ல

2. எந்த கிரியை செய்துமே
உந்தன் நீதி கிட்டாதே
கண்ணீர் நித்தம் சொரிந்தும்
கஷ்ட தவம் புரிந்தும்,
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் இயேசுவே

3. யாது மற்ற ஏழை நான்,
நாதியற்ற நீசன் தான்
உம் சிலுவை தஞ்சமே,
உந்தன் நீதி ஆடையே
தூய ஊற்றை அண்டினேன்
தூய்மையாக்கேல் மாளுவேன்

4. நிழல் போன்ற வாழ்விலே,
கண்ணை மூடும் சாவிலே,
கண்ணுக் கெட்டா லோகத்தில்,
நடுத்தீர்வை தினத்தில்,
பிளவுண்ட மலையே
புகலிடம் ஈயுமே

C-Min/8 Beat/T-95

155. மீட்பர் இயேசு குருசில்

மீட்பர் இயேசு குருசில் தொங்கினாரே
மூன்றாணி மீதில் காயம் அடைந்தே

1. லோகப்பாவம் தீர்க்க பலியான
தேவ ஆட்டுக்குட்டியானவர்
சொந்தமான இரத்தம் சிந்தி மீட்டு
இந்தளவாய் அன்பு கூர்ந்தவர் - எம்மில்

2. இயேசுவே கல்வாரி சிலுவையில்
ஏறி ஜீவன் தந்திராவிடில்
ஏழையான் என் பாவ பாரங்களை
எங்கு சென்று தீர்த்துக் கொள்ளுவேன்- பூவில்

3. தேவனே என்னை ஏன் கைவிட்டீரோ
என்று இயேசு கதறினாரே
பாவத்தால் பிதாவின் முகத்தையும்
பார்க்கவும் முடியவில்லையோ-அவர்

4. அன்னை தந்தை யாவரிலும் மேலாய்
அன்பு கூர்ந்தார்அண்ணல் இயேசுவே
ஆச்சரிய தேவ அன்பைப் பாட
ஆயிரம் நாவுகள் போதுமோ - பதினாயிரம்

உனக்காகவே ஜீவிக்கிறார்

2. ஆரு மற்றவனாய் நீ அலைந்தே
பாவ உளைதனிலே அமிழ்ந்தே
மாய்ந்திடாது உன்னை தூக்கி எடுத்தவர்
மந்தையில் சேர்த்திடுவார் - வல்லவரே

3. வியாதியினால் நொந்து வாடுவதேனோ
நேயன் கிறிஸ்து சுமந்ததனை
சிலுவை மீதினில் தீர்த்ததாலே - இனி
சுகமடைந்திடுவாய் - வல்லவரே

4. பரனின் அன்பதை அகமதிலே
சொரிந்து தன் திரு ஆலயமாய்
மாற்றியே தம்மைப் போல் தேவ சாயலாக்கி
மகிமை சேர்த்திடுவார் - வல்லவரே

5. வானமும் பூமியும் மாறிப் போயினும்
வாக்கு மாறாதவர் வல்ல மீட்பர்
காப்பார் வழுவாது உள்ளங்கையில் வைத்தே
கலங்கிடாதே நீ வா - வல்லவரே

D-Maj/Waltz/T-140

225. பாரக் குருசில் பரலோக்

1. பாரக் குருசில் பரலோக ராஜன்
பாதகனைப்போல் தொங்குகிறாரே
பார்! அவரின் திரு இரத்தம் உன்
பாவங்கள் போக்கிட பாய்ந்திடுதே

வந்திடுவாய் இயேசுவண்டை
வருந்தியே அழைக்கிறாரே
வாஞ்சைகள் தீர்ப்பவரே
வாதைகள் நீக்குவாரே

2. இதயத்தின் பாரம் அறிந்து மெய்யான
இளைப்பாறுதலை அளித்திடுவாரே
இன்னுமென்ன தாமதமோ
இன்றே இரட்சிப்படைய வருவாய் - வந்தி

3. சிலுவையின் மீதில் சுமந்தனரே உன்
சாப ரோகங்கள் தம் சரீரத்தில்
சர்வ வல்ல வாக்கை நம்பி
சார்ந்த சுகம் பெறவே வருவாய் - வந்தி

4. நித்திய வாழ்வு பெற்றிட நீயும்
நித்திய ஜீவ ஊற்றண்டைவாராய்
நீசனென்று தள்ளாதுன்னை
நீதியின் பாதையில், சேர்த்திடுவார் - வந்தி

5. இயேசுவின் நாமம் ஊற்றுண்டதைலம்
இன்பம் அவரின் அதரத்தின் மொழிகள்
இல்லையே இந்நேசரைப் போல்
இகமதில் வேறோர் அன்பருனக்கே - வந்தி

226. வருவாய் தருணமிதுவே

வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசுவண்டை

1. வாழ் நாளையெல்லாம் வீண் நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக் கொள்வார் - வரு

2. கட்டின வீடும் நிலம் பொருளும்
கண்டிடும் உற்றார் உறவினரும்
கூடுவிட்டு உன் ஆவி போனால்
கூட உன்னோடு வருவதில்லை – வரு

3. அழகும் மாயை நிலைத்திடாதே
அதை நம்பாதே மயக்கிடுமே
மரணம் ஓர் நாள் சந்திக்குமே
மறவாதே உன் ஆண்டவரை - வரு

4. வானத்தின் கீழே பூமி மேலே
வானவர் இயேசு நாமம் அல்லால்
இரட்சிப்படைய வழியில்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே - வரு

5. தீராத பாவம், வியாதியையும்
மாறாத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய - வரு

6. சத்திய வாக்கை நம்பியே வா
நித்திய ஜீவன் உனக்களிப்பார்
உன் பெயரை ஜீவ புஸ்தகத்தில்
உண்மையாய் இன்று எழுதிடுவார் - வரு

D-Maj/8 Beat/T-110

227. உன்னத தேவன் உன்னை

உன்னத தேவன் உன்னை அழைக்கிறார்
நம்பியே வந்திடுவாய்

சிலுவை சுமந்தே உனக்காய்
அவர் மரித்தாரே

1. பாவத்தில் அழியாதே
தேவனை மறவாதே
இருதயத்தைத் தட்டுகிறார்
இன்றதை திறந்தளிப்பாய் - உன

2. இன்று உன் ஜீவன் போனால்
எங்கு நீ சென்றிடுவாய்
இந்த வேளை சிந்தனை செய்
இயேசுன்னை அழைக்கிறாரே - உன்

3. நரகத்தின் பாதையிலும்
மரணத்தின் வழிகளிலும்
உல்லாசமாய் நடப்பதும் ஏன்
உண்மையாய் அறிந்திடுவாய் - உன்

4. தம்மிடம் வருபவரைத்
தள்ளிடவே மாட்டார்
அன்புகரம் விரித்தவராய்
ஆண்டவர் அழைக்கிறாரே - உன்

C-Maj/8 Beat/T-120

228. அன்பே என் இயேசுவே

அன்பே என் இயேசுவே ஆருயிரே
ஆட்கொண்ட என் தெய்வமே

1. உம்மை நான் மறவேன்
உமக்காய் வாழ்வேன்

2. வாழ்வோ சாவோ
எதுதான் பிரிக்க முடியும்

3. தாயைப்போல் தேற்றினீர்
தந்தை போல் அணைத்தீர்

4. உம் சித்தம் நான் செய்வேன்
அதுதான் என் உணவு

5. இரத்தத்தால் கழுவினீர்
இரட்சிப்பால் உடுத்தினீர்

D-Maj/S.Rock/T-110

229. அழைக்கிறார் அழைக்கிறார்

அழைக்கிறார் அழைக்கிறார் இதோ
நீயும் வா உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் இதோ- நீயும்

1. பாவத்தை ஏற்றவர் பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில்
கண்கொள்ளாத காட்சியே
கண்டிடும் வேண்டிடும்
பாவ பாரம் நீங்கிடும்-அழை

2. நோயையும் ஏற்றவர் பேயையும் வென்றவர்
நீதிபரன் உன் நோயை
நிச்சயமாய் தீர்த்தாரே
நோயுற்ற உன்னையே-
நேயமாய் அழைக்கிறார்-அழை

3. துன்பம் சகித்தவர் துயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே-
அண்ணல் இயேசழைக்கிறார்
இன்புறும் நெஞ்சமே-
துரிதமாய் நீ வாராயோ-அழை

4. அந்தக் கேடடைந்தார்
அழகற்று தோன்றினார்
சொந்தமாக சேர்ந்திட இந்தப்பாடடைந்தாரே
நிந்திக்கும் உன்னையும் சந்திப்பார்
நீ வாராயோ-அழை

5. கல்லறை திறக்க காவலர் நடுங்க
கஸ்திகளடைந்தாரே-கட்டுகளறுத்தாரே
உயிர்த்தார் ஜெயித்தார்-
உண்டு மீட்புனக்குமே-அழை

6. சாந்த சொரூபனே-சத்திய வாசனே
வஞ்சமற்ற வாயனே
வந்தணைக்கும் நேயனே
தஞ்சமே தன்னையே-
தந்துனையழைக்கிறார் -அழை

230. காணாத ஆட்டின்

காணாத ஆட்டின் பின்னே - கர்த்தர்
கண்ணீருடன் அலைந்தார்
அன்போடு உன்னை அழைக்கின்றாரே
இன்றே திரும்பி நீ வா

1. முள்ளும் புதரும் காடும் மலையும்
உள்ளம் உடைந்தேசு தேடுகின்றார்
சிற்றின்ப சேற்றினில் சிக்கினதால்
சாத்தான் வலையில் நீ சிறையாகினாய்

2. சுத்த இதயம் வேண்டாம் என்றெண்ணி
கர்த்தரின் அன்பை நீ சந்தேகித்தாய்
யோனாவைப் போல நீ போனாயல்லோ
ஏசுபரன் வாக்கு வெறுத்தாயல்லோ- காணாத

3. என்னென்ன துன்பம் தொல்லைகள் வந்தும்
இயேசுவின் பாதை நீ விட்டோடாதே
நீதி நிறைந்த தம் கரங்களை
நீட்டி உன்னை தாங்கி பயம் நீக்குவார்

4. துன்மார்க்கரெல்லாம் சன்மார்க்கரோடே
தேவ கோபாக்கினையால் மாள்வாரே
கர்த்தரின் பந்தியில் நீ பங்கடைய
கண்ணீருடன் நீயோ அருள் வேண்டுவாய்

5. எத்தனை நேரம் உன்னை அழைத்தார்
இத்தனை காலம் நீ தள்ளலாமோ
கர்த்தரின் சித்தம் உன் வேளையிதே
கண்டு உணர்ந்து விரைந்தே நீ வா

E-Min/Waltz/T-120

231. விண் மகிமை கண்முன்

விண்மகிமை கண்முன் கண்டேன்
விண் மன்னன் ஏசென்னை அழைக்கின்றார்

அனுபல்லவி

மண்ணுலகின்பங்கள் மாயையல்லோ
வீணானதே மாறிடுதே
விண் ஜீவ கிரீடமோ என் சொந்தமே

1. மரண யோர்தான் புரண்டு வந்தால்
மாலுமி ஏசுவின் கப்பல் ஏறி
அக்கரையோரம் நான் சென்றிடுவேன்
அங்கே வரவேற்புக் காத்திருக்கும் - விண்

2. பரதீசிலே பல காட்சிகள்
பார்த்துப் பரவசம் பொங்கிடுமே
கண்ணீர் கவலையும் அங்கில்லையே
கர்த்தரின் மார்பினில் சாய்ந்திடுவேன் -விண்

3. ஜீவ ஜல நதி ஓடிடும்
ஜீவ தண்ணீரால் என் தாகம் தீருமே
கர்த்தரின் கை கோர்த்து நடந்திட
காத்து தவிக்கின்ற தென்னுள்ளமே - விண்

4. புதிய கனி புசித்திடுவேன்
பூக்கள் நடுவே உலாவிடுவேன்
தூதர்கள் பக்தர்களோடு வாழும்
தூய பேரின்பத்தை நாடுகிறேன் -விண்

5. நல்ல சுகம் ஆரோக்கியமும்
நல்லாசீர்வாதங்கள் அங்கே உண்டே
தேவ சஜக இளைப்பாறுதல்
தேவை அதை நாடி கண்டடைவேன் -விண்

6. எத்தனையோ பிரதிபலன்கள்
உத்தம ஊழியர் பெற்றிடவே
ஓட்டம் ஜெயத்தோடு முடிந்திடும்
ஒன்றே எனதாவல் இயேசு போதும் -விண்

232. அழைத்தீரே இயேசு ராஜன்

அழைத்தீரே ஏசுவே
அன்போடே என்னை அழைத்தீரே
ஆண்டவர் சேவையிலே மரிப்பேனே
ஆயத்தமானேன் தேவே

1. என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே
என் உயிர்தந்தேன் மண்ணுயிர்க்கே
என் துயரதொனியோ இதையார் இன்று கேட்பாரோ
என் காரியமாக யாரை அழைப்பேன்
என்றீரே வந்தேனிதோ - அழைத்தீரே

2. என்னதான் தீங்கு நான் இழைத்தேன்
என்னை விட்டோடும் என் ஜனமே
எத்தனை நன்மைகளோ உனக்காக நான்செய்தேனல்லோ
என்றே உரைத்தென்னை ஏங்கி அழைத்தீர்
எப்படி நான் மறப்பேன் - அழைத்தீரே

3. ஆதி விஸ்வாசம் தங்கிடவே
ஆண்டவர் அன்பு பொங்கிடவே
ஆதி அப்போஸ்தலரே உபதேசம் அளித்தனரே
நல் பூரண தியாகப் பாதை நடந்தே
நன்றியுடன் உழைப்பேன் - அழைத்தீரே

4. எந்தன் ஜெபத்தைக் கேட்டிடுமே
ஏழை ஜனத்தை மீட்டிடுமே
எந்தன் பிதா சித்தமே எந்தன் போஜனமும் அதுவே
என் பிராணனைக்கூட நேசித்திடாமல்
என்னையும் ஒப்படைத்தேன் - அழைத்தீரே

5. ஆடம்பரங்கள் மேட்டிமைகள்
ஆசாபாசங்கள் பெருகிடுதே
ஆயிரம் ஆயிரமே நரக வழி போகின்றாரே
ஆ! நிரேயல்லாமல் யாருண்டுமிட்க
ஆண்டவரே இரங்கும் - அழைத்தீரே

6. பாக்கியமான சேவையிதே
பாதம் பணிந்தே செய்திடுவேன்
ஆயுள் முடியும் வரை கிறிஸ்தேசு வருகை வரை
அன்பின் மனத்தாழ்மை உண்மையும் காத்து
ஆண்டவரை அடைவேன்- அழைத்தீரே

D-Min/Waltz/T-140

233. நீங்காத பாவம் நீங்காத

நீங்காத பாவம் நீங்காததேனோ
நீங்கிடும் நாள் தான் இதோ
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

1. காணாத ஆட்டை தேடிடும் மேய்ப்பர்
கண்டுன்னைச் சேர்த்திடுவார்
பாவியை ஒரு போதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

2. நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
எங்கு நீ சென்றிடுவாய்
பாவியை ஒரு போதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறாா

234. அன்பின் தேவன் ஏசு

அன்பின் தேவன் ஏசு
உன்னை அழைக்கிறார்
அவரின் குரலைக் கேட்ட
பின்னும் தயக்கமேன்
கல்வாரியின் மேட்டினில்
கலங்கும் கர்த்தர் உண்டல்லோ
கவலையேன் கலக்கமேன்
கர்த்தர் ஏசு அழைக்கிறார்
உன்னை எண்ணி உள்ளம் நொந்து
அணைக்க ஏசு துடிக்கிறார்

1. மனிதர்கள் அன்பு மாறலாம்
மறைவாக தீது பேசலாம்
அன்பு காணா இதயமே
அன்பின் தேவனை அண்டிக்கொள் - அன்பின்

2. வியாதிகள் தொல்லைகள் தோல்வியோ
வாழ்க்கையில் என்ன ஏக்கமோ
கண்ணீர்தான் உந்தன் படுக்கையோ
கலங்காதே - மன்னன் ஏசு பார் - அன்பின்

3. வேலை வசதிகள் இல்லையோ
வீட்டினில் வறுமை தொல்லையோ
மரண பயமும் நெருங்குதே
மரணம் வென்ற ஏசு பார் - அன்பின்

235. நம்பியே வா நடத்துவார்

1. நம்பியே வா நடத்துவார்
நாதன்அழைப்பு பெரிது
வழி விலகாதே பாதை தவறாதே
வழி என்றும் காட்டிடுவார்

போற்றுவேன் துதிப்பேன் -2
புகழ்ந்து பாடிடுவேன்
பாரில் இயேசு
உன்னை நேசிப்பதால்
அவரை போற்றிடுவேன்

2. கர்த்தர் பாதை இருளல்ல
அவர் வசனம் வெளிச்சமே
அவர் கிருபை என்றும் புதியது
ஆறுதல் தந்திடுமே - போற்று

3. ஆத்துமாவே கலங்காதே
ஆண்டவரை நீ துதித்திடுவாய்
காலைத் தீமைக்கு விலக்கியே
காத்துன்னை இரட்சிப்பதால் - போற்று

236. இயேசு உன்னை அழை

இயேசு உன்னை அழைக்கிறார்
இன்ப தொனி பின் வாராயோ
இன்னல் தீர்க்க வல்லவரை
இன்று நீ நம்பிடுவாய்

1. வருந்தி பாரங்கள் சுமந்த நீ
விரும்பி சிலுவை நோக்கியே பார்
அருமை ஆண்டவர் உனக்காக
சிறுமை அடைந்து உயிர் தந்தாரே - இயேசு

2. உன் கையில் நீ செய்த பாவத்திற்காய்
தன் கையில் ஆணிகள் பாய்ந்திடவே
முள் முடி சூடினார் உன் வினைக்காய்
மன்னிப்பு இரட்சண்யம் உனக்களிப்பார் - இயேசு

3. மனந்திரும்பி மாறினாலோ
மறுபிறப்பை நீ கண்டடைவாய்
இயேசுவை உன் ஆத்ம இரட்சகராய்
ஏற்றுக் கொள் கிடைக்கும் சமாதானமே

4. வல்லமை ஆண்டவர் இரத்தத்திலே
வியாதியின் வேரும் கூரும் முறியும்
கர்த்தரின் காயங்கள் தழும்புகள்
சுத்தமாய் உன்னையும் குணமாக்கிடும் - இயேசு

5. சத்திய பரனே அழைக்கிறார்
நித்திய ஜீவனை ஈந்திடுவார்
இயேசு வாலாகாத தொன்றுமில்லை
இப்போது உன் தேவை வேண்டிக் கொள்வாய்

237. உலகின் ஒளியே

1. உலகின் ஒளியே இயேசுவே
அகிலம் போற்றும் தெய்வமாய்
அன்பின் தெய்வம் வேறு இல்லை
அவரை அண்டியே சேர்ந்திடுவாய்

இயேசு நல்லவரே
இயேசு வல்லவரே
மனதின் இருளை நீக்கிடுவார்
உள்ளம் திறந்தே ஏற்பாய்

2. பாவம் போக்க வந்தார்
சாபம் யாவும் நீக்குவார்
இவரை அல்லால் வழியும் இல்லை
அகத்தில் இவரை ஏற்றிடுவாய் - இயேசு

3. பயங்கள் யாவும் அகற்றிடவே
பரிவாய் வந்தார் உலகினிலே
சாவை ஜெயித்தார் ரோகம் தொலைத்தார்
உந்தன் நாயகனாம் இவரை - இயேசு

4. தேவ மைந்தனாய் வந்தவர்
மாளும் மாந்தரை மீட்கவே
கருணை தேவன் அன்பின் தெய்வம்
எந்தன் நாயகனாம் இவரே - இயேசு

238. திரும்பு! திரும்பு!

திரும்பு! திரும்பு! மனந்திரும்பு!
விரும்பு! விரும்பு! இரட்சிப்பை விரும்பு!
விரும்பினால் உள்ளத்தில் உவகை அரும்பும்
நிறைந்திடும் மனதில் மகிழ்வு நிறைந்திடும்
வந்திடும் வாழ்வில் அமைதி வந்திடும்
நீயும் பெற்றிட வா!

1. வாலிபனே காலமதை வீணில் கழித்து
அலையாதே - கன்னிகையே அழகென்று
அரைகுறை ஆடை அணியாதே
நாகரீகமென்று பெண்களைப் போன்று முடியை
வளர்க்காதே - பெண்மையை மறந்து
ஆணுடை தரித்து அலைந்து திரியாதே

2. இளைஞரே புகைப்பதினால் அற்ப ஆயளில்
மடிவீரே - போதையதில் மதிமயங்கி வாழ்வை
கெடுத்துக் கொள்ளாதீர் - தறிகெட்டு நீயும்
திரைப்படம் பார்த்து நெறிகெட்டுப் போகாதே
உந்தன் சரீரம் தேவனின் ஆலயம்
அதனைக் கெடுக்காதே

3. மங்கையரே வீண் பேச்சில் சிரித்துக் காலம்
கழிக்காதீர் - ஆணோடு சமமென்று வழுக்கி
விழுந்து போகாதீர் சாயத்தை முகத்தில் பூசியே
இயற்கை அழகைக் கெடுக்காதே
பொன் நகை தேடி புன்னகை
இழந்து புலம்பி தவிக்காதே

4. தீமையதை நாவினால் பேசி அகமதை
கெடுக்காதே - பண்பற்ற நூல்களினால் சிந்தையை
கெடுத்துக் கொள்ளாதே - அநியாயத்தால் வந்த
செல்வம் என்றும் ஒன்றுக்கும் உதவாதே
பணத்தின் ஆசை தீமைக்கும் வேராம்
அதனை விரும்பாதே

5. மாம்சத்தின் செய்கைகள் மரணத்தில் கொண்டு
முடித்து விடும் - ஆவியின் கனிகளோ நித்திய
ஜீவனைத் தந்து விடும் - மனமது திரும்பி மூழ்கி
ஞானஸ்நானமும் பெற்றுவிடு - பரிசுத்த ஆவி வழி
நடத்திடுமே அதனில் நிறைந்துவிடு

239. கிறிஸ்து இயேசு தயாள

கிறிஸ்து இயேசு தயாள பிரபு
சிருஷ்டித்த தயவு
இரட்சித்த உந்தன் முடிவு
கீதம் பாடவே

1. மானிலத்தில் நீர் மானிடரானீர்
மாந்தர்கள் மத்தியில் மா ஏழையானீர்
மாபெரும் துக்க துன்பங்கள் ஏற்றீர்
பாவி என்னை இரட்சிக்க - பிரிய

2. பாவப் பிணியால் வாதிக்கப்பட்டேன்
பாடுகள் பட்டும் பலனைக் காணேன்
பின் வந்து உந்தன் வஸ்திரம் தொட்டேன்
பிழைத்தேன் அட்சணமே - பிரிய

3. விசுவாச பேழை ஆழியில் இருக்க
புயல்களெல்லாம் அலைக்கழிக்க
இயேசுவே நீரே அலையை அதட்டி
அக்கரைப் படுத்தினீர் - பிரிய

240. மகிழுவேன் மகிழுவேன்

மகிழுவேன் மகிழுவேன்
இரட்சிப்பின் தேவனில் மகிழுவேன்

1. அத்தி மரம் துளிர் விடாமற் போயினும்
திராட்சைச் செடி பழம் கொடாமற் போயினும்

2. ஒலிவ மரம் காய்க்காமற் போயினும்
வயலில் விளைச்சல் இல்லாமல் போயினும்

3. கிடையில் ஆடு முதலற்றாலும்
தொழுவத்தில் மாடு இல்லாமற் போயினும்

4. என் கால்களை அவர் மான் கால் போலாக்கி
உன்னத ஸ்தலங்களில் நடத்துகிறார்

5. என் கோட்டை என் பெலன் என் யேகோவா
உமக்குள் நித்தியம் மகிழுவேன்

241. என் பாவம் தீர்ந்த

1. என் பாவம் தீர்ந்த நாளையே
அன்போடு எண்ணி ஜீவிப்பேன்
அந்நாளில் பெற்ற ஈவையே
சந்தோஷமாய்க் கொண்டாடுவேன்

இன்ப நாள் இன்ப நாள்
என் பாவம் தீர்ந்து போன நாள்
பேரன்பர் என்னை இரட்சித்தார்
சீராக்கி இன்பம் நல்கினார்
ஓ! இன்ப நாள் ஓ! இன்ப நாள்
என் பாவம் தீர்ந்து போன நாள்

2. இம்மானுவேல் இப்பாவியை
தம் சொந்தமாக்கிக் கொண்டனர்
சந்தேகமே நீக்கி மன்னிப்பைத்
தந்தென்னை அன்பாய் சேர்த்தனர்

3. என் உள்ளமே என் மீட்பரை
என்றைக்கும் சார்ந்து வாழ்வாய்
ஆருயிர் தந்த நாதரை
ஓர்க்காலும் விட்டு நீங்கிடாய்

4. ஆட் கொண்ட நாதா எந்தனை
நாடோறும் தத்தம் செய்குவேன்
பின் மோட்ச வீட்டில் பேரன்பை
இன்னிசையாலே பாடுவேன்

242.இயேசுவை நம்பிப்

1. இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன்
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவ குமாரன் இரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்
நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்
நீடுழி காலம் ஸ்தோத்தரிப்பேன்

2. அன்பு பாராட்டிக் காப்பவராய்
எந்தனைத் தாங்கி பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்

3. மெய்ச் சமாதானம் ரம்மியமும்
துய்ய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்துவிட்டார்
விண்ணிலும் சேர்ந்து வாழச் செய்வார்

243. பெலமுள்ள நகரமாம்

1. பெலமுள்ள நகரமாம் இயேசுவண்டை
பயமின்றி ஓடி நீ வந்திடுவாய்
சஞ்சலத்திற்கொரு வழியில்லையே
சந்ததம் அவர் நம்மைக்காத்துக் கொள்வார்

2. நிலையில்லாஉலகத்தின் அலைகளாலே
அலைந்திடும்பயனென்னபுதல்வனே நீ
விசுவாசக் கப்பலில் சேமமாக
யாத்திரை செய்பவர்க்கு லோகம் வேண்டாம்

3. கழுகு போல் பறந்து நீ உன்னதத்தில்
வாழ்கின்ற ஜீவியம் வாஞ்சித்துக் கொள்
காத்திருந்திடுகில் ஈந்திடுவார்
பெருக்கமுள்ள பெலன் மக்களுக்கு

4. மரணம்தான் வருகிலும் பயப்படாதே
விரைந்துன்னை கர்த்தர் தாம் காத்திடுவார்
யாதொன்றும் உன்னைப் பயப்படுத்த
எங்குமில்லையென்று விசுவாசிப்பாய்

5. ஆறுதலடையும் அந்நாடு சென்று
இயேசுவின் மார்பில் நாம் ஆனந்திப்போம்
பரம சுகம் தரும் ஊற்றுகளில்
பரனோடு நித்தியம் பானம் செய்வேன்

244. பரிசுத்தம் பெற வந்தி

1. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பில்லாத் திரு ஸ்நானத்தினால்
பாவ தோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

மாசில்லா - சுத்தமா
திருப்புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிட குணம் மாறிற்றா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்
மறு ஜென்ம குணமடைந்தீர்களா
ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால்

3. மாசு கறை நீங்கும் நீச பாவியே
சுத்த இரத்தத்தின் சக்தியினால்
முக்தி பேறுண்டாக்கும் குற்றவாளியே
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

245. நான் பிரமித்து நின்று

1. நான் பிரமித்து நின்று பேரன்பின்
பிரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்
என் உள்ளத்தில் மெய் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்

மா தூய உதிரத்தால்
என் பாவம் நீங்கக் கண்டேன்
இயேசையரின் ரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன்

2. முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் பிரயாசப்பட்டேன்
வீண் முயற்சி நீங்கின போதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன்

3. தம் கரத்தை என் மீதில் வைத்து
நீ சொஸ்தமாவாய் என்றனர்
நான் அவரின் வஸ்திரம் தொட
ஆரோக்கியம் அருளினர்

4. எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என் பேரினில் வீசச் செய்வார்

246. பாவ தோஷம் நீக்கிட

1. பாவ தோஷம் நீக்கிட
மீட்பரின் இரத்தம் தானே
தீய குணம் மாறிட
மீட்பரின் இரத்தம் தானே

மெய்யாம் ஜீவ நதி
பாவம் போக்கும் நதி
வேறே நதியை அறியேன்
மீட்பரின் இரத்தம் தானே

2. என்னை சுத்தமாக்கிட
மீட்பரின் இரத்தம் தானே
மன்னிப்பை நான் பெற்றிட
மீட்பரின் இரத்தம் தானே

3. வேறே இரட்சிப்பில்லையே
மீட்பரின் இரத்தம் தானே
புண்ணிய கிரியை செல்லாதே
மீட்பரின் இரத்தம் தானே

4. மோட்ச மார்க்கம் இதுவே
மீட்பரின் இரத்தம் தானே
ஏசு சுத்த தீர்த்தமே
மீட்பரின் இரத்தம் தானே

247. உம் இரத்தமே உம்

உம் இரத்தமே உம் இரத்தமே
சுத்தம் செய்யுமே
உம் இரத்தமே என் பானமே

1. பாய்ந்து வந்த நின் இரத்தமே
சாய்ந் தோர் கட்கு அடைக்கலமே
பாவிகள் நேசர் பாவி என்னை
கூவிக் கழுவினீர் என்னை - உம்

2. நேசர் சிலுவை சத்தியம்
நாசமடைவோர்க்குப் பைத்தியம்
இரட்சிப்படை வோர் சத்தியம்
நிச்சயம் காப்பார் நித்தியம் - உம்

3. நின் சிலுவையில் சிந்திய
வன்மையுள்ள இரத்தத்தினால்
என் பாவத்தை பரிகரித்தீர்
அன்புள்ள தேவ புத்திரா - உம்

4. பன்றி போல் சேற்றில் புரண்டேன்
நன்றி இல்லாமல் திரிந்தேன்
கரத்தால் அரவணைத்தீர்
வரத்தால் ஆசீர்வதித்தீர் - உம்

5. விழுங்கப் பார்க்கும் சாத்தானை
மழுங்க வைத்தீர் அவனை
புழுங்காமல் போக்கினோனே
களங்கமில்லா கர்த்தனே - உம்

6. ஐயனே உமக்கு மகிமையும்
துய்யனே துதி கனமும்
மெய்யனே எல்லா வல்லமையும்
உய்யனே உமக்கல்லேலூயா - உம்

248. இம்மானுவேலின் இரத

1. இம்மானுவேலின் இரத்தத்தால்
நிறைந்த ஊற்றுண்டே
எப்பாவத் தீங்கும் அதினால்
நிவிர்த்தியாகுமே

2. மாபாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்
மன்னிப்பும் மோட்சானந்தமும்
அடைந்து பூரித்தான்

3. அவ்வாறே நானும் இயேசுவால்
விமோசனம் பெற்றேன்
என் பாவம் நீங்கிப் போனதால்
ஓயாமல் பாடுவேன்

4. காயத்தில் ஓடும் இரத்தத்தை
விசுவாசத்தால் கண்டேன்
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை
எங்கும் பிரஸ்தாபிப்பேன்

5. பின் விண்ணில் வல்ல நாதரை
நான் கண்டு பூரிப்பேன்
அங்கென்னை மீட்ட நேசத்தை
கொண்டாடிப் போற்றுவேன்

249.ஓ! பாவங்கள் எத்தனை

1. ஓ! பாவங்கள் எத்தனையோ
என் கைகள் புரிந்தனவோ!
நின் கைகளில்
வழிந்தோடும் செங்குருதி
என் கைகளை கழுவிடாதோ?!

2. ஓ! பாவங்கள் எத்தனையோ
என் கால்கள் புரிந்தனவோ!
நின் கால்களில்
வழிந்தோடும் செங்குருதி
என் கால்களைக் கழுவிடாதோ?!

3. ஓ! பாவங்கள் எத்தனையோ
என் இதயமும் இழைத்ததுவோ!
நின் இதயத்தில் வழிந்தோடும் செங்குருதி

4. ஓ! பாவங்கள் எத்தனையோ
என் சிரசதும் எண்ணியதோ?!
நின் சிரசதில்
வழிந்தோடும் செங்குருதி
என் சிரசதை கழுவிடாதோ?!

250.இரட்சா பெருமானே

1. இரட்சா பெருமானே பாரும்
புண்ணிய பாதம் அண்டினோம்
சுத்தமாக்கிச் சீரைத் தாரும்
தேடி வந்து நிற்கிறோம்
இயேசு நாதா இயேசு நாதா
உந்தன் சொந்தமாயினோம்

2. மேய்ப்பன் போல் முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்
ஜீவத் தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்குவீர்
இயேசு நாதா இயேசு நாதா
மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்

3. நீதிப் பாதை தவறாமல்
நேசமாய் நடத்துவீர்
மோசம் பயமுமில்லாமல்
தங்கச் செய்து தாங்குவீர்
இயேசு நாதா இயேசு நாதா
ஒரு போதும் கைவிடீர்

4. ஜீவ கால பரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்
இயேசு நாதா இயேசு நாதா
ஊழிக் காலம் வாழ்விப்பீர்

F-Maj/Waltz/T-140

251.என்ன என் ஆனந்தம்!

என்ன என் ஆனந்தம்!
என்ன என் ஆனந்தம்!
சொல்லக் கூடாதே
மன்னன் கிறிஸ்து
என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே

1. கூடுவோம் ஆடுவோம்
பாடுவோம் ஒன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்
நாடியே நம்மை தேடியே வந்த
நாதனை ஸ்தோத்தரிப்போம் - என்ன

2. பாவங்கள் சாபங்கள் ரோகங்கள்
எல்லாம் பரிகரித்தாரே
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தங்கியே விட்டாரே - என்ன

3. அட்சய பட்சயமாய் இரட்சிப்பை
எங்களுக் கருளினதாலே
நிச்சயம் ஸ்வாமியைப் பற்றிய சாட்சி
பகர வேண்டியதே- என்ன

4. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம்
மேல் வீடு ஜெயக் கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகிற் சென்ற
மன்னனை ஸ்தோத்தரிப்போம் - என்ன

252.ஆஹா என்ன இன்பம்

ஆஹா என்ன இன்பம் பரலோக இன்பம்
இன்ப இயேசு அளித்தனரே
அளவிற் கடங்கா புத்திக்கும் எட்டிடா
அன்பைக் கூறவும் நாவும் போதுமோ?

1. நீசதுரோகி எந்தனை பாசமாய்
ஏற்றீரோ நீர் - பாவ உளையினின்றே
தூக்கி எடுத்தீரே நீர் - ஆஹா

2. நாசபுரி நோக்கியே விரைந்து சென்ற
என்னை - பாசம் வைத்தேன் உந்தனில்
என்று கூவி அழைத்தீரே நீர் - ஆஹா

3. நெரிந்த நாணல் என்னை முறித்திடும்
தருணம் - பரிந்து பேசி அன்பால்
நிலையாய் நிறுத்தினீர் - ஆஹா

4. எச்சரிப்பின் சத்தத்தை தள்ளிவிட்ட
போதிலும் - அன்பின் சவுக்கடியால்
சேர்த்தன்பாய் ஆதரித்தீர் - ஆஹா

5. காரிருள் சூழும் வேளை கலங்கித்
தவிக்கையில் - காத்து நீர் என்னை
தேற்றி கருத்தாய் ஆதரித்தீர் - ஆஹா

6. பிராண நாதா உந்தனை என்று நான்
கண்டிடுவேன் - ஆருயிர் நேசா உம்மை
என்றும் காண ஆசை பொங்குதே - ஆஹா

7. அழைப்பின் சத்தம் கேட்க நாட்கள்
அதிகமாகுமோ - நேசர் மார்பில் சாய்ந்திட
வாஞ்சை பெருகிடுதே- ஆஹா

8. ஆகாய மேகந்தனில் சேர்த்திடும்
நேரமதில் - ஆனந்தம் ஆனந்தமே
என்றென்றும் ஆனந்தமே - ஆஹா

A-Maj/Disco/T-110

253.உம்மைப் போல் யாரு

உம்மைப்போல் யாருண்டு
எந்தன் இயேசு ராஜா
இந்த பார்தலத்தில்
உம்மைப்போல் யாருண்டு?
பாவப்பிடியினில் சிக்கி
நான் உழன்றேன்
தேவா தம் அன்பினால் மன்னித்தீர்

1. உலகம், மாமிசம், பிசாசுக்கடியில்
அடிமையாகவே பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம்போல் நடந்தேன் ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர் ஐயா, ஏசு நாதா
அடிமை உமக்கே இனி நான்

2. இன்றைக்கு நான் செய்யும் இந்த தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும், உருக்கம் உடையும், வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்கும்
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய் திகழ
அக்கினி என்னுள்ளம் இறக்கும்

3. வீட்டிலும் ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தர் நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக்கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்

G-Maj/Disco/T-115

254.எனக்காய் ஜீவன் விட்ட

1. எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னை சந்திக்க வந்திடுவாரே

பல்லவி
இயேசு போதுமே! இயேசு போதுமே!
எந்த நாளிலுமே ! எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே

2. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன்செல்லவே
உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே - இயேசு

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவை தினம் தேற்றிடுவார்
மரணப் பள்ளத்தாக்கில் காத்திடுவார் - இயேசு

4. மனிதர் என்னை கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும் - இயேசு

255.போற்றிடுவேன் என் இயேசு

போற்றிடுவேன் என் இயேசுவையே
புகழ்ந்து பாடிடுவேன்
இதயத்தின் தெய்வமாம் இயேசு
என் வாழ்க்கையின் ஆரம்பம் இயேசு

1. மனுவாக வந்தவர் இயேசு
மனபாரங்கள் நீக்குவார் இயேசு
ஜீவனின் அதிபதி இயேசு
பரிசுத்தம் அளிப்பார் இயேசு - போற்றி

2. தம்மிடம் வருவோரை
இயேசு தயங்காமல் அணைப்பவர்
இயேசு மறுவாழ்வு அளிப்பவர் இயேசு
மகிமையில் சேர்ப்பவர் இயேசு - போற்றி

3. சமாதானம் நல்கிடும்
இயேசுமன மகிழ்ச்சிக்கு காரணர்
இயேசுசாந்தியும் அளிப்பவர் இயேசு
வாழ்வுக்கு துணையாவார் இயேசு - போற்றி

G-Maj/Disco/T-115

256.சந்தோஷம் பொங்குதே

சந்தோஷம் பொங்குதே
சந்தோஷம் பொங்குதே
சந்தோஷம் என்னில் பொங்குதே
அல்லேலூயா
இயேசு என்னை ரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் என்னில் பொங்குதே

1. வழி தப்பி நான் திரிந்தேன்
பாவப் பழியதை சுமந்தலைந்தேன்
அவர் அன்புக் குரலே
அழைத்தது என்னையே
அந்த இன்ப நாளில்
எந்தன் பாரம் நீங்கிற்றே - சந்

2. சத்துரு சோதித்திட தேவ
உத்தரவுடன் வருவான்
ஆனால் இயேசுகைவிடார்
தானாய் வந்து இரட்சிப்பார் (2)
அந்த நல்ல இயேசு
எந்தன் சொந்தமானாரே - சந்

3. பாவத்தில் ஜீவிப்பவர்
பாதாளத்தில் அழிந்திடுவார்
நானோ பரலோகத்தில் நாளும்
பாடல் பாடிடுவேன் (2)
என்னில் வாழும் இயேசுவோடு
என்றும் வாழுவேன் - சந்

257. மகிழ்வோம் மகிழ்வோம்

1. மகிழ்வோம் மகிழ்வோம் தின அகமகிழ்வோம்
இயேசு ராஜன் நம் சொந்தமாயினார்
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

ஆ ஆ .. ஆனந்தமே
பரமானந்தமே இது
மாபெரும் பாக்கியமே

2. சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்துவிட்டார்
தூரம் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார்-ஆ...ஆ

3. எந்தச் சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக் கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரை காத்துக் கொள்வேன்- ஆ...ஆ

4. அவர் வரும் நாளிலே என்னைக் கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டுச் சேர்த்துக் கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன் -ஆ...ஆ

0-Maj/0000/T-000

258.எந்தன் உள்ளத்தில் புது

1. எந்தன் உள்ளத்தில் புது உணர்வு
எந்தன் வாழ்வினில் புது மலர்ச்சி
எந்தன் நடை உடை
பாவனை சொல் செயலும்
எந்தன் இயேசுவால் புதிதாயின

புதுவாழ்வு புது ஜீவன் புது பாடல்
என்னை சந்தித்த இயேசு தந்தார்
ஆடிப்பாடி உள்ளம் ஆர்ப்பரிப்பேன்
ஆண்டவர் சமுகத்தை அலங்கரிப்பேன் (2)

2. கதரேனரின் கடற்கரையில்
கல்லறையிடை வாசம் செய்த
பொல்லா ஆவி மனிதன்
நாதர் பாதம்பணிய - நல்ல அற்புத
மாற்றம் பெற்றான் - புதுவாழ்வு

3. ஓடையில் உருண்டோடி வரும்
சின்னக் கற்களும் வடிவம் பெறும்
செல்ல தாவீதுக்கு
கோலியாத்தை வீழ்த்த
வல்ல ஆயுதமாகிவிடும் - புதுவாழ்வு

4. சிலுவை நிழல் வந்திட்டேனே
இயேசுவின் கரம் பற்றிட்டேனே
எந்தன் இயேசுவுடன் கொண்ட
உறவு என்னை - புது வடிவமாய்
திகழச் செய்யும் - புதுவாழ்வு

5. காட்டத்தி மரம் ஏறி ஒளித்து
அந்த சகேயுவும் மாற்றம் பெற்றான்
உள்ளபடி யாவும் நாதரிடம்
அறிக்கை செய்தான் - வெள்ளம்
போன்றுள்ளம் பூரிப்படைந்தான் - புதுவாழ்வு

259.நான் பாவச் சேற்றினிலே

1. நான் பாவச் சேற்றினிலே வாழ்ந்தேன் நான்
சாபத்திலே மாண்டேன் - எண்ணிலடங்கா
பாவங்கள் போக்கி - ஏசென்னை மீட்டாரே

என் நாவிலே புதுப் பாட்டு
என்றென்றும் கூவித் தங்கிடும்
மா சந்தோஷம் மறு பிறப்பீந்து
மன இருள் நீக்கினார்

2. என் ஆத்தும மீட்பை அருமையாய் இயேசாண்டவர்
எண்ணினதால் - சொந்தம் தம் ஜீவனாம் இரத்தம்
எனக்காய்ச் - சிந்தி இரட்சித்தாரே - என்

3. கார்மேகம் போல் என் பாவங்கள் கர்த்தர்
அகற்றினாரே - முழ்கியே தள்ளும் சமுத்திர ஆழம்
தூக்கி எறிந்தாரே - என்

4. என் ஜென்ம கரும பாவங்கள் எல்லாம்
தொலைத்தாரே - மன்னித்து என்றும் மறந்து
விட்டாரே மா பரமானந்தம் - என்

5. இரத்தாம்பரம் போல் சிவப்பான இதய பாவங்களை
பஞ்சையும் போலவே வெண்மையுமாக்கி
தஞ்சம் எனக்கீந்தார் - என்

6. மேற்குத் திசைக்கும் கிழக்குக்கும் மா எண்ணிலா
தூரம் - எந்தன் பாவங்கள் அத்தனை தூரம்
இயேசு விலக்கினார் - என்

7. நான் ஜலத்தினால் நல் ஆவியினால் நான்
மறுபடியும் பிறந்தேன் - தேவனின் இராஜ்யம்
சேர்வதற்காக தேடிக் கொண்டேன் பாக்யம் - என்

8. அங்கேயும் சீயோன் மலை மீதே ஆனந்தக்
கீதங்களே ஆயிரம் ஆயிரம் தூதர்கள் சூழ
அன்பரைப் பாடிடுவேன் - என்

260.இயேசு தான் பதிலும்

இயேசு தான் பதிலும் காரணமும்
என்னை நேசித்துக்
காத்திடும் கர்த்தரவர்

1. வழித் தப்பிப் போன பாவி என்னை
கரம் கொண்டழைத்த கர்த்தரவர்
சிலுவையிலே தான் மரிக்க
தம்மை எனக்கு தந்தனரே - 2

2. கவலையாய் கண்ணீர் சிந்தும் போது
கனிவுடன் தேடி வந்த நாதரல்லோ
கல்வாரியின் அன்பை எண்ணி
களிப்புடனே நான் பாடிடுவேன் - 2

3. தூரமாய் போனத் துரோகி என்னை
தூக்கி எடுத்தார் தூய தேவன்
துதித்திடுவேன் பணிந்திடுவேன்
தூக்கிச் செல்வேன் அவர் திருநாமத்தை - 2

4. வந்திடும் எந்த பாவியையும்
வல்லவர் சேர்ப்பார் தம் மந்தையில்
வந்திடும் இந்நேரமே
வா என்றழைக்கும் மீட்பரண்டை - 2

261.என்னைக் கழுவியருளும்

என்னைக் கழுவியருளும்
ஈசோப்பினால் சுத்திகரியும்
பாவம் துர்க்குணம்
பொல்லாப்பு நீங்க
உம் இரத்தத்தால் கழுவும்

1. துர்க்குணத்தில் நான் உருவானேன்
உமக்கு விரோதமாய் பாவஞ் செய்தேன்
இரட்சணியத்தின் சந்தோஷத்தை தந்து
உற்சாகமான ஆவியால் தாங்கும்- என்னைக்

2. கண்களின் இச்சை மாம்ச இச்சை
ஜீவனத்தின் பெருமை யாவுமே
பிதாவினாலுண்டாகாதவையே
என்னை விட்டகற்றிடும் என் இயேசுவே

3. ஆத்துமா மண்ணோடு ஒட்டியதால்
ஜென்ம சுபாவமும் என்னில் உள்ளதே
மண்ணின் சாயலை நான் களைந்தே
தேவனின் சாயலை அடைந்திடவே- என்னைக்

4. கண்களின் காட்சியில் நான் நடந்தேன்
நாவினால் பொல்லாங்கு கூறினேனே
சிந்தையும் நோக்கமும் தீயவையே
என்னிலே பரிசுத்தம் ஏதமில்லை- என்னைக்

5. ஜெபிக்கவே தவறிய காலம் பல
அனல் குன்றி வாழ்ந்திட்ட நேரம் பல
உம் சித்தம் செய்யாத சமயம் பல
வேதத்தை கேளாத வேளை பல- என்னைக்

6. பெருந்திண்டியானாலும் வெறியினாலும்
லௌகீகமான கவலையாலும்
எந்தன் இருதயம் பாரமாகாமல்
உந்தன் வருகையில் நான் நிற்கவே- என்னைக

D-Maj/8 Beat/T-120

262.உள்ளம் ஆனந்த

உள்ளம் ஆனந்த கீதத்திலே
வெள்ளமாகவே பாய்ந்திடுதே
எந்தன் ஆத்தும நேசரையே
என்றும் வாழ்த்தியே பாடிடுவேன்

1. பாவ பாரம் நிறைந்தவனாய்
பல நாட்களாய் நான் அலைந்தேன்
அந்த பாரச் சிலுவையிலே
எந்தன் பாரங்கள் சுமந்தவரே - உள்ளம்

2. மலை போன்றதோர் சோதனையில்
மகிபன் அவர் கைபிடாரே
கல்வாரியின் அன்பினிலே
கனிவோடுன்னை அணைத்திடுவார் - உள்ளம்

3. உலகம் முடியும் வரைக்கும்
உந்தனோடிருப்பேன் என்றவர்
வாக்கு மாறிடா நேசரையே
நம்பிடுவாய் துணை அவரே - உள்ளம்

D-Maj/8 Beat/T-105

263.இயேசுவே உந்தன் மாசில்லா

இயேசுவே உந்தன் மாசில்லா இரத்தம்
எந்தனுக்காக சிந்தினீரே - 2
கோரப்பாடுகள் யாவும் சகித்தீர்
அத்தனையும் எனக்காகவோ

மா பாவியாம் என்னை நினைக்க
மண்ணான நான் எம்மாத்திரம் ஐயா
தேவ தூதரிலும் மகிபனாய்
என்னை மாற்றின அன்பை துதிப்பேன்

1. என் மேல் பாராட்டின உமதன்புக்கீடாய்
என்ன நான் செய்திடுவேன்
நரகாக்கினையில் நின்று மீட்ட
சுத்த கிருபையை நித்தம் பாடுவேன் - மா பாவி

2. எந்தன் பாவங்கள் பாரச் சுமை போல்
தாங்கக் கூடாத மா பாரமே
மன்னிக்கும் தயை பெருத்த என் தேவா
மன்னித்தும் மறந்தும் தள்ளினீர் - மா பாவி

3. எந்தன் பாதங்கள் சறுக்கிடும் போது
வலக்கரத்தாலே தாங்குகின்றீர்
மனப்பாரத்தால் சோர்ந்திடும் போது
ஜீவ வார்த்தையால் தேற்றுகின்றீர் - மா பாவி

4. எனக்காக நீர் யாவும் முடித்தீர்
உமக்காக நான் என்ன செய்வேன்
எந்தன் ஜீவனுள்ள நாளெல்லாம் உம்
சிலுவை சுமந்து வருவேன் - மா பாவி

D-Maj/Rumpa/T-120

264.நிலையில்லா உலகத்தில்

நிலையில்லா உலகத்தில் அலைந்தேனய்யா
நினைத்தென்னைஅழைத்தீரே எனதேசையா

1. மறந்தும்மை மறுதலித்தடங்காமலே
மனம் போன வழிகளில் நடந்தேனையா
மடிந்திடும் என்னைக் கண்டு விரைந்தென்னருகில்
வந்து மனதுருகினீரே ஐயா - என் மேல் - நிலை

2. சிறந்த உன் முகம் காண விரைந்தாசித்தேன்
சிலுவையின் தரிசனம் அளித்தீரையா
இனிய உன் சத்தம் கேட்டேன் கொடிய என்
குணம் விட்டேன் இனிமேல் என் துணை நீரையா

3. உமக்காக என்னையும் நீர் தெரிந்தெடுத்தீர்
உமதாவி என்னிலீந்து பெலனளித்தீர்
உமையன்றி பூவில் வேறு அடைக்கலம்
எமக்கில்லை - உம்மை நம்பி ஜீவிப்பேனையா

4. அதிசீக்கிரமாய் நீங்கும் உபத்திரவம்
அதிக நித்திய கனமகிமை தரும்
பலவித இன்னல் கண்டும் சில வேளை சிட்சை
வந்தும் - பதராமல் பொறுப்பேனையா இன்னும்

5. உடுக்க உடையும் உண்ண உணவும் தந்தீர்
இடுக்கமான உம் பாதை எமக்களித்தீர்
விசுவாசப் பிரயாணத்தை தொடங்கின தின முதல்
நிலை - விசுவாசம் பெருகுதையா - என்னில்

6. இருண்ட கெத்சமனேயில் ஒளி தோன்றுதே
இனிய இயேசையா உந்தன் திருமுகமோ
எனக்கிந்த அனுபவம் அளித்திட திரும்பவும்
தினம் ஜெபம் செய்கின்றேனையா - தேவா - நிலை

7. எனது மரணமோ உம் வருகை நாளோ
எது முன்பு என்னை வந்து அழைத்திடுமோ
கடைசி முடிவு நாளில் மறவாதீர் என்னை நாதா
கனிவாய் வேண்டுகின்றேனையா - இப்போ - நிலை

265.பாவியாயிருக்கையில்

பாவியாயிருக்கையில் நேசரே!
எனக்காய் மரித்தீர்
பாவ வாழ்வினின்று இயேசுவே
நேசித்துப் பிரித்தீர்
பரதேசி போலவே
அலைந்திட்ட எனக்காய்
பரனேசுவே நீர் உயிர் கொடுத்தீர்

1. தாயின் கர்ப்பத்தில் தெரிந்து கொண்டீர்
கண்மணி போலவே காத்து வந்தீர்
தாயினும் மேலாய் அன்பு கூர்ந்தீர்
தகப்பனே என்னை தூக்கி சுமந்தீர்

2. கல்வாரி வரையென்னை அழைத்துச் சென்றீர்
சொந்த இரத்தத்தால் சுத்திகரித்தீர்
பாவத்தை சாபத்தை முற்றும் அழித்தீர்
பரிகாரியே! என்னில் அன்பை பொழிந்தீர்

3. குற்றங்கள் காண்கையில் பெற்றோர் வெறுத்தார்
சுற்றத்தார் நண்பர்கள் முற்றும் பகைத்தார்
நீர் மட்டும் என்னை விட்டு விலக வில்லை
நீசப் பாவி என்னை வெறுக்கவில்லை

4. ஏனய்யா இயேசுவே என்னைத் தெரிந்தீர்
பிரதான பாவியென்றறிந்த போதும்
ஏங்கித் தவித்திருந்தேன் இவ்வன்பிற்காய்
மாறாத உம் அன்பை எனக்குத் தந்தீர

D-Maj/S.Rock/T-115

266.மேய்ப்பனின் குரல்

மேய்ப்பனின் குரல் கேட்கும்
சின்ன ஆட்டுக்குட்டியாம் நானே
அழுகையின் குரல் கேட்டு
அன்பரின் குரல் கேட்டேன்

1. புதரிலே சிக்குண்டேன்
பயந்து நான் நடுங்கினேனே
அழைத்தார் என்னை அன்றே
அன்பரின் குரல் கேட்டேன் - மேய்ப்

2. கீழ்ப்படியாமல் ஓர் நாள்
ஓடி ஓடி ஒளிந்தேனே
தேடி வந்து என்னை பிடித்தார்
தற்பரன் இயேசு ராஜன் - மேய்ப்

3. ஓநாய் ஓர் நாள் என்னை
பின் தொடர்ந்து முன் வந்ததே
விலக்க என் கோலுமானார் - என்னை
விடுவிக்கும் தடியுமானார் - மேய்ப்

4. அன்பரின் குரல் கேட்ட
நல்ல ஆட்டுக்குட்டியாம் நானே
அடங்கி நடப்பேனே அவர் தோளில்
இருப்பேனே - மேய்ப்

267.என்னையே அர்ப்பணித்தேன்

என்னையே அர்ப்பணித்தேன்
இயேசுவே உம் சேவைக்கே
ஆவி ஆத்ம சரீரத்தில்
ஜெயம் தந்தாட்க் கொள்வீர்

1. லோக சிற்றின்பம் வேண்டேனே
தியாகத்தின் பாதையிலே
பூலோக நேசம் போதுமே
போதும் உம் அன்பென்றுமே - என்னை

2. பாரில் பாடும் வந்தாலும்
நோய் பிணி வருத்தினாலும்
வழுவாமல் தினம் சென்றிட
வல்லமை ஈந்திடுவீர் - என்னை

3. ஜீவ காலம் முழுவதும்
தேவனின் சேவை செய்வேன்
என் சித்தம் யாவும் நீக்கியே
உம் சித்தம் செய்திடுவீர் - என்னை

4. பூவில் உம் சுவிசேஷத்தை
பூரணமாய் உரைப்பேன்
கால் மிதிக்கும் இடம் தருவீரே
கர்த்தர் என்னோடிருப்பீர் - என்னை

C-Maj/0000/T-000

268.பலிபீடத்தில் வைத்தேன்

1. பலிபீடத்தில் வைத்தேன் என்னை
பாவி என்னை ஏற்றுக் கொள்ளும்

அனுபல்லவி

உம்மில் நான் இன்றி உலகினில்
உண்மையாய் ஜீவிப்பேனோ
உத்தமனாய் ஜீவித்திட
உம் கிருபை ஈந்திடும்

2. வாலிப நாளில் வாஞ்சையுடன்
வந்தேன் நின் திருப்பாதம்
வாரும் ஐயா வந்து என்னை
வல்லமையால் நிரப்பும் - உம்மில

3. நிலையில்லா இந்தப் பூவுலகில்
வந்தேன் நின் திருப்பாதம்
நின் சித்தம் போல் உம் கரத்தால்
நித்தம் வழி நடத்தும் - உம்மில்

4. பரிசுத்தமில்லா இவ்வுலகில்
பரிசுத்தமாய் ஜீவிக்க
பரிசுத்தமான உம் இரத்தத்தால்
பரிசுத்தமாக்கிடும் - உம்மில்

269.வந்தேன் ஐயா உம்

வந்தேன் ஐயா உம் பாதமதில்
தந்தேன் என்னை உம் அன்புக்காய்

1. கர்த்தர் நீர் செய்த நன்மைகட்காய்
காலமெல்லாம் உம்மை போற்றிடுவேன்
ஆயிரம் நாவுகள் போதாதே
அடிமை நானும் உமக்கையா

2. கலங்கி தவிக்கும் நேரங்களில்
கண்ணீரைத் துடைத்து தேற்றினீரே
சுமந்தீரே தோளின் மேல் பத்திரமாய்
சுகமான செட்டையில் காத்தீரே

3. எந்தன் ஆவி ஆத்மா சரீரமே
எந்தன் சுகம் பெலன் யாவையுமே
பூவிலே உம் சேவை செய்யவே
பூரணமாக ஒப்படைக்கிறேன்

4. உம் சித்தம் செய்திடவே
உன்னத ஆவியால் நிரப்புமே
முற்றுமாய் பலியாக படைக்கிறேன்
முடிவு வரை நாதா நடத்துமே

5. ஒப்புவித்தேனே என்னையுமேமுற்றும்
பரிசுத்தமாக்கிடவேநேசா
உம் வருகை நாளிலேமாசற்றோனாய்
என்னை நீர் காணவே

270.ஏழையை மீட்ட ஏசுவே

ஏழையை மீட்ட ஏசுவே ராஜா(சுவாமி)
அடிமை சரண் புகுந்தேன் - 2

நீசனா மென்னைத் தேடினீரே
காசினியிலன்பு கூர்ந்து - 2

1. என் பாவம் போக்க எடுத்தீர் இறைவா
ஈனக்கோலமதை - 2
என்னதானிதற்கீடு செய்குவேன்
அன்னையே உம் அன்பிற்கீடாய் (விளம்புவீரே) - ஏழை

2. தூரமாய்க் கிடந்தேன் தொல்லைகளடைந்தேன்
தூயா உம்மை மறந்தே(ன்) - 2
தூக்கினீர் என்னைச் சேற்றினின்றே
தேற்றினீரும் ஜீவனாலே (ஆவியாலே) - ஏழை

3. விண்ணை நீர் மறந்தீர் விரோதியாமெனையே
விண்ணில் சேர்த்திடவே - 2
வேண்டுதல் கேளும் வேந்தரே
அருள் தேவனே சகாயரே - ஏழை

4. பாவத்தின் கூலியாம் மரணமாம் பயத்தை
ஜெயித்தவர் இயேசுகோமான் - 2
ஜீவனும் சமாதான(மு)மீந்து
தேவனின் சமுகமீந்தார் - ஏழை

5. மாயமாம் உலகின் வேஷத்தை வெறுத்தேன்
மன்னா உம் அன்பினாலே - 2
சொன்னீரே மகிமையில் சேர்ப்பதாய்
உன்னதா உம் வாக்கை நம்பினேன் - ஏழை

D-Maj/8Beat/T-100

271.என் மீட்பர் சென்ற

1. என் மீட்பர் சென்ற பாதையில்
நீ செல்ல ஆயத்தமா?
கொல்கதா மலை வாதையின்
பங்கை பெறுவாயா?

சிலுவையை நான் விடேன்
சிலுவையை நான் விடேன்

2. ஊரார் இனத்தார் மத்தியில்
துன்பம் சகிப்பாயா?
மூர்க்கர் கோபிகள் நடுவில்
திடனாய் நிற்பாயா? - சிலுவையை

3. தாகத்தாலும் பசியாலும்
தோய்ந்தாலும் நிற்பாயா?
அவமானங்கள் வந்தாலும்
சிலுவை சுமப்பாயா? - சிலுவையை

4. பாவாத்மாக்கள் குணப்பட
நீ தத்தம் செய்வாயா?
கோழை நெஞ்சர் திடன்பட
மெய்யுத்தஞ் செய்வாயா? - சிலுவையை

5. லோகத்தார் மாண்டு போகிறார்
மெய் வீரர் இல்லாமல்
பார்! மீட்பர் ஜீவனை விட்டார்
தொங்கிச் சிலுவையில் - சிலுவையை

6. வாழ்நாள் எல்லாம் நிலை நின்று
சிலுவையை சுமப்பேன்
தேவ அருளினால் வென்று
மேல் வீட்டைச் சேருவேன் - சிலுவையை

272.இயேசுவின் பின்னே

1. இயேசுவின் பின்னே போகத்
துணிந்தேன் - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

2. உலகம் என் பின்னே சிலுவை
என் முன்னே - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

3. கஷ்டம் என் இன்பம் நஷ்டம்
என் லாபம் - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

4. என் மீட்பர் பாதை என்றும்
பின் செல்வேன் - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

5. இயேசு என் ஆசை சீயோன்
என் வாஞ்சை - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

6. நேசரின் சித்தம் செய்வதென்
வாஞ்சை - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

7. செல்வேன் நான் வேகம் வெல்வேன்
என் கிரீடம் - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

8. கேட்கும் ஓர் ஓசை வா எந்தன்
காந்தை - பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான் (3)

G-Maj/S.Rock/T-110

273.இராஜரீக கெம்பீரத்

1. இராஜரீக கெம்பீரத் தொனியோடே
ராஜ ராஜனை தேவ தேவனை
வெற்றியோடு பாடி பக்தியோடு நாடி
வீர சேனைக் கூட்டமாக சேவிப்போம்

மெய் சீஷராக ஏசுவின் பின் செல்வோம்
முற்றும் முடிய வெற்றியடைய
சற்றும் அஞ்சிடாமல் ஏசு நாமத்தில்
சாத்தானை தோற்கடித்து மேற்கொள்வோம்

2. சூலமித்தி இரண்டு சேனைக் கொப்பாக
சூரியனைப் போல் சந்திரனைப் போல்
கொடிகள் பறக்க சாட்சிகள் சிறக்க
கீதம் பாடி ஜெயம் பெற்று செல்கின்றார்

3. செங்கடல் நடுவே நடத்தினார்
எங்கள் ஆண்டவர் சர்வ வல்லவர்
கடலைப் பிளந்து நதியைப் பிரித்து
காய்ந்து நிற்கும் பூமியில் நடத்துவார்

4. தாவீதை விரட்டிடும் சவுல் கைகள்
தளர்ந்திடவே அடங்கிடவே
பிலேயாமின் சாபம் பறந்தோடிப் போகும்
பரிசுத்த வான்களே கெம்பீரிப்போம்

5. பரலோக வாசிகள் சுதேசிகள்
பரதேசிகள் சில சீஷர்கள்
பின் திரும்பிடாமல் விட்டதைத் தொடாமல்
பற்றும் விசுவாசத்தோடு முன் செல்வோம்

6. ஜெபமே எமது அஸ்திபாரமே
ஜெபமின்றி ஜெயமில்லையே
ஆவியில் ஜெபிப்போம் அற்புதங்கள்
காண்போம் - ஆச்சரியமாகவே நடத்துவாா

7. குணசாலிகள் கூடாரவாசிகள்
கூட்டமாகவே கூடிச் சேரவே
மணவாளனை நம் மன்னன் ஏசுவைத் தம்
மங்கள சுபதினம் கண்ணால் காண்போம

A-Maj/Polka/T-110

274.இயேசு கிறிஸ்துவின் நல்

இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தில் முன் நடப்போம்
இனி எல்லோருமே அவர் பணிக்கெனவே
ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்

நம் இயேசு இராஜாவே
இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல்படுவோம்

1. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதிசீக்கிரமாய்
இராஜ பாதையை செம்மையாக்குவோம்

2. சாத்தானின் சதிகளை தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்த பார் முழுவதும்
இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்

3. ஆவி ஆத்துமாதேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல அவரே எல்லாம்
என முடிவு செய்தோம்
அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம்

E-Maj/6/8Beat/T-180

275.பிராண நாதன் என்னில்

1. பிராண நாதன் என்னில் வைத்ததாம் அன்பினை
தியானிக்கும் போதெல்லாம் கண்ணீர் பெருகுதே
அன்பின் சொரூபனாய் ஆருயிர் நேசனாய்
நீச தூசி என்னை நேசிக்கலானிரே

என் இயேசுவே நான் உம்முடையவன்
நீர் என் சொந்தம் என்றென்றுமாய்
ஆவி ஆத்மா சரீரம் பலியாய்
படைத்திட்டேன் ஏற்றுக் கொள்வீர்

2. தாயின் வயிற்றினில் பிரித்ததாம் நாள் முதல்
பற்பல பாதையில் பரிவுடன் காத்தீரே
வஞ்சக சாத்தானின் சூழ்ச்சியினின்றுமே
பறித்திழுத்தெந்தனை உம் சொந்தமாக்கினீர்

3. குயவனின் கையிலே களிமண்ணைப் போலவே
என்னை உம் கையிலே வைத்திட்டேன் நாயகா
என் சொந்த இஷ்டமோ ஏதும் வேண்டாம் நாதா
உம் நோக்கம் என்னிலே பூரணமாகட்டும்

4. நேசர் கரத்தினில் தீமை ஏதுமுண்டோ
யாதும் என் நன்மைக்கே என்பதை அறிகுவேன்
ஜுவாலிக்கும் அக்கினியோ பெருக்கான வெள்ளமோ
பட்சிக்க விட்டிடீர் அமிழ்த்தவும் பார்த்திடீர்

5. என்னையும் எந்தனுக்குள்ளதாம் யாவையும்
நேசர் கரத்தினில் முற்றுமாய் வைத்திட்டேன்
ஜீவனோ மரணமோ பிராண நாதன் என்னில்
வாஞ்சிப்பதெதுவோ சம்பூரணமாகட்டும்

6. மரண இருள் பள்ளம் தாண்டிடும் நேரத்தில்
இயேசு என் நேசரின் கரமதைக் காண்பதால்
மகிழ்வுடன் ஏகுவேன் அக்கரை யோர்தானில்
நித்திய நித்தியம் ஆனந்தம் கொள்ளுவேன

D-Maj/Waltz/T-130

276.பலி பீடத்திலென்னை பரனே

1. பலி பீடத்திலென்னை பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனை திருச்சித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர்

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை

2. நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னை
காத்துமக்காய் நிறுத்தி - கல்வாரி

3. ஆவியோடாத்துமா சரீரம்
அன்பரே உமக்கென்றும் தந்தேன்
ஆலயமாக்கியே இப்போ
ஆசீர் வதித்தருளும் - கல்வாரி

4. சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் சாக
தேவா அருள் செய்குவீர் - கல்வாரி

5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தே கண்டதால் - கல்வாரி

E-Maj/Waltz/T-130

277.தேவ சித்தம் நிறைவேற

தேவ சித்தம் நிறைவேற
என்னையும்ஒப்படைக்கிறேன்
தேவ சத்தம் என்னுள்ளம்
பலமாகத் தொனிக்குதே

1. முட்களுக்குள் மலர்கின்றதோர்
மக்களை கவரும் லீலி புஷ்பம் போல்
என்னையுமே தம் சாயலாய்
என்றென்றும் உருவாக்குவார் - தேவ

2. பொன்னைப் போல புடமிட்டாலும்
பொன்னாக விளங்குவேனென்றென்றுமே
திராணிக்கு மேல் சோதித்திடார்
தாங்கிட பெலனளிப்பார் - தேவ

3. அத்தி மரம் துளிர் விடாமல்
ஆஸ்திகள் அழிந்து நஷ்டம் வந்தாலும்
கர்த்தருக்குள் சந்தோஷமாய்
நித்தமும் மகிழ்ந்திடுவேன் - தேவ

4. நீதிமானை அனுதினமும்
சோதிக்க பல்வேறு துன்பம் வந்தும்
கர்த்தர் அன்பை விட்டு நீங்கா
சுத்தனாய் நிலைத்திருப்பேன் - தேவ

5. முன்னறிந்து அழைத்தவரே
முன்னின்று நலமுடன் நடத்துவார்
சகலமும் நன்மைக் கென்றே
சாட்சியாய் முடித்திடுவார் - தேவ

6. சோதனையை சகிப்பவனே
சாந்தமும் பொறுமையு முள்ளவனே
ஜீவக்கிரீடம் பெற்றிடுவான்
ஜோதியாய் பிரகாசிப்பான் - தேவ

7. கஷ்டமெல்லாம் தொலையும் ஓர் நாள்
கண்ணீரும் கவலையும் நீங்கும் அந்நாள்
இரட்டிப்பான பங்கைப் பெற
இரட்சகர் அழைத்திடுவார் - தேவ

E-Min/Waltz/T-135

278.ஒப்புவித்தேன் ஐயனே

ஒப்புவித்தேன் ஐயனே
உம் சித்தம் செய்ய தந்தேனே
முற்றிலுமாய் அர்ப்பணித்தேன்
ஏற்றுக் கொள்ளும் இயேசுவே

1. சுட்டெரிக்கும் அக்கினியாய்
சுத்திகரித்தெம்மை மாற்றிடுமே
ஆவி ஆத்துமா சரீரமே
ஆத்தும நேசரே படைக்கின்றேன்

2. கண்ணீர் கவலை பெருகுதே
கர்த்தர் தம் வாக்காலே தேற்றிடுமே
உலக சிநேகம் பின் வைத்தே
உறுதியாக பின் சென்றிடவே

3. அத்திமரம் துளிர் விடாமல்
ஆஸ்திகள் யாவும் அழிந்திடினும்
கர்த்தர் தம் அன்பை விட்டு நீங்கா
தூய கிருபை தந்தருளும்

4. எந்தனின் சிந்தை முன்னறிவீர்
எந்தனின் பாதை நீர் அறிவீர்
நல்ல பாதை நடந்திட
நாதனே என்னையும் அர்ப்பணித்தேன்

5. காடு மலைகள் போன்ற இடம்
கண்டு என்றும் அஞ்சிடாமல்
அழியும் ஆத்தும தரிசனம்
ஆண்டவர் என்னிலே ஈந்தருளும்

6. சோதனை எம்மை சூழ்ந்திடினும்
சோர்ந்திடா உள்ளம் தந்தருளும்
ஜீவக்கிரீடம் முன்னே வைத்தே
ஜீவிய காலம் நடந்திட

D-Maj/Disco/T-120

279.அழகாய் நிற்கும் யார்

அழகாய் நிற்கும் யார் இவர்கள்?
திரளாய் நிற்கும் யார் இவர்கள்?
சேனைத் தலைவராம்
இயேசுவின் பொற்தளத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள் -2

1. எல்லா ஜாதியார் எல்லா கோத்திரம்
எல்லா மொழியும் பேசும் மக்களாம்
சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்
சீர் போராட்டம் செய்து முடித்தோர் - அழகாய்

2. வெள்ளை அங்கியை தரித்து கொண்டு
வெள்ளை குருத்தாம் ஓலை பிடித்து
ஆர்ப்பரிப்பார் பிதாவின் முன்பு
ஆட்டுக்குட்டிக்கே மகிமையென்று - அழகாய்

3. தனிமையிலும் வறுமையிலும்
லாசரு போன்று நின்றவர்கள்
யாசித்தாலும் போஷித்தாலும்
விசுவாசத்தை காத்தவர்கள் - அழகாய்

4. ஆட்டுக் குட்டித்தான் - இவர் கண்ணீரை
அற அகற்றி - துடைத்திடுவார்
அழைத்துச் செல்வார் - இன்ப ஊற்றுக்கே
அள்ளிப் பருக இயேசு தாமே - அழகாய்

D-Maj/Waltz/T-135

280.என்னை ஆளும் இயேசு

என்னை ஆளும் இயேசுநாதா
எந்தன் ஆவி ஆத்மா சரீரம்
ஜீவபலியாய் ஒப்படைத்தேன்
ஜெயம் தந்தாட் கொள்ளும்

1. அதிகாலை தோறும் என்னை எழுப்பி
அறிவை ஊட்டி நிரப்புவீர்
இளைத்தவருக்கு எற்ற சமயம்
இனிய வாக்கை தந்தருளும் - என்னை

2. இருளின் அதிகாரத்தினின்றென்னை
அருள் ஒளியினுள் அழைத்தீரே
அன்புக்குமாரனின் இராஜ்ஜியமதில்
இன்பமுடனே பங்களித்தீர் - என்னை

3. எனது சுதந்திரம் பங்குமானீர்
எனது உள்ளம் பூரிக்குதே
ஆறுதல் தேறுதல் அல்லும் பகலும்
ஆலோசனைகளுமளித்தீர் - என்னை

4. எரியும் விளக்கில் எண்ணெயும் ஊற்றும்
எரிந்து நானும் பிரகாசிப்பேன்
மலைமேல் பட்டணம் மறைந்திடுமோ
மங்கிடாதென்றும் உம் மகிமை - என்னை

5. நீரோடைகளை வாஞ்சிக்கும் மான்போல்
நித்தம் என் ஆத்மா கதறுதே
வறண்டு விடாய்த்த என் இதயத்தில்
வற்றாத ஊற்றாய்ப் பாய்ந்திடுவீர் - என்னை

6. சமாதானத்தின் தேவனே வருவீர்
சத்திய வாக்குத் தவறிடீர்
விரைந்து பறந்து கர்த்தரைக் காண
விஸ்வாசத்தோடு தைரியம் கொள்வேன்- என்னை

C-Maj/0000/T-000

281.இஸ்ரவேலின் சேனைகளின்

1. இஸ்ரவேலின் சேனைகளின் முன் நடந்த
தெய்வமே - எங்கள் சேனாதிபதியாய்
எங்கள் முன்னே செல்லுமே - இஸ்

2. உம்மை நம்பி உம்மை சார்ந்து உம்மை
மகிமைப்படுத்தவே அடியார் தொடுக்கும்
வேலையை நீர் ஆசீர்வதிக்க வேணுமே - இஸ்

3. ஸ்நானகன் யோவானோடேசு ஸ்நானம் வாங்கும்
வேளையில் - வந்தமர்ந்த வான் புறாவே!
வாரும் இந்த நேரத்தில் - இஸ்

4. அன்று நூற்றிருபது பேர் சென்றதோர் மேல்
வீட்டினில் - வந்தமர்ந்த வான்அக்கினியே!
வாரும் இந்த நேரத்தில் - இஸ்

5. சமுத்திரத்தை இரண்டாக பிளந்த எங்கள்
தெய்வமே - உலர்ந்த தரையை எங்களுக்காய்
செய்ய வேணுமே - இஸ்

6. ஆறு லட்சம் இஸ்ரவேலர் அப்பம் தண்ணீர்
குறைவில்லாமல் - நாற்பதாண்டு வனாந்திரம்
நடத்தின எம் தெய்வமே - இஸ்

7. யோசுவாவின் போர்க்களத்தில் வீரனாய் முன்
நின்றவர் - சந்திர சூர்ய மண்டலங்கள்
தரித்து நிற்கச் செய்தவர் - இஸ்

8. ஏழை எலியாவின் மேலே வல்லமையாய்
நின்றவர் - பாரில் பாகால் கோபுரங்கள்
அழித்துப் போடும் தெய்வமே - இஸ்

9. ஆதிக் கிறிஸ்து சீஷர் முதல் இன்று வரை
பக்தரை - ஆசீர் வதித்து வல்லமையால்
ஆளும் எங்கள் தெய்வமே - இஸ்

10. புதிய வானம் புதிய பூமி ஆக்கி ஆள
வருவாரே - புதிய எருசலே மீதில்
ஏழைகளைச் சேருமெ - இஸ

282.காரிருளில், என் நேச

1. காரிருளில், என் நேச தீபமே,
நடத்துமேன்!
வேறொளியில்லை, வீடும் தூரமே,
நடத்துமேன்!
நீர் தாங்கின், தூரக் காட்சி,
ஆசியேன்!
ஓர் அடி மட்டும் என் முன்
காட்டுமேன்

2. என் இஷ்டப்படி நடந்தேன் ஐயா!
முன்னாளிலே
ஒத்தாசை தேடவில்லை! இப்போதே
நடத்துமேன்!
உல்லாசம் நாடினேன், திகிலிலும்
வீம்பு கொண்டேன், அன்பாக
மன்னியும்

3. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்
இனிமேலும் காடாறு சேறு குன்றில்
தேவரீர்
நடத்திடும் உதய நேரம் வர
களிப்பேன்
மறைந்து போன நேசரைக்
காண்பேன்

283.எக்காலும் இயேசுவே

1. எக்காலும் இயேசுவே!
சகாயராயிரும்
அன்பான சத்தத்தால்
என் ஏக்கம் நீக்கிடும்

2. எப்போதும் இயேசுவே!
இப்பாவியோடிரும்
தீயோனின் சோதனை
ஓயாமல் விலக்கும்

3. எக்காலும் இயேசுவே!
இக்கட்டு வாழ்விலும்
அன்பாகத் தங்குவீர்
என் நீச நெஞ்சிலும்

4. எப்போதும் இயேசுவே!
இப்பேதைக்கிரங்கும்
மெய்ஞ்ஞானம் சத்தியம்
செய்நன்றி போதியும்

5. எக்காலும் இயேசுவே!
எக்கேடும் நீக்குமேன்
காருண்ய நாயகா!
நீர் என்னை ஆளுமேன்

F-Maj/16Beat/T-82

284. என் ஆத்தும நேச மேய்ப்பரே!

என் ஆத்தும நேச மேய்ப்பரே!
என் உள்ளத்தின் ஆனந்தமே!
இன்னும் உம்மைக் கிட்டி சேர நான்
வாஞ்சையோடு சமீபிக்கிறேன்

பேசும்! பேசும்! ஜெபம் செய்யும் போது
ஆண்டவா! பிரியமானதை
இப்போ காட்டும் செய்ய ஆயத்தம்

1. மெய் மீட்பருக்குக் கீழ்படிவோர்
தம் ஆத்துமத்தை தேற்றும் இடம்
அடியேனும் பெற அருள்வீர்
அப்பனே விண்ணப்பம் கேட்டிடும் - பேசும்

2. பாவிகட்கு உமது அன்பை
என் நடையாற் காட்டச் செய்யும்
கல்வாரி ஆவியாலென் உள்ளத்தைப்
போரில் வெல்ல அபிஷேகியும் - பேசும்

3. என் ஜீவிய நாட்களெல்லாம்
நீர் சென்ற பாதையே செல்வேன்
ஆசித்துத் தாரேன் எனதெல்லாம்
மீட்பரே வல்லமை தந்திடும் - பேசும்

E-Min/16Beat/T-75

285.ஜெப வேளை எமக்கானந்தம்

ஜெப வேளை எமக்கானந்தம் என்றும்
ஜெபமில்லா ஜெயமில்லை
ஜெபம் எங்கள் ஜெயமே

1. இருள் சூழ்ந்த வனம் போன்ற இருண்ட
கெத்சமனேயில் இறுதி வேளையில் ஜெபித்தீர்
இரத்த வேர்வையும் பெருமூச்சும் பெருகிடவே
அந்த இரவெல்லாம் ஜெபித்தீரைய்யா

2. மறுரூப மலை மீதில் தரிசனம் கொடுத்து - உம்
மகிமையை அளித்தீரைய்யா அன்று போல உம்
தரிசனம் எமக்கருளும் -எங்கள்
அருமை ஆண்டவர் ஏசையா

3. சரீரமோ பெலவீனம் ஆவியோ உயிர்ப்பிக்கும்
சலிப்பின்றி ஜெபித்திடுவோம் அந்தி சந்தி
மத்தியானத்தில் ஜெபித்திடவே நல்ல
அருள் ஆவிவரம் தாருமே

4. ஊர் ஆரோன் இருவரும் கரங்களை சுமந்திட
ஊக்கமாய் ஜெபம் செய்தாரே பக்தன் மோசே போல்
ஜெயம் பெற ஜெபித்திடவே பரமனே கிருபை தாருமே

5. சிறைச்சாலை அடைபட்ட சீஷனை விடுவிக்க
சபையாரும் ஜெபித்தனரே அன்று பேதுரு வெளி வந்த
அதிசயம் போல் பதில் அளித்தெங்கள் ஜெபங்கேளுமே

6. உபவாச ஜெப மூலம் அகாஸ்வேரு ராஜனின்
உளமதைத் திருப்பினாளே எஸ்தர் ராணி தன் ஜெபங்
கேட்டு தயவடைந்தாள் என்றும்
எமக்குந்தன் தயை தாருமே

7. உயர் கர்மேல் மலைமீது ஜெபித்திடும் எலியா போல்
துயருற்ற மகள் அன்னாள் போல் தாசன் தானியேல்
எனும் பக்தர் பலர் ஜெபித்த - அந்த
தனி ஜெப வரந் தாருமே

8. நினையாத நேரத்தில் திருடன் போல் வருகிறேன்
நிதம் நீங்கள் விழித்திருங்கள்
என்று போதனை அளித்தீரே அதை நம்பியே வந்தோம்
எமக்குந்தன் பெலன் தாருமே - இந்த ஜெப

D-Maj/Waltz/T-130

286.ஜெபத்தைக் கேட்கும் எங்கள்

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்யும்

ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

.

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்யும் - ஜெபமே

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
வாகான தாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக் கொள்வோம்-ஜெபமே

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கி விடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம் - ஜெபமே

C-Maj/16Beat/T-100

287.திருப்பாதம் நம்பி வந்தேன்

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
த(உ)மதன்பை கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரை தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்குத் தங்கிடுவேன் -திருப்பாதம்

2. என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே-திருப்பாதம்

3. மனம் மாற மாந்தன் நீரல்ல
மன வேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தேஏசுவே
உம்மை அண்டிடுவேன் -திருப்பாதம்

4. என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பெலன் ஈந்திடுமே-திருப்பாதம்

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே -திருப்பாதம்

6. சத்துரு தலை கவிழ்ந்தோட
நிந்தமும் கிரியை செய்திடும்
என்னைத் தேற்றிடும் அடையாளம்
இயேசுவே இன்று காட்டிடுமே-திருப்பாதம்

7. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீரப்பாதை காட்டினீரே
வளர்ந்து கனிதரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன்-திருப்பாதம்

8. பலர் தள்ளின மூலைக்கல்லே
பரம சீயோன் மீதிலே
பிரகாசிக்கும் அதை நோக்கி
பதராமலே காத்திருப்பேன்-திருப்பாதம்

D-Maj/Waltz/T-160

288.இரங்குமே, என் இயேசுவே

இரங்குமே, என் இயேசுவே
இரக்கத்தின் ஐசுவரியமே
கூவி கதறியே இராவும் பகலுமே
கெஞ்சும் ஜெபம் கேளுமே

1. நித்தம் எமக்காய் பரிந்து பேசும் நள்ளிரவின்
நண்பனே அன்பின் பிதா முன்னில் நின்று
ஜெபித்திடும் - அன்பர் ஜெபம் கேளுமே

2. உற்றார் பெற்றோரும் குடும்பங்களும் மற்றும் பலர்
மாள்வதைக் கண்டு சகித்திடா தென்றும்
ஜெபித்திடும் - கண்ணீர் ஜெயம் கேளுமே

3. அன்று நினிவே அழிவைக்கண்டே அன்பே
இரங்கினீரே யோனா உரைத்த தம்
ஆலோசனை தந்து ஏழை ஜெபங் கேளுமே

4. எத்தனை துன்பம் சகித்து மீட்டீர் எல்லாமே
வீணாகுமோ அத்தி மரத்திற்கு அன்று
இறங்கினீர் - அந்த ஜெபங் கேளுமே

5. சோதனையினின்று இரட்சித்தீரே சோதோமின்
பக்தனையே ஆபிரகாம் அன்று வேண்டி
ஜெபித்ததோர் - ஆதி ஜெபம் கேளுமே

6. ஐந்து கண்டத்தின் ஜனத்திற்காக ஐங்காயங்கள்
ஏற்றீரே தேவன் இல்லை என்று கூறி
மடிவோரைத் - தேடும் ஜெபம் கேளுமே

7. பிள்ளைகள் அப்பம் கிடைத்திடாதோ பேதைகள்
கேட்டிடவே மேஜை துணிக்கைகள் தாரும்
எனக் கெஞ்சும் மாந்தர் ஜெபங் கேளுமே

8. தாரும் உயிர் மீட்சி சபைதனில் சோரும் உள்ளம்
மீளவே கர்த்தாவே உம் ஜனம் செத்த
நிலை மாற - பக்தர் ஜெபங் கேளுமே

289.கர்த்தர் துயர் தொனியாய்

கர்த்தர் துயர் தொனியாய்
கதறி முகங் கவிழ்ந்தே
இருள் சூழ்ந்த தோட்டத்திலே
இதயம் நொறுங்கி ஜெபித்தார்

1. மரணத்தின் வியாகுலமோ மனிதர் துணை
இல்லையோ - தேவ தூதன் தேற்றிடவே
தருணம் நெருங்க ஒப்படைத்தார்
துன்ப சுமை சுமந்தார் - கர்த்தர்

2. துக்கத்தால் தம் சீஷர்களே தலை சாய்ந்து
தூங்கினாரே - தம்மை மூவர் கைவிடவே
தூரமாய் கடந்தே திகிலடைந்தார்
தன்னந்தனிமையிலே - கர்த்தர்

3. பிதாவே இப்பாத்திரத்தின் பங்கினை நான்
ஏற்றுக்கொண்டேன் - ஆகட்டும் உமது சித்தம்
அது நீங்கிடுமோ என்றுரைத்தார்
ஆ! இரத்த வேர்வையுடன் - கர்த்தர்

4. திறந்த கெத்சமனேயில் துணிந்து வந்த பகைஞன்
என்ன துரோகம் செய்திடினும்
எந்தன் சினேகிதனே என்றழைத்தார்
என்ன மா அன்பிதுவே - கர்த்தர்

5. பரமன் ஜெப சத்தமே பூங்காவினில் கேட்கிறதே
பெருமூச்சுடன் ஜெபிக்கும்
அவரோடிணைந்தே கண்ணீருடன்
ஆவியிலே ஜெபிப்பேன் - கர்த்தர்

6. இயேசு தாங்கின துன்பங்கள்
என்னைத் தாண்டியே செல்லாதே
எனக்கும் அதில் பங்குண்டே
சிலுவை மரணப் பாடுகளால்
சீயோனில் சேர்ந்திடுவேன் - கர்த்தா

D-Maj/Polka/T-110

290.உத்தமமாய் முன் செல்ல

உத்தமமாய் முன் செல்ல
உதவி செய்யும் யெகோவா
ஊக்கமதை கைவிடாமல்
காத்துக் கொள்ள உதவும் - 2

1. பலவிதமாம் சோதனைகள்
உலகத்தில் எமை வருத்தும்
சாத்தானின் அக்கினி யாஸ்திரங்கள்
எண்ணா நேரத்தில் தாக்கும் - 2

2. தீர்மானங்கள் தோற்கா வண்ணம்
காத்துக் கொள்ள உதவும்
நேர்மையாக வாக்கைக் காக்க
வழி வகுத்தருள வேண்டும் - 2

3. இவ்வுலக மாயாபுரி
அழியப் போவது நிச்சயம்
இரட்சகனே நீர் இராஜாவாக
வருவது அதிநிச்சயம் - 2

4. தூதரோடு பாடலோடு
பரலோகில் நான் உலாவ
கிருபை செய்யும் இயேசு தேவா
உண்மை வழிகாட்டியே - 2

F-Maj/8Beat/T-100

291.வாரும் ஐயா போதகரே

1. வாரும் ஐயா போதகரே
வந்தெம்மிடம் தங்கியிரும்
சேரும் ஐயா பந்தியினில்
சிறியவராம் எங்களிடம்

2. ஒளி மங்கி இருளாச்சே
உத்தமனே வாரும் ஐயா
கழித்திரவு காத்திருப்போம்
காவலனே கருணை செய்யும்

3. நான் இருப்பேன் நடுவில் என்றார்
நாயகன் உன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயை புரிய
தற்பரனே நலம் தருவாய்

4. உன்றன் மனை திருச்சபையை
உலகமெங்கும் வளர்த்திடுவாய்
பந்தமறப் பரிகரித்தே
பாக்கியம் அளித்தாண்டருள்வாய்

C-Maj/Waltz/T-140

292.என் இயேசு ராஜா

என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா
உம் கிருபை தந்தாலே போதும்
அலை மோதும் வாழ்வில்
அலையாமல் செல்ல
உம் கிருபை முன் செல்ல அருளும்

1. கடல் என்னும் வாழ்வில்
கலங்கும் என் படகில்
சுக்கான் பிடித்து நடத்தும் என் தேவா
கடலினை கண்டித்த
கர்த்தர் நீர் அல்லவோ
கடவாத எல்லையை
என் வாழ்வில் தாரும்- என்

2. பிளவுண்ட மலையே
புகலிடம் நீரே
புயல் வீசும் வாழ்வில்
பாதுகாத்தருளும்
பாரினில் காரிருள்
சேதங்கள் அணுகாமல்
பரமனே என் முன்
தீபமாய் வாரும் - என்

3. எதிர்காற்று வீச
எதிர்ப்போரும் பேச
என்னோடிருப்பவர்
பெரியவர் நீரே
இயேசுவே யாத்திரையில்
கரை சேர்க்கும் தேவா
என் ஜீவ படகில்
நங்கூரம் நீரே - என்

A-Maj/Disco/T-125

293.நமது இயேசு கிறிஸ்துவின்

1. நமது இயேசு கிறிஸ்துவின் நாமம்
நானில்மெங்கும் ஓங்கிடவே
புனிதமான பரிசுத்த வாழ்வை
மனிதராம் எமக்களித்தார் - தேவ

தேவ கிருபை என்றும் பெருக
தேவனை ஸ்தோத்தரிப்போம்
பாவ இருள் அகல
தேவ ஒளி அடைந்தோம்

2. அவரை நோக்கி கூப்பிடும் வேளை
அறிவிப்பாரே அற்புதங்கள்
எனக்கெட்டாத அறிந்திடலாகா
எத்தனையோ பதிலளித்தர் - தேவ

3. பதறிப்போன பாவிகளாக
சிதறி எங்குமே அலைந்தோம்
அவரை நாம் தெரிந்தறியோமே
அவர் நம்மை தெரிந்தெடுத்தார் - தேவ

4. பலத்த ஜாதி ஆயிரமாக
படர்ந்து ஓங்கி நாம் வளர
எளிமையும் சிறுமையுமான
எமக்காவர் அருள் புரிவார் - தேவ

5. நமது கால்கள் மான்களைப் போல
நடந்து ஓடிப் பாய்ந்திடவே
உயர் ஸ்தலத்தில் ஏற்றுகின்றாரே
உன்னதமான ஊழியத்தில் - தேவ

6. பரமனேசு வந்திடும்போது
பறந்து நாமும் சென்றிடுவோம்
பரமனோடு நீடுழி வாழும்
பரம பாக்கியம் பெறுவோம் - தேவ

G-Maj/Disco/T-115

294.தேவ கிருபை என்று

தேவ கிருபை என்றுமுள்ளதே
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றி துதித்துப்பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

1. நெருக்கப்பட்டோம் மடிந்திடாமல்
கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடி தன்னில் தோன்றிய தேவன்
பாதுகாத்தாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

4. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே- தேவ

5. வெள்ளம் போல் நிந்தை
மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே
திட நம்பிக்கை தைரியம் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளதே- தேவ

6. நித்திய தேவனாம் சத்திய பரன் தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளதே- தேவ

C-Maj/Disco/T-125

295.இனிமை இனிமை இது

இனிமை இனிமை இது இனிமை
மகிமை மகிமை புது மகிமை
இயேசுவின் மார்பில் நான்
சாய்ந்து கொண்டிருந்தால்
இந்த நாள் முழுவதும்
இல்லை தனிமை 3

1. காலையும் மாலையும் புது கிருபை
கண்ணின் மணிபோல காக்கும் கிருபை
இறுதி வரைக்கும் வரும் கிருபை
கர்த்தனுக் கேற்ற நற் காணிக்கையாம்
சித்தங் கொண்டெம்மை நீர் பாவிப்பதாலே
மெத்தவும் பலன் காண்போம் - நாங்கள் - எங்கள்

D-Min/16Beat Balled/T-90

1079. கனிவின் கரம் என்னை

கனிவின் கரம் என்னை தாங்கிட
நான் அஞ்சிடேன்-இருளுலகின்
பயணங்களில் நீர் என்னுடன்
வரும் போது உம் சமூகம்
அருள் வேண்டும் எந்தன் ஜெபம் 2
வாரும் என் தேவா என வேண்டி நானிருக்க
நீர் இல்லா நானும் நான் இல்லை என நினைக்க

1. என்ன ஆனாலும் உந்தன் அன்பில்
என்றும் நீர் என்னை சேர்த்திடுவாயே
ஜீவன் ஆனாலும் மரணம் ஆனாலும்
உம்மில் நிலைத்து நான் இருப்பேன்
உம் முகம் நோக்கி அலைகளை கடப்பேன்
உம் நாமம் உச்சரித்து உயிர் பெருவேன்
காலமெல்லாம் உம்மை துதித்து
நன்றிகளை ஏறெடுப்பேன்

2. வானம் பூமி மாறினாலும்
என்றும் மாறா நல் நேசரே
வாக்குத்தத்தம் தந்த தேவா
என்றும் காக்கும் நல் நாயகா
உம் நாமம் கொண்டு சாத்தானை வெல்வேன்
உம் சித்தம் கொண்டு ஜெபித்திடுவேன்
வாழ்நாளெல்லாம் உம்மை புகழ்வேன்
நன்றிகளை ஏறெடுப்பேன்

1080. கண்களை ஏறெடுப்பேன்

கண்களை ஏறெடுப்பேன் மாமேரு நேராய்
என் கண்களை ஏறெடுப்பேன
விண்மண் உண்டாக்கிய
கர்த்தரினிடமிருந்து எண்ணில்லா
ஒத்தாசை எந்தனுக்கே வரும்

1. காலை தள்ளாடவொட்டார் உறங்காது
காப்பவர் காலை தள்ளாடவொட்டார்
வேண்டுதல் கேட்டு இஸ்ரவேலரை காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காதவர்

2. பக்தர் நிழல் அவரே எனை ஆதரித்திடும்
பக்தர் நிழல் அவரே எக்கால நிலைமையும்
என்னைச் சேதப்படுத்தாது என்னுடன்
இருந்தென்னை எப்போதும் காப்பவர்

3. எல்லாத் தீமைகட்கும் என்னை
விலக்கிக் காப்பாரே
எல்லாத் தீமைகட்கும்-
மாய உலகினில் மறவாமல் காப்பவர்
ஆவியானவரைத் தந்து
நன்மையால் நிரப்புவார்

G-Min/S.Rock/T-100

1081. கன்மலை மீதென் கால்கள்

கன்மலை மீதென் கால்கள் நிறுத்தினீர்
உன்னதங்களில் உட்காரச் செய்தீர் - 2
உளையான சேற்றில் உழன்ற என்னையும்
தூக்கினீர் கழுவினீர் காத்து வருகின்றார் - 2

1. பாவங்களை மன்னித்தீர்
சாபங்களை நீக்கினீர்
சத்துருவின் கையினின்று
விடுதலை அளித்தீர் - 2 ஜீவனுள்ள
நாளெல்லாம் உம் புகழ் பாடுவேன் - 2
இயேசய்யா (2) உம் புகழ் பாடுவேன்

2. எல்லையில்லா ஆனந்தம் எந்தன்
வாழ்வில் வந்ததைய்யா
சொல்லொண்ணா பேரின்பம்
என்னுள்ளத்தில் பொங்குதைய்யா
தினம் தினம் உம் புகழை நான் பாடுவேன்
இயேசய்யா (2) உம் புகழை நான் பாடுவேன்

1082. கன்னியாகுமரி முதல் ஜம்மு

கன்னியாகுமரி முதல் ஜம்மு காஷ்மீர் வரை
பாரத தேசம் இயேசுவை அறியட்டுமே
பாரதம் நம் பாரதம் இயேசுவை அறியட்டுமே(2)

1. பாரில் எங்கும் இயேசுவின்
நாமம் சொல்லுவோம் பாவந்தீர்க்க
வந்தோனை சாட்சி பகருவோம்-ஆயுசின்
நாளெல்லாம் வாழ்த்தி பாடிடுவோம்(2)

2. கண்ணீரோடே விதைத்திடுவோம்
உள்ளத்தை கொடுத்திடுவோம்
தியாகத்தோடு செயல்படுவோம்
உள்ளத்தை கொடுத்திடுவோம்
இயேசு கிறிஸ்துவுக்காய்
வாழ்வை அர்ப்பணிப்போம்(2)

3. உலக வாழ்க்கை குறுகியதே
சீக்கரம் மறைந்திடும் உலக மீட்பர்
இயேசுவின் வருகை சமீபமே தேசம்
அழியுது பார் இயேசு வரப்போகிறார்

1083. கர்த்தர் உன்னை மேன்மை

கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்
நீ கலங்காதே மனமே –2

1. கைவிடும் வேளையில் ஆசீர்வாதமும்
கரங்களில் நிரம்பிடும் தானியமும்
நிறைவான நன்மை உண்டாக
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்

2. சத்துருக்கள் எதிராய் எழும்பும் போது
கர்த்தரே யுத்தத்தை செய்திடுவார்
வெற்றிமேல் வெற்றியை உனக்கு தந்து
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்

3. உன்னை அவர் தனக்காக தெரிந்துக்கொண்டார்
தன்பெயரை உனக்கு வழங்கினாரே
சுற்றமும் நண்பரும் உன்னை மதிக்க
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்

4. உன்தேசம் முழுதும் மழைபொழிவார்
உனக்காக பொக்கிஷத்தை திறந்திடுவார்
பிறருக்கு நீயும் உதவி செய்ய
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்

D-Maj/ Disco/T-125

1084. கர்த்தாவே நீர் மாட்சிமை

கர்த்தாவே நீர் மாட்சிமை நிறைந்தவரே
துதி மகிமைக்கெல்லாம்
என்றென்றும் பாத்திரரே-உந்தன்
நாமம் உயர்த்தி பாடி ஆராதிப்பேன் (2)

ஆராதனை ஆராானை-உந்தன்
நாமம் உயர்த்தி பாடி ஆராதிப்பேன்

1. மகத்துவமும் பேர் புகழும்
உம் கரத்திலிருக்கின்றதே-எந்த
மனிதனையும் மேன்மைப்படுத்த
உம்மால் ஆகுமே

2. ஐசுவரியமும் ஆனந்தமும்
உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும் மேன்மைப்படுத்த
உம்மால் ஆகுமே

3. சத்தியமும் ஜீவனுமே
உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும் மேன்மைப்படுத்த
உம்மால் ஆகுமே

D-Min/16 Beat/T-110

1085.கருணைப் பிதாவே கல்வாரி

கருணைப் பிதாவே கல்வாரி அன்பே ஆஆ
உம்மையல்லால் எனக்காருமில்லை ஆஆ

1. கிருபை தாருமே- கிருபாநிதியே
கிருபாநிதியே கிருபாநிதியே
அன்பின் வடிவே (2) ஆஆ
ஏழைக்கிரங்கிடும் ஏசையா ஆஆ-2

2. தேவனின் சித்தம் செய்திட செய்யும்
செய்திட செய்யும் செய்திட செய்யும்
தியாகமானீரே (2) ஆஆ
தேடின உள்ளம் களிகூருமே ஆஆ

3. ஆ இன்பநாதா ஆத்தும நேசா
ஆத்தும நேசா ஆத்தும நேசா
அன்பின் கடலே (2) ஆஆ
அன்பினாலே உருவாக்கினீரே ஆஆ

4. கஷ்டங்கள் விலக கைகொடுத்தீரே
கைகொடுத்தீரே கைகொடுத்தீரே
நேசர் முகம் காண (2) ஆஆ
தேம்பிடுதே ஆசை என் உள்ளிலே ஆஆ

5. எந்தன் கண்ணீரை போக்கிடும் காலம்
போக்கிடும் காலம் போக்கிடும் காலம்
வேகம் வருமென்று (2) ஆஆ
காத்திருந்து நான் வாடுகிறேன் ஆஆ

6. யாத்திரை முடிந்து இயேசு ராஜனை
இயேசு ராஜனை இயேசு ராஜனை
மேகத்தில் சந்தித்து (2) ஆஆ
நித்திய காலமாய் வாழ்ந்திடுவேன் ஆஆ

D-Min/Blue grass/T-125

1086.கிருபையால் நிலை நிற்கின்றோம்

கிருபையால் நிலை நிற்கின்றோம் - உம்
கிருபையால் நிலை நிற்கின்றோம

கிருபை (கிருபை)
கிருபை (கிருபை)-2

1. பெயர் சொல்லி அழைத்ததுஉங்க கிருபை
பெரியவனாக்கியதும் உங்க கிருபை-2

2. நீதிமானாய் மாற்றியதும் உங்க கிருபை
நித்தியத்தில் சேர்ப்பதும் உங்க கிருபை

3. கட்டுகளை நீக்கியதும் உங்க கிருபை
காயங்களை கட்டியதும் உங்க கிருபை

4. வல்லமையை அளித்தது உங்க கிருபை
வரங்களை கொடுத்ததும் உங்க கிருபை

கிருபை கொண்டாடுகிறோம்-உம்
கிருபை கொண்டாடுகிறோம்

G-Maj/Blue grass/T-125

1087. கொண்டாடுவோம் நாம்

கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்
கொண்டாடுவோம் இயேசுவை-4

அல்லேலூயா ஆமென் அல்லேலூயா-2

1. சந்தோசமே இனி சந்தோசமே
என் வாழ்விலே சந்தோசமே

2. துக்கமில்லை இனி துயரமில்லை
ஆனந்தம் என் வாழ்விலே..

3. வியாதியில்லை இனி வருத்தமில்லை
ஆரோக்கியம் என் வாழ்விலே

1088. லேசான காரியம்

லேசான காரியம்-எதுவும்-2
பெலனுள்ளவன் பெலனற்றவன்
பெலனுள்ளவன் பெலனில்லாதவன்
யாராயிருந்தாலும் உதவிகள் செய்வது
லேசான காரியம் (2) என் இயேசுவுக்கு

1. மண்ணைப் பிசைந்து மனிதனைப்
படைப்பது லேசான காரியம் - (2)
மண்ணான மனிதர்க்கு மன்னாவை
தருவது லேசான காரியம்-2

2. கூழாங்கல்லாலே கோலியாத் வீழ்வது
இலேசான காரியம் - (2)
ஆழ்கடல் மீன் வாயில் வரிப்பணம்
எடுப்பது இலேசான காரியம் - (2)

3. கற்பாறை போலே கடல் மேல்
நடப்பது இலேசான காரியம் - (2)
கற்சாடி நீரையும் கனிரசமாக்குவது
லேசான காரியம் (2) என் இயேசுவுக்கு

4. குருடரின் கண்களை வார்த்தையால்
திறப்பது இலேசான காரியம் - (2)
மரித்த மனிதரை உயிர்த்திட செய்வதும்
இலேசான காரியம் - (2)

5. யோனாவை மீனின் வயிற்றினில்
வைத்தது இலேசான காரியம் - (2)
மன்னாதி மன்னன் மரித்துயிர்த்து எழுந்ததும்
இலேசான காரியம் - (2) என்

1089.உந்தன் நாமம் அதிசயமானவரே

உந்தன் நாமம் அதிசயமானவரே
அதிசயம் காணப்பண்ணுவீர்
என்னை அதிசயம் காணப்பண்ணுவீர்

1. பாவசாப ரோகத்தோடு உம்மிடம் வந்தேன்
பரிசுத்த ஜாதியாக மாற்றிவிட்டீர்
எத்துணை விந்தை கர்த்தாவே
உந்தன் நாமம் அதிசயமன்றோ

2. கண்ணீர் கவலை துக்கத்தோடு உம்மிடம் வந்தேன்
பரலோக சந்தோஷம் எனக்கு தந்தீர்
எத்துணை கிருபை கர்த்தாவே
உந்தன் நாமம் அதிசயமன்றோ

3. கிதியோன் போல கோழையாக உம்மிடம் வந்தேன்
உன்னதத்தின் பெலத்தாலே நிறைத்துவிட்டீர்
எத்துணை வல்லமை கர்த்தாவே
உந்தன் நாமம் அதிசயமன்றோ

1090. மா பாவியாம் என்னையும்

மா பாவியாம் என்னையும்
உம் அன்பால் அனைத்தீரே
என் இயேசு இராஜா நன்றி
தம் சித்தம் நிறைவேற
உம் இரத்தம் தந்தீரே
என் இயேசு இராஜா நன்றி

1. குயவன் கையில் களிமண் போல
என்னை கொடுப்பேன்
பரிசுத்தமாய் என்னை வனையும்
ஆத்ம பாரம் தந்து என்னை இன்றே நிரப்பும்
உம் ஊழியம் செய்ய அனுப்பும்

அனுப்பும் அனுப்பும் - (2)
உம் வேலை செய்திடவே
அனுப்பும் அனுப்பும் - (2)
என் தேசம் சந்திக்கவே

2. இருள் சூழ்ந்த இடம் என்னை இன்றே அனுப்பும்
அழியும் மாந்தர் சந்திக்க
நரகாக்கினையினின்று ஜனம் இரட்சிக்க
அபிஷேகம் தந்து என்னை அனுப்பும்

E-Maj/16 Beat/T-105

1091. மகளே சீயோன் மகிழ்ச்சி

மகளே சீயோன் மகிழ்ச்சியாலே ஆர்ப்பரி
இஸ்ராயேலே ஆரவாரம் செய்திடு
முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து களிகூறு
கெம்பீரித்து பாடி பாடி மகிழ்ந்திரு

அகமகிழ்ந்து களிகூறு
ஆரவாரம் செய்திடு (2)

1. தள்ளிவிட்டார் உன் தண்டனையை
அகற்றிவிட்டார் உன் பகைவர்களை
வந்துவிட்டார் அவர் உன் நடுவில்
இனி தீங்கை காணமாட்டாய்

2. உன் பொருட்டு அவர் மகிழ்கின்றார்
உன்னைக் குறித்து அவர் பாடுகின்றார்
அனுதினமும் அவர் அன்பினாலே
புது உயிர் உனக்கு தருகின்றார்

3. தளரவிடாதே உன் கைகளை
பயப்படாதே நீ அஞ்சாதே
இனி இழிவு அடையமாட்டாய்
உனது துன்பம் நீக்கிவிட்டார்

4. உலகெங்கும் பெயர் புகழ்பெறச்
செய்வேன் ஒதுக்கப்பட்ட
உன்னைச் சேர்த்துக் கொள்வேன்
ஊனமுற்ற உன்னைக் காப்பாற்றுவேன்

E-Maj/Slow Rock/T-110

1092. மகிழ்ச்சியோடு துதிக்கிறேன்

மகிழ்ச்சியோடு துதிக்கிறேன்
மனமகிழ்ந்து துதிக்கிறேன்
மன்னவனே இயேசு ராஜா
எங்கள் மனதில் பூத்து மனம் வீசும் ரோஜா
இயேசு ராஜா சாரோன் ரோஜா!

1. நாற்றமாக இருந்த வாழ்வை
வாசமாக மாற்றினீரே பாவியாக இருந்த
என்னை பரிசுத்தமாய் மாற்றினீரே(2)

நல்லவரே வல்லவரே(2)வாழவைக்கும்
அன்பு தெய்வம் நீரே-எங்களை

2. நெருக்கத்தில் இருந்த என்னை
விசாலத்தில் வைத்தீரே
சேற்றிலிருந்து தூக்கியெடுத்து
கன்மலைமேல் நிறுத்தினிரே

அற்புதரே அதிசயமே ஆனந்தமே
பரம ஆனந்தமே-இயேசு ஆனந்தமே

3. அடுப்புக்கரி போல் இருந்தேன்
பொன்சிறகாய் மாற்றினீரே
புது இரத்தத்தால் கழுவி
என்னை சுத்தமாக மாற்றினீரே

உன்னதரே உயர்ந்தவரே இருள்
நீக்கும் நல்ல ஒளிவிளக்கே-உள்ளத்தின்

F-Maj/Disco/T-130

1093. மகிமைக்கும் கனத்திற்கும்

மகிமைக்கும் கனத்திற்கும் பாத்திரரே
மங்காத புகழை உடையவரே
நிரந்தர அதிகாரம் உள்ளவரே
நித்தியமாய் எங்களை ஆள்பவரே

ராஜா இயேசு ராஜா நீரே ராஜாதி ராஜாதி
ராஜா இயேசு ராஜா நீரே ராஜாதி
ராஜாதி ராஜாதி ராஜா

1. பெருமைக்கும் புகழ்ச்சிக்கும் உரியவரே
பெரிய காரியங்களை செய்பவரே
சகல அதிகாரம் உள்ளவரே
சர்வத்தையும் படைத்த சிருஷ்டிகரே

2. தொழுகைக்கும் துதிக்கும் அதிபதியே
மகத்துவம் மாட்சிமை உம்கதியே
கிருபையின் ஐசுவரிய சம்பன்னரே
மரணத்தை ஜெயித்த மன்னவரே

1094. மகிழ்ந்து களிகூருங்கள்

மகிழ்ந்து களிகூருங்கள் -2
இயேசு ராஜன் பிறந்ததினால்
மகிழ்ந்து களிகூருங்கள்

1. விண்ணுலகம் துறந்து
மண்ணுலகம் உதித்து
தம்மை தாமே வெறுத்து அவர்
நம்மை மீட்க வந்தார்

2. பாவமறியா அவரே
ஜீவன் தந்திடவே
நித்திய வாழ்வு நமக்களிக்க
இயேசு ராஜன் பிறந்தார்

3. வாழ்ந்து காட்டிய வழியை
மகிழ்ந்து பின் பற்றியே
வேறு பலரை அவர் மந்தையில்
இணைத்து பலன் அடைவோம்

1095.அக்கினியின் தேவன் எனக்குள்

அக்கினியின் தேவன் எனக்குள்ளே இருக்கிறார்
சர்வ வல்ல தேவன் எனக்குள்ளே இருக்கிறார்
கலங்க மாட்டேன் நான் கலங்க மாட்டேன்
வெற்றி எனக்குதான்

1. எலியாவின் தேவனே எனக்குள்ளே இருக்கிறார்
எலிசாவின் தேவனே எனக்குள்ளே இருக்கிறார்
கலங்கமாட்டேன் நான் கலங்கமாட்டேன்
அக்கினி எனக்கு தான்

2. சாத்தானின் சூழ்ச்சியெல்லாம்
இந்த அபிஷேகம் முறிக்குமே
கலங்கமாட்டேன் நான் கலங்கமாட்டேன்
அபிஷேகம் எனக்கு தான்

3. என் பாத்திரம் அபிஷேகத்தால்
அது நிரம்பி வழியுதே
கலங்கமாட்டேன் நான் கலங்கமாட்டேன்
அதிசயம் எனக்கு தான்

A-Maj/Waltz/T-150

1096. மன்னிப்பு தாருமையா

மன்னிப்பு தாருமையா என் மணவாளனே
எனக்குள் வாருமையா என் எஜமானனே
மணவாளனே மணவாளனே
எஜமானனே என் இயேசு ராஜனே

1. பாவ வாழ்வை வெறுக்கிறேனையா
உம் பாதம் காணத் துடிக்கின்றேனையா
என் பரிசுத்தரே எனைப் படைத்தவரே
பாவம் போக்கப் பலியானீரே
உந்தன் பாதம் சரணமையா

2. எந்தன் மனதில் ஆறுதலில்லை
என்னை அழைத்தவரே ஆற்றிடுமையா
என் ஆண்டவரே யாரிடத்தில்
போவேனையா உம்மிடந்தான் சொல்வேனையா

3. உடைந்த உள்ளதோடு வருகிறேன்
புது ஆவியாலே நிரப்பிடுமையா
என் புகலிடமே என் புது பெலனே
உந்தன் சாயலாக மாற்றுமே
உந்தன் மார்பில் சாய்ந்திடுவேன்

C-Maj/Waltz/T-150

1097. மாறிடாதோர் நேச மீட்பர்

மாறிடாதோர் நேச மீட்பர்
மாற்றுவார் உன் வேதனை
பாவத்தாலும் நோயினாலும்
வருந்துவானேன் நம்பி வா

நம்பி வா நீ நம்பி வா
இயேசு உன்னை அழைக்கிறார்-2

1. லோக மாந்தர் கை விடுவார்
துரோகம் கூறி தூற்றுவார்
தூய இயேசு மெய் நேசராய்
துன்பம் தீர்ப்பார் நம்பி வா

2. வல்ல மீட்பர் கண்ணீர் யாவும்
வற்றிப்போக செய்குவார்
வற்றா ஜீவ ஊற்றாய் உன்னை
தாகம் தீர்ப்பார் நம்பி வா

E-Maj/Disco/T-120

1098. மறுரூபம் மறுரூபம் மறுரூபமே

மறுரூபம் மறுரூபம் மறுரூபமே
மகிமையானதோர் அனுபவமே
மாம்ச சாயல் முற்றும் மாறிடுமே
மகிபனின் சாயல் வந்திடுமே

எங்கள் தேவனே இயேசு இராஜனே
எம்மை ஆட்கொண்ட தெய்வமே
இந்த நாளிலே இந்த வேளையிலே
என்னை மறுரூபமாக்கிட வாருமே

1. எழுப்புதல் வேகம் எழும்பச்செய்வது
கருத்தான ஜெபத்தின் மறுரூபம்
ஆத்தும பாரத்தால் மன்றாடி ஜெபிப்பது
உத்தம கிறிஸ்தவனின் மறுரூபம்

2. சங்கீதங்கள் பாடி உணர்வுள்ள உள்ளத்தால்
ஆவியில் நிறைவது மறுரூபம் சமயம்
வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்
சாட்சி பகர்வது மறுரூபம் -எங்கள்

3. சின்னஞ்சிறு தவறோ ரகசிய பாவமோ
செய்யாதிருப்பது மறுரூபம்
சிந்தனையில் பரிசுத்தம் காத்துக்கொள்வதே
தனிப்பட்ட வாழ்வின் மறுரூபம்

4. காண்போர் வியந்திட அனுதின வாழ்வில்
அன்பினைக்காட்டுவது மறுரூபம்
துரோகம் செய்தவனை சிநேகிதன் என்பது
சமுதாயம் போற்றும் மறுரூபம்

1099. நான் நிற்பதும்

நான் நிற்பதும் நிர்மூலமாகாததும்
தேவ கிருபையே-நான் உயிருடன்
வாழ்வதும் சுகமுடன் வாழ்வதும் கிருபையே

கிருபையே தேவ கிருபையே
தேவ கிருபையே தேவ கிருபையே

1. காலையில் எழுவதும் கர்த்தரை துதிப்பதும்
மாலையில் காப்புடன் இல்லம்
வருவதும் கிருபையே
போக்கிலும் வரத்திலும்
தொலைதூர பயணத்திலும்
பாதம் கல்லிலே இடறாமல்
காப்பதும் கிருபையே

2. அக்கினி நடுவினிலே-என்னை
எறிந்திட நேர்ந்தாலும் தூதனாக நின்று
என்னை காப்பதும் கிருபையே-ஆழியின்
நடுவினிலும் சீறிடும் புயலினிலும்
நீர்மேல் நடந்து வந்து
என்னை காப்பதும் கிருபையே

3. கண்ணீர் கவலைகளில் கஷ்ட
நஷ்டங்களில் துஷ்டனின் கைக்கு
விலக்கி காப்பதும் கிருபையே
ஆற்றி தேற்றியே அரவணைத்திடும்
மாபெரும் கிருபையே
எங்கள் தேவனின் கிருபையே

F-Min/BluesRock/T-120

1100. நம்புவேன் இயேசுவை

நம்புவேன் இயேசுவை நம்புவேன் - (2)
இயேசு என் பெலனும் மீட்புமானார்
இயேசு என் கன்மலை கோட்டையானார்

1. நேசிப்பேன் இயேசுவை நேசிப்பேன-2
ஒப்பற்ற என் செல்வம் இயேசு தானே
ஓயாமல் அவர் புகழ் பாடிடுவேன்-2

2. வாழுவேன் இயேசுவுக்காகவே-2
அவியின் வல்லமையில் நிரம்பிடுவேன்
அல்லேலூயா துதிப்பாடி ஆர்ப்பரிப்பேன்

3. வெல்லுவேன் சாத்தானை வெல்லுவேன்-4
சாத்தானின் சேனைகளை வென்றிடுவேன்
வெற்றி கீதம் பாடி பாடி மகிழ்ந்திருப்பேன்

1101. நன்றி நன்றி நன்றி

நன்றி நன்றி நன்றி என்று துதிக்கிறேன்
நல்லவரே உம் நன்மைகளை நினைக்கிறேன்

நன்றி ஐயா நன்றி ஐயா - இயேசையா

1. தகுதியில்லா அடிமை
என்னை அணைக்கிறீர்
தாங்கி தாங்கி வழி நடத்தி மகிழ்கின்றீர்
அதிசயங்கள் ஆயிரம்
அன்பரே உம் கரங்களிலே

2. பெலவீனம் நீக்கி தினம் காக்கின்றீர்
பெரும் பெரும் காரியங்கள் செய்கின்றீர்
தீமையான அனைத்தையும்
நன்மையாக மாற்றுகிறீர்

3. உணவு உடை தினம் தந்து மகிழ்கின்றீர்
உண்மையான நண்பர்களை
தருகின்றீர் நன்மையான ஈவுகள்
நாள்தோறும் தருபவரே

4. கதறி அழுத நேரமெல்லாம் தூக்கினீர்
கருவியாக பயன்படுத்தி வருகின்றீர்
கண்மணிபோல் காப்பவரே
கைவிடாமல் மேய்ப்பவரே

E-Min/Swing Reggae/T-105

1102. நமஸ்காரம் தேவனே

நமஸ்காரம் தேவனே நமஸ்காரமே
நமஸ்காரம் தேவனே நமஸ்காரமே

1. மலர்களை படைத்தவரே நமஸ்காரமே
மலைகளை உடைத்தவரே நமஸ்காரமே

2. புயல் காற்றை தடுத்தவரே நமஸ்காரமே
போர்படை அமைத்தவரே நமஸ்காரமே

3. எரிகோவை இடித்தவரே நமஸ்காரமே
எகிப்தை வென்றவரே நமஸ்காரமே

4. வெற்றியை தருபவரே நமஸ்காரமே
பற்றியே எரிபவரே நமஸ்காரமே

5. எனக்குள்ளே இருப்பவரே நமஸ்காரமே
யெகோவா தெய்வமே நமஸ்காரமே

6. எலியாவை எடுத்தவரே நமஸ்காரமே
எலிசாவை கொடுத்தவரே நமஸ்காரமே

7. குருடரை தொட்டவரே நமஸ்காரமே
வியாதியை நீக்கினீரே நமஸ்காரமே

1103. நன்றி பலிபீடம் கட்டுவோம்

நன்றி பலிபீடம் கட்டுவோம்
நல்ல தெய்வம் நன்மை செய்தார்
செய்த நன்மை ஆயிரங்கள்
சொல்லி சொல்லி பாடுவேன்

நன்றி தகப்பனே நன்மை செய்தீரே-2

1. ஜீவன் தந்து நீர் அன்புகூர்ந்தீர்
பாவம் நீங்கிட கழுவிவிட்டீர்
உமக்கென்று வாழ பிரித்தெடுத்து
உமது ஊழியம் செய்ய வைத்தீர்

2. சிறந்த முறையிலே குரல் எழுப்பும்
சிலுவை இரத்தம் நீர் சிந்தினீரே
இரத்தக் கோட்டைக்குள் வைத்துக் கொண்டு
எதிரி நுழையாமல் காத்துக்கொண்டீர்

3. இருளின் அதிகாரம் நீக்கி விட்டீர்
இயேசு அரசுக்குள் சேர்த்துவிட்டீர்
உமக்கு சொந்தமாய் வாங்கிக் கொண்டு
உரிமைச் சொத்தாய் வைத்துக் கொண்டீர்

4. பார்க்கும் கண்களை தந்தீரய்யா
பாடும் உதடுகள் தந்தீரய்யா
உழைக்கும் கரங்களை தந்தீரய்யா
ஓடும் கால்களை தந்தீரய்யா

5. இருக்க நல்ல ஒரு வீடு தந்தீர்
வாழத் தேவையான வசதி தந்தீர்
கடுமையாக தினம் உழைக்க வைத்தீர்
கடனே இல்லாமல் வாழ வைத்தீர்

D-Min/8 Beat Pop/T-115

1104. நன்றி சொல்லாமல் இருக்கவே

நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது
பல நன்மை செய்த இயேசுவுக்கே
நன்றி நன்றி நன்றி என்று
சொல்லி நான் துதிப்பேன்
நாள்தோறும் போற்றுவேன-2

1. எத்தனையோ நன்மைகளை என் வாழ்வில்
செய்தாரே எராளமாய் நன்றி சொல்வேன்
அத்தனையும் நினைத்து நினைத்து
நான் துதிப்பேன் ஆண்டவரை போற்றுவேன்

2. மரண பள்ளத்தாக்கில் நான் நடக்கும்
போதெல்லாம் பாதுகாத்தீரையா
மீண்டும் ஜீவனை கொடுத்து
நீர் என்னை வாழ வைத்தீரையா

3. தேவன் அருளிய சொல்லிமுடியாத
ஈவுகளுக்காய் ஸ்தோத்திரம்
அளவிலா அவரின் கிருபைகளுக்காய்
ஆயுள் முழுதும் ஸ்தோத்திரம்

D-Maj/Disco/T-120

1105. சருவ லோகாதிபா, நமஸ்காரம்

1. சருவ லோகாதிபா, நமஸ்காரம்
சருவ சிருஷ்டிகனே, நமஸ்காரம்
தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
தயாபர பிதாவே நமஸ்காரம

2. திரு அவதாரா, நமஸ்காரம்
ஜெகத்திரட்சகனே, நமஸ்காரம்
தரணியின் மனுடர் உயிர் அடைந்தோங்கத்
தருவினில் மாண்டோய் நமஸ்காரம்

3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்
பரம சற்குருவே, நமஸ்காரம்
அரூபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே சதா நமஸ்காரம்

4. முத்தொழிலோனே, நமஸ்காரம்
மூன்றிலொன்றோனே, நமஸ்காரம்
கர்த்தாதி கர்த்தா, கருணா சமுத்திரா
நித்ய திரியேக , நமஸ்காரம்

1106. நன்றி நன்றி என்று(2)

நன்றி நன்றி என்று(2)
நாள்முழுதும் துதிப்பேன்
நாதா உம்மைத் துதிப்பேன்

1. காலையிலும் துதிப்பேன்
மாலையிலும் துதிப்பேன்
மதியத்திலும் துதிப்பேன்
இரவினிலும் துதிப்பேன்

2. உண்ணும் போதும் துதிப்பேன்
உறங்கும் போதும் துதிப்பேன்
அமரும் போதும் துதிப்பேன்
நடக்கும் போதும் துதிப்பேன்

3. வாழ்த்தும் போதும் துதிப்பேன்
தாழ்த்தும் போதும் துதிப்பேன்
நெருக்கத்திலே துதிப்பேன்
பிறர் வெறுக்கும்போதும் துதிப்பேன்

4. சகாயரே தயாபரரே
சிநேகிதரே என் சிருஷ்டிகரே

5. சத்தியமே என் நித்தியமே
என் ஜீவனே நல் ஆயனே

6. உன்னதரே உயர்ந்தவரே
என் பரிகாரியே ப-யானீரே

1107. நம்பாத நம்பாத

நம்பாத நம்பாத
நண்பர்களை நம்பாத - 2

1. நாங்க இருக்கிறோம் என்று சொல்வார்கள்
பிரச்சனை வந்தா ஓடி போவார்கள் (2)

2. அண்ணன் என்பார்கள், தம்பி என்பார்கள்
பிரச்சனை வந்தா ஓடி போவார்கள் (2)

நம்பிடு நம்பிடு இயேசுவையே நம்பிடு -2

1108. நீ மலைமேல் உள்ள

நீ மலைமேல் உள்ள பட்டணம்
மறைந்து வாழாதே
நீ மறைந்திருக்கும் காலமல்ல
எழும்பி பிரகாசி -

1. உலகின் ஒளியாய் வாழ
தேவன் உன்னை அழைத்தார்
அவர்க்காய் சாட்சியாய் வாழ
தேவன் உன்னை அழைத்தார்
கர்த்தரே தேவன் என்று ஜாதிகள்
அறிந்திட சாட்சியாய் நீ வாழ்வாய்

2. அழிகின்ற ஜனங்களை மீட்க
தேவன் உன்னை அழைத்தார்
திறப்பின் வாசலில் நிற்க
தேவன் உன்னை அழைத்தார்
அறுவடை மிகுதி வேலையாள்
குறைவு தேவ ஊழியம் செய்வாய்

3. இருளின் அதிகாரம் உடைக்க
வல்லமை உனக்களித்தார்
பூமியில் அக்கினியை இறக்க
வரங்களை உனக்களித்தார்
பாதாளத்தை வெறுமையாக்கி பரலோகத்தை
நிரப்ப திறவுகோல் உனக்களித்தார்

1109. நேற்றும் இன்றும் என்றும்

1. நேற்றும் இன்றும் என்றும்
மாறா தேவா ஸ்தோத்திரம்
நேசம் பாசம் அன்பில்
மாறாதேவா ஸ்தோத்திரம்
அற்புதமானவர் அதிசயமானவர்
செயல்களிலே மிக மகத்துவமானவரே ...

ஸ்தோத்தரிப்போம் நாம் ஸ்தோத்தரிப்போம்
துதிபாத்திரை நாம் ஸ்தோத்தரிப்போம்
ஸ்தோத்திர பலிகளை உதடினிலே சொல்லி
ஊக்கமாக நாம் ஸ்தோத்தரிப்போம்

2. அகில உலகை ஆண்டுகொண்ட
ராஜா ஸ்தோத்தரிப்போம் ஆயிரம் ஆயிரம்
சேனைகளுடைய ராஜா ஸ்தோத்தரிப்போம்
உன்னதமானவர் உலகில் உயர்ந்தவர்
யுத்தத்திலே மிக வல்லமையுள்ளவரே ...

ஆர்ப்பரிப்போம் நாம் ஆர்ப்பரிப்போம்
மகிப்பெரியவரை நாம் ஆர்ப்பரிப்போம்
உலகில் உள்ள சாத்தானை ஜெயங்
கொண்டவரை நாம் ஆர்ப்பரிப்போம்

3. இன்றும் என்றும் ஜீவிக்கின்ற
உயிரே ஸ்தோத்தரிப்போம் இருக்கின்றவராய்
இருக்கின்றவரே உமக்கே ஸ்தோத்தரிப்போம்
சாவை வென்றவர் சர்வவல்லவர்
சகலமும் செய்ய வல்லமையுள்ளவரே...

துதித்திடுவோம் நாம் துதித்திடுவோம்
உயிருள்ளவரை நாம் துதித்திடுவோம்
உலகிச் முடிவு பரியந்தம் - நம்
உடனுள்ளவரை துதித்திடுவோம்

1110. ஊற்றிடுமே உம் வல்லமை

ஊற்றிடுமே உம் வல்லமையை
இந்த நாளில் எங்கள் மேலே
ஊற்றிடுமே உம் அக்கினியை
இந்தநாளிலே எங்கள் மேலே வல்லமையோடே

வல்லமை வல்லமை தாருமே
தேசத்தை உமக்காக கலக்கிட
அபிஷேகம் அபிஷேகம் ஊற்றுமே
அனல் கொண்டு உமக்காக எழும்பிட

1. பெந்தகோஸ்தே நாளில் செய்தது
போல அக்கினியின் நாவுகள் பொழிந்திடுமே
அப்போஸ்தலர் நாட்களில் செய்தது போல
இன்றும் செய்ய வேண்டுமே

2. மாம்சமான யாவர் மேலும் ஊற்றவேனென்று
வாக்குத்தந்த ஆவியை ஊற்ற வேண்டுமே
நீச்சல் ஆழம் கொண்டு சென்று
நீந்தச் செய்யுமே நதியாய்ப பாய்ந்திடுமே

3. அற்புதங்கள் திரளாய் நடந்திடவே
அற்புதத்தின் ஆவியே வந்திடுமே
அந்தகார சங்கிலிகள் அறுந்திடவே
அக்கினியை ஊற்றிடுமே

1111. ஒரு குற்றம் கூட செய்யாத

ஒரு குற்றம் கூட செய்யாத ஒரே ஒரு
தெய்வம் இயேசு மட்டும் தான் (2)
தன் எதிரிகளுக்காய் உயிரை கொடுத்த
ஒரே ஒரு தெய்வம் இயேசு மட்டும் தான் (2)

1. கடலின் மீது தரையைப்போல
நடந்த அதிசய தெய்வம்(2)
பூட்டப்பட்ட வீட்டுக்குள்ளே
கடந்துவந்த தெய்வம(2)

2. எங்கும் நிறைந்த எல்லாம் நிறைந்த
எல்லாம் வல்ல தெய்வம்(2)
உலகத்தை படைத்தவா்
வணக்கத்துக்குரியவா்
ஒரே ஒரு தெய்வம்(2)

3. பச்சைத் தண்ணிய பழரசமாக்கி
பரவசப்படுத்திய தெய்வம்(2)
மேல் ஜாதி கீழ் ஜாதி
வித்தியாசம் பாா்க்காத
ஒரே ஒரு தெய்வம்(2)

4. செத்துப்போன உடலுக்குள்ளே
உயிரை வைத்த தெய்வம(2)
ஆதரவில்லா அனாதைகட்கு
அடைகலமான தெய்வம்(2)

1112. ஓசன்னா பாடுவோம் இயேசுவின

ஓசன்னா பாடுவோம் இயேசுவின் தாசரே
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா

1. முன்னும் பின்னும் சாலேம் நகர்
சின்ன பாலர் பாடினார்-அன்று போல
இன்றும் நாமும் அன்பாய்த் துதி பாடுவோம்

2. சின்ன மறி மீதில் ஏறி, அன்பர்
பவனி போனார்-இன்னும் என்
அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்

3. பாவமதைப் போக்கவும் இப்பாவியைக்
கைதூக்கவும்-பாசமுள்ள
ஏசையாப் பவனியாகப் போகிறார்

4. பாலகர்களின் கீதம் கேட்டுப் பாசமாக
மகிழ்ந்தார்-ஜாலர் வீணையோடு
பாடித் தாளைமுத்தி செய்குவோம்

5. குருத்தோலை ஞாயிற்றில் நம்
குருபாதம் பணிவோம்-கூடி அருள் பெற்று
நாமும் த்ரியேகரைப் போற்றுவோம்

D-Maj/Disco Fusion/T-125

1113. பாவங்கள் போக்கவே

பாவங்கள் போக்கவே சாபங்கள்
நீக்கவே பூவுலகம் வந்தாரையா
மனிதரை மீட்கவே பரலோகம் திறக்கவே
சிலுவையை சுமந்தாரையா-கண்ணீரை
துடைத்தாரையா சந்தோஷம் தந்தாரையா

எந்தன் இயேசுவே - 4

1. தங்கத்தை கேட்கவில்லை வைரத்தை
கேட்கவில்லை உள்ளத்தை கேட்டாரையா
ஆஸ்தியை கேட்கவில்லை அந்தஸ்தை
கேட்கவில்லை உள்ளத்தை கேட்டாரையா
நான் தேடி போகவில்லை
என்னை தேடி வந்தாரையா

எநதன் இயேசுவே - 4

2. தாய் உன்னை மறந்தாலும்
தந்தை உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்
நண்பன் உன்னை மறந்தாலும்
உற்றார் உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்
கரம்பிடித்து நடத்திடுவார்
கன்மலைமேல் நிறுத்திடுவார்

எந்தன் இயேசுவே - 4

1114. பாடல் பாடி மகிழ்வேனே

பாடல் பாடி மகிழ்வேனே துதி அல்லேலூயா
பாவி என்னை மீட்டாரே துதி அல்லேலூயா
பாரில் வந்தாரே தந்தாரே
அன்பால் மீட்டாரே-பரிசுத்தரை
நித்தியரை பாடி போற்றுவேன் - 2

ஆலே... லூயா... பாடுவேன் நான் - 3

1. மகிமையின் ராஜா அவர்
மகத்துவம் நிறைந்தவர்
மனமெல்லாம் நிறையுதே
மகிழ்ச்சியில் சிலிர்க்குதே

2. கனிவான மேய்ப்பன் அவர்
கண்மனி போல் காப்பார் அவர்
கீதங்களால் ஆராதிப்பேன்
ஐக்கியத்தில் ஆனந்திப்பேன்

3. நீதியுள்ள நீதிபரர்
மேகமதில் வந்திடுவார்
நித்தியானந்த வாழ்வினையே
எனக்காக தந்திடுவார்

1115. உங்க முகத்தை பார்க்க

உங்க முகத்தை பார்க்கணுமே
இயேசய்யா - 4
அல்லேலூயா - 4

1. எந்தன் பாடுகள், வேதனை மறைந்து விடும்
எந்தன் துயரங்கள் கலக்கங்கள் மாறிவிடும்

2. யோர்தானின் வெள்ளங்கள் விலகிவிடும்
எரிகோவின் மதில்களும் இடிந்துவிடும்

3. எங்கள் தேசத்தின் கட்டுகள் முறிந்து விடும்
எங்கள் சபைகளில் எழுப்புதல் பரவி விடும்

1116. பரலோக தேவனே

பரலோக தேவனே-உம்மை
ஆராதனை செய்கிறோம்
பரலோக ராஜனே-உம்மை
ஆராதனை செய்கிறோம்

உமது அன்பின் கரங்களை
நான் கண்டேனே-3

1. மோசேயின் தேவனே
என்னை வழிநடத்திடுமே-4

2. யோசுவாவின் தேவனே
எங்கள் மதில்களை நொறுக்குவீர்-4

3. தேவாதி தேவனே-உம்மை
ஆராதனை செய்கிறோம்

4. ராஜாதி ராஜனே-உம்மை
ஆராதனை செய்கிறோம்

1117. பரலோகத்தில் வாழும்

பரலோகத்தில் வாழும் பரமேஷ்வரா
பரிசுத்தமாய்வாழும் பவித்ரேஷ்வரா
உலகிற்கு ஒளியான ஜோதிஷ்வரா-இயேசு
ராஜேஷ்வரா மன சாந்திஷ்வரா

அன்பின் ஜுவலையே
ஆசீர்வதியும் அரவணையும்
ஆன்மீகத் தீபமே

1. சாபத்தை சுட்டெரிக்கும் அக்னிஷ்வரா
நோய்நீக்கி பேயோட்டும் வைத்திஷ்வரா
பாவிக்கு மறுவாழ்வாம் ரக்ஷேஸ்வரா
காருண்யேஷ்வரா...மகா ஈஷ்வரா...

2. அனைத்திற்கும் மேலான சர்வேஷ்வரா
அகிலாண்டம் படைத்தாளும் பிரமேஷ்வரா
மரித்தபின்பு உயிர்தெழுந்த ஜீவேஷ்வரா
முக்தீஷ்வரா...சர்வசக்தீஷ்வரா...

1118. பரிசுத்த ஆவியே

பரிசுத்த ஆவியே வாருமையா
பரலோக பலத்தால் நிரப்புமையா –2

1. அனுதின வாழ்வில் பரிசுத்தனாக
விளங்கிட எந்தனுக்குதவுமையா
அனலாவியாலே அடியேனை நிரப்பி –2
அக்கினி பிளம்பாய் மாற்றுமையா

2. உன்னத நோக்கம் உயர்ந்ததோர் வாழ்வு
உயர்வான லட்சியம் தாருமையா –2
உலகினை மறந்து உந்தனை நோக்கி
அனுதினம் ஓடிட உதவுமையா –2

3. பாரத தேசம் உந்தனைக் காண
பரந்ததோர் தரிசனம் தாருமையா –2
பரலோக தேசத்தை பாரத புதல்வன்
சுதந்திரம் ஆக்கிட உதவுமையா –2

G-Maj/Disco/T-120

1119. பிரசன்னம் தாரும்

பிரசன்னம் தாரும் பிரசன்னம்
பிரசன்னம் தேவ பிரசன்னம்

1. இன்ப பிரசன்னம்
இன்னல் போக்கும் பிரசன்னம்
நேற்றும் இன்றும் என்றும் மாறா
தேவ பிரசன்னம்

2. வல்ல பிரசன்னம்
வழிகாட்டும் பிரசன்னம்
வாழ்கை எங்கும் ஒளி வீசும்
தேவப் பிரசன்னம்

3. ஜீவ பிரசன்னம்
தாகம் தீரக்கும் பிரசன்னம்
ஜீவத்தண்ணீர் பொங்கி வரும்
தேவ பிரசன்னம்

1120. பிதாவே நன்றி

பிதாவே நன்றி சொல்கிறோம்
இயேசுவே நன்றி சொல்கிறோம்
தூய ஆவியே எங்கள் தெய்வமே
நன்றி சொல்கிறோம்-துதி
ஆராதனை செய்கிறோம்

1. தேவன் அருளிய சொல்லிமுடியா
ஈவுக்கு ஸ்தோத்திரம்-நீர் செய்த எல்லா
நன்மைக்கும் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
எண்ணி முடியா அதிசயங்கள்
செய்தவரே ஸ்தோத்திரமே

2. நேசரே என்மேலே என்றும்
பிரியம் வைத்தீரே-அகலம் ஆழம்
எந்த அளவுமில்லா அன்பு காட்டினீரே
இரக்கத்திலும் கிருபையிலும்
அனுதினமும் முடிசூட்டினீரே

3. கடந்த நாட்களில் கண்மணிபோல
பாதுகாத்தீரே-சோதனையில் என்னை
தேற்றியே தைரியப்படுத்தினீரே
தீராத நோய்களெல்லாம்
தழும்புகளால் சுகப்படுத்தினீரே

4. சகல ஆசீர்வாதங்களாலே ஆசீர்வதித்தீரே
குறைகளெல்லாம் நிறைவாக்கினீர்
செழிப்பாய் என்னை மாற்றினீர்
மனக்கவலை தீர்த்தீரே
மகிழ்ச்சியினால் நிரப்பினீரே

1121. பொன்னான நேரம்

பொன்னான நேரம் விண்பணி தூவும் நேரம்
தொழுவத்தில் வந்துதித்தார் இயேசு பாலன்

1. பாவத்தின் சஞ்சலம் பறந்தோடிப் போக
பேரின்ப ரட்சிப்பை புவி எங்கும் சேர்க்க
பிறந்து வந்தார் உலகை ஜெயிக்க வந்தார்

அல்லேலூயா பாடுவோம்
மேய்ப்பரை வாழ்த்துவோம்-(2)

2. உண்மையின் ஊழியம் செய்திடவே
வானவர் இயேசு பூமி வந்தார் மன்னவர்
வருகின்றார் நம் மேய்ப்பர் வருகின்றார்-2

அல்லேலூயா பாடுவோம்
மைந்தனை வாழ்த்துவோம்-(2)

3. வானமும் பூமியும் வண்ணமும் படைத்த
மேகத்தில் ஒளியை பரப்பினாரே-இருளை
அகற்றுவார் நம்மை ரட்சித்து நடத்துவார்

அல்லேலூயா பாடுவோம்
மேய்ப்பரை வாழ்த்துவோம்-(2)

E-Maj/Rock Balled/T-95

1122. உங்க நேசம் பெரியது

உங்க நேசம் பெரியது
இயேசுவின் நேசம் பெரியது
அது அளவிட முடியாதது
அது பாரபட்சம் இல்லாதது

1. தாழ்மையில் இருந்த என்னை
கண்ணோக்கி பார்த்த நேசம்

2. உலகத்தின் நேசமெல்லாம்
மாயை மாயை தானே

3. என் நேசரின் நேசத்தினால்
என் உள்ளமெல்லாம் பொங்குதைய்யா

1123.ராஜாதி ராஜன் யேசு

ராஜாதி ராஜன் யேசு யேசு மகாராஜன்- அவர்
ராஜ்யம் புவியெங்கு மகா மாட்சியாய் விளங்க
அவர் திரு நாமமே விளங்க(2)

அல்லேலூயா(3)
அல்பா, ஒமேகா, அவர்க்கே
அல்லேலூயாவே

1. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாக கூடுங்கள்
மன்னன் யேசு நாதருக்கே வான்முடி சூட்டுங்கள்

2. நாலாதேசத் திலுள்ளோரே நடந்து வாருங்கள்
மேலோனேசு நாதருக்கே மெய் முடி சூட்டுங்கள்

3. நல்மனதோடு சொல்கிறேன் நாட்டார்களேநீங்கள்
புன்னகையொடு நிற்பானேன் பூமுடி சூட்டுங்கள்

4. இந்த நல் தேசத்தார்களே ஏகமாய் கூடுங்கள்
சிந்தையில் மகிழ்வடைந்தே செம்முடிசூட்டுங்கள்

5. குற்ற மில்லா பாலகரே கூடி குலாவுங்கள்
வெற்றி வேந்த ரேசுவுக்கே வெண்முடிசூட்டுங்கள்

6. யேசு வென்ற நாமத்தையே எல்லாரும்பாடுங்கள்
ராசாதிராசன் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்

7. சகல கூட்டத்தார்களே சாஷ்டாங்கம்செய்யுங்கள்
மகத்வ ராசரிவரே மாமுடி சூட்டுங்கள்

1124.ராஜாதி ராஜனாம்

ராஜாதி ராஜனாம்(2)
தேவாதி தேவனாம் (2)
உம்மைப் போற்றி போற்றியே
என்றும் வாழ்த்துவோம் - 2

1. முழங்கால் யாவும் என்றும் முடங்கட்டும்
நாவுகள் உம்மை என்றும் துதிக்கட்டும்
சத்துரு கோட்களை என்றும் உடையட்டும்

யாவரும் உயர்த்தி பாடுவோம்
தேவ ராஜனே

2. தேவனின் நாமத்தை உயர்த்துவோம்
சபைகள் எல்லாம் ஒன்றாக வளரட்டும்
பாரம்பரிய கட்டுகள் எல்லாம் உடையட்டும்

யாவரும் உயர்த்தி பாடுவோம்
தேவ ராஜனே

1125.சகல ஜனங்களே கைகொட்டி

சகல ஜனங்களே கைகொட்டி தேவனை
கெம்பீர சத்தத்தோடே ஆர்ப்பரித்திடுவோமே-2

1. உன்னதமானவராகிய கர்த்தர்
எந்நாளும் அதிசயமானவராமே
மன்னனும் மகத்துவமான ராஜாவாம்
மகிழ்ந்து பாடிடுவோம்-2

2. போற்றி போற்றி பாடிடுவோமே
நம்மை காத்திடும் தேவனை
ஊற்றிடுவாரே ஆவிதனையே
சாற்றிடுவோம் துதியை-2

3. தாழ்வில் நம்மை நினைத்த தேவனை
வாழ்நாள் முழுவதும் வாழ்த்தியே துதிப்போம்
துதிகளின் பாத்திரன் தூயாதி தூயோனை
துதித்து உயர்த்திடுவோம்-தேசத்தில்

E-Maj/Waltz/T-140

1126.சாலேமின் ராஜா

1. சாலேமின் ராஜா சங்கையின் ராஜா
சுவாமி வாருமேன் இந்தத் தாரணி மீதினில்
ஆளுகை செய்திடச் சடுதி வாருமேன்

2. சீக்கிரம் வருவேனென்றுரைத்துப்
போன செல்வக் குமாரனே
இந்த சீயோனின் மாதுகள்
தேடித்திரிகின்ற செய்தி கேளீரோ

3. எட்டி எட்டி உம்மை அண்ணாந்து
பார்த்துக் கண் பூத்துப் போகுதே நீர்
சுட்டிக்காட்டிப் போன வாக்குத்தத்தம்
நிறைவேறலாகுதே

4. சாட்சியாகச் சுபவிசேஷம் தாரணிமேவுதே
உந்தஞ் சாட்சிகளுடைய
இரத்தங்களெல்லாம் தாவிக்கூவுதே

5. நங்கை எருசலேம்பட்டிணம் உம்மை
நாடித்தேடுதே இந்த நானிலத்திலுள்ள
ஜீவப்பிராணிகள் தேடி வாடுதே

1127.சந்தோஷம் என்னுள்ளில்

சந்தோஷம் என்னுள்ளில் சந்தோஷம்
என் இயேசு வந்தால் சந்தோஷம் - 2
அல்லேலூயா - 3 ஆமென்

1. பாவம் போக்கினதால் சந்தோஷம்
என் சாபம் நீக்கினதால் சந்தோஷம் - 2

துதித்துப் பாடிடு கைதட்டி ஆடிடு
எல்லோரும் கொண்டாடுவோம்

2. கண்ணீரை மாற்றினதால் சந்தோஷம்
எனக்கு களிப்பை தந்ததால் சந்தோஷம் - 2

3. என்னையும் அழைத்தார் சந்தோஷம்
புதிய வாழ்வைக் கொடுத்தார் சந்தோஷம் - 2

4. பரலோகம் செல்வேக் சந்தோஷம்
பரனோடு வாழ்வேன் சந்தோஷம் - 2

F-Maj/Hard Rock/T-140

1128. சரித்திரம் படைப்போம்

சரித்திரம் படைப்போம் வாருங்கள்
சரித்திர நாயகர் முன் செல்கிறார்
சர்வ வல்லவர் கர்த்தாவே அவர்
என்றென்றும் அவர் நம்முடனே

1. மனிதனாய் மனிதன் வாழ்ந்திடவே
மருறுப அனுபவம் தேவை என்றார்
மன்னவர் இயேசுவின் ஆளுகையால்
மானிடர் ரூபம் மாறிடுமே

2. தேவனின் அழைப்புக்கு அடிப்பணிந்தே
பாவ உலகை அசைத்திடுவோம்
இந்தியர் இயேசுவை அறியும் வரை
இணைந்தே உழைப்போம் ஜெயம் பெறுவோம்

3. கர்த்தரில் வைராக்கியம் நாம் பெறுவோம்
கருத்துடன் செயலில் முனைந்திடுவோம்
இயேசு ராஜா என்றும் துணை
எதிரியின் ஆயுதம் வாய்திடாதே

1129. சர்வ சிருஷ்டிக்கும்

சர்வ சிருஷ்டிக்கும் தேவனே
சர்வ சிருஷ்டியை ஆளுபவரே
சர்வ சிருஷ்டியை காப்பவரே

ஆராதனை உமக்கே-துதி
ஆராதனை உமக்கே

உம்மை மகிமை படுத்துகிறோம்
உமக்கு மகிமை செலுத்துகிறோம்
மகிமை மகிமையே

1. நீரே சர்வ வல்லவர் வல்லவர்
நீரே சாவாமை உடையவரே உடையவர்

வானம் பூமி அனைத்திற்கும் - மகா
ராஜாதி ராஜனும் நீரே

2. நீரே கர்த்தாதி கர்த்தர் கர்த்தரே
நீரே ராஜாதி ராஜாவே ராஜாவே

1130. சத்ருவின் கோட்டையை

சத்ருவின் கோட்டையை தகர்த்தெரிய
யூதா முதலில் செல்லட்டுமே -2
நம் தேசத்தின் நுகத்தை முறித்தெறிய
துதிக்கும் வீரர் எழும்பட்டுமே -2

யூதாவின் செங்கோல் துதியின்
ஆளுகை நம் தேவனின்
இராஜ்ஜியம் என்றும் துதியின் இராஜ்ஜியம்

1. யூதாவே நீ எழுந்து துதி
தேவ சமூகம் உன்னோடு தான்
துதிப்பதற்கே நீ அழைக்கப்பட்டாய்
துதி அபிஷேகம்உன்னோடு தான் - 2

2. யூதாவே நீ சகோதரரால்
புகழப்படுவாய் என்றும்
உன் கரம் உன் சத்துருவின்
பிடரியின் மேலிருக்கும்

3. சமாதானத்தின் தேவனவர்
உன்னை விட்டு நீங்கமாட்டார்
ஜாதிகளும் ஜனங்களுமே
உன்னிடத்தில் சேர்த்திடுவார்

G-Maj/16 Beat/T-90

1131. சீர் ஏசு நாதனுக்கு

சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம் அதி
திரியேக நாதனுக்குசுப மங்களம்
பாரேது நீதனுக்கு பரமபொற்பாதனுக்கு
நேரேது போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு

1. ஆதி சருவேசனுக்கு ஈசனுக்கு மங்களம்
அகிலப் பிராகாசனுக்குஇ நேசனுக்கு மங்களம்
நீதி பரன் பாலனுக்கு நித்திய குணாளனுக்கு
ஓதும் அனுகூலனுக்கு உயர் மனுவேலனுக்கு

2. மானாபி மானனுக்கு வானனுக்கு
மங்களம்-வளர் கலைக் கியானனுக்கு
ஞானனுக்கு மங்களம்
கானான் நல் நேயனுக்குக்
கன்னி மரிசேயனுக்கு கோனார்
சகாயனுக்குக் கூறு பெத்தலேயனுக்கு

3. பத்து லட்ச ணத்துனுக்குஇ சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்
சத்திய விஸ்தாரனுக்குச் சருவாதிகாரனுக்கு
பக்தர் உபகாரனுக்குப் பரம குமாரனுக்கு

F-Maj/16 Beat/T-100

1132. சீர்மிகு வான்புவி

1. சீர்மிகு வான்புவி தேவா தோத்திரம்
சிருஷ்டிப்பு யாவையும்
படைத்தாய் தோத்திரம்
ஏர்குணனே தோத்திரம் அடியார்க்கு
இரங்கிடுவாய் தோத்திரம் மா நேசா

2. நேர் மிகு அருள் திரு அன்பா தோத்திரம்
நித்தமுமுமக் கடியார்களின் தோத்திரம்
ஆர் மணனே தோத்திரம் உனது
அன்பினுக்கே தோத்திரம் மா நேசா

3. ஜீவன் சுகம் பெலன் யாவுக்கும் தோத்திரம்
தினம் தினம் அருள் நன்மைக்காவும் தோத்திரம்
ஆவலுடன் தோத்திரம் உனது
அன்பினுக்கே தோத்திரம் மா நேசா

4. ஆத்தும நன்மைகட்காகவும் தோத்திரம்
அதிசய நடத்து தற்க்காகவும் தோத்திரம்
சாற்றுகிறோம் தோத்திரம் உனது
தகுமன்புக்கே தோத்திரம் மா நேசா

5. மாறாப் பூரண் நேசா தோத்திரம்
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்திரம்
தாராய் துணை தோத்திரம் இந்தத்
தருணமே கொடு தோத்திரம் மா நேசா

1133. சேனைகளாய் எழும்பு

சேனைகளாய் எழும்புவோம்
தேசத்தை கலக்கிடுவோம் - 2

வெற்றி உண்டு வெற்றி உண்டு - 2
இயேசுவின் நாமத்தில் வெற்றி உண்டு

1. எரிகோக்கள் எதிர்த்திட்டாலும்
கோலியாத்கள் எழும்பினாலும்-2
அல்லேலூயா அல்லேலூயா
ஆர்ப்பரித்து ஜெயம் பெறுவோம் - 2

2. செங்கடல்கள் தடுத்திட்டாலும்
யோர்தான் நதி பெருகிட்டாலும் - 2
அல்லேலூயா அல்லேலூயா
ஆர்ப்பரித்து மேற்கொள்ளுவோம் - 2

3. கானானியர் ஆக்ரமித்தாலும்
எகிப்தியர் நெருக்கிட்டாலும் - 2
அல்லேலூயா அல்லேலூயா
இந்தியாவை சுதந்தரிப்போம் - 2

F-Min/Slow Rock/T-125

1134.சேனைகளின் கர்த்தர் நம்மோ

சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்
யாக்கோபின் தேவன் நமக்கு
உயர்ந்த அடைக்கலம்

பூமிநிலை மாறினாலும்
மலைகள் பெயர்ந்து போனாலும்
பர்வதங்கள் அதிர்ந்தாலும்
நாம் பயப்படோம்

1. தேவன் பூமி அனைத்திற்கும் ராஜா
கருத்துடனே போற்றி பாடுவோம்
யூதராஜ சிங்கம் நம் கர்த்தர்-தாழ
விழுந்து பணிந்து தொழுதுவோம்

2. கர்த்தர் துதிகளில் பயப்படத்தக்கவர்
பயத்தடனே போற்றி பாடுவோம்
தமக்கு பயந்த பிள்ளைகளை காப்பவர்
அவர் கிருபையை நினைத்து போற்றி பாடுவோம்

3. தேவன் நமது இரட்சண்ய கன்மலை
ஆர்ப்பரித்து போற்றி பாடுவோம்
கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர்
ஆனந்தமாய் ஆர்ப்பரித்து பாடுவோம்

A-Min/Slow Rock/T-115

1135.சிலர் இரதங்களை

சிலர் இரதங்களை குறித்து
மேன்மை பாராட்டுவார்கள்
சிலர் குதிரையை குறித்து
மேன்மை பாராட்டுவார்கள் -

நாங்களோ (2) ஜீவ தேவனை குறித்தே
மேன்மை பாராட்டுவோம்
இயேசு கிறிஸ்துவை குறித்தே
மேன்மை பாராட்டுவோம்

1. அவர்கள் முறிந்து விழுந்தார்கள்
நாங்களோ எழுந்து நிற்கின்றோம்
ஜீவ தேவனை குறித்தே
மேன்மை பாராட்டுவோம்
ஜீவ ஆவியினாலே என்றும் நிறைந்திடுவோம்

2. நாங்கள் உமக்குள் மகிழ்ந்திருந்து
உமது நாமத்தில் கொடியேற்றுவோம்
ஜீவ தேவனை குறித்தே
மேன்மை பாராட்டுவோம்
ஜீவன் தந்தவரையே நாம் உயர்த்திடுவோம்

3. கர்த்தர் அபிஷேகம் செய்தவரை
வாழ் நாளெல்லாம் நடத்துகிறார்
ஜீவ தேவனை குறித்தே
மேன்மை பாராட்டுவோம்
அவர் வலது கரம் நம்மை நடத்திடுமே

1136.சோர்ந்து போகாதே

சோர்ந்து போகாதே என் நண்பனே
மனம் உடைந்து போகாதே என் பிரியனே
கடும் புயல் வரினும் காற்று வீசினும்
நீ கலங்காதே மனமே

இயேசு உன்னைட் தேற்றிடுவார்
இயேசு உன்னைக் காட்திடுவார்-இயேசு
உன்னை உயர்ட்துவார் நண்பனே (2)

1. என் ஆட்ம நேசர் முன் செல்கையில்
நான் என்றுமே அஞ்சிடேன்-2
என் கரம் பிடிட்து மகிமைதனில்
அவர் தினமும் நடட்துவார்

2. நண்பர் உன்னைக் கைவிட்டாலும்
நம்பினோர் உன்னைட் தள்ளிவிட்டாலும்
மனம் கலங்காதே திகையாதே
என் இயேசு இருக்கிறார்

C-Min/Slow Rock/T-120

1137.ஸ்தோத்திரமே ஸ்தோத்

ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
அப்பா அப்பா-உம் கிருபை
எனக்கு போதும் அப்பா

நல்லவரே வல்லவரே-(3)

1. கர்த்தரே என் கன்மலையும் கோட்டையுமானார்
இரட்சகரும் தேவனுமானார் நான்
நம்பின என் துருகமும் கேடகமானார்
என் இரட்சண்ய கொம்புமானார்

நல்லவரே வல்லவரே-(3)

2. தேவரீர் என் இருளை எல்லாம்
வெளிச்சமாக்கினீர் எனது விளக்கை
ஏற்றி வைத்தீர்-ஒரு சேனைக்குள்
பாய்ந்து போரிட செய்தீர்
மதிலை எல்லாம் தாண்டிட செய்தீர்

நல்லவரே வல்லவரே-(3)

3. உம்முடைய வலக்கரத்தால் என்னை
தாங்கினீர் உம் காருண்யத்தால்
பெரியவனானேன்-நான் செல்லுக்கின்ற
பாதையெல்லாம் அகலமாக்கினீர்
வலுவாமல் நடந்து செல்கிறேன்

நல்லவரே வல்லவரே-(3)

G-Maj/Waltz/T-140

1138.சோர்வான ஆவியை

சோர்வான ஆவியை நீக்கும்
துயர ஆவியை அகற்றும்
கண்ணீரின் மத்தியில் வாரும்
அப்பா வேண்டுகிறேன் -2

இயேசுவே இயேசுவே இயேசுவே
எல்லாம் எனக்கு நீரே

1. ஊழிய பாதையில் துன்பம்
விசுவாசிகளாலே நெருக்கம்
ஏன் இந்த ஊழியம் எனக்கு
உமக்காகத்தானே ஐயா-2

2. காத்திருந்து பெலன் பெறுவேன்
கழுகு போல பறப்பேன்
காகத்தின் வம்சம் நான் அல்ல
சிங்கத்தின் குட்டி நானே-2

3. வீடும் வாசலும் இல்லை
உற்றார் உறவினர் தொல்லை
எங்கே ஓடுவேன் நான்
உமது சமுகத்திற்கே-2

4. இரவெல்லாம் உறக்கமே இல்லை
வியாதியால் மனக்கவலை
தாங்குவோர் யாருமே இல்லை
நீரே பார்த்துக கொள்வீர்

1139.தந்தேன் என்னை இயேசுவே

தந்தேன் என்னை இயேசுவே
இந்த நேரமேயுமக்கே
உந்தனுக்கே ஊழியம் செய்ய
தந்தேன் என்னை தாங்கியருளும்

1. ஜீவ காலம் முழுவதும்
தேவப்பணி செய்திடுவேன்
பூவில் கடும் போர்புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில் வைத்து

2. கஷ்ட நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடி சூழ்ந்திட்டாலும்
அஷ்டபிக்கும் அளும் தேவனே
அடியேன் உம்மில் அமர செய்திடும

3. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சதித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்கு காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன

1140.தாயை போல தேற்றினீரே

தாயை போல தேற்றினீரே நன்றி ஐயா
தகப்பன் போல சுமந்தவரே நன்றி ஐயா
என் ஜீவனுள்ள நாளெல்லாம் மறவேன்

உம்மை இயேசையா இயேசையா
உம்மைபோல் ஒரு தெய்வம் இல்லை

1. உள்ளம் உடைந்து அழுத போதெல்லாம்
நீர் அன்போடு ஓடி வந்தீரே
என் அன்பான தேவன் நீரே (2)

2. வியாதிலே படுக்கும்போதெல்லாம்
என்னை தூக்கி எடுத்து குணமாக்கினீர்
என் பரிகாரியானவரே (2)

3. துன்ப துயர நேரத்தில் எல்லாம்
என்னை ஆற்றிதேற்றி அரவணைத்தீரே
என்னை தேற்றிடும் தெய்வம் நீரே (2)

G-Maj/Slow Rock/T-95

1141.தாங்கட்டுமே உம் கிருபை

தாங்கட்டுமே உம் கிருபை தேவனே
தனிமையில் நடக்கும் போதெல்லாம்என்
பெலவினத்தில் உம் கிருபை பூரணம்
என்மேல் இறங்கவேண்டுமே

தனிமையை நினைத்து அழும் நேரமெல்லாம்
தகப்பனே உம் கிருபை தாங்கணுமே

1. உமது சேவைக்காக அழைத்தீரய்யா
எந்தன் சேவையை நீர் நினைக்கணும்
உமது தரிசனங்கள் என் வாழ்விலே
நீங்க நிறைவேற்றி முடிக்கணும்

கிருபையே(2) மாறாத தேவ கிருபையே
கிருபையே(2) நாள் தோறும்
தாங்கும் கிருபையே

2. உலகில் உபத்திரவம் வரும் போதெல்லாம்
உந்தன் கிருபை என்னை தாங்கணும்
ஜீவியப்பாதையில் நான் சோர்ந்து போனால்
உந்தன் கிருபை என்னை நிரப்பணும்

1142.தரிசு நிலங்கள் அனைத்து

தரிசு நிலங்கள் அனைத்தும்பலன் கொடுக்க வேண்டுமே
வேத வசன விதைகள் - என்றும் விதைக்கப்பட வேண்டுமே
தீர்க்கதரிசனம் உரைக்கப்படணும்
வேத வாக்குத்தத்தங்கள் நிறைவேறணும்

1. வேத வசனம் அது தேவ வசனம் அதை அறிவிப்பதும
நம் கடனல்லவா விதைத்திடுங்கள் வசனம் விதைத்திடுங்கள
கோதுமை மணிகளாய் மடிந்திட வாருங்கள்
கோதுமை மணிகளாய் பயன்ப்பட வாருங்கள்

2. பாரத விளைநிலம் முற்றிலும் விளைந்தது
புண்ணிய நதிகளில் முழ்கிட விரையுது
அறுத்திடுவோம் சுயத்தை பதறாக்குவோம்
ஜெபித்து உழைத்த பின் களத்தை நிரப்புவோம்

3. இயேசுவின் இரட்சிப்பினை சொல்வது லட்சியமாம்
இலக்கை இழந்தால் உப்பு தூண்ணல்லவா
தயங்குவதா தரித்து நிற்ப்பதா
கலப்பையில் கைவைத்தப்பின் திரும்பி பார்ப்பதா

B-Min/Analog Pop/T-85

1143.தொடும் என் கண்களையே

1. தொடும் என் கண்களையே
உம்மை நான் காண வேண்டுமே
இயேசுவே உம்மையே நான் காண வேண்டுமே
தொடும் என் காதுகளை
உம் குரல் கேட்க வேண்டுமே
இயேசுவே உம் குரல் கேட்க வேண்டுமே

தொடும் என் ஆண்டவரே
தொடும் என் வாழ்வினையே
இயேசுவே உம்மைப் போல்
என்னை மாற்றுமே

2. தொடும் என் நாவினையே
உம் புகழ் பாட வேண்டுமே
இயேசுவே உம் புகழைப் பாட வேண்டுமே
தொடும் என் ஆன்மாவையே
என் பாவம் போக்க வேண்டுமே
இயேசுவே என் பாவம் போக்க வேண்டுமே

3. தொடும் என் மனதினையே
மனபுண்கள் ஆற வேண்டுமே
இயேசுவே மனபுண்கள் ஆற வேண்டும்
தொடும் என் உடலினையே
உடல் நோய்களை தீர வேண்டுமே
இயேசுவே உடல் நோய்களை தீர வேண்டுமே

4. தொடும் என் கைகளையே
உம் பணி செய்ய வேண்டுமே
இயேசுவே உம் பணி செய்ய வேண்டுமே
தொடும் என் கால்களையே
உம் வழி செல்ல வேண்டுமே
இயேசுவே உம் வழியில் செல்ல வேண்டுமே

1144.தொழுவேன் தொழுவேன்

தொழுவேன் தொழுவேன் உம்மைத்தானே
துதிகன மகிமைக்குப் பாத்திரரே

1. ஆவியோடும் உண்மையோடும் என்றென்றும்
தொழுவேன் உம்மைத்தான் நான்
தொழும்போதெல்லாம் அருகிலே இருக்கும்
உம்மைப்போல் ஒரு தெய்வமில்லை

2. தொழுதிடும்போது எனக்குள்ளதெல்லாம்
பலியாக வைத்தேன் பலிபீடத்தில்
பலியில்லா தொழுகை வேதத்தில் இல்லை
உமக்கேற்ற பலியாய் வந்துவிட்டேன்

3. இரட்சிப்பின் பாத்திரம் கைகளில் எடுத்து
ஸ்தோத்திர பலியோடு தொழுதிடுவேன்
பரிசுத்த அலங்கார ஆயத்தத்தோடு
உயிருள்ள நாளெல்லாம் தொழுதிடுவேன்

E-Min/6/8Beat(user18)/T-110

1145.ஸ்துதிகளின் பாத்திரரே

ஸ்துதிகளின் பாத்திரரே ஸ்துதி உமக்கே
அல்லேலூயா ஸ்துதி ஸ்துதியுமக்கே

ஸ்துதிகளின் மத்தியில் வாசஞ் செய்யும்
தூயவரே சதா ஸ்துதி உமக்கே தான்- ஸ்துதி

1. அருணோதயம் எழுந்தும்மை ஸ்துதித்திடவே
ஆவியானவரால் உம்மை ஸ்துதித்திடவே
ஸ்துதியுடன் பாடியே நாதா உம்மை
நானில மீதில் ஸ்துதித்தும்மை பாடிடவே

2. பரிசுத்த பாதையில் நடத்திடுவீர்
பரனே உம் மகிமைக்காய் ஜீவித்திட
பரனே உம்மோடு நான் ஜீவித்திட
பரனே உம்முடனன்பால் இணைத்திடுவீர் எம்மை

3. அன்பு நிறை ஜோதியாக வந்த
என் அன்பரே கிருபையால் நிறைத்திடுவீர்
உம் அன்பின் பெருக்கின் கிருபையாலே
உம் அன்பால் நிறைத்திடும் துதித்தும்மை பாடிட

4. காருண்ணியரே எம்மை கனி கொடுக்க
காத்திடும் பரனே நீர் கண்மணிபோல்
காலத்தை வீணாய் கழித்திடாமல்
கருத்துடன் சேவை புரிந்திட அருள் செய்வீர்

1146.துதிப்போம் தொழுவோம்

துதிப்போம் தொழுவோம் உயர்த்துவோம்
உம் நாமத்தை கருத்துடன் ஜெபிப்போம்
ஆவியில் பாடுவோம் புது புது பாடல்களால்

அல்லேலூயா-4

1. புதிய பாடல் நாவில் தந்தார்
புதிய பெயரால் என்னை அழைத்தார்
இரத்தத்தால் கழுவி ஆவியால் நிரப்பி
அனுதினம் நடத்துகின்றார்

2. புதிய எண்ணையால் அபிஷேகித்தார்
புதிய பெலத்தால் இடைகட்டினார்
இம்மட்டும் காத்தார் இன்றைக்கும் காப்பார்
இனிமேலும் காத்திடுவார்

3. புதிய வாழ்க்கை வாழ்ந்திடவே
புதிய குணங்கள் பெற்றுக் கொண்டேன்
வாழ்வது நானல்ல கிறிஸ்துவே வாழ்கின்றார்
வளர்ந்து பெருகட்டுமே

4. புதிய உலகம் தோன்றிடுமே
புதிய ஆளுகை வந்திடுமே
சாபங்கள் இல்லை சஞ்சலம் இல்லை
சமாதானம் சந்தோஷமே

1147.துதியின் சத்தத்தோடு

துதியின் சத்தத்தோடு ஆராதிப்போம் - நாம்
துதியின் சத்தத்தோடு பலியிடுவோம்
உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர
பலி செலுத்தி ஆராதிப்போம்

ஸ்தோத்திரபலி ஸ்தோத்திரபலி
ஸ்தோத்திரபலி செலுத்தி ஆராதிப்போம்

1. துதியின் சத்தம் அலங்கத்தை அதிரப்பண்ணும்
துதியின் சத்தம் அற்புதம் நடக்க செய்யும்

துதித்தலே இன்பமானது
அல்லேலூயா துதித்தலே ஏற்றது

2. துதியின் சத்தம் சாத்தானை கலங்கப்பண்ணும்
துதியின் சத்தம் சத்துருவின் சதி முறிக்கும்

துதித்தலே இன்பமானது
அல்லேலூயா துதித்தலே ஏற்றது

1148.வருவீர் எமை எடுக்க

வருவீர் எமை எடுக்க ஐயா
உம் தாசர்களும் தரிசிக்க
திரு சமுகம் தரிசிக்க-3
ஆனந்தமே ஆனந்தமே

உமக்கே ஆராதனை (4)

1. எபினேசரே நீர் வாழ்க
என் மீட்பரே நீர் வாழ்க
என்னையும் நடத்தும் என் தெய்வம் நீரே
உம்மைப்போல் ஜெபித்திட ஏங்குகிறேன்

2. பரிசுத்தரே நீர் வாழ்க
பரிகாரியே நீர் வாழ்க
துதியும் உமக்கே கனமும் உமக்கே
புகழும் உமக்கே செலுத்துகிறோம்

3. வல்லமையே நீர் வாழ்க
வழிகாட்டியே நீர் வாழ்க
மேகஸ்தம்பமே அக்கினி ஸ்தம்பமே
தேற்றிடும் தெய்வமே நடத்திடுமே

4. அடைக்கலமே நீர் வாழ்க
அதிசயமே நீர் வாழ்க
ஆதியும் நீரே அந்தமும் நீரே
ஜோதியும் நீரே சொந்தமும் நீரே

1149.உள்ளத்தின் மகிழ்ச்சி

உள்ளத்தின் மகிழ்ச்சி நீர்தானையா
இல்லத்தின் எல்லாமே நீர்தானையா
என் தேவையெல்லாம் நீர்தானே
ஜீவனுள்ள நாளெல்லாம்

1. வழிகள் அனைத்தையும்
உம்மிடம் ஒப்படைத்தேன்
என் சார்பில் செயலாற்றுகிறீர்
எல்லாமே செய்துமுடிப்பீர்

2. பட்டப்பகல் போல
நீதியை விளங்கச்செய்வீர்
நோக்கி அமர்ந்திருப்பேன்
உமக்காய் காத்திருப்பேன்

3. பாதத்தில் வைத்துவிட்டேன்
பாரங்கள், கவலைகள்
தள்ளாட விடமாட்டீர்
தாங்கியே நடத்திடுவீர்

4. கோபங்கள் எரிச்சல்கள்
அகற்றி எறிந்துவிட்டேன்
நம்பியுள்ளேன் உம்மையே
நன்மைகள் செய்திடுவேன்

5. பொல்லாத மனிதர்கள்
இல்லாமல் போவார்கள்
உமக்காய் காத்திருப்போர்
அரசாளுவார் அகிலத்தையே

E-Min/ 6/8 Rock/T-100

1150.உங்க வேதத்தோடு பாத

உங்க வேதத்தோடு பாதத்திலே
விழுந்துகிடப்பேன்உங்க பிரசன்னம்
சூழ உலகத்தை நான் மறந்திடுவேன்பா
நல் ஆவியானவர் என்னை
நடத்திச் செல்வீரே - 2
என்னை நீச்சல் ஆழமே ஐயா
அழைத்துச் செல்வீரே -2

1. அந்த மோசேபார்த்த முகத்தை எனக்கு
பார்க்க ஆசைப்பா உங்க கிருபையால்
உமது முகத்தை காட்டும் இயேசப்பா
நான் பார்த்து விட்டாலே-உம்மை
பணிந்திடுவேனே உங்கள் பாதங்களின்
தழும்புகளில் முத்தமிடுவேனே

2. பதினாயிரங்களில் சிறந்தவரே நீங்க
இயேசப்பா பாவி எனக்காக
சிதைந்தவரும் நீங்கதானப்பா
நான் பார்த்து விட்டாலே
உம்மை பணிந்திடுவேனே உங்க பாதங்களின்
தழும்புகளில் முத்தமிடுவேனே

3. யாக்கோபைப் போல இரா முழுவதும்
ஜெபிக்க ஆசைப்பா ஆவியானவரே
இறங்கி வந்து பெலப்படுத்துங்கப்பா
நான் ஜெயித்துவிட்டாலே ஜெயம்
பெற்றிடுவேனே ஜீவ யாத்திரையில்
ஸ்தோத்திரமே செலுத்திடுவேனே

4. என்னை தேற்றிடவே எனக்குள் வந்த
ஆவியானவரே என்னை முத்திரையிட்டீர்
முத்தங்கள் உமக்கு ஆவியானவரே நீர்
நிறைத்தனாலே நான் நிரம்புகிறேன
உங்க அபிஷேகத்தால் அடிமை நானும்
பிழைத்துக்கொண்டேனே

1151.உம் கிருபை எனக்கு

உம் கிருபை எனக்கு போதுமய்யா
வேறொன்றும் எனக்கு வேண்டாமய்யா

கிருபை கிருபை-(4)

1. நிர்மூலமாகாமல் இம்மட்டும் காத்ததும்
அப்பா உம் கிருபை தானே
சூழ்நிலை எல்லாம் மாறினப் போதும்
காத்ததும் கிருபை தானே - 2

2. ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு நொடியும்
காத்தது: கிருபை தானே
விசுவாசப் பாதையில் தளராமல் ஓடிட
பெலன் தந்த கிருபை தானே-2

3. மலைகள் எல்லாம் விலகினப் போதும்
விலகாத கிருபை தானே
மனிதர்கள் எல்லாம் மாறினப் போதும்
மாறாத கிருபை தானே-2

4. அதிசயமாய் என்னை இம்மட்டும் நடத்தியதும்
அப்பா உம் கிருபை தானே
ஜீவனுள்ள நாளெல்லாம் உம்மை போற்றி
பாடுவேன் கிருபையை பாடிடுவேன்-2

C-Min/90'Disco/T-120

1152.உம் நாமம் வாழ்க

உம் நாமம் வாழ்க ராஜா விண் தந்தையே
உம் அரசு வருக ராஜா என் தந்தையே

வாழ்க ராஜா அல்லேலுயா - 4
அல்லேலுயா ஓசன்னா - 4

1. யெகோவாயீரே உம் நாமம்
பரிசுத்தப்படுவதாக - 2
யெகோவா நிசியே
எந்நாளும் வெற்றி தருவீர் - 2

2. யெகோவா ரூவா உம் நாமம்
பரிசுத்தப்படுவதாக -2
யெகோவா ர.்.ப்பா
சுகம் தருபவர் நீர்-2

3. இராஜாதி ராஜா நீரே உம் நாமம்
பரிசுத்தப்படுவதாக - 2
உயிரோடு எழுந்தவரே
வேகமாய் வாருமையா - 2

மாரநாதா அல்லேலுயா - 4
அல்லேலுயா ஓசன்னா - 4

1153.உம்மை ஆராதிக்கின்றோம்

உம்மை ஆராதிக்கின்றோம் - இயேசுவே
உம்மை ஆராதிக்கின்றோம்
நீர் நல்லவர் சர்வ வல்லவர்
உம்மை போல் ஒரு தேவன் இல்லை

அல்லேலூயா - அல்லேலூயா

1. பாவியான என்னையுமே - உம்
பிள்ளையாய் மாற்றினீரே
- நீர் நல்லவர்

2. என்னை அழைத்தவரே நீர்
உண்மையுள்ளவரே
- நீர் நல்லவர்

3. உந்தன் பரிசுத்த ஆவியால்
என்னையும் நிறைத்தீரே
- நீர் நல்லவர்

4. என்னை முன் குறித்தீர் நீர்
கைவிடவே மாட்டீர்
- நீர் நல்லவர்

5. என்னை மறுரூபமாக்கும்
உந்தன் மகிமையில் சேர்த்திடும்
- நீர் நல்லவர்

C-Maj/16 Beat/T-95

1154.உம்மையல்லாமல் எனக்கு

உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு
உம்மை தவிர விருப்பம் எதுவுண்டு?

ஆசையெல்லாம் நீர்தானைய்யா
தேவையெல்லாம் நீர்தானைய்யா
இரட்சகரே...இயேசுநாதா...
தேவையெல்லாம் நீர்தானே

1. இதயக்கன்மலை நீர்தானய்யா
உரிய பங்கும் நீர்தானய்யா
எப்போதும் உம்மோடு இருக்கின்றேன்
வலக்கரம் பிடித்து தாங்குகிறீர்

2. உம்மோடு வாழ்வதே என் பாக்கியம்
நீரே எனது உயிர்துடிப்பு
உமது விருப்பம்போல் நடத்துகிறீர்
முடிவிலே மகிமையில் ஏற்றுக்கொள்வீர்

3. உலகில் வாழும் நாட்களெள்ளாம்
உமது செயல்கள் சொல்லி மகிழ்வேன்
உம்மைத்தான் அடைக்கலமாய்க் கொண்டுள்ளேன்
உம்மையே நம்பி வாழ்ந்திருப்பேன்

1155.உம்மை அப்பான்னு கூப்பிட

உம்மை அப்பான்னு கூப்பிடத்தான் ஆசை
உம்மை அப்பான்னு கூப்பிடவா
உம்மை அம்மான்னு கூப்பிடத்தான் ஆசை
உம்மை அம்மான்னு கூப்பிடவா

அப்பான்னு கூப்பிடுவேன்–உம்மை
அம்மான்னு கூப்பிடுவேன்

1. கருவில் என்னை சுமந்ததைப்பார்த்தா
அம்மான்னு கூப்பிடுவேன்
தோள் மேலே சுமந்ததைப்பார்த்தா
உம்மை அப்பான்னு கூப்பிடுவேன்
என்னை கொஞ்சுவதை கெஞ்சுவதைப்பார்த்தா
உம்மை அம்மான்னு கூப்பிடுவேன்
என்னைஆற்றுவதை தேற்றுவதை பார்த்தா
உம்மை அப்பான்னு கூப்பிடுவேன்

2. கண்ணீரை துடைச்சதை பார்த்தா உம்மை
அம்மான்னு சொல்லுவேன்
விண்ணப்பட்தை கேட்டதை பார்த்தா உம்மை
அப்பான்னு சொல்லுவேன்
என்னை ஏந்துவதை தாங்குவதை பார்த்தா
உம்மை அம்மான்னு சொல்லுவேன்
உங்க இரக்கட்தை உருக்கத்தை பார்த்தா
உம்மை அப்பான்னு சொல்லுவேன்

1156. உம்மை ஆராதிப்பேன்

உம்மை ஆராதிப்பேன்
உம்பாதம் பணிந்திடுவேன்
உமக்கு விருப்பமான
எல்லாம் செய்திடுவேன்

1. இந்தநாள் நீர் தந்தது
இன்று அகமகிழ்வேன்
சபையோடு சேர்ந்து சங்கீதம் பாடி
சாட்சியாய் வாழ்ந்திடுவேன்

2. உம்மோடு உறவாடிட
ஓடோடி வந்தேன் இங்கே
வசனத்தின் வழியாய் என்னோடு பேசி
இன்றும் நடத்திடுமே

3. வாரத்தின் முதல் நாளிலே
உயிரோடு எழுந்தவரே
இப்போதும் எங்களின் திருசபை மக்களை
உயிர்ப்பித்து அனலாக்கிடும்

4. நிகரே இல்லாதவர்
நினைவாய் இருக்கின்றீரே
தடுமாறும் நேரம் தாங்கிப்பிடித்து
தயவாக நடத்துகின்றீர்

1157. உம்மை மறவேன் நான்

உம்மை மறவேன் நான்-2
என் இயேசய்யா உம்மை மறவேன் நான்
என் தாழ்வினில் என்னை நினைத்தீரே-2
என் இயேசய்யா உம்மை மறவேன் நான்

1. ஆபத்து காலத்தில்
அரணான கோட்டையும்
கன்மலையும் மீட்பரும் நீர்தானையா
கன்மலையும் மீட்பரும் நீர்தானையா-2

2. என் வாழ்வில் நீர் செய்த
எண்ணில்லா நன்மைகள்
ஆயிரம் பதினாயிரம் அதற்கும் மேலய்யா
ஆயிரம் பதினாயிரம் அதற்கும் மேலய்யா-2

1158. உம்மை மறந்து என்னால்

உம்மை மறந்து என்னால் வாழ முடியுமா ?
உம்மை பிரிந்து என்னால் ஜீவிக்க முடியுமா ?
இயேசையா சொல்லுங்கையா
இயேசையா அது முடியாதையா – 2

1. பாவங்கள் மன்னித்தீரே மறக்க முடியுமா ?
பரிசுத்தம் தந்தீரே மறக்க முடியுமா ?
மறக்க முடியுமா ? மறக்க முடியுமா ?
நீர் செய்த நன்மைகளை மறக்க முடியுமா ?

2. வியாதிகள் நீக்கினீரே மறக்க முடியுமா ?
விடுதலையாக்கினீரே மறக்க முடியுமா ?
மறக்க முடியுமா ? மறக்க முடியுமா ?
நீர் செய்த நன்மைகளை மறக்க முடியுமா ?

3. ஆபத்தில் காத்தீரே மறக்க முடியுமா ?
அதிசயம் செய்தீரே மறக்க முடியுமா ?
மறக்க முடியுமா ? மறக்க முடியுமா ?
நீர் செய்த நன்மைகளை மறக்க முடியுமா ?

4. வேண்டுதல் கேட்டீரே மறக்க முடியுமா ?
கேட்டதை தந்தீரே மறக்க முடியுமா ?
மறக்க முடியுமா ? மறக்க முடியுமா ?
நீர் செய்த நன்மைகளை மறக்க முடியுமா ?

E-Maj/Blues Rock/T-120

1159.உம்மைப் பாடாமல் யாரை

உம்மைப் பாடாமல் யாரை நான் பாடுவேன்
உம்மைத் துதிக்காமல் யாரை நான் துதிப்பேன்

துதியும் உமக்கே அல்லேலூயா
கனமும் உமக்கே அல்லேலூயா
மகிமை உமக்கே அல்லேலூயா
புகழ்ச்சி உமக்கே அல்லேலூயா

1. உளையான சேற்றிலிருந்து எடுத்தாரே
உன்னத அனுபவம் தந்தாரே

2. துக்கங்களை சந்தோஷமாய் மாற்றினீர்
துயரங்கள் மகிழ்ச்சியாய் மாற்றினீர்

3. ஒன்றுக்கும் உதவாத என்னையும்
உருவாக்கி உயர்த்தின தெய்வமே

4. ஜீவன் சுகம் பெலன் தந்து காத்தீரே
என் ஜீவனுள்ள நாளெல்லாம் பாடுவேன்

1160. உம்மை பிரிந்து வாழமுடியு

உம்மை பிரிந்து வாழமுடியுமா
உம் அன்பை
என்மேல் மனதுருகும் தெய்வமே இயேசப்பா
என்மேல் மனம் இரங்கும் தெய்வமே இயேசப்பா

1. வாலிப நாட்களில் தெரிந்து கொண்டீர்
உம் ஊழியத்திற்கென்றும் தெரிந்து கொண்டீர் - 2
ஆனால் உலகம் என்னை நெருக்குதே
இயேசுவே என்னை வெறுக்குதே
ஆனால் நீர் மாத்திரம்
என் வாழ்வில் இல்லையென்றால்
என்னால் என்ன செய்ய முடியும் ?

2. மனிதர்கள் மனம் மாறி இகழ்ந்திட்டாலும்
அதை நான் தாங்கிக் கொள்ளுவேன்
சூழ்நிலைகள் மாறி எதிர் நின்றாலும்
அதையும் நான் தாங்கிக் கொள்ளுவேன்
என் நேசரே நீர் விலகிச் சென்றால்
பாசம் தேடி நான் எங்கே போவேன்?
என் அன்பர் நீர்மாத்திரம் இல்லையென்றால்
என்னால் என்ன செய்ய முடியும்?

1161. ஆராதனை நாயகன் நீரே

ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே
ஆயுள் முடியும் வரை
உம்மை தொழுதிடுவோம்

1. ஆயிரம் பேர்களில்
சிறந்தோர் ஆண்டவர் இயேசு நீரே
விடி வெள்ளியே எந்தன் பிரியம் நீரே
என்றென்றும் தொழுதிடுவோம்

2. மாந்தர்கள் போற்றிடும் தெய்வம்
மகிமையின் தேவன் நீரே
முழுங்கால் யாவும் முடங்கிடவே
மகிழ்வுடன் துதித்திடுவேன்

3. முடிவில்லா ராஜ்ஜியம் அருள
திரும்பவும் வருவேன் என்றீர்
ஆயத்தமாய் நான் சேர்ந்திடவே
அனுதினம் வணங்கிடுவேன்

4. தூதர்கள் துதித்திடும்தேவன்
தூயாதி தூயவரே
எனக்காகவே அன்று பலியானீரே
எனக்காக வரப்போகிறீர்

1162. தேவ தேவனே உமக்கு

தேவ தேவனே உமக்கு ஸ்தோத்திரம்-எங்கள்
ராஜ ராஜனே உமக்கு ஸ்தோத்திரம்-2
உம்மை பணிந்து குனிந்து ஆராதிக்கிறோம்
உம் பாதம் முத்தம் செய்து ஆராதிக்கிறோம்.

ஆராதனை ஆராதனை
உமக்குத் தானே-எங்கள்-3

1. எங்கும் வியாபித்து இருப்பவரே
எல்லாவற்றையும் ஆளுகை செய்பவரே-2

உமக்கு ஒப்பானவர் யாருமில்லை
உமக்கு நிகரானவர் எவருமில்லை

2. முடிவில்லாத நித்தியரே
முற்றிலும் அழகு நிறைந்தவரே-2

3. ஜெபத்தை கவனித்து கேட்பவரே
ஜெபத்திற்கு நல்ல பதில் தருபவரே

4. வாக்குத்தத்தங்களில் உண்மை உள்ளவரே
வாக்கு மாறாத உத்தமரே

5. வியாதியை குணமாக்கும் வைதத்தியரே
விடுவித்து காக்கும் என் நேசரே

1163. உம்மை உயர்த்திடுவேன்

உம்மை உயர்த்திடுவேன்
உம்மை போற்றிடுவேன்
தேவாதி தேவன் நீரல்லோ-லீலி
புஷ்பம் நீரே சாரோனின் ரோஜா நீரே
என் ஆத்ம நேசர் நீரல்லோ

1. மலைகள் விளகினாலும்
பர்வதங்கள் பெயர்ந்திட்டலும்
மாறாத தேவன் நீரல்லோ ராஜாதி
ராஜன் நீரே தேவதி தேவன் நீரே
இயேசுவின் நாமம் தொனிக்குதே

2. வியாதிகள் வந்தாலும் சோர்வுகள் நேர்ந்திட்டாலும்
சுகம் தரும் தேவன் நீரல்லோ
காக்கும் கர்த்தர் நீரே
கருணையின் தேவன் நீரே
துதிகளின் பாத்திரர் நீரே

1164. உம்மையே நான் நேசிப்

உம்மையே நான் நேசிப்பேன்
நான் பின் திரும்பேனே
உம் சந்நிதியில் முழங்காலில் நின்று
உம் பாதையில் நான் நடந்திட்டால்
இன்னல் துன்பமே வந்தாலும்
நான் பின் திரும்பேனே

1. உம்மையே நான் போற்றுவேன் (3)
நான் பின் திரும்பேனே
உம் சந்நிதியில் முழங்காலில் நின்று
உம் பாதையில் நான் நடந்திட்டால்
இன்னல் துன்பமே வந்தாலும்
நான் பின் திரும்பேனே

2. உம்மையே ஆராதிப்பேன
நான் பின் திரும்பேனே
உம் சந்நிதியில் முழங்காலில் நின்று
உம் பாதையில் நான் நடந்திட்டால்
இன்னல் துன்பமே வந்தாலும்
நான் பின் திரும்பேனே

1165. உங்களையே உங்களையே

உங்களையே உங்களையே – இயேசு
அழைக்கின்றார் இன்று உங்களையே
உலகத்தை வெறுத்து என் பின்னே வா
என அழைக்கின்றார் இன்று உங்களையே

1. மாறாத அன்பை உலகிற்கு காட்டிட
இயேசுவைப்போல் வாழ்ந்திட வாருங்களே
உங்களிடம் வேறெதுவும் கேட்கவில்லை
அவர் கேட்பது எல்லாம் உங்களையே

2. தாலந்து திறமை படைத்தோரே – நீங்கள்
தந்திடுங்கள் இன்று உங்களையே
கல்வியும் ஞானமும் அவருக்காய் செலவிட்டு
கரைந்திட கொடுங்கள் உங்களையே

3. பரலோகின் மேன்மையை அற்பமாய் எண்ணி
தந்திட்டாரே தன்னையே உங்களுக்காய்
அவருக்காய் உங்களை அர்ப்பணம் செய்து
வாழ்ந்திட அழைக்கின்றார் உங்களையே

1166. உண்மையாய் உம்மை

உண்மையாய் உம்மை நேசிக்க
என் சுபாவத்தை மாற்றும்
உண்மையாய் உம்மை சேவிக்க
என் சுயத்தை மாற்றும்

உம் ரத்தத்தால் கழுவி விடும்
உம் சித்தத்தால் என்னை நிரப்பும்
உம் சத்தத்தால் என்னோடு பேசும்
துதி கீதத்தால் என் உள்ளம் நிரப்பும்
என் இயேசு ரட்சகா

1. பொல்லாதவர்கள் மேலுள்ள
என் எரிச்சலை மாற்றும்
பகைமை கசப்பு எல்லாம்
என்னை விட்டொழிய செய்யும்

2. என் மேன்மை பாராட்டுகள்
உம் பிரியமாய் மாறட்டும்
என் வாயின் வார்த்தைகள்
உம் பிரியமாய் மாறட்டும்

1167. உன்னை விட்டு விலகாத

உன்னை விட்டு விலகாத இயேசு நல்லவர்
உன்னை என்றும் கைவிடாத இயேசு நல்லவர்
இயேசு இயேசு இயேசு நல்லவர்-4

1. நேற்றும் இன்றும் என்றும் மாறா இயேசு நல்லவர்
வழியிலெல்லாம் உன்னை காக்கும் இயேசு நல்லவர்
இயேசு இயேசு இயேசு நல்லவர்-4

2. உன்னை பெயர் சொல்லி அழைத்த இயேசு நல்லவர்
உள்ளங்கையில் உன்னை வரைந்த இயேசு நல்லவர்
இயேசு இயேசு இயேசு நல்லவர்-4

3. ஆபத்தில் உன்னை காப்பேன் என்ற இயேசு நல்லவர்
ஆயுள்வரையும் உன்னோடு இருக்கும் இயேசு நல்லவர்
இயேசு இயேசு இயேசு நல்லவர்-4

4. தாயைப்போல உன்னைத் தேற்றும் இயேசு நல்லவர்
தந்தையைப் போல தோளில் சுமக்கும் இயேசு நல்லவர்
இயேசு இயேசு இயேசு நல்லவர்-4

1168. பரிசுத்தனாக்கிடும் பார்த்

பரிசுத்தனாக்கிடும் பார்த்திபனே யான்
அதிசுத்தனாக நடத்திடவே
பரிசுத்தமுள்ளோரே பரனைத் தரிசிப்பார்
பரலோக ராஜ்ஜிய பிரவேச மடைவார்

1. திரு இரத்தம் சிந்தினீர் தீயனெனை
அதிசுத்தனாகவே ஆக்கிடவே
பரிசுத்த ஆவியானவரே ஈந்தே
பரலோக பாதையில் பதித்திடும் மனதை

2. மாய ஜடம் என்னை மயக்கிடாமல்
பேயின் வலை என்னைப் பிடித்திடாமல்
தீயலோகம் என்னை தடுத்தழிக்காமல்
தினம் தினம் கிருபையால் திடப்படுத்துவீர்

3. உம்மைப்போல் ஜீவித்து உத்தமனாக
உம்மையே காண்பிக்க உலகத்திற்கு
உம் திரு வசனத்தை ஊக்கமாய் உரைக்க
உமது நல் ஆவியானவரை ஊற்றும் நிறைவாய்

C-Min/Disco/T-120

1169. துதி கன மகிமைக்கு

துதி கன மகிமைக்குப் பாத்திரரே
உம்மை அனுதினம் துதித்திடுவேன்
அன்பே உந்தன் ஆசிகளை எண்ணவே
ஆனந்தமே என்னில் பொங்குதே

1. நாடித்தேடி ஓடி உம் பாதம் வந்தேன்
நன்மை செய்யும் தேவன் நீரல்லோ
பாச வலையில் என்னை வீசி அணைத்தீர்
நேசா உமக்கென்ன செய்குவேன்

2. பாவ சேற்றில் மூழ்கிய பாவி என்னை
தேடி வந்த தேவன் நீரல்லோ
தூக்கி எடுத்தீர் தூய ஆவியும் ஈந்தீர்
தேவா என்னை சொந்தமாக்கினீர்

3. என்றும் உம்மோடு சீயோன் மலையில்
நிற்பதும் என் பாக்கியமல்லோ
ஆசையுடனே பூவில் காத்து நிற்கிறேன்
ஆருயிரே வேகம் வாருமே

E-Min/6 Beat/T-110

1170. உனக்காக ஜீவன் தந்து

உனக்காக ஜீவன் தந்து
உன்னை தான் அழைக்கிறார்
கொடும் வேதனை அனுபவிட்தார்
உந்தன் வாழ்க்கையை மாற்றிடவே –2

1. நோய்களை ஏற்றுக்கொண்டு பாடுகள் சகிட்தார்
உனக்காக கல்வாரியில் கண்ணீர் வடிட்தார்
ரட்தட்தினாலே சுட்தம் செய்து
காயங்களை அவர் ஆற்றிடுவார்

2. உலகமோ மாயம் முடிவும் சமீபம் கடைசி எக்காளம்
தொனிட்திடும் நேரம் அருகில்
நின்றவர் வரப்போகும் நேரம்
வருகைக்காக நீ ஆயட்தமா

3. பாவட்தை போக்கும் சாபட்தை நீக்கும்
பரிசுட்தமாக்கும் இயேசுவின் ரட்தம்
மன்னிப்பை அருள துடிக்கிறாரே
மாமன்னர் இயேசு அழைக்கிறாரே.

1171.உன்னத தேவன் உன்னுடன்

உன்னத தேவன் உன்னுடன் இருக்க
உள்ளமே கலங்காதே
அவர் உள்ளவரே என்றும் நல்லவரே
நன்மைகள் குறையாதே

1. பாவத்தில் இருந்த உன்னை
பரிசுத்த மாக்கியவர்
தாழ்மையில் கிடந்த உன்னை
தம் தயவால் தூக்கியவர்

2. அந்நாளில் தம் பாதம்
அமர்ந்த அன்னாளின் ஜெபம் கேட்டார்
அநாதையாய் தவித்த
அந்த ஆகாரின் துயர் தீர்த்தார்

3. இயேசு உன் முன் நடந்தால்
நீ யோர்தானில் நடந்திடலாம்
விசுவாசம் உனக்கிருந்தால்
அந்த எரிகோவை தகர்த்திடலாம்

1172.உன்னதங்களிலே இருப்பவ

உன்னதங்களிலே இருப்பவரை-நாம் ஆராதிப்போம்
உன்னதமான தேவனையே-நாம் ஆராதிப்போம்

நல்லவரை நாம் ஆராதிப்போம்
வல்லவரை நாம் ஆராதிப்போம்
மகிமையான தேவனையே-நாம் ஆராதிப்போம்
மகத்துவமான ராஜனையே-நாம் ஆராதிப்போம்

1. இருக்கின்றவராய் இருக்கின்றவரை நாம் ஆராதிப்போம்
இருளில் நம்மை மீட்டவரை - நாம் ஆராதிப்போம்
இரட்சகரை நாம் ஆராதிப்போம்
நித்தியரை நாம் ஆராதிப்போம்

சகலமும் படைத்த சத்தியரை-நாம் ஆராதிப்போம்
அகிலம் போற்றும் ஆண்டவரை-நாம் ஆராதிப்போம்

2. ஆதியிலிருந்தே இருந்தவரை-நாம் ஆராதிப்போம்
ஆவியில் நம்மை உயிர்ப்பித்தவரை நாம் ஆராதிப்போம்
அடைக்கல தேவனை ஆராதிப்போம்
அதிசய தேவனை ஆராதிப்போம்

நமக்காய் மரித்து உயிர்த்தவரை நாம் ஆராதிப்போம்
நமக்காய் மீண்டும் வருபவரை-நாம் ஆராதிப்போம்

1173.ஊற்றுமையா உங்க

ஊற்றுமையா உங்க ஆவிதனை
என் சுய பெலத்தால் ஒன்றுமில்லை
என் பண பெலத்தால் ஒன்றுமில்லை

1. ஆரோனின் மீது அன்று
ஊற்றின அந்த அபிஷேகம்
தாவீதின் மீதும் அன்று
ஊற்றின அந்த அபிஷேகம்

எங்கள் மீதும் ஊற்றும்
எங்கள் கள்ளங்களை மாற்றும் ஐயா

2. எலியாவின் மீது அன்று
ஊற்றின அந்த அபிஷேகம்
எலியாவின் மீது அன்று
ஊற்றின அந்த அபிஷேகம

3. கிதியோன் மீது அன்று
ஊற்றின அந்த அபிஷேகம்
அப்போஸ்தலர் மீதும் அன்று
ஊற்றின அந்த அபிஷேகம்

1174.வானங்களே மகிழ்ந்து

வானங்களே மகிழ்ந்து பாடுங்கள்
மண்ணுலகே புகழ்ந்து துதிபாடு - 2

சர்வ வல்லவர் தம்ஜனத்திற்கு ஆறுதல் தருகிறார்
சிறுமைப்பட்ட தம்மக்கள் மீது இரக்கம் காட்டுகிறார்

1. கைவிட்டாரே மறந்தாரே என்று நீ சொல்வானேன்
பால்குடிக்கும் பாலகனை தாய் மறப்பாளோ ?
மறந்து போவாளோ ?
கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காதிருப்பாளோ ?
இரங்காதிருப்பாளோ ?

தாய் மறந்தாலும் தகப்பன் உன்னை
மறக்கவே மாட்டார் உள்ளங்கையிலே
அவர் உன்னை பொறித்து வைத்துள்ளார்

2. கண்களை நீ ஏறெடுத்தப்பார் சுற்றிலும் பார் மகனே
உன்னைப் பாழாக்கினவர்கள் புறப்பட்டுபோகிறார்கள்
தூரமாய் போகிறார்கள்
பெருங்கூட்டம் சபையைத் தேடி வருகின்றது
பாடி மகிழ்கின்றது

பாழடைந்த இடங்களெல்லாம் துதியால் நிரம்பிடுதே
அணிகலன் போல் நம் தேசத்தை
சபை நீ அணிந்து கொள்வாய்

1175.வாங்க வாங்க வாங்க

வாங்க வாங்க வாங்க வாங்க
வாங்க வாங்க இயேசுவுக்கு பாட்டு பாடலாம்
நாம்ம எல்லாம் கையை தட்டி ஆட்டம் ஆடலாம் - 2

ஏ தந்தானானே தந்தானானே தந்தானானே - 4

1. ஒரே ஒரு தேவன் இயேசுதானே
நல்ல நல்ல பாடம் கற்றுதருவாரே - 2
காலு ரெண்டும் ஆட்டம் ஆடும்
கையும் ரெண்டும் தாளம் போடும் - 2

வாயுங் கூட பாட்டு பாடும்ட
நம்ம இயேசு சுவாமி பாட்டு பாடும்
ஏ தந்தானானே

2. இந்த நள்ள நாலும் நாம் எல்லோரும்
கிறிஸ்துவில் ஒன்றாய் இணைந்திடுவோமே - 2
காலு ரெண்டும் ஆட்டம் ஆடும்
கையும் ரெண்டும் தாளம் போடும் - 2

வாயுங் கூட பாட்டு பாடும்ட
நம்ம இயேசு சுவாமி பாட்டு பாடும்
ஏ தந்தானானே

1176.வானில் ஒளிவீச மாமன்னன்

வானில் ஒளிவீச மாமன்னன்
இயேசு ராஜா கருணையின் வடிவாக
மனிதனைத் தேடி வந்தார் மனதில் மகிழாட
மாமகத்துவ தேவனே மரியின் மைந்தனாக
குழந்தையாய் பிறந்து விட்டார்

போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம்
வாழ்த்திடுவோம் வணங்கிடுவோம்

1. வண்ண வண்ண மலர்க்கூட்டம்
தேவனைத் துதிக்குது
சின்ன சின்ன குயில் கூட்டம்
குழந்தையைக் கொஞ்சுது

2. எண்ணமெல்லாம் ஏங்கி ஏங்கி
இறைவனைத் தேடுது
உள்ளமெல்லாம் ஓடி ஓடி
இறைவனைப் பணியுது

3. விண்மீன்கள் மின்னி மின்னி
ஆண்டவரைப் பார்க்குது
மேகமெல்லாம் அங்குமிங்கும்
ஆடி மகிழுது

4. கண்களெல்லாம் உம்மைப்
பார்க்க ஆசையாய் இருக்குது
கைகளெல்லாம் உம்மை
எடுக்க ஆவலாயிருக்குது

5. சீயோனின் வாசஸ்தலம்
மகத்துவமானது
யூதாவின் குடிகளெல்லாம்
கீர்த்தனம் பண்ணுது

1177.வாலிபரே அணி திரண்டு

வாலிபரே அணி திரண்டு வாருங்கள் தேவ நாமம்
தேசமெங்கும் பரவும் வழியை காணுங்கள்

1. தீபங்கள் ஏற்றிடுங்கள் ஒன்றாக கூடுங்கள்
தீப்பிளம்பாய் அனல் கொண்டு தீவிரம் செல்லுங்கள்
கோழைகளாய் வாழ்ந்தாலே
பயனேதும் சொல்லுங்கள் வீரர்களாய்
கை கோர்த்தால் ஜெயமுண்டு எழும்புங்கள்

Come on this is right time
for mother India
Come on together lift up India

2. சபைகள் விழித்தெழவே ஊக்கம் சொல்லுங்கள்
தேவபயம் நல்லிணக்கம் செழிப்பதை காணுங்கள்
ஆனந்தம் ஊரெங்கும் பொங்கட்டும் ஏங்குங்கள்
அழிவில்லா ராஜாங்கம் மிளிரட்டும் வேண்டுங்கள்

3. எங்கும் இளைஞரணி சேர்ந்தே துவங்குங்கள்
ஊழியர்கள் எழும்பட்டும் எக்காளம் ஊதுங்கள்
ஓயாமல் தூது பணி தொடரட்டும் உதவுங்கள்
பாராளும் தேவனுக்கே மகிமை சேருங்கள்

D-Maj/Slow Rock/T-095

1178.வழியும் நீரே சத்தியம் நீரே

வழியும் நீரே சத்தியம் நீரே
ஜீவனும் இயேசுவே
உம்மை ஆராதனை செய்து
பாடிப்போற்றுவேன் - 2

ஆராதனை ஆராதனை
ஆராதனை இயேசுவே - 2

1. குருடர் கண்கள் பார்க்கச்
செய்தது நீர் தானையா
செவிடர் செவிகள் கேட்கச்
செய்தது நீர் தானையா

2. குஷ்டரோகியை சொஸ்தம்
செய்தவர் நீர் தானையா
மரித்தோரை எழும்பச்
செய்தவர் நீர் தானையா

3. பாவ சாபம் நீங்கச்
செய்தவர் நீர் தானையா
கவலை கஷ்டம் நீங்கச்
செய்தவர் நீர் தானையா

1179.வாக்குப்பண்ணிவர் மாறிடார்

வாக்குப்பண்ணிவர் மாறிடார்
வாக்குதத்தம் நிறைவேற்றுவார்
சோர்ந்த போகாதே - நீ
சோர்ந்து போகாதே உன்னை
அழைத்தவர் உண்மையுள்ளவர்

1. காலங்கள் கடந்ததோ தாமதம் ஆனாதோ
வாக்குத்தத்தங்கள் - உன்
வாழ்வினில் தொலைந்ததோ

வாக்குத் தந்தவர் சிறந்தவர்
சிறந்ததைத் தருவர்
ஏமாற்றங்கள் இல்லையே

2. அவர் மனிதனல்லவே
பொய் சொல்லதில்லையே
அவர் உண்மையுள்ளவர்
வாக்கு மறப்பதில்லையே

1180.வாழ்நாளெல்லாம் களிகூ

வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி
திருப்தியாக்கும் உம் கிருபையினால்

நல்லவரே வல்லவரே
நன்றி ஐயா நாள் முழுதும்

1. புகலிடம் நீரே பூமியிலே
அடைக்கலம் நீரே தலைமுறைதோறும்

2. உலகமும் பூமியும் தோன்றுமுன்னே
என்றென்றும் இருக்கின்ற என் தெய்வமே

3. துன்பத்தை கண்ட நாட்களுக்கு
ஈடாக என்னை மகிழச் செய்யும்

4. அற்புத செயல்கள் காணச் செய்யும்
மகிமை மாட்சிமை விளங்கச் செய்யும்

5. செய்யும் செயல்களைச் செம்மைப்படுத்தும்
செயல்கள் அனைத்திலும் வெற்றிதாரும்

6. நாட்களை எண்ணும் அறிவைத் தாரும்
ஞானம் நிறைந்த இதயம் தாரும்

7. ஆயுள் நாட்கள் எழுபதுதான்
வலிமை மிகுந்தோர்க்கு எண்பதுதான்

8. ஆயிரம் ஆண்டுகள் உம் பார்வையில்
கடந்துபோன ஓர் நாள்போல

E-Min/Blues Rock/T-130

1181.வல்லமை தாரும் தேவா

வல்லமை தாரும் தேவா வரங்கள்
தாரும் தேவா இன்றே தாருமே

1. மேல்வீட்டறையில் வேகமாக வந்தவரே
அக்கினியாக இன்றே வாருமே
வரங்கள் நிறைந்த வாழ்வை தந்திடவே
உந்தன் வல்லமையாலே என்னை நிரப்புமே

2. ஆதி சபையில் அச்சாரமாக வந்தவரே
அனுதினமும் என்னை நடத்துமே
ஆயிரமாய் வளர்ந்து பெருகவே
எங்கள் சபைதனிலே எழுந்து அருளுமே

3. சீனாய் மலையில் மகிமையாய் வந்தவரே
கனிகள் நிறைந்த வாழ்வை தாருமே
அபிஷேகத்தால் என்னை நிரப்பியே
ஆத்தும அறுவடையால் திருப்தியாக்குமே

E-Min/Beat Ballad/T-90

1182.வல்லமையின் தேவனே

வல்லமையின் தேவனே
நன்றி ஐயா
என்னை வாழவைக்கும் தெய்வமே
நன்றி ஐயா

1. கலங்கி நின்ற போதெல்லாம் கண்துடைத்தீர்
கண்ணீரை துருத்தியில் பிடித்துவைத்தீர்
கண்ணீரை விசாரிக்கும் காலம் வரும்
அதுவரையில் உம்கரத்தில் அடங்கியிருப்பேன்

2. பலகோடி தெய்வங்கள் நம்பினேனே
நீர்தான் அன்பான தெய்வம் என்று தெரியாமலே
வாழவைக்கும் தெய்வமே நன்றி ஐயா என்னை
தாங்கிதினம் நடத்திய உம் கிருபை ஐயா - 2

F-Maj/Funky Pop/T-120

1183.வாழ்வின் முதன்மை இயேசு

வாழ்வின் முதன்மை இயேசுவுக்கே
வாழ்வின் முழுமையும் இயேசுவுக்கே

நானும் என் எல்லாமும்
இயேசுவுக்கே சுவிசேஷத்துக்கே

1. உயிருள்ளளவும் உண்மையாக
மரணம் வரிலும் மலையாய் நிற்க

2. எண்ணற்ற ஜனங்கட்கு மேய்பனில்லை
அறிந்தோர் அவரை சொல்லவில்லை

3. இயேசுவை அறியாதோர் மனம்மாற
சகல ஜாதியும் அடிபணிய

4. சபைகள் பெருகி வளர்ந்தோங்க
மீட்பை அடைந்தோர் இணைந்து வாழ

5. இந்தியா இயேசுவை கண்டிடவே
சுவிசேஷம் எங்கும் அறிவித்திட

1184.வரி குதிரை வரி குதிரை

வரி குதிரை வரி குதிரை
கோடு போட்டது யாரு - 2
ஆண்டவர் போட்ட டிசைன் எல்லாம்
அழகாய் இருக்கு பாரு - 2

1. யானை குட்டி யானை குட்டி
பானை வயிறு எதுக்குக - 2
வசனப் பஞ்சம் வந்து விட்டால்
என்ன செய்வது அதுக்கு

2. மானு குட்டி மானு குட்டி
ரெட்டை கொம்பு எதுக்கு
சாத்தான் பையன் வந்து
விட்டால் முட்டி தள்ளுவேன் அதுக்கு - 2

3. ஒட்டக சிவிங்கி ஒட்டக சிவிங்கி
உயர்ந்திருப்பது எப்படி
கர்த்தருக்கு கீழ்படிந்தால்
உயர்ந்திருப்பார் அப்படி - 2

1185.வீரமுள்ள மேய்ப்பன் தாவீது

1. வீரமுள்ள மேய்ப்பன் தாவீது
வேறவேலை ஒன்றும் செய்யாது - 2

2. தன்னுடைய ஆடுகளை பத்திரமா
பாதுகாக்கும் நல்ல தாவீது - 2

3. சிங்கம் ஒன்று, கரடி ஒன்று. மந்தைக்குள்ளே
சத்தம் கேட்டு ஓடி வந்தான் தாவீது - 2

4. போட்ட போடுல அந்த ரெண்டும் அம்பேலு
நல்ல மேய்ப்பன் இயேசு நம்மோடு - 2

1186.விசுவாசியின் காதில்பட

விசுவாசியின் காதில்பட இயேசுவென்ற நாமம்
விருப்பாயவர் செவியில்தொனி இனிப்பாகுது பாசம்

1. பசித்த ஆத்துமாவைப் பசியாற்றும்
மன்னாவதுவே முசிப்பாறுதல்
இளைத்தோர்க்கெல்லாம் முற்றும் அந்தப்பெயரே

2. துயரையது நீக்கிக் காயமாற்றி
குணப்படுத்தும் பயங்கள் யாவும்
இயேசு வென்றால் பறந்தோடியே போகும்

3. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச்
சுத்தப்படுத்தும் மாயை கொண்ட
நெஞ்சையது மயக்கமின்றி விடுக்கும்

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள்
ஏற்று நிறைந்திருக்கும் எல்லா நாளும்
மாறாச்செல்வம் இயேசுவென்ற பெயரே

1187.யார் உனக்கு வேண்டும்?

யார் உனக்கு வேண்டும்? இயேசுவோ?
யார் உனக்கு வேண்டும்? சாத்தானோ?
எது உனக்கு வேண்டும்? மோட்சமோ?
எது உனக்கு வேண்டும்? நரகமோ?

1. இயேசு வேண்டும் இயேசு வேண்டும்
சாத்தான் வேண்டாம்
மோட்சம் வேண்டும் மோட்சம் வேண்டும்
நரகம் வேண்டாம் - 2

2. குட்டி சாத்தான் கெட்ட வழியில்
இழுத்து செல்லுவான்
ஆசை காட்டி மோசம் போக்க
வலையை வீசுவான்

3. இயேசு பிள்ளை தப்பி ஓடி
கிட்டிச் சேராதே
ச்சீ போ, எனக்கு வேண்டாம்
என்று சொல்லிடு என்று சொல்லிடு .....

1188.யேகோவா தேவன் சர்வ

யேகோவா தேவன் சர்வ வல்லவர்
சிருடி கர்த்தர் அவர்
யேகோவா தேவன் சர்வ வல்லவரே
கீலேயாத் தைலமாம் கன்மலையானவர்
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம்

ஆ அல்லேலூயா ஆ அல்லேலூயா-2
யேகோவா தேவன் சர்வ வல்லவரே
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம்

1. ஆபிரகாம் தேவன் என்றென்றும் உள்ளவர்
யேகோவா ஷாலோம் சமாதான தேவன்
இஸ்ரவேல் தேவனாம் நித்தியமானவர்
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம்

2. போதுமானவரே யோகோவா யீரே இரட்சண்ய தேவனாம்
மேசியா தேவனே இரட்சகர்
வந்திட்டார் சாட்சிகொடுத்திட்டார்
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம்

1189.யெகோவா ஷம்மா

யெகோவா ஷம்மா
எங்களோடு இருப்பவரே -2

யெகோவா ஷம்மா
யெகோவா ஷம்மா-(4)

1. நீர் என்னோடு இருப்பதனால்
நான் இதுவரை வாழ்கின்றேன் - 2

2. என் குடும்பத்தை நீர் வேலியடைத்து
தினமும் காப்பவரே - 2

3. என் திருச்சபையில் நீர் வாசம்செய்கிறீர்
என் துதிகளை விரும்புகிறீர் -2

4. எனக்காகவே நீர் வரப்போகிறீர்
உம்மோடு கூட்டிச்செல்ல

D-Maj/16 Beat/T-100

1190.இயேசு எந்தன் வாழ்வில்

இயேசு எந்தன் வாழ்வில் பெலனானார்
எனக்கென்ன ஆனந்தம்

1. எந்தன் வாலிப காலமெல்லாம்
எந்தன் வாழ்க்கையின் துணையானார்
உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக

எந்தன் இதயமே உம்மைப் பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும்

2. பெரும் தீமைகள் அகன்றோட
பொல்லா மாயைகள் மறைந்தோட
உமதாவியின் அருள் காண
வரும் காலங்கள் உமதாகும்

3. இந்த உலகத்தை நீர் படைத்தீர்
எல்லா உரிமையும் எமக்களித்தீர்
உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக

1191.இயேசு நாமம் சொல்ல

இயேசு நாமம் சொல்ல சொல்ல
எங்கும் எதிலும் ஜெயமே ஜெயமே
அல்லேலூயா அல்லேலூயா

1. இயேசுவின் நாமத்தில் புதுபெலன் உண்டு
உலர்ந்த எலும்பும் உயிர்பெறும் இன்று
பெலவீனம் சுகவீனம் நீங்கிடும் இன்று
உன்னத வல்லமை இறங்கிடும் இன்று
தெய்வீக சுகம் உண்டு நம் இயேசுவின் நாமத்தில்

2. இயேசுவின் பேர் சொல்ல பேய் நடுநடுங்கும்
அசுத்த ஆவிகள் அகன்றே ஓடும் -2
அந்தகார வல்லமை அழிந்தே போகும்
சாத்தானின் கோட்டைகள் தகர்ந்தே நொறுங்கும் பிசாசை
ஜெயித்திடுவோம் நம் இயேசுவின் நாமத்தில்

3. இயேசுவின் நாமத்தில் கேட்பது கிடைக்கும்
அற்புத அதிசயம் எதுவும் நடக்கும்
இருளும் விலகி வெளிச்சம் தோன்றும்
துக்கம் எல்லாம் சந்தோ'மாகும்
வாழ்வே புதிதாகும் நம் இயேசுவின் நாமத்தில்

1192.இயேசு பிறந்தார் பாட்டுப்

இயேசு பிறந்தார் பாட்டுப் பாடுங்க
நம் தேவன் பிறந்தார் கைத்தாளம் போடுங்க
ஆனந்த ராகங்கள் பாடிடுங்கள்
ஆர்ப்பரித்து பாலகனை கொண்டாடுங்கள் (2)

1. ஏசாயா திருவாக்கு நிறைவேறவே
ஈசாவின் அடிமரம் துளிர்த்ததுவே
ஏழையாக அவதரித்தார்
தாழ்மையாக வந்துதித்தார்
பாரெங்கும் சந்தோஷம் பெருகிடவே - (இந்த)

2. ஏவாளால் பிறந்திட்ட சாபம் நீங்க
ஏகமாய் பூமியில் பாவம் தீர்க்க
பாலகனாய் வானவரே
பாரினிலே அவதரித்தார்
பாரெங்கும் சமாதனம் நிலைத்திடவே - (இந்த)

3. தொழுவத்தில் பிறந்திட்ட விண்வேந்தரே
பிறந்திட்டோம் எம்முள்ளம் அரசாளுமே
பாவங்களை மன்னித்திடும்
பாசமுடன் ஏற்றுக்கொள்ளும்
என்றென்றும் நாங்கள் உம் பிள்ளைகளே - (தேவா)

1193.இயேசு போதுமே என்னை

இயேசு போதுமே என்னை நேசிக்க
இயேசு ஒருவரே எந்தன் ரட்சகர்
என் பாவங்கள் என் சாபங்கள்
என் துரோகங்கள் மாற்றினார்

என் துக்கங்கள் என் துயரங்கள்
என் துன்பங்கள் போக்கினார்
இயேசு போதுமே என்னை நேசிக்க
இயேசு ஒருவரே எந்தன் ரட்சகர்

1. துக்கம் துளைக்குதோ
பெறும் துயரம் வாட்டுதோ
நீ இயேசுவின் சேனையாய்
எதற்கும் அஞ்சிடாதே

யுத்தத்தில் வல்லவர்
கிருபைகள் நிறைந்தவர்
சாவை வென்றவர் சர்வ வல்லவர்
சகலமும் படைத்தவர் உன்னை
இமைப்போல காப்பாரே

2. சோதனை கண்டுமே மனம்
உடைந்து போனாயோ
பெரும் சோதனையை சகித்தவர்
என்றும் உன்னோடிருக்கிறார்

இயேசு பாதத்தை காத்திடு
மீட்பர் இயேசுவே
உந்தன் ரட்சகர் நம்பிடு
பரிகாரி இயேசுவே - இதை
மட்டும் உணர்ந்திடு

1194.இயேசு ராஜனே நேசிக

இயேசு ராஜனே நேசிக்கிறேன்
உம்மையே உயிருள்ள நாளெல்லாம்
உம்மைத்தான் நேசிக்கிறேன் நேசிக்கிறேன் (4)

உயிருள்ள நாளெல்லாம்
உம்மைத்தான் நேசிக்கிறேன்

1. அதிசயமானவரே,
ஆறுதல் நாயகரே
சந்தோஷமே, சமாதானமே..

2. இம்மானுவேல் நீரே
எப்போதும் இருப்பவரே
ஜீவன் தரும் திருவார்த்தையே..

3. பாவங்கள் நிவர்த்தி செய்யும்
கிருபாதாரபலி நீரே
பரிந்து பேசும் ஆசாரியரே..

1195.இயேசுவே தேவன்

இயேசுவே தேவன் என் அன்பரே
இயேசுவே பெலன் என் வாஞ்சை என்றுமே

என் மணவாளன்
என் நேசமானவர்
ஆத்ம நேசர் லீலி புஷ்பமே

1. மதுரமே எந்தன் இயேசுவே
உன் அன்பினால் நான் மகிழ்ந்திடுவேன்
சாரோனின் ரோஜாவும் நீரே
என் இயேசுவே என் ஜோதியே அன்பரே

D-Maj/Blues Rock/T-120

1196.இயேசுவை நோக்கிடு

இயேசுவை நோக்கிடு நோக்கிப் பார்த்திடு
கவலைகள் மறந்திடு அவர் மேல் வைத்திடு
தேவைகள் சந்திப்பார் கவலைகள் மாற்றுவார்
கரத்தால் அணைத்திடுவார் அவரை நம்பிடு

அல்லேலூயா அல்லேலூயா - (4)

1. துன்பத்தினால் உள்ளம் உடைந்து வாடுகின்றாயோ
அன்பர் இயேசு உனக்கு உண்டு கவலைப்படாதே
உள்ளம் மாறிடும் வேதனை நீங்கிடும்
கண்ணீர் துடைத்து ஆறுதல் தருவார்

2. வியாதியினால் சரீரத்தில் பெலவீனமோ
பரிகாரி இயேசு உண்டு மனம் தளராதே
வேதனை மாறிடும் வியாதிகள் நீங்கிடும்
மனது உருகி நிச்சயம் இரங்குவார்

3. தோல்வியாலே உள்ளம் உடைந்து
சொர்ந்து போனாயோ ஜெயம் கொடுக்கும்
இயேசு உண்டு தளர்ந்து போகாதே
தோல்விகள் மாறிடும் சோர்வுகள் விலகிடும்
வெற்றியை தருபவர் நிச்சயம் தருவார்

1197.இயேசுவே எனக்கொரு

இயேசுவே எனக்கொரு ஆசை
என் நெஞ்சில் உள்ள ஆசை
கேட்பாயோ அன்போடு
என் அன்பு தேவனே வா-2

1. நெஞ்சுக்குள்ளே என்னை வச்சி பூட்டிக்கொள்வாயா
உன் கண்ணுக்குள்ளே கருவிழியாய்
சேர்த்துக்கொள்வாயா எண்ணமெல்லாம் கத கதையாய்
நான் சொல்ல வேணும் - என்றும்
என் அருகில் நீ இருந்து
என் குறை போக்கணும்.

2. காடு மலை மேடு எல்லாம் பூமியாகணும் - இந்த
ஜாதி மத பேதமெல்லாம்
மாறிப்போகணும் நம்பி வரும் மனிதரெல்லாம்
வாழ்வு காணனும் உன்னை நா மணக்க பாடிப்பாடி
நான் துதிக்கணும்

1198.இயேசுவே இருள் நிறைந்த

இயேசுவே இருள் நிறைந்த உலகமிது
துன்பம் என்னை நெருக்குதையா
நடக்கச் சொல்லித் தாருமப்பா
நடக்க சொல்லித் தாரும்

நடக்கச் சொல்லித்தாரும்
இயேசுவே இயேசுவே
நடக்கச் சொல்லித்தாரும்
இயேசுவே இயேசுவே

1. தனித்து செல்ல முடியவில்லை
தவித்து நிற்கும் பாவி நான்

2. இருள் நிறைந்த உலகமிது துன்பம் நெருக்குதே
அருள் பெருகும் ஒளியாகி அன்பு தந்த தேவனே
உம்மை விட்டு நான் விலகினாலும்
என்னை மன்னித்து உம்மோடு
அனைத்து செல்லும் இயேசுவே

3. அடம்பிடித்து விலகிடுவேன்
கருனையோடு மன்னியும்
கரம்பிடித்து உம்முடனே
அழைத்து செல்லும் இயேசுவே

1199.இயேசுவுக்கே மகிமை

இயேசுவுக்கே மகிமை என் ராஜவுக்கே மகிமை
துதிப்பேன் என் இயேசு இராஜாவே
அல்லேலூயா

துதிப்பேன் துதிப்பேன்
துதிப்பேன் என் இயேசு இராஜாவே (2)

1. இயேசுவுக்கே நன்றி என் ராஜவுக்கே நன்றி
இயேசுவுக்கே மகிமை என் ராஜவுக்கே மகிமை

இயேசுவே ராஜா இயேசுவே ஆண்டவர்
இயேசுவே கர்த்தர் இயேசுவே மேய்ப்பர் (2)

2. யாவே ஷம்மா கூடவே இருக்கிறார்
யாவே எல்ஷடாய் சர்வவல்லமை தேவன்
யாவே யீரே என் தேவைகளை சந்திப்பார்
யாவே ர.ஃ.பா சுகமளிக்கும் தேவன்
யாவே ஷம்மா கூடவே இருக்கிறார்
யாவே எல்ஷடாய் சர்வவல்லமை தேவன்

3. பரிசுத்த ஆவி பரிசுத்த வல்லமை
பரிசுத்த அக்கனி இப்போதே வரட்டும்
பரிசுத்த ஆவி பரிசுத்த பிரசன்னம்
பரிசுத்த அக்கினி இப்போதே இறங்கட்டும்
பரிசுத்த ஆவி பரிசுத்த பிரச்சனம்
பரிசுத்த அக்கினி இப்போதே இறங்கட்டும்

1200.யோர்தான் நதி கரை

யோர்தான் நதி கரையில்
வந்து இறங்கின வெண்புறாவே
அக்கனி நதியாக எங்கள் மேல்
இன்றே இறங்கிடுமே

1. பெந்தேகோஸ்தே நாளைப் போல
வல்லமையாய் இறங்கிடுமே
தாகத்தோடு காத்து நிற்கிறோம் - தகப்பனே
தயவாக இறங்கிடுமே

2. கணுக்கால் அளவுமல்ல
முழங்கால் அளவுமல்ல
நீச்சல் ஆழம் வேண்டுமே - தகப்பனே
தயவாக இறங்கிடுமே

3. ஆவியின் வரங்களினால்
எங்களை நிரப்பிடுமே
கனியுள்ள வாழ்க்கை வாழ - தகப்பனே
அக்கினியாய் இறங்கிடுமே

1201.தேவாதி தேவனுக்கு நமோ

தேவாதி தேவனுக்கு நமோ நமோ
ராஜாதி ராஜனுக்கு நமோ நமோ

1. சாரோனின் ரோஜாவே சாலேமின் ராஜாவே
சர்வேசு நாதனே நமோ நமோ

ஆ-அல்லேலூயா(4)

2. விண்ணாளும் வேந்தனே மண்ணாளும் மைந்தனே
எணையாளும் தெய்வமே நமோ நமோ

3. யெகோவா தேவனே யெகோவா நிசியே
யெகோவா ஷம்மாவே நமோ நமோ

4. ஆத்தும நேசரே ஆருயிர் நண்பரே
ஆனந்த ராகமே நமோ நமோ

5. திரியேக தேவனே மகத்துவ ராஜனே
மன்னாதி மன்னனே நமோ நமோ

6. காட்டு மிருகங்களில் கிச்சிலியானவரே
ஊற்றுண்ட தைலமே நமோ நமோ

1202.எந்தன் இயேசு எந்நாளும்

எந்தன் இயேசு எந்நாளும் என்னை காப்பாரே
எந்தன் தேவன் எப்போதும் என்னை மறவாரே
அவர் உள்ளங்கையில் என்னை வரைந்தாரே
எப்போதும் என்னை பார்க்கவே

1. தாயைப் போல தேற்றுகிறார் அன்பு காட்டுகிறார்
ஏந்திக் கொள்ளுவார் என்றும் தாங்குவார்
கோழியும் தன் குஞ்சுகளை கூவி

தமது சிறகால் மூடுவதுபோல
ஆபத்தில் நான் கூப்பிடும் போது
ஓடோடி வந்திடுவார் சிறகால் மூடுவார்

2. அக்கினிபோன்ற சோதனையில் கடும் வேதனையில்
கரம் நீட்டியே என்னை தாங்குவார்
எனக்கு என்று பெலன் ஒன்றும் இல்லையே
என் பெலமெல்லாம் இயேசுவே இயேசுவே

அவர் பெலத்தாலே தரும் ஜெயத்தாலே
மலைகளை நொறுக்கிடுவேன்
மதிலையும் தாண்டிடுவேன்

3. வெள்ளம்போல சாத்தானும் வந்து மோதினாலும்
என் தேவனோ பட்சமாய் நிற்பார்
கர்த்தர் எனக்காய் யுத்தம் செய்வாரே

எதிலும் எனக்கு ஜெயங்கொடுப்பாரே
இதுவரை காத்தவர் இனியும் காப்பார்
என்றென்றும் நடத்திடுவார் கூடவே இருந்திடுவார்

1203.இரக்கங்களின் தகப்பன்

இரக்கங்களின் தகப்பன் இயேசு
இன்றே உனக்கு அற்புதம் செய்வார் - 2
நீ கலங்காதே நீ திகையாதே
உன் கண்ணீர்கள் துடைக்கப்படும் - 2

வாழ்கிறார் இயேசு வாழ்கிறார்
எல்லாம் செய்ய வல்லவர்

1. திரளான ஜனங்களை கண்டார்
மனதுருகி நோய்கள் நீக்கினார்
ஐந்து அப்பங்கள் ஏந்தி ஆசீர்வதித்தார்
அனைவரையும் போஷித்து அனுப்பினார்

2. விதவையின் கண்ணீரை கண்டார்
மனதுருகி அழாதே என்றார்
கிட்ட வந்து பாடையைத் தொட்டார்
மரித்தவன் உட்கார்ந்து பேசினான்

3. 38 வருடங்களாய் குளத்தருகே
படுத்திருந்த மகனை தேடிச் சென்றார்
படுக்கையை எடுத்துக் கொண்டு நடக்கச் செய்தார்
பாவம் செய்யாதே என்று எச்சரித்தார்

4. தொலைவில் வந்த தன் மகனைத் கண்டார்
மனதுருகி ஓடிச் சென்றார்
கழுத்தை கட்டி முத்தங்கள் செய்தார்
கொழுத்த கன்று அடித்து கொண்டாடினார்

1204.கனத்திற்கும் மகிமைக்கும்

கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரே
உம்மை துதித்து பாடுகிறோம் (2)
கிருப பெருகுதப்பா உங்க மகிம இறங்குதப்பா

ஆராதனை (4)

1. இரண்டு மூன்று பேர்கள்
ஒருமனமாய் துதித்தால்
நான் இருப்பேன் என்றீரே
என் துதியில் வாழ்பவரே

2. அனேக ஸ்தோத்திரத்தில்
உம்கிருப பெருகுதப்பா
உங்க கிருபை பெருகும்போது
உங்க மகிம விளங்குதப்பா

3. உம்மை மகிமைபடுத்துகிற
எந்த ஸ்தானத்திலும்
நீர் இறங்கி வந்திடுவீர்
எங்களை ஆசீர்வதித்திடுவீர்

1205.கீதங்கள் பாடுவோம் சங்கீத

கீதங்கள் பாடுவோம் சங்கீதங்கள் பாடுவோம்
சந்தோசம் ராஜனாம் இயேசுவை பாடுவோம்
சமாதான தேவன் இயேசுவை பாடுவோம் - 2
சாவாமை உடையவர் இயேசுவை பாடுவோம் - 2

1. பகலில் மேகஸ்தம்பம் இயேசுவை பாடுவோம்
இரவினில் அக்னி ஸ்தம்பம் இயேசுவை பாடுவோம் (2)
எருசலேம் வாழ்வு தரும் இயேசுவை பாடுவோம்
ஏழைகள் தெய்வம் இயேசுவை பாடுவோம் (2)

2. பசி தீர்க்கும் ஜீவ அப்பம் இயேசுவை பாடுவோம்
தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீர் இயேசுவை பாடுவோம்
நாசியில் சுவாசம் தரும் இயேசுவை பாடுவோம்
நமஸ்காரம் சொல்லி சொல்லி இயேசுவை பாடுவோம்

3. ஆயுள் நாளை நீட்டிக்கும் இயேசுவை பாடுவோம்
அகமதில் சுகம் தரும் இயேசுவை பாடுவோம்
அற்புதங்கள் செய்திடும் இயேசுவை பாடுவோம்
அல்லேலூயா சொல்லி சொல்லி இயேசுவை பாடுவோம்

1206.கொல்கதாவின் குருசினிலே

கொல்கதாவின் குருசினிலே
குருதி வெள்ளம் பாய்ந்திடுதே
கள்வனின் பாவம் கழுவிடவே – அவர்
கால் கரம் மார்பினிலே கசிகின்றதே

1. ஈடில்லை இணையுமில்லை
இயேசு என் நேசரைப் போல் எவருமில்லை
உதிரம் வியர்வையாகி
மேனியிலே பெருகுதையா–2
கல்வாரி கொடுமை கண்டு
எனது உள்ளம் உருகுதையா
ஏனிந்த பாடுகள் எனக்காய் தானோ
எனக்காய் தானோ –3

2. மகிமையின் தேவன்மனிதர் முன்னே
மனங்கசந்து அழுது நின்றார்
மா கொடுமை
வார்அடி வாதையாலே
வாடி சிதைந்த மேனியிது
கல்வாரி பாார சிலுவை
சுமந்து நடந்த பாதையிது
ஏனிந்த பாடுகள்
உனக்காய் தானோ –3

3. பரம சுகம் தரும் உதிரம்
ஊற்றென பாய்ந்திடுதே சிலுவையிலே
காளைகள் ஆட்டுக்கடா
தீர்த்திடாத பாவவினை
கல்வாரி சிலுவை அன்பு
நிட்திய லோகம் சேர்க்கும் உன்னை
ஏனிந்த பாடுகள் நமக்காய் தானோ
நமக்காய் தானோ –3

1207. அன்பரின் நாமம்

அன்பரின் நாமம் இன்பமாய் போற்றி
இன்னோசையால் நாம் வாழ்த்திடுவோம்
ஜெயமடைந்த சுத்தர்களாக
ஜெயகீதம் பாடுவோம்

அல்லேலுயா அல்லேலுயா
அல்லேலுயா என்று ஆர்ப்பரிப்போம்
ஆனந்தம் கொண்டு என்றுமே வாழ்ந்து
ஓயா துதி சாற்றிடுவோம்

1. சோதனை வென்ற சுத்தர் யாவரும்
துன்பம் தொல்லைகள் யாவும் அகன்று
ஜோதி ரூபமாய் சொர்லோகில் ஜொலித்து
வெண் உடை தரித்தோராய்

2. தூதரின் மத்தியில் மகிழ்ந்து கொண்டாடிட
தூயரின் சத்தம் கேட்டு மகிழ்ந்திட
வாசனை வீசும் பூக்களின் மத்தியில்
இன்பமாய் நாம் வாழுவோம் (அல்லேலுயா)

3. கண்ணீர் துயர்கள் கவலைகள் போக்கி
ஓய்வின்றி பாடும் மோட்ச நகரில்
தங்க கிரீடம் தலையில் தரித்து
தலைவனை போற்றுவோம்

4. மோட்ச பாக்கியத்தை நினைக்கும் போது
பொங்குதென் உள்ளம் சந்தோஷத்தாலே
எப்போ வருவார் என்னையும் சேர்ப்பார்
நேசர் மார்பில் சாருவேன் (அல்லேலுயா)

1208. அன்பரின் நேசமே என்

அன்பரின் நேசமே என் இன்பமே உமக்கு நான்
என்றென்றுமாய் புகழ் கொண்டாடுவேன்

1. பாவம் போக்கினீர் சாபம் நீக்கினீர்
வரம் ஈந்திட்டீர் பரமுமேகினீர்
நீரே என் வாஞ்சை உள்ளத்தின் இன்பம்
கண்டு களிக்க என்று வருவீர்
ஆனந்தமாய் ஆசை பொங்கிடுதே

2. பாவ ஆசையால் படுமோசத்தால்
கொடும் வாதையால் மரணபயத்தால்
தாவியே வந்து பாவியின் பாரம்
யாவையும் நீக்கி ஜீவனீந்தே
மேவியே உம் பாதம் போற்றி நிற்பேன்

3. அன்பினாலதோ என்னை மீட்கவோ
நிந்தையான ஓர் மரணமானீரோ
பார சிலுவை பாவி எனக்காய்
பதிந்த தோளில் சுமந்தீரோ நீர்
பார்த்திபனே பதில் என் செய்வேனோ

4. ஒரே யாகத்தால் ஒரே ஆவியால்
பரிசுத்தமாம் மணவாட்டியாக
பூரணராய் நிற்க புண்ணியம செய்த
அண்ணலின் அன்பை வர்ணிக்கலாமோ
எண்ணியே என் மனம் பொங்கிடுதே

1209. அன்புள்ள நேசர் இயேசு

1. அன்புள்ள நேசர் இயேசு
எனக்கெல்லாம் அவரே
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்
அவர் பள்ளத்தாக்கின் லீலி
எனக்கெல்லாம் அவரே
என் ஆத்துமத்தின் பிராண நாயகர்
துக்கத்தில் என் ஆறுதல்
துன்பத்தில் எனதின்பம்
என் கவலைகளெல்லாம் தாங்குவார்

அவர் பள்ளத்தாக்கின் லீலி
அவர் காலை விடிவெள்ளி
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்

2. என் சஞ்சலங்கள் நீங்க
என் பாவம் மா அன்பாய்
சுமந்து அவர் ஜீவனை விட்டார்
நான் யாவையும் வெறுத்தேன்
என் நேச மீட்பர்க்காய்
அவர் ஒரு பொழுதும் கைவிடமாட்டார்
லோகம் என்னை வெறுத்து
சாத்தான் சோதித்தாலும்
மீட்பர் எனக்கு ஜெயம் தருவார்

3. கர்த்தாவின் சித்தத்துக்கு கீழ்படி வேனானால்
எல்லா துன்பத்தையும் சகிப்பேன்
எனக்கு பயமென்ன அவர் என் பங்கானால்
என் ஆத்துமத்தின் மன்னா இவரே
ஜீவ நதிகள் பாயும்
சொர்க்கத்தை சேர்கையில்
அவர் திருமுகத்தை நான் காண்பேன்

1210. அனுதினமும் உம்மில் நான்

அனுதினமும் உம்மில் நான் வளர்ந்திடவே
உம் அனுக்கிரகம் தர வேண்டுமே
என்னால் ஒன்றும் கூடாதையா
எல்லாம் உம்மால் கூடும்

1. என் ஞானம் கல்வி செல்வங்கள் யாவும்
ஒன்றுமில்லை குப்பை என்று எண்ணுகிறேன்
என் நீதி நியாயம் அழுக்கான கந்தை
என்றே உணர்ந்தேன் என் இயேசுவே

2. அழைத்தவரே உம்மில் பிழைத்திடவே
அவனியில் உமக்காய் வாழ்ந்திடவே
அர்ப்பணிக்கின்றேன் என்னை இன்றே
ஏற்றுக் கொள்ளும் என் இயேசுவே

1211. அபிஷேகம் நுகத்தை

அபிஷேகம் நுகத்தை முறித்திடுமே
அன்பின் ஆவியானவரே
நிரப்பிடுமே எங்கள் உள்ளங்களை
தூய தேவ ஆவியே

1. வல்லமை விளங்கும் ஆவியே
வரங்கள் நல்கும் ஆவியே
வானம் திறந்து அக்கினி மழையாய்
வாரும் எங்கள் மத்தியிலே

2. தாகம் தீர்க்கும் ஆவியே
தடைகள் உடைக்கும் ஆவியே
கட்டுகள் உடைத்து கண்ணீரை துடைத்து
கவலை நீக்கும் ஆவியே

3. சுத்திகரிக்கும் ஆவியே
சுயத்தை நொறுக்கும் ஆவியே
தேவ சுபாவம் கிருபை நல்கும்
பரிந்து பேசும் ஆவியே

4. அறிவை உணர்த்தும் ஆவியே
ஆற்றல் விளங்கும் ஆவியே
தேவ சபையில் வாசம் செய்யும்
மகிமை விளங்கும் ஆவியே

5. உருக்கும் அக்கினி எரியுமாப் போல்
வானம் கிழித்து இறங்குமே
ஜாதி ஜனங்கள் தேசம் அசைய
அரும் பெரும் காரியம் செய்திடுமே

6. துள்ளிக் குதிக்கும் மான்கள் போல
காண்டா மிருக ஆற்றல் போல
நிமிர்ந்து நிற்கும் கேதுரு போல
தேவ சபையை நிறுத்துமே

1212. அணைக்கும் கரங்களுண்டு

அணைக்கும் கரங்களுண்டு
ஆற்றும் நேசருண்டு
வேஷமான மனித உலகில்
தேற்றும் இயேசுவுண்டு - 2

1. அன்பின் பஞ்சத்தினால் அலைந்து திரிந்தேனே
மிஞ்சும் சோகத்தினால் நெஞ்சம் துடித்தேனே
அன்பர் அன்பு துன்பம் நீக்க
இன்பம் கண்டேனே

2. அள்ளி அணைத்திடுவார் அணைத்து
முத்தம் செய்வார் துள்ளி தூக்கிடுவார்
தோளில் சுமந்திடுவார் இதய ஏக்கம் தீர்க்கும்
தேவன் இயேசு நல்லவரே

3. அப்பா என அழைக்க இப்போ ஓடி வந்தேன்
தாயின் மடி தவழும் சேயாய் மாறிடுவேன்
மார்பில் சாய்ந்து கவலை மறப்பேன்
ஆனந்தம் கொள்வேன்

4. உம்மையன்றி என்னை தேற்ற யாருமில்லை
சுற்றத்தாரின் அன்பு சூன்யமாகிடுதே
தவிக்கும் உள்ளம் தாகம் தீர
உம்மில் மகிழ்ந்திடுவேன்

5. ஆதி அன்பு தனில் தினமும் திளைத்திடவே!
ஆவி ஈந்தருளும் அனலை மூட்டிவிடும்
வெள்ளம் திரண்ட தண்ணீரும்
அன்பை அணைக்க முடியாதே

1213. அவர் தழும்புகளால் குணமாகி

1. அவர் தழும்புகளால் குணமாகினேனே
அவரே சுமந்தார் எந்தன் நோவை
அவர் பாடுகளால் அதில் பெலன் அளித்தார்
அரியதோர் வைத்தியரே

குணமானேன் நான் குணமானேன்
இயேசுவின் தழும்புகளால்

2. பன்னிரு ஆண்டுகள் கொடும் நோயதினால்
இந்நிலம் வருந்தி வந்த மாதை
மகளே திடன்கொள் சுகமானாய் எனவே
மொழிந்த மா நேசரிவர்

3. சித்தமுண்டெனக்கு சுத்தமாவாய் என
சத்தியர் தொட்டுமே குஷ்டம் போக்கி
சந்தோஷம் பகர்ந்த இயேசு என்னும்மருந்தே
சந்ததம் எனக்கும் அவர்

4. பதினெண்ணாண்டுகள் கூனியாயிருந்த
அணங்கை நிமிரச் செய்த அவர்
சாத்தானின் தலையை நசுக்கின வல்லவர்
சக்தியுமே எனக்களித்தார்

5. திருவாக்கை நம்பி வருவீர் ஜனமே
மருவில் யாருண்டு இயேசுவல்லால்
தருவீர் இதயம் பூரணமாய் அவர்க்கே
இவருந்தன் இரட்சகரே

1214. அற்புத தேவனின் செய்கை

அற்புத தேவனின் செய்கைகள் யாவுமே
அற்புதமே என்றும் அற்புதமே
தேவனின் அற்புதம் உந்தனில் மலர
தேவனின் பாதம் சரண்டைவாய்

1. எகிப்தின் பாரம் விலகிடுதே
இருளும் நீங்கி ஒளி பெறுதே
அகத்தினில் மறைந்திடும் பாவங்கள் நீக்கி
இயேசுவின் ஒளியும் தோன்றிடுதே - அற்புத

2. சிவந்த கடலும் வழிவிடுமே
தடையாம் எரிகோ அகன்றிடுமே
கர்த்தரின் வார்த்தையின் வல்லமையாலே
அற்புதம் உந்தனில் வெளிப்படுமே - அற்புத

3. வறண்ட தாகம் தீர்த்திடவே
ஓங்கிய புயத்தை நீட்டினாரே
கன்மலை திறந்து தாகமே தீர்த்திடுவார்
எந்தனின் தாகத்தை தீர்த்திடுவார் - அற்புத

4. குருடர் செவிடர் முடவருக்கும்
சுகமே இயேசு அளித்தனரே
இயேசுவின் நாமம் ஔஷதமாகும்
அற்புத சுகமே அடைந்திடுவாய் - அற்புத

5. சீறும் கடலை அமர்த்தினாரே
சீடரின் பயத்தை அகற்றினாரே
உந்தனின் பயங்கள் யாவையும் நீக்கி
அற்புதர் ஜெயமாய் நடத்திடுவார் - அற்புத

E-Min/80’Fusion/T-125

1215. அறுவடைக் கதிர்கள் செழித்தி

அறுவடைக் கதிர்கள் செழித்திருக்க - அதை
அறுத்திட ஆளில்லையே
அழைக்கும் இயேசுவின் குரல் கேட்டு - நாம்
ஆத்தும அறுவடை நடத்திடுவோம்.

1. ஆத்துமாக்கள் மேல் அவர் தாகம் கொண்டார்
அதை அவரிடம் தாருங்களே
சத்தியத்தின் மேல் உங்கள்
வாழ்க்கை அமைந்தால் - அது
நிச்சயம் சிறந்திருக்கும்.

2. ஓநாய்களுக்குள்ளே நாம் ஆடுகள் போல்
தினம் உலவிடும் நாள் வந்ததே
கிறிஸ்துவுக்குள் நீ சரணடைந்தால் - எந்த
கவலையும் கரைந்திடுமே

3. உள்ளங்களை நீ கொள்ளை கொள்வாய்
அதில் இயேசுவை ஏற்றி வைப்பாய்
சிலுவை வழி அது சிறந்த வழி - இனி
இயேசுவே நமது கதி

4. ஆத்துமாக்களை ஆதாயம் செய்வோன்
அவன் போற்றிடும் ஞான முள்ளவன்
பாவ வழி அதை விட்டொழிப்பவன்
அவன் தேவனின் தயை பெற்றவன்

1216. ஆ இன்ப நேசர் இயேசு

ஆ இன்ப நேசர் இயேசுவின்
அதிசய அன்பிதாம்
பார்த்திடாயோ கல்வாரியில்

1. பாவ உலகத்தின் காட்சி
பார்த்தே மனம் பதைத்துருகி
எந்தனை மீட்கவே சொந்த உதிரத்தைச்
சிந்தி மீட்டவரே - ஆ, ஆ

2. நாடிய உமதன்பில் தவறேன்
தேடிய நன்மையை மறவேன்
பாடியே தோத்திரம் கோடியுகங்களாய்
ஏற்று வேனுமக்கே - ஆ, ஆ

3. ஆத்தும வேதனையாலே
அழுதே புலம்பிய தூயர்
ஆவலுடன் சேரும் தேசமதிலுமென்
பங்கை ஈந்திட்டீரே - ஆ, ஆ

4. ஓட்டம் ஜெயத்துடன் ஓடி
ஒளியாம் ஜீவனே சுவைப் போல்
வீசும் ஒளியதில் வீரமாய் நடந்தோர்
கிரீடம் சூடிடுவார் - ஆ, ஆ

5. மாறாத அன்பின் சொரூபி
மாவாதையாலெமை வென்றீர்
கொல்கதாவில் ஜெயம் அல்லேலூயா துதி
ஆசை நேசருக்கே - ஆ, ஆ

1217. ஆ சுந்தர வீடே என்

ஆ சுந்தர வீடே என் சோபித வீடேஎன்றும்
ஆனந்தமாய் உம்மில் வாழ்ந்திடுவேன்

1. மாமகிமையாம் மனோகரமாய் தேவன்
திருகை நிர்மாணித்ததாம்
சேருவேனே சொர்காலயமே

2. மின்னுதே ஈராறு வாசல்களும்
விண்ணுலகில் நித்திய ஆலயத்தில்
சௌபாக்கியமே நான் வாழ்ந்திடுவேன்

3. சீர் எழும் பொன்திரு வீதிகளால்
பேர் பெறும் சுந்தர வீடதையே
இதோ தூரத்திலேஅதைக்காண்கிறேன் நான்

4. குரோதனம் வேதனை ஏதுமில்லை
இராப்பகல் வேற்றுமை அங்கேயில்லை
தேவாட்டுக்குட்டி தீபமாகிடுவார்

5. கூடுதே இரத்தசாட்சி சங்கம்
பிதாவின் முன்னில் சர்வ சித்தருமாய்
ஆத்ம நேசர் கண்ணீர்தாம் துடைப்பார்

6. தூதர் அல்லேலுயா பாடிடுவார்
தூதர் பொன் வீணைகள் மீட்டிடுவார்
ஆ கீத நாதம் இதோ கேட்கிறதே

7. பாவ சரீரமும் மாறிடுமே
இராஜன் இயேசுவை காண்பதற்காய்
நான் போவதாலே என்ன ஆனந்தமே

1218. ஆயிரம் பேரில் சிறந்தவர்

ஆயிரம் பேரில் சிறந்தவர் - என் இயேசு ராஜன்
அழகில் முற்றும் சிறந்தவர் - இவர் எந்தன் நேசர்
என்னோடு என்றும் வாழ்பவர்
என் நேசர் என் நண்பர் எந்நாளும் எனைக்காப்பார்
தோளின் மேல் சுமந்திடுவார்

1. கண் துயிலும் நேரம் எனைத்தேடி ஓடி வந்தாரே
கைவிரலை கதவில் விட்டாரே
உன் நேசம் இன்பம் அது மதுரம் என்று சொன்னாரே
என் பிரியம் என்றுரைத்தாரே
வெள்ளைப் போளம் வாசம் வீசிடவே
தூபஸ்தம்பம் போல வருகிறார்
உள்ளம் துள்ளிப்பாடும் மகிழ்ந்தாடும்
என்னில் எப்போதும்

2. கன்மலையின் ஓரம் தங்கும் புறாவே என் உத்தமியே
கண்களால் என்னை வென்றாயே
துதி மலர் தொடுப்பேன் மாலையிடுவேன் என் மன்னனுக்கே
புதுப்பாடல் பாடிடுவேனே
கோடியுகம் கூட வாழ்ந்திடுவேன்
என் தாகம் நீரே
உம்மைப்பாட வரம் தந்தருளும்

3. கர்த்தர் அன்பை பாட புகழ் சூட நாவு போதாதே
ஈடு இணை ஏதும் இல்லையே
மாந்தர் மனம் மகிழ துயர் அகல துணை வந்தாரே
தரணியில் காத்திடுவாரே
ஆவியினால் களி கூர்ந்திடுவேன்
நீதியினால் என்றும் வாழ்ந்திடுவேன்
என் நேசர் வருவார் என்னை அணைப்பார்
நான் என்ன சொல்வேன்!

1219. ஆயிரம் வருட அரசாட்சியே

ஆயிரம் வருட அரசாட்சியே
பரிசுத்தவான்களின் இராஜ்ஜியமே
பரம பிதா வேதவாக்கிதே
பசுமை பொற்காலம் வருகின்றதே

1. பசுவும் கரடியும் கூடி மேயுமே
புலியும் வெள்ளாடும் படுத்திருக்கும்
ஒரு மித்து நடக்கும் காளையும் சிங்கமும்
ஒரு சிறு பையனே நடத்திடுவான்

2. இடுக்கண்கள் தீங்கு இழைப்பார் இல்லை
இகத்தில் கர்த்தாவின் மகிமை தங்கும்
குழந்தையின் கரங்கள் பாம்பின் மண் புதரில்
கலக்கம் பயமின்றி விளையாடுமே

3. வறண்ட நிலங்களும் செழித் தோங்குமே
விருட்சங்கள் இனிய கனி தருமே
அமைதியும் நிலவும் சுகவாழ்வு தளிர்க்கும்
அற்பாயுசுள்ளோர்கள் அதில் இல்லையே

4. கிறிஸ்தேசு ராஜா புவி ஆளுவார்
கிடைக்கும் நல் நீதி எளியவர்க்கே
பரிபூரணமடைந்த மெய்தூய பக்தர்கள்
பரனோடு நீடூழி அரசாளவே

E-Maj/Rock Shuffle/T-120

1220. ஆசை மணாளனே ஆமேன்

1. ஆசை மணாளனே ஆமேன் நீர் வாருமே
ஆவி மணாளியும் அழைக்கும் ஓசையே

ஓ! ஓ! வேகம் வாருமே
எம் கர்த்தனே நீர்
ஆ, ஆ ஆவல் பெருகுதே
அல்லேலூயா கீதங்கள்
பாடி பறந்து செல்வோமே

2. சுத்த பிரகாசமாம் தூயரின் நீதியாம்
சித்திர தையலாய் யேசுடை அணிந்தவர்

3. பிதாவின் நாமமே நெற்றியில் அணிந்தவர்
புதிய பாட்டுடன் சீயோனில் நிற்கிறார்

4. குற்றம் குறைகளும் மற்றும் கரைகளும்
அற்ற மகிமையை பெற்ற சபையதோ

5. எப்போ நான் காண்பேனோ என் ஆசை ஏறுதே
பொற்பரன் இயேசுவை கண்டு களிக்கவே

6. பரிசுத்த ஆவியால் மறுரூபமாகியே
திரியேக தேவனை சேவிக்க நித்தியமாய்

1221. ஆதாரம் நீர்தானய்யா

ஆதாரம் நீர்தானய்யா
எந்தன் துணையுமே நீர்தானய்யா
உம்மை துதி பாடி போற்றியே
மகிமை செலுத்திடுவேன்

உமக்கு நன்றி நன்றி ஐயா
உமக்கு ஸ்தோத்திரம் - (2) ஐயா
உமக்கு மகிமை மகிமை ஐயா
உமக்கு புகழ்ச்சி புகழ்ச்சி ஐயா

1. என்னோடு என்றென்றும் இருப்பீரய்யா
எந்நாளும் குறை நீக்கி காப்பீரய்யா - 2

2. தீங்குகள் அணுகாமல் காத்தீரய்யா
நன்மைகள் அனுதினம் செய்தீரய்யா - 2

3. வார்த்தையாம் இயேசுவை அளித்தீரய்யா
பாவங்கள் நீங்கியே போனதய்யா - 2

4. ஆவியால் தினம் என்னை நிரப்பினீரே
எந்நாளும் தங்கியே தேற்றினீரே - 2

5. நல் பாத்திரமாய் என்னையும் வனைந்தீரய்யா
உம் போல என்னையும் மாற்றுமய்யா - 2

6. ஆழ்கையில் என் குரலை கேட்டீரய்யா
கரம் தாங்கி என்னையும் தூக்கினீரே - 2

7. சோதனை நேரத்தில் துணை நீரய்யா
வழுவாமல் தினம் காத்து ஜெயமீந்தீரே -

1222. ஆவியின் மழையே பொழியும்

ஆவியின் மழையே பொழியும் நேரம்
என்ன பேரின்பம்
தூய தேவனின் சாயல் அடையும்
வேளை நெருங்கிடுதே - அல்லேலூயா

1. ஆதி அந்தம் இல்லாத தேவா
உம்மை போற்றுகிறோம்
முன் குறித்தீரே முத்திரையிட்டீரே
எந்தன் துணை நீரே நான் உந்தன் சொந்தம்

2. தூய ஆவி இறங்கிடும் வேளை
பாவம் விலகிடுமே
ஜீவிய பாதையில் சீராக செல்ல
நல் வழி நடத்திடுமே
விண் வாழ்வடைய

3. அன்பின் ஆவி அகத்தினில் பொழிய
சிந்தை மாறிடுமே
பகைகள் அகலும் பாசம வளரும்
நேசம் நிறைந்திடுமே
என் உள்ளம் பொங்கும்

4. ஜெபத்தின் ஆவி இறங்கிடும் வேளை
ஜீவியம் மாறிடுமே
உள்ளம் உடைந்து உருகி ஜெபிக்க
தந்தேன் எந்தனையே
உம் பாதம் வந்தேன்

1223. ஆவியே தூய ஆவியே

ஆவியே தூய ஆவியே
பரிசுத்த ஆவி - மகிமையே
இந்நேரமே எம்மில் இறங்கிடுமே

1. கர்த்தர் தந்த ஆவியில்
கருத்தாய் என்றும் செயல்பட
சுத்தர் சென்ற பாதையில்
செம்மையாய் என்றும் நடந்திட
அந்தரங்க வாழ்வினில் - 2
அன்பின் ஆவி பெற்றிட
வல்லவாவியே இப்போ
இந்நேரமே எம்மில் இறங்கிடுமே (2)

2. அன்று கண்ட இயேசுவை
இன்றும் என்றும் பாடவே
வம்பு வாதம் பின் மாற்றம்
இன்றும் என்றும் மறையவே
கொம்பு உயர்ந்த அனுபவம்
இங்கே என்றும் நிலைத்திட
கெம்பீரமாய் இப்போ இறங்கிடுமே
இந்நேரமே எம்மில் இறங்கிடுமே (2)

3. தூய்மை வாழ்வு ஆவி பெற்று
சுவிசேஷம் என்றும் பெருகிட
தாழ்மை ஆவி என்றும் பெற்று
இயேசுவில் என்றும் வளர்ந்திட
பெருமை ஆவி நீக்கியே
ஆவி பெலனும் பெற்றிட
தேவாவியே இப்போ இறங்கிடுமே
இந்நேரமே எம்மில் இறங்கிடுமே (2)

1224. ஆறுதலின் நாயகனே

ஆறுதலின் நாயகனே
அல்லல் தீர்க்கும் வல்லவனே
பாவம் போக்கும் பரிசுத்தரே
பாதம் பணிந்து பாடுவேனே

1. உலகம் மாயை என்றறிந்தேன்
உலகில் ஒன்றும் இல்லை ஐயா
நேசித்தவர் பிரிந்திட்டாலும்
நேசர் என்னை விட்டுப் பிரியார் (ஆறுதலின்)

2. யாருமற்ற அகதியானேன்
ஏற்றுக் கொள்வார் யாருமில்லை
என்று சொல்லி கதறும் போது
ஏந்தினீரே உம் கரத்தால் (ஆறுதலின்)

3. உற்றார் பெற்றார் யாவும் இழந்து
உரிமையாக உம்மேல் சார்ந்தேன்
திக்கற்றோராய் கைவிடேன் என்ற
சத்தம் கேட்டு சாந்தி அடைந்தேன் (ஆறுதலின்)

1225. இஸ்ரவேலின் பரிசுத்தரே

இஸ்ரவேலின் பரிசுத்தரே
புகழுகின்றோம் தொழுகின்றோம்
ஆராதனை செய்கிறோம்
ஆர்ப்பரித்து ஆடி மகிழ்வோம்

1. மகிமை கனமும் உம்முடையது
ஞானம் பெலனும் உம்முடையது
உம்மில் நாங்கள் ஆளுகை செய்வோம்
உம்மால் நாங்கள் மதிலைத் தாண்டுவோம்

2. பூமியும் நிறைவும் உம்முடையது
பொன்னும் வெள்ளியும் உம்முடையது
உம்மில் நாங்கள் ஐசுவரியவான்கள்
உம்மால் நாங்கள் உதவும் கரங்கள்

3. வல்லமை இரட்சிப்பும் உம்முடையது
வரங்கள் கிருபையும் உம்முடையது
உம்மில் நாங்கள் ஊழியம் செய்வொம்
உம்மால் நாங்கள் உயர்த்தப்படுவோம்

4. நாங்கள் இனிமேல் அடிமைகளல்ல
நாங்கள் இனியும் தரித்திரரல்ல
உம்மில் நாங்கள் ஆசாரியர்கள்
உம்மால் நாங்கள் இராஜாக்கள்

E-Maj/70's Disco/T-120

1226. இன்னமும் தாமதமேன்

இன்னமும் தாமதமேன்
இன்பச் சத்தம் கேளாயோ
இன்னலின்று காத்திட
இன்றுன்னை அழைக்கிறாரே

ஜீவனின் அதிபதி இயேசுவண்டை
நித்திய ஜீவன் உண்டே
நீங்கிடா அவர் அன்பையே
நாடி நீ வந்திடாயோ

1. கல்வாரி மேட்டினிலே
கரங்களை விரித்தவராய்
காத்து உன்னை இரட்சித்திட
கனிவுடன் அழைக்கிறாரே (ஜீவனின்)

2. லோகத்தின் இன்பமெல்லாம்
மாறிடும் ஷணப்பொழுதில்
மாறிடா நேசர் இயேசு
மாண்புடன் அழைக்கிறாரே (ஜீவனின்)

3. நாளை உன் நாளாகுமோ
நாடாயோ நாதனை நீ
நாசலோகை மீட்டிட
நாதன் அழைக்கிறாரே (ஜீவனின்)

1227. இன்று கிறிஸ்து இரட்சகர்

இன்று கிறிஸ்து இரட்சகர் பிறந்தார்
என்று தூதன் சாற்றிடவே
அன்று மாத்திரமல்ல அந்த சந்தோஷம்
இன்று வரையும் நமக்கு உண்டே
அவர் நாமம் அதிசயமானவர்
அவர் எந்தன் ஆலோசனைக் கர்த்தர்
வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா
சமாதானப் பிரபு இவரே

1. மரியாளும் ஸ்திரீகளுக்குள்ளே மிக
ஆசீர்வதிக்கப்பட்டாள்
கிருபை பெற்ற மாதே வாழ்க என்றே
வாழ்த்தினான் ஓர் தூதன் வந்தே

2. வழி தப்பி சிதறி அலைந்தோம்
வழி காட்டி நடத்தி சென்றார்
நல்ல மேய்ப்பன் இயேசுவின் குரல் கேட்டோம்
நித்திய ஜீவன் நமக்களித்தார்

3. பெத்லகேம் ஓர் புண்ணிய ஸ்தலமே
பரன் இயேசு அதில் பிறந்தார்
மேய்ப்பன் கூட்டம் வான சாஸ்திரிகளும்
மேசியாவை தொழுதனரே

4. பாவ சாபம் ரோகங்கள் தீரும்
பரன் பாதம் பணிந்திடுவோம்
சிறு பிள்ளையைப் போல தாழ்த்திடுவோம்
மறுபிறப்பை நமக்களித்தார்

5. ஏழை ஆயர் குடியில் பிறந்தார்
எளிமையாய் ஜீவித்தவர்
ஏசு போல நாமும் மாறிடுவோம்
இது நமது நம்பிக்கையே

E-Maj/Hard Rock/T-125

1228. இன்று கண்ட எகிப்தியனை

இன்று கண்ட எகிப்தியனை
என்றுமே இனி காண்பதில்லை
இஸ்ரவேலை காக்கும் தேவன்
உறங்கவில்லை தூங்கவில்லை

1. கசந்தமாரா மதுரமாகும்
வசந்தமாய் உன் வாழ்க்கை மாறும்
கண்ணீரோடு நீ விதைத்தால்
கெம்பீரமாய் அறுத்திடுவாய் (இஸ்ரவேலை)

2. தண்ணீரை நீ கடக்கும் போது
கண்ணீரை அவர் துடைத்திடுவார்
வெள்ளம்போல சத்துரு வந்தால்
ஆவியால் கொடியேற்றிடுவார் (இஸ்ரவேலை)

3. வாதை உந்தன் கூடாரத்தை
அநுகாமலே காத்திடுவார்
பாதையிலே காக்கும்படிக்கு
தூதர்களை அனுப்பிடுவார் (இஸ்ரவேலை)

4. சோர்ந்துபோன உனக்கு அவர்
சத்துவத்தை அளித்திடுவார்
கோரமான புயல் வந்தாலும்
போதகத்தால் தேற்றிடுவார் (இஸ்ரவேலை)

1229. இயேசுவைப் போல எனக்

இயேசுவைப் போல எனக்கொரு நேசர்
உலகினில் வேறில்லை
நேசரின் நேசம்போல் தெவிட்டாத இன்பம்
இகமதில் வேறில்லை

1. மாறாத அன்பு நித்திய நேசம்
மானிடர்க் கீந்தாரே
மறதியின் பூமியில் மறந்திடுவேனோ
மகிமையின் நேசத்தையே மகிழ்வேன் உம் அன்பினிலே

2. அலைந்திட்டேன் பலநாள் அமைதலும் இல்லையே
அன்பினை அறியுமுன்னே
மந்தையின் காலடி தொடர்ந்திட்ட பின்னே
மகிமையே இறங்கிடுதே தேவ மகிமையை காண்கின்றேனே

3. நேசரில் எல்லாம் உன்னதர் நீரே
நேசிப்பேன் உத்தமமாய்
இடதுகை தலைகீழ் வலக்கரம் அணைக்கும்
நேசமே இன்பமிதே நேசத்தால் சோகமானேன்

4. மலைகள் மேல் குதித்தும் குன்றின்மேல் துள்ளி
வருகிறார் நேசர் இவர்
மலர்ந்திட்ட அவர் முகம் காண்பிக்கின்றாரே
கல்வாரி நாயகனே களிப்பேன் உம்அன்பினிலே

5. சந்திரனைப்போல அழகுடன் இலங்கி
சூரியன் போல் ஒளியே
கொடிகள் பறந்திடும் படையினைப் போல
உதித்திடும் யார் இவளோ சபையாம் மணவாளியோ

6. எப்போ நீர் வருவீர் ஏங்குகின்றேனே
இயேசுவே சீக்கிரமே
ஏகமாய் இணைந்திடும் நாள்தனை எண்ணியே
ஏகுவேன் இகமதிலே துதித்திடுவேன் தினமே

1230. இயேசுவே உம் சாயல்

இயேசுவே உம் சாயல் காண
ஏங்குதே என் உள்ளம் - இன்னும்
என்று சேர்வேன் உந்தன் சமூகம்
அன்றே தீருமே எந்தன் ஆவல் - 2

1. தொல்லை மிகுந்த இவ்வுலகில்
நல்ல துணையும் நீரல்லவோ
இன்னும் நானும் உம்மண்டை சேர
உன்னத பெலனை தாரும் ஐயனே - 2

2. மாய உலகின் இன்பம் வெறுத்தேன்
தூயனின் சமூகம் வரவே
ஆவி ஆத்மா தேகம் முற்றும்
அர்ப்பணித்தேனே எந்தன் தேவனே - 2 (இயேசுவே)

3. உமது வேதம் எனது மகிழ்ச்சி
இரவும் பகலும் என் தியானமன்றோ
உமது மகிமை காண மேலும்
கிருபை செய்வீர் எந்தன் தேவனே - 2 (இயேசுவே)

4. கானல் நீரைத் தேடி ஓடும்
மானைப் போலக் கதறுகிறேன்
எந்தன் ஆத்மா உம்மைச் சேர
கிருபை செய்வீர் எந்தன் தேவனே - 2 (இயேசுவே)

5. பாரில் எந்தன் ஓட்டம் முடித்தே
பரத்தில் வாசம் செய்திடுவேன்
உமது சமூகம் சீயோன் அடைய
உதவி செய்வீர் தேவ ஆவியே - 2 (இயேசுவே)

1231. இயேசுவே உம்மை காணா

1. இயேசுவே உம்மை
காணாமல் கண்கள் உறங்காது
உந்தன் பேரைச் சொல்லாமல்
உள்ளம் உறங்காது
கடலில் சென்று சேராமல்
நதியும் அடங்காது

இறைவா உம்மைச் சேராமல்
இமைகள் உறங்காது
மேய்ப்பன் நீரும் இல்லாமல்
மேன்மை வாராது

2. இயேசுவே உம்மைக் கண்டதினால்
இன்னும் இருக்கின்றோம்
இருளில் அழுத கண்ணீரால்
இங்கு இருக்கின்றோம்
நீங்கள் போன வழி பார்த்து
உம்மை தொடர்கின்றோம்

மீண்டும் வருவேன் என்றதால்
காத்து இருக்கின்றோம்
உம்மைத் தேடி எல்லோரும்
சிலுவை சுமக்கின்றோம்

3. மந்தைகள் பாடும் சோகங்கள்
காதில் விழ வேண்டும்
நல்ல மேய்ப்பன் நீரன்றோ
இன்றே வர வேண்டும்
உம்மை கண்டு மண் மீது
உயிர்கள் தொழ வேண்டும்

வார்த்தை ஏதும் பேசாமல்
கண்கள் அழ வேண்டும்
தேவ மைந்தன் பாதத்தில்
கண்ணீர் விட வேண்டும்

1232. இயேசுவே தேவனின்

இயேசுவே தேவனின் நேசகுமாரன்
பாசமும் அன்பும் உள்ளோர்
பாதையும் சத்தியம் ஜீவனும் இவரே
மாறிடா மீட்பரும் நீர்

அல்லேலூயா மகிமை
வல்லவர் இயேசுவுக்கே
மாந்தரில் மாறா அன்பு கொண்டாரே
மகிபனுக்கே மகிமை

1. தேவனின் தூய நல் சாயல் இழந்தேன்
கோபத்தின் பாத்திரரே
தேடியே வந்து ஆக்கினை போக்கும்
தேவாட்டுக் குட்டியிதோ

2. வந்தனரே தேவ சித்தமே செய்ய
சொந்த சரீரத்திலே
எந்தையே தூய தாழ்மையின் மேன்மை
சிந்தையில் தரித்திடுவோம்

3. இன்பத்திலும் வரும் துன்பத்திலும்
இம்மானுவேலன் இவர்
உன்னத அன்பில் காத்திடுவாரே
உகந்தவர் கரமதிலே

4. யாக்கோபின் தாரகையாய் உதித்தோங்கும
யூதசிங்கம் இவரே
தாவீதின் வேரில் கிளையாய் தோன்றுவார்
இணையற்ற இரட்சகரே

1233. இயேசுவோடு இணைந்த

1. இயேசுவோடு இணைந்த வாழ்வினை
தேடி தெரிந்துக் கொண்டேன்
இதுவே தூய தேவ அன்பே - போதும்
மாய உலகினிலே - போதும் தூய தேவ அன்பே

2. மனித அன்பு மாறி மறையும் மாறிடாத தேவ அன்பே
இணையில்லாத நல்ல பங்கே
இதற்கு நிகர் எதுவும் இல்லையே
இம்மை மறுமையிலே - 2

3. பஞ்சமோ பசி பட்டயமோ
மிஞ்சும் துன்பம் தொல்லை வந்தும்
கிறிஸ்துவின் அன்பை விட்டென்றென்றும்
பறித்துப் பிரித்திடாதே
என்னையும் பரமன் கைவிடாரே - 2

4. உலக ஆசை பாவம் பெருக
உண்மை நேர்மை எங்குமில்லை
இதுனை காணும் நீதிமான்கள்
இதயம் நொறுங்கிடுதே
தினமும் கதறி ஜெபித்திடவே - 2

5. எனது ஆவி ஆத்மா தேகம்
இயேசு சொந்தமாகக் கொண்டார்
மரணமோ என் ஜீவனோ நான்
மகிமை மேல் மகிமை அடைந்தே
மகிபன் முகம் காண்பேன் - 2

1234. இயேசுவின் இரத்தம் ஜெய

இயேசுவின் இரத்தம் ஜெயமே
தூய இரத்தத்தால் வெற்றி வெற்றியே
இயேசு இரத்தத்தால் சாத்தான் வீழ்ந்தான்

1. பாவத்தில் வாழ்ந்த காலத்தில்
நிம்மதி அற்ற வேளையில்
என்னை அழைத்தீர் உம்மை அண்டினேன்
உந்தன் இரத்தத்தால் என்னை கழுவினீர் - இயேசுவின்

2. வேதனை நிறைந்த நேரத்தில்
ஆபத்தில் பயந்த வேளையில்
உம்மை கூப்பிட்டேன் என்னருகில் வந்தீர்
உந்தன் இரத்தத்தால் என்னை மூடினீர் - இயேசுவின்

3. சோதனை சூழ்ந்த நேரத்தில்
சேற்றினில் மூழ்கும் வேளையில்
உந்தன் கரத்தை என் மேல் வைத்தீர்
உந்தன் இரத்தத்தால் என்னை மூடினீர் - இயேசுவின்

1235. இயேசுவின் அன்பு பொங்க

இயேசுவின் அன்பு பொங்க
ஏடெடுத்தே வரைந்தேன்
எந்தன் நாவு எழுத்தாணி
எடுத்துரைத்து கவி பாடும் - 2

1. சாந்தமும் சத்தியமும் நீதியும் நேர்மையும்
சொல்லொணா அன்பு தியாகம்
தூய்மையும் நிறைந்தவர்
சீர்திரியேக மைந்தன் மனம் கவர்ந்த மணாளன்
உயிருள்ள மட்டும் உம்மைப் பாடி
உம் நாமம் ஓங்க உழைப்பேனே (இயேசுவின்)

2. கர்த்தரின் காருண்யம் எத்தனை பெரியது
கண்ணுறங்காமல் என்னை இராப்பகல் காப்பவர்
இயேசுவே எந்தன் நேசர்
இம்மானுவேல் எந்தன் மீட்பர்
இம்மட்டும் காத்த எபிநேசர்
இனிமேலும் காக்கும் நல் மீட்பர் (இயேசுவின்)

3. தூயநல் ஆவியே எந்தன் மேல் பொழியுதே
தேற்றரவாளன் என்னை ஆற்றியே தேற்றினார்
துன்பங்கள் இன்பமாக
ஆ மாறுதே வாரும் தேவா
சீயோனிலே மங்கள நாளே
ஜெயகீதம் பாடி மகிழ்வேனே (இயேசுவின்)

1236. இராக்காலத்தில் உபத்திரவம்

இராக்காலத்தில் உபத்திரவம்
வந்திடும் வேளையோ
கலங்காதே என் மனமே
கிருபை உண்டல்லவோ

1. உபத்திரவத்தின் வேளையில்
ஆவி அணைந்து போனதோ
உலக இன்பம் மீண்டும் காண
உந்தனுள்ளம் ஓடுவதேன்

2. இராக்காலத்தின் முடிவிற்காய்
யோபுவைப் போல் தவிப்பதேன்
இரண்டு மடங்கு ஆசீர்வாதம்
இயேசு தேவன் தந்திடுவார்

3. உள்ளம் உணர்வினையடைந்திட
உண்மை தேவன் தந்திட
இராக்காலத்தின் அனுபவத்தில்
இருதயத்தை புடமிடுவார்

4. இராக்காலத்தின் நேரத்தில்
தாவீதைப் போல் பாடிடுவேன்
எதைக் குறித்தும் கலங்க மாட்டேன்
இயேசு தேவன் ஒளி தருவார்

5. உலக மனிதனின் தரிசனம்
இராவில் கலக்கத்தை எழுப்புதே
மறை பொருளின் விளக்கம் அளிக்கும்
யோசேப்பின் தேவன் நமக்கு உண்டு

1237. உன் வழிகளிலெல்லாம்

உன் வழிகளிலெல்லாம்
இயேசுவை நினைத்துக் கொள்
உந்தன் பாதைகளை அவர் செவ்வையாக்குவார்

1. ஆகாயத்து பறவைகளுக்கு வழியை காட்டுபவர்
ஆழ்கடலின் கப்பலுக்கு திசையை சொல்லுபவர்
அஞ்சாதே மனமே அஞ்சாதே
தஞ்சம் இயேசு பாதம் வந்தால்
வழியை காட்டிடுவார் - நல்வழியை காட்டிடுவார்

2. அழகாய் உடுத்தும் காட்டுபுஷ்பம்
உடுத்துவது யாரோ?
அனுதினம் கூப்பிடும் காகங்களை
போஷிப்பது யாரோ? - அஞ்சாதே

3. மேய்ப்பன் இல்லாத ஆட்டினை போல
அலைந்து திரியாதே
நானே நல்ல மேய்ப்பன் என்றார்
இயேசுவிடம் வாராய் - அஞ்சாதே

1239. உன்னைக் கண்ணின் மணி

உன்னைக் கண்ணின் மணிபோல் காக்கும் தேவன்
உறக்கம் கொள்வதில்லை
ஒருபோதும் விலகாமல்
உன்னோடு இருந்து காக்கும் தேவன்
என்றும் மறப்பதில்லை

1. காலைத்தள்ளாட வொட்டார்
உன்னைக் காக்கிறவர் உறங்கார்
உன்னதர் அரணாய் வந்திடுவார்
உனக்கு துணையாய் நின்றிடுவார்
இரவோ பகலோ எதுவும் உன்னை
சேதமே படுத்தாதே

2. தேவன் உன் தாபரமே எந்த
பொல்லாப்பும் நேரிடாதே
வாதை உன் இல்லத்தை அணுகவிடார்
வல்லமை தேவன் உன் துணையே
கரம்பிடித்தே உன்னை நடத்திசெல்வாரே
கைவிட மாட்டாரே

3. நீடித்த நாட்களாலே உன்னை
திருப்தியாக்கிடுவார்
கழுகினைப் போல உன் வயதை
வால வயதாய் மாற்றிடுவார்
இஸ்ரவேலின் தேவன் உன்னை
என்றுமே காத்திடுவார்

4. தாய்தன் பாலகளை இந்த
தரணியில் மறப்பதுண்டோ
தாயினும் மேலாய் நேசித்திடும்
தூயவர் உன்னை மறப்பதில்லை
தயவாய் தினமும் நடத்தும் தேவனின்
அன்போ மறைவதில்லை

5. நீதியின் வலக்கத்தால் உன்னை
நிதமும் நடத்திடுவார்
நீ செல்லும் பாதையில் முன்நடந்து
நிழலாய் அனுதினம் காத்திடுவார்
கருணையின் தேவன் உன்னோடு இருப்பார்
என்றும் நீ கலங்கிடாதே

1239. உனக்காய் மரித்தேன்

உனக்காய் மரித்தேன் ஆனாலும் சதாகாலமும்
உயிரோடுடெழுந்தேன் இதோ
ஜீவிக்கிறேன் என்றாரே இயேசு

சீயோனே! கெம்பீரி! சாலமே நீ ஸ்தோத்தரி!
துதியோ! கனமே! மகிமை செலுத்து!
என் மீட்பர் உயிரோடிருக்கிறார்
ஆமென்! அல்லேலூயா!

1. வாக்குமாறாதவரே இயேசு சொல் தவறாதவரே
சொன்னபடி அன்று உயிர்தெழுந்தாரே

2. பாலகர் வாயினிலே துதிபாடல்கள் முழங்குதே
போற்றிப்பாடும் வாயை அடக்கக் கூடாதே

3. சுத்த திருச்சபையே பறைசாற்றிடும் நற்செய்தியே
சாவையும் பேயையும் நோயையும் ஜெயித்தார்

4. தள்ளினோம் ஆகாதென்று ஆனார்
தலைக்கு மூலைக்-கல்லாய்
ஸ்திரமாய கர்த்தர்மேல் வாழ்க்கையைக் கட்டுவோம்.

5. அன்றாடகம் என்னுடன் பேசி அன்பாய் விசாரிக்கின்றார்
என்னோடு ஜீவிக்க இயேசு உயிர்த்தாரே

6. நம்பிக்கையுள்ள வல்ல நல்ல ஜீவமார்க்கமிதுவே
நாமும் உயிர்த்து நம் கர்த்தரை சேருவோம்

1240. உந்தன் கிரியைகள்

உந்தன் கிரியைகள் தேவன் அறிவார்
உந்தன் பெலனும் கொஞ்சமாயினும்
வேதவசன வழியில் நடந்து
தேவனை மறுதலியாமல் வாழ்ந்தால
உனக்கு முன்னே திறந்த வாசல் அநுகூல வாசல்
ஒருவரும் என்றும் பூட்டிட முடியா பெரிய வாசல்
ஆரம்பகால துரித சுதந்திரம்
முடிவில் பெறாது ஆசிவாதமே அறிவாய்
ஆண்டுகள் அநேகம் காத்து ஜெபித்தால்
ஆண்டவர் அருளும் ஆசீர்வாதமே பெறுவாய்

பின்மாரி பொழிய ஜெபித்து கண்ணீர் சிந்து
உழைத்து வேர்வை சிந்து
இரத்தம் சிந்திட வா (உந்தன்)

1. தரிசான நிலத்தை பண்படுத்துங்கள்
எழுந்து கட்டுவோம் வந்து சேருங்கள் - இன்றே
சத்தியம் கைக்கொள்ளும் நீதியின் ஜனம்
உள்ளே வந்திட வாசல் திறவுங்கள் இன்றே (பின்மாரி)

2. தேசத்தின் ஜனங்களே திடனடையுங்கள்
கர்த்தர் சொல்கிறார் வேலை நடத்துங்கள் - இன்றே
பிந்தின ஆலயம் மகிமை பெரியது
சேனையின் கர்த்தர் உடனிருக்கிறார் பயமேன் (பின்மாரி)

1241. உந்தன் அன்பு ஒன்று

உந்தன் அன்பு ஒன்று போதும்
உலக அன்பு மாறிப் போகும்
கள்ளம் கொண்ட மானிடரில்
கர்த்தர் உந்தன் பாதம் தஞ்சம்

1. நேசிக்க யாரும் இல்லை என்று
நேசத்திற்காக ஏங்கினேன்
உண்மை நேசம் கண்டிடாமல்
உள்ளம் உடைந்து நான் நொறுங்கினேன்

2. உலக வாழ்க்கை போதும் என்று
பாவத்தின் கோர பிடிதனில்
பாதகனாய் வாழ்ந்த என்னை
பரமன் இயேசு தேடி வந்தார்

3. தேவாதி தேவன் பாதத்திலே
எந்தனை முற்றிலும் ஒப்புவித்தேன்
பாவம் நீங்கி தூய வாழ்வு
வாழ்ந்திட நல்வழி காட்டினார்

4. அன்பினாலே நிறைந்து உம் பாதத்தில்
அனுதினமும் வந்து நிற்பேன்
அழிந்து போகும் ஆத்துமாவை
அப்பா உம் பாதத்தில் சேர்த்திடுவேன்

5. உயிரோடு எழுந்த தேவன் நீரே
ஜீவனை எனக்காய் ஈந்தவரே
சிலுவையினால் மீட்டெடுத்து
சீஷனாய் என்னை மாற்றினீரே

1242. உந்தன் பெலத்திலே தேவா

உந்தன் பெலத்திலே தேவா எழுந்தருளும்
உந்தன் மகத்துவத்தின் மேன்மையுடன்
உந்தன் பெலத்திலே தேவா எழுந்தருளும்
உயர் பெலத்தினால் எம்மை நிரப்பிடும் - 2

1. சர்வத்தையும் கீழ்ப்படுத்தும் வல்லமை
இன்னும் அளிக்க வல்ல நாயகனே
சகலமும் செய்தோராய் தைரியமாய் நின்றிட
சத்துவம் தாரும் ஐயனே -2

2. மரித்தோரை எழுப்பிடும் மா வல்லமை
எங்கள் மத்தியில் நீர் விளங்க செய்வீர்
சோரும் மண் சரீரம் உள்ளம் உயிர்த்திட
தாரும் நின் அபிஷேகமே - 2

3. மாராவின் நீர் இனிக்க செய்த நீர்
சுவை மாற்றினீரே கானாவின் நீர்
பாழும் என் குணமும் ஆக்கிட திவ்யமாய்
ஆட்கொள்ளும் சக்தியுடனே - 2

4. மெல்கிசேதக் முறைமையிலே வந்த நீர்
நித்திய ஆசாரியராய் விளங்குகிறீர்
காலை பனி சமம் உம் யௌவன ஜனம்
பாரில் நீர் பிறக்க செய்வீர் - 2

5. சாலேமில் ராஜரீகம் செய்குவீர்
நீதி ஓங்கிட உம் ராஜ்யமெங்கும்
ராஜாக்கள் பிரமிக்க ஜாதிகள் நடுங்க
சீயோனை சிறக்கச் செய்வீர் - 2

1243. உம் அன்பு மாறாதய்யா

உம் அன்பு மாறாதய்யா
அது ஒரு நாளும் அழியாதய்யா
நேசத்தின் உச்சிதமே
உம்மை நினைத்தாலே சந்தோஷமே

1. தினம் உம் தாகத்தால் நீர் ஓடை தேடும்
ஒரு மான்போல அலைந்தேனய்யா
கன்மலைமேல் உம்மை கண்டேனய்யா
என் தாகம் தீர்த்தீரய்யா

2. உந்தன் முகம் காணவே தினம் அதிகாலையில்
நான் உமை தேடி வந்தேனய்யா
உந்தன் குரல் கேட்டு மகிழ்ந்தேனய்யா
உம் மகிமையை கண்டேனய்யா

3. என் பாரங்களும் மனக்கவலைகளும்
உம்தோளினில் சுமந்தீரய்யா
உள்ளம் ஒரு நாளிலும் குளிராதய்யா
உம் அன்பினை துதிப்பேனய்யா

3. உந்தன் மணவாட்டியாய்
இந்த பூவில் கண்டீர்
தூய உதிரத்தால் மீட்டுக் கொண்டீர்
இரட்சிப்பினால் அலங்கரித்தீர்
உம் ஆவியால் அபிஷேகித்தீர்

1244. உம் அன்பு போதும் என்

உம் அன்பு போதும் என் அன்பர் இயேசு தேவா
உம்மோடு சேர என் உள்ளம் ஏங்குதையா

1. உம்மைப் போல் யாருமில்லை உண்மையாய் நேசித்திட
கண்மணி போல் காத்து நடத்த
சேற்றினில் வாழ்ந்த என்னைத் தூக்கி நீர் தேற்றினீரே
கன்மலையின் மேலே நிறுத்த (உம்)

2. எள்ளளவும் கள்ளமில்லை கடுகளவும் கபடமில்லை
திடமனதாய் உம்மை நம்புவேன்
சொல்லொண்ணா உந்தன் நேசம் சொல்லாமல் ஜீவிப்பேனோ
என் தேச எல்லையெங்குமே (உம்)

3. அழுகையின் பள்ளத்தாக்கின் நடுவே நான் நடந்தபோது
நீரூற்றாய் மாற்றி தந்தீரே
பெலத்தின் மேல் பெலனடைய சீயோனை வந்தடைய
தந்தீரே உந்தன் கிருபை (உம்)

4. மாமிச தேகமுள்ள யாவுக்கும் ஆகாரத்தை
ஈந்திடும் எந்தன் இயேசுவே
பெருங்கடல் திமிங்கலமும் உம் கரம் நோக்கிடுமே
நீர் தர வாங்கிக் கொள்ளுமே (உம்)

5. நித்திய நம்பிக்கையை என்னுள்ளில் வைத்த நேசர்
சத்தியம் என்னை மீட்பதே
உத்தம உள்ளத்தோடு உம்மைப் பின்பற்றிடவே
நித்திய பெலன் தாருமே (உம்)

6. வெள்ளியிலும் பொன்னிலுமல்ல விலையுயர்ந்த வஸ்திலுமல்ல
இரத்தத்தால் என்னை மீட்டிரே
எந்தன் விசுவாசத்தாலே ஏகிடுவேன் உந்தன் பாதம்
ஏற்றிடுவீர் உந்தன் பரத்தில் (உம்)

7. நெருக்கத்தில் கூப்பிட்டேனே உருக்கமாய் ஓடிவந்து
திருக்கரம் கொண்டு அணைத்தீர்
இடக்கரம் தாங்கும்போது வலக்கரம் அணைத்திடுமே
உம் நேசம் என்னை வென்றதே (உம்)

1245. உம்மை நம்பி யாரும்

உம்மை நம்பி யாரும் மாண்டதில்லை
மாண்டதில்லை மாண்டதில்லை

1. துன்பங்கள் பலமாய் நெருங்கி வந்தாலும்
தொல்லைகள் என்னை அணுகி வந்தாலும்
காக்க வல்லவர் காக்க வல்லவர்
காக்க வல்லவர் காக்க வல்லவர் - (உம்மை)

2. சிங்கத்தின் குட்டிகள் தாழ்சியுற்றாலும்
பங்கம் வராதென்னைக் காத்திடுவீரே
ஓங்குவீர் பெலன் ஓங்குவீர் என்னை
தாங்குவீர் துயர் நீக்குவீர் (உம்மை)

3. நிறுத்திடுவீர் என்னை களங்கமில்லாமல்
பொறுத்து என் குறைகள் யாவையும் அகற்றி
காப்பீரே என்னை காப்பீரே
சுத்தம் செய்வீரே முக்தி சேர்ப்பீரே - (உம்மை)

4. தாரகைப் போல் இலங்கின சுத்தர்
பாதை விட்டோடி மறந்து விட்டாலும்
பாதைக்காட்டவும் பாதுகாக்கவும்
பாதம் சேர்க்கவும் வல்லவர் - (உம்மை)

5. மாட்சியிலே இன்றும் வந்திடுவீரே
மகிமையிலே என்னை சேர்த்துக் கொள்வீரே
மன்னவர் நீரே வல்லவர்
இன்றும் நல்லவர் என்றும் நல்லவர் - (உம்மை)

1246. உம்மைத் தவிர யாருமில்லை

உம்மைத் தவிர யாருமில்லையே
என் இயேசய்யா

1. கண்ணீரின் பாதையில் கடந்து நானும் போகையிலே
கரம் பிடித்து நடத்திடவோ யாருமில்லையே

2. நண்பரெல்லாம் நழுவும் போது உறவெல்லாம் பிரியும் போது
சொந்தமென்று சொல்லிக்கொள்ள யாருமில்லையே

3. மாயமான உலகத்திலே மண்ணாகி போகையிலே
மறுமையிலே சேர்த்துக் கொள்ள யாருமில்லையே

1247. உம்மண்டை தேவனே

உம்மண்டை தேவனே நான் சேரட்டும்
சிலுவை சுமந்து நடப்பினும்
என் ஆவல் என்றுமே
உம்மண்டை தேவனே நான் சேர்வதே

1. தாசன் யாக்கோபைப் போல் இராக்காலத்தில்
திக்கற்றுக் கல்லின் மேல் நான் துயில்கையில்
எந்தன் கனாவிலே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே இருப்பேனே

2. நீர் என்னை நடத்தும் பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணிப் போல் விளங்குமாம்
தூதர் அழைப்பாரே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே நான் சேரவே

3. விழித்து உம்மையே நான் துதிப்பேன்
என் துயர்க் கல்லை உம் வீடாக்குவேன்
என் துன்பத்தாலுமே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே நான் சேர்வனே

1248. உள்ளம் பொங்குதே

உள்ளம் பொங்குதே
உந்தன் நேசம் நினைக்கையில்
எந்தன் தேவா இயேசு ராஜா
உந்தன் பாதம் ஓடி வந்தேன ஐயா

1. வாருமே அகம் தங்க
புகழ் சூடி போற்றிடுவேன்
எந்தன் துணைஎன்றென்றுமே நீரே
ஒருபோதும் கைவிடாத தேவா - உள்ளம்

2. தாகம் தீர்த்திடும் தேவா
வேகம் வாரும் என்னிடமே
பாரில் உம்மை நம்பி என்றும் வாழ்வேன்
உம்மைப் போல என்னை மாற்றும் தேவா - உள்ளம்

3. ஆத்துமா பெலன் அடைய
உந்தன் ஆவி ஈந்தீரே
உந்தன் சித்தம் என்றும் என்னில் விளங்க
நல்ல ஆவி நல்கி நடத்திடும் தேவா

4. மேகம் போல் திரள் சாட்சி
என்னை சூழ்ந்து நிற்குகையில்
வீரமுடன் ஓட்டமதை முடிப்பேன்
விசுவாசம் என்னில் துவக்கிடும் தேவா

1249. உணர்வின் பிரபுவே

1. உணர்வின் பிரபுவே
உணர்வின் இராஜா
வந்திடுமே தயவாய்
தேவ ஜனத்தின் சபையில்

2. உறக்கத்தில் இருக்கும் ஜனம்
மறந்தோர் நின் கிருபைகள்
ஆதி அப்போஸ்தலர் பகர்ந்த
நின் கிருபைகளை தந்திடும் ஆத்ம நாதா

3. என் சொந்த வீட்டில் தளர்ந்து
பெலனற்று கிடக்கும் நேரம்
ஆதரவாய் திரு சன்னதியில் வருகிறேன்
அடைக்கலம் தாரும் நாதா

4. வாழ்க்கையில் மண் மேடுகள்
துன்பங்கள் காணும் வேளை
கொஞ்சமும் தளராது தைரியமாய் ஜெயித்திட
வல்லமை தாரும் நாதா

5. அழைத்த அழைப்பில் என்றும்
நிலைக்கும் போர் வீரனாய்
உண்மையாய் ஊழியம் குற்றமற்று நடக்க
விளங்க செய்யும் நாதா

6. வானில் ஆரவாரம்
சத்தங்கள் முழங்கும் போது
உம்மில் மகிழ்ந்து வரவேற்பு செய்திட
தகுதி படுத்தும் நாதா

1250. என் இயேசுவே உம்மையே

1. என் இயேசுவே உம்மையே நான்
நேசிக்கிறேன் வேறெந்த வீண் வாழ்வையும்
நாடாதிருப்பேன் உம்மாலே மா நன்மையை
நான் கண்டடைந்தேன் என் நாதா
மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்

2. இப்பாவியின் பேரில் முந்தி நேசம்வைத்தீர்
நீர் பிராண தியாகம் செய்து
மீட்டுக் கொண்டீர் முள்கிரீடம் ஐங்காயமும்
நான் தியானிக்கிறேன் என் நாதா
மென்மேலும் உம்மை நேசிக்கின்றேன்.

3. பேரன்பின் சொரூபி உம்மை போற்றுகிறேன்
எப்போதும் உம்மண்டை தங்க
வாஞ்சிக்கிறேன் நீடூழி உம்முகம்
கண்டு ஸ்தோத்தரிப்பேன் என் நாதா
மென்மேலும் உம்மை நேசிக்கின்றேன்

4. பேரின்ப மேலோகத்தில் ஆனந்தம்
கொள்வேன் நீடூழி உம்முகம் கண்டு
ஸ்தோத்தரிப்பேன் எப்பாவம் இல்லாமலும்
நான் வாழ்தல் செய்வேன் என் நாதா
மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்

1251. என் இரட்சகா என் இயேசு

என் இரட்சகா என் இயேசுவே
என்னை அழைத்த நல் மீட்பரே
என் உள்ளத்தில் சந்தோஷத்தை
தந்தவா உம்மை ஸ்தோத்தரிப்பேன்

1. தூரமாய் நானும் சென்ற போது
அன்பாய் என்னை அழைத்தீரே
காலமெல்லாம் நான் உந்தன் ஒளியில்
என்றும் நிலைத்து வாழ்ந்து சுகிப்பேன்

பாக்கிய நாள் பாக்கிய நாள்
இயேசு என் பாவம் தீர்த்த நாள்-2

2. சத்தியம் ஜீவன் வழியும் நீரே
கிருபை கூர்ந்து தெரிந்தீரே
தேவனே உம்மில் இணைந்து இருக்க
இன்றும் என்றும் அருள் செய்வீரே

3. இருளினின்று ஒளியினிடமாய்
அழைத்த தேவனைப் போற்றுவேன்
உந்தனின் புண்ணியம் யாவும் சொல்லி
சாட்சியாகப் பூவில் திகழ்வேன்

4. எந்தனின் கால்கள் தளரும் போது
தாங்கி என்னை மீட்டவா
உந்தனின் வாக்கு வெளிச்சம் தந்து
காத்து என்றும் நடத்துவீரே

5. மாமலை மீதினில் மகிமை அடைந்தீர்
மகிமை சொரூபா தொழுதுவேன்
உந்தனின் மகிமை நானும் அடைய
மீட்ட உம்மை என்றும் துதிப்பேன்

1252. என் உள்ளத்தைக் கவர்ந்த

என் உள்ளத்தைக் கவர்ந்த ஒருவருண்டு
என் இதயத்தை அவருக்கே பறிகொடுத்தேன்
இனி நானல்ல அவரே எல்லாம்
அவர் தான் என் நேசரேசு

1. மனம்போல அலைந்தேன் உலகை ரசித்தேன்
நிம்மதி காணவில்லை
என் இயேசு என்னை தேடி வந்தார்
நிம்மதி கண்டு கொண்டேன்

2. இளமையும் அழகும் தேவையென்று
மாயையை பின்பற்றினேன்
என் வாலிபம் எல்லாம் மாயை என்று
அறிந்தேன் இயேசுவினால்

3. மனித அன்பு ஒன்றே போதும் என்றென்
உண்மையைக் காணவில்லை
என் இயேசுவின் அன்பே உண்மை என்று
கண்டுகொண்டேன் வாழ்வில்

4. என் இயேசு எந்தன் வாழ்வில் வந்தால்
புது சிருஷ்டியானேன்
என் இயேசுவுக்கு நான் மணவாட்டியாய்
நியமிக்கப்பட்டுவிட்டேன்

1253. என் பாத்திரம் முடியும்

என் பாத்திரம் முடியும் வரை
உம் கைகளில் நானிருக்க
யேகோவாயீரே வனைந்தவரே
உலகத்தில் தள்ளாதிரும்

1. விக்கினங்கள் கடக்கும் வரை
வல்ல உம் செட்டையின் கீழ்
நல்ல நிழல் நான் தங்குவேன்
நாதா தயை கூறுமே

2. ஆண்டாண்டு காலங்கள் அருள் கூர்ந்தீரே
அன்பரே ஊழியத்தில்
ஆலோசனை தந்தவரே
யாரிடம் இனி செல்லுவேன்

3. சோதனைகள் சூழ்ந்த நேரம்
சத்துருவை வெல்ல செய்தீர்
பாத்திரனாய் மாற்றிக் கொள்வீர்
பரன் இயேசு பாதம் சேர்ந்தேன்

1254. என் ஆத்துமா அனுதினமும்

என் ஆத்துமா அனுதினமும் உம்மைத் தேடும்
என் இயேசுவே அகமகிழ்ந்து உம்மைப் பாடும்
துதி செய்தலே ஏற்றதுவே
தேன் போன்ற இனிமை என் நாவினிலே

1. கர்த்தாவை மகிமைப் படுத்திடுவேன்
கனிவான ஸ்தோத்திர பலிகளால்
நாள்தோறும் தேவ நீதியை சொல்லி
நேர்மை மனதோடு வாழ்ந்திடுவேன்

2. எந்தன் துதி தொனியும் முழங்க
எரிகோ மதிலும் விழுந்திடுமே
நாலா திசை கேட்க ஸ்தோத்தரிப்பேன்
நல்லவர் எனதாண்டவர்

3. என் ஸ்தோத்திரம் கருத்தோடு செய்வேன்
என்னையும் நினைத்தார் என் தாழ்வினில்
தன்னைத்தான் தாழ்த்தினால் உயர்த்துவார்
சொன்னவர் எனதேசுவே

4. இம்மானுவேல் இதுவே அவர் நாமம்
என்னோடிருப்பார் எக்காலமும்
நித்திய ஜீவனும் சந்தோஷமும்
நல்கிடும் கிறிஸ்தேசுவே

5. பூவில் ஜனம் துணிவான பாவம்
பலர் செய்வதினால் தீர்ப்பைப் பெறும்
நியாயதிபதி இயேசு வருகிறார்
நீதியை நிலைநாட்டுவார்

6. அல்லேலுயா பரலோக கூட்டம்
அல்லும் பகலும் ஓயாமலே
கர்த்தாவின் நாமத்தில் ஆர்ப்பரிப்போம்
கிருபை பொழிகின்றதே

1255. என் ஆத்துமா என் ஜீவ

என் ஆத்துமா என் ஜீவ தேவன் மேல்
என்றென்றும் தாகமாய் இருக்கிறதே
நானும் போகையில் என் நேசர் இயேசுவை
மத்திய வானில் கண்டு மகிழ்ந்திடுவேன்

மானானது இளம் மானானது - 2
நீரோடையை வாஞ்சித்து கதறுமாப் போல்
தேவனே என் ஆத்துமா உம்மை நோக்கி
வாஞ்சித்து கதறிடுதே

1. என் ஆத்துமா ஏன் கலங்குகிறாய்?
ஏனோ எனக்குள் தியங்குகிறாய்?
கர்த்தரை நோக்கி காத்திரு
அவர் இரட்சிப்புக்காக துதித்திடுவாய்

2. மதகின் இரைச்சல்கள் கேட்கையிலும்
ஆழத்தை ஆழம் அழைக்கையிலும்
அலைகளும் திரள்களும் புரள்கையிலும்
கிருபையால் என்னைத் தாங்கினதால்

3. அரணாகிய என் தேவன் நீரே
ஆனந்தமாய் உம்மை அண்டிடுவேன்
உந்தன் வெளிச்சத்தை அனுப்பிடுமே
உமது பர்வதம் வந்தடைவேன்

1256.என் நேசருக்கு புதுப்ப

என் நேசருக்கு புதுப்பாட்டைப் பாடுவேன்
என் நேசரின் திராட்சைத் தோட்டம் நானே (2)
புதுப்பாட்டைப்பாடுவேன்-என்றுமே பாடுவேன் (2)
என்நேசரின் திராட்சை தோட்டம் நானே

1. செழிப்பான மேட்டினிலே
என்னை நாட்டினார்
வேலி அடைத்தார் கற்கள் பொறுக்கி
நீரைப்பாய்ச்சினார் நல்ல கனி தரும் என்று
என் இயேசுவே நல்ல கனிகளைத் தருகின்றேன்

2. காட்டொலிவ மரம் நானே
உம்மில் இணைத்தீரே
உந்தன் வேருக்கும் உந்தன் சாருக்கும்
பங்காய் மாற்றினீர் நல்ல கனி தரும் என்று
என் இயேசுவே நல்ல கனிகளைத் தருகின்றேன்

3. மெய்யான திராட்சைச் செடியே
உம்மில் படர்ந்தேனே
உந்தன் சாயலும் உந்தன் சிந்தையும்
ஒவ்வொரு நாளுமே என்னில் என்றும் வளரட்டும்
என் இயேசுவே நல்ல கனிகளைத் தருகின்றேன்

1257.என் தெய்வமே என் இயே

என் தெய்வமே என் இயேசுவே
என்உள்ளம் உம்மை துதிக்கும் - (2)
என் தேகம் உந்தன் ஆலயமாகும்
உம்மை தினம் துதிப்பேன்

1. காணாமல் போன ஆட்டினைப் போல்
கர்த்தர் அன்பை விட்டு தூர நின்றேன்
அடியேனை தேடி ஓடி வந்தீர்
உம் அன்பில் நான் பூரிக்கின்றேன்

2. ஆசையோடு உம்மை தேடிடுவேன்
ஆத்துமாவில் பெலன் பெற்றிடுவேன்
மனபாரங்களை என்னில் நீக்கிடுவீர்
உம் அன்பில் நான் பூரிக்கின்றேன்

3. அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
நீருற்றாய் மாற்றிட பெலன் தந்தீரே
எந்தன் கவலைகள் உம்மேல் வைத்துவிட்டேன்
உம் அன்பில் நான் பூரிக்கின்றேன்

4. மணவாளியே என் ரூபவதி
மனதார என்னை தினமும் துதி
என்று அழைக்கும் இயேசு இரட்சகரே
உம் அன்பில் நான் பூரிக்கின்றேன்

1258.என்ன செய்குவேன் இன்ப

என்ன செய்குவேன் இன்ப இயேசுவே
என்னையும் நேசித்தீரோ
அன்னையே அலை போல் அன்பிதோ பொங்குதே
ஆனந்த ஸ்தோத்திரமே

1. ஞானக் கன்மலையாம் கிறிஸ்தெனக்கே
பானமானீர் பாதையிதிலே
போஷித்தென்னையும்வான மன்னாவால்
ஷேமமாய் சேர்ப்பீரே ஆத்துமமதையே ஆ...

2. வீசிப் பறக்குதே நேசக் கொடியே
நீசனான எந்தன் மீதிலே
ஜெகந்தனிலே நின் நாமமுயர
ஜெயத்தின் கொடியே நாட்டியே மகிழ்வேன் ஆ...

3. ஜீவனூதியே பின்மாரி மழையாய்
தேவ ஆவி பொழிந்திடுவீர்
இது வரையும் இவ்விகமறியா
அது போல் நதியாய் பாய்ந்துமே வருவீர் ஆ...

4. ஆக்கமாகும் உந்தன் சபையதுவைஆ...
சேர்க்கும் வேளை நெருங்கிடுதே
நீதியதிலே நின் முகங்கண்டுமே
நிதமும் உமது சாயலாய் மாறுவேன்

5. பாரில் பரிசுத்தர் ஆவல் மிகவே
பார்த்து பார்த்து ஏங்கி நிற்கிறார்
தீரவில்லையோ சீயோனின் வேலையே
வாருமென் இயேசுவே தீர்ப்பீரே வாஞ்சையே

1259.என்னை பெலப்படுத்துகின்ற

என்னை பெலப்படுத்துகின்ற கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு

1. நான் எந்த நிலைமையில் இருந்தாலும்
நான் மனரம்மியமாய் இருக்கின்றேன்
பட்டினியாய் இருந்தாலும் பரிபூரண மடைந்தாலும்
தாழ்ந்திருக்கவும் வாழ்ந்திருக்கவும்
போதிக்கப்பட்டேன் - நான் - என்னை

2. என் தேவன் யெகோவா யீரே
என் தேவன் யாவையும் தருவாரே
தமது ஐசுவரியத்தின்படியே எனது குறைவே
நிறைவாக்கும் ஏசுவை விசுவாசித்தே தேவ
மகிமையை காண்பேன் - நான் - என்னை

3. நான் சோம்பலின் அப்பம் புசியாமல்
நான் சோர்ந்து தரித்திரம் அடையாமல்
உற்சாகமாக உழைத்திடுவேன்
உண்மை ஊழியம் செய்திடுவேன்
தேவனை அதிகாலை தோறும்
தேடிக் கண்டடைவேன் - நான் - என்னை

4. கர்த்தருக்கு காத்திருந்தே
நான் புதுப் பெலனை அடைந்திடுவேன்
கழுகுபோல செட்டை களையடித்து நான் எழும்பிடுவேன்
நடந்திட்டாலும் ஓடினாலும்
சோர்ந்திடமாட்டேன் - நான் - என்னை

5. என் இயேசு சீக்கிரம் வருவாரே
நான் அவருக்காகவே காத்திருப்பேன்
அவனவன் கிரியைப்படியே அவர் அருளும் பிரதிபலனே
ஆண்டவர் வரும்போது தம்முடன்
கொண்டுவருவாரே - இயேசு - என்னை

1260.துணையில்லா ஒரு

1. துணையில்லா ஒரு மாடபுறா போல்
தவிக்கும் என்னை சேர்த்திட வாரும்
நாதனின் வருகை தாமதமானால்
விழாமல் காத்திடும் என்னை - எனக்கும்

2. சிங்கத்தின் குகையில் தள்ளினாலும்
அக்கினியில் என்னை இழுத்தெறிந்தாலும்
உள்ளம் கலங்கும் நேரங்கள் எல்லாம்
விழாமல் காத்திடுமே - எனக்கும்

3. சிகிச்சைக்கு ஒரு வைத்தியனும் இல்லை
ஆறுதல் அடைய இடமும் இல்லை
உமது வழியும் கிருபை வசனமும்
மண்ணில் என் ஆறதலே - எனக்கும்

1261.எந்தன் உயர்ந்த கன்மலையே

எந்தன் உயர்ந்த கன்மலையே
என்றும் மாறா அடைக்கலமே
உன்னதா உம் மறைவினில் வந்தடைந்தேன்
உந்தன் நாமத்தை உயர்த்திடுவேன்

1. மருவியே என்னையே பின்தொடர்ந்து
அருவியாய் என்னகம் தாகம் தீர்த்தீர்
கிருபையாய் மலைபோல்
சூழ்ந்தென்னை நிதமும்
அருமையாய் காத்த நீரே - 2 (எந்தன்)

2. தனிமை வருத்தி தளர்ந்திட்ட போதும்
தேற்றுவாரின்றியே திகைத்த போதும்
இனிய உம் கரமே உயிர்ப்பித்தென்னையே
கனிந்துமே பெலன் ஈந்தீரே - 2 (எந்தன்)

3. என் பெலன் விளங்கும் பூரணமாக
உன் பெலவீனத்தில் என்றுரைத்தீர்
கீலேயாத்தின் ஔஷதமாய் திகழ்ந்தீரே
இயேசுவே நீர் எனக்கு - 2 (எந்தன்)

4. தற்பரா உந்தன் சாயல் நான் அணிய
அற்பனாம் என்னையும் அபிஷேகித்தீர்
நிறுத்திடும் உம்மில் தேறினோனாக
நின் திரு சந்நிதியில் - 2 (எந்தன்)

5. விரைவில் வருவீர் மகிமையில் நாதா
மறைந்தும்மில் உம்முடன் வெளிப்படவே
அர்பணித்தேன் உம் கரமதில் என்றும்
பொற்பரா நடத்திடுமே - 2 (எந்தன்)

B-Min/Slow Ballad/T-100

1262.எந்தன் பூமானைக் காண

எந்தன் பூமானைக் காண
சிந்தை பெருகுதையோ
என்றைக்கு காண்பேனோ ஒ...ஒ...

1. சுந்தரத்தில் மிகுந்து அந்தரங்கத்திலிருக்கும்
எந்தன் பூமானைக் காண - அழகுடைய
அண்ணல் இயேசுவைக் காண (2)

2. விண்ணிலிருந்தவர் மண்ணின் மேல்
வந்தவர் கன்னிகையில் பிறந்தவர்
லாசருக்காக கண்ணீர் விட்டழுதவர் (2)

3. இன்னும் வர என்ன தாமதம் செல்லுமொ
சொன்ன வாக்கை நினைத்து அடியேன்
உந்தன் பாதம் பணிந்து வந்தேன் (2)

4. பொல்லாதோரை இரட்சிக்க வல்ல பராபரன்
என்ன துயர் அடைந்தார் அதை
நினைத்தால் சொல்ல முடியுதில்லை (2)

5. பாதகரின் அடி கன்னத்தில் படும் வேளை
என்னை நினைத்தீரோ நீர் அதை
நினைத்தால் உம்மை மறப்பேனோ நான் (2)

C-Maj/Guitar Ballad/T-100

1263.எந்தன் ஆத்ம நேசர்

எந்தன் ஆத்ம நேசர் இயேசுவே
பாவபாரத்தோடு நிற்கின்றேன்
இன்பமானாலும் துன்பமானாலும
உந்தன் சிலுவை சுமந்து செல்வேனோ - 2

1. எந்தன் ஆத்ம நேசர் இயேசுவே
பாவம் யாவும் நீங்கி நிற்கின்றேன்
இன்பமானாலும் துன்பமானாலும்
உந்தன் சிலுவை சுமந்து செல்வேனே - 2

2. எனக்காய் பாடுகள் பட்டீரே
எனக்காய் உம் உயிர் தந்தீரே
இந்த ஏழை பாவி நான் இதற்கு ஈடாக
என்ன செய்வேன் இயேசுவே (எந்தன்)

3. என் சாவின் பின்பும் உம்மையே
என் கண்ணால் காண உதவும்
என் ஜீவன் போகும் நாள் என்று வருமோ
அன்று உம்மை நான் காண்பேன் (எந்தன்)

1264.எந்தன் நேசரே உந்தன்

எந்தன் நேசரே உந்தன் மார்பினில்
இளைப்பாறுவேன் நித்தமும் சாருவேன்
என்றும் நீரே எந்தன் தஞ்சம் துணையே
எந்தன் கன்மலை நீர் - என்றும்
எந்தன் கன்மலை நீர்

1. கன்மலை தண்ணீரும் நீரே எந்தன்
தாகம் தீர்க்கும் நதியே
ஒத்தாசையின் பர்வதமே (2)
எந்தன் துணை இவரே - என்றும்
நீரே என் பர்வதமே

2. கன்மலை தேனும் நீரே - எந்தன்
பாதைக்கு தீபம் நீரே
மதுரமே பொழியுதே (2)
எந்தன் இனிமையே நீர் - என்றும்
நீரே என் மதுரமே

3. கன்மலை எண்ணெயும் நீரே - எந்தன்
ஜீவ ஊற்றும் நீரே
ஆவியே பொழியுதே - (2)
எந்தன் ஆறுதல் நீர் - என்றும்
நீரே என் அடைக்கலமே

4. கன்மலை சிகரம் நீரே - எந்தன்
உயர்ந்த துதியும் நீரே
உயர்த்துவேன் புகழுவேன் - (2)
உந்தன்நாமத்தையே - என்றும்
நீரே என் அரணுமானீர்

1265.எந்தன் வாழ்விலும் என்

எந்தன் வாழ்விலும் என் தாழ்விலும்
என் தேவன் இயேசு என்பேன்
என்ன நிந்தைகள் வந்த போதிலும்
இயேசு நல்லவர் என்பேன் - (2)

1. நாசமோசமோ, தாய்தந்தையோ
இயேசு அன்பைப் பிரிப்பவர் யார்
என்னைக் கொன்றாலும் என் தேவன் மேல்
நான் நம்பிக்கை வைப்பேன்

2. என்ன பெருமைகள் என்ன மேன்மைகள்
எல்லாம் நஷ்டம் குப்பை என்பேன்
இயேசு அன்பிற்கு ஈடாய் ஒன்றையும்
என் வாழ்வில் கண்டதில்லை

3. பெரும் துரோகியாய் வாழ்ந்த என்னையே
தேடி வந்து மீட்டீரய்யா
எந்தன் ஜீவனே உள்ள நாளெல்லாம்
உந்தன் அன்பினைத் துதிப்பேன்

4. சொந்த பந்தங்கள் பிரித்தாலென்ன ?
எந்தன் மீட்பர் ஜீவிக்கிறார்
அந்நிய கண்ணல்ல என் கண்களே
அன்பர் இயேசுவைக் காணும்

1266.எந்தன் ஏசு நாயாகா

எந்தன் ஏசு நாயாகா
என்னை உமக்கு தந்தேனே
எந்நாளும் என்னுள்ளம்
உந்தன் அன்பால் நிறைய செய்யுமே

1. துன்பங்கள் சோதனைகள்
தாக்கியே என்னை முழ்கடித்தும்
நீங்காமல் துணை செய்யுமே
எந்தன் நிமலனே ஏசுராஜனே

2. நீரல்லால் யாருமில்லை
பூமியும் எந்தன் சொந்தமல்ல
காத்தீரே கரம் பிடித்து
எந்தன் கருணையே நேச உறைவிடமே

3. உந்தன் அன்பின் நான் மகிழ்
எந்தன் தேவா ஆட்கொள்ளுமே
இந்நேரம் வேண்டி நின்றேன்
எந்தன் இதயத்தின் ஏசு ராஜனே

1267.எண்ணிலடங்குமோ நின்

எண்ணிலடங்குமோ நின் நன்மைகள்
எண்ணியே நன்றியாலே என்றென்றும் புகழ்வேன்

1. ஜீவனின் அதிபதியே நீரெனக்கு
ஜீவனில் ஆட்சி செய்யவே
ஜீவிய காலமதிலும் - என்னேசுவே
ஜீவித்து துதி சாற்றுவேன்

2. நீர் மகா தேவனல்லவோ வான் புவியில்
நீர் எந்தன் தேவனல்லவோ
ஔஷதமானவரும் நீர் என்னேசுவே
சௌக்கிய காரணரும் நீர்

3. நன்மைக்காய் யாவும் நிகழ இன்னமுமேன்
என்னகம் துயர் கொள்வதோ
நின் மாறா நிர்ணயமிதே - என்னேகவே
என்னிலே நிறைவேற்றுமே

4. மாட்சியில் வருவீர் நீரே - என் சரீர
மீட்பினை அளித்திடவே
தேட்ட உம் கிருபையிலே என்னேசுவே
நாட்டும் அத்தினம் வரையும்

5. இத்தரை ஓட்டம் முடித்து யாத்திரையில்
அக்கரை தனையடைந்தே
சீயோனில் இணைந்தும்முடன் - என்னேசுவே
சேவையை தொடர்ந்திடுவேன்

1268.கர்த்தராம் இயேசுவின் சிலுவை

கர்த்தராம் இயேசுவின் சிலுவையன்றி
எதிலும் மேன்மையில்லை
கல்மனம் உருக்கும் கல்வாரி கண்டு
நன்றியால் துதிக்கிறேன்.
அன்பின் நாதா எந்தன் ஏசு ராஜா
ஆராதனை உமக்காராதனை

1. இயேசுவின் இரத்தம் பாவங்கள் கழுவி
முற்றிலும் சுத்தமாக்கும்
ஆபேலின் இரத்தம் பேசினதை விட
நன்மையைப் பேசும் இரத்தம்
உத்தமரே மகா உன்னதரே
உந்தன் அன்பு மகா உன்னதமே

2. பொன்னாலும் அல்ல வெள்ளியால் அல்ல
இரத்தத்தால் மீட்கப்பட்டோம்
செத்த கிரியை முற்றிலும் நீக்கி
சுத்தமாய் மாற்றினீரே
உம் இரத்தமே மகா புனிதமே
ஆராதனை உமக்காராதனை

3. மெய்யாக எந்தன் பாடுகள் ஏற்றீர்
நோய்களையும் சுமந்தீர்
துக்கங்கள் யாவும் சுமந்து தீர்த்தீர்
சாபங்களைத் தீர்த்தீர்
கல்வாரியே உம்மை ஆராதிப்பேன்
சிலுவையே எந்தன் அன்பின் மேன்மை

4. சொந்தகுமாரன் என்று பாராமல்
முற்றிலும் நொறுக்கினீர்
அன்பின் பிதாவே உம் அன்பின் நேசத்தை
என்னென்று கூறிடுவேன்
அன்பின் பிதா எந்தன் நித்திய பிதா
ஆராதிப்பேன் நித்ய நித்யமாய்

1269.கல்வாரியன்பே உம்மை

கல்வாரியன்பே உம்மை நான்
நேசிக்கிறேனே என்றென்றுமே
கல்வாரியில் உம் பிரசன்னத்தை
நோக்கிப் பார்த்து நான் பூரிக்கின்றேன்.

எத்தனையோ அன்பை நான் பார்த்தேனே
இந்த அன்பினை நான் எப்படி பாடுவேன்
என் நேசரே! என் அன்பரே!
என்ன பதில் நான் செய்திடுவேன்.

1. முட்கிரீடம் தலையில் சூட
வேதனையால் தவித்திட்டீரே
கொடூரவன் மார்பில் குத்த
இரத்தமும் நீரும் ஓடி வருதே

2. தம் தலையும் மரத்தில் தொங்க
தாகத்தாலே தவித்திட்டீரே
காடியையும் கசப்பையும்
தாகத்திற்கு கொடுத்திட்டானே

3. நேசித்தவர்களின் அன்பைப் பார்த்தேன்
நேசரின் அன்பிற்கு வரவில்லையே
ஆத்துமாவைத் தேற்றும் நேசர்
ஆனந்தத்தால் நிறைக்கின்றாரே

F-Maj/8 Beat Pop/T-110

1270.கண்டேன் கல்வாரியின்

கண்டேன் கல்வாரியின் காட்சி
கண்ணில் உதிரம் சிந்துதே
அன்பான அண்ணல் நம் இயேசு
நமக்காய் பட்ட பாடுகள்

1. கல்வாரி மலைமீதிலே
கள்ளர்கள் மத்தியிலே
சிலுவையில் அறைந்தாரே
நமக்காய் ஜீவனை விட்டாரே

2. பாழும் உலகத்தில்
பாவ கறை போக்க
சிலுவை சுமந்து போகும்
காட்சி கண்முன் காணுதே

3. பாவ உலகத்தில்
ஜீவிக்கும் மானிடனே
பாரும் அவர் உனக்காய்
குருதி சிந்தும் காட்சியை

1271.கண்ணோக்கிப் பாரும் தேவா

கண்ணோக்கிப் பாரும் தேவா - என்னை
கண்ணோக்கிப் பாரும் தேவா - இயேசு தேவா
ஒத்தாசை அனுப்பும் பர்வதமே
கண்ணோக்கிப் பாரும் தேவா - இயேசு தேவா

1. அசுத்த ஆவியை எடுத்தீரே
பரிசுத்த ஆவியை கொடுத்தீரே
கர்த்தாதி கர்த்தாவே அப்பா பிதாவே
உம் நாமம் எந்தன் கெம்பீரமே

2. பயமுள்ள ஆவியை எடுத்தீரே
பலமுள்ள ஆவியை கொடுத்தீரே
தேவாதி தேவனே அப்பா பிதாவே
உம் பாதம் எந்தன் தஞ்சமே

3. உலகத்தின் ஆவியை எடுத்தீரே
உன்னத ஆவியை கொடுத்தீரே
இராஜாதி இராஜனே அப்பா பிதாவே
உம் கிருபை என்றும் போதுமே

1272.கண்ணீரில் நீந்திடும்

கண்ணீரில் நீந்திடும் கண்ணே நீ விழித்திரு
விண்ணாளும் தேவன் மண்ணாள வருவார்
வழியை திறந்திரு ஆயத்தமாய் இரு

1. வழிந்திடும் கண்ணீர்தனை - இயேசு
கரத்தினால் துடைத்திடுவார்
முடங்கிடும் வாழ்வகற்றி நான்
எழுந்திட உதவி செய்வார்
தீபங்கள் போல சுடர்விட்டு எரிவேன்
எழும்பியே ஜொலித்திடுவேன்.

2. கிருபைகள் பெருகிடவே - என்
வறுமைகள் ஒழிந்திடுமே
அன்பரின் நேசத்தினால் உள்ளக்
காயங்கள் ஆறிடுமே
மண்ணான வாழ்வு பொன்னாக மாறும்
என்னகம் மகிழ்ந்திடுமே

3. நிலைமாறும் உலகினிலே நீ
வழிமாறி அலைகிறாயோ
குழம்பிடும் மனதுடனே ஏன் கலங்கியே வாடுகிறாய்
விலையில்லா வாழ்வை உந்தனுக்களிக்க
தேவாதி தேவனுண்டு

4. பரலோக வீதியதில் நான்
பரவசமாய் நடப்பேன்
பாராளும் தேவனது கரம்
பற்றியே மகிழ்ந்திடுவேன்
தூதர்கள் துதியை ஏற்றிடும் தேவன்
என் துதி நுகர்ந்திடுவார்

1273.கண்ணீரோடே கர்த்தாவே

கண்ணீரோடே கர்த்தாவே உந்தன்
பாதம் தேடுவேன்
தண்ணீர் தடாகமாய் மாறுதென் கண்களும்
விண்ணப்பம் கேட்டிடுமே

1. நள்ளிரவெழுந்தெந்தன் உள்ளத்தை
வெள்ளம் போல் ஊற்றுவேன் உம் பாதத்தில்
தள்ளிடுவீரோ எந்தன் வேண்டுதல்
தாளில்லையே நின் தயைக் கென்றுமே

2. துருத்தியில் என் கண்ணீர் யாவையும்
இருத்தி கருத்துடன் காண்கிறீர்
விருதாவாகாதென் கண்ணீருமே
கிருபையாய் என்னையே தாங்குமே

3. கூடாரமாம் நின் சந்நிதியிலென்
கூக்குரல் வந்தெட்டுதே நிதம்
கூரிருள் கண்ணீர் பள்ளத்தாக்கிலே
சூரிய சோபையாய் நடத்துவீர்

4. கண்ணீரில் விதைத்த விதைகளை
மண்ணின் நற்பலனாக மாற்றுமே
விண்ணில் நீர் வெளிப்படும் வேளையில்
கண்ணிமை தனில் உமை காணவே

5. இம்மண்ணில் மறையும் இப்பாடுகள்
விண் நித்ய மகிமைக் கீடாகுமோ
கண்ணதின் மணி போல என்னையே
நண்ணியே வழுவாது காப்பீரே

1274.காரிருள் சூழ்ந்திடும் நேரம்

காரிருள் சூழ்ந்திடும் நேரம்
கர்த்தாவே என் பக்கம் நீரே
யாருமின்றி அனாதையாய்
அலைந்த என்னை அணைத்தீரே - 2

1. கானக பாதை நான் செல்கையில்
காவலனாய் வந்துக் காத்திடுவீர்
கரடானாலும் முரடானாலும்
காருண்யத்தால் என்னைத் தேற்றிடுவீர்-2(காரிருள்)

2. மாராவின் தண்ணீர் மதுரமாகும்
மாறாத நீர் என் சொந்தமானீர்
இயேசுநாதா இயேசுநாதா
எளியேனை கரம் தன்னில் தாங்கிடுவீர்-2 (காரிருள்)

3. என் கால்கள் சறுக்கும் போதெல்லாம்
கர்த்தாவே நின் கிருபை தாங்கிடுதே
எந்தன் கொம்பை எண்ணெயினால்
அபிஷேகம் பண்ணி உயர்த்திடுமே - 2 (காரிருள்)

4. ஊழிய வாஞ்சை இன்னுமாக
உன்னதா என்னில் நீர் தந்திடுவீர்
பெலத்தின் மேல் பெலன் தந்து
நின் பணி நான் என்றும் செய்திடுவேன்-2(காரிருள்)

1275.கார்மேகம் போன்ற

கார்மேகம் போன்ற இருள் சூழும் நேரம்
ஒரு போதும் மனமே நீ மயங்காதே
சிறிதேனும் இருள் கண்டு கலங்காதே
ஒளியாம் இயேசுவை நீ மறவாதே

1. கொடுங்கோபியோ படுபாவியோ
கொலையாளியோ பெரும் குற்றவாளியோ
யாராயினும் இயேசுவண்டை வா - 2
மனம் உடைந்தால் குணமடைவாய்
அருள் பெறலாம் இன்றே
உனக்காகவே மரித்தார் இன்றே
புது வாழ்வையே நீ பெறலாம் இன்றே (கார்மேகம்)

2. வியாதியினால் வாதனையோ வறுமையினால் வேதனையோ
எதுவாயினும் இயேசுவண்டை வா - 2
மனம் உடைந்தால் குணமடைவாய்
அருள் பெறலாம் இன்றே
உனக்காகவே மரித்தார் இன்றே
புது வாழ்வையே நீ பெறலாம் இன்றே (கார்மேகம்)

1276.காலை ஒளி தோன்றவே

காலை ஒளி தோன்றவே காரிருளும் நீங்கவே
கர்த்தர் வந்து கன்னியை வீடுசேர்ப்பார்
தேவ வாசம் நம்முடன் புது எருசலேமில்
கண்ணீர் யாவும் துடைப்பார் காலைவேளை

அல்லேலுயா (2) முகமுகமாய்
காணுவோம் பூவில் ஓடி முடிந்த பின்
அல்லேலுயா (2) காண்போம்
அவர் கிருபையால் அல்லேலுயா

1. கண்ணிமைப் பொழுதினில் காசினி விட்டேகுவோம்
காகளம் தொனிக்குமே அல்லேலுயா
கரை சேர்வோம் கடைசியாய் பயம் துக்கம் போகுமே
ஆளுவோமே இயேசுவுடன் அல்லேலுயா

2. ஆட்டுக்குட்டி சீயோனில் கூட்டம் பரிசுத்தராய்
நெற்றியில் இருப்பது தேவ நாமம்
கூட்டமாகச் சேர்ந்தவர் புதுப்பாட்டுப் பாடுவார்
முதற்பலன் அளிப்பவர் அல்லேலுயா

3. சந்தோஷ கீதங்களோடு சந்தோஷிப்போம் நாமெல்லோரும்
மைந்தன் மணநாளிலே அல்லேலுயா
மகிமை இராஜ்ஜியங்களில் தரித்து வெண்மைவஸ்திரம்
போரில் வென்றோர் வாழுவார் அல்லேலுயா

1277.காற்றே கடலே மேகங்

காற்றே கடலே மேகங்களே
கர்த்தரை என்றும் துதியுங்களே

1. வாலிபரே கன்னியரே
கர்த்தரை என்றும் துதியுங்களே
நல்லவரே இயேசு வல்லவரே
அவர் கிருபை என்றுமுள்ளதே (காற்றே)

2. பெரியோர்களே சிறியோர்களே
கர்த்தரை என்றும் துதியுங்களே
நல்லவரே இயேசு வல்லவரே
அவர் கிருபை என்றுமுள்ளதே (காற்றே)

3. சபையோர்களே ஊழியரே
கர்த்தரை என்றும் துதியுங்களே
நல்லவரே இயேசு வல்லவரே
அவர் கிருபை என்றுமுள்ளதே (காற்றே)

4. சூரியனே சந்திரனே
கர்த்தரை என்றும் துதியுங்களே
நல்லவரே இயேசு வல்லவரே
அவர் கிருபை என்றுமுள்ளதே (காற்றே)

G-Maj/Slow Rock/T-90

1278.காலமோ செல்லுதே வாலி

காலமோ செல்லுதே வாலிபம் மறையுதே
எண்ணமெல்லாம் வீணாகும்
கல்வியெல்லாம் மண்ணாகும்

மகிமையில் இயேசுவை
தரிசிக்கும் நேரத்தில்
அந்த நாள் நல்ல நாள்
பாக்ய நாள்

1. துன்பமெல்லாம் மறைந்து போம்
இன்னலெல்லாம் மாறிப்போம்
பெலமெல்லாம் குன்றிப்போம்
நிலையில்லா இவ்வாழ்வினிலே

2. கருணையின் அழைப்பினால்
மரண நேரம் வருகையில்
சுற்றத்தார் சூழ்ந்திட
பற்றுள்ளோர் கதறிட

3. வாழ்க்கையில் இயேசுவாய்
நாட்களை பூரிப்பாய்
ஒட்டத்தை முடிக்க
காத்துக்கொள் விசுவாசத்தை

4. உலகத்தின் மாந்தரே
கலங்காதே வாருமே
இயேசு அன்பினால்
கிலேசங்கள் மாறிப்போம்

D-Maj/16 Beat/T-90

1279.கிருபையே உன்னை இந்நாள்

கிருபையே உன்னை இந்நாள்
வரையும் காத்தது என் கிருபையே

1. பாதையில் கஷ்டம் அணுகிடும் போது
பங்கம் வராமல் நான் உன்னைத்தாங்கினேன்
பெலம் ஈந்தேன் கரத்தால் தூக்கினேன் உன்னைநான்
எந்தன் அன்பினால் உன்னை நிறுத்த

2. சோதனையாலே சோர்ந்திடும்போது
சொந்தமெனநான் உன்னை சந்தித்தேன்
ஜோதியை உன்முன்னில் ஜொலித்திட செய்திட்டேன்
ஜெயகீதங்கள் பாட வைத்திட்டேன்

3. ஏகனாய் நீயும் சஞ்சலத்தாலே
ஏங்கும்போது உன் அண்டை வந்திட்டேன்
ஏற்றநல் துணையை ஈந்திட்டேனல்லோ நான்
என்றும் உன்னை என் சொந்த மாக்கினேன்

4. ஜெயமான பாதை சென்றிட செய்தேன்
செப்பமாக உன் கரம் பிடித்தேன்
ஜெயஜெயகீதங்கள் தொனித்திட செய்தேனே
சேவை செய்யவும் கிருபை தந்தேனே

5. என்றென்றுமாக என் கிருபை காக்க
கொண்டேன் உன்னை இம்மண்ணில் பிரித்து
என்னரும் மகனே காப்பேனே உன்னை நான்
உன் தந்தை நான் உன்னை விடேனே

1280.சர்வ வல்லவர் யெகோ

சர்வ வல்லவர் யெகோவா தேவன்
எங்கள் தேவன் பூமியின் இராஜா

1. மகிமை உமக்கே
துதியும் உமக்கே
ஸ்தோத்திரம் உமக்கே
கனமும் உமக்கே

2. உம்மை நேசிக்கிறோம்
எம்மை படைக்கிறோம்
உம்மை பணிந்து கொள்ள
நாங்கள் வாழ்கின்றோம்

1281.சாரோனின் ரோஜாவே!

சாரோனின் ரோஜாவே!
பள்ளத்தாக்கின் லீலியே!
உள்ளத்தின் நேசமே!
இயேசு என் பிரியமே!

1. ஆத்தும நேசரே உம் நேசரே இன்பமே
பூரண ரூபத்தை காண்பியும் எனக்கு

2. கன்மலை வெடிப்பினில் தங்கிடும் புறாவே
உம்முக ரூபத்தை காண்பியும் எனக்கு

3. அன்பரை சந்திக்க ஆயத்தமாகினேன்
இயேசுவின் கரமதில் தத்தம் செய்தேன் என்னை

4. வருவேனென்றுரைத்தவர் சீக்கிரம் வருகிறார்
வாக்கு மாறாதவர் தாமதம் செய்யாரே

1282.சீயோனின் நாதம் முழங்க

சீயோனின் நாதம் முழங்கவே
சீயோனின் ராஜா வருகின்றார்

அல்லேலூயா - 2
மகிழ் கொண்டாடி பாடிடுவோம்
காண்போம் நம் இயேசுவையே

1. கண்ணீர் கவலைகள் வேதனைகள்
கர்த்தரைக் கண்டிட ஒழிந்திடுமே
நீங்கிடும் இகமதின் பாடுகளே
நித்திய மகிமையை ஈந்திடுமே

2. மண்ணதில் ஜீவனை மாய்த்த சுத்தர்
பொன்னைப் போல் புடமிடப்பட்டவரே
விண்ணின் சாயல் நித்தம் தரித்தவராய்
இயேசுவின் பொன்முகம் கண்டிடுவார்

3. தேகத்தில் பாடுகள் வென்ற சுத்தர்
ஏகமாய் மறுருபமாயிடுவார்
யுகாயுகம் இயேசுவோடாளவே
மேகமீதில் வேகம் பறந்திடுவார்

4. ஜெயங்கொண்டோர் சாலேமின் வீதிகளில்
ஜெயத்தொனி கீதங்கள் முழக்கிடுவார்
மகிமையின் கிரீடங்கள் சூடினோராய்
மகிமாசனத்திலே வீற்றிடுவார்

5. சீயோனின் நற்பணி தீர்ந்திடவே
மகிமையின் கர்த்தரே வெளிப்படுவார்
ஆமென் கர்த்தாவே நீர் வாரும் என்போம்
ஆவலாய் இயேசுவை சந்திப்போமே

1283.சேனைத்தலைவர் நம் இயே

சேனைத்தலைவர் நம் இயேசு இராஜாவை
சேர்ந்து ஒருமனமாய் துதித்திடுவோம்
எக்காள நாத தொனியுடனே
என்றென்றும் அவரை ஸ்தோத்தரிப்போம்

ஸ்தோத்தரிப்போம் ஸ்தோத்தரிப்போம்
முழுமனதோடு ஸ்தோத்தரிப்போம்
கெம்பீரிப்போம் கெம்பீரிப்போம்
முழு பெலத்தோடே கெம்பீரிப்போம்
ஸ்தோத்தரிப்போம் (3) கெம்பீரிப்போம் (3)

1. ஏழு நாள் சுற்றிய தேவ ஜனத்தின் முன்னே - 2
எரிகோ கோட்டையைத் தகர்த்திட்ட தேவனை
என்றும் துதித்திடுவோம் - எதிர்த்திடும் தடைகளை
துதித்து துதித்து நாம் தகர்த்திடுவோம்

2. சிறையினில் அடைபட்ட சீலா பவுலும் கூட - 2
சிறந்த பாடலை சிறையினில் பாடி
துதித்து உடைத்தனரே - அடைத்திடும் சிறைகளை
துதித்து துதித்து நாம் உடைத்திடுவோம்

3. எதிரியால் யோசபாத் கலங்கித் தவிக்கையிலே - 2
துதிக்கும் பாடகர் சேனையை நிறுத்தி
துதித்து ஜெயித்திட்டானே - எதிர்த்திடும் எதிரியை
துதித்து துதித்து நாம் ஜெயித்திடுவோம்

4. ஏரோது பேதுருவை சிறையில் அடைத்த போது - 2
சபையின் ஜனங்களும் ஒருமனமாக
துதித்து விடுவித்தனர் - சபைகளின் எதிரியை
துதித்து துதித்து நாம் துரத்திடுவோம்

C-Min/16 Beat/T-88

1284.நீர் சொன்னால் போதும்

நீர் சொன்னால் போதும் செய்வேன்
நீர் காட்டும் வழியில் நடப்பேன்
உம் பாதம் ஒன்றே பிடிப்பேன்
என் அன்பு இயேசுவே

ஆராதனை இயேசுவுக்கே
ஆராதனை இயேசுவுக்கே - 2

1. கடலின் மீது நடந்திட்ட
உம் அற்புத பாதங்கள்
எனக்கு முன்னே செல்வதால்
எனக்கு இல்ல கவலை

2. காற்றையும் கடலையும் அதட்டிய
உம் அற்புத வார்த்தைகள்
எந்தன் துணையாய் நிற்பதால்
எனக்கு ஏது கவலை

3. பாதை எல்லாம் அந்தகாரம்
சூழ்ந்து கொண்டாலும்
பாதை காட்ட நேசர்
உண்டு பயமேயில்லையே

4. பார்வோன் சேனை தொடர்ந்து வந்து
சூழ்ந்து கொண்டாலும்
பாதுகாக்க கர்த்தர்
உண்டு பயமேயில்லையே

1285.துதிப்பேன் என்றும் துதிப்

துதிப்பேன் என்றும் துதிப்பேன் என்றும்
துங்கவனை நான் துதித்திடுவேனே
உயர்த்திடுவேனே புகழ்ந்திடுவேனே வாழ்த்திடுவேன் - 2

1. பாதகன் நான் மா பாவியாய் இருந்தேன்
வேதனையால் கொடும் கோரம் சுமந்தேன்
நாதன் என்னை மீட்க நர உருவானார்
துதித்திடுவேனே உயர்த்திடுவேனே
புகழ்ந்திடுவேனே வாழ்த்திடுவேன் - 2

2. நர அவதாரம் எம் பாவங்கள் அழுத்த
நர ஜென்மம் மீட்க நரபலி ஆனார்
மரித்தார் உயிர்த்தார் ஜெயம் என்றும் எடுத்தார்
துதித்திடுவேனே உயர்த்திடுவேனே
புகழ்ந்திடுவேனே வாழ்த்திடுவேன் - 2

3. பேய்தனை கொல்கதா சிலுவையில் நசுக்கி
நோய்தனை அங்குதான் சுமந்துமே தீர்த்து
சேயன் நான் ஆகிட சாபங்கள் ஒழித்தார்
துதித்திடுவேனே உயர்த்திடுவேனே
புகழ்ந்திடுவேனே வாழ்த்திடுவேன் - 2

4. மாமிச திரைதனை கிழித்ததால் நமக்கு
மா பரிசுத்த ஸ்தலத்துக்குள் ஏக
திடமனம் தந்தார் புது வழி திறந்தார்
துதித்திடுவேனே உயர்த்திடுவேனே
புகழ்ந்திடுவேனே வாழ்த்திடுவேன் - 2

5. தினம் அவர் பாதையில் என்னை வழிநடத்த
கனம் மகிமை பெரும் ஆவியும் ஈந்தார்
பலவரம் தந்தார் பண அருள் ஈந்தார்
துதித்திடுவேனே உயர்த்திடுவேனே
புகழ்ந்திடுவேனே வாழ்த்திடுவேன் - 2

1286.தூய உள்ளங்களில் மகிழ

தூய உள்ளங்களில் மகிழ்ந்தாடும் ஆவியே
உம்மை துதிபாடும் நாவில் துணையாக வாரும்

1. அன்று நீரோடை தனிலே அசைவாடி நின்றாய்
இன்று புவியோர்கள் உள்ளத்தில்
மகிழ்ந்தாட வந்தாய்
நின்னருள் என்றும் நிதம் போற்றுவோம்
இந்த இருளான இதயத்தில் ஒளியாக வாரும்

2. அன்று மோசேயின் நாவில்
வார்த்தையாய் நின்றாய்
இன்று மூவரிலொன்றாய் எங்குமே திகழ்ந்தாய்
மானிடர் பாவம் போக்கவே - இந்த
மண்ணில் மனுவாக வந்து மரணத்தை ஏற்றாய்

3. அன்று எலியாவின் இதயத்தில் ஒளியாக திகழ்ந்தாய்
இன்று எளியோரின் உள்ளத்தில் மகிழ்ந்தாட வந்தாய்
எங்கள் குறை தீர்க்க உமையழைத்தோம்
எங்கள் துயரான கண்ணீரைத் துடைத்திட வாரும்

G-Maj/16 Beat/T-85

1287.துணை என்றும் இயேசு

துணை என்றும் இயேசு தேவா
உம்மை நம்பினேன்
எமைக் காக்கும் தேவ மைந்தா
உம்மை சாருவேன் - 2

1. இருள் யாவும் நீக்கி எம்மில்
அருள் யாவும் தந்தீர் தேவா
கனிவாக வந்தீரே துணையாக நின்றீரே
தேவ மைந்தன் இயேசுவே அன்பு போதுமே -2

2. அலைப் போல பாயும் துன்பம்
கடல் போல சீறும் காற்றும்
இரையாதே என்றீரே அமைதலைத் தந்தீரே
வார்த்தை ஒன்று சொல்லுமே வல்ல தேவனே-2

3. பயந்திடும் யாவர் மீதும்
நன்மையைப் பொழியும் நாதா
நம்பினேன் உம்மையே நன்மையே ஈந்திடும்
நீதிமானின் தேவனே நித்தம் நடத்துமே - 2

4. வழி என்றும் காட்டும் தேவா
விழி என்னில் வைத்த மூவா
தினம் தினம் போதியும் அருள் நிதம் காட்டிடும்
உம்மைப் போல தெய்வத்தைப்
பூமியில் காணேன் நான்-2

1288.தூயக் கல்வாரியில் சாய

தூயக் கல்வாரியில் சாய்ந்துயிர் ஏகிடும்
நாயகன் இயேசுவுக்கு ஏன் இந்த பாடுகள் - 2

1. என் பாவக்காரணமே கொல்கதா காட்சியாமே
நம்புவோர் எனக்குண்டே ஜீவன் - பெறவே உயர்ந்தோர்
அம்பரனார் கொடுங்குருசில் - குருதி
செம்பொன் மேனி நின்று சொரிந்தார் - 2

2. மும்முறை தாழ வீழ்ந்தே வேண்டுதல் செய்தவரே
மூவுலகதனை திருவாக்கினாலே தாங்குவோரே
மூன்று ஆணிகளில் தொங்கியே - மரித்தார்
மூவரிலொன்றான இவரே - 2

3. நாட்டமுடன் நன்மைகள் செய்தலைந்த பாதங்கள்
நடுங்கிய சீடருக்காய் அலைமேல் சென்ற பாதங்கள்
நாடி நம்மை வந்த பாதங்கள் - மரத்தில்
நாட்டியறையுண்ட பாதங்கள் - 2

4. காயங்கள் ஏற்றதாலே வேதனைக் கொண்டவரே
பாயும் செங்குருதிக் கொண்டே கழுவி பாவங்கள் நீக்கி
தூயராக மாற்ற நினைத்த சிலுவை
மேய்ப்பனின்றி மீட்பரில்லையே - 2

5. அன்பினாலே ஜீவனை வைத்திட வந்ததாலே
அந்தமிகு அவர் முகம் அந்தக்கேடடைந்திடவே
இந்த கோர பாடடைந்தாரே - தமது
மந்தைக்காக ஜீவன் வைத்தாரே - 2

1289.தேவ நீதி நிறைவேறுதே

தேவ நீதி நிறைவேறுதே
தேவ கரம் உயர்ந்திடுதே

1. கர்த்தர் யேகோவா நித்திய கன்மலை
கர்த்தர் நாமம் எங்கள் நம்பிக்கை
மன உறுதியுடன் பற்றிக் கொண்டால்
மெய் பூரண சமாதானம் காண்போம்

2. பெலனுள்ள நல் நகரம் உண்டே
பரன் கிறிஸ்தேசு நம் அரணே
அவர் தரும் இரட்சணியம் அதின் மதிலே
அங்கே அற்புத சத்தியம் ஓங்கும்

3. ஆதி சத்தியம் கைக் கொண்டு வரும்
நீதியள்ள ஓர் ஜாதி நுழையும்
வாசல்களை உயர்த்தி திறந்திடுவோம்
வெற்றி முழங்கும் கொடி பறக்கும்

4. உயாந்தவரைக் கீழேத் தள்ளினார்
உயர்ந்த நகர் இடிந்ததுவே
எளிமையானோர் கால் அதை மிதிக்க
செம்மை அடையும் நல்லோர் வாழ்வே

5. நீதி நிறைந்த நல் தேசமதில்
நீதி தயவை துன்மார்க்கன் கல்லான்
தேவ மகத்துவத்தைக் கவனித்திடான்
தேவன் நமக்காய் கிரியை செய்கிறார்

6. என் ஆத்துமாவே இராவினிலே
என் கர்த்தரையே வாஞ்சித்திடவே
அதிகாலமே என் ஆவியினால்
அண்ணல் அறிவை நான் தேடிடுவேன்

1290.தேவசுதன் மீட்டெடுத்த சபை

தேவசுதன் மீட்டெடுத்த சபையே என்றும்
கர்த்தரின் புகழைப் பாடு
சொல்லுங்களேன் அவர் நாமத்தையே
போற்றுங்களேன் துதி சாற்றுங்களேன்
மனம் மகிழ்ந்து அவரை துதிப்போம்

1. தேவனின் வாக்கு நிறைவேறிட
தினம்தினமும் வாக்குகளை அள்ளித்தருவார்
புகழ்வோம் ..... பணிவோம்
தேவமகிமை நம்மீது பொழியும்
உள்ளமெல்லாம் இல்லங்களாகும்
தினம் இரவும் பகலும் துதிப்போம்

2. வல்லமையாக இறங்கிடுவார்
தேவனின் ஆவி சத்ய பாதையில் நடத்திடுவார்
துணையாய் வருவார் அவர்
வல்லமை நம்மீது பொழியும்
உலகத்தை ஜெயிக்க உம்மையே சார்வோம்
என்றும் ஜெயத்தை அடைய துதிப்போம்

3. தம்புரு வீணை நாதம் இசைக்க
பேரொசையுள்ள கைத்தாளத்தின் தொனிமுழங்க
ஆவியால் நிறைவோம் புது
பெலனை அடைந்து துதிப்போம்
உற்சாகத்தோடே பொற்பாதம் பணிவோம்
அவர் சமூகம் என்றென்றும் இன்பமே

1291.தேவன் அருளிய சொல்லி முடியா

தேவன் அருளிய சொல்லி முடியா
ஈவுக்கு ஸ்தோத்திரம்
தேவன் தந்த ஒரே பேறான குமாரன் இயேசுவே
தம்மை விசுவாசிப்போராக்க
இரட்சிப் படைந்திடவே

1. யாரிவரோ யாரோ - 2
ஜெகத்தினில் பாவியை மீட்க
ஜெனித்தவர் யார் இவரோ
அவர் இயேசுவே - 4
சவுலைப் பவுலாய் மாற்றி
இரட்சித்தவர் இயேசுவே
அவர் இயேசுவே - 4

2. யாரிவரோ யாரே - 2
அலைகடல் மேலே நடந்து
வந்தவர் யார் இவரோ
அவர் இயேசுவே - 4
அகோர காற்றையும் கடலையும்
அமர்த்தினவர் இயேசுவே
அவர் இயேசுவே - 4

3. யாரிவரோ யாரே - 2
மாலையில் கடலோரம் சீஷர்கள்
கண்டது யார் இவரோ
அவர் இயேசுவே - 4
கவலைகள் போக்கி
கண்ணீர் துடைப்பவர் நம் இயேசுவே
அவர் இயேசுவே - 4

1292.தேவன் எந்தன் சொந்தமல்லவோ

தேவன் எந்தன் சொந்தமல்லவோ
அவரின் முகம் காணுவது இன்பமல்லவோ
ஒளிவீசும் சுடரொளியே
உந்தன் நாமமே எங்கள் ஆறுதல்
கைவிடாத என் அடைக்கலமே

1. நீரின்றி வாழ்வில்லையே - நின்
துணையின்றி வழியுமில்லை
என் தெய்வமே என் இயேசுவே
உந்தன் கரம் பற்றி வாழ்ந்திடுவேன் - (2)

2. புது எண்ணெய் ஊற்றிடுமே - என்னில்
புது பெலன் அளித்திடுமே
என் ராஜனே என் தேவனே
புது பாடல் நான் பாடிடுவேன் - (2)

3. வாழ்வது உமக்காக - என்னை
வனைந்திடும் உம்மைப் போல
என் நேசரே உம் மார்பிலே
நிதம் சாய்ந்து இளைப்பாறிடுவேன் - (2)

4. கூப்பிடும் வேளைதனில் - என்னை
நோக்கிடும் அன்பர் நீரே
என் கர்த்தரே என் இரட்சகா
உம் சமூகத்தில் மகிழ்ந்திடுவேன் - (2)

1293.தேவ பிதாவின் அன்பி

1. தேவ பிதாவின் அன்பினை நாம்
ஆராதிக்கின்றோம் துதிக்கின்றோம்
ஜீவனும் எந்தன் சர்வமும் படைத்து
ஆராதிக்கின்றோம் பணிகின்றோம்

2. இயேசுவின் மாறா அன்பினை நான்
ஆராதிக்கின்றோம் துதிக்கின்றோம்
ஜீவனும் எந்தன் சர்வமும் படைத்து
ஆராதிக்கின்றோம் பணிகின்றோம்

3. நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்
ஆராதிக்கின்றோம் துதிக்கின்றோம்
ஜீவனும் எந்தன் சர்வமும் படைத்து
ஆராதிக்கின்றோம் பணிகின்றோம்

3. சொந்த குமாரனை தந்தவரை
ஆராதிக்கின்றோம் துதிக்கின்றோம்
ஜீவனும் எந்தன் சர்வமும் படைத்து
ஆராதிக்கின்றோம் பணிகின்றோம்

4. இரத்தத்தை சிந்தி மீட்டவரை
ஆராதிக்கின்றோம் துதிக்கின்றோம்
ஜீவனும் எந்தன் சர்வமும் படைத்து
ஆராதிக்கின்றோம் பணிகின்றோம்

5. சீக்கிரம் வருவேன் என்றவரே
ஆராதிக்கின்றோம் துதிக்கின்றோம்
ஜீவனும் எந்தன் சர்வமும் படைத்து
ஆராதிக்கின்றோம் பணிகின்றோம்

6. சாத்தானின் சேனையை ஜெயித்தவரை
ஆராதிக்கின்றோம் துதிக்கின்றோம்
ஜீவனும் எந்தன் சர்வமும் படைத்து
ஆராதிக்கின்றோம் பணிகின்றோம்

1294.தேவாதி தேவன் இயேசு

தேவாதி தேவன் இயேசு
அவர் நம் மத்தியில் இருக்கிறார்
அவரையே நம்பிடுவோம்
என்றென்றும் காத்திடுவார்

1. சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாய் இருக்கும்
இயேசுவை தேடுகின்ற எல்லோரும்
சுகித்து ஆனந்திப்பார்

2. வஞ்சகன் சிந்திக்கும் வலைதனிலே
பொல்லாங்கள் விழுந்தழிவான்
இயேசுவை தஞ்சமாய் நம்பிடுவோர்
செழித்து நிலைத்திருப்பார்

3. இருமனமுள்ள மனிதர்கள் தம்
வழிகளில் அழிந்திடுவார்
இயேசுவை இதய தெய்வமாக்கினோர்
மகிழ்ந்து கெம்பீரிப்பார்

4. பொருளாசையும் பரிதானமும்
தன் வீட்டை அழித்து விடும்
இயேசு மீட்ட நீதிமான்கள்
தன் வீட்டில் ஆர்ப்பரிப்பார்

5. இனிய சொற்கள் தேன்கூடு போல்
ஆத்ம மதுரமாகும் இயேசுவின் நாமம்
நம்புவோர்க்கென்றும்
நல்ல ஔஷதமாம்

D-Maj/16 Beat/T-95

1295.தேவனே நான் உமதண்டையில்

தேவனே நான் உமதண்டையில் - இன்னும்
நெருங்கி சேர்வதே என் ஆவல் பூமியில்

மாவலியக் கோரமான
வன்சிலுவை மீதினில் நான்
கோவேத் தொங்க நேரிடினும்
ஆவலாய் உம்மண்டை சேர்வேன்

1. யாக்கோபைப் போல் போகும் பாதையில்
பொழுதுப்பட்டு இராவில் இருள் வந்து மூடிட
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து
தூங்கினாலும் என் கனாவில் நோக்கியும்மை
கிட்டி சேர்வேன் வாக்கடங்கா வல்ல நாதா

2. பரத்துக் கேறும் படிகள் போலவே
என் பாதை தோன்றப் பண்ணும் ஐயா
எந்தன் தேவனே கிருபையாக நீர் எனக்கு
தருவதெல்லாம் உமதண்டை அருமையாய்
என்னையழைக்கும் அன்பின் தூதராக செய்யும்

3. நித்திரையினின்று விழித்து காலை எழுந்து
கர்த்தாவே நான் உம்மை போற்றுவேன்
இத்தரையில் உந்தன் வீடாய்
என் துயர்க் கல் நாட்டுவேனே
எந்தன் துன்பத்தின் வழியாய்
இன்னும் உம்மை கிட்டி சேர்வேன்

4. ஆனந்தமாம் செட்டை விரித்து -பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும் வான
மண்டலங்கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறுக் காலத்திலும்
மருவியும்மை கிட்டி சேர்வேன்

1296.நன்றி நன்றி என் இயேசு

நன்றி நன்றி என் இயேசு ராஜாவுக்கே
தந்தேன் என்னை என் தேவனுக்கே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரம் தேவா ஸ்தோத்திரம்
பாத்திரர் உமக்கே ஸ்தோத்திரம்

1. உம் நாமம் என்றும் துதித்திடவே
எந்தனை படைத்திட்டீரே
சீயோனின் ராஜனே என் தேவனே
நன்றி சொல்லி நான் துதிப்பேன்

2. வேதனை வியாகுல நேரங்களில்
தேவா உம் ஆவியினால்
தேற்றினீர் என்னையே உம்மன்பினால்
நன்றி சொல்லி நான் துதிப்பேன்

3. சோதனை வேளையில் ஜெயமடைய
சாத்தானை முறியடிக்க
தந்தீரே வல்லமை கிருபையாய்
நன்றி சொல்லி நான் துதிப்பேன்

4. கண்ணிமை நேரத்தில் உம்மைக் காண
மறுரூபமடைந்திடவே
நம்பிக்கை தந்தீரே உலகிலே
நன்றி சொல்லி நான் துதிப்பேன்

1297.நன்றி சொல்லியே இயேசு

நன்றி சொல்லியே இயேசுவைப் பாடுவோம்
நன்மைகள் செய்தாரே - ஏராளம்
கிருபை பொழிந்தாரே
துரோகி என்னையே தூக்கியெடுத்து
தேற்றி அணைத்தாரே

1. பாவி என்னையே பாரில் கண்டீரே
தேடியே வந்தீரே - கல்வாரியில் அன்பினால்
இழுத்தீரே நன்றியால் பாடிடுவேன்

2. தனித்த என்னையே அணைத்துக் கொண்டீரே
உம்மோடு இணைத்தீரே பேரன்பினால்
ஆனந்தம் தந்தீரே நன்றியால் பாடிடுவேன்

3. தாழ்ந்த என்னையே தாங்கி வந்தீரே
ஆவியால் நிறைந்தீரே - கிருபையால்
வரங்கள் ஈந்திரே நன்றியால் பாடிடுவென்

4. வியாதி வறுமை வேதனை துன்பமே
நீக்கிக் காத்தீரே - எப்பொழுதுமே
என்னுடன் இருந்தீரே நன்றியால் பாடிடுவேன்

5. வஞ்சக உலகில் நண்பனாய் வந்து
நேசத்தைத் தந்தீரே எந்நாளுமே
மாறாமல் இருந்தீரே நன்றியால் பாடிடுவேன்

1298.நான் நம்பி வந்தேன் இயே

நான் நம்பி வந்தேன் இயேசுநாதா
என்னை ஏற்றுக் கொள்ளும்
உம்மையன்றி மீட்பர் இல்லை
உலக இரட்சகரே - நீரே

1. எந்தன் பாரம் தாங்கிடவோ
ஏதும் என்னில் பெலனுண்டோ
யாரிடம் செல்வேன் என்னை விசாரிப்பார் இல்லை
நான் என் பாவ பாரம் நீக்கிடும் தேவா
இயேசுவே இரங்கும்

2. துன்பம் தொல்லை துயரங்களும்
தாங்கொண்ணாத நோய் பிணியும்
சோதனைகளும் என்னை நெருக்கி வாட்டிடினும் பல
சுகம் தாரும் என்னை விடுதலையாக்கும்
சர்வ வல்லவரே - நீர்

3. உன்னத அன்புள்ளவரே
உண்மை நீதி உடையவரே
இந்த ஏழைக்காய் நீர் பரிந்து பேசுமே
இருளான வாழ்வில் வெளிச்சமே தாரும்
இயேசு இரட்சகரே - என்

4. இயேசுவே உம் இரத்தத்தினால்
என் மனதை கழுவிடுமே
மன்னிப்படைந்தே பரிசுத்தமாகவே - பாவ
என் பாவம் யாவும் அறிக்கை செய்தேனே
என்னை மீட்டருளும் - இன்று

5. கல்வாரியை காண்கையிலே
கல்மனமும் உருகிடுதே
எத்தனை பாடோ ஈன சிலுவை மீதிலே - உமக்கு
எனக்காக யாவும் செய்து முடித்தே
இயேசுவே மரித்தீர் - என்

1299.நான் நடந்து வந்த பாதை

நான் நடந்து வந்த பாதையில் எல்லாம்
என்னை சுமந்து வந்த நேசர் இயேசுவே
கடந்தக் கால பாவங்கள் எல்லாம்
கொடும்குருசில் சுமந்து தீர்த்த நேசரே

1. தாயாரின் வயிற்றினில் உருவான முதல்
என்னைத் தமக்காகத் தெரிந்துகொண்டு பிரித்தெடுத்தீர்
ஒரு தகப்பனைப் போல் என்னை சுமந்தவரை
தினம் தழுவிடுவேன் சிறு பிள்ளையைப் போல்
மார்போடு அணைத்தவரைப் பாடிடுவேன்
முழு மனதோடு சேர்த்தவரைத் துதித்திடுவேன்

2. வழிமாறி ஓடி ஒரு ஓடத்திலே
கொஞ்சம் இளைப்பாற நினைத்தேன் அடித்தளத்தினிலே
வலக்கரம் கொடுத்து என்னை எடுத்து
மீன் வயிற்றினிலும் தனி இடம் கொடுத்து
அழியாதுக் காத்தவரைப் பாடிடுவேன்
வழிவிலகாது மீட்டவரைத் துதித்திடுவேன்

3. வெகுதூரம் நடந்தேன் ஒரு மலையருகில்
நான் களைப்பாற சாய்ந்தேன் சூரைச் செடி நிழலில்
இரு வேளையிலும் கருங்காகம் கொண்டு
சுவைக் கறியுடனே தினம் அப்பம் கொடுத்து
பசி தாகம் தீர்த்தவரைப் பாடிடுவேன்
எனக்கு இளைப்பாறுதல் ஈந்தவரைத் துதித்திடுவேன்

1300.நித்திய ராஜா நிர்மல

நித்திய ராஜா நிர்மல நாதா
நின் பாதம் பணிந்தேன் இக்காலை
நின் பாதம் பணிந்தேன் இவ்வேளை

என் மன இராஜ்ஜியத்தில்
என்றும் அரசாளுகின்ற
இராஜாதி இராஜாவுக்கு ஸ்தோத்திரம்
இயேசு மகா இராஜாவுக்கு ஸ்தோத்திரம்

1. கண்ணயர்ந்த வேளையிலும்
கண்ணிமைப் போல் காத்தவரே
கற்பகமே உமக்கு ஸ்தோத்திரம்
கண் விழித்த வேளையிலும்
கண்மேல் உன் கண் வைத்து
கருத்தாய் போதித்தவா ஸ்தோத்திரம்

2. இப்பகல் வேளையிலம்
எப்பக்கம் சூழ்ந்து நிற்கும்
இம்மானுவேலனே ஸ்தோத்திரம்
உம்முடனே நான் இசைய
என்னுடனே நீர் பிணைய
வாழ்ந்திடும் வாழ்வுக்காய் ஸ்தோத்திரம்

1301.நீதியும் நியாயமும் என்

நீதியும் நியாயமும் என் இயேசுவின்
நாவில் கண்டேன்
ஞானம் அறிவு எல்லாம் என்
ராஜாவின் நாவில் கண்டேன்

1. சத்தியம் பேசும் இயேசு
மனக்கலக்கம் நீக்கும் நல்லவரே
இயேசுவின் நாவில் நன்மையே
மகிழ்ந்து வந்த மகிமையே

2. நன்மை பேசும் இயேசு
மனத்துயரம் நீக்கும் மீட்பரே
இயேசுவின் நாவில் நன்மையே
சுரந்து வந்த இனிமையே

3. நற்செய்தி பேசும் இயேசு
மன வேதனை நீக்கும் வல்லவரே
இயேசுவின் நாவில் அற்புதமே
தேவ அன்பின் ஜீவியமே

4. பரிசுத்தம் பேசும் இயேசு
மனப்பாரம் நீக்கும் மேய்ப்பரே
இயேசுவின் நாவில் பாசமே
பரலோகம் தந்த பரவசமே

1302.நீரேன் சொந்தம் நீரேன்

நீரேன் சொந்தம் நீரேன் பக்கம்
துன்ப வேளைகளில்
ஆழியின் ஆழங்களில் ஆனந்தம் நீரேனக்கு
சூரைசசெடியின் கீழிலும்
உம் சமூகம் என்னைத் தேற்றுமே

1. வறண்ட பாலைவன வாழ்க்கையில்
தாகத்தால் என்நாவு வறண்டாலும்
ஆகாரின் குழந்தையின் அழுகையை கேட்டவர்
என் தாகம் தீர்க்க வல்லவர்

2. நெரிந்த நாணலை ஒடியாதவர்
மங்கியெரியும் திரியை அணையார்
புலம்பலை களிப்பாய் மாற்றுவார்
விடுதலையின் தேவன் இயேசுபரன்

1303.நேசர் அவர் என் நேச

நேசர் அவர் என் நேசரவர்
நேசர் அவர் என் நேசரவர்
நேசரிலெல்லாம் விசேஷித்தவர்
சோகமடைந்தேன் நேசமதால்

1. வெண்மையும் சிவப்பும் மானவரே
கண்ணைக் கவர்ந்திடுபவர் அவரே
பதினாயிரங்களில் சிறந்தவரே
அதிசயமானவர் அவர் பெயரே

இவரே என் ஆத்தும நேசரே
வருவார் எனக்காய் வேகமே

2. அவர் தலை முழுதும் பொன்மயமாமே
அவர் தலைமயிர் சுருள் சுருளாமே
காகத்தின் நிறம் அவர் முடியாமே
லோகத்தின் ஒளி விளக்கவராமே

3. அவர் கண்கள் கண்ணீர் நிறைந்தவைகள்
கவரும் புறாக்கண்கள் போன்றவைகள்
பாலிலே கழுவப்பட்டவைகள்
நேர்த்தியாய் பதிக்கப் பட்டவைகள்

4. அவரின் கன்னங்கள் உதடுகளாம்
மலர்களின் வாசனை வீசிடுமாம்
தங்க வளையல் போல் அவர் கரமாம்
தங்கத்தை போல் அங்கம் உடையவராம்

5. ரூபமதில் அவர்க்கினை அவரே
லீபனோன் மகிமை உடையவரே
கேதுரு போல் அவர் உயர்ந்தவரே
ஏதும்மில்லா சிறப்பானவரே

1304.நேசரே என் நேசக்கொடி

நேசரே என் நேசக்கொடி
பாசமே என் பரிசுத்தரே
அன்பரே என் ஆறுதலே
இன்பமே என் இயேசுராஜனே

1. பெலனில்லா நேரத்திலே
துணையாய் இருப்பவரே
வார்த்தையினால் என்னை
வளமாய் காப்பவரே

2. உன்னதமானவரின்
மறைவினில் தங்கிடுவேன்
உதவிடும் கரம் நோக்கி
ஒத்தாசை பெற்றுக் கொள்வேன்

3. தேவனின் பாதம் அமர்ந்தே
புது பெலன் பெற்றிடுவேன்
உலகெங்கும் பறந்து சென்று
ஊழியம் செய்திடுவேன

4. அன்பினால் நிறைந்து தினம்
ஆவியில் அனலும் கொள்வேன்
தேவனின் நாமத்தையே
திசையெங்கும் பரப்பிடுவேன்

1305.பரிமளத்தைலமாம் பரிசுத்தராம்

பரிமளத்தைலமாம் பரிசுத்தராம்
என் இன்பமான இயேசு ராஜனாம் - 2

1. காட்டுக்குள்ளே கிச்சிலி மரம்
என் நேசர் அன்பு வாசம் வீசிடும்

2. குருவி சத்தம் கூட்டமாய் பாடும்
என் நேசர் சத்தம் எங்கும் தொனிக்கும்

3. முற்றிலுமே அழகுள்ளவர்
என் நேசர் என்றும் என்னுடையவர்

4. முட்களுக்குள் லீலி புஷ்பம் போல்
என் நேசர் உள்ளம் கவர்ந்திடுவேன்

5. தோட்டத்திற்குள் வந்திடுவாரே
என் நேசர்க்கேற்ற கனி கொடுப்பேன்

6. வெள்ளங்களும் தணித்திடாதே
என் நேசர் மேல் நான் சார்ந்து கொள்ளுவேன்

7. தீவிரிக்கும் புறாவைப் போல
என் நேசர் வரக் காலமாச்சுதே

1306.பரிசுத்த நகரம் பரம

பரிசுத்த நகரம் பரம எருசலேம்
பாரினில் இறங்கிட நான் கண்டேன்
முந்தின பூமி ஒழிந்து போயிற்று
புதிய வானம் பூமி கண்டேன்

1. தேவமகிமை அடைந்த எருசலேம்
மணவாட்டிக்காக ஆயத்தப்பட்டது
அழியாத வாடாத மாசற்ற சுதந்திரம்
எருசலேமின் நான் பெறுவேன்

2. அஸ்திபார நகரம் அலங்கார நகரம்
மணவாட்டிக்காக ஆயத்தப்பட்டது
நகரத்தின் வீதிகள் சுத்தப்பொன்னாமே
எருசலேமில் நான் நடப்பேன்

3. கிறிஸ்துவின் சிங்காசனம் அங்கேநான் காண்பேன்
தேவசமூகம் தரிசிப்பேன்
இராக்காலம் அங்கில்லை இயேசுவே பிரகாசிப்பார்
எருசலேமில் அரசாளுவேன்

4. ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்
கேட்கிறவனும் வா என்பானாக
சீக்கிரம் வருவேன் என்று இயேசுரைத்தார்
ஆமென் இயேசுவே வாரும் வாரும்

D-Maj/16 Beat/T-85

1307.பரிசுத்தர் பரிசுத்தர் இயேசு

பரிசுத்தர் பரிசுத்தர் இயேசுவே
வல்லமை உடையவரே
வான்புவி உந்தன்
மகிமையால் நிறைந்தனவே

ஓசன்னா ஓசன்னா
வானில் ஓசன்னா

1. கர்த்தர் செய்த நன்மைக்காய்
என்னத்தை செலுத்திடுவோம்
இரட்சிப்பின் பாத்திரம் எடுத்து
நாம் தொழுதிடுவோம் - பரிசுத்தர்

2. மகிமை மாட்சிமை நிறைந்தவர்
ஆண்டவர் பெரியவர்
அவரது மகிமை அடைந்திட
தொழுதிடுவோம் - பரிசுத்தர்

3. அன்பு உருக்கம் உடையவர்
அன்பால் நிறைந்தவரே
அவரது அன்பை அடைந்திட
பணிந்திடுவோம் - பரிசுத்தர்

4. தாழ்மை இரக்கம் நிறைந்தவர்
தயவால் நிறைந்தவரே
இராஜாதி இராஜன் இயேசுவை
போற்றிடுவோம் - பரிசுத்தர்

5. நாவுகள் உம்மை துதித்திடும்
முழங்கால் முடங்கிடுமே
கர்தாதி கர்த்தர் இயேசுவை
உயர்த்திடுவோம் - பரிசுத்தர்

1308.பரலோக மகிமைதனை

பரலோக மகிமைதனை - நான்
பாடுவேன் கவிகளினால்
கண்களால் காணாத காதுகள் கேட்காத
கனவான்கள் தேசமதை

1. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் எனதூதர்
பாடியே துதிக்கின்றனர்
பாசமாய் பாட பாவியை மீட்டீர்
பாவி நான் உமதடிமை
பாடுவேன் தூதருடன்

2. மகிமையே மகிமையே மகிமையே என நானும்
பாடியே துதிக்கின்றேனே
ஜெயத்தின்மேல் ஜெயம்கொண்டு ஜெயகீதம் - பாடிட
ஜெகமதில் ஜெபித்திடுவேன்
நான் ஜீவனை ஈந்திடுவேன்

3. ராஜாதி ராஜனே தேவாதி தேவனே
கீதங்கள் கேட்கின்றாரே
சுரமண்டல தொனிபோல யாருமே அறிந்திடா
சங்கீதம் பாடிடுவேன்
கீர்த்தனம் பண்ணிடுவேன்

4. வல்லமை மகிமை துதியும் கனமும்
கிறிஸ்தேசு ராஜாவுக்கே
தூதர்கள் பணிந்திட மூப்பர்கள் தொழுதிட
மீட்பின் கீதம் பாடுவேன்
மகிமையின் தேசத்திலே

5. ஆனந்தம் ஆனந்தம் என்றுமே
ஆயத்த படுத்தினாரே
கைகளால் கட்டிடா அஸ்திபாரமுள்ள
சிறப்புறும் தேசமதை மகிமையின் நகரமதை

G-Maj/Polka/T-120

1309.பிதா குமாரன் பரிசுத்த

பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவராம்
திரித்துவ தேவனை துதித்திடுவோம்

1. நித்தியத்தின் மகிமை பிரகாசத்தில்
சேரக்கூடாத ஒளிதனில்
மூன்றில் ஒன்றாய் ஜொலித்திடும்
பரம பிதாவை ஸ்தோத்தரிப்போம்

2. பாவத்தின் கோர பலியான
சாபங்கள் தன்னில் ஏற்றுக்கொண்டு
பாவிகளுக்காய் ஜீவன் தந்த
தேவகுமாரனை ஸ்தோத்தரிப்போம்

3. வல்லமையோடு வந்திறங்கி
வரங்கள் பலவும் நமக்கீந்த
ஆவியின் வழியை தினம் காட்டும்
பரிசுத்த ஆவியை ஸ்தோத்தரிப்போம்

4. அனல்போல் சோதனை வந்தாலும்
அக்கினி ஊடாய் நடந்தாலும்
சோதனை நம்மை சூழ்ந்தாலும்
ஜெயம் அளிப்பவரை ஸ்தோத்தரிப்போம்

5. வானவர் விரைவில் வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைப்போமே
வானவருடன் சேர்ந்திடும் நாள்
விரைவில் நெருங்கிட ஸ்தோத்தரிப்போம்

D-Maj/Disco soul/T-120

1310.பெத்லகேம் யாத்திரை

பெத்லகேம் யாத்திரை சென்றே
பாலகன் இயேசுவைக் கண்டே
ஆனந்தம் அடைந்த மூவர்
கூறும் அற்புத சாட்சி இதே
அவர் பாதம் நாம் பணிவோம்,

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்
தேவ குமாரன் கொடுக்கப்பட்டாரே
கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கும்
கிறிஸ்து மேலானவரே

1. மேலோக மாளிகையை விட்டு
பூலோக மண் மனையில்
தூதர் துதி துறந்தே
பகத்தொட்டிலில் அவர் படுத்தார்

2. மண்ணுயிர் வாழ்வதற்கு இயேசு
தன்னுயிர் தியாகம் செய்தார்
மாளிடமே மகிழ்வாய்
உன் மனத் துயர் தீர்த்திடுவார்

3. பாவ சந்தோஷங்களோ
உன்னை பாதாளம் தள்ளிடுமே
இயேசுவின் திருமுகமே
கண்டு இரட்சிப்பை தேடிநீ வா

4. வான பிதாவிடமே உன்னை
விண் இயேசுசேர்த்திடுவார்
ஜீவன் வழி சத்தியம் நித்திய
ஜோதியை பின்பற்றி வா

1311.பேசும் தெய்வம் நீர்

பேசும் தெய்வம் நீர்
பேசாத கல்லோ மரமோ நீரல்ல

1. என்னைப் படைத்தவர் நீர்
என்னை வளர்த்தவர் நீர்
என்பாவம் நீக்கி என்னை குணமாக்கி
என்னோடிருப்பவர் நீர் - இயேசுவே (4)

2. என் பாவம் சுமப்பவர் நீர்
என் தாகம் தீர்ப்பவர் நீர்
என்னை போஷித்து என்னை உடுத்தி
என்னோடிருப்பவர் நீர் - இயேசுவே (4)

3. என் குடும்ப வைத்தியர் நீர்
ஏற்ற நல் ஒளஷதம் நீர்
எந்தன் வியாதி பெலவீனங்களில்
என்னோடிருப்பவர் நீர் - இயேசுவே (4)

4. எனக்காய் வருபவர் நீர்
என் கண்ணீர் துடைப்பவர் நீர்
எல்லாம் முடித்து சீயோனில் சேர்த்து
என்னோடிருப்பவர் நீர் - இயேசுவே (4)

1312.பொங்குதென் உள்ளம் நிறை

பொங்குதென் உள்ளம் நிறைந்தே - என்னேசுவே
பங்கமில்லா உம்மன்பினால் - 2
ஆசையுடனே நேசருமது
பாசக்கரத்தினுள் பறந்திளைப்பாறுவேன் - 2

1. பாடி புகழுதே என் அதரங்களும்
நாடி மகிழுதே என் அந்தரங்கமும்
நாடோறும் அளிக்கும் நின் கிருபைகளை
நாடுதென் ஜீவனும் நீடுழியாய் - 2

2. நிந்தையும் துயரும் சந்திக்கும் வேளையே
அந்தோ சூழ் இருளாம் சாவின் நிழல்தனில்
எந்தையே சீயோனின் கதிர் போல் விந்தையாம்
அந்தமுன் சோபையால் நடத்துவீர் -2

3. மீட்சி செய்தவரே வீழ்ச்சியில் நின்றுமே
ஆட்சி செய்யவே நான் என்றும் உம்முடனே
மாட்சியில் மிகுநின் நேசக் கடாட்சத்தால்
காட்சியில் கொண்டீரே தூசியென்னை-2

4. மேவியேயுலகில் பொன் வெள்ளி நிகராய்
லேவியின் சுதரை சுத்தி செய்பவரே
ஏவியே என்னையும் சுத்தி செய்துமைப்போல்
சேவிக்க ஆவியே மாற்றிடுவீர் -2

5. நற்கிரியை யென்னில் உற்பவம் செய்தீரே
தற்பரா உமது நாள் வரை நடத்தி
சொற்படி வழுவா சந்நிதி வரவே
முற்றுமாய் ஏற்றென்னை ஆண்டிடுவீர்-2

C-Maj/Waltz/T-130

1313.மணவாட்டியே என் சபையே

மணவாட்டியே என் சபையே
விழித்தெழு சீயோன் திருச்சபையே
உன்னில் மகிமை அடைந்திடவே
உன்னை பூவினில் கண்டெடுத்தேன் - (2)

1. உள்ளான அழகு என் பிரியம்
உபதேசத்தில் நிலைத்திருப்பாய்
என் பிரியமே ரூபவதி
உன்னில் நான் மகிழ்ந்திடுவேன் - (2)

2. கூர்மையும் புதிதும் எந்திரமாய்
மலைகளை நொறுக்கிடுவாய்
தகர்த்திடுவாய் குன்றுகளை
பாதாள வாசல்கள் மேற் கொள்ளாதே - (2)

3. உந்தனின் கிரியை நான் அறிவேன்
உண்மை ஊழியம் செய்திடுவாய்
ஜனம் தருவேன் ஜெயம் தருவேன்
பாதாள வாசல்கள் மேற் கொள்ளாதே - (2)

4. உன்னையே தோட்டத்தில் நாட்டினேன் நான்
என்றுமாய் கனிதரவே
படர்ந்திடுவாய் வளர்ந்திடுவாய்
என் வாசல் என்றும் இன்பமிதே - (2)

5. பரிசுத்தம் காத்து ஆயத்தமாய்
வானில் நீ பறந்திடவே
மகிமையிதே பரவசமே
உன்னை சந்திக்கும் நாள் தனிலே - (2)

6. உந்தனின் கால்கள் கன்மலை மேல்
நிறுத்தி உன்னை உயர்த்திடுவேன்
களித்திவாய் சமூகமதில்
எந்நாளும் உன்னை கைவிடேனே - (2)

1314.மாமிசமானோர் யாவரின்

மாமிசமானோர் யாவரின் மேலும்
வந்திடும் ஆவியே எந்தனின் மேலும்
வல்லமையாக பொழிந்திடவேணுமே

1. எந்தனின் பெலமெல்லாம் ஒன்றுமில்லை
என்பதை நானறிவேன்
உந்தனின் ஆவியினால் எல்லாம் ஆகும்
உன்னத தேவனே
உயிர் மீட்சிதாரும் சபைதனில் நடுவில்
அருள்மாரி பொழிந்திடுமே பின்மாரி ஊற்றிடுமே

2. பெந்தேகொஸ்தேயின் நாள்தனில் அன்று
பலமாய் இறங்கினீரே
உந்தனின் ஜனங்கள் எங்களின்மேலே
நிழலிட வேணுமே
ஆவியின் வரங்கள் அளவில்லாமல்
அருளிட வேணுமே அபிஷேகம் தாருமே

3. இந்த வாலிப நாட்களில் உம்மை
வாஞ்சித்துக் கதறுகிறேன்
என்றும் மாறா இயேசுவே உம்மை
மண்டியிட்டு வேண்டுகிறேன்
உந்தனுக்காக ஊழியம் செய்ய
எந்தனை நிரப்பிடுமே உன்னத பெலனாலே

1315.முற்றிலும் அழகானவர்

1. முற்றிலும் அழகானவர்
எல்லோரிலும் மா சிறந்தோர்
தேவாதி தேவனானவர்
நேசக் கல்வாரி நாயகா

கல்வாரி நாயகா
என் உள்ளம் ஆட்கொண்டீர்
என்னை மீட்க மரித்தீர்
கல்வாரி நாயகா

2. காயப்பட்டு நொறுங்குண்டு
பாவம் துக்கம் சுமந்தோராய்
நீசர் சிலுவையில் மாண்டார்
துக்க கல்வாரி நாயகா

3. ஜீவன் சமாதானம் ஈய
சிறையுற்றோரின் மீட்புக்காய்
இரத்தமாம் ஊற்றை திறந்தார்
இரக்க கல்வாரி நாயகா

4. நமக்காய் பெற்ற வரங்கள்
சுத்தாங்கம் யாவும் நல்கிட
அன்பதாம் வெள்ளம் ஊற்றினார்
தயாள கல்வாரி நாயகா

1316.வாசல்களே உங்கள் தலை

வாசல்களே உங்கள் தலைகளை - நல்
வாஞ்சையுடனே உயர்த்திடுங்கள்

அநாதி கதவுகளே உயர
அநாதி தேவன் உட்பிரவேசிப்பார்

1. சேனைகளின் கர்த்தர் இவர்தானே
சேனாதிபதியாய் வந்தாளுவார்
யுத்தத்தில் வல்லவர் மாறா மகிபனே
யூதாவின் இராஜா உட்பிரவேசிப்பார்

2. உலகமும் அதன் குடிகளும்
உண்டாக்கின கர்த்தர் சொந்தமதே
கடல்கள் மேல் ஸ்தாபித்து ஆளும் நம்
கர்த்தாதி கர்த்தர் உட்பிரவேசிப்பார்

3. கர்த்தருடைய பர்வதத்திலே
பக்தன் பரிசுத்தன் யார் ஏறுவான்?
பூரண வடிவு சீயோனிலே வாழும்
பூரண தேவன் உட்பிரவேசிப்பார்

4. உள்ளமதிலே மாசில்லாதவன்
உண்மை பரிசுத்த கைகளுடன்
மாயை கபடுள்ள ஆணை அகற்றியே
மா தேவனோடே உட்பிரவேசிப்பான்

5. கர்த்தர் சமூகத்தை நாடுகின்ற
பக்தனாம் யாக்கோபு சந்ததியே
தேடி விசாரித்து தேவ நீதி பெற்று
தேவாசீரோடே உட்பிரவேசிப்பான்

6. தடை அகற்றும் தள கர்த்தரே
தீவிரமாக நம் முன் செல்கிறார்
வாசல் வழியே நாம் முன் சென்று ஏகியே
வீரமுடனே உட்பிரவேசிப்போம்

1317.வாழுவேன் அன்பர் நாட

வாழுவேன் அன்பர் நாடதில் ஆர்ப்பரிப்புடன்
வாஞ்சையுடன் காத்த எந்தன் ஆவல் தீர்த்திட்டார்
வாழுவேன் இன்ப நாடதில்

1. என்ன இம் மேன்மை! என் பேர்க்காய்த் தானோ
என்னென்ன இன்பம் என் சொந்தமானதோ
ஏற்றுவேன் என் உள்ளமதினால் - துதி
ஏன்றும் என்னை மீட்ட அன்பைக் கூறுவேன்

2. அன்பின் மகிமை அன்பே நான் காண
அன்பே உம் சாயல் என்னில் தரித்தீரே
ஆனந்தத்தால் சாற்றிடுவேன் நான் - துதி
அன்பே உள்ளமதில் பொங்கிச் சாடுதே எனில்

3. கைவேலையில்லா கனமான வீடே
கைவசமாக்க அருள் என்னிலீந்தீரே
காதலா நின் நன்றி கூறுவேன் - தினம்
காலா காலங்களாய்ப் பாடிடுவேன் நான் துதி

4. நின் கிருபை தேவா என்றென்றுமாக
இவ்வேளை காண இதயந்திறந்தீரே
இன்பமாக போற்றிடுவேன் நான் - இனி
இன்னோர் அண்ணலெனக்கெங்குமில்லையே வேறு

5. உன் ரூபம் தானே என் பிரியம் தேவே
உம்மோடு சேர என் நெஞ்சு பொங்குதே
உன்னதா உம் மேன்மை எத்தனை - மகா
ஊற்றுவேன் நிதம் உள்ளமதை நான் - நிதம்

1318.வான் புவி அகிலமும்

வான் புவி அகிலமும் மாறி மறைந்திடினும்
வாக்குரை செய்தவரோ மாறிடாரே - என்றும்
வாக்குரை செய்தவரோ மாறிடாரே

1. விக்கினம் என்னை அணுகாது அரணும்
அக்கினி மதிலுமவர்
போக்கினிலும் வரத்திலும் என் மீதவர் கண்களே
நீக்கிடாது பதித்தென்னைக் காப்பவர்

2. ஆபிரகாமுக்கு ஓர் கானானதுவும்
மேவியோர் சந்ததியிலும்
வாக்குத்தத்தம் செய்த தேவன் வாக்கு மாறவில்லையே
எக்காலமும் உண்மையுள்ள தேவனே

3. கைவிடேன் உன்னை என வாக்கு செய்தவர்
கைத் தலத்தினில் வரைந்தோர்
அந்தியம் வரை என்னுடனே தந்தை என இருந்தே
சந்ததம் கைத் தாங்கி என்னைச் செல்பவர்

4. நேற்றும் இன்றும் என்றென்றும் மாறா இயேசுவே
மாசற்ற புகலிடமே
வழுவாது என்னை தேவசந்நிதியில் தமைப்போல்
பழுதற்றோனாய் நிறுத்த வல்லவர்

5. அவரிடம் தந்த யாவும் எனக்காய்
பரிந்துக் காத்திடுபவர்
சீயோன் மலையது போல் அசையாது நிலைக்கும்
தூய பரன் அவர் திரு வார்த்தைகள்

F-Maj/Waltz/T-140

1319.ஸ்தோத்திரம் பாடி போற்றுவேன்

ஸ்தோத்திரம் பாடி போற்றுவேன்
ஸ்தோத்திரம் இயேசு இராஜனுக்கே
ஆதியும் அந்தமுமில்லோனே
அருபனே உமக்கென்றும் ஸ்தோத்திரம்

அல்லேலூயா அல்லேலூயா
பொற்பரனே ஓமேகாவே-2

1. பொன்னகர் மன்னவர் பூவில் வந்தாரே
புல்லணை மீதினில் ஸ்தோத்திரம்
பஞ்ச முற்று எந்தன் பாவம் தீர்த்த
பெத்தலை வாசனே ஸ்தோத்திரம் - 2

2. மாயமாம் உலகை மறந்து நானும்
மன்னவா உம் அன்பில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர் தாரணியில்
மனுவான அன்பிற்காய் ஸ்தோத்திரம் - 2

3. மங்களமே சீயோன் மணாளா
மாறாத பூரண சீராளா
மங்கிடா நித்திய வாசனே
மாசற்ற அன்புக்காய் ஸ்தோத்திரம் - 2

4. அமரர் போற்றும் அழகுள்ளோரே
அரூபியே சொரூபியே ஸ்தோத்திரம்
அளியும் ஆதி அன்பையே
வழியில் விரைந்து செல்லவே - 2

1320.ஸ்தோத்திரம் என் ஆத்ம

1. ஸ்தோத்திரம் என் ஆத்ம நேசரே
ஸ்தோத்திரம் என் நேச மீட்பரே
தூயனை ஆஹஹா
ராஜனை ஆஹஹா
ஏகமாய் போற்றியே பாடுவோம் - 2

2. பாவம் சாபம் யாவும் நீக்கியே
பாரில் என்னைப் பிரித்தெடுத்திர்
சுத்தனாக மாற்ற என்னை
சுத்த இரத்தம் சிந்தி மீட்ட
தூயவரின் அன்பைப் பாடுவேன் - 2

3. தாயினும் நல் அன்பு கூர்ந்திரே
தந்தையாக ஆதரித்தீரே
என்னில் ஏதும் நன்மை இல்லை
எந்தனையே ஒப்படைத்தேன்
இயேசுவே நல் ஆசீர் தாருமே - 2

4. முன்னறிந்து என்னைத் தேடியே
பின் தொடர்ந்த எந்தன் இயேசுவே
பாக்கியமான சேவை செய்ய
பூவில் என்னைக் கண்டெடுத்தீர்
கர்த்தர் உந்தன் அன்பை பாடுவேன் - 2

1321.அதிகாலை நேரமே அப்பா

அதிகாலை நேரமே அப்பா உம் பாதமே
அமர்ந்து நான் ஆராதனை செய்கிறேன்

அன்பே ஆராதனை
அழகே ஆராதனை

1. காலைதோறும் உமது
கிருபை புதியதல்லவோ
புதிய கிருபையால் தினமும் என்னை
சூழ்ந்து கொள்ளுமே

2. பூமிக்கு வானம் உயரம் போல
கிருபை பெரிதல்லவோ
பெரிய கிருபையால் தினமும்
என்னை சூழ்ந்து கொள்ளுமே

3. மலைகளெல்லாம் விலகினாலும்
உம் கிருபை விலகாதே
மனித அன்பு மாறினாலும்
உம் அன்பு மாறாதே

1322.பாதை உண்டாக்குவார்

பாதை உண்டாக்குவார் (2)
பாதை இல்லா இடங்களிலும்
பார்த்ததில்லை பரமன் வழியை
பாதை உண்டாக்குவார் அவர்

1. மார்புடன் அனைத்து கொண்டு
என்னை நடத்தும் வழிகாட்டி
அன்பும் பெலனும் தினம் நிறைந்து
பாதை உண்டாக்குவார்
பாதை உண்டாக்குவார்

2. வனாந்திரமான பாதையில் என்னை
நடத்துவார் காண்பேன் நான்
ஓர் கானக ஓடையை வானம் பூமி அழியும்
அழியாதே அவர் வார்த்தை
நன்மை ஒன்று இன்று செய்வாரே

1323. வாக்குதத்தம் தந்தவரே

வாக்குதத்தம் தந்தவரே
வாக்கு மாறா தேவனே
உந்தன் வசனம் எங்கள் ஆறுதல்
எந்தன் வழியில் தீபமன்றோ

1. கோணலை செவ்வைப்படுத்த
உன் முன்னே செல்வேன் என்றீர்
வெட்கப்பட்டுப் போவதில்லை
என் ஜனங்கள் என்றுரைத்தீர்

அல்லேலூயா(4)

2. தேவா நீர் எம் நடுவில்
உலாவியே எம்முடைய
தேவனாயிருப்பேன் என்றீர்
எம்மை உம் ஜனம் என்றுரைத்தீர்

3. உந்தனின் வார்த்தையதை
என் வாயில் அருளிச்செய்து
உம் ஜனம் என்று சொல்ல
உம் கரங்களால் நிழலிடுவீர்

1324.அன்றன்று அப்பம் உம்

அன்றன்று அப்பம் உம் வார்த்தைகள்
நித்தம் எந்நாளும் பேரின்பமே
தேவா உம் சத்தம் என் காதுகளில்
நித்தம் தேனாகப் பாய்ந்திடுமே

பேசும் தெய்வமே நீர் பேசும் தெய்வமே
நேசம் நிறைந்த உந்தன் தொனி கேட்கட்டும்

1) விசுவாசத்துடனே ஜெபத்திலே தரித்தே
விண்ணப்பம் செய்தே கேட்ட யாவும் பெறுவேன்
எந்நாளும் உம்மிலும் உம் வார்த்தை என்னிலும்
நிலைத்தால் கிடைக்கும் எல்லாம்.

2) நாதா உம் நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும்
எவ்விடத்திலும் வந்து ஆசீர்வதிப்பீர்
என்றும் பிரகாசிக்கும் நட்சத்திரம் போல் என்னை
ஞானவான் ஆக்கிடுமே

3) பெலத்தாலும் அல்ல அல்ல
பராக்கிரமத்தினாலும் அல்லவே அல்ல
என் ஆவியாலே எல்லாம் ஆகும்
என்றீரே வல்லவரே

4) பெருங்கடல் அது கொந்தளித்தாலும்
பூமி அதிர்வுகள் நிகழ்ந்தாலும்
என் கிருபை உன்னில் விலகாமலும் உன்னை
வருகை வரை காப்பேன்

1325.இயேசுவின் நாமத்தினால் ஒரு

இயேசுவின் நாமத்தினால் ஒரு
அற்புதம் உனக்கு நடக்கும்
இயேசுவின் நாமத்தினால் ஒரு
புது வாழ்வு உனக்கு திறக்கும்

1. தூதர்கள் சேனை இறங்கும்
ஒரு யுத்தம் உனக்காய் நடக்கும்
சிலுவையின் வெற்றி யாவும்- உன்
சொந்தமாய் வந்து சேரும்

2. சூழ்நிலை உனக்காய் மாறும் - நீ
சந்தித்த தோல்விகள் மறையும்
சத்துருக் கோட்டை விழுந்திடும்- நீ
ஜெபித்தது வந்து சேரும்

3. மூடிய கதவு திறக்கும்
முன் நிற்கும் தடைகள் விலகும்
இருளின் நாட்கள் நீங்கும்
மாவெளிச்சம் உன்மேல் உதிக்கும்

1326.பரிசுத்தர் பரிசுத்தர் இயேசுவே

பரிசுத்தர் பரிசுத்தர் இயேசுவே
பலகோடி ஸ்தோத்திரங்கள்
செலுத்தியே நாமே உயர்த்தியே தொழுதிடுவோம்

ஓசன்னா.... ஓசன்னா
விண்ணில் ... ஓசன்னா...

1) மாட்சிமை பொருந்திய தேவனாம்
மகிமை வல்லமையாம்
மறுரூபம் நாமே அடைந்திட தொழுதிடுவோம்

2) வல்லமை ஞானம் நிறைந்தவர்
நீதியின் தேவனிவர்
தேவனின் நீதியை அடைந்திட தொழுதிடுவோம்

3) வானம் அவரது அரியணை
பூமி பாதபடி ஆவியில்
நிறைந்தே தேவனைத் தொழுதிடுவோம்

4) நாவுகள் யாவும் துதித்திடும்
முழங்கால் மடங்கிடுமே
இராஜாதி இராஜன் இயேசுவைத் தொழுதிடுவோம்

1327.இஸ்ரவேலே கர்த்தரை நம்பு

இஸ்ரவேலே கர்த்தரை நம்பு (4)
அவர் உன் துணையும் கேடகமானவர்

1. அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை
அவர் உன்னை என்றும் கைவிடுவதுமில்லை
உள்ளங்கையில் வரைந்தவர்
அவர் உன்னை என்றும் மறப்பதுமில்லை

2. புழுதியிலிருந்து தூக்கியெடுத்து
குப்பையிலிருந்து உயர்த்தினார்
பிரபுக்களோடும் இராஜாக்களோடும்
உட்காரவும் செய்பவர் உனக்குண்டு

1328.இராஜா வருகிறார் எந்தன்

இராஜா வருகிறார் எந்தன் நேசர் வருகிறார்
மேகமீதினில் என்னை சேர்த்துக் கொள்ளுவார்

1. ஆனந்த சத்தத்தோடு செல்லுவேன்
ஆர்ப்பரித்து சாத்தானை வெல்லுவேன்
துன்பங்கள் நீங்கியே இன்பங்கள் நல்கியே
விண்ணவர் மார்பினில் சாய்ந்துகொள்ளுவேன்

2. இரட்சண்ய தலைச்சீராவை தந்தவர்
ஆவியின் பட்டயத்தை அளித்தவர்
சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக்கொண்டு நாளுமே
சாத்தானை வெல்ல பெலன் நாளும் தந்தவர்

3. கிருபையின் நாட்களில் வாழ்ந்திடும்
கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளா மாந்தரே
காலமும் செல்லுதே தாமதம் செய்யாதீர்
இரட்சகராம் இயேசுவின் பாதம் சேருவீர்

கர்த்தரின் நாமம் பெரிது
என்றும் பக்தர்கள் போற்ற வல்லது

1329.நேற்றும் இன்றும் மாறாதது

நேற்றும் இன்றும் மாறாதது
எங்கள் இயேசுவின் இன்ப நாமம்

1) ஆத்தும நேசர் உமதன்பையே
அகிலமெல்லாம் நான் சொல்லுவேன்
ஜாதிகளின் தேவனிலே
உமக்கு இணையாக யாருமில்லை
மாதேவன் இயேசையா நீரல்லவோ

2) ஜீவத் தண்ணீர் ஊற்றினிலே
சுகம் பெறுவேன் மூழ்கி தினம்
வியாதி வேதனையிலே
பரிகாரியாய் நீர் வருவீர்
குணமாக்கும் தழும்புகள் உமதல்லவோ

3) தேவைகள் நேரம் கன்மலையையே
நோக்கியே பார்த்து பயனடைந்தேன்
ஆபத்து வந்த போது
அடைக்கலம் என் இயேசுவே
உம் நாமம் என்றென்றும் என் துருகம

C-Maj/Hard Rock/T-135

1330.யெகோவா தேவனே

யெகோவா தேவனே
யெகோவா கர்த்தரே
யெகோவா மீட்பரே
யெகோவா இராஜனே

1) எல்ஷடாய் எல்ஷடாய்
எல்லாம் வல்லவரே (2)

2) எல்ரோயி எல்ரோயி
என்னைக் காண்பவரே (2)

3) எபிநேசர் எபிநேசர்
இதுவரை உதவிசெய்தீர் (2)

1331.சோர்ந்து போகாதே மனமே

சோர்ந்து போகாதே மனமே
சோர்ந்து போகாதே
போராட சோர்ந்து போகாதே

கண்டுனை அழைத்த
தேவன் கைவிடுவாரோ (2)

1) வாக்களித்த தேவனை நீ
பாடிக் கொண்டாடு - ஊக்கமான
ஆவி உன்னைத் தாங்க மன்றாடு

2) துன்பங்கள் தொல்லைகள் உன்னை
சூழ்ந்து கொண்டாலும் அன்பர் உன்னைத்
தேற்றும் நேரம் ஆனந்தமல்லோ

3) சோதனைகளை ஜெயிப்போன்
பாக்கியவானல்லோ ஜீவக்கிரீடம்
சூடும் நேரம் என்ன பேரின்பம்

1332.உலகத் தோற்றம் முன்னென

1. உலகத் தோற்றம் முன்னென்னையும்
உன்னத தேவனே தெரிந்தெடுத்தீரே
என்னில் நீர் செய்திடும் கிரியைகளை நான்
எண்ணியே மகிழ்ந்தும்மை துதிப்பேனே

மன்னா உம் தயை என்னில் பெரிதல்லோ
என்னரும் துணையானீரே
மறவேன் உன்னை நான் என்றுரை செய்தவா
மாறா உம் அன்பால் நடத்தும்

2. இந்த வனாந்திர பாதையிலே
இன்னல்கள் பலவாய் சூழ்ந்திட்ட வேளையில்
இன்புறும் மொழியால் என்னையும் தேற்றியே
இன்ப கரம் கொண்டு நடத்தினீர்

3. விலக்குவேன் உன் வியாதி என
வாக்குரை செய்தெந்தன் வைத்யருமானீரே
யெகோவா ரொ.:.பேக்கா நீர் என்றும் எனக்கு
என்னில் உம் ஜீவனும் பெருகுதே

4. தேவா உம் ஆவியால் நடத்தியே
தேவ புத்திரனாய் என்னையும் மாற்றினீர்
மண்ணாம் என் சரீரம் மகிமை பெற்றுமே
விண்சாயல் அடைய செய்திடுவீர்

5. ஆவியின் வரங்கள் நிறைந்தோராய்
ஆண்டவர் இயேசுவில் பூரணராகி நாம்
ஆவலுடனவர் வரவை நோக்கியே
ஆமென்! எம் இயேசுவே வாருமென்போம்

1333.நீ உனக்கு சொந்தமல்லவே

நீ உனக்கு சொந்தமல்லவே
மீட்கப்பட்ட பாவி - நீ உனக்கு சொந்தமல்லவே
நீ உனக்கு சொந்தமல்லவே
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்

1) சிலுவை மரத்தில் தொங்கி மரித்தாரே
திரு ரத்தம், ரத்தம்
திரு விலாவில் வடியுது, பாரே
வலிய பரிசத்தால் கொண்டாரே
வான மகிமை யுனக்கீவாரே

2) இந்த நன்றியை மறந்துபோனாயோ?
இயேசுவை விட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்ததமுனதிதயங் காயமும்
சாமி கிறிஸ்தினுடையதல்லவோ?

3) பழைய பாவத்தாசை வருகுதோ?
பிசாசின்மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அழியும் நிமிஷத் தாசை காட்டியே
அக்கினிக் கடல் தள்ளுவானேன்?

4) பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே
உலகை விட்டுப்
பிரியனும் அவர்க்கே மரிப்பாயே
உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்
உயர் பதவியில் என்றும் நிலைப்பாய்

1334.கும்பிடுகிறேன் நான் கும்பிடு

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன் எங்கள்
குரு இயேசு நாதர் பாதம் கும்பிடுகிறேன் (2)

1) அம்புவி படைத்தவனை கும்பிடுகிறேன் - எனை
ஆண்டவனை, மீண்டவனை கும்பிடுகிறேன்

2) நம்புமடி யார்க்கருளைக் கும்பிடுகிறேன் - பாவ
நாசனைக் க்ருபாசனனைக் கும்பிடுகிறேன்

3) தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன் - நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்

4) உம்பர் தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன் - தொனி
தேசன்னா வோசன்னாவென்று கும்பிடுகிறேன்

5) ஒரே சருவேசுவரனைக் கும்பிடுகிறேன் - ஒன்றும்
ஒப்பில்லா மெய்ப் பொருளை கும்பிடுகிறேன்

6) திருவுருவானவனைக் கும்பிடுகிறேன் - தவிது
சிம்மாசனாதிபனைக் கும்பிடுகிறேன்

7) குரவென வந்தவனைக் கும்பிடுகிறேன் - யூதர்
குருகுல தேவதையைக் கும்பிடுகிறேன்

8) அருமை ரட்சகனைக் கும்பிடுகிறேன் - என
தாத்துமாவின் நேசர்தனைக் கும்பிடுகிறேன்

1335.தேவாவி என் மேல் சந்தோ

தேவாவி என் மேல் சந்தோஷமாய்
தேவாவி என் மேல் சமாதானமாய்
தேவாவி என் மேல் வல்லமையாய்
தேவாவி என் மேல் எழுப்புதலாய்

மகிமை ஆவி இறங்கிடுதே
மறுரூபமாகி பறந்திடுவேன்
மேசியா ஏசு வருகிறார்
மேகத்தில் என்னை எடுத்துக் கொள்வார்

1) தேவாவி என் மேல் அச்சாரமாய்
தேவாவி என் மேல் அபிஷேகமாய்
தேவாவி என் மேல் முத்திரையாய்
தேவாவி என் மேல் மூன்றில் ஒன்றாய்

2) தேவாவி என் மேல் புது எண்ணெயாய்
தேவாவி என் மேல் புது பெலனாய்
தேவாவி என் மேல் புது மொழியாய்
தேவாவி என் மேல் புது வரமாய்

3) தேவாவி என் மேல் மாரி மழையாய்
தேவாவி என் மேல் ஜீவ நதியாய்
தேவாவி என் மேல் வெண் பனியாய்
தேவாவி என் மேல் வெண் புறாவாய்

4) தேவாவி என் மேல் இடி தொனியாய்
தேவாவி என் மேல் பெருங்காற்றாய்
தேவாவி என் மேல் அக்கினி நாவாய்
தேவாவி என் மேல் நேசத் தழலாய்

5) தேவாவி என் மேல் தீக்கண்டமாய்
தேவாவி என் மேல் தீ ரதமாய்
தேவாவி என் மேல் சுழல் காற்றாய்
தேவாவி என் மேல் மின்னல் ஒளியாய்

1336.என்னை பரிசுத்தப்படுத்தும்

என்னை பரிசுத்தப்படுத்தும் தேவனே
உம் திருவடி பணிந்து கெஞ்சுகிறேன்

1) மாமிச சிந்தை மரணமே
ஆவியின் சிந்தையோ ஜீவன் தரும்
மாமிச சிந்தைகள் அகலவே
ஆண்டவா பெலன் தாருமே

2) இதயத்தை வெண்மையாய் மாற்றிடும்
இறைவா உம் இரத்தத்தால் கழுவிடும்
இதயத்தை உம் அன்பால் நிறைத்திடும்
இயேசுவே வந்தாளுமே

3) மாய்ந்திடும் உலகக் கண்ணிகளில்
மயங்கிடா வண்ணம் நீர் காத்திடுமே
மாளா உம் கிருபையைப் பொழிந்திடும்
மன்னவா என்றென்றுமே

4) நடை பாதை தவறும் நேரங்களில்
நலமான வழிகளில் திருப்பிடும்
நல்லாலோசனை என்றும் தந்திடும்
நாதனே நீர் நடத்தும்.

5) கலக்கங்கள் நெருக்கங்கள் சூழ்கையிலே
கரம் பற்றியே என்னை அணைத்திடுமே
களிப்புடன் வருகையில் எதிர் நோக்கவே
கர்த்தாவே கிருபை தாரும்

1337.என் மேய்ப்பராய் இயேசு

என் மேய்ப்பராய்
இயேசு இருக்கின்ற போது
என் வாழ்விலே
குறைகள் என்பது ஏது?

1) என்னை அவர் பசும்புல் பூமியிலே
எந்நேரமும் நடத்திடும் போதினிலே
என்றும் இன்பம் ஆஹா என்றும் இன்பம்
ஆஹா என்றென்றும் இன்பமல்லவா

2) தம் பாதையில் என்னை நடத்திடவே
என் கரத்தை பிடித்தே முன் நடப்பார்
அஞ்சிடேனே நான் அஞ்சிடேனே நான்
ஒன்றுக்கும் அஞ்சிடேனே

3) என்னோடவர் நடந்திடும் போதினிலே
எங்கும்(கே) இருள் சூழ்ந்திடும் பாதையிலே
எங்கும் ஒளி ஆஹா எங்கும் ஒளி
ஆஹா எங்கெங்கும் ஒளி அல்லவா

4) என்னை அவர் அன்பால் நிரப்பியதால்
எல்லாருக்கும் நண்பனாய் ஆகியதால்
என்னுள்ளமே ஆஹா என் தேவனை
ஆஹா எந்நாளும் புகழ்ந்திடுமே

5) என் வாழ்க்கையை தூய்மையாய் காத்துக்கொள்ள
என்னை என்றும் போதித்து நடத்துகிறார்
என் கிரீடத்தை நான் பெற்றுக்கொள்ள
என் ஓட்டத்தைத் தொடர்ந்திடுவேன்

6) விண் மீதினில் வேகம் தம் வருகைக்காய்
என்னை அவர் ஆயத்தமாக்குகிறார்
என்னானந்தம் ஆஹா என்னானந்தம்
எனக்கென்றென்றும் பேரானந்தம்

1338.முள்முடி பாரமோ தேவனே

முள்முடி பாரமோ தேவனே
இரத்தமும் வடியுதோ சிரசினில்
இவையாவும் எனக்காக தேவனே
முழங்காலில் நிற்கிறேன் நாதரே

முள்முடி பாரமோ!
இரத்தமும் வடியுதோ சிரசினில்!
இவையாவும் எனக்காக
முழங்காலில் நிற்கிறேன் நாதரே!

1) தோளினில் சிலுவையை சுமக்கின்றீர்
தோள்களும் தாங்குதோ அப்பனே
முட்களும் கால்களில் குத்துதோ
முட்களைப் படைத்தவர் நீரன்றோ

2) கைகளில் ஆணியால் குத்தினார்
அடிக்குதோ கைகளும் இயேசுவை
சாட்டையால் முதுகில் அடித்தனர்
சாட்டையும் இராஜனை அடித்ததோ

3) காடியால் தாகத்துக்கு தந்தனர்
தண்ணீரை படைத்தவர் நீரன்றோ
கண்ணீரும் கண்களில் கொட்டுதோ
துடைப்பவர் யாருமே இல்லையோ

1339.புதிய பாதை புது கிருபை

புதிய பாதை புது கிருபை
புதிய ஜீவன் புது பெலன்
பழையவை எல்லாம் ஒழிந்து போயின
எல்லாம் புதிதாயின

1) எகிப்தின் வாழ்வு மறைந்தது
கானான் வாழ்வு மலர்ந்தது
கசந்த மாரா மதுரமானது
கொடிய யோர்தான் அகன்றது

2) கண்ணீர் கவலை மறைந்தது
களிப்பு மகிழ்ச்சியும் மலர்ந்தது
வியாதி வேதனை மறைந்து போனது
நித்திய ஜீவன் மலர்ந்தது

3) தோல்வி என்றும் இல்லையே
வறுமை என்றும் இல்லையே
கிறிஸ்து இயேசுவின் ஐசவரியமும்
வெற்றியும் நமக்குண்டு

1340.இயேசுவே கல்வாரியில்

இயேசுவே கல்வாரியில்
என்னை வைத்துக் கொள்ளும்
பாவம் போக்கும் இரத்தமாம்
திவ்ய ஊற்றைக் காட்டும்

மீட்பரே மீட்பரே
எந்தன் மேன்மை நீரே
மண்ணில் வாழும் அளவும்
நன்மை செய்குவீரே

1) பாவியேன் கல்வாரியின்
இரட்சிப்பைப் பெற்றேனே
ஞான ஜோதி தோன்றவும்
கண்டு பூரித்தேனே

2) இரட்சகா கல்வாரியின்
காட்சி கண்டோனாக
பக்தியோடு சேவிக்க
என்னை ஆள்வீராக

3) இன்னமும் கல்வாரியில்
ஆவலாய் நிற்பேனே
பின்பு மோட்ச லோகத்தில்
என்றும் வாழுவேனே

G-Maj/Waltz/T-145

1341.உம் பிரசன்னம் என்ன

உம் பிரசன்னம் என்ன ஆனந்தம்
உம் சமூகம் எந்தன் வாஞ்சை (2)
ஸ்தோத்திரம் என் தேவனே
ஸ்தோத்திரம் என் தூயோனே (2)

1) அபிஷேகத் தைலம் ஆண்டவரே
அடியோர்களுக்கு அருளுமே (2)
பகைவர் மத்தியில் மகிழ்ந்திருக்க (2)
பரிசுத்த தேவா அபிஷேகியும்

2) மாமிசமான யாவர் மேலும்
உன்னத ஆவியை ஊற்றிடுமே (2)
தாகமுள்ள அடியார்மேல் (2)
ஊற்றிடுமே உந்தன் அபிஷேகமே

3) அபிஷேகத்தால் என்னை நிரப்பிடும்
தேவா உம் அன்பினால் பெலப்படுத்தும் (2)
உம் சித்தம் போல் நடத்திடும் (2)
உந்தன் பாதையில் வழிநடத்தும்

G-Maj/16 Beat/T-90

1342.இயேசுவே உம்மை உயர்

இயேசுவே உம்மை உயர்த்திடுவேன்
என் நேசரே உம்மை பாடிடுவேன் (2)
நீர் செய்த எல்லா நன்மைகட்காக

உமக்கே ஆராதனை (2)
உமக்கே ஆராதனை (2) ஐயா
உமக்கே ஆராதனை (2)

1) நீர் தான் என் தஞ்சமே (2)
நீர் தான் என் கோட்டையே (2)
துன்ப வேளையில் தூக்கி என்னை
தோளில் சுமந்தவரே (2)

2) நீரே என் ஆதாரமே
நீரே என் துணையாளரே (2)
சோர்ந்திடும் நேரம் சார்ந்திடும் உந்தன்
கிருபை ஈந்தவரே (2)

3) நீர்தான் என் பெலனே
நீர்தான் என் சுகமே (2)
கண்ணீர் துடைத்து கவலைகள் போக்கி
ஆறுதல் அளிப்பவரே (2)

1343.உனக்கெதிராய் ஆயுதங்கள்

உனக்கெதிராய் ஆயுதங்கள்
வாய்க்காதே போகும் உன் மேலே
யுத்தங்கள் எழும்பி வந்தாலும்

மகனே நீ பயப்படாதே
தேவன் இருக்கிறார்

1) ஆபிரகாமின் தேவன் உன்னோடு
ஈசாக்கின் தேவன் உன்னோடு
யாக்கோபின் தேவன் உன்னோடு
யாவையும் செய்திடுவார்

2) யோசேப்பின் தேவன் உன்னோடு
எலியாவின் தேவன் உன்னோடு
எழும்பிடுவாய் நீ சேவை செய்ய
கர்த்தர் காத்துக் கொள்வார்

3) தாவீதின் தேவன் நம்மோடு
சேனைகளின் கர்த்தர் நம்மோடு
கர்த்தரைத் துதித்து பாடிடுவோம்
ஆசீர்வாதம் நமக்குண்டு

4) மோசேயின் தேவன் நம்மோடு
யோசுவாவின் தேவன் நம்மோடு
கால் மிதிக்கும் தேசம் கண்பார்க்கும் பூமி
யாவையும் தந்திடுவார்

1344.கண்ணீர்கள் என்று மாறுமோ

கண்ணீர்கள் என்று மாறுமோ
வேதனைகள் என்று தீருமோ
கஷ்டப்படுங்காலங்களில்
இரட்சிப்பனாய் நீ வரணே

1) இகத்தில் ஒன்றுமில்லையே
நினைவெல்லாம் வீணாய் போயிற்றே
பரதேசியானுலகில்
இவ்விடேனும் அந்நியநல்லோ

2) கல்வாரி சிலுவையண்டையில்
நீ வந்து நோக்கி பார்த்திட்டால்
பாவங்களை அறிக்கையிட்டால்
சமாதானம் கிடைத்திடுமே

3) இயேசுவின் பாதத்தருகில்
நீ வந்து அமர்ந்துவிட்டால்
எக்காலமும் துதிப்பாயானால்
தேவ சத்தம் கேட்டிடுமே

4) பரனே நான் சீயோன் நாட்டில்தான்
சேரவே நான் வாஞ்சிக்கிறேன்
கஷ்டமெல்லாம் தீர்ந்திடுமே
இயேசுவின் முகம் காணவே

E-Min/Cool night/T-95

1345.லோகம் வேண்டாம் ஒன்றும்

லோகம் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்
போதும் இயேசு எனக்கு
சாத்தானே உன் சிநேகம் வேண்டாம்
கொண்டு போ உன் சரக்கு

அல்லேலூயா (3) இயேசுவே
அல்லேலூயா (3) ஆமென்
இயேசு போதும் (3) எனக்கு
இயேசு போதும் (3) ஆமென்

1. இயேசுவே என் ஆஸ்தி செல்வம்
இயேசுவே என் பொக்கிஷம்
இயேசுவே என் சம்பாத்தியமும்
இயேசுவே என் முடிவும்

2. இயேசுவே என் பரிகாரி
இயேசுவே என் பெலனும்
இயேசுவே என் தீர்க்காயுளும்
இயேசுவே என் நித்தியமும்

3. இயேசுவே என் பரிசுத்தம்
இயேசுவே என் நீதியும்
இயேசுவே என் தேவ ஞானம்
இயேசுவே என் மீட்புமே

4. இயேசுவே என் ஆத்மநேசர்
இயேசுவே என் இரட்சகர்
இயேசுவே என் ஆத்ம ஜீவன்
இயேசுவே என் ஜெயமும்

5. இயேசுவே என் மணவாளன்
பாசமாய் வரார் இதோ
ஆகாயத்தில் சந்தித்தென்றும்
அல்லேலூயா பாடுவேன்

1346.நன்றி இயேசுவே

நன்றி இயேசுவே (2)
நன்றியே உம் அன்பிற்கே

1) கல்வாரி சிலுவையில் எனக்காய் மரித்தீரே
நன்றியே உம் அன்பிற்கே

2) மீண்டும் வருவீரே உம்மோடு வாழுவேன்
நன்றியே உம் அன்பிற்கே

3) என் பாவம் போக்கிட எனக்காய் மரித்தீரே
நன்றியே உம் அன்பிற்கே

4) என் வியாதி நீங்கிட எனக்காய் மரித்தீரே
நன்றியே உம் அன்பிற்கே

5) என் தோல்வி நீங்கிட எனக்காய் மரித்தீரே
நன்றியே உம் அன்பிற்கே

F-Maj/6/8 Blues/T-120

1347.இரத்தத்தால் ஜெயம்

இரத்தத்தால் ஜெயம் (2)
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே..

அல்லேலூயா அல்லேலூயா
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே..

1. இயேசு ஜெயித்தார் (2)
இயேசு ஜெயித்தார் சாத்தானை
அல்லேலூயா அல்லேலூயா
இயேசு ஜெயித்தார் சாத்தானை..

2. நானும் ஜெயிப்பேன் (2)
நானும் ஜெயிப்பேன் சாத்தானை
அல்லேலூயா அல்லேலூயா
நானும் ஜெயிப்பேன் சாத்தானை..

3. சாத்தான் தோற்றுப்போம் (2)
சாத்தான் தோற்றுப்போம் இரத்தத்தால்
அல்லேலூயா அல்லேலூயா
சாத்தான் தோற்றுப்போம் இரத்தத்தால்

4. மீட்கப்பட்டேன் நான் (2)
மீட்கப்பட்டேன் நான் இரத்தத்தால்
அல்லேலூயா அல்லேலூயா
மீட்கப்பட்டேன் நான் இரத்தத்தால்

F-Maj/Disco/T-125

1348.பாடுவோம் நம் தேவனை

பாடுவோம் நம் தேவனை
புதுப் பாடல் பாடியே (2)
அவர் நல்லவர் நன்மை செய்பவர்
சர்வ வல்லவர்
அவர் அதிசயமானவர் (2)

1) சகல ஜனங்களே கைகொட்டி
கர்த்தரை கெம்பீரமாய்ப் பாடுவோம்
சுரமண்டல மேள தாளங்கள்
முழங்கியே துதித்திடுவோம்

தாழ்வில் நம்மை நினைத்தாரே
பேர் சொல்லியே அழைத்தாரே 2

2) கர்த்தர் நல்லவர் அவர் கிருபை
என்றும் உள்ளதென்று சொல்லுவோம்
அவர் கிருபை மாறாதது
என்றென்றும் நிலையானது
காலைதோறும் புதிதானது
நம்மைவிட்டு விலகாதது 2

3) அப்பா பிதாவே என்று அழைக்கும்
பாக்கியம் கொடுத்தாரே
அவர் பிள்ளையாய் நாம் மாறிட
கிருபை பொழிந்தாரே
பாவங்களை மன்னித்தாரே
பரிசுத்தமாய் மாற்றினாரே 2

4) பாடுவோம் நம் தேவனை
புதுப் பாடல் பாடியே (2)
அவர் நல்லவர் நன்மை செய்பவர்
சர்வ வல்லவர்
அவர் அதிசயமானவர் (2)

1349.என்ன பாக்கியம் எவர்க்

என்ன பாக்கியம் எவர்க்குண்டு
இந்த சிலாக்கியம்?

விண்ணவரும் புவிமேவும் முனிவர்களும்
மன்னவரும் காணாமகிபனை
யான் கண்டேன்

1) வானகந்தானோ அல்லதிது -
வையகந்தானோ?
ஆனகம் சென்று எழுந்த அரும்பொருள்
கானகம் தன்னில் என் கையில்
அமர்ந்தது என்ன பாக்கியம்

2) போதும் இவ்வாறு பரகதி -
போவேன் இப்போது
ஏதேன் என்ற பரதீசும் வந்திட்டது
ஏண்ணில்லாத செல்வம் என்
கையில் கிட்டுது என்ன பாக்கியம்

3) சாமியைக் கண்டேன் - மகானந்தம் -
சாலவும் கொண்டேன்
காமரு தேங்கனி வாய்கள் துடிப்பதும்
கண்ணும் மனமும் களிக்க விழிப்பதும்

4) அன்னமும் நீயே கிடைக்கததற்குஞ் -
சொர்ணமும் நீயே
மின்னுறு மேகத் திருக்கை துறந்தையோ?
மேதினி தன்னை ரட்சிக்கப் பிறந்தையோ?

1350.கோர சிலுவை மீதினில்

கோர சிலுவை மீதினில் இயேசுவே
கொடூர மரணம் ஏற்றீரே
கொல்கதாவில் இரத்தமும் சொரிந்து
கொடுமையும் சகித்தீரல்லோ

1. கல்வாரி இரத்தத்தினால் - என்னை
கழுவியே சுத்தம் செய்யும்
கறை நீங்கி முற்றிலும் பரிசுத்தனாய் மாற
கல்வாரி வந்திட்டேன் நான்

2. மாறா பாவக் கறைகள் போக்கவே
மாசற்ற இரத்தமே சிந்தினீரே
மாசற்றோனாய் நானும் முன் நிற்கவே
மன்னிப்பைத் தாரும் ஐயா

3. ஆவி ஆத்மா சரீரம் முற்றுமாய்
ஆதீனமாகவே ஒப்புவித்தேன்
ஆலயமாய் ஆவியால் நிரப்பி
ஆசீர்வதியுமையா

4. தேவ சித்தமே செய்திட தேகத்தில்
ஏகமாய் பாடுகள் சகித்தீரே
ஜீவன் வைத்து உம் அடி தொடர
ஜீவனால் நிறைப்பீரையா

5. ஜீவனும் புதிதும் ஆன மார்க்கமே
ஜீவனை ஊற்றியே திறந்தீரே
ஜீவ பலியாய் படைத்த என்னையும்
சீயோனில் சேர்ப்பீரையா

1351.இயேசு ராஜா முன்னே

இயேசு ராஜா முன்னே செல்கிறார்
ஓசன்னா கீதம் பாடுவோம்
வேகம் சென்றிடுவோம்

ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

1) அல்லேலூயா துதி மகிமை என்றும் (2)
இயேசு ராஜா எங்கள் ராஜா
என்றென்றும் போற்றிடுவோம்

2) துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும்
தொல்லை கஷ்டங்கள் தேடி வந்தாலும்
பயமுமில்லை கலக்கமில்லை
கர்த்தர் நம்முடனே

3) யோர்தானின் வெள்ளம் வந்தாலும்
எரிகோ கோட்டை எதிர் நின்றாலும்
பயமுமில்லை கலக்கமில்லை
மீட்பர் நம்முடனே

1352. நீர் என்னோடு இருக்கும்

நீர் என்னோடு இருக்கும்போது
எந்நாளும் வெற்றி வெற்றியே
தோல்வி எனக்கில்லையே-நான்
தோற்றுப் போவதில்லை - 2

1. மலைகளைத்(பாவத்தை) தாண்டிடுவேன்
பள்ளங்களைக் கடந்திடுவேன்
சதிகளை முறியடிப்பேன்
சாத்தானை ஜெயித்திடுவேன்

அல்லேலூயா - 8

2. சிறைச்சாலைக் கதவுகளும்-உம்மை
துதி(ப்பதால்)யினால் உடைந்திடுமே
அபிஷேகம் எனக்குள்ளே நான்
துதித்துப்பாடி மகிழ்ந்திடுவேன்

3. மரணமே கூர் எங்கே
பாதாளமே ஜெயம் எங்கே - 2
கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவெனக்கு ஆதாயமே

1353. வந்திடுமே தூய மகிமையின்

1. வந்திடுமே தூய மகிமையின் தேவா
சந்ததம் எம்மிலே வசித்திடவே
உந்தனின் திரு மனையாய் திகழ்ந்திடவே
எம்மையும் முற்றுமாய் ஆண்டிடுவீர்

உன்னத ஆவியே! இறங்கிடுவீர்
உன்னத அன்பினை ஊற்றிடுமே
உன்னத பெலனால் உயிர்ப்பித்து எம்மையும்
உன்னதா உம்மைப் போல் மாற்றிடுமே

2. பெந்தகொஸ்தே நாளில் இறங்கிய தேவா
தேற்றுவீர் சபையை ஆவியினால்
விந்தையாம் பரிசுத்த ஆவியை ஊற்றியே
மந்தையை மகிழ்விக்க இரங்கிடுவீர்

3. ஆவியை மழைபோல் ஊற்றிடும் தேவா
ஆவியின் வரங்களைப் பொழிந்திடுமே
ஆதி அப்போஸ்தலர் காலம் போல் இன்றுமே
ஆவியின் எழுப்புதல் அனுப்பிடுவீர்

4. மரணத்தை ஜெயித்திட்ட மா வல்ல இயேசுவே
மரித்தோரில் முதற்பலன் ஆனவரே
மரித்தோரை உயிர்ப்பிக்கும் பரிசுத்த ஆவியின்
மா வல்ல சக்தியை எமக்கருள்வீர்

5. சரீரமாம் சபையின் சிரசான நேசரே
தரிப்பியும் சாயலை ஆவியினால்
மறுரூபமடைந்து யாம் மகிபனை சந்திக்க
மகிமையின் ஆவியே! உதவி செய்வீர்!

1354. அதிசய பாலன் அருள் நிறை

அதிசய பாலன் அருள் நிறை தேவன்
அன்பால் என்னை தேடி வந்தாரே
காணாத ஆட்டை தேடி நல்ல மேய்ப்பன்
கனிவோடு பாரில் வந்தாரே (2)

1. வானத்தில் தூதர் வட்டமிட்டே
வான் பரனவர் பிறப்பினை பாட
மாடடை குடில் திசை நோக்கியே
மந்தை ஆயரும் விரைந்தோடினர்

2. வானில் ஓர் விண்மீன் முன்னே செல்ல
மன்னர் மூவரும் தொடர்ந்தே பின்செல்ல
முன்னணையினில் மன்னன் ஏசுவை
கண்டு மகிழ்ந்து பணிந்தனரே

F-Min/80'Fusion/T-120

1355.ஸ்துதிகளின் பாத்திரரே

ஸ்துதிகளின் பாத்திரரே
ஸ்துதி உமக்கே
அல்லேலூயா ஸ்துதி
ஸ்துதியுமக்கே

ஸ்துதிகளின் மத்தியில் வாசஞ் செய்யும்
தூயவரே சதா ஸ்துதி உமக்கே தான்-

1. அருணோதயம் எழுந்தும்மை ஸ்துதித்திடவே
ஆவியானவரால் உம்மை ஸ்துதித்திடவே
ஸ்துதியுடன் பாடியே நாதா உம்மை
நானில மீதில் ஸ்துதித்தும்மை பாடிடவே

2. பரிசுத்த பாதையில் நடத்திவீர்
பரனே உம் மகிமைக்காய் ஜீவித்திட
பரனே உம்மோடு நான் ஜீவித்திட
பரனே உம்முடனன்பால் இணைத்திடுவீர் எம்மை

3. அன்பு நிறை ஜோதியாக வந்த
என் அன்பரே கிருபையால் நிறைத்திடுவீர்
உம் அன்பின் பெருக்கின் கிருபையாலே
உம் அன்பால் நிறைத்திடும் துதித்தும்மை பாடிட

4. காருண்ணியரே எம்மை கனி கொடுக்க
காத்திடும் பரனே நீர் கண்மணிபோல்
காலத்தை வீணாய் கழித்திடாமல்
கருத்துடன் சேவை புரிந்திட அருள் செய்வீர்

5. என்றும் மாறாத என் தேவனே நீர்
என்னில் தயை கூரும் ஐயனே நீர்
அல்லும் பகலும் நான் வல்லமையாய்
ஆண்டவரே உமக்கென்றும் தொண்டு நான்செய்திடவே

6. எம் தேவனே உம்முடன் வாழ்ந்திடவே
உம் வரங்கள் அளித்திடும் கிருபையாலே
எம் தேவரீருக்காய் நான் வேலை செய்ய
ஞானம் தகுதி பலம் எனக்கில்லையே

7. எம் அருணோதயம் போல எழுந்திடுவீர்
ஆவியானவரில் சதா நடந்திடுவீர்
உம் ஆவியானவராலே நீர் நிறைத்திடுவீர்
எம் உள்ளத்தில் நின்று ஜீவ நதிகள் எழும்பிட

1356. மகிமையில் வந்தவரே

மகிமையில் வந்தவரே மகிமையை தந்தவரே
மகிமையில் வருபவரே மறுரூபமாக்கிடுமே

அல்லேலூயா ஸ்தோத்திரம் அல்லேலூயா
அல்லேலூயா ஸ்தோத்திரம் அல்லேலூயா

1) சீயோனின் மணவாளனாய் வருபவரே
சீக்கிரமாய் மணவாட்டியை சேர்ப்பவரே
சிங்காரமாய் கிரீடமதை தருபவரே
சிங்காரவனம் எருசலேமில் சேர்ப்பவரே

2) மகிமைதனை வெளிப்படுத்த அவதரித்தீரே
மகிமைதனை தந்திடவே அடிக்கப்பட்டீரே
மகிமைதனை வெளிப்படுத்தும் அற்புதங்களிலே
மகிமைதனை காண்கிறோம் உம் ஆலயங்களிலே

3) கிருபையின் மேல் கிருபைகளைத் தந்தவர் நீரே
வல்லமைமேல் வல்லமையைத் தருபவர் நீரே
வரங்களின் மேல் வரங்களினால் நிரப்புகின்றீரே
மகிமையின் மேல் மகிமையைத் தருபவர் நீரே

1357.என்ன கொடுப்பதோ என்

என்ன கொடுப்பதோ என் ஏசு ராஜனுக்கு
என்னை மீட்கவே வந்த மழலை பாலனுக்கு

என்னை தருவேன் நான் ஏசுராஜனுக்கு
என்னை மீட்கவே வந்த மகிமை தேவனுக்கு

1. பொன்னும் மணியும் தந்தால் - என்
மன்னன் மகிழ்வாரோ?
வெள்ளி கிரீடம் தந்தால் - அதை
சூட்டி மகிழ்வாரோ?

2. வெள்ளை போளம் தந்தால் - அவர்
உள்ளம் உருகுமோ?
சுகந்த தைலம் கொடுத்தால் - அதை
பூசி மகிழ்வாரோ?

3. எந்தன் மனதை தருவேன் - என்
நேசர் மகிழ்வாரே
வந்த நோக்கம் இதுவே - என்று
வாரி அணைப்பாரே

1358.எந்தன் இயேசுவின் அன்பதையே

எந்தன் இயேசுவின் அன்பதையே
எண்ணும் வேளையில் ஆனந்தமே

1) கடந்த நாட்களில் கைவிடாமலே
கண்ணின் மணிபோல் காத்ததினால்
மனப்பூர்வமாய் துதிப்பேன் மகிழ்வுடனே
மன்னன் கிறிஸ்தேசுவையே

2) அழைத்த பாதையில் தளர்ந்த வேளையில்
அன்பின் மொழியால் பேசினாரே
புது ஜீவனும் நிறைவாய் அளித்ததினால்
புண்ணியனைப் போற்றிடுவேன்

3) வறுமை வியாதியும் வலிய தோல்வியும்
வந்த வேளையில் தாங்கினாரே
ஜெய கீதமே தினமும் எவ்வேளையிலும்
ஜெயத்துடன் பாடிடுவேன்

4) நெகிழ்ந்த கரங்களை உயிர்த்து இதுவரை
இழந்த வரங்களும் ஈந்ததினால்
அவர் சேவையே புரிந்து கனம் மகிமை
அவருக்கே செலுத்திடுவேன்

5) நிறைந்த ஜோதியாய் திறந்த வானிலே
நீதி சூரியன் தோன்றிடுவார்
மறு ரூபமே அடைந்தே பறந்திடுவேன்
மட்டற்ற பேரின்பமுடன்.

1359.அதிசய தேவன் துணையிருப்பார்

அதிசய தேவன் துணையிருப்பார்
அனுதினம் உன்னை காத்திடுவார்
இவ்வேளையிலே நன்றியுடனே
இன்ப கீதம் பாடி மகிழ்ந்திடுவாய்

1. உன்னையே பேர் சொல்லி அழைத்தவர்
அன்புடனே உன்னை மீட்டவர்
என்றுமாய் நீ என்னுடையவன் (2)
என்றே அன்பாய் கூறுபவரே

2. எதிர்வரும் காலத்தில் அவர் கரம்
அதிசயமாய் உன்னை தாங்கிடும்
மதி நிறைந்தே அவரை துதிப்பாய் (2)
புது ஆண்டிதில் புதுமை காண்பாய்

1360.ஆசீர்வாத மழையை

ஆசீர்வாத மழையை பொழியும் தேவா
உம் அன்பின் பரிபுரணம் விளங்கிடவே (2)

தேவா உம்மை நம்பியே வாழ்ந்திருக்கும்
எந்தன் தேவைகள் யாவும் தருவீரே

1. கர்த்தர் தமக்கு பயந்தவருக்கு
கணக்கில்லா நன்மைகள் செய்திடுவார்
பிரயாசங்கள் வீணில்லையே
பரமன் ஜெயம் தருவார்

2. இதயமெனும் வீட்டினிலே
இறைவனாம் ஏசவிற்கிடமளித்தால்
அவர் சமுகம் உன் வீட்டினிலே
அனுதினம் தரித்திருக்கும்

3. புது வருடம் இதை காணச் செய்தார்
புது பெலன் நமக்கு தந்தருள்வார்
அவர் பதமே அண்டிடுவோம்
அனுக்கிரகம் செய்திடுவார்

E-Min/6/8 Beat/T-85

1361.உம்மையல்லாமல் எனக்கு

உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு- 4
என் இயேசய்யா அல்லேலூயா- 2

1. இன்பத்திலும் நீரே துன்பத்திலும் நீரே
எவ்வேளையும் ஐயா நீர் தானே

2. என் சிநேகமும் நீரே என் ஆசையும் நீரே
என் எல்லாமே ஐயா நீர் தானே

3. இம்மையிலும் நீரே மறுமையிலும் நீரே
எந்நாளும் ஐயா நீர் தானே

G-Maj/Disco/T-110

1362.எந்தன் கன்மலையானவரே

எந்தன் கன்மலையானவரே
என்னை காக்கும் தெய்வம் நீரே
வல்லமை மாட்சிமை நிறைந்தவரே
மகிமைக்கு பாத்திரரே
ஆராதனை உமக்கே-8

1. உந்தன் சிறகுகளின் நிழலில்
என்றென்றும் மகிழ செய்தீர்
தூயவரே என் துணையாளரே
துதிக்கு பாத்திரரே
ஆராதனை உமக்கே (8)

2. எந்தன் பெலவீன நேரங்களில்
உம் கிருபை தந்தீரையா
இயேசு ராஜா என் பெலனானீர்
எதற்கும் பயமில்லையே
ஆராதனை உமக்கே (8)

3. எந்தன் உயிருள்ள நாட்களெல்லாம்
உம்மை புகழ்ந்து பாடிடுவேன்
ராஜா நீர் செய்த நன்மைகளை
எண்ணி எண்ணி துதித்திடுவேன்
ஆராதனை உமக்கே (8)

1363.இயேசப்பா நானும் வருகி

இயேசப்பா நானும் வருகிறேன்
கலிலேயா கடலோரமாய்
என்னைவிட்டு போகாதீங்க ராஜா
என்னுள்ளம் தாங்காதுங்க -2

அன்று ஒலிவமலையில்ஏறி மறுரூபமானீங்க
கடலின் மேலே நடந்து அதிசயம் செய்தீங்க-2

1. எம்மாவூரு சீடரோடு நடந்து சென்றீங்க
என்னோடு இன்று நடந்து வாருங்க -2
அதுவே என் வாஞ்சை அதுவே என் தாகம்
அதுதான் என் சந்தோஷமே -2

2. மார்த்தாள் அழைத்த போது கூடப்போனீங்க
மரித்த லாசரை உயிர்தெழும்பச் செய்தீங்க
உம்மாலே கூடும் எல்லாம் கூடும்
கூடாதது ஒன்றுமில்லை

3. மோசேயோடு கூட நடந்து சென்றீங்க
கடலைப் பிளந்து நடக்க உதவி செய்தீனங்க
அற்புத தேவன் அதிசய தேவன்
எல்லாம் நீர் செய்திடுவீர்

D-Maj/8 Beat/T-95

1364.உங்க முகத்த பார்க்கணுமே

உங்க முகத்த பார்க்கணுமே
இயேசய்யா இயேசய்யா (2)
அல்லேலூயா அல்லேலூயா (2)

1. எந்தன் பாடுகள்
வேதனை மறைந்துவிடும்

2. எந்தன் துயரங்கள்
கலக்கங்கள் மாறிவிடும்

3. யோர்தானின் வெள்ளங்கள் விலகிவிடும்
எரிகோவின் மதில்கள் இடிந்துவிழும் -2

4. எங்கள் தேசத்தில் கட்டுகள் முறிந்துவிடும்
எங்கள் சபைகளில் எழுப்புதல் பரவிடும்.

1365.இயேசுவுக்கே ஒப்புவித்தேன்

இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
யாவையும் தாராளமாய் புவி
என்றும் அவரோடு தங்கி
நம்பி நேசிப்பேன் மெய்யாய்

ஒப்புவிக்கிறேன் ஒப்புவிக்கிறேன்
நேச ரட்சகா நான் யாவும் ஒப்புவிக்கிறேன்

1) இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
ஆவர் பாதம் பணிந்தேன்
லோக இன்பம் யாவும் விட்டேன்
இப்போதே ஏற்றுக் கொள்ளுமேன்

2) இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
முற்றும் ஆட்கொண்டருளும்
நுன் உம் சொந்தம் நீர் என் சொந்தம்
சுட்சியாம் தேவாவியும்

3) இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
நுாதா அழயேனையும்
ஆன்பு பெலத்தால் நிரப்பி
ஏன்னை ஆசீர்வதியும்

4) இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
திவ்ய சுவாலை வீசுதே
புரண ரட்சை பேரானந்தம்
சுதா ஸ்தோத்திரம் அவர்க்கே

1366.பரனாவியே அன்பின்

பரனாவியே அன்பின் ஆவியே
நித்தம் எந்நாளும் என்னோடு
வாழ்பவரே பெலமாக என்னை நிரப்பும (2)

ஊற்றுமையா ஊற்றுமையா
உன்னதரே ஊற்றுமையா
பாத்திரம் நிரம்ப ஊற்றுமையா
பரிசுத்தம் அடைய ஊற்றுமையா

1) மாம்சத்தின் தீய செயல் சுட்டெரிக்க
வானத்தின் அக்கினியே வந்திறங்கும்
எலியாவின் தேவனே இறங்கியே வாருமே

2) வல்லமை வரங்களை அள்ளிதாரும்
வானத்தை நோக்குதையா எந்தன் உள்ளம்
எழுப்புதல் வேண்டுமே எனக்கு இன்று தாருமே

3) ஆவிக்குள்ளாகி உம்மை ஆராதிக்க
வேதத்தின் ஆழம் கண்டு சந்தோஷிக்க
அனுக்கிரகம் வேண்டுமே அபிஷேகம் தாருமே

1367.எழுப்புதலை கொண்டு

எழுப்புதலை கொண்டு வாங்க
பரிசுத்த ஆவியே
எங்கள் பரிசுத்த ஆவியே

1) உமது ஜனங்கள் உம்மிலே
மகிழ்ந்துயிருக்க வேண்டும்ப்பா
ஒவ்வொரு நாளும் உயிர் பெற்று
உமக்காக வாழனும்ப்பா

2) பாரத தேச எல்லைகளிலே
இருள்களெல்லாம் நீங்கணுமே
பரிசுத்தர் இயேசுவே உந்தன்
நாமம் உயரணுமே

3) நதியளவு கண்ணீர் சிந்தி
கதறி நாங்கள் ஜெபிக்கணுமே
விசுவாச ஜெப ஆவி
எங்கள் மேலே ஊற்றிடுமே

4) மேல் வீட்டு அறையினிலே
அபிஷேகத்தை ஊற்றினீரே
மாம்சமான யாவர் மேலும்
உந்தன் ஆவி ஊற்றிடுமே

F-Maj/Pop Balled/T-90

1368.தென்றல் காற்றாக என்னைத்

தென்றல் காற்றாக என்னைத் தொட்டு
தழுவுமையா - புது பாட்டாக
என்னைச் சூழும் ஆவியானவரே

1. உம் தெய்வீக பிரசன்னத்தில்
என்னை மெய்மறக்கச் செய்திடுமே (2)

2. தேனாக தித்தித்திடுமே
உம்மை நாவாலே துதித்திடுவேன் (2)

3. உம் இடது கை என்னை தாங்கட்டும்
உம் வலக்கையால் அணைத்துக் கொள்ளும்

4. பசுமையான மேய்ச்சல் தாருமே எனக்கு
அமைதியான வாழ்க்கை வேண்டுமே

1369.வாங்கப்பா ஆவியானவரே

வாங்கப்பா ஆவியானவரே
நீங்க வந்தா தான்
எங்களுக்கு விடுதலை (2)

ஊற்றிடுமே உம் ஆவியை
ஊற்றிடுமே உம் வல்லமையை (2)

1) தாவீதின் மேலே இறங்கினீரே
கோலியாத்தை முறியடித்தீர்
எங்கள் மேலே இறங்கிடுமே
சாத்தானை ஜெயித்திடவே

2) சிம்சோன் மேலே இறங்கினீரே
பெலத்த காரியம் செய்தீரய்யா
எங்கள் மேலே இறங்கிடுமே
(எல்லா) போராட்டங்களை ஜெயித்திடவே

3) எளிமையும் சிறுமையுமானவர்கள்
எங்கள் மேலே இறங்கிடுமே
உம்மையல்லா இவ்வுலகில்
வேறே வழியும் இல்லை நாதா

4) மேல் வீட்டு அறையிலே இறங்கினீரே
சீஷர்கள் யாவரும் நிரப்பப்பட்டார்
எங்கள் மேலே இறங்கிடுமே
சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்திடவே

1370.வானாதி வானவர் நம் இயேசு

வானாதி வானவர் நம் இயேசுவை
வாத்தியங்கள் முழங்கியே பாடுவோம்
தேவாதி தேவன் நம் இயேசுவை
நாட்டியங்கள் ஆடியே பாடுவோம்

அல்லேலூயா (8)
கொண்டாடுவோம் (8)

1) வானங்களை விரித்தவரை பாடுவோம்
வானபரன் இயேசுவைக் கொண்டாடுவோம் (2)

2) வாக்குதத்தம் தந்தவரை பாடுவோம்
வாக்கு மாறா தேவனைக் கொண்டாடுவோம் (2)

3) பாவச் சேற்றில் வாழ்ந்து வந்த என்னையே
பாசக் கரம் நீட்டியவர் தூக்கினார் (2)

4) பாரில் வந்த பரலோக நாயகன்
பலியாகி என்னை மீட்டுக் கொண்டார் (2)

5) கண்மணி போல் காத்த நம் இயேசுவை
கரங்களை தட்டியே பாடுவோம்

6) கண்ணீரைக் கண்டவரை பாடுவோம்
தோளில் நம்மை சுமந்தவரை பாடுவோம்

அல்லேலூயா (8)
கொண்டாடுவோம் (8)

F-Maj/Waltz/T-132

1371.எந்தன் உள்ளம் தங்கும்

எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா

மாம்ச கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா

திரும்ப விழாது பாரும் இயேசு நாயகா
கிருபை இழாது காரும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
கிருபை இழாது காரும் இயேசு நாயகா

என்னை உமக்குத் தந்தேன் இயேசு நாயகா
இனிநான் அல்ல நீரே இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
இனி நான் அல்ல நீரே இயேசு நாயகா

D-Maj/US Ballad/T-85

1372.வாரும் தூய ஆவியே

வாரும் தூய ஆவியே
உம் பிரசன்னத்தை வாஞ்சிக்கிறோம்
உம் வல்லமையால் என்னை நிறைத்து
நீர் ஆளுகை செய்யும்

1. ஜீவத் தண்ணீர் நீரே
தாகம் தீர்க்கும் ஊற்று
ஆலோசனை கர்த்தரே
என்னை ஆளுகை செய்யும்

2. அக்கினியும் நீரே
பெருங்காற்றும் நீரே
பெருமழை போலவே
உம் ஆவியை ஊற்றும்

அல்லேலூயா (4)
நல்லவரே வல்லவரே (1)
அல்லேலூயா (2)

1373.இயேசு இரத்தம் என்

இயேசு இரத்தம் என் மேலிருப்பதால்
தீமைகள் அணுகாது
இயேசு இரத்தம் என் மேலிருப்பதால்
வியாதிகள் அணுகாது

என் ஆவி ஆத்மா சரீரமெல்லாம்
இயேசுவின் இரத்தம்
அவர் வார்ததை என்னில் இருப்பதினால்
பயமேயில்லை -2

1. பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு
நான் போராடி ஜெபித்த ஜெயமெடுப்பேன் -2

2. சமாதான சுவிசேஷம் சொல்லிடுவேன்
விசுவாச கேடயத்தை பிடித்திடுவேன்

3. சத்தியமென்னும் வஸ்திரம் நான் அணிந்திடுவேன்
நீதியென்னும் மார்க்கவசம் தரித்திடுவேன்

1374.நல்லவர் பாடித் துதிப்போம்

நல்லவர் பாடித் துதிப்போம்
நல்லவர் கொண்டாடுவோம்
நல்லவர் சந்தேகமில்லையே
நல்லவர் சத்தியமே (2)

என்னை அணைத்து மகிழ்ந்திடுவார்
ஓ...நம் தேவன

1) அன்பினை நினைக்கையில் பொங்கிடுதே
எந்தன் இதயம் முழுவதும்
நன்றியால் நிறைந்திடும்
அன்பின் கரத்தை நீட்டியவர்

2) கிருபையை நினைக்கையில் பொங்கிடுதே
எந்தன் இருதயம் முழுவதும்
நன்றியால் நிறைந்திடும்
கிருபையின் கரத்தை நீட்டியவர்

3) பாதுகாப்பை நினைக்கையில் பொங்கிடுதே
எந்தன் இதயம் முழுவதும்
நன்றியால் நிறைந்திடும்
பாதுகாப்பின் கரத்தை நீட்டியவர்

4) அவர் செய்த அற்புதங்கள் நினைக்கையில்
எந்தன் இதயம் முழுவதும்
நன்றியால் நிறைந்திடும்
அற்புத கரத்தை நீட்டியவர்

1375.ஆதியும் அந்தமுமானவரே

ஆதியும் அந்தமுமானவரே
அல்பா ஒமெகாவுமானவரே - **2**
அல்லேலூயா - 4

1.இருக்கிறவராய் இருப்பவரே
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரே **-2**
அல்லேலூயா -4

2.பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தரே

3.பரிசுத்த பலியாய் வந்தவரே
எங்களுக்காய் பலியானவரே

4.சிலுவையில் வெற்றி சிறந்தவரே
இரட்சகா உம்மை தொழுகிறோமே

5.சத்துரு வெள்ளம் போல் வரும்போது
ஏற்றுவேன் ஜெயக் கொடி என்றவரே

6.கர்த்தரின் பிள்ளைகள் நாங்களென்று எங்கள்
ஆவியுடன் சாட்சி கொடுப்பவரே

7.புறப்பட்டுப் போங்கள் என்றவரே
அதிகாரங்கள் யாவும் தந்தவரே

8.உலகின் முடிவு பரியந்தம் நான்
உங்களோடிருப்பேன் என்றவரே

9.ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
திரியேக தேவனுக்கு ஸ்தோத்திரமே

10.அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1376.புதிய நாளுக்குள் என்னை

புதிய நாளுக்குள் என்னை நடத்தும்
புதிய கிருபையால் என்னை நிரப்பும் (2)

புது கிருபை தாரும் தேவா
புது பெலனை தாரும் தேவா

1. ஆரம்பம் அற்பம் ஆனாலும் முடிவு சம்பூரணமாய்
குறைவுகள் நிறைவாகட்டும் - எல்லா (2)
என் வறட்சி செழிப்பாகட்டும் (2)

2. வெட்கத்துக்கு பதிலாக நன்மை தாரும் தேவா
வெட்கத்துக்கு பதிலாக இரட்டிப்பு நன்மை தாரும் தேவா.
கண்ணீர்க்கு பதிலாக - எந்தன் (2)
களிப்பை தாரும் தேவா - ஆனந்த (2)

3. சவால்கள் சந்தித்திட உலகத்தை ஜெயம் எடுக்க
சவால்கள் சந்தித்திட இன்று உலகத்தை ஜெயம் எடுக்க
உறவுகள் சீர்பொருந்த - குடும்ப (2)
சமாதானம் நான் பெறிட - மனதில் (2)

1377.யாக்கோபென்னும் சிறு

யாக்கோபென்னும் சிறுபூச்சியே
நீ ஒன்றுக்கும் கலங் விடாதே
இஸ்ரவேலின் சிறு கூட்டமே
நீ எதற்கும் பயந்து விடாதே

உன்னை உண்டாக்கினவர்
உன்னை சிருஷ்டித்தவர் - உன்
முன்னே நடந்து செல்கிறார்
தீங்கு உன்னை ஒன்றும் செய்யாதே

1. அழைத்தவர் கைவிடுவாரோ
இல்லை இல்லை இல்லை
தெரிந்தவர் விட்டிடுவாரோ
இல்லை இல்லை இல்லை
பேர் சொல்லி அழைத்த தேவன்
உன்னை மகிமைப்படுத்திடுவார் (2)

2. பெலவீனன் ஆவதில்லை
இல்லை இல்லை இல்லை
சுகவீனம் தொடர்வதில்லை
இல்லை இல்லை இல்லை
சாத்தான் உன்னை ஜெயிப்பதில்லை
சாபம் உன்னை அணுகுவதில்லை (2)

3. வியாதிகள் வருவதில்லை
இல்லை இல்லை இல்லை
வாதைகள் தொடர்வதில்லை
இல்லை இல்லை இல்லை
ஆண்டுகள் முடிவதில்லை - அவர்
கிருபையோ விலகுவதில்லை

1378.இது சிந்திக்கும் காலம்

இது சிந்திக்கும் காலம் செயல்படும் நேரம்
மௌனமாயிருக்கமாட்டேன்
மௌனமாயிருக்கமாட்டேன் - **2** நான்

1.அறுவடை காலத்தில் மௌனமாயிருந்தால்
அறுவடை இழப்போமே
ஆண்டவர் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்புத்தான் வருமோ?

2.இந்தியர் இயேசுவை அறிந்திடும்காலம்
இதுதான் இதுதானே
இந்தக் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்புதான் வருமோ?

3.பகட்டு வாழ்வோ பரமனின் அன்போ
எது நம்மை இழுக்கிறது?
கணக்குக் கேட்கும் கர்த்தர் வருவார்
வெறுங்கையாய் நிற்போமோ?

1379.இந்த மட்டும் காத்த

இந்த மட்டும் காத்த எங்கள்
தேவனுக்கு ஸ்தோத்திரம்
இனிமேலும் காக்கும் எங்கள்
அன்பருக்கு ஸ்தோத்திரம் - (2)

அவரை நான் எக்காலத்திலும்
துதிப்பேன் போற்றுவேன்
நிதம் நன்றி சொல்லி மகிழ்ந்திடுவேன்
அவர் பாதம் வந்து அமர்ந்திடுவேன்
அவர் குரல் கேட்டிடுவேன்

1) பயப்படாதே என்று அவர் சொல்லி
வலக்கையை பிடித்து துணைநின்றார்
எண்ணிலா கிருபைகள் தந்து
அவர் சமூகத்தில் மகிழச் செய்திட்டார்
என் வாழ்விலே அவர் செய்த
அதிசயம் அளவிடவே முடியாது
அதை நான் இனி நன்றிகள்
சொல்ல அந்த வார்த்தை போதாது.

2) திராணிக்கு மேல் நான் சோதிக்கப்பட
ஒருபோதும் விடாமல் காத்திட்டார்
நன்மையான ஈவுகள் தந்து
பனைப்போல் செழிக்க செய்திட்டார்
அலைச்சல் யாவும் நினைவுக் கூர்ந்து
கண்ணீரை துருத்தியில் வைத்திட்டார்
ஒலிவமரக் கன்றுகளைப் போல்
ஆலயத்தில் நிற்கச் செய்திட்டார்

1380.மன்னாதி மன்னன்

மன்னாதி மன்னன் இயேசு தாமே
மங்கள தினமிதில்
வான தூதர் சேனையுடன்
வந்தனர் அல்லேலூயா

1. தம் திரு நாமத்தில் கூடும் போது
தவறாமல் வருவேன் என்றுரை செய்தவர்
வாக்கு மாறாதவரே! இன்று
வல்ல நல் ஆசீர்வாதம்
அருள் மாரி பொழிய

2. கானாவூர் கல்யாண வேளையிலே
கர்த்தாதி கர்த்தர் அற்புதர் கரம்
நீட்டிடவே குறைகள்! யாவும்
நீங்கிடவே இன்றுமே
அவ்வல்லமை விளங்க

3. கர்த்தன் ஏசுவுக்கு ஒத்தமிகு
கற்புள்ள கன்னிகையாம் சபையை
கறைதிரை பற்றாதே! காக்கும்
கரத்தில் மறைந்திடவே
மணமக்கள் இருவரையும்

4. மணவாளன் இயேசு தம் தூதரோடே
மகிமையில் தோன்றிடும் நாளுக்கென்றே
உத்தம சாட்சிகளாய்! மணமக்கள்
உம்மில் நிலைத்திடவே
வழுவாமல் காத்திடுமே.

நன்றி இயேசுவே

1381.போற்றிப் பாடுவேன்

போற்றிப் பாடுவேன் தேவா..
உந்தன் நாமத்தை தேவா..

உந்தன் நாமமே
உயர்ந்த நாமமே.

1. மகிமை செலுத்துகிறேன் தேவா
உந்தன் நாமத்தை தேவா

2. துதி செலுத்துகிறேன் தேவா
உந்தன் நாமத்தை தேவா

3. உம்மை உயர்த்துகிறேன் தேவா
உந்தன் நாமத்தை தேவா

4. உம்மைப் பணிகிறேன் தேவா
உந்தன் நாமத்தை தேவா

5. உம்மை நேசிக்கிறேன் தேவா
உந்தன் நாமத்தை தேவா

6. உம்மை வாழ்த்துகிறேன் தேவா
உந்தன் நாமத்தை தேவா

1382.பாடுவேன் நான்

பாடுவேன் நான் (2)
அவர் நல்லவரே
வாழ்த்துவேன் நான்
அவர் வல்லவரே

நீரே என் நீதியின் தேவன்
நீரே என் இரட்சிப்பின் தேவன்
நீரே என்னை காண்கின்ற தேவன்
நீரே என்னை காக்கின்ற தேவன்

1. யெகோவாயீரே எல்லாம்
பார்த்துக்கொள்வீர்
யெகோவா நிசியே என்றும்
ஜெயம் தருவீர் (2)

2. யெகோவா ஷாலோம்
எனக்கு சமாதானமே
யெகோவா ஷம்மா என்
துணையாளரே (2)

3. யெகோவா ரூவா
என் நல்மேய்ப்பரே
யெகோவா ர.ீ.ப்பா
சுகமளிப்பீர் (2)

1383.ஆராதிப்போம் ஆண்டவரை

ஆராதிப்போம் ஆண்டவரை
ஆவியோடும் உண்மையோடும்
மாறாத ஆனந்தம் குன்றாத பேரின்பம்
இயேசுவில் என்றும் உண்டு - அல்லேலூயா

நேசரண்டை வாருங்கள்
நேசத்தை ருசியுங்கள்
ஆவலாய் அழைக்கிறார் இதோ

1. ஆகாமியக் கூடாரம் வேண்டாம்
ஆலய வாசற்படியிலே ஆனந்தம் பாடி
நேசரைத் தேடி ஆண்டவர்
பாதம் பணிவோம் - ஆராதிப்போம்

2. ஆலோசனைக் கர்த்தர்
அவரே ஆலோசனை தந்திடுவாரே
பாதையைக் காட்டி கரம்பிடித்து
நேர்வழி நடத்திடுவார் - ஆராதிப்போம்

3. ஆட்டுக்குட்டி திருஇரத்தமே
பாவமறக் கழுவிடுமே சாபங்கள்
போக்கி நோய் நீக்கி
விடுதலை தந்திடுமே - ஆராதிப்போம்

1384.கல்வாரி சிலுவை

கல்வாரி சிலுவை கரை சேர்க்கும் உன்னை
கல்வாரி சிலுவை கரை சேர்க்கும் உன்னை
சபையே நீ விழித்தெழும்பு இரட்சகர் இயேசு -
மன்னிப்பைத் தருவார் சபையே நீ மனந்திரும்பு - ஓ

1. விசுவாசம் கொண்டு வேதத்தை
சபையே நீ திடன் கொண்டிடு
உன்னை காக்கும் தேவன் உறங்கார்
சபையே நீ மனந்திரும்பு - ஓ

2. உனக்காய் கொடுத்த வாக்குகள்
சபையே நீ பலம் கொண்டிடு
உனக்காய் யாவும் செய்து முடிப்பார்
சபையே நீ மனந்திரும்பு - ஓ

3. உன் தேவை அறிவார் கேட்கும் முன் தருவார்
சபையே நீ கவலை கொள்ளாய்
ஊழியம் செய்ய உன் ஜீவன் தரவே
சபையே நீ மனந்திரும்பு - ஓ

1385.வார்த்தையிலே உண்மையுள்ளவர்

வார்த்தையிலே உண்மையுள்ளவர் வார்த்தையிலே
உண்மையுள்ளவர் வாக்கு என்றும் மாறிடாதவர்
கிருபையாலே வரங்கள் தருபவர்
ஆவியாலே நடத்துகின்றவர்

அவரில் சார்ந்து நானே என்று சொன்னார்
இருதயத்தை திறந்து வைப்பாயோ?
உன்னைமீட்டுக் கொண்டாரே வாழ்வு தந்தாரே
உன் ஜீவனை நீ கொடுக்க மாட்டாயோ?

1. நல்ல மேய்ப்பன் நானே என்று சொன்னார்
ஜீவ அப்பம் நானே என்று உரைத்தார்
மேய்ப்பன் சத்தம் கேட்கும் ஆடு போல்
நேசரின் சத்தம் கேட்கமாட்டாயோ - அவரில்

2. எக்காளம் தூதர் ஊதும் போது
வானத்திலே இயேசு வருவாரே
அந்த சத்தம் கேட்டு நாமும்கூட
அவரோடு சேர்ந்து கொள்ளுவோம் - அவரில்

3. சோதனைகள் மேற்கொள்ளும்போது
சாத்தானை மிதித்து போடுவாயே
துன்பம் எல்லாம் இன்பமாக மாறும்
இயேசுவை நீ ஏற்றுக் கொள்ளும் போது - அவரில்

1386.அதிசயமாம் அற்புதர்

அதிசயமாம் அற்புதர் இயேசு
அருள்மாரி பொழிந்திடுவார்
ஆண்டவரின் சேவை செய்ய
ஆட்களைத் தேடுகின்றார் - 2

1. ஆண்டவர் அன்பினை அறியார்
அழிவின் பாதையில் அழிகின்றார்
அதை அறியாமல் ஓடுகின்றார்
ஆண்டவர் உன்னைத் தேடுகின்றார் - 2

2. கர்த்தரின் ஊழியம் செய்வோம்
கனம் புகழ் மேன்மை அடைந்திடுவாய்
நிலை இல்லா வாழ்வினை வெறுத்திடுவாய்
நித்திய ராஜ்ஜியம் அடைந்திடுவாய் - 2

1387.ஆத்துமாவே ஏன்

ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்
நேசரை நோக்கிடுவாய்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தூதர்கள் ஏந்திடுவார் - (2)

1. வனாந்திரத்தில் மன்னா தந்தார்
மறைவாக காத்து வந்தார் - (2)
இருள் நீக்கி வெளிச்சம் தந்தார்
நாளெல்லாம் நிழலானார் - (2)

2. அலை அலையாய் பகைவர்களும்
எழும்பியே வந்தாலும் - (2)
அதிகாரங்கள் உடையவர்தான்
ஆண்டவர் நடத்தினாரே - (2)

3. நன்மையினால் உன் வாழ்வை
இதுவரை நடத்தினாரேஆத்துமாவே - (2)
ஏன் கலங்குகிறாய்
இயேசுவில் நிலைத்திடுவாய் - (2)

1388.பகற்காலம் இருக்கு

பகற்காலம் இருக்கு மட்டும் அறுவடை செய்வேனே
ஒருவரும் கிரியை செய்யா இராக்காலம்
வருமுன்னே அனுதினம் உழைத்திடுவேன் - நான்

1. கண்களை ஏறெடுத்து பாருங்கள்
விளைந்த வயல் நிலத்தை காணுங்கள்
அறுப்பின் எஜமானே உம் சித்தமே
இன்று நான் செய்ய ஆயத்தமே - பகற்காலம்

2. நாடு நகரம் என்று நான் அலைந்திட
காடு மேடு என்று பாய்ந்து சென்றிட
இயேசு தெய்வம் என்று எங்கும் கூறிட
என்னை தந்துவிட்டேன் உம் கைகளில் - பகற்காலம்

3. எமது சேவை யார் செல்லுவார்
என்று கேட்கும் தேவனின் சத்தம்
என்னை அனுப்பும் என் இயேசுவே
என்னை அர்ப்பணித்தேன் வழி காட்டுமே - பகற்காலம்

4. இந்தியா இயேசுவை அறிந்து கொள்ள
சாத்தானின் ஆளுகை அகன்று ஒழிய
எலியாவின் ஆவியும் அதிகாரமும்
என்னில் வந்திறங்க அருள் தாருமே - பகற்காலம்

1389.அழைக்கின்றேன் அன்பு

அழைக்கின்றேன் அன்புள்ள ஆண்டவரே
ஆவியில் கலங்கும் போது
இயேசுவே பதில் தாருமே

1. செங்கடல் எதிர் நோக்கினும்
சேனைகள் பின் தொடர்ந்தும்
மங்காத வாக்குகளால்
மோசேயை நடத்தினீரே - அழை

2. அக்கினி சூளையிலும் அருகினில்
நடந்தது போல் பக்கத்தில்
என் பாதையில் பரிசுத்தர்
கரம் நீட்டுமே - அழை

3. எலியாவின் தேவன் எங்கே
இடரல்கள் பெருகும் போது
யோர்தான் பிளந்திடவே
இயேசுவே துணை வாருமே - அழை

1390.கேள்! ஜென்மித்த

1. கேள்! ஜென்மித்த ராயர்க்கே விண்ணில்
துத்யம் ஏறுதே அவர் பாவ நாசா சமாதான காரணா
மண்ணோர் யாரும் எழுந்து விண்ணோர் போல்
கெம்பீரித்து பெத்லகேமில் கூடுங்கள்
ஜென்ம செய்தி கூறுங்கள்

கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே

2. வானோர் போற்றும் கிறிஸ்துவே லோகம்
ஆளும் நாதனே ஏற்ற காலம் தோன்றினீர்
கன்னியிடம் பிறந்தீர் வாழ்க, நரதேவனே
அருள் அவதாரமே! நீர் இம்மானுவேல்
அன்பாய் பாரில் வந்தீர் மாந்தனாய்

3. வாழ்க சாந்த பிரபுவே! வாழ்க நீதி சூரியனே
மீட்பராக வந்தவர் ஒளி, ஜீவன் தந்தவர்,
மகிமையை வெறுத்து, ஏழைக் கோலம்
எடுத்துச் சாவை வெல்லப் பிறந்தீர்
மறு ஜென்மம் அளித்தீர்

கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே

1391.எந்தன் நல்லவர்

எந்தன் நல்லவர் இயேசு வல்ல மெய்தேவன்
என்னை தெரிந்து கொண்டார்
நான் எதற்கினி அஞ்சிடுவேன்
அவர் எந்தன் பரிகாரியே

1. காரிருள் சூழும் இத்தரையில் காத்திடுவார்
தினமும் என் கிருபை போதும் என்றுரைத்த
எந்தன் உள்ளம் கலங்கிடுமோ - எந்தன்

2. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார் நல்ல மேய்ப்பன்
நான் என்றார் கல்லான பாதைகள் கடந்தேன்
அவர்கரம் என்னை தாங்கினதால் - எந்தன

3. மகிமையைக் காணும் யாத்ரையிலே மரணத்தின்
தாழ்வினிலும் ஆழ்கடல் ஆழங்களிலும்
அவர் பெலமுள்ள கரம் என்னை நடத்தும் - எந்தன்

1392.கர்த்தாவே நீர் என்றென்று

கர்த்தாவே நீர் என்றென்றுமாய்
உன்னதமானவரே பரிசுத்தரே ஸ்தோத்திரம்

1. கர்த்தாவே உமது செய்கைகளால்
எத்தனை மகிழ்ச்சி ஆக்கினீரே
உமது கரத்தின் கிரியைகளாலே
ஆனந்த சத்தமிடுவேன் - கர்த்தாவே

2. காண்டா மிருகத்தின் கொம்பைப் போல
எந்தனின் கொம்பையும் உயர்த்துகிறீர்
புது எண்ணெயால் என்னை அபிஷேகிப்பீரே
புகழ்ந்து பாடிடுவேன் - கர்த்தாவே

3. கர்த்தாவே உமது ஆலயத்தில்
நாட்டப்படுவோன் பாக்கியவான்
முதிர்ந்த வயதிலும் கனிகள் தந்தே
கர்த்தரைத் துதித்திடுவார் - கர்த்தாவே

1393.ஆவியானவரே உம்மை

ஆவியானவரே உம்மை வாஞ்சிக்கிறேன்
மகிமையின் பிரசன்னம் நிறைவாய்
இறங்கட்டும் இந்த வேளையிலே

1. ஆவியிலே களிகூறவே என்றென்றும் விரும்புகிறேன்
வாஞ்சிக்கிறேன் எந்நாளுமே உந்தன் சமூகத்தையே
நேசர் முகம் காண்கையிலே ஆவியில் நிரம்புகிறேன்
பாடி உம்மை துதிக்கையில் பரவசம் கொள்கிறேன்

2. தாவீது போல் மகிழ்ந்திடவே சமூகம் வேண்டுகிறேன்
ஆடிப்பாடி துதித்திடவே விடுதலை ஈந்திட்டீரே
உன்னதத்தில் உதவிடுமே ஆவிக்குள்ளாய்
அனுதினமும் அனல் போல் மாற்றிடுமே

3. மேல் வீட்டறை அனுபவத்தை என்றென்றும் தந்திடுமே
ஆவிமழை கரை புரள தேசத்தை சந்தியுமே அஸ்திபாரம்
அசைந்திடவே எழுப்பிடும் சபையோரை எழுப்புதலால்
புது உள்ளங்கள் உயிர்பிக்க செய்திடுமே

1394.வாருமே பரிசுத்த

வாருமே பரிசுத்த ஆவியானவரே
வந்து எங்களை நீர் மாற்றிடுமே
ஆவியின் கனிகளால் நிறைத்திடுமே
தேவன்பின் வெள்ளம் என்னில் புரளட்டுமே

1. மற்றோரை குறை சொல்லுதல்
நீர் வந்தாலே ஓடிவிடும் அன்பினால் நிறைந்திடுவேன்
நாளை நான் காத்திடுவேன் உம்
அபிஷேகத்தினால் நாளை நான் காத்திடுவேன்

2. தீய எண்ணங்கள் ஓடிடும் கிறிஸ்துவின்
சிந்தை வரும் ஆத்தும பாரத்தினால்
அனுதினம் ஜெபித்திடுவேன் ஆவியானவருடன்
நான் அனுதினம் ஜெபித்திடுவேன்

3. வல்லமை பெலனும் என்னில்
நீர் வந்தாலே வந்துவிடும் வெடித்து சிதறிடுவேன்
உலகெங்கும் சென்றிடுவேன் நற்செய்தி
சொல்லிடுவேன் நற்பெயர் பெற்றிடுவேன்

1395.ஆசீர்வாதத்தை நாடி

ஆசீர்வாதத்தை நாடினோம்
பரலோகப் பிதாவே கூடினோம்

1. அருகரில்லா தவர்களானோம்
திரு சக்தியை எமக்குத் தாரும்
இருதயத்தை காலி செய்தோம் (2)
பரலோகப் பிதாவே கூடினோம் - ஆசீர்

2. பராக்கிரமமுள்ளவர் நீரே
சராசரங்களை உண்டாக்கினீரே
நேரமெல்லாம் உம்மைத் துதிப்போம் (2)
பரலோகப் பிதாவே கூடினோம் - ஆசீர்

3. அன்பினால் அவஸ்தைகளை சகித்தீர்
துன்புறுத்தும் பூமியிலிருந்தீர்
தன்னயமற்ற தாசராக்கும் (2)
பரலோகப் பிதாவே கூடினோம் - ஆசீர

1396.ஆராதிக்கிறேன் கும்பி

ஆராதிக்கிறேன் கும்பிட்டாராதிக்கிறேன்
ஆராதனையில் புது கானம் பாடியே
மா உன்னதராம் இரட்சகர் நாமம் வாழ்த்திப் பாடி
உம் மலரடியில் தாழ்ந்து வீழ்ந்து வணங்குவேன்
ஆத்மநாதனே உம்மில் சேர்வேனே
என் மனதில் நீர் என்றும் தங்குமே

1. இயேசு நாதா ஒரு சிசுவாய்
என்னை உந்தன் முன்பில் மாற்றிடுமே
எந்தன் பாவம் யாவும் போக்கினதால்
துக்கபாரம் யாவும் நீக்கினதால்
ஆனந்தக் கண்ணீரில் பாடுகிறேன் - ஆராதிக்

2. ஸ்நேக நாதா ஜீவபலியாய்
என்றும் உம்மில் நானும் ஜீவித்திட
எனது உள்ளம் யாவும் சமர்ப்பிக்கின்றேன்
மகனாக என்னையும் மாற்றிடுமே
ஆதிநாதனே அதிசயமே
நீர் எந்தன் மகிமை மேசியாவே- ஆராதிக்

A-Maj/Slow Rock/T-135

1397.அல்லேலூயா ஸ்தோத்திரம்

அல்லேலூயா ஸ்தோத்திரம் துதிகளிலே
பாத்திரர் இயேசு நாதர் புகழையே
போற்றிப் பாடிடு பாடிடு பாடிடு
இயேசு ராஜன் புகழ்பாடிடு அல்லேலூயா

1. தாழ்வில் நம்மை நினைத்தார்
வாழ்விற்கு வழிதனை திறந்து தந்தார்
கர்த்தர் நல்லவர் என்றும் பெரியவர் காலமெல்லாம்
அவர் புகழைப் போற்றிப் பாடிடு

2. தூதர்கள் போற்றும் தேவன் துதிகளிலே
வாசம் செய்யும் தூய நேசன் மாந்தர்கள்
உள்ளத்தில் வேந்தனாய் வாழ்த்திடும்
மகிமையின் தேவனை வாழ்த்திப் பாடிடு

3. சேதம் இன்றி காத்தார்
தாங்கி ஏந்தி சுமந்து தப்புவித்தார்
அன்பின் தேவனை ஆத்தும நேசரை
ஆவியில் நிறைந்து மகிழ்ந்து பாடிடு - அல்லேலூயா

1398.உம்மைத் தவிர யாருண்டு

உம்மைத் தவிர யாருண்டு கர்த்தாவே
அடைக்கலம் கோட்டை கன்மலையும் நீரே

1. நம்பி வந்தவரை வாழவைக்கும் தேவன்
துரத்துண்டவரை சேர்த்துக் கொள்ளும் தேவன்
கிருபையை நம்பி ஓடி வந்தோமையா
கிருபையை அள்ளிப்பொழிந்து விடுமையா

2. பலவீனரையும் பலவானாய் மாற்றும் தேவன்
ஞானமற்றவரை ஞானியாக்கும் தேவன்
கிருபையை நம்பி ஓடி வந்தோமையா
கிருபையை அள்ளிப்பொழிந்து விடுமையா

3. தரித்திரரையும் ஆசீர்வதிக்கும் தேவன்
சுகவீனரையும் ஆரோக்கியமாக்கும் தேவன்
கிருபையை நம்பி ஓடி வந்தோமையா
கிருபையை அள்ளிப்பொழிந்து விடுமையா

4. இல்லாததையும் உண்டாக்கி விடும் தேவன்
மரித்தோரையும் உயிரோடெழும்பும் தேவன்
கிருபையை நம்பி ஓடி வந்தோமையா
கிருபையை அள்ளிப்பொழிந்து விடுமையா

1399.இது யூபிலி ஆண்டு

இது யூபிலி ஆண்டு
இது விடுதலை வருஷம்
நித்திய மகிழ்ச்சி தலைமேலிருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப் போகும்.

1. நன்மையும் அவர் கிருபையும்
என்றுமே நம்மைத் தொடர்ந்திடும்
நம் ராஜா யெகோவாயீரே
தேவைகள் யாவையும் சந்திப்பாரே

2. கட்டுகள் யாவும் நீங்கி விடும்
கண்ணீரை இயேசு துடைத்திடுவார்
சிறையிருப்பை மாற்றிடுவார்
யெகோவா ஷாலோம் என்றும் நம்முடனே

3. இழந்ததை நாம் பெற்றுக் கொள்வோம்
இந்தியாவை நாம் மீட்டுக் கொள்வோம்
யெகோவா நிசி முன் செல்கின்றார்
யுத்தங்கள் நமக்காய் செய்திடுவார்

4. ஜெபத்திற்கு பதில் கிடைத்திடும்
சத்துரு நம் காலின் கீழே
ஜெயக் கொடியை பிடித்துக் கொண்டு
ஜெயமாய் வாழ்ந்திட உதவி செய்வார்

1400.துதிகளின் மத்தியில்

1. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும் இயேசுவே
துதித்திடுவோம் துதித்திடுவோம்
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
உம்மையே என்றுமே வாழ்த்திடுவோம்

வானமும் பூமியுமே
சமுத்திர அலைகளுமே

2. உம்மையே என்றுமே துதிக்கும்
நானும் உம்மை துதிப்பேன்
இயேசுவே ஸ்தோத்திரம் (2)
என்றென்றும் ஸ்தோத்திரமே

3. பாவங்கள் சாபங்கள்
மீறுதல்கள் யாவையுமே
மேகத்தைப் போலவே நீக்கினார்
என்னை மீட்டுக் கொண்டார்

4. ஒவ்வொரு நாளிலுமே
அற்புதமாய் நடத்துகின்றார்
தேவைகள் யாவையும் சந்திப்பார்
தேவனே உம்மையே துதிப்பேன்

1401.ஆனந்த பாடல்கள்

ஆனந்த பாடல்கள் பாடிடுவேன்
ஆர்ப்பரித்து என்றும் மகிழ்ந்திடுவேன்
அல்லேலூயா (3) என்று பாடிடுவேன்

1. ஆண்டவர் செய்த அற்புதங்கள்
அற்புதம் அற்புதம் அற்புதமே
குருடர் கண்களைத திறந்தாரே
செவிடர் கேட்கச் செய்தாரே
என்னையும் இரட்சித்தாரே
என் வாழ்வில் அற்புதமே

2. பாவச் சேற்றில் வாழ்ந்த என்னை
தூக்கி எடுத்து கழுவினாரே
கரத்தை பிடித்துக் கொண்டாரே
கரத்தால் தாங்குவேன் என்றாரே
புது சிருஷ்டியாய் மாற்றினாரே
என் வாழ்வில் அற்புதமே

3. வானாதி வானங்கள் கொள்ளாத
வல்லவர் வாழ்வினில் வந்தாரே
வாசற்படியில் தட்டினாரே
இதயத்தில் வாசம் செய்திடவே
என்னுடன் ஜீவிக்கின்றார்
என் வாழ்வில் அற்புதமே

1402.என் அன்பரும் நீர்தான்

என் அன்பரும் நீர்தான்
என் ஆருயிர் நீர்தான்
இன்பமும் நீர்தான்
இனியவரே

அன்பரே இயேசுவே
எந்தன் ஆத்ம நேசரே

1. உலகினிலே உம்மைப் போல
வேறொரு நேசரில்லை
உள்ளத்திலே உம்மையல்லால்
வேறொரு ஆசையில்லை

2. உம்மைப் போல அழகினிலே
சிறந்தவர் ஒருவரில்லை
என் நேசர் நீரல்லவோ
என் பாக்கியமே

3. உலகினிலே உம் அன்பை போல
உண்மை அன்பு இல்லை
உன்னதத்தில் என்னை சேர்க்க
உம் ஜீவனையும் தந்தீரே

4. உம்மையே நான் என் முன்னே
என்றென்றும் வைத்திடுவேன்
சுதந்திரமே என் பங்கே
அசைக்கப் படுவதில்லை நான்

5. இதயத்திலே ஓர் ஏக்கம் உண்டு
உம்மை தரிசித்திட
பொன் முகத்தை தரிசிக்கவே
என் மனம் ஏங்குதைய்யா

1403.என்னை என்றும் நடத்தி

1. என்னை என்றும் நடத்திடுமே
உம்மை என்றும நோக்கிடுவேன்
என் வாழ்நாட்களெல்லாம்
உமக்காக ஜீவிப்பேன்
என் ஜீவன் சுகம் பெலன் இயேசுவே

2. கண்களை உம்மேலே பதித்து விட்டேன்
தேவைகள் யாவையும் சந்திப்பவரே
கலங்கிடேனே நான் கலங்கிடேனே
யெகோவாயீரே என் தேவன் அல்லவா

3. சத்துரு யுத்தம் செய்ய எதிர் வந்தாலும்
கர்த்தரே எனக்கு ஆதரவானீர்
தப்பு வித்தீரே விசாலத்தில் வைத்தீரே
யெகோவாநிசி என் தேவன் அல்லவா

4. நடந்திட முடியா நேரங்களிலே
தோளின்மேல் தூக்கியே சுமந்தீர் என்னை
நல்ல மேய்ப்பனாய் என்னை நடத்துகின்றீர்
யெகோவாருவா என் தேவன் அல்லவா.

1404.நீரே என் சொந்தம்

நீரே என் சொந்தம்
நீரே என் அன்பர்
நீரே என் நண்பர்
நீரே என் ராஜா என்னை ஆளுமே

என்னை நடத்திடும் என்னை காத்திடும்
என்னை நிரப்பிடும் உம் அன்பால்
என்னை நிரப்பிடும்

1. வெண்மையும் சிவப்புமானவர்
ஆயிரம் பதினாயிரம் சிறந்தவர்
புறாவின் கண்கள் உடையவர்
முற்றிலும் அழகு உள்ளவர்

இவரே இவரே என் நேசர் என் நேசர்

2. எந்தன் நேசர் நெஞ்சமே
நான் சாயும் மஞ்சமே
நேசர் எனக்கு உரியவர்
நான் அவருக்குரியவள்

3. இடதுகை என் தலைகீழே
வலக்கரம் என்னை அணைக்குதே
நேசர் அன்பு இன்பமே
தேனிலும் அதி மதுரமே

1405.நல் பாத்திரமாய் என்னை

1. நல் பாத்திரமாய் என்னையும் வனைந்தீரய்யா
உம் போல என்னையும் மாற்றுமய்யா - 2

2. அழுகையில் என் குரலை கேட்டீரய்யா
கரம் தாங்கி என்னையும் தூக்கினீரே - 2

3. சோதனை நேரத்தில் துணை நீரய்யா
வழுவாமல் தினம் காத்து ஜெயமீந்தீரே - 2

4. இப்பூவில் எந்தனை படைத்தீரய்யா
உம் துதி சொல்லி பாடி மகிழ்ந்திடவே - 2

1406.இயேசுவே எனக்கிந்த

1. இயேசுவே எனக்கிந்த இகமதிலே
அசைந்திடாதோர் நம்பிக்கையே
சார்ந்திடுவேனே மாறா வாக்கினிலே
சாற்றுவேன் அவர் புகழே

நேசிக்க சிறந்தவர் இயேசு எனக்கு
ஆசைக்குகந்தவரே - 2
இன்ப சாரோனின் ரோஜா இவரே - 2

2. மரணமதின் கொடும் கரத்தினின்றே
கருணையால் என்னை விடுத்தே
அரவணைத்தவர் கரமே எனது
சரணம் தரணியிலே - நேசிக்க

3. பெருகுதே எந்தன் அகம் தனிலே
கிருபை சாகரம் எனவே
ஏற்றதோர் சமயம் சகாயம் அளித்திடும்
உற்றதோர் கிருபையிதே - நேசிக்க

4. ஜீவனிலும் பெரிதவர் கிருபை
சீயோனைப் போல் உயர்ந்ததுவே
தாழ்மையுள்ளோரை வாழ்விக்கும் கிருபை
சூழ்ந்திடும் நிதம் என்னையே - நேசிக்க

5. பூரணக் கிருபையை அளித்திடவே
ஆரணர் இயேசு தோன்றிடுவார்
சாலேமின் மீட்புடனே பெலனும் பெற்றிடும் நல்
காலமும் விரைந்திடுதே - நேசிக்க

1407.ராஜா இயேசு ராஜா

ராஜா இயேசு ராஜா நான்
அழுது ஜெபிக்க வேண்டும் ராஜா
ஆறாக ஓடும் அந்தக் கண்ணீரிலே
உம் பாதம் கழுவி நான் கதற வேண்டும்

1. ஆசீர்வாத மழை பொழிய வேண்டும்
அதில் நான் தினம் தினமும் நனைய வேண்டும் (2)
வேறூன்றி வளர வேண்டும் உம்மில் (2)
திராட்சை செடியை போல படரவேண்டும்

2. கடுகளவு விசுவாசமிருந்தால்
காட்டத்தி மரத்தை பிடுங்கி கடலில் நடலாம் (2)
விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் (2)
அந்த விசுவாசமே நம்மை காக்கும்

3. இரக்கத்தின் ஐசுவரியமுள்ள
என் இயேசு ராஜனே அருமை இரட்சகா (2)
உம்மையே என்றென்றும் துதிப்பேன் (2)
உம் நாமம் போற்றி போற்றி மகிழ்ந்துவிடுவேன்

1408.என் கண்கள் உம்மை

என் கண்கள் உம்மை காணும்
என் காதுகள் உம்மை கேட்கும்
என் நாவு உம்மை பாடும்
என் இதயம் தியானிக்கும்

1. கைகள் கிரியை செய்யும் உம் நாமம் உயர்ந்திட
கால்கள் சுற்றி திரியும் உம் நாமம் அறிவிக்க

உம்மை ஸ்தோத்தரிப்பேன்
உம்மை துதித்திடுவேன்
என்றும் புகழ்ந்து பாடிடுவேன்

2. உதடு உம்மை போற்றும் என்றும் உம்மை துதித்திடும்
நடைகள் உறுதிபடுமே உம் வார்த்தையில் நிலைத்திடும்

1409.யுத்தத்தில் வல்லவர்

யுத்தத்தில் வல்லவர் கர்த்தரே
கர்த்தர் என்பது அவர் நாமம் - 2
அவரே என் தேவன்
அவரை உயர்த்துவேன் - 2

1. பகைஞனை நொறுக்கும் வலக்கரம்
ஜனங்களை விடுவிக்கும் வலக்கரம் - 2
பலத்தினால் சிறந்தது வலக்கரம்
அது என்னை தாங்குதே - 2

2. பாவியை இரட்சிக்கும் வலக்கரம்
பாதையை செவ்வையாக்கும் வலக்கரம் - 2
மகத்துவமான வலக்கரம்
அது என்னை தாங்குதே - 2

3. நீதியால் நிறைந்த வலக்கரம்
காருண்யம் நிறைந்த வலக்கரம்
பெரியவனாக்கிடும் வலக்கரம்
அது என்னை தாங்குதே

1410.வானத்தில் இயேசு

வானத்தில் இயேசு தோன்றிடும்
அந்த நாளும் என்று வந்திடுமோ
கண்ணாரவே கண்டிடுவோம்
தேவ ராஜன் இயேசுவையே

1. நோவா காலம் போலவே
பாவமே பெருகுதே
தலையை உயர்த்தி விழிப்பாய் தினமே
நிதம் நம் வாழ்வை காத்திடுவோம் - வானத்தில்

2. தேவ பக்தி நிறைந்தோராய்
நீதியை காத்துமே
உலகை வெறுத்து ஜீவியம் செய்துமே
அவர் வருகைக்காய் காத்திருப்போம் - வானத்தில்

3. ஆவி ஆத்துமா சரீரத்தில்
பரிசுத்தம் காத்துமே
நேசரின் வருகை சமீபம் சமீபம்
நடுவானத்தில் சந்திப்போமே - வானத்தில்

4. தேவ வருகை நெருங்குதே
சபையில் கூடுவோம்
துதித்து மகிழ்ந்து ஆவியால் நிறைந்து
நிதம் ஆயத்தமாகிடுவோம் - வானத்தில்

5. வானம் பூமி மாறினும்
வார்த்தையோ மாறாதே
அமைதி நிலவும் சுகமே துளிரும்
புது மெய் வாழ்வு மலர்ந்திடும் - வானத்தில்

1411.புதிய காரியம் செய்தி

புதிய காரியம் செய்திடுவார்
புதுமை தோன்றிடும் இந்நாளே
கானகப் பாதையில் அற்புதமாய்
கரம்பிடித்து வழி நடத்திடுவார்

1. பாலைவனத்தில் ஆறுகளை
பாய்ந்திட செய்திடுவார்
பூரண நிறைவை அகமதிலே
பரமனே அளித்திடுவார் - புதிய

2. பாவங்கள் யாவையும் உணர்த்தியவர்
பரிசுத்தம் அடைய செய்வார்
புதிய இதயம் அளித்திடுவார்
புது வாழ்வு அடைந்திடுவோம் - புதிய

3. பரிசுத்த பாதையில் முன் செல்லவே
பழையவை களைந்திடுவோம்
புதிய சாயல் அடைந்திடுவோம்
ஆவி ஈந்திடுவார் - புதிய

4. கிறிஸ்துவின் சிந்தை அடைந்திடவே
கிருபையில் வளர்ந்திடுவோம்
புதிய கிருபை அருளிச் செய்வார்
புதுப்பெலன் அடைந்திடுவோம் - புதிய

5. கர்த்தரின் பாதம் அமர்ந்தே நாம்
கழுகு போல் எழும்பிடுவோம்
புதிய வல்லமை அளித்திடுவார்
ஜெயம் பெற்று ஏகிடுவோம் - புதிய

1412.இயேசுவே உம்மை ஸ்தோ

இயேசுவே உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன்
இயேசுவே உம்மை துதிக்கின்றேன்
இயேசுவே உம்மை நம்புகின்றேன்
இயேசுவே நான் உம்மை நேசிக்கின்றேன்

1. நேசிக்கின்றேன் நேசிக்கின்றேன் இயேசுவே
நான் உம்மை நேசிக்கின்றேன்
நேசிக்கின்றேன் ஐயா நேசிக்கின்றேன் இயேசுவே
நான் உம்மை நேசிக்கின்றேன்
இயேசுவே நான் உம்மை நேசிக்கின்றேன் (2)

1413.உனக்குள்ளே இருக்கின்ற

உ(எ)னக்குள்ளே இருக்கின்ற
உ(எ)ன் இயேசு
என்றும் பெரியவரே - நீ
அறியாததும் உனக்கு எட்டாததுமான
பெரிய காரியங்கள் செய்திடுவார்

1. நம்பிக்கையில்லா நிலையானதோ
விசுவாசம் உன்னில் குறைவானதோ
அற்புதர் உனக்குள்ளே இருக்கிறார்
அதிசயம் செய்வார் கலங்காதே - அவர்

2. மதுரமான வாழ்வு கசப்பானதோ
ஒளிவரும் நேரம் இருளானதோ
ஜீவனுள்ள தேவன் இருக்கிறார்
யாவையும் செய்வார் கலங்காதே- அவர்

3. சூழ்நிலை எல்லாம் எதிரானதோ
சுற்றத்தார் உன்னில் பகையானாரோ
வல்லவர் உனக்குள்ளே இருக்கிறார்
வலக்கரம் தாங்குவார் கலங்காதே- அவர்

4. உனக்குள்ளே இருக்கின்ற உன் இயேசு
என்றும் பெரியவரே - நீ
அறியாததும் உனக்கு எட்டாததுமான
பெரிய காரியங்கள் செய்திடுவார்

1414.இதுவே காலம் இதுவே

இதுவே காலம் இதுவே காலம்
இயேசுவை சொல்லிடவே
இதுவே காலம் இதுவே காலம்
உலகமெங்கும் சென்றிடவே

1. வானத்தின் பொல்லாத சேனையை
வெல்ல இதுவே காலம்
பாதாளம் செல்லும் ஜனங்களைத்
தடுக்க இதுவே காலம்

2. விசுவாச கூட்டம் எழும்பி
பிரகாசிக்க இதுவே காலம்
இருளின் ஜனங்கள் வெளிச்சத்தை
காண இதுவே காலம்

3. வாலிப சேனை ஊழியம்
செய்ய இதுவே காலம்
உலகத்தை வெறுத்து சிலுவையை
நேசிக்க இதுவே காலம்

4. கிராமங்கள் தோறும் சுவிசேஷம்
அறிவிக்க இதுவே காலம்
பட்டணங்கள் தோறும் ஆதாயப்படுத்த
இதுவே காலம்

1415.அபிஷேக தேவன்

அபிஷேக தேவன் எனக்குள்ளே இருக்கிறார்
சர்வ வல்ல தேவன் உனக்குள்ளே இருக்கிறார்

கலங்கமாட்டேன் நான் கலங்கமாட்டேன்
வெற்றி எனக்குதான்.

1. எலியாவின் தேவனே எனக்குள்ளே இருக்கிறார்
எலிசாவின் தேவனே எனக்குள்ளே இருக்கிறார்

2. சாத்தானின் சூழ்ச்சியெல்லாம் இந்த
அபிஷேகம் முறிக்குமே

3. என் பாத்திரம் அபிஷேகத்தால் அது
நிரம்பி வழியுமே

1416.நீரே என் தஞ்சம்

நீரே என் தஞ்சம்
நீரே என் கோட்டை
நீரே என் இரட்சகர்
நீரே இராஜா

1. நான் உம்மை தேடுவேன்
நாள் முழவதும்
நான் உம்மை சேவிப்பேன் -
வாழ்நாளெல்லாம்
எனதெல்லாவற்றிலும்
நான் உம்மை நேசிப்பேன்
இயே.........சு.........வே (2)

இயேசுவே இராஜா
இயேசுவே தேவன்
இயேசுவே மீட்பர்
இயே....சு.....வே

1417.என்ன செய்வேன் இயேசு

1. என்ன செய்வேன் இயேசுபரா
என்னில் நீர் செய்த வன்கிரியைகட்காய்
எண்ணிலா துதிகளை ஏறெடுப்பேன்
மண்ணில் நான் ஜீவிக்கும் நாட்களெல்லாம் - 2

ஸ்தோத்திரம் நாதா, ஸ்தோத்திரம் நாதா
ஸ்தோத்திரம் நாதா, ஸ்தோத்திரம் நாதா

2. பாவச் சேற்றில் ஆழ்ந்திருந்தேன்
பரிவாய் கரம் நீட்டி கரையேற்றினீர்
சிந்திய இரத்தத்தால் கழுவினீரே
மந்தையில் சேர்த்தீரே மைந்தனாக

3. மிஞ்சும் நோயால் பெலன் இழந்தேன்
எந்தையே தந்தீரே விந்தை பெலன்
அகமதில் பெலன் தந்தீர் உம்மைத் துதிக்க
இகமதில் உம்மைப்பாட பாடல் தந்தீர்

4. சத்துருவை நான் ஜெயித்து
சுத்தனாய் சித்தமே செய்ய செய்தீர்
சத்திய பரனே நித்தியரே
நித்தமும் பாடுவேன் உம் புகழை

1418.சந்தோஷம் சந்தோஷம்

சந்தோஷம் சந்தோஷம்
இயேசுவின் சமூகம் சந்தோஷம்
நான் ஆடுவேன் பாடுவேன்
இயேசுவின் சமூகம் சந்தோஷம்

1. கடந்த நாளெல்லாம் நம்மைக் காத்தாரே
புதிய ஆண்டையும் நமக்காய் தந்தாரே
அவர் நாமம் வாழ்க அவர் நாமம் வாழ்க
அவரே இராஜா அவரே இராஜா

2. ஜெயத்தின் மேலே ஜெயத்தை தந்து
ஜெயமாக நம்மையும் கர்த்தர் காப்பாரே
அவர் நாமம் வாழ்க அவர் நாமம் வாழ்க
அவரே இராஜா அவரே இராஜா

3. ஜீவிய நாளெல்லாம் நம்மை நடத்தி
நமக்காய் யாவையும் கர்த்தர் செய்வாரே
அவர் நாமம் வாழ்க அவர் நாமம் வாழ்க
அவரே இராஜா அவரே இராஜா

1419.ஆராதனை உமக்கு

ஆராதனை உமக்கு ஆராதனை
பரிசுத்த அலங்கார ஆராதனை

1. ஆராதனை ஆராதனை
சாரோனின் ரோஜாவே
பள்ளத்தாக்கின் லீலியே
உமக்கு ஆராதனை

2. ஆராதனை ஆராதனை
மகிமையின் ராஜனே
மாறாத நேசரே
உமக்கு ஆராதனை

3. ஆராதனை ஆராதனை
ஆட்கொண்ட தெய்வமே
அபிஷேக நாதரே
உமக்கு ஆராதனை

1420.மகிமை மகிமை என்

மகிமை மகிமை என் இயேசுவே
என் வாழ்வெல்லாம் உம்மை நான் பாடுவேன்
என்னாலே ஒன்றும் முடியாதைய்யா
உம்மாலே எல்லாம் கூடுமைய்யா
உம்மாலே எல்லாம் கூடுமைய்யா

1. கஷ்டங்கள் நஷ்டங்கள்
ஆறுதல் தேறுதல் தந்தீரய்யா
ஆறுதல் தேறுதல் தந்தீரய்யா

2. வியாதிகள் வந்த வேளைகளில்
உம் காயங்களால் என்னை சுகமாக்கினீர்
உம் காயங்களால் என்னை சுகமாக்கினீர்

3. கிருபைகட்காய் என்றும் நன்றியைய்யா
உமக்காய் நான் என்றும் வாழ்ந்திடுவேன்
உமக்காய் நான் என்றும் வாழ்ந்திடுவேன்

1421.தாழ்மையுள்ளவனை தேவ

தாழ்மையுள்ளவனை தேவ கரம் உயர்த்தும்
தாழ்மையுள்ளவனை தேவ கரம் உயர்த்தும்
உள்ளம் உடைந்தவனை உன்னத கரம் அணைக்கும்
மங்கி எரிகின்ற தீபம் அது அணைந்து போவதே இல்லை
நெரிந்து போன நாணல் முறிந்து விழுவதில்லை

சோர்ந்து போகாதே - உலகில்
அழிந்து மாயாதே
ஜீவ கிரீடம் உனக்கு உண்டு
இயேசு நாமத்தில் ஜெயமே உண்டு

1. தேவன் அன்புள்ளவர் மன உருக்கத்தால் நிறைந்தவர்
அவர் நொறுங்குண்டு பணிந்தவனை கனிவுடன்
நோக்கிடுவார் சோதனை சகிக்கும் மனிதன்
அவன்பாக்ய சீரைப்பெறுவான் விசுவாசமுள்ள
மனிதன் அவன் ஜீவக் கிரீடம் பெறுவான்

2. பரிசுத்த தேவன் இயேசு உன் பாவத்தை
வெறுத்திடுவார் பாவமான நம்மை பரிசுத்தமாக்கிடுவார்
உளையான சேற்றிலிருந்து நம்மை
தூக்கி எடுக்கும் தேவன் கன்மலை
மேலே நிறுத்தி அடிகளை திடமாக்குவார்

3. சத்துருவின் ஆயுதம் அது வாய்க்காதே போகும்
எதிராய் எழும்பும் நாவும் கட்டப்பட்டுப் போகும்
ஜெபத்தை தள்ளாத தேவன்
தம் முகத்தை மறைப்பதேயில்லை அபிஷேகம்
அளிக்கும் தேவன் க்ஷேமம் தந்திடுவார்

4. செட்டையின் மறைவிலே நாமும் மறைந்திருப்போம்
அக்கினி மகிமையால் தினமும் நிறைந்திருப்போம்
அந்தகார கிரியைகளை அழித்திடுவோம்
ஆவியிலே நாளுக்கு நாள் வளர்ந்திடுவோம்

1422.மாம்சமான யாவர்

மாம்சமான யாவர் மேலும் இறங்குகின்ற ஆவியே
வாஞ்சையுள்ள எங்கள் மேலே ஊற்றப்பட வேண்டுமே
வாலிபரும் ஊழியரும் நிரப்பப்பட வேண்டுமே
வானத்திலும் பூமியிலும் அற்புதங்கள் வேண்டுமே

ஊற்றப்பட வேண்டுமே நிரப்பப்பட வேண்டுமே
பரிசுத்த ஆவியிலே பெலன் பெற வேண்டுமே

1. களங்களோ தானியத்தால் நிரம்புகின்றது
ஆலைகளில் திராட்சை ரசம் ஓடுகின்றது
சபைகளில் அபிஷேகம் பெருகுகின்றது
பின்மாரி மழையோ பொழிகின்றது

2. வல்லமையும் வரங்களும் இறங்குகின்றது
வானத்தின் பலகனிகள் திறக்கின்றது
ஆண்டவரின் வார்த்தைகளோ தொனிக்கின்றது
ஆவியின் கண்கள் கிடைக்கின்றது

3. தூதர்களை காற்றுகளாய் அனுப்புகின்றார்
ஊழியரை அக்கினியாய் மாற்றுகின்றார்
ஜீவனுள்ள மக்களை அனுப்புகின்றார்
சிறு கூட்டத்தை ஆயிரமாய் ஆக்குகின்றார்

4. எழுப்புதல் அக்கினி பெருகுகின்றது
எல்லைகள் உலகெங்கும் கூடுகின்றது
சாத்தானின் கோட்டைகள் அழிகின்றது
சுவிசேஷ செய்தியோ கேட்கின்றது

1423.தேவ மகிமை எங்கும்

தேவ மகிமை எங்கும் நிரப்பிடுதே
தேவ ஜனமே நாம் ஆராதிப்போம்
தூதர்கள் கூட்டத்தால் பூமி அதிரும் - நம்
துதிகளின் சத்தத்தால் வானம் திறக்கும்

மாமகிமையின் ஆராதனை - பெரு
மகிழ்ச்சியின் ஆராதனை
உயர்த்துகின்றோம் புகழுகின்றோம்
பரவச மடைகின்றோம்

1. பூமியின் குடிகளே கெம்பீரமாய்ப் பாடுங்கள்
ஆனந்த சத்தத்தோடே ஆராதனை செய்யுங்கள்
கர்த்தர் நல்லவர் மகா கிருபை உள்ளவர்
தலைமுறை தலைமுறை உண்மையுள்ளவர் - மாமகிமை

2. ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி ஸ்தோத்தரி
உள்ளத்தாலே பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி
கர்த்தர் உனக்கு செய்த நன்மைகளையே
மறவாதே என்றென்றும் மறவாதே - மாமகிமை

3. மகிமையின் ஆராதனை மகிழ்ச்சி மகிழ்ச்சி
மகத்துவ தேவனுக்கே புகழ்ச்சி புகழ்ச்சி
பரிசுத்த ஆவியில் ஆராதிக்கின்றோம்
பரலோக மகிமையால் நிரம்புகின்றோம் - மாமகிமை

1424.உம்மில் நான் வாழ்கிறேன்

உம்மில் நான் வாழ்கிறேன்
உமக்குள்ளே வளர்கிறேன்

1. ஜீவத் தண்ணீராம் உமக்குள்ளே
வேர் கொண்டு வளரும் மரம் நானே
படர்ந்திடுவேன் நிழல் தருவேன்
பறவைகள் தங்கும் வீடாவேன்

2. அடித்தளம் இரட்சகர் இயேசுவின் மேல்
அமைந்து உயரும் கட்டடம் நான்
பெருங்காற்று அசைப்பதில்லை
பெருமழையோ பிரிப்பதில்லை

3. இயேசுவே எனது தலையானீர்
நானோ உமது உடலானேன்
உம் நினைவு என் உணவு
உம் விருப்பம் என் ஏக்கம்

4. செடியான உம்மோடு இணைந்துவிட்டேன்
கொடியாய் படர்ந்து கனி தருவேன்
இலைகளெல்லாம் மருந்தாகும்
கனிகளெல்லாம் விருந்தாகும்

5. உமது வார்த்தைகள் எனக்குள்ளே
உந்தன் ஆவி என்னோடே
மீட்பளிக்கும் நறுமணம் நான்
கேட்பதெல்லாம் பெற்றுக் கொள்வேன்

F-Maj/Slow Rock/T-130

1425.ஆராதனைக்குரியவரே அபிஷேக

ஆராதனைக்குரியவரே
அபிஷேக நாதரே
அச்சாரமானவரே

1. அல்லேலூயா பாட்டுப் பாடுவேன்
ஆனந்தமாய் துதித்துப் பாடுவேன் (2)

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

2. தாவீதைப் போல் நடனமாடுவேன்
கோலியாத்தை முறியடிப்பேன் (2)

3. பவுலைப் போலப் பாட்டுப் பாடுவேன்
சிறையிருப்பை மாற்றிடுவேன் (2)

4. சாத்தானை ஜெயித்திடுவேன்
சாட்சியாய் வாழ்ந்திடுவேன்

1426.எம்மை ஜீவ பலியாகத்

எம்மை ஜீவ பலியாகத் தந்தோம் - ஏசைய்யா
எமதுள்ளம் திறந்தளித்தோமே - என்றும்

1. பலிபீட கொம்பினில் இணைத்தீரல்லோ
பலவீனர் பெலம் கொண்டு எழும்பிடுவோமே
பிரகாசித்திட தயை பெற்றிட
பரன் பாதம் தாழ்த்தினோம் இரங்கிடுமே - தேவா

2. குயவனின் கைகளில் களிமண்ணைப் போல்
குறை நீக்கி வனைந்தெம்மை உருவாக்குவீரே
உமது சித்தம் எமது பாக்யம்
உம்மை நம்பித் தந்தோமே கிருபை கூருமெ - தேவா

3. எமதாவி ஆத்துமா சரீரம் எல்லாம்
எமக்கல்ல உமக்கென்றும் உரித்தாக்கினீரே
பிழை தீருமே பரிசுத்தரே
அழைத்தவர் நடத்துவீர் கடைசி வரை - தேவா

4. விசுவாச சோதனை புடமிடவே
விசுவாசம் பெருகிட பரிந்துரைத்தீரே
சுகம் தந்தீரே ஜெயமீந்தீரே
இகத்தினில் நீரே எம் பரிகாரியே - தேவா

5. பரிசுத்த பூரண மகிமையுடன்
பரமனின் திருசாயல் அடைந்திடுவோமே
தரிசனமே அளித்திடுமே
தமதன்பின் ஆவியைப் பொழிந்திடுமே - தேவா

6. ஜெயங் கொண்ட தாசர்கள் பறந்திடவே
ஜொலித்திடும் மணவாளன் வருகையின் நாளே
ஜெபத்துடனே விழிப்புடனே
ஜெகத்தினில் காத்தென்றும் தவிக்கின்றோமே - தேவா

E-Maj/Beat Ballad/T-95

1427.பாதம் ஒன்றே வேண்டும

பாதம் ஒன்றே வேண்டும்- இந்தப்
பாரினில் எனக்கு மற்றேதும் வேண்டாம் - உம்

1. நாதனே துங்க மெய்த் தேவனே பொங்கு நற்
காதலுடன் துய்ய தூதர் தொழுஞ் செய்யும் - உன்

2. சீறும் புயலினால் வாரிதி பொங்கிட
பாரில் நடந்தாற் போல் - நீர் மேல் நடந்த

3. வீசும் கமழ் கொண்ட வாசனைத் தைலத்தை
ஆசையுடன் மரிப் பூசிப் பணிந்த - பொற்

4. போக்கிட மற்ற எம் ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரந் தூக்கி நடந்த - பொற்

5. நானிலத்தோர் உயர்வான் நிலத்தேற - வல்
ஆணித் துளைத்திடத் தானே கொடுத்த - உன்

6. பாதம் அடைந்தவர்க் காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு நாதனே என்றும் - உன்

1428.அன்பரென் நேசரே

1. அன்பரென் நேசரே உம்மண்டையில்
இன்பமாக உந்தன் பாதையோட
நீரே வழியும் சத்தியமும் ஜீவனுமே

2. துன்பப் பெருக்கிலே சோர்ந்திடேனே
அன்பரறியாமல் வந்திடாதே
கண்மணி போல் நீர் காத்திடுவீர் கனிவுடன்

3. சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடினும்
வியாகுலம் என்னை விரட்டிடினும்
ஆ! நேசரே உம் இன்ப சத்தம் ஈந்திடுவீர்

4. ஈனச் சிலுவையில் ஏறிட்டீரோ
எந்தனுக்காய் கஷ்டப் பட்டிட்டீரோ
துன்ப மூலமாய் எய்திடுவேன் இன்ப கானான்

5. சொந்த ஜீவனை நீர் என்னிலீந்து
அன்பிலணைத்தீரே வல்லமையாய்
எந்தன் ஜீவனை மற்றோருக்காய் ஈந்திடவே

6. மாயையான இந்த லோகமதில்
மாய்ந்தழியும் இந்த மாந்தரன்பு
நேற்றும் இன்றென்றும் மாறிடீரே என் நேசரே

7. வஞ்சனையான இப்பார்த்தலமே
வஞ்சிக்குமே மிகத் தந்திரமாய்
வாஞ்சித்திடேனே மோசமான இப்பார்த்தலத்தை

1429.தேவாட்டின் திரு இரத்த

1. தேவாட்டின் திரு இரத்தத்தால்
நான் சுத்தமாயினேன்
அவரின் சுத்த இரத்தத்தால்
நான் ஜெயம் பாடுவேன்
மகிமை இரட்சகா துதி உமக்கென்றும்
சேற்றினின் றென்னை நீர் மீட்டெடுத்ததினால்
துதிப்பேன் உம்மை நான் ஆயுள் முழுவதும்
நன்றியோடடி பணிந்தே

2. சந்தோஷித் தும்மைப் பாடுவேன்
சீயோன் யாத்திரையில்
பந்தயப் பொருள் பெற்றிட
நான் முந்தி ஏகிறேன்
கிடைக்கும் நிச்சயம் கிரீடமெனக்கு
சத்துருக் களதைக் கொண்டு போவதில்லை
கர்த்தர் கையினின்று அன்று நான் பெறுவேன்
தூதர் கூட்டத்தின் மத்தியில்

3. என் பாக்கியம் நினைக்கையில்
என் உள்ளம் துள்ளுதே
பூலோக சுகம் தள்ளினேன்
மெய் பாக்கியம் கண்டு
நித்திய நகரில் சேர்ந்துநான் பாடுவேன்
ராஜன் முகங் கண்டு என்றும் சந்தோஷிப்பேன்
இரத்தத்தின் பலனால் வாழுவேன் சொர்க்கத்தில்
கோடி கோடி யுகங்களாக

4. மனோகரமாம் சீயோனில் நான் வேகம் சேருவேன்
கிலேசம் முற்றும் நீங்கிப் போம்
அவ்விடம் ஏசுவே
நித்திய சந்தோஷம் பெற்றிடுவேனங்கே
சத்துரு வந்ததைக் கொண்டு போவதில்லை
ஆனந்தம் கூடுமே கீதங்கள் பாடுவேன்
ராஜன் இயேசுவின் சமூகம்

1430.அன்பே பிரதானம் சகோதர

அன்பே பிரதானம் - சகோதர
அன்பே பிரதானம்

1. பண்புறு ஞானம் பரம நம்பிக்கை
இன்ப விசுவாசம் - இவைகளிலெல்லாம் - அன்பே

2. பலபல பாஷை படித்தறிந்தாலும்
கலகல வென்னும் கைம்மணியாமே - அன்பே

3. என் பொருள் யாவும் - ஈந்தளித்தாலும்
அன்பி லையானால் அதிற் பயனில்லை - அன்பே

4. துணிவுடனுடலைச் - சுடக் கொடுத்தாலும்
பணிய அன்பில்லால் - பயனிதிலில்லை - அன்பே

5. சாந்தமும் தயவும் - சகல நற்குணமும்
போந்த சத்தியமும் - பொறுமையுமுள்ள - அன்பே

6. புகழிறு மாப்பு - பொழிவு பொறாமை
பகை அநியாயம் - பாவமுஞ் செய்யா - அன்பே

7. சினமடையாது - தீங்கு நினையாது
தினமழியாது தீமை செய்யாது - அன்பே

8. சகலமும் தாங்கும் - சகலமும் நம்பும்
மிகைபட வென்றும் - மேன்மை பெற்றோங்கும்

1431.சபையோரே எல்லோரும

சபையோரே எல்லோரும் கர்த்தரைத் துதியுங்கள்
ஜனங்களே எல்லோரும் அவரைப் போற்றுங்கள்
அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது
அவரது இரக்கம் (இ) என்றும் உள்ளது

1. நம் தேவன் உயர்ந்த செல்வந்தர் அன்றோ
தேவையான அனைத்தையும் மிகுதியாய் தருவார்
அநேக ஜனங்களுக்கு கொடுக்கச் செய்திடுவார்
கடன் வாங்காமல் வாழச் செய்திடுவார்

2. கர்த்தர் குரல் கேட்கும் ஆடுகள் நாம்
முடிவில்லா வாழ்வு நமக்குத் தந்திடுவார்
ஒருவனும் பறித்துக் கொள்ள முடியாதென்றார்
ஒரு நாளும் அழிந்து போக விட மாட்டார்

3. நம் கர்த்தரோ நமக்கெல்லாம் உறைவிடம் ஆனார்
இன்னல்கள் நடுவிலே மறைவிடம் ஆனார்
விடுதலை கீதங்கள் பாட வைக்கின்றார்
வெற்றிக் கொடி அசைத்து ஆட வைக்கின்றார்

4. சொந்த மகனென்றும் பார்க்காமலே
நாம் வாழ (இயேசுவை) நமக்குத் தந்தாரே
அவரோடு கூட மற்ற எல்லா நன்மைகளும்
அருள்வார் என்பதும் நிச்சயம் தானே

தொடர்

1431.சபையோரே எல்லோரும்

தொடர்

5. தேவனாம் கர்த்தருக்கு ஊழியம் செய்தால்
உணவையும் தண்ணீரையும் மிகுதியாய் தருவார்
எல்லா நோய்களையும் அகற்றிடுவார்
குழந்தை பாக்கியமும் கொடுத்திடுவார்

6. கிறிஸ்துவின் வார்த்தைகள் நமக்குள் இருந்தால்
விரும்பிக் கேட்பதெல்லாம் கிடைத்திடுமே
மிகுந்த கனி தந்து சீடர்களாய் வாழ்வோம்
அதுவே தகப்பனுக்கு புகழ்ச்சி உண்டாக்கும்

7. துன்பத்தின் நடுவே நாம் நடந்தாலும்
நடக்கும் போதெல்லாம்
வலக்கரம் தாங்கி வாழ வைக்கின்றார்
வாக்களித்த அனைத்தையும் செய்து முடிப்பார்
ஏக்கமெல்லாம் எப்படியும் நிறைவேற்றுவார்

1432.மலை மேல் ஏறுவோம்

மலை மேல் ஏறுவோம் மரங்களை வெட்டுவோம்
ஆலயம் கட்டுவோம் அவர் பணி செய்திடுவோம்

நாடெங்கும் சென்றிடுவோம்
நற்செய்தி சொல்லிடுவோம்
சபைகளை நிரப்பிடுவோம்
சாட்சியாய் வாழ்ந்திவோம்

1. தேவன் வீடு பாழாய்க் கிடக்குதே
நாமோ நமக்காய் வாழ்வது நியாயமா

2. திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுப்பதேன்
வருகின்ற பணமெல்லாம் வீணாய்ப் போவதேன்

3. மனந்தளராமல் பயிரைத் தொடருங்கள்
படைத்தவர் நம்மோடு பயப்பட வேண்டாம்

4. தேவன் தந்த ஆரம்ப ஊழியத்தை
அற்பமாய் எண்ணாதே அசட்டை பண்ணாதே

5. சாப்பிட்டும் திருப்தியில்லை குடித்தும் நிறைவில்லை
ஆடை அணிகின்றோம் குளிரோ போகவில்லை

1433.ஈசாயின் அடிமரமே

1) ஈசாயின் அடிமரமே
நேசா நீர் அதன் கிளையே
ஏசாயா உரைத்திடும் மெய்ப்பொருளே
ஏதென்று அறிந்திடுவோம்

திகழும் ஜோதி தவழும் காட்சி
புகழ் நற்செய்தியே மகிழ்ச்சி
ஏக புதல்வன் தேவகுமாரன்
ஏசு கிறிஸ்திவரே

2) யூதாவின் பால சிங்கம்
நாதா உம் நாம மோங்கும்
யாக்கோபில் உதிக்கும் ஓர் நட்சத்திரம்
யார் என்று விளம்பிடுவோம்

3) தாவீதின் ஊர் தனிலே
தாயார் மரி மகனே
வான பரன் பிறந்தார் அதனை
வாரும் சென்றுரைத்திடுவோம்

4) வானோர் பரா பரனே
ஏனோ வந்தார் புவியே
பாவியின் அடைக்கலமாய் உதித்தார்
பாரும் நாம் வணங்கிடுவோம்

5) ஆலோசனை கர்த்தரே
அதிசயமானவரே
கர்த்தத்துவம் அவர் தோளிலுண்டே
கண்டே இன்றுணர்ந்திடுவோம்

6) செங்கோலும் யூதாவிலே
மங்கி மறைந்திடாதே
சமாதான கர்த்தர் வருமளவும்
சேர்ந்தென்றும் முழங்கிடுவோம்

1434.இயேசுவின் அன்பு

இயேசுவின் அன்பு அற்புதமே - (3)
இயேசுவின் அன்பு ஆச்சரியமே - (3)

1) ஆண்டுகள் பலவாய் ஆதரித்தார்
வேண்டும் பல நன்மைகள் புரிந்தார்
மீண்டும் இந்நாளில் நல் ஆசீர்பெறவே
வேண்டிடுவோம் அவர் பாதம் வீழ்ந்து

2) பஞ்சம் பசியில் பாதுகாத்தார்
மிஞ்சும் நோய்கள் பல தவிர்த்தார்
நஞ்சுகவலையில் மூழ்காமல்
நெஞ்சம் தளரா திடனளித்தார்

3) வஞ்சகன் வெஞ்சமர் புரிந்திடினும்
அஞ்சாமல் வென்றிட அருகில் நின்றார்
சஞ்சலங்கள் நெஞ்சில் நின்று வருத்தாமல்
தஞ்சம் தந்தே எமைத் தாங்கினாரே

4) பாதைகள் நன்மையாய் அமைந்திடவே
நாதனே நாள்தோறும் அருள்புரிவீர்
வேகமாய் வாருமே ஆவலைத் தீருமே
ஏங்கிடும் மாந்தரை சேர்த்திடுமே

1435.உம்மை ஆராதிக்கின்றேன்

உம்மை ஆராதிக்கின்றேன்
உம்மை ஆராதிக்கின்றேன்
உணர்ந்து ஆராதிக்கின்றேன்
உள்ளம் மகிழ்ந்து ஆராதிக்கின்றேன்

உள்ளங்கையில் என்னை வரைந்தவர்
உள்ளமெல்லாம் நன்கு அறிந்தவர்
என்னை என்றும் நடத்தும்
அன்பு இயேசையா

1) தண்ணீர் நதி என்மேல் புரண்டாலும்
மூழ்கி நான் போவதில்லை
காரிருளில் நான் நடந்தாலும்
பாதை மாறவில்லை
கர்த்தாவே உந்தன் சத்துவமே
நித்தமும் தாங்கிட வாருமே (2)

2) ஆதியும் அந்தமுமானவரே
அனுகூலமானவரே
ஆளகை செய்திடும் எந்தெய்வமே
உம்மை ஆராதனை செய்கின்றேன்
அந்தி சந்தி மத்தியானத்திலும்
தியானம் பண்ணி நான் முறையிடுவேன்
என் சத்தம் கேட்டு செவிகொடுத்து
என்றென்றும் பதில் தருவீர் (2)

3) காலத்தால் மாறாத உம் வாக்குகள்
என் நெஞ்சில் ஆறுதலே
கார்மேகம் போன்ற சோதனையில்
என்னை காக்கும் ஆயதமே
கால்களுக்கு அது தீபமாமே
பாதைக்கு அதுவே வெளிச்சம் அன்றோ
எப்போதும் நடப்பேன் வெளிச்சத்திலே
உம் பாதம் சேருவேன் இயேசையா (2)

1436.என் பாரங்கள் தாங்கிடுவார்

என் பாரங்கள் தாங்கிடுவார்
நாதா நீரல்லால் யாருமில்லை
என் ஜீவியம் உம் கையிலே
உம் பாண்டமாய் என்னை மாற்றிடுமே
நாதா நீரல்லால் யாருமில்லை

1) காலமும் கடந்திடுதே
ஜீவியம் முடிவினை நெருங்கிடுதே
நாதா உம்மையே பின் செல்லவே (2)
கிருபை வரம் தாருமே

2) சோர்ந்திடும் வேளையிலே
சார்ந்து நான் உந்தனில் நின்றிடவே
நாதா உந்தனின் பெலனை தந்து (2)
அனுதினம் நடத்திடுமே

3) மாய உலகினிலே
ஓடி அலைந்து நான் தவிக்கையிலே
நாதா உந்தன் கிருபை தந்து (2)
விலகாமல் காத்திடுமே

1437.என்றும் மாறாதவர்

என்றும் மாறாதவர் - நீர்
என்னை மறவாதவர்
என்றும் நடத்திடுவீர்
நீதியின் பாதையில்

1) மலைகள் விலகினாலும்
பர்வதம் நிலைபெயர்ந்தாலும்
மாறாதது என்றுமே உம் கிருபை
மண்ணில் என் ஆனந்தமே

2) உந்தன் மறைவினிலே
தங்கி நானிருப்பேன்
உந்தன் சிறகுகளே என் தஞ்சம்
நீரே என் அடைக்கலமே

3) உம்மில் நிலைத்திருக்கும் கொடியாய்
எங்கும் படர்ந்திடுவேன்
சுத்தம் செய்திடுவீர் நீர் என்னை
நித்தம் நான் கனி கொடுப்பேன்

1438.கர்த்தாவே நீர் என்னை

கர்த்தாவே நீர் என்னைத் தேற்றும் தேவன்
நான் என்றும் உம்மையே பற்றிக் கொள்வேன் (2)
சோகத்தால் என் உள்ளம் சோரும்போதும்
உம் ஆறுதல் என்னை தேற்றும்

1) என் கால்கள் சறுக்கும் முன்னே
நீர் என்னை தாங்குகின்றீர்
மானானது நீரோடையை
வாஞ்சிப்பதுபோல் உம்மை வாஞ்சிக்கின்றேன்

2) உம் உள்ளம் உடையப் பண்ணும்
பாவங்கள் என்னில் உண்டோ
புடமிட்டென்னை பொன்னாக்கிடும்
பரிசுத்த வழியிலே நடத்திடும்

3) மானிடரின் வேஷங்களை
மாற்றும் உம் நேசந்தனை
உணரும் நல்ல உள்ளம் தாரும்
உமதாவியால் என்னை நிரப்பிடும்

1439.எந்தன் ஆத்துமா உம்மை

எந்தன் ஆத்துமா உம்மை நாடுது
எந்தன் ஜீவனும் உம்மைத் தேடுது
எந்தன் நினைவுகள் உம்மைப் பாடுது
எந்தன் இதயமும் வாஞ்சித்துக் கதறுது

1) நீரே வெளிச்சமும் இரட்சிப்புமானவர்
எந்தன் ஜீவனின் பெலனுமானவர்
யாருக்கு அஞ்சுவேன் யாருக்கும் பயப்படேன்
அடைக்கலம் நீரல்லவோ
யுத்தம் ஒன்று எழும்பினாலும்
பாளையம் ஒன்று எதிர்கொண்டாலும்
பகைவர் என்னை நெருக்கினாலும்
எதிர்த்தவர் இடறுவார் - என்னை

2) உம்மிடத்தில் ஒன்றை கேட்டேன்
உன்னத மகிமை வேண்டி நின்றேன்
உமது வசனம் தேடி வந்தேன்
ஆலயம் நாடுவேன்
தீங்கு நாளில் கூடாரமறைவில்
என்னை மறைத்து பாதுகாத்து
கன்மலை மேலே உயர்த்தி என்னை
என்றென்றும் காத்திடுவீர் - என்னை

3) தகப்பனும் தாயும் கைவிட்டாலும்
நீர் என்னை என்றும் சேர்த்துக் கொள்வீர்
உமது வழியில் நித்தம் நடத்தி
பாதை காட்டிடுவீர்
கர்த்தருக்கே நீயும் காத்திரு
நம்பிக்கையுடனே திடமனதுடனே

E-Maj/Waltz/T-140

1440.நான் நானல்ல நீராக

நான் நானல்ல நீராக வேண்டும் (2)
நாதா உம் பாதம் நாள்தோறுமே
நான் தங்கும் இடமாக வேண்டும்

1) ஆயிரம் வேலைகள் எனக்கிருந்தாலும்
ஆண்டவரே உம்மை நான் தேட வேண்டும்
அனுதினமே உந்தன் பாதம்
அமர்ந்திட நான் என்றும் உம்மோடு வேண்டும்

2) பகலவனை நான் காணுமுன்னே
பரமனே உம்மை நான் காண வேண்டும்
பரிசுத்தரே உந்தன் வேதம்
பகலிரவாய் என் தியானம் ஆகிட வேண்டும்

3) தூதரின் பாஷையை நான் பேசினாலும்
அன்பெனக்கில்லையேல் பயனொன்றும் இல்லை
என்னைப் போல் பிறரை நான் நேசிக்க
உமதன்பால் என் இதயம் நிரம்பிட வேண்டும்

E-Min/16 Beat/T-100

1441.உம்மை நேசிக்கிறேன்

உம்மை நேசிக்கிறேன் இயேசுவே
என் இரட்சகா என் தேவா (2)
உம்மை ஆராதிப்பேன் போற்றுவேன் தேவா (3)
நீரே என்றும் என் வாழ்வினில் தேவன்

1) பெலவீனம் வியாதி எனை சூழும்போது
பரிகாரி நீர் போதுமே
பரிசுத்தர் நீரே பாரில் வந்ததால்
பாவங்கள் பறந்தோடுதே
பரலோகில் நான் சேர வழியானீரே

2) நிழல் தேடி அலைந்தேன் நிழலானீர் தேவா
நிதம் உம்மை நான் பாடுவேன்
நிலையில்லா வாழ்வில் நீர்தானே என்னை
நினைவில் கொள்ளும் நாதனே
நீரன்றி யாருண்டு நான் பாடி மகிழ

C-Min/Disco/T-120

1442.ஆத்துமாவே நீ துதித்தி

ஆத்துமாவே நீ துதித்திடுவாய்
நம் தேவனை என்றுமாய்
பாவங்களை மன்னித்தாரே
உன் நோய்களை நீக்கினாரே

1) விண்ணில் உன்னை சேர்த்திடவே
மண்ணில் உதித்தார் - கண்ணீர்
யாவும் போக்கிடவே செந்நீர் வடித்தார்
அல்லேலூயா அல்லேலூயா
பாலைவனமாம் பாரினில் உன்னை
சோலைவனமாய் மாற்றினார் (2)

2) தாகமான நேரம் ஜீவ தண்ணீர்
கொடுத்தார் சோகமான நேரம் - அவர்
தோளில் சுமந்தார்
அல்லேலூயா அல்லேலூயா
சுகவீன நேரம் வைத்தியர் ஆனார்
என் வாழ்வில் அவர் போதுமே (2)

3) நித்தியத்தின் பாதையிலே நித்தம்
நடத்தும் நீதிபரர் இயேசுவையே
நித்தம் துதிப்பாய்
அல்லேலூயா அல்லேலூயா
வழுவாமலே காத்திடுவார்
வாழ்நாள் எல்லாம் துதிப்பேன்

1443.மகிழ்வேன் மகிழ்வேன்

மகிழ்வேன் மகிழ்வேன்
இரட்சிப்பில் மகிழ்வேன்
கர்த்தரின் கிருபையை
என்றென்றும் பாடுவேன்

1) பத்துநரம்பு வீணையோடும்
பக்தியுடன் கைத்தாளத்தோடும்
தம்புரு யாழ் குழலோடும்
தற்பரனில் மகிழ்வேன் - ஆ.... ஆ...

2) கஷ்டங்கள் கவலைகள் சோர்வகளில்
கண்மணிபோல் என்னைக் காத்தவரே
கரங்களிலே வரைந்தவரை
காலமெல்லாம் துதிப்பேன் - ஆ... ஆ...

3) தெரிந்தெடுத்தீர் உம் சேவை செய்ய
பிரித்தெடுத்தீர் பரிசுத்தராக்க
பறந்திடுவேன் உம் வருகையிலே
பரமனின் பக்தரோடே - ஆ... ஆ...

1444.உலகத்தை வென்று

உலகத்தை வென்று இயேசு உயிர்த்தார் ஆர்ப்பரி
காலத்தை வென்று வெற்றி சிறந்தார் ஆர்ப்பரி
அலகினை வென்று அகிலம் சிறந்தார் ஆர்ப்பரி
இயேசுவே தேவன் என்று முழங்கி ஆர்ப்பரி

யெகோவா நிசி அல்லேலூயா
யெகோவா சபயத் அல்லேலூயா
அல்லேலூயா ஓசன்னா (2)

1) வழி என்று சொன்னவர் வழியாக வந்தவர்
இயேசு ஒருவரே
அற்புதமாக அவனியில் வந்தவர் இயேசு ஒருவரே
பாவமே இல்லா பரிசுத்தரானவர் இயேசு ஒருவரே
அதிசய அற்புத நன்மைகள் செய்தவர்
இயேசு ஒருவரே

2) தனிப்புகழ் பெற்றவர் தனித்தன்மை வாய்ந்தவர்
இயேசு ஒருவரே
அழிந்திடா உன்னத வார்த்தைகள் சொன்னவர்
இயேசு ஒருவரே
நீடித்த பெயரும் நிலையாக பெற்றவர் இயேசு ஒருவரே
ஆத்மீக தாகம் தீர்த்திட வல்லவர் இயேசு ஒருவரே

3) வசனங்கள் நிறைவேற சரித்திரம் படைத்தவர்
இயேசு ஒருவரே
மரணத்தை வென்று ஜெயமாக நின்றவர்
இயேசு ஒருவரே
சீக்கிரம் மீண்டும் வருவேன் என்றவர் இயேசு ஒருவரே
இதயங்கள் மாற்றி புதுவாழ்வு தருபவர் இயேசு ஒருவரே

F-Maj/6/8Rock/T-120

1445.சந்தோஷமே சந்தோஷமே

சந்தோஷமே சந்தோஷமே
என் இயேசு ராஜன் வந்தாலே சந்தோஷம் (2)

1) என் பாவங்களைப் போக்கினாரே சந்தோஷம்
என் சாபங்களை நீக்கினாரே சந்தோஷம் (2)
என் துக்கங்களை மாற்றினார்
வியாதிகளை நீக்கினார் புதுவாழ்வு
எனக்குத் தந்தார் சந்தோஷமே (2)

இயேசு வந்தாலே உள்ளத்தில் சந்தோஷம்
இயேசு வந்தாலே உள்ளத்தில் ஆனந்தம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் என்றும் ஆனந்தம்

2) புதுவாழ்வு தந்தாரே சந்தோஷம் - எனக்கு
புதுகிருபை தந்தாரே சந்தோஷம் (2)
நனமையினால் நிரப்பினார்
நலமுடனே நடத்தினார்
நாளெல்லாம் உதவிடுவார் சந்தோஷமே (2)

3) அபிஷேகம் தந்தாரே சந்தோஷம்
சாப நுகங்களை முறித்தாரே சந்தோஷம்
மகிமையினால் மூடினார்
மறுரூபமாக்கினார்
மன்னனாக வந்திடுவார் சந்தோஷமே (2)

1446. நான் உம்மில் சாய்ந்திடும்

நான் உம்மில் சாய்ந்திடும்போது
வரும் துன்பம் மறந்தேன்
இந்த உலகம் எதிரானதால்
உம் சிரசின் நிழலில் மறைந்தேன் (2)

1) பொன்னைப் போல புடமிடும் சோதனை
என்னை உருவாக்கும் தம் சித்தம்போல
குறைகள் எல்லாம் தகர்ந்திடும்போது
கிருபை தந்து தாங்கிடுவார்

2) உற்றோர் பெற்றோர் தள்ளிடும்போது
உதவிடும் உம் பொற்கரத்தால்
உடைந்திடும் ஆறுதல் தந்து
உந்தன் சேவையில் நிற்க செய்தீர்

3) அவர் வரும்போது ஆனந்த கீதங்கள்
ஆடி மகிழ்ந்து சென்றிடுவேன்
திருக்கரத்தால் எந்தன் கண்ணீர் துடைத்திடுவார்
தூயருடன் நித்தியமாய் வாழ்வேன்

1447.தேவாவியே வரம் தாருமே

தேவாவியே வரம் தாருமே
தேவா உம் புது எண்ணெயால் (2)
அபிஷேகியும் அருள் நாதரே
அனலோடு நான் வாழவே (2) - உம்
திரும்ப உயிர்ப்பியுமே - இயேசுவே

1) உம்மை நான் மறந்தேன்
அபிஷேகம் இழந்தேன்
இனி நானும் எங்கே போவேன் ஐயா (2)

2) மண்ணான எனக்கு மகிமை நீர் கொடுத்தீர்
மறந்தே நான் போனேனையா - உம்மை (2)

3) நுகத்தினை முறித்து ஜனத்தினை மீட்டு
மந்தைக்குள் சேர்க்கணுமே
நல்ல அபிஷேகம் அருளுணுமே (2)

1448.வழியுண்டு, ஒரே ஒரு வழி

வழியுண்டு, ஒரே ஒரு வழியுண்டு
சத்தியமாம் ஜீவனாம், மீட்பராம்
இயேசு எந்தன் நண்பருண்டு
நேசருண்டு உனக்கொரு நேசருண்டு
கண்மணிபோலவே காக்கவும்,
மீட்கவும் இயேசு உண்டு

1) பாவம் போக்க வந்த நாமம் சாபம் நீக்க செய்த நாமம்
நோயை நீக்கும் நல்ல நாமம் பேயை விரட்டும் வல்ல
நாமம் - விண்ணோரும் மண்ணோரும் எந்நாளும் துதிபாடும்
உன்னத நாமம் உன்னத நாமம் வெற்றி தர வல்ல நாமம்
பாடச் செய்ய வந்த நாமம் செல்வம் தரும் நல்ல நாமம்
அற்புதங்கள் நல்கும் அதிசய நாமம் - அதிசய நாமம்

2) மீட்பு தர வந்த நாமம் சாவை வென்ற வல்ல நாமம்
நீதிமானை மாற்றும் நாமம் பரிசுத்தமாக்கும் நாமம்
விண்ணோரும் மண்ணோரும் எந்நாளும் துதிபாடும்
உன்னத நாமம் உன்னத நாமம் வரங்கள் அருளும் வல்ல
நாமம் - ஜெபம் செய்ய வல்ல நாமம்
துதிகள் பாட ஏற்ற நாமம் எல்லாம் செய்ய வல்ல நாமம்
வானோர் பூதலத்தோர் கீழானோர் கால் முடங்கும்
அதிசய நாமம் அதிசய நாமம்.

1449.அவர் அழைப்பை அனுச

அவர் அழைப்பை அனுசரிப்பேன் (3)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே
தொண்டு செய்வேன் என்றும் (4)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே (2)

1) காடானாலும் மேடானாலும் (3)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

2) நகரானாலும் கிராமமானாலும் (3)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

3) இலாபமானாலும் நஷ்டமானாலும் (3)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

4) மழையானாலும் வெயிலானாலும் (3)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

5) வாழ்வானாலும் சாவானாலும் (3)
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

1450.கலப்பையின் மேல் கைவை

கலப்பையின் மேல் கைவைத்திட்டேன்
திரும்பி பார்க்க மாட்டேன்
முன்வைத்த காலை பின் வைக்க மாட்டேன்
இயேசு முன் செல்கிறார் (2)
அல்லேலூயா.. அல்லேலூயா..(8)

1) எண்ணி முடியா நன்மைகளாலே என்னை நிரப்பினார்
சொல்லி முடியா அதிசயத்தாலே என்னை நடத்தினார்(2)
நான் என் சொல்வேன் (4)
இயேசு இயேசு இயேசு போதுமே (2) அல்லேலூயா

2) துன்பங்கள் துயரங்கள் வறுமைகள் வியாதிகள்
வந்தால் எனக்கென்ன
துங்கவன் இயேசு துணையாய் இருக்க
ஜெயித்து வாழ்ந்திடுவேன் (2)
நான் என் சொல்வேன் (4)
இயேசு இயேசு இயேசு போதுமே(2)அல்லேலூயா

3) சத்தியம் சொல்லி சாத்தானை வென்று
சபைகள் கட்டிடுவேன்
கிராமங்கள் தோறும் கிறிஸ்துவின்
தேவ சங்கங்கள் எழுப்பிடுவேன் (2)
நான் என் சொல்வேன் (4)
இயேசு இயேசு இயேசு போதுமே(2)அல்லேலூயா

4) இதுவரை என்னை நடத்தின தேவன்
இனியும் நடத்திடுவார்
எல்ஷடாய் தேவன் வலக்கரத்தாலே
எல்லாம் செய்திடுவார் (2)
நான் என் சொல்வேன் (4)
இயேசு இயேசு இயேசு போதுமே (2)அல்லேலூயா

F-Maj/6/8 Beat/T-103

1451. இனிமையான நேரம்

இனிமையான நேரம் இன்பமான நேரம்
உம் திருபாதம் அமர்வதே - இயேசய்யா (2)

1) பாதம் அமர்ந்தால் பயங்கள் நீங்கிடும்
வேதம் அறிந்தால் வேதனை மாறிடும்
உமது அன்பு பெரிதல்லவோ - இயேசய்யா (2)
உமது அன்பிலே அடிமை வாழ்ந்திட வேண்டும்

2) கவலை கண்ணீர்கள் களிப்பாய் மாறிடும்
கஷ்ட நஷ்டங்கள் கறைந்து ஓடிடும்
உமது உண்மை பெரிதல்லவோ - இயேசய்யா (2)
உமது உண்மையில்(லே)அடிமை வாழ்ந்திட வேண்டும்

3) பாவ சாபங்கள் ஓடி மறைந்திடும்
புதிய இதயமே துதித்துப் பாடிடு
உமது கிருபை பெரிதல்லவோ - இயேசய்யா (2)
உமது கிருபையில் அடிமை வாழ்ந்திட வேண்டும்

D-Min/Slow Ballad/T-90

1452.நீரேயல்லாமல் என

நீரேயல்லாமல் என் வாழ்வில் யாருண்டு
உம்மையல்லாமல் என் துணை யாருண்டு
உமக்காகவே நான் உயிர் வாழ்கிறேன் (2)

1) நேசிப்பார் யாருமில்லை - அன்பாய்
உதவிடுவார் ஒருவருமில்லை
கண்ணீர் சிந்தி கதறிடும் வேளை
ஆறுதல் அளிப்பார் இல்லை - நான் (2)

2) சோகங்கள் சூழும்நேரம் - கடும்
பாரங்கள் நெருக்கும்போது
பாரினில் என்னை தேற்றிட தேவா
உம்மைப் போல் யாருமில்லை - இந்த (2)

3) நிந்தைகள் நெருக்கங்களோ
வியாகுலங்கள் வருத்தங்களோ
கிறிஸ்துவின் அன்பை என்னிடமிருந்து
பிரித்திட முடியாதய்யா - இயேசு (2)

1453.உந்தன் சமூகம் எனக்கான

உந்தன் சமூகம் எனக்கானந்தமே
உந்தன் பாதத்தை என்றும் முத்தம் செய்வேன் (2)
நீரே போதும் (3) என் வாழ்விலே
உம்மையன்றி யாரும் இல்லை (2)

1) கண்ணீரின் வாழ்க்கையே என் வாழ்க்கை ஆனது (2)
எந்தன் கண்ணீரை துடைப்பது நீரன்றி யாருண்டு (2)

2) தனிமை நேரங்களில் துணையாய் வந்தீரே - என் (2)
எந்தன் வேதனை நேரத்தில் உம் வார்த்தையால் தேற்றினீர்

3) என் வாழ்க்கையில் யாருமில்லா அனாதையானேனே (2)
நானுண்டு உம் துணையே என்றீரே இயேசுவே (2)

1454.ஜெகமதில் உதித்த ஜெய

ஜெகமதில் உதித்த ஜெய ஜோதியே - நரர்
சேயர்கள் துதித்திடும் திருவடியே
பாரில் பரனாக நீரே பாவிகட்காய்ப் பலியானீர்
அன்பால் என்னை ஆட்கொண்டானே
அதிரூப சுந்தரனே

1. பாவயிருள் நீக்கிப் பாரினிலே - பரன்
பாவிகள் பாவம் போக்க பலியானீரோ
சாபத்தை முற்றும் தொலைத்திடவே
சக்தியாக உயிர்த்திட்டிரோ
ஆரூபா சொரூபா அற்புதனே
ஆனந்த பொற்பரனே

2. எந்தனின் நீதியெல்லாம் கந்தையல்லோ நீர்
எந்தனின் சிறப்பான தாரகமே
அன்பே ஆனந்தப் பேரொளியே
ஆதியந்தமில்லாப்பரனே
கதியே நிதியே கருணாகரா
காத்திடும் புகலிடமே

3. ஏழையென்னில் தாகம் கொண்டதாலே - எழில்
ஏகனே எனக்கு திவ்யாகாரமே
தாகமிஞ்சி வாடுறேனையா
தனியானேன் இத்தாரணியில்
காசினியில் நேசரைப் போல்
காணுவேனோ கல்வாரியின் காந்தரூபா

4. எப்போ உம்மைக் கண்டு
மகிழ்ந்திடுவேன் - அண்ணல்
இயேசுவே இன்பமான மணாளனே
கன்மலைவெடிப்பில் தங்குமென்
உத்தமியே என்றழைக்கும் சத்தம்
கேட்கும் கீதம் ஆ!
இன்பமே கூறிடீரோ அன்பரே

1455.அதிகாலை தினம் தேடியே

அதிகாலை தினம் தேடியே - உம்
முகத்தினில் விழித்திடுவேன்
புதுகிருபை அதை தேடியே - உம்
பாதத்தில் அமர்ந்திடுவேன்

ஆனந்தம் பேரின்பம் - என்
அன்பின் பாதத்திலே
ராஜா அல்லேலூயா - என்
தேவா அல்லேலூயா

1. கரங்களை விரித்து கர்த்தரை பார்த்து
காலையில் பணிந்திடுவேன்
கவலையை மறந்து மகிழ்வுடன் இருந்து
மகிமையை செலுத்திடுவேன்
பாதத்திலே முகம் பதித்து
முத்தங்கள் செய்திடுவேன்

ராஜா அல்லேலூயா - என்
தேவா அல்லேலூயா

2. கதிரவன் வரும் முன் கர்த்தரை தேட
கண்களும் விழித்திடுதே
உம்மனம் குளிர என் மனம் பாட
ஆயத்தமாகிடுதே
உம் வசனம் தியானித்திட
உள்ளம் காத்திடுதே

ராஜா அல்லேலூயா - என்
தேவா அல்லேலூயா

3. கண்ணிமை நேரம் உமை மறவாமல்
கருத்தாய் நினைத்திடவே
கனிவாய் இரங்கி கருணை ஈந்து
கரத்தால் அணைத்திடுமே
நாள் முழுதும் வல்லமையால்
நிதமும் நனைத்திடுமே

ராஜா அல்லேலூயா - என்
தேவா அல்லேலூயா

D-Mim/Disco/T-120

1456. ஆவியானவரே அலையாய்

ஆவியானவரே அலையாய் இறங்கிடுமே
எல்லா ஆவியின் வரங்களோடு
பலமாய் இங்கு இறங்கும் இன்று

1. வானங்கள் இன்று திறக்கட்டுமே
அபிஷேக மழையே பெய்யட்டுமே
உன்தை ஆவியை ஊற்றிடுமே
மறுரூபமாய் என்னை மாற்றிடுமே

2. பெந்தெகொஸ்தே நாளின் அனுவங்கள்
அப்படியே இன்று நடக்கட்டுமே
பலத்த காற்றின் முழுக்கம்போல் - ஒரு
வல்லமை இங்கு வீசட்டுமே

3. அக்கினி மயமான நாவுகள்
எங்கள் மேல் வந்து அமரட்டுமே
ஆவியின் வரங்கள் யாவையுமே
வெளிப்படுத்தணுமே செயல்படுத்தணுமே

4. கண்ணீர் கவலைகள் மறையணுமே
கட்டுகள் யாவும் உடையணுமே
அற்புதம் அதிசயம் நடக்கணுமே - நீர்
யார் என்று ஜனம் அறியணுமே

5. பெலத்தின் ஆவியால் நிரம்பணுமே
சாட்சிகளாய் எங்கும் வாழணுமே
எங்கள் சித்தம் மறையணுமே
தேவ சித்தம் நிறைவேறணுமே

1457. இயேசுவே என் நேசரே

இயேசுவே என் நேசரே - உந்தன்
அன்பை சொல்லி சொல்லி பாடுவேன்
மீட்பரே நெஞ்சின் நேசரே - உந்தன்
நேசம் என்னை கொள்ளை கொள்ளுதே
எங்கும் பரிசுத்தமே
எல்லையில்லா பெலமே
என்னில் வாழும் உண்மை தெய்வமே (2)

1. கர்த்தரே தங்குமிடம் எந்தன் தேகமானதே
கர்த்தரே செல்லுமிடம் எந்தன் நோக்கமானதே
வாழ்வெல்லாம் அவர் துதி சொல்லியே
நாளெல்லாம் அவர் புகழ்பாடியே
மகிழ்ந்து மகிழ்ந்து அவர் அன்பில் மகிழ்ந்து
புகழ்ந்து புகழ்ந்து அவர் அன்பில் புகழ்ந்து
ஸ்தோத்திரம் சாற்றியே துதிப்பேன்

2. இதயம் தங்கிவிட்ட இன்ப ஜீவ ஒளியே
உதயம் ஆகிவிட்ட உன்னதத்தின் ஆவியே
வெற்றியின் மேல் வெற்றி சூடுமே
வேந்தனின் வல்ல கரம் என்றுமே
மகிமை மகிமை இயேசு நாமம் மகிமை
இனிமை இனிமை அவர் நாமம் இனிமை
ஸ்தோத்திரம் உமக்கே ஸ்தோத்திரம்

1458. அல்லேலூயா (2)நம் இயேசு

அல்லேலூயா அல்லேலூயா
நம் இயேசுவுக்கு அல்லேலூயா
நம் பிதாவுக்கு அல்லேலூயா
ஆவியானவருக்கல்லேலூயா

1. தூய உள்ளம் துதிகளினாலே
தேவ ஆலயம் அல்லேலூயா (2)
துதி பிறந்திடுதே என் நாவினிலே
களி கூர்ந்திடுதே என் இருதயமே
பேரானந்தம் ஆனந்தம் - (2)

2. தோல்வியெல்லாம் துதிகளினாலே
ஜெயமானது அல்லேலூயா (2)
இனி பயமுமில்லை ஒரு கலக்கமில்லை
என் வாழ்வினிலே இனி தோல்வியில்லை
எந்த நேரமும் ஜெயம் ஜெயமே - (2)

3. இயேசுவின் நாமம் துதியாலே
மகிமையான அல்லேலூயா (2)
ஓ! துதி மகிமை அவர் ஒருவருக்கே
முழு இருதயமும் என் நேசருக்கே
பேர் புகமெல்லாம் இயேசுவுக்கே - (2)

1459. அல்லேலூயா (2)ஜீவனுள்ள

அல்லேலூயா அல்லேலூயா
ஜீவனுள்ள தேவன் நீரே
ஆராதிக்கின்றோம் ஆர்ப்பரிக்கின்றோம்
உயிரோடிருப்பவரை

1. மரணமே உன் கூர் எங்கே
பாதாளமே உன் ஜெயம் எங்கே
என்றே முழங்கி ஜெயித்தெழுந்தீர்
சாவை வென்றுவிட்டீர்

2. சாவாமையுள்ள தேவன் நீரே
சதாகாலமும் ஜீவிக்கின்றீரே
நீண்ட ஆயுள் உள்ளவரே
நிரந்தரமானவரே

3. முதலும் முடிவும் இல்லாதவரே
ஆதி அந்தம் எல்லாம் நீரே
அநாதி தேவனாய் இருப்பவரே
அழிவில்லாதவரே

4. கல்லுமல்ல மண்ணும் அல்ல
ஆவியான தேவன் நீரே
மகிமையின் ராஜா ஜீவிக்கின்றீர்
என்னோடு இருக்கின்றீர்

5. உயிர்த்தெழுதலும் ஜீவனும் நீரே
உமக்குள் மரிப்போர் உயிர்த்தெழுவாரே
இயேசுவின் பின்னே வருவோருக்கு
மரணம் என்றும் இல்லையே

1460. இயேசப்பா உம்மை தேடி

இயேசப்பா உம்மை தேடி வந்தேனே - இங்கு
எல்லாமே விட்டு விட்டு வந்தேனே
எனக்கெல்லாமே நீர்தானே
என் வாழ்வெல்லாம் நீர்தானே
என் சொந்தம் பந்தம் யாவும் நீரே

1. சொந்தம் என்று சொன்னவுடனே
உம்மை தானே நினைக்கின்றேன்
உம்மை அறிந்த நாளிலிருந்து
உம்மையே அண்டி கிடக்கின்றேன்
அன்பு என்றாலே உமதன்பு ஒன்றுதானே
என்றும் மாறாத அன்பு ஐயா
உயிரே உயிரே - இங்கு
நீரன்றி நானில்லையே
உம்மையன்றி யாரை நம்பி
நானும் தேடி போவது

2. என் மனதின் வேதனையெல்லாம்
புரிந்து கொள்ளார் யாருமில்லை
இதயம் நொறுங்கி கலங்கும் நேரம்
அன்பு காட்டவும் யாருமில்லை
அன்பே நீர் மட்டும்
என் வாழ்வில் இல்லையென்றால்
என்றோ மண்ணாகிப் போயிருப்பேன்
இயேசுவே இயேசுவே - என்மேல்
கருசனை உள்ளவரே
என்னை அறிந்த என் மனம் புரிந்த
ஒரு ஜீவன் நீரே ஐயா

1461. இயேசு நல்லவர் இயேசு

இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
இயேசு இரட்சகரே
அல்லேலூயா ஆராதனை
ராஜ ராஜனுக்கே

1. வறண்ட நிலமாய் இருந்த வாழ்வை
வயலாய் மாற்றினாரே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்கை
களிப்பாய் மாற்றினாரே
குறைகள் எல்லாம் நிறைவாய் மாற்றி
கவலை தீர்த்தாரே
கண்ணீர் துடைத்தாரே - (2) அவர்

2. சேற்றினின்றும் குழியினின்றும்
தூக்கி எடுத்தாரே
கன்மலைமேல் கால்கள் நிறுத்தி
உறுதிப்படுத்தினாரே
புதிய பாடல் நாவில் தந்து
பாட வைத்தாரே
துதிக்க செய்தாரே - என்னை (2)

3. பாவம் யாவும் மன்னித்தாரே
சாபம் நீக்கினாரே
கிருபையாலே நீதிமானாய்
என்னை மாற்றினாரே
பிள்ளையாக என்னை கூட
ஏற்றுக் கொண்டாரே
அப்பா இயேசுவே - என் (2)

4. பரலோகத்தில் எனது பெயரை
எழுதி வைத்தாரே
நானும் வாழ அங்கோர் இடத்தை
தெரிந்து வைத்தாரே
இயேசு வருவார் அழைத்துச் செல்வார்
பறந்து சென்றிடுவேன்
சுகமாய் வாழ்ந்திடுவேன் - (2) அங்கு

1462. இயேசு ராஜா நன்றி என்று

இயேசு ராஜா நன்றி என்று சொல்லுகிறேன்
செய்த நன்மை நினைத்து
துதி சொல்லி பாடுகிறேன்
காலையும் மாலையும் எந்த வேளையிலும்
துதி பாடல் ஓய்வதில்லை
காலமே மாறினும் சூழ்நிலை மாறினும்
நாவில் துதி ஓய்வதில்லை

1. வானம் பூமி யாவும் ஆளுகின்றவரே
ராஜ்யம் எல்லையில்லையே - உம்
என்னை யாளும் ராஜாவே - உம்
அன்பினில் எல்லையில்லையே

2. வாக்கு மாறா தேவன் வாக்குத்ததம் தந்து
சொன்னதெல்லாம் செய்தீரே - நீர்
பொய்யுரையா என் தேவனே - நீர்
மனம் மாறுவதில்லையே

3. வாக்குகடங்காத பெருமுச்சோடு
வேண்டுதல் செய்கின்றீர் -
எனக்காகவே செய்கின்றீர்
எனக்காக யாவையுமே - நீர்
செய்து முடிக்கின்றீர்

4. பாவங்களுக்கேற்ற தண்டனை தராமல்
மன்னிப்பையும் தந்தீரே - நீர்
இரக்கத்தில் ஐஸ்வர்யமே - உம்
இரக்கத்தில் முடிவில்லையே

5. பாதாளத்தில் நானும் போய் சேர்ந்திடாமல்
பாதுகாத்து கொண்டீரே - நீர்
என் நீதியால் இல்லையே - உம்
சுத்த கிருபையினாலே

1463. இராஜாதி இயேசு ராஜா

இராஜாதி இயேசு ராஜா
இணையில்லா இயேசு ராஜா
இயேசுவோடு என்றென்றும் வாழ
இதயமெல்லாம் தினம் ஏங்குதே
தினம்தோறும் தேடி பாடிட என் மனம்
அவரிடம் வந்திடுதே

1. பெலப்படுத்திடும் கிறிஸ்துவினாலே
எதையும் செய்ய பெலனுண்டு - எனக்குண்டு
ஜெயங்கொடுத்திடும் கிறிஸ்துவினாலே
எதிலும் ஜெயம் எனக்குண்டு - எனக்குண்டு
எனக்குள்ளே அவர் வாழ்வதினாலே
எதற்கும் பயம் இனி இல்லையே
எனக்காக யாவையும் செய்து முடிப்பாரே
எல்லாமே பார்த்துக் கொள்வார் - அவர் (2)

2. போகும் இடமே எதுவானாலும்
கூட அவர் வருவாரே - வருவாரே
கால்கள் சறுக்கி விழுந்து விடாமல்
தோளில் சுமந்திடுவாரே - சுமப்பாரே
என்னைவிட்டு விலகுவதில்லை
என்னையே கை விடுவதுமில்லை
பலவீனம் நீங்கியே கலக்கங்கள் நீங்கியே
பலங்கொண்டு திடமானேன் - நான் (2)

3. கர்த்தர் எனக்கு செய்திட்ட உதவி
கணக்கிலே அடங்காது - அடங்காது
என்ன ஈடாய் செய்திடுவேனோ
எதுவும் இணையாகாது - ஆகாது
இரட்சிப்பின் பாத்திரம் கையில் எந்தி
இரட்கரை துதி பாடுவேன்
சந்தோஷம் என்னிலே தானாக பொங்குதே
அவரோடு மகிழ்ந்திருப்பேன் - நான் (2)

1464. இறங்கிடுதே இறங்கிடுதே

இறங்கிடுதே இறங்கிடுதே
ஆவியின் வல்லமை இறங்கிடுதே
பாய்ந்திடுதே பாய்ந்திடுதே
அக்கினியாக பாய்ந்திடுதே
இயேசுவின் நாமம் உயர்ந்திடுதே
சாத்தான் கிரியை அழிந்திடுதே

1. தண்ணீரை கடந்தாலும் வெள்ளம் மோதிடாதே
அக்கினியில் நடந்தாலும் வேகாமல் காக்கின்றாரே
சர்வ வல்ல தேவனே நம்மோடிருக்கின்றாரே
ஆவியானவரே நம்மோடுலாவுகின்றார்

2. வெண்கல கதவெல்லாம் உடைந்து நொறுங்குதே
இரும்பு தாழ்பாள்கள் முறிந்து விழுந்திடுதே
தடைகள் உடைக்கின்றாரே மதிலும் தகர்க்கின்றாரே
பலத்த கரமே இங்கு ஜெயத்தை கொண்டு வருதே

3. கட்டுகள் எல்லாம் அந்தகாரமெல்லாம்
கண்ணீர் கவலையெல்லாம் தீராத வியாதியெல்லாம்
சுட்டெரிக்கின்றாரே சுகமாக்குகின்றாரே
அக்கினி நதியாய் - இப்போ
பாய்ந்து இங்கு வருதே

4. கனிகள் தந்திட சாட்சியாக வாழ
தேவ பெலனடைய நாம் அபிசேகத்தில் நிரம்ப
ஊற்று தண்ணீராக - ஓர் ஜீவநதியாக
வல்லமை பலமாய் - இப்போ
இறங்கி இங்கு வருதே

B-Maj/Disco/T-120

1465. எல்லோரும் கூடியே

எல்லோரும் கூடியே
சங்கீதம் பாடியே
ராஜாவை வாழ்த்துகிறோம்
உம் நாமம் உயர்த்துகிறோம்

1. இருள் பூமியையும்
காரிருள் ஜனங்களையும்
மூடினாலும் கர்த்தாவே நீர்
என் மேல் உதிப்பீரே
இயேசய்யா ஸ்தோத்திரம்
ஓசன்னா ஸ்தோத்திரம்

2. நீதியின் சூரியனே
நித்திய வெளிச்சம் நீரே
தேவனே உம் மகிமையாலே
என் துக்கம் முடிந்திட்டதே

3. நித்தியமாய் மகிழ்ச்சி
தலைமேல் இறங்கிடுதே
சஞ்சலமும் தவிப்பு எல்லாம்
விலகி ஓடிடுதே

4. கூட இருப்பவரே
விலகிடாதவரே
நிரந்தரமாய் வாசம் செய்ய
எனக்குள் வந்தவரே

C-Maj/Disco/T-120

1466. என்னோடு இருப்பவரே

என்னோடு இருப்பவரே - இயேசுவே
எனக்காக வாழ்பவரே
கோடான கோடி உள்ளங்கள் தேடி
பாடி மகிழ்ந்திடுமே - உம்
பாதம் பணிந்திடுமே

1. என்னில் வாழ்வது நானுமல்ல
இயேசுவே என்னில் வாழ்கின்றீர்
கர்த்தர் என் பெலனும் கீதமுமானீர்
கன்மலையுமானீர்
கர்த்தாவே என் நிழலானீர்
என் மறைவிடமாய் நீரானீர்
அல்லேலூயா அல்லேலூயா - உம்மில்
என்னை மறந்தேனய்யா

2. காற்றும் கடலும் கல்மழையும்
கானம் பாடி போற்றுமே
துள்ளிடும் ஆறும் பொங்கிடும் ஊற்றும்
தூயவர் புகழ் பாடுமே
சிறகுகள் அடித்திடும் பறவையுமே
சிந்தை குளிர்ந்திட துதித்திடுமே
அல்லேலூயா அல்லேலூயா - நானும்
சேர்ந்து துதித்திடுவேன்

3. சூரிய சந்திரன் நடசத்திரங்கள்
சூழ்ந்து உம்மை போற்றுமே
வானிலும் பூவிலும் உள்ளவை யாவும்
வாழ்த்தி வலம் வருமே
வானுக்கும் பூமிக்கும் உயர்ந்ததல்லோ
வானவரே உம் மகிமையல்லோ
அல்லேலூயா அல்லேலூயா - துதி
கனம் மகிமை உமக்கே

1467. எந்தன் நெஞ்சமெல்லாம்

எந்தன் நெஞ்சமெல்லாம்
நன்றி சொல்லிடுதே
உள்ளத்தின் ஆழத்திலே
ஆராதனை செய்து
நன்றி என்றும் நான் மறவேன்
கண்ணீரோடு நன்றியையே
காணிக்கையாய் ஆக்குகிறேன்

1. நோயின் கொடுமையிலே மரண படுக்கையிலே
கைவிடப்பட்டு நம்பிக்கை இழந்து
கலங்கி தவித்த நேரத்திலே
இனி பிழைப்பேனோ என்ற நிலைமையிலும்
ஓடி வந்தீரே சுகம் கொடுத்தீரே
இயேசைய்யா நீர் எனது வைத்தியரே - எந்தன்

2. எதற்கும் உதவாத குப்பை நானய்யா
அற்பமான என்னையும் கூட
உமக்காய் தெரிந்து கொண்டிரோ
எல்லோருமே என்னை வெறுக்கையிலே
உந்தன் பார்வைக்கோ நான் அருமையானேன்
இயேசைய்யா நீர் என்னையும் அழைத்தீரே - எந்தன்

3. சிரித்த போதெல்லாரும் கூட இருந்தனரே
அழுத போதோ யாரும் இல்லையே
நான் மட்டும் தானே அழுதேனே
என் வாழ்விலும் என் தாழ்விலுமே
இன்ப துன்பமோ எந்த நிலையிலுமே
பிரியாமல் நீர் கூட இருக்கின்றீரே

1468. என் தேவா உம்மை பாடு

என் தேவா உம்மை பாடுவேன் - இனி
என்றென்றும் ஸ்தோத்தரிப்பேன்
என்னுயிரே எந்தன் இயேசுவே - முழு
மனதால் ஸ்தோத்தரிப்பேன்
எனது வலதுபக்கம் நீரே
அசைக்கப்படுவதில்லை நானே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் (2)

1. செய்த நன்மைகள் உலகம் கொள்ளாதே
எந்தன் வாழ்வினிலே
நினைத்து நினைத்து நன்றி சொல்லத்தானே
ஆயுள் போதாதே
மலர் போல் உதிர்கின்ற வாழ்வை
நன்றி சொல்லி கழித்திடுவேன்

2. உண்மையாய் உம்மை கூப்பிடும் போது
நெருங்கி அருகில் வந்தீர்
உருகி உருகி ஜெபித்திடும் போது
உன்னத பெலன் அளித்தீர்
உலகத்தையே நான் மறந்து
உம்மையே நினைத்திடுவேன்

3. எந்த பக்கமும் நெருக்கப்பட்டும் நான்
ஒடுங்கி போகவில்லை
துன்பத்திலே நான் அமிழ்ந்திட்ட போதும்
கைவிடப்படவுமில்லை
இயேசுவே என் பக்கபலமே
இயேசுவே என் துணையே

D-Maj/Guiter Balled/T-95

1469. என்ன வந்தாலும் எது

1. என்ன வந்தாலும் எது வந்தாலும்
என் இயேசுவை என்றும் ஸ்தோத்தரிப்பேன்
இன்பம் வந்தாலும் துன்பம் வந்தாலும்
என் இயேசுவை என்றும் ஸ்தோத்தரிப்பேன்
ஒவ்வொரு நொடிப்பொழுதும்
உம்மை ஸ்தோத்தரிப்பேன்
இதயம் முழுவதுமே தந்த ஸ்தோத்தரிப்பேன்

2. யார் நேசித்தாலும் யார் வெறுத்தாலும்
ஸ்தோத்தரிப்பேன் என்றும் ஸ்தோத்தரிப்பேன்
யார் பேசினாலும் யார் தூசித்தாலும்
ஸ்தோத்தரிப்பேன் என்றும் ஸ்தோத்தரிப்பேன்
கர்த்தரில் மகிழ்ந்து நானும் பாடி ஸ்தோத்தரிப்பேன்
கண்களில் ஆனந்த கண்ணீர்
பொங்க ஸ்தோத்தரிப்பேன்
மனதை பறிகொடுத்தே உம்மை ஸ்தோத்தரிப்பேன்

3. சுகமேயாயினும் இல்லாமல் போயினும்
ஸ்தோத்தரிப்பேன் என்றும் ஸ்தோத்தரிப்பேன்
வாழ்ந்திருந்தாலும் வீழ்ந்து போனாலும்
ஸ்தோத்தரிப்பேன் என்றும் ஸ்தோத்தரிப்பேன்
மேய்ப்பரின் அன்புமுகம் நோக்கி
தினமும் ஸ்தோத்தரிப்பேன்
மெய்யான விசுவாசத்தோடு
உம்மை ஸ்தோத்தரிப்பேன்
நீரே போதும் போதும் என்றும் ஸ்தோத்தரிப்பேன்

1470. என்னுயிரே என்னுயிரே

என்னுயிரே என்னுயிரே
என் இதயத்தில் வாழ்பவரே
பேச்சினிலும் என் மூச்சினிலும்
நினைவிலும் கலந்தவரே

1. நான்விடும் மூச்சும் பொழுதெல்லாம்
இயேசு இயேசென்று சொல்லிடுதே
இராவிலும் பகலிலும் இருதயமும் - என்
இயேசுவுக்காக துடிக்கிறதே
உள்ளமெல்லாம் உடலெல்லாம்
உம் நினைவாய் இருக்கின்றதே

2. எனக்காகவே இரத்தம் சிந்தினீரே
எனக்காகவே மரித்துயிர்த்தீரே - இந்த
செயலாலே என் இருதயத்தை
உம்மிலே பறிகொடுத்திட செய்தீரே
உம் அன்பாலே நான் மயங்கி
உம்மை நேசிக்க துணிந்தேனே

3. இருளாய் கிடந்த தேகமெல்லாம்
தேவ ஆலயம் ஆகினதே - இனி
நானும் எனக்கு சொந்தமல்ல
எனதெல்லாமே இனி உம் சொந்தமே
இதயத்திலேயும் உம்மை தவிர
வேறு எவருக்கும் இடமில்லையே

1471. ஓசன்னா பாடி பாடி நேசரை

ஓசன்னா பாடி பாடி நேசரை தேடி
ஆத்துமா ஆடிப்பாட வாஞ்சிக்குதே
நிலையில்லா இந்த வாழ்வில்
அளவில்லா அன்பு செய்தீர்
சாட்சியாக நானிருந்து
உந்தன் அன்பை எடுத்துச் சொல்வேன்

1. ஆவியானவர் அன்பின் ஆண்டவர்
அடிமையெனக்காய் மனிதனானீர்
களிமண்ணாலே வனைந்த என்னை
கழுவியெடுக்க குருதி ஈந்தீர்
சிந்திய இரத்தம் எனக்காயல்லோ
பொன்னும் வெள்ளியின் விலைதான் தருமோ
உம்மைப் போல் ஆண்டவர் யாருமில்லை
உமதன்புக்கு ஈடாய் எதுவுமில்லை
உம்மையல்லால் ஒரு வாழ்வும் எனக்கில்லை

2. வான தூதர்கள் வாழ்த்துப்பாடிட
வாகை சூடி வானில் வருவீர்
மேகக் கூட்டங்கள் மேளம் முழங்க
மகிமையோடு இறங்கி வருவீர்
காத்திருந்தவை கண்டு மகிழ
கர்த்தரோடு வானில் எழும்ப
இன்பமோ துன்பமோ இனிவரும் நாளில் - என்
இருதயத்தால் என்றும் ஸ்தோத்தரிப்பேன்
நீர் வரும்வரை உம் வழி நிலைத்திருப்பேன்

1472. கண்மணிபோல் காக்கும்

கண்மணிபோல் காக்கும் இயேசு ராஜா
கைவிடாத கர்த்தர் இயேசு ராஜா
ஸ்தோத்திரம் கோடி ஸ்தோத்திரம்
ஊற்றிடும் எந்நாவில் ஊற்றிடும்
இயேசு ராஜனே ஸ்தோத்திரம் அல்லேலூயா
ராஜராஜனே ஸ்தோத்திரம் அல்லேலூயா அல்லேலூயா

1. நான் பிறந்த நாள் முதல் இந்த நாள்வரையிலும்
ஆதரித்து வந்த இயேசுவே
இந்த மட்டும் கைவிடாமல்
இனி மேலும் கைவிடாமல்
இன்றுமென்றும் தேற்றும் இயேசுவே
தந்தை தாயின் பாசமோ - உந்தன்பாசமாகுமோ
சொந்த பந்த நேசமோ - உந்தன் நேசமாகுமோ
போதுமையா உந்தன் நேசமைய்யா
இயேசு ராஜனே ஸ்தோத்திரம் அல்லேலூயா

2. தீமையான யாவையும் நன்மையாக மாற்றினீர்
தீங்கு நீக்கி என்னை மீட்டினீர்
இன்னல் வேளை வந்த போது
நல்ல வேளையாக வந்த
நண்பனாக நம்மை செய்திட்டீர்
இரக்கமுள்ள தேவனே - இரங்கி வந்த நாதனே
மீட்க வந்த மீட்பரே - தேடி வந்த தெய்வமே
போதுமைய்யா உந்தன் நேசமைய்யா - (2)
இயேசு ராஜனே ஸ்தோத்திரம் அல்லேலூயா

1473. காடு மேடு எல்லாம் வாழ்வை

காடு மேடு எல்லாம் வாழ்வை
தேடி நானும் அலைந்தேன்
இயேசுவே மெய்யான வாழ்க்கையே
என்று இப்போ உணர்ந்தேன்
காடு மேடு எல்லாம் வாழ்வை
ஸ்தோத்திரம் தேவா (2)

1. கண்ணாலே காண்பதெல்லாம்
உண்மை என வாழ்ந்தேன்
கனவாய் போகும் என நினைத்திட மறந்தேன்
மனதில் நினைத்ததெல்லாம் அடைந்திடமுயன்றேன்
எதுவும் நிலையில்லை என்பதனை மறந்தேன்
உலக இன்பத்தையே தேடியே அலைந்தேன்
முடிவு! வேதனைமேல் வேதனையே அடைந்தேன்
எல்லாமே இழந்தேனே வாழ்வில் நானே இன்று
உலகம் என்ன என்று புரிந்தேன் நானே
காடு மேடு எல்லாம் வாழ்வை
ஸ்தோத்திரம் தேவா (2)

2. உலக உறவு எல்லாம் உண்மை என நம்பினேன்
உதறி தள்ளும் என நினைத்திட மறந்தேன்
தேவனை தேடாமல் மனிதரை தேடினேன்
எல்லோரும் கைவிடவே திகைத்து வாடினேன்
யார் யாரோ சொன்னார்கள் எதுவம் கேட்கலையே
துன்பந்தான் வந்த பின்பு புத்தியும் வந்ததே
இயேசுதான் மாறாத பந்தம்மையா - இந்த
சொந்தந்தான் என்றுமே நிலைக்கும்மையா
காடு மேடு எல்லாம் வாழ்வை
ஸ்தோத்திரம் தேவா (2)

3. இயேசுவை ருசித்த பின்பு உலகம் வெறுக்குதே
காலமெல்லாம் இயேசுவோடு வாழ்ந்திடவே தோணுதே
இயேசுவே போதும் என்று மனமும் சொல்லுதே
மற்றதெல்லாம் மாயையிலும் மாயை ஆனதே
எல்லாமே பார்த்துவிட்டேன் எதுவும் சோதனையே
நிம்மதி எதிலுமில்லை எல்லாம் சஞ்சலமே

1474. சின்ன கன்னம் தொட்டு

சின்ன கன்னம் தொட்டு
சின்ன கைகள் தொட்டு
என்னை இயேசு அணைச்சிக்கிட்டாரே (2)
சின்ன சின்ன கரங்கள் அழைக்க
இயேசப்பா ஓடி வந்து அணைக்க (2)
கைகள் தட்டி தாளமிட்டு பாடு ஒரு பாட்டு
ஸ்தோத்திரந்தான் சொல்லி சொல்லி பாடு துதிபாட்டு

1. துள்ளி துள்ளி துதிபாடி ஆடுவேனே தன்னாலே
சுத்தி சுத்தி வருவேனே எந் நேசர் பின்னாலே
என் பாதங்களும் நோகாமல் இருக்க
பொன் கரம் விரித்து தூக்கிடுவார்
ஆனந்தத்தாலே என்னுள்ளம் நிரம்ப
ஆசையாக அவர் பேசிடுவார்
எப்போதுமே எனக்கென்றென்றுமே
இயேசப்பாவுமே வேணும்

2. இயேசுவோடு கூடிவாழ ஒரு தொல்லை இனி இல்லை
மடியிலே கொஞ்சிப்பாட ஒரு எல்லை இனி இல்லை
அப்பாவினோட கரங்கள் பிடித்து
தப்பாமல் போவேன் எந்நாளுமே
சந்தோஷமே இனி சந்தோஷமே
எந்நேசரின் மார்பினில் சாய்ந்திடவே
அல்லேலூயா துதி அல்லேலூயா
அதை எப்போதுமே பாடு

1475. நீரன்றி வேறில்லை ஐயா

நீரன்றி வேறில்லை ஐயா
எல்லாமே நீர்தானே
உடலும் உள்ளமெல்லாம்
உயிரெல்லாம் நீர் தானே
உம்மை நாடி நாடி தினம் பாடி பாடி மகிழ்வேன்
உந்தன் பாதம் தேடி தினம் ஓடி ஓடி வருவேன்

1. துன்பவேளையில் வேண்டிடும் போது
நல்ல துணை நீரே
தாங்கா துயரில் தவித்திடும் போது
தாங்கும் பெலன் நீரே
எந்தக் காலத்திலும் உம்மை ஸ்தோத்தரிப்பேன்
எந்த வேளையிலும் நினைப்பேன்
ஒரு இமைப்பொழுதும் உம்மை மறந்திடாமல்
என் வாழ்வில் இனி - உம்மை

2. பாவ பாதையில் பாரினில் அலைய
தேடி வந்தவரே
பாவி எனக்காய் சிலுவையில் தொங்கி
வாழ்வு தந்தவரே
உயிருள்ளவரை என் உன்னதரை
உயிரோடு கலந்திடுவேன்
இரவும் பகலும் இதயம் நிறுத்தி
இசை கானம் பாட - உம்மை

1476. இப்போதும் எப்போதும்

இப்போதும் எப்போதும் எல்லாவற்றிற்காகவும்
தந்தையாம் கடவுளுக்கு துதிபலி செலுத்திடுவோம்

துதிபலி சுகந்த வாசைன
நன்றி பலி அது உகந்த காணிக்கை

1. எல்லா மனிதருக்கும் இரட்சிப்பு தருகின்ற
தேவனின் கிருபையே பிரசன்னமானீரே
துதிக்கிறேன் தூயவரே போற்றுகிறேன் புண்ணியரே

2. தீய நாட்டங்கள் உலகுசார்ந்தவைகள்
வெறுக்கச் செய்தீரே வெற்றியும் தந்தீரே

3. நெறிகேடு அனைத்தினின்றும் மீட்பு தந்தீரய்யா
நற்செயல் செய்வதற்கு ஆர்வம் தந்தீரய்யா

4. தேவ பக்தியுடன் தெளிந்த புத்தியோடு
இம்மையில் வாழ்வதற்கு பயிற்சி தருகின்றீர்

5. சொந்த மகனாக தூய்மையாக்கிடவே
உம்மையே பலியாக ஒப்படைத்தீர் சிலுவையிலே

6. மறுஜென்ம முழுக்கினாலும் புதிதாக்கும் ஆவியாலும்
இரட்சித்துக் கழுவினீரே மிகுந்த இரக்கத்தினால்

7. நீதிமான் ஆக்கினீரே உமது கிருபையினால்
நித்திய ஜீவன் தந்தீரே நிரந்தரப்பரிசாக

1477. துதி கனம் செலுத்துகிறோம்

துதி கனம் செலுத்துகிறோம்
திரியேசு தேவனுக்கே
ஆராதனை நாயகரே
என்றென்றும் புகழ்(துதி) உமக்கே

1. பரிசுத்தரே பரமபிதாவே
பரலோக ராஜாவே
இருளேதும் பாவமேதும்
இல்லாத தூயவரே

2. பேரறிவும் ஞானமும் நீரே
ஆலோசனை கர்த்தர் நீரே
யோசனையில் பெரியவரே
மறைபொருள் உமக்கில்லையே

3. சர்வலோக நீதிபதியே
பூமியின் ராஜாவே
நீதியோடும் நிதானத்தோடும்
நியாயங்கள் தீர்ப்பவரே

4. என் உயிராய் இருப்பவர் நீரே
என் பெலன் சுகம் நீரே
என் வழியே சத்தியமே
உம்மாலே வாழ்கின்றேன்

1478. தேவனுக்கே மகிமையுண்டு

தேவனுக்கே மகிமையுண்டு
காலமெல்லம் என்றுமுண்டு
கர்த்தருக்கே துதியுமுண்டு
எப்பொழுதும் என்றுமுண்டு
இனிமையிலும் இனிமையுண்டு
இயேசுவின் நாமத்தில் மகிமையுண்டு
வெற்றியிலும் வெற்றியுண்டு
திருநாமத்திலே மீட்பு உண்டு

அல்லேலூயா......(4)

1. வானம் பூமி யாவும் என் தேவன் துதிபாடும்
ஜீவனுள்ள யாவும் என் தேவனையே வணங்கும்
மூச்சுள்ளவையாவும் என்தேவனை பாடிமுழங்கும்
முழங்கால்கள் யாவும் என்தேவன் முன்பு முடங்கும்
அகில உலகம் படைத்த
என் ஆண்டவர் இயேசுவினாலே
சகல ஜனங்கள் வாழ்வும்
புது ஜீவ ஒளியாய் ஆகும்

2. கர்த்தாவே உம் நாமம் தெவிட்டாத இன்பமாகும்
பிதாவின் சமூகம் பிரியமான என் தாகம்
உம்மைப் பார்த்த யாவும் புதகிருபையினாலே நிரம்பும்
உம்மைப்பாடும் நாவும் புது துதிகளினோலே பொங்கும்
நாதியில்லா வாழ்வில்
உம்கிருபை ஒன்றே போதும்
நாளும் நாடி வருவேன்
கர்த்தாவே உந்தன் சமூகம்

1479. தேவ தேவனே இயேசு

தேவ தேவனே இயேசு ராஜனே
உம்மை காணும் இருதயம் மகிழும்
எனது எஜமானரே என் மனதின் மணவாளரே

1. என் இதய சிங்காசனத்தினிலே
வீற்றிருக்கும் என் ராஜாவே
வானாதி வானங்கள் உமக்கிருக்க
இந்த இதயம் தான் உம் வீடானதோ
என்னில் நீர் வாழ்ந்திட
என்ன நான் செய்தேனோ

2. நான் உம்மை மறந்து பிரிந்திட்டபோதும்
நினைத்து நினைத்து ஏங்கினீரே
நான் உம்மை வெறுத்து ஓடினபோதும்
நீர் என்னை உயிராய் நேசித்தீரே
இது தான் இயேசுவே
அநாதி சிநேகமோ

3. நான் என்னை உயிராய் நேசிப்பதைவிட
நீர் என்னை அதிகமாய் நேசிக்கின்றீரே
பாவியில் நான் பெரும்பாவியாய் வாழ்ந்தும்
பாசமாய் உயிரையே கொடுத்தீரே
இது தான் இயேசுவே
அன்பின் எல்லையோ

D-Maj/Waltz/T-150

1480. தேவா உம்மை பாடும்

தேவா உம்மை பாடும்
நேரம் இன்ப நேரம்
இன்பத்திலோ துன்பத்திலோ
எந்த நேரமும் இன்பநேரமே

1. நாவு ஒன்று போதுமோ
நாதன் உம்மை பாடவே
நீரில்லமல் வாழ்விலே
யாரை நானும் பாடுவேன்
ஒரு கோடிபாடல் உமை பாடினாலும்
என் ஆசை என்றும் தீராதய்யா
உயிர்போகும் போதும் உமை பாடவேண்டும்
அதுவே ஆசையே - என்னில்... (2)

2. தேகமெல்லாம் பசியினால்
வாடிப்போக இருப்பேனே
இராமுழுதும் தூக்கமும்
மறந்தும் கூட இருப்பேனே
ஒரு நாளும் உம்மை பாட மறந்து
உயிர் வாழ்த்தானே முடியாதையா
பறவைகள் கூட உமை பாடும் போது
நான் பாடாதிருப்பேனோ... (2)

A-Maj/16 Beat/T-85

1481. தேவனே என்னோடு

தேவனே என்னோடு
(நீர் கூட இருப்பதால)
எந்த குறையும் வாழ்விலே
ஒரு போதும் இல்லையே

1. உண்ணும் உணவையே
வானம் கொடுக்குமோ - கீழ்க்
காற்றில் காடைகள் வந்து மலைபோல் குவியுமோ
நீர் கூட இருந்ததால் அது எல்லாம் நடந்ததே
என் வாழ்விலும் நடக்குமே

2. கடலும் பிளந்திட ஒரு வழி உண்டாகுமோ
தரைபோல் நடந்திட தண்ணீர் விலகி நிற்குமோ
நீர் கூட இருந்ததால் அது எல்லாம் நடந்ததே
என் வாழ்விலும் நடக்குமே

3. உம்மையே உறுதியாய் தினம் பற்றிக்கொண்டதால்
இந்நாள் வரையுமே நான் உயிரோடிருக்கிறேன்
என் தேவை யாவுமே நீர் அறிந்து இருக்கிறீர்
அதை செய்தும் முடிக்கிறீர்

1482. போற்றுவோம் போற்றுவோம்

போற்றுவோம் போற்றுவோம்
இயேசுவையே போற்றுவோம் - துதி
சாற்றுவோம் சாற்றுவோம் கர்த்தருக்கே சாற்றுவோம்

நமக்காய் மண்ணில் வந்து பிறந்தவரை போற்றுவோம்
நம்மையும் மீட்க வந்த மீட்பரையே போற்றுவோம்
இயேசுவின் நாமமே நமது மேன்மையே

1. விண்ணுலகரோஜாவே மண்ணில் வந்து பூத்ததோ
விண்தூத சேனையெல்லாம் வாழ்த்துப்பாடவந்ததோ
விண்மீன்கள் கூட்டத்தில்
இவர் விடிவு கால வெள்ளியோ
இராஜாக்கள் கூட்டத்தில்
இவர் இராஜாதிஇராஜாவோ
இவரும் நம்மை மேய்க்கும்
நல்ல மேய்ப்பர் என்பதாலோ
இவரையுமே மேய்ப்பர்களும் தேடியேவந்தார்களோ
நம் இதயம்கூட இன்று ஒரு மாட்டுத்தொழுவந்தானே
இதில் பிறந்திடவே ராஜா இயேசுவே வந்தாரே

2. உலகத்தின் ஒளியே மங்கிடாத மகிமையே
எந்த மனிதனையும் பிரகாசிக்கின்ற ஒளியே
இருளை போக்க வந்த விடியற்கால வெளிச்சமே
இன்னல்கள் போக்க எந்தன்
உள்ளம் வந்த இயேசுவே
பாவங்கள் போக்கிடவே மண்ணில் பிறந்தாரே
பரலோகில் சேர்த்திடவே என்னில் பிறந்தாரே
இவரே மெய்யான தேவன்
நம்மை தேடி வந்த தெய்வம்
உயிருள்ள நாளெல்லாம் அவரையேபாடுவோம்

1483. மகிமையின் ராஜா எங்கள்

மகிமையின் ராஜா எங்கள் தேவன் JESUS
மகத்துவ ராஜா எங்கள் தேவன் JESUS
மன்னிக்கிற தேவன் எங்கள் தேவன் JESUS
மரணத்தை ஜெயித்தவர் எங்கள் தேவன் JESUS
அடைக்கலம் புகழிடம் மறைவிடம் JESUS
அநுகூலமான துணை அரணும் JESUS
அற்புதங்கள் அதிசயம் செய்பவர் JESUS
அன்பினிலும் பண்பினிலும் உயர்ந்தவர் JESUS

தாவீதின் சங்கீதங்கள் பாடி என்
தேவனை என்றும் துதிப்பேனே

1. இரக்கமும் உருக்கமும் உள்ளவர் JESUS
இரட்சகரும் மீட்பரும் மேய்ப்பரும் JESUS
கன்மலை கோட்டையும் கேடகம் JESUS
கண்மணிபோல் என்னை காப்பவர் JESUS
நல்லவரும் வல்லவரும் நம்பிக்கையும் JESUS
நெருக்கத்தில் இடுக்கத்தில் அடைக்கலம் JESUS
சத்தியமும் ஜீவனும் வழியும் JESUS
சகலமும் உலகமும் படைத்தவர் JESUS

2. கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிற போது
எனக்கெதிராய் வந்து நிற்பவன் யார்
கர்த்தர் என் நிழலாய் இருக்கின்ற போது
எனக்கெதிராய் வலை விரிப்பவன் யார்
கர்த்தர் என் வெளிச்சமும் இரட்ச்சிப்புமானார்
யாருக்கு அஞ்சி பயப்படுவேன்
சேனைகளின் கர்த்தர் என்னோடிருந்து
சத்துருவின் தலையை மிதித்திடுவார்

தொடர்

1483. மகிமையின் ராஜா எங்கள்

தொடர்

3. தாயின் வயிற்றில் தெரிந்துகொண்டார்
தாய் தகப்பனை போல தேற்றுகிறார்
தகப்பனும் தாயும் கைவிட்டபோதும்
தேவன் என்னை சேர்த்துக்கொண்டார்
ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
ஆண்டவரை நான் ஸ்தோத்தரிப்பேன்
தாவீதின் சங்கீதங்கள் பாடி - என்
தேவனை என்றும் துதிப்பேனே

4. புல்லுள்ள இடங்களில் என்னை மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நிறுத்தி
அனுதினம் ஆறுதல் தேறுதல் படுத்தி
நீதியின் பாதையில் நடத்துகிறாரே
கர்த்தர் என் மேய்ப்பர் ஆத்தும நேசர்
கர்த்தரையே நான் நம்பிடுவேன்
கடைசிவரை அவர் நாமத்தை உயர்த்தி
காலமெல்லாம் புகழ் பாடிடுவேன்
தாவீதின் சங்கீதங்கள் பாடி - என்
தேவனை என்றும் துதிப்பேனே

1484. மனமே நீ வருத்தம்

மனமே நீ வருத்தம் கொள்ளாதே
வீணாக நீ கலக்கம் கொள்ளாதே
நம் இயேசுவின் அன்பு உண்டு - அது
உனக்கு என்றும் உண்டு

1. நினைத்த காரியம் வாய்த்திடாமல் வாடிப்போனாயோ
பாரங்கள் மலைபோல் குவிந்ததாலே
பயந்து போனாயோ
நம் இயேசுவின் கரங்களே அதனை
இனி செய்து முடித்திடுமே (2)

O ! My Lord praise the Lord

2. நோய்களினாலே பெலனிழந்து மனம்
நொடிந்து போனாயோ
மரணந்தான் இனி முடிவென்று சொல்லி
மௌனம் ஆனாயோ
நம் இயேசுவின் தழும்புகளாலே
சுகமடையா நோய்களில்லை (2)

O ! My Lord praise the Lord

3. சோதனை மேலே சோதனை வந்து
சோர்ந்து போனாயோ
விடுதலை பெறவே வழி தெரியாமல்
துவண்டு போனாயோ
நம் இரட்சகர் இயேசுவினாலே
விடுதலை உனக்கென்றுமுண்டு (2)

O ! My Lord praise the Lord

G-Min/Disco/T-120

1485. மேசியா இயேசு ராஜா

மேசியா இயேசு ராஜா
அவர் மீண்டும் வருகிறார்
எந்தன் ஆவல் தீர்க்க
அவர் சீக்கிரம் வருகிறார்
அவர் முகமே நான் கண்டிடுவேன்
அவரோடு நானும் சென்றிடுவேன்
மகிமை மகிமை அந்த நாள் மகிமை

1. தேவனின் வருகையில் என் துக்கமெல்லாம்
சந்தோஷமாகவே மாறியே போகும்
தேவனுக்காய் பட்ட பாடுகளெல்லாம்
மகிமையாய் அன்று மாறிடுமே
இன்று காணும் பாடுகள் இனிமேல் வருகின்ற
மகிமைக்கு ஈடாய் ஆகுமோ

2. இயேசுவுக்காய் நான் காத்திருக்கின்றேன்
ஆயத்தமாய் எதிர் பார்த்திருக்கின்றேன்
இனியும் தாமதம் செய்யாரே அவர்
சொன்னபடியே வந்திடுவார்
அந்த நாளில் அவரை கண்டு நானும்
ஆடுவேன் பாடுவேன் துள்ளுவேன்

3. எனக்காகவே இரத்தம் சிந்தின கரத்தை
கண்டு ஆயிரம் முத்தங்களிடனும்
சிலுவை சுமந்து நடந்த பாதம்
விழுந்து நன்றி சொல்லிடணும்
இந்த தியாகம் செய்த அன்பு முகமே
காண ஏங்குகின்றேன்

F-Maj/Disco/T-130

1486. ஜெயக்கிறிஸ்துவிலே நாம்

ஜெயக்கிறிஸ்துவிலே நாம் ஜெயம் எடுப்போம்
என்றும் தோல்வி நமக்கு இல்லையே
அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்

அல்லேலூயா அல்லேலூயா
ஓசன்னா ஓசன்னா

1. யூதராஜா சிங்கமே இயேசு
யுத்தத்தில் வல்லவரே
யுத்தங்களை ஒயப்பண்ணும்
அவரின் வலக்கரமே
நம் வாழ்வில் செங்கடல் பிளந்துவிட்டார்
சத்துரு சேனை அதிலே மூழ்கடித்தார்

2. ஜெயமில்லாத தமது வாழ்வை
ஜெயமாய் மாற்ற வந்தவர்
தேவனாலே பிறக்க வைத்தவர்
உலகம் ஜெயிக்க வைத்தார்
விசுவாசத்திலே நம்மை பெலப்படுத்தி
நம் வாழ்க்கையிலே ஜெயம் தந்துவிட்டார்

3. வேதனை சோதனை பாடுகள் எல்லாம்
நம்மை என்ன செய்திடும்
வியாதி வறுமை நிந்தைகள் நெருக்கம்
நம்மை என்ன செய்திடும்
இதை நமக்காய் சிலுவையில் சகித்துவிட்டார்
எல்லாம் சுமந்து தீர்த்து ஜெயித்து விட்டார்

1487. ஸ்தோத்திரம் சொல்லி பாடி

ஸ்தோத்திரம் சொல்லி பாடி - இயேசுவை
எந்நேரமும் துதிப்போம்
அல்லேலூயா துதி சொல்லி - இயேசுவை
என்றென்றும் ஆர்ப்பரிப்போம்

அல்லேலூயா அல்லேலூயா - 2

1. துதிகளின் நடுவினில் வாசம் செய்வார்
துதிக்கின்ற உள்ளமதைதேடி வருவார்
துதிகளை நாவினில் நிரம்ப செய்வார்
ஸ்தோத்திர பலியினால் மகிமைபடுவார்
இயேசுவின் நாமத்தை உயர்த்திடவே
நாம் ஒருமித்து கூடிடுவோம்

2. துதி செய்யத்தானே நாமும் பிறந்தோம்
இதை செய்ய ஏனோ தினமும் மறந்தோம்
துதியுடன் இசையை முழுங்க செய்வோம்
தூதரை விட நாம் எழும்பி துதிப்போம்
ஆர்ப்பரித்தே அவர் நாமத்தையே
துதிபாடி கொண்டாடிடுவோம்

3. தேவனின் நாமம் மகிமைப்படவே
ஸ்தோத்திரத்தாலே கிருபை பெருகும்
உதடுகள் கனியே ஸ்தோத்திர பலியே
உயிருள்ளவரையே நாவில் சொல்லியே
நடனத்திலே புது பாட்டினிலே
நாம் கர்த்தரை துதித்திடுவோம்

1488. அம்மாவும் நீரே

அம்மாவும் நீரே - எங்க அப்பாவும் நீரே -
பேர் சொல்லி அழைத்தீரே என்னை
அள்ளி அணைத்தீரே - இந்த உலகில் உம்மைத்தவிர
எனக்கு எவரும் இல்லையே - இந்த
உடலில் உயிரும் ஒட்டி இருப்பது உமது கிருபையே

1. தாய் முகத்தைப் பார்த்திருக்கேன்
தந்தை முகம் பார்த்ததில்லை
சொந்தமென்றும் பந்தம் என்றும்
சொல்லிக் கொள்ள எவரும்மில்லே
நான் உமக்கு சொந்தமானேன்
நீர் எனக்குத் தந்தையானீர்

2. தீங்கு வரும் நாளினிலே
செட்டைகளின் மறைவினிலே
பத்திரமாய் - பாதுகாக்கும்
பாசமுள்ள ஆண்டவரே
நீர் செய்த நன்மைகளை
நான் மறப்பது நியாயமில்லை

3. இல்லை என்று சொல்லி அழுதா
இயேசு அதை சகிப்பதில்லை
பிள்ளைகள் நாம அழுதா
அப்பா மனம் பொறுப்பதில்லே
நீர் மட்டும் இல்லையென்றால்
நான் உயிர் வாழ்வதுமில்லை

1489. அன்பரின் நேசத்தைக் கண்

அன்பரின் நேசத்தைக் கண்டேன்
அளவில்லா ஆனந்தம் கொண்டேன்
நான் பாடுவேன் நான் போற்றுவேன்
நல்லவர் இயேசு என்று

1. சொந்த பந்தங்கள் வெறுக்கின்ற போது
சோதனையாலே நான் சோர்கின்ற போது
தஞ்சம் எங்கே நான் செல்வேனே என்று
தவிக்கையில் என் இயேசு என்னைத் தேடிவந்தார்

2. யாருமில்லா அனாதை நான் என்றேன்
யார் என் கண்ணீரை துடைப்பார்கள் என்றேன்
என் மகனே என்றென்னேசு வந்தார்
என் கரம் பிடித்து மார்போடு அணைத்தார்

3. கஷ்டப்படுவோர்க்கு துணையாரோ என்றேன்
கடின வியாதிக்கும் சுகம் யாரோ என்றேன்
உலகில் இருப்போனிலும் உன்னில் இருக்கும் - நானே
கர்த்தர் பரிகாரி என்றேன்

1490. அப்பா இயேசு என்னோடு

அப்பா இயேசு என்னோடு பேசினால் - எனக்கு
அளவிடமுடியாத சந்தோஷம்
அபிஷேகத்தால் என்னை நிரப்பினீரே
ஆனந்த தைலத்தால் அபிஷேகித்தீர்

1. மகனே என்று நீ கூப்பிடும் போது
மகிழ்ச்சியில் என்னுள்ளம் பொங்குதய்யா
கண்மணி போல் என்னைக் காத்தவரே
காலமெல்லாம் உன்னைத் துதித்திடுவேன்

2. என்று நீரும் வருவீரய்யா
எப்போது உம்மை நான் காண்பேனய்யா
எந்தன் உள்ளம் புதுக்கவியால்
எப்போதும் உம்மை நான் பாடுமய்யா

1491. அற்புதராஜன் இயேசுவை

அற்புதராஜன் இயேசுவை நம்பு
அற்புதங்கள் செய்திடுவார்
அதிசயமான தேவனைத் தேடு
அதிசங்கள் செய்திடுவார்
எல்லோரும் பாடுங்கள்
கைத்தாளம் போடுங்கள்
ஸப்தஸ்வரங்களில் சங்கீதம் பாடுங்கள்

1. பாவியை விடுதலை செய்திடுவார்
பாவக் கட்டுகளை அவிழ்த்தெறிந்திடுவார்
சாபத்தை நீக்கி ஷேமம் தருவார்
சந்தோஷமாய் நம்மை வாழ வைப்பார்

2. நாதியற்ற மனுஷராய் இருந்தாலும் - செத்து
நாலு நாளாய் கல்லறைக்குள் கிடந்தாலும்
உயிருடன் எழுப்பிட அவர் வருவார் - இயேசு
யாரென்று அப்போது நீ அறிவாய்

3. குருடரும் வருவார் அவர் பின்னே
பார்வை அடைந்தே செல்வார் அவர் முன்னே
முடவரும் அமர்வார் அவர் பின்னே
துள்ளி எழுந்தே நடப்பார் அவர் முன்னே
ஆச்சரியமான தேவனவர் - நம்மை
ஆதிசயமாய் அசத்துகின்றவர்

1492.அப்பா! அப்பா! இயேசப்பா

அப்பா! அப்பா! இயேசப்பா
உந்தன் பிள்ளை நானப்பா - இந்த
உலகில் உம்மை விட்டா
வேறே யார் தான் துணையப்பா

ஆமென் என்றால் அல்லேலூயா பாடு - நீ
ஆனந்தத்தால் துள்ளி துள்ளி ஆடு
ஆமென் அல்லேலூயா
ஆமென் ஆமென் அல்லேலூயா

1. நீரே வழி என்றால் வழிகாட்டுவார்
நீரே ஜீவன் என்றால் ஜீவன் தருவார்
நீரில்லாமல் மீனும் இல்லே
நீ இல்லாமல் நானுமில்லே
உயிர்வாழ வழியுமில்லே
உம்மையன்றி மகிழ்ச்சிஇல்லே

2. உலகத்தில் இருக்கின்ற அவனை விட என்
உள்ளத்தில் வாழ்பவர் பெரியவரே
காலங்கள் மாறினாலும் மாறாதவரே தன்
கண்ணுக்குள்ளே நம்மை வைத்துக் காப்பவரே
இயேசுவுக்குள் இன்பமுண்டு
இயேசுவுக்குள் அன்பு உண்டு
இயேசு என்று சொல்லும் போதே
எத்தனை எத்தனை மகிழ்ச்சி உண்டு

3. காக்கையோடு கருங்குயில் பறக்கின்றது
காணும் போது ரெண்டும் ஒன்றாய் தெரிகின்றது
கானக்குயில் பாடும் சத்தம் இனிக்கின்றது
காக்கைவேறு குயில் வேறு பிரிக்கின்றது
உலகத்தில் தெய்வம் உண்டு
எல்லாமும் தெய்வம் இல்லே
உண்மையான தெய்வம் இயேசு
ஒருவரைத் தவிர எவருமில்லை

1493.அன்பில்லா உலகில் மனிதன்

அன்பில்லா உலகில் மனிதன்
அன்பைத் தேடுகிறான் கடல்
அலைகள் நடுவினிலே மன
அமைதியைத் தேடுகிறான்
நிழலை நிஜமென்று எண்ணி ஏமாந்து போகின்றான்
நிம்மதி இல்லாமல் அவன் எங்கெங்கே ஓடுகிறான்

1. கட்டிக் கொண்ட கணவனுக்கு கட்டுப்படும் தாயன்பு
பெற்றெடுத்த பிள்ளையையும்
பிரிந்து விட துணியும் அன்பு
தாயின் அன்பில் சுயநலமிருக்கு
தந்தை அன்பில் கர்வம் இருக்கு
அப்பா இயேசு கிறிஸ்துவின் அன்பு

அன்பு உருவானவர் ஆறுதல் தருபவர்
உனக்குள் இருப்பவர் உண்மையுள்ளவர்
மண்ணுயிரை மீட்க தன்னுயிரை கொடுத்த
மன்னாதி மன்னன் இயேசு அன்பை மறந்து

2. கண்களிலே கண்ணீர் வந்தால்
கர்த்தர் இயேசு கலங்கிடுவார் - உன்
கண்ணீரைத் தரையின் கீழே
சிந்திடவும் விட மாட்டார்
உள்ளங்கையில் ஏந்திடுவாரே - மனம்
உருகி நின்றிடு வாரே
உண்மை அன்பு உலகில் இல்லை
உயிர் கொடுத்த இயேசுவில் உண்டு

3. உலகில் உன்னில் காட்டும்
பாசம் வேஷம் என்று தெரிஞ்சுக்கணும்
சொந்த பந்த அன்பெல்லாம் கானல் நீர்
புரிஞ்சுக்கணும் உள்ளங்கையில் உன்னை
வரைந்து உயிர் கொடுத்தார் தெரிஞ்சுக்கணும்
இயேசுவிடம் நிம்மதி உண்டு
அன்பு உண்டு நீ வரணும்

1494.அப்பா அப்பா! இயேசப்பா

அப்பா அப்பா! இயேசப்பா
உம்மை நம்பி வந்தேன் நானப்பா
என்னை என்றும் கைவிடமாட்டீர் - நீர்
என்னை விட்டு விலகிடமாட்டார்

1. உம்மையே நம்பி நான் வந்திருக்கிறேன்
உம்மிலே கனிதர நிலைத்திருக்கிறேன்
உம்மை நம்பி வந்து விட்டதால் - நான்
உயிரோடு பிழைத்திருக்கிறேன்.

2. அன்னையும் தந்தையும் மறந்து போகலாம்
ஆத்மநேசர் என்னையும் மறப்பதில்லையே
உறவுகளும் பகையாகலாம் - நீர்
ஒருவர் மடடும் எனக்குப் போதுமே

3. பாவமும் சாபமும் நிக்கிவிட்டீரே
பரிசுத்தமாய் என்னையும் மாற்றி விட்டீரே
பாசமுள்ள நேசர் இருக்கிறீர்
உமதன்பினாலே கவர்ந்திழுக்கிறீர்

1495.தம்பி அண்ணே! அண்ணே!

தம்பி அண்ணே! அண்ணே!
அண் ஆ! என்ன தம்பி
தம்பி இந்த மானிடர் அன்பு
அண் அது முருங்கை கொம்பு

1. தம்பி இளநீல வானமும் இலைதரும் பசுமையும்
இயேசுவின் அன்பினைக்காட்டுதண்ணே
பாடுகின்ற பறவையும் பறக்கும் குருவியும்
இயேசுவின் அன்பினைப் பாடுதண்ணே
அண் நன்றிகெட்ட மனிதனை நம்பாதே தம்பி
நம்புவதற்கு அவன் எம்மாத்திரம்
மனிதன் சந்தர்ப்ப வாதியன்றோ (2)

2. தம்பி நம்பி நீயும் பழகுகின்ற நல்லதொரு
உறவுக்குதான் நட்பு என்று நீயும் சொல்வாயண்ணே
நானிலத்தில் நண்பன் என்று சொல்லுகின்ற
எத்தனையோ நன்றி கெட்டு போனது தெரியாதாண்ணே
அண் சுவாசமுள்ள மனிதம் மாறிடுவானே
வஞ்சித்து நம்மை ஏமாற்றுவானே மாறிடா
உண்மை நண்பர் உண்டு அவர் தான்
இயேசு அவரை நம்பு
மனிதன் சந்தர்ப்ப வாதியன்றோ (2)

3. தம்பி அன்றொநாள் சிலுவையிலே கல்வாரி மலையிலே
ஜீவனைத் தியாகமாய் கொடுத்ததற்கும் அன்னைத்
தந்தை இருவரும் நம்மீதுகாட்டுகின்ற அன்பிற்கும்
வித்தியாசம் என் அண்ணே அண் ஐயிரண்டு திங்கள்
சுமந்தவள் மறப்பாள் அறிவூட்டும் தந்தை ஒரு நாளில்
வெறுப்பார் உன் மேல் உண்மை அன்பு கொண்டு
உனக்காய் சிலுவையில் மரித்தார் அன்று
தம்பி இது தான் உண்மை அன்பா அண்ணே
இத்தனை காலமும் மறந்தேன் நானே

1496.அத்தி மரம் போல

அத்தி மரம் போல எத்தனையோ பேர்கள்
புத்தியில்லாமல் வாழ்கிறார்
அர்த்தமும் இல்லாமல் கர்த்தரும் இல்லாமல்
அலங்கோல வாழ்க்கை வாழ்கிறார்

உன்னில் கனி ஒன்றும் இல்லையேல்
வெட்டி எறியப்படுவாய் நீயும்
வேரருகே கோடாரி உள்ளதே
உணர்வாய் இனிக்காலம் செல்லாதே

1. பார்வைக்கு பசுமையாய் இருந்தது அத்திமரம்
ஆசையோடு இயேசு கனிதேடினார் ஏமாற்றம்
இப்படித்தானே பற்பல மனிதர்
வாழும் வாழ்க்கை தான் பல வேஷமே

2. அநியாயம் செய்பவன் இன்னும்
அநியாயம் செய்யட்டும்
அசுத்தமாய் வாழ்பவன் இன்னும்
அசுத்தமாய் வாழட்டும்
நீதி செய்பவன் இன்னும் நீதி செய்யட்டும்
பரிசுத்தமுள்ளவன் - இன்னும் பரிசுத்தமாகட்டும்
அவரவர்க்கு அளிக்கும் பலன் வருகுது என்றார்

3. கனி இல்லாத மரத்தை பிதா வெட்டி
எறியச் சொன்னாரே கோடாரிகையிலேந்தி
தேவ தூதன் நின்றானே
இந்த வருடமும் இருக்கட்டும்
நல்லகனி கொடுத்திடும் என்று இயேசு சொன்னாரே
இனி தாமதமும் செய்யாதே
இனி காலங்களும் செல்லாதே
தேவனின் கோபமும் இறங்குமே
அப்போ இரக்கமும் கிருபையும் இல்லையே

1497.அக்கினி அபிஷேகம்

அக்கினி அபிஷேகம் எங்கள் மேல் ஊற்றி
ஆவியை அனுப்பிடும் தேவா (2)
பரிசுத்த ஆவியை அனுப்பிடும் தேவா
அனுப்பும் நிரப்பும் தேவா

அல்லேலூயா (3)
அல்லேலூயா (3)

1. ஜீவனுள்ள ஆவி என்னில் ஜீவதண்ணீர் ஊற்றிடுமே
காத்திருந்து பெலனடைந்து கழுகு போல பறந்திடவே
அனுப்பும் நிரப்பம் தேவா

2. சுட்டெரிக்கும் அக்கினியே சுத்திகரிக்க வந்திடுமே
பரிந்து பேசும் பரிசுத்த ஆவி
பாய்ந்து எம்மை நிரப்பிடவே

3. மீட்கப்படும் அந்த நாளுக்கென்றே
முத்திரையாய் பெற்ற அபிஷேகம்
மீட்பர் இயேசு வந்திடும் போது
மின்னலைப் போல மறைந்திடவே
அனுப்பும் நிரப்பம் தேவா

1498.அடைக்கலம் (2) இயேசுவே

அடைக்கலம் அடைக்கலம் இயேசுவே
ஆபத்தில் அடைக்கலம் இயேசுவே
ஆறுதல் தருபவர் இயேசுவே

1. பாவிக்கு அடைக்கலம் இயேசுவே - கொடும்
பாதகர்க்கு அடைக்கலம் இயேசுவே
பாதை மாறி பயணம் செய்வோர்க்கும்
பரிசுத்த தேவனே அடைக்கலம் (2)
தஞ்சமென்று எந்த (ஓ..ஓ..ஓ) வஞ்சகர் வந்தாலும் (2)
தள்ளிடா இயேசுவே அடைக்கலம் (2)
கெஞ்சிடும் மாந்தரை அஞ்சிடாதே என்று
கர்த்தரின் வார்த்தையே அடைக்கலம்

2. மண்ணுலகில் பிறந்த மனிதனுக்கு என்
மன்னவன் இயேசுதான் அடைக்கலம்
கண்ணீரை சிந்தியே கலங்குவோர்க்கு
கர்த்தரின் கிருபையே அடைக்கலம்
வஞ்சக சாத்தானின் வலையில் விழாமல்
நெஞ்சிலே அணைத்திடும் அடைக்கலம்
மிஞ்சிடும் பாரமா .... ஓ.ஓ.ஓ அஞ்சிட வேண்டாமே
தஞ்சமே இயேசு உன் அடைக்கலமே (2)
கெஞ்சிடும் மாந்தரை அஞ்சிடாதே என்ற
கர்த்தரின் வார்த்தையே அடைக்கலம்

3. எத்தனைக் காலங்கள் நான் காத்திருந்தேன் என்
இயேசுவே உம்மை நான் காண்பதற்கு
ஏழை என் வாஞ்சைகள் தீர்ப்பவரே
ஏன் இன்னும் தாமதம் நானாறியேன்
காலங்கள் மாறலாம் ஆ...ஆ..
கவலைகள் தீரலாம்
கர்த்தரின் கரத்தினில் நானிருந்தால்
உம்மிடம் வருவோரைத் தள்ளிடமாட்டீரே
உம்மைப் போல் அடைக்கலம் எவருமில்லை

.

1499.ஆண்டவன் அரசாளும்

ஆண்டவன் அரசாளும் அரியாசனம்
ஆயிரம் வருடத்து சிங்காசனம்
நினைக்கின்ற போது - இனிக்கும் மனம்
நித்தமும் பாடுவேன் தேவகானம்

1. வருத்தம் பசி தாகம் அங்கு இல்லை
மனதின் துயரங்கள் ஒன்றுமில்லை
இடுக்கன் தீங்குகள் இளைப்பாரில்லை ஆ...ஆ...ஆ...
இகபரன் இயேசுவின் ஆட்சியிலே
எங்கெங்கு நோக்கினும் இயேசுவை
வாழ்த்தி பாடிக்கொண்டிருக்கும் ஒரு கூட்டம்
எப்பக்கம் நோக்கினும் இயேசுவைச்சுற்றி
சூழ்ந்திருக்கும் பரிசுத்தர் கூட்டம்

அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
என்ற துதிபாடல் நித்தம் ஒலித்திடும் அங்கே

2. உயர்வுமில்லை அங்கே தாழ்வுமில்லை
ஏழை இல்லை பணக்காரன் இல்லை
கவலைகள் கண்ணீர் அங்கு இல்லை - வியாதியின்
கொடுமைகள் ஒன்றுமில்லை
பச்சைக் குழந்தைகள் பாம்பின் புற்றில்
கைகளை வைத்தே விளையாடும்
பரமன் இயேசுவின் ஆட்சியில்
அவைகள் பகைகள் மறந்தே உறவாடும்

1500.ஆராதிக்க கூடி வந்தோம்

ஆராதிக்க கூடி வந்தோம் இயேசய்யா - உம்மை
ஆடிப்பாடி ஸ்தோத்தரிப்போம் இயேசய்யா
தேவ சபையில் தேவா வந்திரங்குமே
தேவ ஜனங்கள் கூடி துதிக்கின்றோமே (2)

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
துதி உமக்கே என்றும் ஸ்தோத்திரமே

1. அளவற்ற அன்பினாலே அணைத்தீரே
எண்ணற்ற நன்மைகளாலே நிறைத்தீரே

2. உம்மிடத்தில் வருவோரைத் தள்ளாதவரே
உறங்காமல் என்னும் எம்மைக் காப்பவரே

3. பாடத் தெரியாது உம்மைப் பாடுகின்றோமே
பாசம் புரியாது உம்மில பாசம் வைத்தோமே

4. ஜீவ நதியே எங்கள் தேவ ஆவியே
எங்களுக்குள் வாசம் பண்ணும் தூய ஆவியே

5. அற்புதங்கள் செய்யும் ஆவியானவரே
எம்மை அர்ப்பணித்தோம் உந்தன் அன்பை பாடிடவே

1501.இயேசு நல்லவரு - நமக்கு

இயேசு நல்லவரு - நமக்கு போதுமானவரு
அற்புதம் செய்பவரு - அதிசயமானவரு
ஆலோசனைக் கர்த்தர் பெரியவரு

1. துன்பம் வரும் வேளையிலே தேடிவந்து தேற்றிடுவார்
துக்கம் நம்மை வாட்டும்போது பக்கம் வந்து ஆற்றிடுவார்
ஜீவனுள்ள தேவனுக்கு ஜீவராகங்கள் பாடுங்கள்

2. இரண்டு மீனும் ஐந்தப்பமும் இயேசுவுக்கு போதுமய்யா
கோடி ஜனம் கூடினாலும் குறைவில்லாமல் கொடுப்பாரய்யா
நம்பி வந்தால் நன்மையுண்டு
நன்மை செய்கின்ற இயேசு உண்டு

3. கடலைக் கண்டு பயந்திடாதே - உன்
கடனை எண்ணி கலங்கிடாதே
கடலை இரண்டாய் பிளந்திட்டவர்
கடனை எல்லாம் தீர்த்திடுவார்
கடல்மேல் நடந்து புயலை நிறுத்தி
கடலுக்கெல்லையை குறித்திட்டவர்

1502.இயேசுவைப் போல தெய்வ

இயேசுவைப் போல தெய்வமில்லை
இவரைப் போல யாருமில்லே
மனதுருக்கம் உடையவரு
மன்னிப்பதில் பெரியவரு
அன்பு பெரியது கிருபை பெரியது
இரக்கம் பெரியதுங்க
இயேசு சாமிக்கு இணையாருங்க

1. அளவற்ற அன்பாலே அணைக்கின்ற தெய்வத்தை
அதிகாலை தேடிட வாங்க - நீங்க (2)
எண்ணற்ற நன்மைகள் எல்லோர்க்கும்
செய்திட்ட இயேசுவைப் பாடிட வாங்க (2)
கண்ணீரைத் துடைச்சாரு - நம்ம கவலையை தீர்த்தாரு
கொண்டாடும் உள்ளங்களில்
இயேசு குடி இருக்க வருவாரு

2. சாத்தானின் கோட்டையை தகர்த்திட்ட தேவனை
சந்தோஷமாய் பாட வாங்க - தேவசந்நிதிக்கு ஓடி வாங்க
சஞ்சலம் வருத்தக்கள் நம்மை நெருங்காமல்
காக்கின்ற தெய்வம் இயேசுங்க
அவரை கண்டு வணங்கிட வாங்க
சந்தோஷம் வரும் போது நாம் சங்கீதம் பாடிடுவோம்
துன்பங்கள் வந்தாலும் தூய தேவனை துதித்திடுவோம்

3. ஆளு அம்பு சேனை ஆடம்பரமாக
ஆயிரம் நாள் வாழ்ந்திட்டாலும் - உலகை
ஆளுகை நீ செய்திட்டாலும்
ஆத்துமாவை நீயும் நஷ்டப்படுத்தினால் இலாபம்
உனக்கொன்றுமில்லை - உன்னை
இரட்சிக்க வேறாருமில்லை
முப்பது முக்கோடி தெய்வங்கள் வணங்கிடும் பெரியவரு
எட்டுதிசைகளுக்கும் மெய்யான இயேசுவே ஆண்டவரு

1503.இயேசு சாமி நல்லவரு

இயேசு சாமி நல்லவரு எல்லோருக்கும் இரட்சகரு (2)
பாவம் யாவும் மன்னித்தாரு (2)
நம்ம சாபங்கள் எல்லாம் தள்ளிட்டாரு (2)
நல்லவரு! நல்லவரு! நன்மைகளை செய்பவரு (2)
வல்லவரு! வல்லவரு! வார்த்தையிலே வல்லவரு! (2)
அற்புதரு! அற்புதரு! அதிசயம் செய்பவரு! (2)
இயேசு சாமி நல்லவரு எல்லோருக்கும் இரட்சகரு

1. கட்டப்பட்ட மனிதர்களின் கட்டவீழ்க்கும் கர்த்தவர்
காயப்பட்ட பிள்ளைகளின் காயங்களை ஆற்றுபவர்
கல்வாரி இரத்தத்தை ஊற்றிடுவார் ...(2)
கவலை கண்ணீர் எல்லாம் மாற்றிடுவார் - நம்ம ....(2)

2. சேனைகளின் கர்த்தர் பெரியவராம்
சேதமின்றி நம்மைக் காப்பவராம்
சிலுவையில் சாத்தானை ஜெயித்தவராம்
மரணத்தை ஜெயமாக்கி எழுந்தவராம்
யுத்தத்தில் இயேசு வல்லவராம் ...(2)
எல்லா ஜனத்துக்கும் இரட்சகராம் - இயேசு ...(2)

F-Mj/6/8 user/T-96

1504. துதி பலியை செலுத்த

துதி பலியை செலுத்த வந்தோம் இயேசய்யா
உம்மை ஆராதிக்க கூடி வந்தோம் இயேசய்யா -2
நீர் உயர்ந்தவர், நீர் வல்லவர் -2
இந்த உலகை ஆளும் தெய்வம் நீரே -2

1. என்னிலே ஒன்றுமில்லை ஆனாலும் நேசித்தீரே- 2
என்னிலே நன்மையில்லை ஆனாலும் உயர்த்தினீரே -2
தகப்பனைப்போல என்னை சுமந்தீரய்யா
ஒரு தாயைப்போல என்னை தேற்றினீரே -2

சுமந்தீரய்யா தேற்றினீரே
சுமந்தீரய்யா என்னை தேற்றினீரே
ஆராதனை உமக்கே ஐயா
எங்கள் ஆராதனை உமக்கே ஐயா

ஆராதனை-2 ஆராதனை-2 ஆராதனை-2 ஆராதனை-2
எங்கள் ஆராதனை ஆராதனை ஆராதனை-2
ஆராதனை உமக்கே ஐயா
எங்கள் ஆராதனை உமக்கே ஐயா

2. பிறந்த நாள் முதலாய் தூக்கி எறியப்பட்டேன்-2
ஒரு கண்ணும் என்மேலே இரக்கமாய் இருந்ததில்லை-2
பிழைத்திரு என்று என்னை தூக்கினீரே
உம் மகன(ள)ாகவே என்னை ஏற்றுக்கொண்டீர் -2

பிழைக்கச்செய்தீர் ஏற்றுக்கொண்டீர்
பிழைக்கச்செய்தீர் என்னை ஏற்றுக்கொண்டீர்
ஆராதனை உமக்கே ஐயா
எங்கள் ஆராதனை உமக்கே ஐயா

3. உமது இரக்கத்திற்கு முடிவே இல்லையப்பா -2
உமது அன்பிற்கு அளவே இல்லையப்பா -2
உமது காருண்யம் என்னை பெரியவனாய்
உயரத்திலே நிறுத்தியதே - 2

உமது காருண்யம் என்னை பெரியவனாய் -2
உயரத்திலே நிறுத்தியதே
என்னை உயரத்திலே நிறுத்தியதே

1505. இயேசுவுக்கு நான் செல்லப்

இயேசுவுக்கு நான் செல்லப்பிள்ளை அவர்
அன்பிற்கோ ஈடு இணை இல்லை
அவர் என்னிலே பிரியமாகினார் - தன்
சித்தம் போல வழி நடத்தினார்

1. தாய் தன் மகனை ஒரு நாள் மறந்து போகலாம்
தந்தை கூட ஒரு நாளில் வெறுத்து ஒதுக்கலாம்
நாள்தோறும் என் மீது கண் வைத்தார்
நித்தமும் உன்னைக் காப்பேன்
நீ என் செல்லப்பிள்ளை என்றார்

2. மகனே! மகளே! உன் வழிகள்
உன் வழிகளல்ல மறவாய் உன்
நினைவுகள் என் நினைவுகளல்ல
என் இயேசு என்னோடு தினம் பேசும் எந்நாளும்
எந்தன் உள்ளம் தங்கும் எந்தன் நேசராம்

1506. இயேசு இருக்கின்ற போது

இயேசு இருக்கின்ற போது
உனக்கென்ன உள்ளத்தில் மனக்கவலை
துன்பங்கள் உனக்கு வரலாம்
துயரங்கள் தொல்லை தரலாம்
அன்பாய் நேசித்த எவரும்
உனக்கு எதிராய் மாறலாம்.

1. உனக்குள்ள பாரம் சுமப்பவர்யாரோ
உன்னைத் தன் தோளினில் சுமந்தது யாரோ
உலகத்திலே உள்ள உயர்ந்தோரை காட்டி
உனக்குள்ள இருக்கின்ற இயேசுவே போதும் போதும்

2. யாருமில்லாத அனாதை நான் என்று
யாரிடமும் போய் சொல்லாதே இன்று
யாரிருந்தாலும் பயம் ஒன்றும் இல்லை
இயேசுவைத் தவிர துணை யாருமில்லை

3. கடந்ததை எண்ணி கலங்கிட வேண்டாம்
நடப்பதை நினைத்து அழுதிட வேண்டாம்
உயிர் தந்த இயேசுன்னை கை விடுவாரோ
உனக்காக மரித்தவர் உன்னை மறப்பாரோ

1507. இராஜாதி இராஜாவைப்

இராஜாதி இராஜாவைப் போற்றிப் பாடுவோம் - இயேசு
இராஜன் தேவராஜியத்தை நாமும் தேடுவோம்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. பறவைகளைப் பாரு அவைகள் விதைப்பது மில்லை
பசிக்காக் களஞ்சியத்தில் சேர்ப்பதுமில்லை
முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும்
நீதியையும் தேடு அவைகள் கூடவருமே

2. கவலைப் படுவதாலே உங்கள் சரீர அளவினை
கூட்டிடவோ குறைத்திடவோ உன்னால் முடியுமா
முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும்
நீதியையும் தேடு அவைகள் கூடவருமே

3. என்ன உண்போம் என குடிப்போம்
எப்படி உடுத்துவோம் என்று
அஞ்ஞானிகளைப் போல் அலைந்து திரியாதே
இன்று பூத்து நாளை மறையும் புல்லை காப்பவர்
உன்னை காக்க மறப்பாரோ உன்னில் கவலை ஏன்

4. நாளை என்று நாளைக்காக கவலைப்படாதே
நாளை நமக்கு உரியதல்ல பெருமை கொள்ளாதே
முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும்
நீதியையும் தேடு அவைகள் கூடவருமே

1508. இறைவா உமக்கொரு

இறைவா உமக்கொரு ஆராதனை - என்
இசையில் உமக்கிருந்த ஆராதனை
பரிசுத்தரே உம் பாதங்களில்
பணிந்து தொழும் எங்கள் ஆராதனை

ஸ்தோத்திர ஆராதனை
துதிகளின் ஆராதனை

1. காண்கின்ற தேவனுக்கு ஆராதனை
கண்ணீரைத் துடைப்பவர் ஆராதனை
காக்கின்ற தெய்வத்துக்கு ஆராதனை
கருணையின் தேவனுக்கு ஆராதனை

2. மகிமையின் தேவனுக்கு ஆராதனை
மாட்சிமை உடையவர்க்கு ஆராதனை
மன்னிக்கும் தெய்வத்துக்கு ஆராதனை
மகத்துவம் உடையவர்க்கு ஆராதனை

3. வரம் தந்த தேவனுக்கு ஆராதனை
வாழ்வளித்த தெய்வத்துக்கு ஆராதனை
இரக்கத்தின் தேவனுக்கு ஆராதனை
மனதுருக்கம் உடையவர்க்கு ஆராதனை

1509. ஈசாயின் அடிமரத்தின்

ஈசாயின் அடிமரத்தின் இளந்தளிர் ஒன்று
ஈன லோகத்தை மீட்க பிறந்தது அன்ற

என்ன! என்ன! என்ன! நமக்கு ஆனந்தம்
இன்பம்! இன்பம்! இன்பம்! நமக்கு பேரின்பம்

1. குயில் கூட்டம் குஷியாகப் பாட்டுப்பாடுதே - பெரும்
மயில் கூட்டம் அகமகிழ்ந்து ஆட்டம் ஆடுதே
ஐந்தறிவு ஜீவனுக்கே அந்த சந்தோஷம் இந்த
ஆறறிவு மனிதனுக்கோ பரம சந்தோஷம்

2. பூவினங்கள் தென்றலோடு வாசம் வீசுதே பசும்
புல்லினங்கள் பாலனுக்கு மெத்தையாச்சுதே
பாவச் சிறையில் வாழும் மாந்தர் பாவம் போக்கினார்
அந்த பரமன் இயேசு இராஜனுக்கு என்ன கொடுப்போம்
நம் இதயத்திலே இயேசுவுக்கு இடமும் கொடுப்போம்

1510. உம்மைப் பாட நான் மறந்தால்

உம்மைப் பாட நான் மறந்தால் - உலகினிலே நானும்
உயிருடன் வாழ்ந்திட முடியாதே - தேவனே
உமது கிருபை இல்லாமல்
நிற்பதும் நிலைப்பதும் இயலாதே

1. தாயாக எனக்கு நீர் வேண்டுமய்யா
தந்தையாய் உம்மை நான் காண்கின்றேன் ஐயா
தாய் தந்தை இல்லாமல் உலகில் உயிர் வாழ்ந்திடலாம்
தேவா நீர் இல்லையென்றால யார் வாழுவார்
உன் ஜீவன் என் நாவில் வரும் ராகம் தானய்யா
என் பாட்டுக்கு சந்தங்கள் நீர் தான் இயேசய்யா தானய்யா

2. எறும்புக்கும் உணவளிக்கும் என் இயேசு தேவா
எல்லாம் உயிரைக் காக்கும் என் ஆத்ம நாதா
சுவாசிக்கும் காற்றுக்கும் காசுஇ பணமஇ கேட்கலையே
வானத்தின் மழை நீர்க்கு வரிப்பணம் கேட்கலையே
இந்த பூமி அந்த ஆகாயம் நீர் படைத்ததய்யா அந்த
உண்மையை உலகுக்கு நான் சொல்வேனய்யா

3. ஒன்றல்ல இரண்டல்ல நீர் செய்த நன்மை
ஒவ்வொன்றாய் எண்ணி முடியலே நான் சொல்வதுண்மை
ஓராயிரம் நாவுகளும் எனக்கிருந்தால் கூறிடுவேன்
நூறாயிரம் கைகளிருந்தால் வணங்கி மகிழுவேன்
என்ன செய்வேன் எதைச் சொல்வேன்
நீர் தேவாதி தேவன் இந்த உலகுக்கு
உமதன்மை நான் சொல்வேனய்யா

1511. என்னைக் கேள் ஜாதிகளைத்

என்னைக் கேள் ஜாதிகளைத் தருவேனென்றீர்
கேட்கின்றோம் (என்) ஜனத்தை தாருமையா (சங் 2 :8)
என்னைக் கேள் தேசங்களைத் தருவேனென்றீர்
கேட்கின்றோம் என் தேசத்தை தாருமையா

-அனுபல்லவி-

நீர் பொய் சொல்ல மனிதல்லவே
மனம் மாற மனுப்புத்திரனல்லவே

1. கால் மிதிக்கும் எவ்விடத்தையும் எனக்கு தந்திடுவீர் (ஆதி 13 :15-17)
கண் பார்க்கும் பூமியெல்லாம் எனக்கு தந்திடுவீர்
நீர் பொய் சொல்ல மனிதல்லவே
மனம் மாற மனுப்புத்திரனல்லவே

2. பக்தியுள்ள ஜனங்களை நீர் உமக்காய் தெரிந்து கொண்டீர்
பாவிகளை மீட்கவே தேவன் நீர் இறங்கி வந்தீர்
நீர் பொய் சொல்ல மனிதல்லவே
மனம் மாற மனுப்புத்திரனல்லவே

3. உம்மை விசுவாசிக்கின்றேன் நீர் செய்ததை நானும் செய்வேன்
உம்மையே சார்ந்து கொண்டேன் உம்மைவிட அதிகம் செய்வேன்
நீர் பொய் சொல்ல மனிதல்லவே
மனம் மாற மனுப்புத்திரனல்லவே

1512. எத்தனை எத்தனை ராகங்க

எத்தனை எத்தனை ராகங்களோ
எத்தனை எத்தனை தாளங்களோ
அத்தனை ராகமும் தாளமும் அறியாத சிறுவன்
ஆனாலும் பாடவந்தேன் சங்கீத ராகம்
நீர் வரவேண்டும் உம் அருள் வேண்டும்
வரம் வேண்டும் என் இயேசுவே

ஜத்தி சொல்லி ஸ்வரம் பாட வரம்
வேண்டும் என் இயேசுவே
ஸப்த ஸ்வரத்தோடு உம்மைப் பாட
அருள் வேண்டும் என் இயேசுவே

1. நான் பாடும் பாடல்கள் நீ தந்தது
ராகங்கள் எல்லாம் உமதானது
சங்கீத ஸ்வரம் பாட படித்தேனில்லை
சகலமும் நீர் தந்த ஞானம் தானே - ஜத்தி சொல்லி

2. உம்மையன்றி ஒரு தெய்வம் உலகில் இல்லை
இயேசுவே உமதன்பிற்கிணையுமில்லை
உம்மாலே நான் இன்று உயிர்வாழ்கிறேன்
உம் அபிஷேகத்தால் நானும் ஜத்தி சொல்கிறேன்

1513. எல்லோரும் இயேசுவை

எல்லோரும் இயேசுவை கொண்டாடுவோமே
ஒன்றாகக் கூடி ஆடிப்பாடிடுவோமா
நடனமாடி ஸ்தோத்திரித்து ஆராதிப்போமா (2)
நன்றி நிறைந்த உள்ளத்தோடு ஆர்ப்பரிப்போமா
பாடு! பாடு! கை தட்டிப்பாடு
ஆடு! ஆடு! மேள தாளத்தோடு

1. அனாதையாய் நின்றபோது இயேசு வந்தார் நம்மை
அழவேண்டாம் என்று சொல்லி அரவணைத்தார்
அப்பாவுக்கு நன்றி என்று சொல்வோமா அப்பா
இயேசுவுக்கு ஆராதனை செய்வோமா
பாடு! பாடு! கை தட்டிப்பாடு
ஆடு! ஆடு! மேள தாளத்தோடு

2. இல்லை என்று சொல்லிப்பாரு இயேசு வருவார் - தேவ
பிள்ளைகளின் குறைவுகளை கிள்ளி எறிவார்
உனக்கொருவர் இருக்கறார் தெரியுமா - இயேசு
உள்ளவரை கவலை இல்லை தெரியுமா
பாடு! பாடு! கை தட்டிப்பாடு
ஆடு! ஆடு! மேள தாளத்தோடு

3. நீ நம்பும் மனிதர் உன்னைக் கைவிடலாம் - உன்
நெருக்கத்திலே உன்னைவிட்டு ஓடிடலாம்
தான் வாழ பிறரைக் கெடுக்கும் மனிதனே
நீ உயிர் வாழ ஜீவன் தந்தார் தேவனே
பாடு! பாடு! கை தட்டிப்பாடு
ஆடு! ஆடு! மேள தாளத்தோடு

4. நமக்காக சிலுவையினை சுமந்தாரப்பா
நம்மை இரட்சிக்க ரத்தம் சிந்தி மரித்தாரப்பா
மரித்த இயேசு உயிர்த்தெழுந்து வந்தாரப்பா - இயேசு
மரணத்தை ஜெயித்து நம்மை மீட்டாரப்பா
எக்காள சந்த வானில் கேட்குமே - இயேசு
மேக மீதில் வந்திடும் நாள் சமீபமே
பாடு! பாடு! கை தட்டிப்பாடு
ஆடு! ஆடு! மேள தாளத்தோடு

1514. எந்தன் நெஞ்சம் மறப்பதில்லை

எந்தன் நெஞ்சம் மறப்பதில்லை இயேசப்பா
என் மனசெல்லாம் உங்க நெனப்பு தானப்பா
உம்மையன்றி வேறெநெனப்பு உலகில் எனக்கு ஏதப்பா
உம்மோட நெனப்புல தான் வாழுறேனப்பா - நான்

1. நான் தள்ளாடி நடந்தாலும் உங்க நெனப்புதான்
நான் நின்றாலும் ஓடினாலும் உங்க நெனப்புதான்
என்னை அடிச்சாலும் - அணைச்சாலும் நீங்க இயேசப்பா
நான் அழுதாலும் சிரிச்சாலும் நீங்க இயேசப்பா

2. நான் கண்ணீரை வடித்தாலும் உங்க நெனப்புத்தான்
மனக்கவலைகள் வந்தாலும் உங்க நெனப்புதான்
நான் தாழ்ந்தாலும் வாழ்ந்தாலும் நீங்க இயேசப்பா
வசதி வந்தாலும் உயர்ந்தாலும் நீங்க தானப்பா

3. நான் வியாதியிலே இருந்தபோதும் உங்க நெனப்புத்தான்
வேதனையில் துடிக்கும் போதும் உங்க நெனப்புத்தான்
நான் சுகமானேன் காரணம் நீங்க இயேசப்பா
இதை சொல்லிடாமல் எந்தன் ஆசை ஓய்ந்திடாதப்பா

4. பல கஷ்டங்கள் வந்த போதும் உங்க நெனப்புத்தான்
பெரும் நஷ்டங்கள் வநத போதும் உங்க நெனப்புத்தான்
கொன்று போட்டாலும் உம்மைத்தான் நம்பு வேனப்பா
என்று என் நெஞ்சில் குடி இருக்கும் தெய்வம் நீங்கப்பா

1515. எங்கள் இயேசு வல்லவரே

எங்கள் இயேசு வல்லவரே
இஸ்ரவேலை ஆள்பவரே
நல்லவரே! இயேசு நல்லவரே - அவர்
வல்லவரே! சர்வ வல்லவரே

1. தீயின் நடுவே நடந்தாலும்
எரிந்து போக மாட்டோமே - கடல்
அலை மேல் நடந்தாலும்
மூழ்கி போக மாட்டோமே

எங்கள் தேவன்
வல்லவரே! வல்லவரே - என்றும்
எங்களைக் காப்பவரே! காப்பவரே

2. சிங்கத்தின் குகையில் போட்டாலும்
தீங்கு என்றும் வராது
விஷப்பாம்பை மிதித்தாலும்
வாய்திறந்து கடிக்காது

1516. ஏழை என்னை மீட்டவர்

ஏழை என்னை மீட்டவர் நீரே
எளியோரைக் காப்பவர் நீரே
என் இதய தெய்வமே
உம்மை எப்படி மறப்பேனோ

வாழ்த்திடுவேன் வல்லவரை!
வணங்கிடுவேன் நல்லவரை!
போற்றிடுவேன் புண்ணியரை!
புகழ்ந்திடுவேன் பரிசுத்தரை!

1. பாவியாக இருக்கையில் என்னை
பாசத்தோடு தேடி வந்தீர்
பாவம் எல்லாம் கழிவிடவே - உம் ஜீவன் தந்தீரே
கள்வனென்று கண்டு கொண்டீர்
கண்டும் என்னை நேசிக்கிறீர்
காலமெல்லாம் உந்தன் அன்பை நினைக்க வைத்தீர்
இதயமதை கோயில் ஆக்கி இருக்கும் வரை
பூஜை செய்வேன் இல்லை என்று சொன்னால்
எந்த ஜீவனையும் விட்டுச் செல்வேன்

2. என் வாழ்க்கை படகின் மேலே
அலைவந்து மோதின போது
கடல் மீது நடந்து வந்த கர்த்தர் நீர்தானே
அலைகளையும் அடக்கினீரே
புயல் காற்றை நிறுத்தினீரே
கரம்பிடித்து எந்தன் வாழ்வை உயரத்தில் நிறுத்தினீரே

3. உயிர் உள்ள நாட்கள் எல்லாம்
ஓடி ஓடி ஊழியம் செய்வேன்
உம்மைப் பாடி பாடி உயர்த்திடுவேன்
அப்பா உம் சந்நிதியில் எப்போதும் சந்தோஷம் (2)
எப்பொழுதும் உந்தன் அன்பை
நினைத்தாலே பேரின்பம்

1517. ஏழை எந்தன் ஜெபமதை

ஏழை எந்தன் ஜெபமதை கேட்பவரே
என் கண்ணீரைப் பாருமய்யா
என் மனதின் பாரங்களை அறிந்தவரே
என் முன்னாலே வாருமய்யா

காண்கின்ற தெய்வம் நீரய்யா
என்னை கண் திறந்து பாரய்யா
இயேசய்யா என் நெசய்யா
பேசிடும் தெய்வம் நீரய்யா

1. என் பாவங்கள் ஏற்றுக் கொண்டீர்
என்னையும் நீர்மிட்டுக் கொண்டீர்

2. இரக்கமுள்ள என் தெய்வமே - உம்
கரம் நீட்டி அற்புதங்கள் செய்திடுமே

3. தேவா உம்மால் கூடாதது
தேசத்திலே இல்லை ஐய்யா - ஒரு
வார்த்தை சொன்னால் போதுமய்யா

4. வருவேன் என்று சொன்னீரய்யா
எப்போது நீர் வருவீரய்யா
ஏங்குகிறேன் தினம் நானய்யா

1518. ஏழு ஸ்வரங்களில் எத்தனை

ஏழு ஸ்வரங்களில் எத்தனை ராகம்
என்னைப் பாடவைத்த இயேசுவே என் ஜீவராகம்

1. பாட்டுக்கு ஜீவன் ஆவியானவரே என்னை
பாடவைத்தவர் பரிசுத்தர் இயேசுவே
ராகங்களும் இசை பாவங்களும்
லயதாளங்களையும் நானறியேனே
துதிகள் நடுவிலே! வாசம் செய்பவர்
ராகம் தாளம் சொல்லித் தருவாரே

2. இயேசுவின் நாமம்! நாவிலிருந்தால்
ஏழு ஸ்வரங்களும் சங்கமமே
இசையினில் மயங்கிடும் இயேசுவைப் பாடிட
ராகமென்ன தாளமென்ன தடை சொல்லுமோ

3. தாவீது பாடி வைத்தான் சங்கீதப் பாட்டொன்று
சாலமேன் பாடினான் உன்னத பாட்டொன்று
ஆவியில் நானும் பாடின பாட்டு
அபிஷேகத்தில் நிறைந்திடு கேட்டு
அற்புத தேவனை அதிசய நாதனை!
நாதஸ்வரம்! மேளதாளம் முழங்கிடவே

1519. ஒரு தந்தையைப் போல

ஒரு தந்தையைப் போல - நம்மை தூக்கி சுமப்பவர்
நம் தாயினும் மேலாய் - நம்மில் அன்பு வைத்தவர்
யார்! யார்! யார் தெரியுமா? அது
பெத்தலையில் பிறந்தவராம் சத்திரத்தில் கிடந்தவராம்
பாவிகளை இரட்சிக்க வந்தவராம் - அவர்
யார்? யார்? யார் தெரியுமா? அவர்தான்?
அவர்தான்? அவர்தான்? அவர்தான் இயேசு

1. உண்மையாக உன்னில் அன்பு வைத்தவர் அவரே
உலகத்தோற்ற முதல் தெரிந்த கொண்டவர் அவரே
உனக்காகப் பாடுகளை ஏற்றுக் கொண்டாரே
உன்னை மீட்க தன்னுயிரை தந்து விட்டாரே
அவர்தான்? அவர்தான்? அவர்தான் இயேசு

2. மரித்துவிட்டார் இயேசு என்று கவலைப்படாதே
மீண்டும் உயிர்த்து விட்டார் இயேசு இதை மறந்துவிடாதே
நீ வணங்கும் தெய்வம் கல்லும் மண்ணுமில்லையே
நீ அழைத்தால் ஓடி வந்து பேசும் தெய்வமே
அவர்தான்? அவர்தான்? அவர்தான் இயேசு

1520. ஓசான்னா! ஓசான்னா! தாவீ

ஓசான்னா! ஓசான்னா! தாவீதின்
குமாரனுக்கு ஓசான்னா - 2
ஓசான்னா! ஓசான்னா! உன்னதத்தில்
ஓசான்னா! இயேசுவுக்கு ஓசான்னா

1. கழுதை! குட்டியாம்! மரியின் மீது பவனி வரும்
கர்த்தாதி! கர்த்தனாம்! இயேசு ராஜனுக்கு ஓசன்னா!
ஓசன்னா பாடுங்கள்! இயேசுவை தேடுங்கள்!
பாசம் வைத்தவர் பவனி வருகிறார்

2. துன்பங்கள் வரலாம் துயரங்களைத் தரலாம்
தொல்லகள் கஷ்டங்கள் சூழ்ந்துன்னை நெருக்கிடலாம்
தோல்விகள் வந்தாலும் ஜெயமாய் மாற்றுவார்
துவண்டு போகாதே! தூயவர் வருகிறார்

3. தூற்றுவோர் மத்தியில் என்னை
தேற்ற எவருமில்லை என்று
நீ திகையாதே என்னை தேற்றும்
கிறிஸ்து உண்டு நம்பிவா இயேசுவை நன்மைகள் பெறுவாய்
நல்ல சமயமே நாடிவா இயேசுவை

4. சோதனை நேரத்தில் துணையாக வந்திடுவார்
வேதனை வந்தாலும் கலங்காதே என்றுரைப்பார்
சந்தோஷ நாயகன் சமாதானப்பிரபுவாய்
உனக்காய் வருகிறார் உன்னை உயர்த்துவார்

1521. ஓ...ஓ.....ஓ......மனிதனே

ஓ...ஓ.....ஓ......மனிதனே - நீ
எங்கே போகின்றாய்
ஒரு தேவன் இருக்கிறார்
உன்னை அன்பாய் அழைக்கிறார்

1. பூவும் புல்லும் போல நீ புவியில் வாழ்கிறார்
பூக்கள் உதிர்ந்து வாடுமுன்னே -
புவியில் நீயும் மடிகின்றாய்
உனக்கொரு தேவன் அவர் தந்த
ஜீவன் மறந்து போகின்றாய்

2. ஆடி அலையும் வாழ்க்கை ஆறடியில்
அடங்குதே நூறடி ரோட்டில் நடந்தாலும்
நேரடி விபத்து வருகுதே
இதை உணராமல் இயேசு
இல்லாமல் எப்படி வாழ்வாய்

1522. கர்த்தாவே உம்மை நான்

கர்த்தாவே உம்மை நான் நம்புவேன் - எந்தக்
காலமும் உம் துணை தேடுவேன் - உம்
பாதம் ஒன்றை தினம் நாடுவேன் - எந்தன்
வாழ் நாளெல்லாம் அது போதுமே

1. ஆயிரம்நாவுகள் போதுமோ - எந்தன்
ஆத்தும நேசரைப் போற்றிட
அற்புத தேவன் அன்பின் சொரூபன்
அதிசய தேவனை ஸ்தோத்திரிப்பேன்
அன்பரின் நேசத்தில் அகமகிழ்வேன்

2. சத்துரு சிங்கம் போல் நெருங்குமோ
இரத்தக் கோட்டைக்குள்ளே நானும் இருக்கிறேன்
எது வந்த போதும் நான் அஞ்சிடேனே
என் மீட்ப இயேசு என்னோடு உண்டு உண்டு
என்பதொரு நம்பிக்கை - இயேசு உண்டு
என்றெண்ணி நான் உயிர் வாழ்வதுண்டு

1523. கர்த்தாவே உம்மை நம்புவேன்

கர்த்தாவே உம்மை நம்புவேன்
உம்மில் மகிழ்ந்து களி கூறுவேன்

1. பூர்வ நாளை நினைத்து
உம்மை புகழ்ந்து பாடுவேன்
புண்ணிய உம் செயலை
எண்ணி போற்றிப் பாடுவேன்

2. மரண தூதன் கையில்
இருத்து மீட்டுக் காத்தவா
மறக்க என்னால் கூடுமோ
மன்னவா உம் செயலினை

3. நெஞ்சம் நொந்து வாடும்
போது தஞ்சம் ஆனீரே
வாடி நானும் நின்ற போது
தேடி வந்து தேற்றினீர்

1524. கல்நெஞ்சமே! கல்நெஞ்சமே

கல்நெஞ்சமே! கல்நெஞ்சமே
கல்வாரி அன்பை நீ மறந்தாயே
கல்லுக்கு உள்ளேயும் ஈரமிருக்கு
உனக்குள் தேவன் தந்த ஜீவன்இருக்கு
உன் நெஞ்சில் ஈரமில்லையே - உன்
நேசரை மறப்பதில் நியாயமில்லை

1. ஊரும் இல்லை உறவும் இல்லை
உனக்கொரு சொந்தங்கள் இல்லை
உலகம் உன்னை வெறுத்திடும் வேளை
உன்னைத் தேடி இயேசு வந்தார் தன் இரத்தத்தால்
உன்னை தன் சொந்தம் என்றார்

2. நிந்தைகள் உன்னை நெருக்கிடும் போது
நிம்மதி இல்லாமல் அலைந்தாய்
நேசரின் பாதம் தஞ்சம் என்று வந்தாய்
இயேசுன்னை தேற்றி நின்றார் - தன் ஜீவனை
உனக்காய் தியாகம் செய்தார்

3. நியாயங்கள் இல்லா உலகினில் உனக்கு
நீதியின் சூரியன் இயேசு
நினைத்திடு அவர் செய்த நன்மைகளை
நித்தமும் காத்திடுவார் - உன்
நெஞ்சத்தில் இயேசுவை நினைத்திடுவாய்

1525. கன்மலை வெடித்தது

கன்மலை வெடித்தது கல்லறை பிளந்தது
கர்த்தர் இயேசுவின் பொன்னுடல் உயிர்தெழுந்து
முடிந்தது இயேசுவின் கதை முடிந்தது - என்று
எண்ணிய சாத்தானை முறியடித்தது

வெற்றி! வெற்றி! நமக்கு! வெற்றி!
வெற்றி! நமக்கு! வெற்றி!
கிறிஸ்துவின் வெற்றி!
சிலுவையில் வெற்றி!

1. வாரினால் அடித்ததாலே வெற்றி
வாசைகள் மாறிபொழிந்ததாலே வெற்றி
விலாவில் ஈட்டி பாய்ந்த தாலே வெற்றி
வீர இரத்தம் சிந்தியதால் வெற்றி

2. காட்டிக் கொடுத்த கயவனாலே வெற்றி
முப்பது வெள்ளிக்காசினால் நமக்கு வெற்றி
மூன்று ஆணியில் நமக்கு வெற்றி
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் வெற்றி

3. ஐந்து கண்ட மக்களுக்கும் வெற்றி
ஐந்து காயம் ஏற்றதாலே வெற்றி
அவரை ஏற்றுக் கொண்ட நமக்கும் வெற்றி
அந்த சாத்தானை முறியடித்தார் வெற்றி

1526. கண்ணுக்குள்ளே கண்ணீர்

கண்ணுக்குள்ளே கண்ணீர் வருவதும் ஏனோ
நெஞ்சுக்குள்ளே என்னை மறைந்ததும் ஏனோ
பேர்சொல்லி அழைத்தவன் தேவனல்லவோ
உனக்குள் வாழ்வது என் ஜீவனல்லவா

எப்படி நான் மறப்பேன் - உன்னை
எப்படிக் கைவிடுவேன் - எப்போதும் உன்னோடு
இருக்கின்றேன் நானே
உனக்குள் கலக்கங்கள் வருவதும் வீனே

1. தாயின் கருவில் உருவாகுமுன்னே உன்னைக் கண்டேன்
எத்தனை பேரிந்தும் உன்னை மட்டும் தெரிந்து கொண்டேன்
என்னேடக் கண்களை நான் உம் மேலதான் வச்சிருந்தேன்
என் நாளும் உனக்கு நல், ஆலோசனை சொல்லித் தந்தேன்
ஏனிந்த வேதனைகள்இ வீணான சோதனைகள்
என்னை நீ மறந்ததெல்லாம் உன்னோட பாவங்கள்
ஆனாலும் நான் மன்னித்தேன் - உன்னை நான் நேசித்தேன்
மண்ணென்று நினைவு கூர்ந்தேன்

2. ஆகாரின் அழுகுரல் கேட்டவரும் நான்தானே
அவளின் அன்பு மகன் தாகம் தீர்த்த தேவன் தானே
அன்னாளின் கண்ணீரைக் கண்டவரும் நான் தானே
ஆறுதலாய் பிள்ளைச் செல்வம் தந்த கர்த்தர் நானே
ஏத்தனை அற்புதங்கள் - என்னென்ன மகத்துவங்கள்
உன் வாழ்வில் பெற்றுக் கொண்ட-கோடான கோடி நன்மைகள்
எண்ணிப்பாரு தேவ மகிமையை - என்னை
விசுவாசித்தல் காண்பாயே - இன்னமும் அழுவதேன்

1527. கண்ணோக்கிப் பாருமைய்யா

கண்ணோக்கிப் பாருமைய்யா
என்பாவக் கறைகளைக் கழுவுமைய்யா
எண்ணிக்கை அடங்காத என் பாவங்கள்
நீர் மன்னித்து பரிசுத்த மாக்கிடுமே

1. தேவனே உமது கிருபையின்படியே
எனக்கு இரங்குமே உந்தன் மிகுதியான
இரக்கங்களினால் - என்னை சுத்தம் செய்யுமே
இயேசுவே எங்கள் அக்கிரமம் நீங்க சுத்திகரித்திடுமே
நேசரே எங்கள் சாபங்கள் (நீங்க) முற்றிலும் கழுவுமே

2. தூற்றிடும் மாந்தர் நடுவினில் எம்மைத்
தேற்றிடும் கிறிஸ்துவுண்டு - என்னை
ஆற்றியே தினம் ஆறுதல் சொல்லும்
ஆத்ம - மணாளனுண்டு இயேசுவின் கரங்களில்
இருக்கின்ற என்னை பறிப்பவர் எவருண்டு
இயேசுவின் கண்கள் என் மீதுருக்க
எனக்கென்ன குறை உண்டு
வாழ்வில் எனக்கிணை எவருண்டு

1528. கூடாதது ஒன்றுமில்லையே

கூடாதது ஒன்றுமில்லையே - இயேசுவால்
கூடாதது ஒன்றுமில்லையே
மனிதனால் கூடாதது தேவனாலே கூடும்
கூடாதது ஒன்றுமில்லையே - இயேசுவால் (2)
கூடாதது ஒன்றுமில்லையே - இயேசுவால் (2)

1. உங்கள் பாவம் போக வேணுமா? இயேசுவாலே கூடுமே
உங்கள் சாபம் நீங்க வேணுமா? இயேசுவாலே கூடுமே
சந்தோஷம் வேணுமா? இயேசுவாலே கூடுமே
சங்கீதம் பாடவேணுமா? இயேசுவாலே கூடுமே
எல்லாம் கூடுமே - இயேசுவால் எல்லாம் கூடுமே (2)

2. சமாதனம் வேண்டுமா? இயேசுவாலே கூடுமே
உங்க சஞ்சலம் நீங்க வேண்டுமா? இயேசுவாலே கூடுமே
வியாதி நீங்க வேண்டுமா? இயேசுவாலே கூடுமே
உங்க வறுமை நீங்க வேண்டுமா? இயேசுவாலே கூடுமே
எல்லாம் கூடுமே - இயேசுவால் எல்லாம் கூடுமே (2)

3. கேட்பது கிடைக்க வேணுமா? கர்த்தரை தினமும் தேடுங்க
உங்க குறைகள் தீரவேணுமா? காலை தோறும் ஜெபியுங்க
அற்புதம் நடக்க வேணுமா? அனுதினமும் துதியுங்க
ஆவியின் வல்லமை வேணுமா? அவர் சமூகத்தில் அமருங்க
எல்லாம் கூடுமே - இயேசுவால் எல்லாம் கூடுமே (2)

1529. கொஞ்சும் கிளி பேசுமே

கொஞ்சும் கிளி பேசுமே உந்தன் அன்பை
கூவும் குயில் பாடுமே கல்வாரி அன்னை
எத்தனையோ மீறுதல் இயேசுவே ஆறுதல்
விந்தைக் கிறிஸ் இயேசுவே
உம்மைக் காண கண்கள் ஏங்குதே
தந்தையே உம் அன்பைப் பாட
எந்தன் நெஞ்சம் ஏங்குதே

1. வேடன் விரித்த வலைளில் சிக்கி
பரிதவிக்கும் கலை மானப் போல்
சாத்தானின் பிடியில் இருந்து
என்னை மீட்ட ரட்சகனே

2. சிறகொடிந்த பறவையைப் போல
நம்பிக்கையை இழந்த போது
என்னைக் கரம் பிடித்தவரே
என்றும் தாங்கி நிற்பவரே

3. திசை மாறிய கப்பல் போலே
சீர்குலைந்து தவிக்கும் போது
வழிகாட்டும் கலங்கரை விளக்காய்
வாழ்வு தந்த நாயகனே

4. நாதியில்லை என்று சொல்லி
பாதியில் கைவிட்டது சொந்தம்
ஆதியில் உம் அநாதி சிநேகம்
அதுவே என் நித்திய பந்தம்
ஆண்டவரே நீர் என் சொந்தம்

1530. கொல்கதா மலை மேலே

கொல்கதா மலை மேலே நானொரு காட்சி கண்டேன்
குலை நடுங்கித் துடித்தெழுந்தே சிலுவையைக் கண்டேன்
பாய்ந்தோடுதே இரத்தம் ஆறாய்
பார்க்க முடியுமோ - அந்த கோரக் காட்சியை
கொல்கதாவில் நான் கண்டேன் கோரக் காட்சியை
கூற முடியுமோ என்னால் அந்தக் கொடுமையை

1. கன்னத்திலே அடித்து காரி உமிழ்ந்தான்
ஈட்டியை எடுத்தே நெஞ்சினை பிளந்தான்
கல்லும் கரையும் உள்ளம் உருகும் இரட்சகரை

2. முள்முடி தலையில் ஓங்கி அறைந்தார்
கால் கரங்களின் ஆணிகள் அடித்தார்
இரத்தமும் ஆறாய் பாய்ந்தோடிடவே இரட்சகரை

3. காற்றும் கடலும் அவர் சொல்ல அடங்கும்
சாத்தானின் சேனை அவர் முன் முடங்கும்
வல்லமை உள்ளவர் ஏன் மௌனமானார் நமக்காகவே

1531. கொஞ்சம் நேரம் நின்று

கொஞ்சம் நேரம் நின்று பாருங்க - நாங்கள்
கொஞ்சம் சொல்லுறதைக் கேளுங்க
வாங்க வாங்க ஓடி வாங்க ஒரு செய்தி
நீண்ட காலம் வாழ வைக்கும் நற்செய்தி

1. கள்ளு சாராயம் குடிக்காதீங்க - பிள்ளைகளை
நடுத்தெருவிலே நிறுத்தாதீங்க
கண்ணால் பாருங்க - நாங்க சொன்னா கேளுங்க
இல்லாததை சொல்லவில்லை உண்மை தானுங்க

2. கஞ்சா சுருட்டும் பிடிக்காதீங்க
நுரையீரல் எல்லாம் வெந்து போகுங்க
கண்ணால் பாருங்க - நாங்க சொன்னா கேளுங்க
இல்லாததை சொல்லவில்லை உண்மை தானுங்க

3. பீடி சிகரெட் பிடிக்காதீங்க வீணா
லொக்கு லொக்குன்னு இருமாதீங்க
கண்ணால் பாருங்க - நாங்க சொன்னா கேளுங்க
இல்லாததை சொல்லவில்லை உண்மை தானுங்க

4. வெத்தலை பாக்கு போயிலை வேண்டாங்க -
உங்க நெஞ்சுல புற்றுநோய் வருமுங்க
கண்ணால் பாருங்க - நாங்க சொன்னா கேளுங்க
இல்லாததை சொல்லவில்லை உண்மை தானுங்க

5. பாவ சாபம் நீங்கிப் போகுங்க - உங்க
வியாதி வறுமை ஓடிப் போகுங்க
இயேசு சாமியை உள்ளத்திலே ஏற்றுக் கொள்ளுங்க
சமாதானத்தோடு நீண்ட காலம் வாழுங்க

1532. கொக்கரக்கோ! கொக்கரக்கோ

கொக்கரக்கோ! கொக்கரக்கோ! என்று சேவல் கூவுது
காலையிலே கண்விழித்து கர்த்தரையே தேடுது
கொக்கரக்கோ பாஷையிலே அல்லேலூயா பாடுது
கொடுத்த இயேசுவுக்கு நன்றி சொல்லி துதிக்குது

1. தூக்கம் வெறுக்குது தூங்க மறுக்குது
தூங்குவோரை தினமும் எழுப்பிடுது
காலை நேரம் இன்ப ஜெப தியானம் என்று பாடுது
கடமைகளை மறந்து தூங்கும் மனிதர்களை எழுப்புது

2. அற்புதங்கள் செய்ததாம் தேவாதிதேவனை
அறியேன் என்னு சொன்ன பேதுருவை
ஆண்டவராம் இயேசுவை நீ மறுதலிக்கலாகுமோ
அவர் சொன்ன வார்த்தை இப்போ - உண்மை ஆகிப்
போனதோ அவனைப் பார்த்து மூன்று முறை சேவல்
கூவி உணர்த்தது

3. அதிகாலை வேளையில் ஆண்டவராம் இயேசுவை
தேடினால் கண்டைவோம் என்றாரே
ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படிந்த சேவலும்
அல்லேலூயா என்று சொல்லி சேவல் கூவி துதிக்குது

1533. கேளுங்கள் தரப்படும்

கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் தேடுங்கள் கிடைக்குமென்றாரு - இயேசு
தஞ்சம் என்று தன்னிடத்தில் ஓடிவரும் மக்களுக்கு நன்மைகளைச் செய்து வந்தாரு

1. பெத்தலையின் ஊரினிலே சத்தரத்தின் தொழுவத்திலே இயேசு சாமி பிறந்து விட்டாரு சூசை மரி மகனாய் வளர்ந்து வந்தாரு ஆறு வயதினிலே ஆரம்ப பள்ளியிலே பாடம் படிக்கச் சென்றாரு பரிசுத்த ஆகமங்கள் அறுத்து ஆறினையும் ஐயமின்றி கற்றறிந்தாரு மன்னாதி மன்னவரு மனுக்குலத்தின் இரட்சகரு மானிடரை மீட்க வந்தாரு

2. பன்னிரண்டு வயதிலே பஸ்கா பண்டிகைக்கு தேவாலயம் சென்றாரு எருசலேம் தந்தையார் செய்து வந்த தச்சுத் தொழிலையே தனயனும் செய் வந்தாரே தங்க உழவர்கள் உழுதிட கலப்பைகள் செய்து கொடுத்து வந்தாரு அறிஞர்கள் தலைவர்கள் வியந்திட ஆலயத்தில் போதனைகள் செய்து நின்றாரு

3. முப்பதாம் வயதிலே யோர் தான் நதியிலே ஞானஸ்நானம் எடுத்தாரு யோவானால் முழ்கிஸ்நானம் பெற்றாரு இவர் தானே என்னுடைய நேசகுமாரன் என்று பரலோகம் திறந்து சொன்னாரு

4. நன்றி கெட்ட உலகுக்கு நன்மை செய்த இயேசுவை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தான் யூதாஸ் சத்தமின்றி பிடித்துக் கொடுத்தான் முப்பது வெள்ளிக் காசை முன்னாலே வைத்தவுடன் நண்பனையே காட்டிக் கொடுத்தான் யூதாஸ் நாண்டு கொண்டு செத்து மடிந்தான்

5. சேனைகளின் தேவனை சிலுவையில் அறைந்ததால் சந்தோஷம் அடைந்தார்கள் சதிகாரர் சாத்தானின் தலையினை சிலுவையில் நசுக்கிட மரித்ததை மறந்தார்கள் தேவ ரகசியத்தை அறியார்கள்

6. மரணத்தை ஜெயித்த மன்னாதி மன்னவரு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் இயேசு பரலோகம் சென்றடைந்தார் ஆயத்தம் உள்ளவரை அகாயம் சேர்த்திட ஆண்டவர் வந்திடுவாரு மத்திய வானத்தில் வந்திடுவாரு பரலோக நாட்டிலே நமக்கொரு வீட்டினை ஆயத்தப்படுத்துகின்றாரு பரிசுத்த வான்களை தன்னோடு அழைத்துச் செல்ல இயேசு வேகம் வருவாரு

F-Min/Funky Pop/T-95

1534. சந்தோஷமானால் சங்கீதம்

சந்தோஷமானால் சங்கீதம் பாடு
துன்பமேயானால் ஸ்தோத்திரம் பாடு
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் அல்லேலூயா
அல்லேலூயா ஓசன்னா
அல்லேலூயா ஓசன்னா

1. நீ போகும் இடமெல்லாம் உன்னோடு வருவார்
நிர் மூலமாகாமல் கிருபையாய் காப்பார்
தண்ணீரை நீ கடப்பாய் நெருப்பினில் நீ நடப்பாய்
தீங்கொன்றும் அணுகாது (2)

2. காரிருள் சூழ்ந்த வேளையில் நம்மை
காத்திட உலகினில் எவருமே இல்லை
நம்பிக்கை நாயகனாம் இயேசுவை நீயும் நம்பு
நீதியின் சூரியனாய் நித்தமும் காத்திடுவார்

3. ஆபத்துக்காலத்தில் இயேசுவை நோக்கி
அழைத்திடு உன்னை விடுவித்து காப்பார்
திகையாதே கலங்காதே தேவாதி தேவனுண்டு
தினம் தினம் துதித்திடுவாய்
ஸ்தோத்திரம் செய்திடுவாய்

C-Maj/16 Beat/T-85

1535. சத்தியவேதம் தந்தவர்

சத்தியவேதம் தந்தவர் உத்தமர் இயேசுவுக்கு
ஐத்திகள் சொல்லி பாடுவேன்
சங்கீதம் நான் பாட சாரீரம் தந்தவர்க்கு
ஸ்வரங்களின் மலர் சூடுவேன் - நான்

1. வேதமானது தேவன் தந்தது
தேவ வார்த்தைகள் நிறைந்தது அந்த
வார்த்தை தான் இயேசுவானது
எந்தன் நாவினில் ஒலிப்பது
பாவி என்னை அவர் பக்தனாக
துதிபாடிட வைத்தது
பக்தர்களின் பாதைக்கு நல்ல தீபம் அது
பாவமில்லாத தேவ ஆட்டுக்குட்டி
பரிசுத்தர் சொன்னது
பக்தியோடு இந்த வேதம்
படிப்பவர்க்கு பரலோகம் உள்ளது

2. வேதப்பிரியரை தேவப் புதல்வரை
சேதமடையாது காப்பது இரவும்
பகலும் இதை தியானம் செய்பவர்க்கு
இனிய வாழ்க்கையை கொடுப்பது
இம்மானுவேல் என்று நம்முடன் இருப்பது
இம்மட்டும் உதவி செய்யும் எபினேசர் அது
இந்த வேதம் தந்த வேத
நாயகனை எப்படி பாடுவேன்
ஸப்தஸ்வரங்கள் இசையொடு
ஒலிக்க ஏழை நான் பாடுவேன்

1536. சங்கீதப்பாட்டு - அது

சங்கீதப்பாட்டு - அது தாவீதின் பாட்டு
சாலமோன் பாடினான் உன்னதப் பாட்டு
எத்தனையோ பாட்டு அதை எல்லாம் நிப்பாட்டு
இயேசுவின் செல்லப்பிள்ளை பாடுகின்ற பாட்டு
அது ஸ்தோத்திரப்பாட்டு -
என் இயேசென்னும் பாட்டு

1. எரிகோவின் கோட்டை தகர்த்ததும் ஒரு பாட்டு
இயேசென்னும் மந்திரம் சொல்லி அவர்கள் பாடின பாட்டு
யோசுவா என்னும் பக்தன் பாட்டது (2)
என் பாட்டு தனிப்பாட்டு எல்லோர்க்கும்
சந்தோஷம் தரும் பாட்டு

2. சிறைச்சாலைக் கதவை திறந்ததும் ஒரு பாட்டு
சீலாவும் பவுலும் அன்று பாடின அந்தப் பாட்டு
சிங்கார பாட்டு அது சீயோனின் பாட்டு
சந்தோஷம் தரும் பாட்டு எந்நாளும்
சத்திய வேதப்பாட்டு

1537. சின்னச் சின்ன ஆசை

சின்னச் சின்ன ஆசை
அதைச் சொல்ல சொல்ல ஆசை
இயேசுவின் பின்னே போவது
ஒன்றே என்னோட ஆசை

இயேசுவைப் போல மாறிட ஆசை - என் நேசர்
இயேசுவைப் போல வாழ்ந்திட ஆசை - இந்த
உலகமோ என்னை மயக்குது - கர்த்தர்
கிருபையோ என்னைத் தடுக்குது

1. பாவத்தை வெறுத்து வாழ ஆசை - தேவ
கோபத்துக்கு தப்பித்திட ஆசை
சாபத்தை தொலைத்திடவே ஆசை வரும்
தண்டணைக்கு தப்பித்திட ஆசை
தேவனின் கிருபையில் வாழ ஆசை தான்

2. மாம்சத்தை வெறுத்து வாழ ஆசை - கொடிய
பிசாசை ஜெயித்து வாழ ஆசை
உலகத்தை பகைத்திடவே ஆசை
உத்தமராம் இயேசுவில் வாழ ஆசை
தேவனின் கிருபையில் வாழ ஆசைதான்

3. இயேசுவைப் போல பாடுகள் பட ஆசை
இயேசுவோடு ஆளுகை செய்ய
இயேசுவின் சிலுவை சுமக்க ஆசை
இயேசுவின் பின்னே செல்ல ஆசை
தேவனின் கிருபையில் வாழ ஆசைதான்

1538. சோப்பு வாங்கினா சீப்பு

சோப்பு வாங்கினா சீப்பு இலவசம்
இயேசு இரட்சிப்பு இலவசம்
இந்த சோப்பு வாங்கினா
பாவ மன்னிப்பு இலவசம்

1. விலை கொடுத்து வாங்கும் சோப்பில் வாசனை இருக்கும் - சில
உடம்புக்கு அது ஒத்துகாட்டி வியாதி உண்டாக்கும்
இயேசு என்னும் சோப்பில் அற்புத வாசனை இருக்கும் - ஜனங்க
பாவம் நீக்கி இரட்சிக்கின்ற வல்லமை இருக்க
இயேசு என்னும் சோப்பை யூஸ் பண்ணுங்க
பிசாசின் கிரியைகளை அழிக்கும் இந்த சோப்புங்க

2. இருதயத்திலே இருக்குதுங்க பலவகைப் பாவம்
எத்தனை சோப்புத் தேய்ச்சுக் குளிச்சாலும் போகாது சாபம்
நெஞ்சுக்குள்ளே இயேசுவை நீ கூட்பிட்டு பாரு நீசப்பாவமெல்லாம்
ஓடி மறைஞ்சு ஒளிஞ்சிடும் பாரு
இயேசுவைத்தான் நீங்க ருசித்து பாருங்க உங்க
துக்கமெல்லாம் சந்தோஷமாய் மாறுங்க

3. அமெரிக்கா ரஷ்யாவிலே செய்ததுமில்லீங்க
தென் ஆப்பிரிக்கா ஐரோப்பாவிலும் செய்ததுமிலீங்க
ஆசியாவின் கண்டத்திலே பிறந்த சோப்புங்க - நம்ம
இந்தியாவை இரட்சிக்க வந்த சோப்புங்க
பரலோக முத்திரை போட்ட சோப்புங்க இயேசு
இரத்தத்தாலே செய்து தந்த சோப்புங்க

4. இரட்சிப்பு வந்தா சந்தோஷம் இலவசம் - இயேசு
இரட்சகர் வந்தா சமாதானம் இலவசம்
வியாதிகள் வந்தா தெய்வீக சுகம் இலவசம் - கொடிய
வேதனை வந்தா நமக்கு ஆறுதல் இலவசம்
இயேசுவுக்குள் வல்லமை தான் இருக்குது - அவரை
ஏற்றுக் கொண்டா வியாதி எல்லாம் பறக்குது

1539. நடந்து வந்த பாதைகள்

நடந்து வந்த பாதைகள் எல்லாம் என் இயேசுவே
நித்தம் நித்தம் நினைத்துப் பார்க்கிறேன்
நான் கடந்து பாடுகள் எல்லாம் கர்த்தர் செய்த
நன்மைகளை எண்ணி துதிக்கிறேன்
நடக்கச் சொல்லித் தந்தவர் நடத்திக் காட்டுவார்
நெஞ்சைக் கொடுத்துப்பாரு இயேசு உன்னை தூக்கி நிறுத்துவார்

1. எத்தனை முறை நீயும் ஏமாந்து போயிருப்பே
யாருமில்லை என்று சொல்லி ஏங்கி ஏங்கி அழுதிருப்பே
முகத்தைப் பார்ப்பவன் மனிதன் அல்லவா
இதயத்தைக் காண்பவர் தேவன் அல்லவா

2. அனாதை என்றழுதா ஆண்டவன் தான் பொறுப்பாரா
அக்கிரமாங்கள் செய்திட்டாலும் இயேசு நம்மை வெறுப்பாரா
உள்ளங்கைகளில் உன்னை வரைந்தவர்
உனக்காய் சிலுவையில் ஜீவனை தந்தவர்
உன்னை மீட்கவே உயிரோடெழுந்தவர்

3. உனக்கொரு கஷ்டம் வந்தா
உறவுகள் கைகொடுப்பதில்லை
உன்னுடைய துயரங்களில் உனக்கு
பங்கு கொள்ள வருவதில்லை
உள்ளத்தின் பாரங்கன் அறிந்தவர் இயேசுதான்
உனக்கு உதவிட வருபவர் இயேசுதான்
நெஞ்சுக்குள்ளே நீ நினைத்தால்
ஓடிவரும் தேவன்தான்

1540. நன்றி நன்றி என்று சொல்லி

நன்றி நன்றி என்று சொல்லி நானும் பாடுவேன்
நாதா உம்மை எண்ணித் துதித்திடுவேன்
நீரே எந்தன் துணையப்பா
இல்லை உமக்கு நிகரப்பா

1. துன்பங்கள் வந்தாலும் துயரங்கள் சூழ்ந்தாலும்
இன்பங்கள் எந்தன் வாழ்வில் இல்லாமல் போனாலும்

2. நாதியற்ற மனுஷனுக்கு நீதியுள்ள தெய்வமப்பா
நம்பினோரை பாதுகாத்து வாழவைக்கும் தேவனப்பா

3. தாகம் தீர்க்கும் ஜீவநதி தரை இறங்கி வந்தீரே
ஜீவ அப்பம் ஜீவ தண்ணீர் தந்து என்னை போஷித்தீரே

4. இருப்பவராய் இருப்பவரே எனக்குள்ளே வாழ்பவரே
ஏழை எந்தன் குறைவுகள் எல்லாம் நிறைவாக்கும் நல்லவரே

5. சோர்ந்து போன நேரத்திலே புதிய பெலன் தந்தீரே
சோதனையை சகித்து வாழ புதிய கிருபை அளித்தீரே

6. இழந்து போன சகலத்தையும் திரும்ப எனக்கு தந்தவரே
இரட்டிபப்பான நன்மைகளாலே திருப்தியாக்கி மகிழ்ந்தவரே

1541. நான் உம்மைப் பிரிந்தால்

நான் உம்மைப் பிரிந்தால் வாழ்வேது ஐயா
நானும்மை மறந்தால் உயர்வேது ஐயா

1. நான் போகும் பாதை நீர் கூட வந்தீர்
நான் நிற்கும் போது நிழலாக நின்றனீர்
நான் தூங்கும் நேரம் நீர் தூங்கவில்லை
நான் உறங்கும் போது நீர் உறங்கவில்லை
ஒரு போதும் உம்மை நான் பிரிவதும் இல்லை
பிரிவொன்று வந்தால் என் உயிர் வாழ்வதில்லை

2. துன்பங்கள் ஆயிரம் சூழ்ந்திட்ட போது
துணையாக வந்த என்னைத் தேற்றீனீரே
எண்ணங்கள் எல்லாம் உன் மீது ஐயா
என்னை ஆளுகின்ற நேசர் நீரய்யா

3. எரிகோவின் கோட்டை கண்ணெதிரே இல்லை
எதிர்த்தின்ற சாத்தான் என் அருகே இல்லை
எதிர்நிற்கும் செங்கடல் ஒன்றாக இல்லை
தன் என்று சொன்னால் நான் உம்மோட பிள்ளை

4. கோடான கோடி செல்வம் வந்தாலும்
உம்மைப்பாடி பாடி உயிர் வாழ்வேனாய்
பாடி பாடி உயிர் வாழ்வேனய்யா
வேறொன்றும் வேண்டாம் நீர் மட்டும் போதும்
நீர் இல்லையென்றால் எல்லாமும் ஓடும்

1542. அகிலமெங்கும் செல்ல

அகிலமெங்கும் செல்ல வா
ஆண்டவர் புகழை சொல்ல வா
மீட்பின் ஆண்டவர் அழைக்கிறார்
கீழ்படிந்து எழுந்து வா

1. ஆழத்தில், ஆழத்தில்,
ஆழத்தில் வலை வீசவா
ஆயிரமாயிரம் மனங்களை
ஆண்டவர் அரசுடன் சேர்க்க வா
திருச்சபையாய் இணைக்க வா

2. தேவை நிறைந்த ஓர் உலகம்
தேடி செல்ல தருணம் வா
இயேசுவே உயிர் என முழங்கவா
சத்திய வழியை காட்ட வா

3. நோக்கமின்றி அலைந்திடும்
அடிமை வாழ்வு நடத்திடும்
இளைஞர் விலங்கை உடைக்க வா
சிலுவை மேன்மையை உணர்த்த வா

1543.அதிகாலை நேரம் ஆண்

அதிகாலை நேரம் ஆண்டவர் சமூகம்
அமைதலாய் காத்திருப்பேன்
என் இயலாமை மௌனம் அறிவிக்க
அவரைப் போலாவேன்

1. வடதிசை வாழும் என் குடும்பம்
உடன் என் நினைவில் கலந்துவிடும்
தேவனின் வலுக்கரம் என் கரம் அலட்ட
வல்லமை தேவன் வெளிப்படுவார்

2. இலட்சியத்தோடு அர்த்தமுள்ள
பொறுப்பை ஏற்று முனைந்த பின்னர்
அனைவரின் உள்ளமும் சங்கமமாகும்
ஒன்றியம் வழங்கும் தேவனே மகிழ்வார்

3. தனக்கென வாழ நினைவிலும் மறந்து
மற்றவர் மீது நாட்டம் கொண்டால்
சுவிசேஷம் தானாய்ச் சிதறியே வேகம்
சமுகத்தை சீக்கிரம் வசப்படுத்தும்

1544.அப்பா இயேசு நீங்க

அப்பா இயேசு நீங்க வந்தா சந்தோஷம் எனக்கு
நீங்க இல்லா ஆராதனை வேண்டாம் எனக்கு
வாருங்கப்பா வரம் தாருங்கப்பா
கேளுங்கப்பா ஜெபம் கேளுங்கப்பா

1. தாவீதைப் போல் நடனமாடி உம்மை போற்றுவேன்
தானியேல் போல் ஜெபித்து உந்தன் பாதம் அமருவேன்
பல கோடி கோடி நாவுகள் உம்மை உயர்த்திட
முழங்கால்கள் உந்தன் நாமத்திற்கு தொழுது பணிந்திட

2. உம்மை நான் ஆராதித்தால் தோல்வி எனக்கில்லை
உம்மை நான் ஸ்தோத்தரித்தால் தொல்லை எனக்கில்லை
நீங்க செய்த நன்மைக்கு நான் என்னத்தை செலுத்துவேன்
நாள் முழுதும் உந்தன் பாதம் தொழுது மகிழ்வேன்

3. உயிரோடு இருக்கும் வரை உம்மை பாடுவேன்
உந்தன் நாமம் உயர்த்திடவே உலகில் வாழுவேன்
நான் உமது அடியேன் தான் ஆசீர்வதித்திடும்
உமக்கு ஸ்தோத்திர பலிகள் செலுத்தி மகிழ்ந்து பாடுவேன்

1545. இயேசப்பா! இயேசப்பா!

இயேசப்பா! இயேசப்பா! இயேசப்பா - நான்
உன்னுடைய மகன் அல்லவா
இயேசப்பா! இயேசப்பா! இயேசப்பா - நான்
உம்மைப் போல மாறவேணுமே - இயேசப்பா

1. இரவெல்லாம் ஜெபித்து ஜெயம் பெற்றீரய்யா
இன்னல்களை சுமந்து இன்பம் அளித்தீரய்யா
நான் வாழ உன் ஜீவன் தந்தீரய்யா - நீர்
என்னில் வாழ என்னை நான் தந்தேனய்யா

2. தந்தையைப் போல தூக்கி சுமந்தீர்
நிந்தை அவமானங்களை எனக்காக சகித்தீர்
ஏழைக்கும் எளியோர்க்கும் இரட்சகரே
எங்க வாழ்வுக்கு வழி காட்ட வந்தவரே

3. கடல் மேலே நடந்த கர்த்தாதி கர்த்தன்
புயல் காற்றை நிறுத்தின தேவாதிதேவன்
கடலுக்கும் எல்லையைக் குறித்தவரை எங்க
கவலை எல்லாம் தீர்த்து கண்ணீர் துடைத்தவரே

4. பாவிகளை மீட்க மரித்த தெய்வம்
பாடுகளை சிலுவையிலே ஏற்றீரய்யா
மரணத்தின் கூரினை நீர் ஓடித்தீரய்யா
பாதாளத்தை ஜெயித்து எழுந்தீரய்யா

1546. அழைத்தவர் உன்னை நட

அழைத்தவர் உன்னை நடத்திச்செல்வாரே கலங்காதே
கலங்காதே மனம் கலங்காதே
அழைத்தவர் உன்னை நடத்திச் செல்வாரே
கலங்காதே நீ கலங்காதே

1. செங்கடலும் உன்னைக் கண்டு அலைபுரண்டு வந்தாலும்
யோர்தானும் உன்னகைக் கண்டுகரை புரண்டு வந்தாலும்
கலங்காதே மனம் திகையாதே
அழைத்தவர் உன்னை
நடத்திச் செல்வாரே
கலங்காதே நீ கலங்காதே

2. சிங்கத்தின் கெபிக்குள்ளே உன்னைத்தூக்கிப் போட்டாலும்
எரிகின்ற சூளையிலே உன்னைத்தூக்கிப் போட்டாலும்
கலங்காதே மனம் திகையாதே
அழைத்தவர் உன்னை விடுவிப்பாரே

3. யேசபேலும் உன்னைக் கண்டு எதிர்த்து வந்தாலும்
ஆமானும் உன்னைக்கண்டு கலகம் தான் செய்தாலும்
கலங்காதே மனம் திகையாதே
அழைத்தவர் உன்னை உயர்த்திடுவாரே

4. எரிகோவும் உன்னைக் கண்டு எதிர்த்து நின்றாலும்
வெள்ளம் போல சாத்தானும் உன் எதிரே வந்தாலும்
கலங்காதே மனம் திகையாதே
அழைத்தவர் உனக்கு உதவி செய்வாரே

5. கேரீத்தும் உன்னைக் கண்டு வற்றிதான் போனாலும்
காகம் உனக்கு அப்பம் தான் கொடாமல் போனாலும்
கலங்காதே மனம் திகையாதே
அழைத்தவர் உன்னை போஷிப்பரே

1547. எழும்பும் வரையிலும் கிரா

எழும்பும் வரையிலும் கிராமங்கள் பாழாய்க் கிடக்குதே
எழும்பிடு வாலிபரே எழும்பிடு கன்னியரே நீ -2

கர்த்தரின் வருகையோ மிகவும் சமீபமே
நியாயதீர்ப்போ நெருங்கி வருகுதே
இன்னும் காலத் தாமதம் ஏனோ
எழும்பிடு வாலிபரே-2 எழும்பிடு கன்னியரே

1. இமயம் முதல் குமரி வரை ஜெப
தூபம் ஏற்றிடுவோம்
நதியளவு கண்ணீர் விட்டு கதறி
நாமும் ஜெபித்திடுவோம்- இன்னும்

2. கோடி கோடி மாந்தர்கள்
இங்கே நரகத்தின் பாதையிலே
அவர்களின் மீட்புக்காக யார்
இங்கே ஜெபிப்பது- இன்னும்

3. இந்தியாவின் எழுப்புதலை
காணும்வரை ஜெபித்திடுவோம்
இயேசுவே தெய்வம் என்று
நாவு யாவும் முழங்கணுமே- இன்னும்

எழும்பு எழும்பு வல்லமை தரித்து எழும்பு
எழும்பு எழும்பு எழும்பு
உன் தூக்கத்தை விட்டு எழும்பு
எழும்பு நீ எழும்பு எழும்பு நீ எழும்பு -2

1548. எழுப்புதல் இந்தியா

எழுப்புதல் இந்தியா எழுப்புதல் இந்தியா
எழுப்புதல் இந்தியா
எங்கள் இந்தியா இயேசுவின் இந்தியா
எஜமானன் இந்தியா (2)

எழுப்புதலின் தீபம் ஏற்றிடுவோம்
எம் இந்தியாவின் இருளை அகற்றிடுவோம் (2)

1. தேவன் தேடும் மனிதன்
தேசத்திற்காக ஜெபிப்பான் (2)
கண்ணீர் சிந்தும் மனிதன்
கதறி அழுது ஜெபிப்பான் (2)

2. அழியும் ஆத்துமாக்கள்
மீட்க வேண்டுமைய்யா (2)
இல்லையென்றால் எந்தன்
ஜீவனை மாற்றுமைய்யா (2)

3. திறப்பிலே நின்று ஜெபிக்க
சுவரை அடைத்து நிற்க (2)
என்னை எழுப்பும் தேவா
எழுப்பதல் தாரும் நாதா (2)

1549. எழுப்புதலை கொண்டு

எழுப்புதலை கொண்டு வாங்க
பரிசுத்த ஆவியே
எங்கள் பரிசுத்த ஆவியே

1. உமது ஜனங்களை உம்மிலே
மகிழ்ந்திருக்க வேண்டுமைய்யா
ஒவ்வொரு நாளும் உயிர் பெற்று
உமக்காக வாழணும்பா (3)

2. பாரத தேச எல்லைகளிலே
இருள்களெல்லாம் நீங்கணுமே
பரிசுத்தர் இயேசுவே
உங்க நாமம் உயரணுமே (3)

3. நதியளவு கண்ணீர் விட்டு
கதறி நாங்கள் ஜெபிக்கணுமே
விசுவாச ஜெப ஆவி
எங்க மேல ஊற்றிடுமே (2)

4. மேல்வீட்டு அறையிலே
அபிஷேகத்தை ஊற்றினீரே
மாம்சமான யாவர் மேலும்
உங்க ஆவி ஊற்றிடுமே (3)

1550. என் மீட்பர் உயிரோடு

என் மீட்பர் உயிரோடுண்டு ஓ..ஓ
என் மீட்பர் உயிரோடுண்டு
உயிரோடுண்டு உயிரோடுண்டு
உயிரோடுண்டு இயேசு உயிரோடுண்டு
அல்லேலூயா -3
அல்லேலூயா -3

1. ஆறுகளை நான் கடந்திடுவேன்
அக்கினியில் நான் நடந்திடுவேன்
சிங்க கெபியிலே போட்டாலும்
சேதமில்லாமல் காத்திடுவார்

2. துன்பத்தின் பாதையில் நடந்தாலும்
அவர் வசனத்தாலே உயிரடைவேன்
நன்மையும் கிருபையும் என்னை தொடரும்
ஜீவனுள்ள நாளெல்லாம்

3. வெள்ளம்போல சாத்தானும்
என் எதிரே வந்தாலும்
ஆவியானவர் கொடிபிடித்து
யுத்தங்களை செய்திடுவார்

4. அவர் நாமத்தை நாம் அறிந்ததினால்
உயர்ந்த இடத்தில் வைத்திடுவார்
வெற்றி மேல் வெற்றி எனக்கு தந்து
தலையாய் என்னை உயர்த்திடுவார்

1551. எங்களுக்கல்ல கர்த்தாவே

எங்களுக்கல்ல கர்த்தாவே எங்களுக்கல்ல
உங்க நாமம் மகிமைப்பட வேண்டும்பா (4)

1. பூமியில் உயர்ந்தவர் சர்வ வல்லவர்
உமக்கு நிகரானவர் பூமியில் யாருமில்லை (2)

2. இரதங்களை குறித்துமல்ல
குதிரையை குறித்துமல்ல
உமது நாமத்தையே மேன்மை பாராட்டுவேன் (2)

3. தாழ்மையில் நினைத்தவர் சிறுமையை கண்டவர்
உமது நாமத்தையே மேன்மை பாராட்டுவேன் (2)

4. உளையான சேற்றிலும் பயங்கர குழியிலும்
தூக்கி எடுத்தீரையா
கன்மலைமேல் நிறுத்தினீரே

5. பலத்தினாலல்லவே பாரக்கிரமம் அல்லவே
உமது ஆவியினால் எல்லாம் கூடிடுமே

1552. என்தலை தண்ணீரும்

என்தலை தண்ணீரும் என் கண்கள்
கண்ணீருமாய் இருந்தால் நலமாகுமே

1. கெத்சமனே பூங்காவில் என் நேசர் ஜெபித்தாரே
இரத்தத்தின் பெருந்துளிகள் பூமியில் விழுந்ததே

2. கோடான கோடி அழிகின்ற ஜனங்களை
மீட்டிட கண்ணீர் நதிபோல் பாயட்டுமே

3. இமயம் முதல் தொடங்கி குமரி முடிவு வரை
கர்த்தரே தேவனென்று அறிக்கை செய்யணுமே

4. பாரத தேசத்தின் பாவ சாபங்கட்காய்
பெருமூச்சு விட்டு நான் கதறி ஜெபிக்கணும்

1553. இந்தியா இந்தியா என்று

இந்தியா இந்தியா என்று இதயம் துடிக்குது
இந்தியரை மோட்சத்தில் இணைக்கத் துடிக்குது (2)

1. நூற்றிருபது கோடி உண்டு நம் நாட்டிலே
ஆறு கோடி மட்டும் உண்டு ஜெப வீட்டிலே (2)
ஆறை நூறா ஆக்கணும் ஆவலோடு உழைக்கணும்-2
அறுவடைக்காய் தேசத்தை ஜனம் ஆயத்தமாக்கணும்-2

2. கூட்டம் கூட்டமாய் ஜனம் செல்கின்றதே
ஆட்டம் போட்டு அழிவுக்கு நேராகவே (2)
திட்டம் போட்டு செயல்படு தீவிரமாய் ஜெபித்திடு
வட்டமிடும் சத்துரவை விரட்டி வென்றிடு (2)

3. அறிவிக்காத இடங்களோ அநேகம் உண்டு
அறிவிக்க வேண்டும் இதை அன்போடின்று (2)
அடுத்தவரின் அஸ்திபாரம் விட்டு விட்டு நீயும் (2)
அறிவிக்காத இடங்களிலே அறிவித்திடு (2)

1554. நம் இயேசு நல்லவர்

நம் இயேசு நல்லவர்
ஒரு போதும் கைவிடார்
ஒரு நாளும் விலகிடார்

ஒன்று சேர்ந்து நாம் துதிப்போம்
சாத்தானை மிதிப்போம்
தேசத்தை சுதந்திரிப்போம்

1. அதிசயமானவர் ஆறுதல் தருகிறார்
சர்வ வல்லவர் சமாதானம் தருகிறார் - உனக்கு

2. கண்ணீரைக் காண்கிறார் கதறலைக் கேட்கிறார்
வேதனை அறிகிறார் விடுதலை தருகிறார் - இன்று

3. எதிர்காலம் நமக்குண்டு எதற்கும் பயமில்லை
அதிகாரம் கையிலே ஆளுவோம் நேசத்தை - நாம்

4. நொறுங்குண்ட நெஞ்சமே நோக்கிடு இயேசுவை
கூப்பிடு உண்மையாய் இன்று
குறையெல்லாம் நீக்குவார் - உன்

5. நண்பனே கலங்காதே நம்பிக்கை இழக்காதே
கண்ணீரைத் துடைப்பவர் கதவண்டை நிற்கிறார்

6. எத்தனை இழப்புகள் ஏமாற்றம் தோல்விகள்
கர்த்தரோ மாற்றுவார் கரம் நீட்டித் தேற்றுவார்

7. என் இயேசு வருகிறார் மேகங்கள் நடுவிலே
மகிமையில் சேர்த்திட மறுரூபமாக்குவார்

1555. யூதா கோத்திர சிங்கமும்

யூதா கோத்திர சிங்கமும்
தாவீதின் வேருமானவர்
வெற்றி சிறந்தாரே -2
அழவேண்டாம் இனி அழ வேண்டாம் -4

1. மரணத்தை ஜெயமாக விழுங்கியவர் அவர்தானே
பாதாளம் முழுவதுமாய் ஜெயித்தவரும் அவர்தானே
அவர் சொல்ல ஆகுமே எல்லாமே நடக்குமே
உன் துக்கம் சந்தோஷமாய் மாறிடுமே-2

2. பரிசுத்தவான்களின் புகலிடமும் நீர்தானே
பரிசுத்தவான்களின் கண்ணீரை துடைப்பவரே
ஆட்டுக்குட்டி இரத்தத்தால் சாட்சியின் வசனத்தால்
சாத்தானை முழுவதுமாய் ஜெயித்திடுவோம்-2

3. திறந்த வாசலை நம் முன்னே வைத்தார் இயேசு
பாதாள வாசல் இனி மேற்கொள்ள இடமில்லை
சமாதான தேவன்தான் சாத்தானை காலின் கீழ்-2
முழுவதுமாய் நசுக்கிடுவார் நசுக்கிடுவார்-2

F-Min/8beat/T-110

1556. யாக்கோபை போல நான்

யாக்கோப போல நான் பேராடுவேன்
எலியாவைப்போல நான் ஜெபித்திடுவேன் (2)
உம்மை விடமாட்டேன் விடமாட்டேன் (2)
யாக்கோப போல நான் விடவே மாட்டேன்

1. கர்மேல் பர்வதத்தில் நின்றிடுவேன்
அக்கினி இறங்கும் வரை ஜெபித்திடுவேன் (2)
எலியாவின் தேவனே இறங்கிவாருமையா

2. அன்னாள் போல ஆலயத்தில்
அழுது நான் ஜெபித்திடுவேன்
என் துக்கம் சந்தோஷமாய்
மாறும் வரை ஜெபித்திடுவேன் (2)

3. தானியேல் போல மூன்று வேளையும்
தவறாமல் ஜெபித்திடுவேன் (2)
சோதனைகள் வந்தாலும்-நான்
சாதனையாய் ஜெபித்திடுவேன்.

4. தாவீதைப்போல அனுதினமும்
துதித்து நான் மகிழ்ந்திடுவேன்
கோலியாத்து வந்தாலும்- இயேசுவின்
நாமத்தால் முறியடிப்பேன் (2)

1557. தேசத்தை சுதந்தரிக்க புறப்படு

தேசத்தை சுதந்தரிக்க புறப்படு மகனே
தேசத்தை சுதந்தரிக்க புறப்படு மகளே
சேனையின் கர்த்தர் நம் முன்னே நடப்பார்
நிச்சயமாய் இந்தியாவை சுதந்தரிப்போம்

பெராக்காவில் கூடுவோம்
கர்த்தரை உயர்த்துவோம்-2
அல்லேலூயா அல்லேலூயா
துதி அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதி அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

1. கட்டாத பட்டணத்தை சுதந்தரிப்போம்
நட்டாத தோட்டங்களை சுதந்தரிப்போம் (2)
சேனைகளின் கர்த்தர் நம் முன்னே நடப்பார்
சத்துருவை காலால் மிதித்திடுவோம்

2. யுத்த வீரன் யோசுவாவின் சந்ததியல்லோ
நடந்து போய் தேசங்களை சுதந்தரிப்போம்
அரணான பட்டணத்தை சுதந்தரிப்போம்
சத்துருவை காலால் மிதித்திடுவோம் (2)

3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியல்லோ
உலகம் முழுவதையும் கலக்கிடுவோம் (2)
பரலோக ராஜ்யம் நம்மிடத்தில்
நிச்சயமாய் தேசத்தை சுதந்தரிப்போம்

F-Min/beat/T-110

1558. நீர் திறந்தால் அடைப்பவன்

நீர் திறந்தால் அடைப்பவன் இல்லை-2
நீர் கட்டினால் அதை இடிப்பவன் இல்லை
இல்லை இல்லை இல்லை என்
வாசலை அடைப்பவன் இல்லை
இல்லை இல்லை இல்லை என்னை
எதிர்ப்பவன் பூமியில் இல்லை

1. கர்த்தரைப் போல பரிசுத்தம்
உள்ளவர் பூமியில் இல்லையே
கர்த்தரைப் போல வல்லமை
உள்ளவர் பூமியில் இல்லையே
பலவானின் வில்லை உடைத்து
கீழே தள்ளுகிறார் -2
தள்ளாடும் யாவரையும் உயரத்தில் நிறுத்துகிறார்-2

2. நாசியின் சுவாசத்தால் செங்கடலை
இரண்டாய் பிளந்தவராம்
பார்வோனின் சேனையை தப்பவிடாமல்
கடலில் அழித்தவராம் மரண இருள்
சூழ்ந்திடும் வேளையில் பஸ்கா ஆட்டுக்குட்டி -2
வாதை எங்கள் கூடாரத்தை என்றும் அணுகாது -2

3. தேவனைத் துதிக்கும் துதியாலே
எரிகோ விழுந்தது, பவுலும் சீலாவும்
துதிக்க போது சிறையும் அதிர்ந்தது
துதியாலே சாத்தானை
கீழே மிதித்திடுவோம் -2
திறந்த வாசல் நம் முன்னே
கொடியை ஏற்றிடுவோம் (2)

F-Min/beat/T-110

1559. பாரமில்லையா பாரமில்லையா

பாரமில்லையா பாரமில்லையா
தேசம் அழிகின்றதே
யாரை அனுப்புவேன் யாரை அனுப்புவேன்
என்ற சத்தம் தொனிக்கின்றதே
கிருபை வாசல் அடைகிறதே
நியாயத்தீர்ப்பு நெருங்கிடுதே
இந்த நாளில் மவுனமாயிருந்தால்
அழிவு என்பது நிச்சயமே (2)

சேனையாய் எழும்புவோம் யுத்த களத்தில்
அழியும் கோடி மாந்தரை மீட்க இன்றே புறப்படுவோம்
அழியும் கோடி மாந்தரை மீட்க இன்றே ஜெபித்திடுவோம்
எங்கள் பாரதம் எங்கள் பாரதம் இயேசுவின் பாரதம் (2)

1. திறப்பிலே நின்று சுவரை அடைக்க
தேவன் தேடும் மனிதன் எங்கே (2)
கண்ணீர் சிந்த ஆளில்லை கதறி
ஜெபிக்க ஆளில்லை (2)
யாரை அனுப்புவேன் யாரை அனுப்புவேன்
என்ற சத்தம் தொனிக்கின்றதே

2. அறுவடையின் காலமல்லோ
முடங்கி கிடப்பது நியாயம் தானா (2)
பாதங்கள் வெண்கலமாகும்
இடைவிடாமல் போரடி (2)
வாயில் துதியும் கையில் பட்டயம்
எழுந்து நின்று போரடிப்போம்

D-Maj/Slow Rock/T-95

1560. பாலைவனமாய் இருந்த

பாலைவனமாய் இருந்த எங்களை
சோலைவனமாய் மாற்றினீரைய்யா (2)

1. அறுந்த கொடியைப் போல் இருந்தோமே
எங்களை செடியோடு இணைத்து விட்டீரே

2. கண்ணீரிலே மூழ்கி இருந்தோமே
எங்களை களிப்பாக மாற்றினீரையா

3. வறண்ட நிலத்தைப் போலிருந்தோமே
எங்களை வயல்வெளியாய் மாற்றினீரைய்யா

4. தாகத்தோடு நாங்களிருந்தோமே
ஜீவதண்ணீரையே கொடுத்து விட்டீரே (2)

1561. உனக்கெதிரான ஆயுதங்கள்

உனக்கெதிரான ஆயுதங்கள் வாய்க்காதே மகனே
உனக்கெதிரான ஆயுதங்கள் வாய்க்காதே மகளே
நீ உயிரோடு இருக்கும் வரையிலும்
எதிர்ப்பவனில்லை - 2

1.உன்னை நான் காப்பாற்றி
அடிக்கடி தண்ணீர் பாய்ச்சிடுவேன் - 2
இரவினிலும் பகலினிலும்
சேதமில்லாமல் காத்திடுவேன் - 2
உன்னைக்கொண்டு மலைகளையும்
குன்றுகளையும் நான் தகர்த்திடுவேன் - 2
- நீ உயிரோடு

2.ஏழு மடங்கு அக்கினியில்
சேதமில்லாமல் காத்திடுவேன் - 2
ஒரு வழியாக வந்தவர்கள்
ஏழு வழியாக ஓடச்செய்வேன் - 2
உன்னைக்கொண்டு செய்ய நினைத்ததை
தடைசெய்ய ஒருவனுமில்லை - 2
- நீ உயிரோடு

3.சிங்கத்தின் மேலே நடந்திடுவாய்
சீறும் சர்ப்பத்தை மிதித்திடுவாய் - 2
உனக்கெதிராய் எழுதப்படும்
சட்டங்களை நான் மாற்றிடுவேன் - 2
உன்னைக்கொண்டு தேசத்திலே
என் நாமம் விளங்கச் செய்வேன் - 2
- நீ உயிரோடு

D-Maj/Jazz Rock/T-105

1562.அக்கினி அக்கினி எழுப்புதல

அக்கினி அக்கினி எழுப்புதல்
தந்திடும் அக்கினி - அக்கினி
அபிஷேகம் தேவா இப்போ ஊற்றிடுமே

1. பெந்தெகொஸ்தே நாளில் இறங்கிய
பரிசுத்த அக்கினி - இந்த வேளைவில்
எங்கள் மீதே இறங்கட்டுமே

2. மேல்வீட்டறையினிலே நிரம்பிய
பரலோக அக்கினி - ஆவி ஆத்துமாவை
முற்றும் முழுவதும் நிரப்பட்டுமே

3. உன்னதப் பெலத்தினால் என்னை
இடைகட்டும் அக்கினி - எங்கள்
தேசத்திலே பற்றி பிடித்து பரவட்டுமே

D-Maj/Rock Beat/T-125

1563.அக்கினி அபிஷேகம் ஆவியின்

அக்கினி அபிஷேகம் ஆவியின் அபிஷேகம்
சுட்டெரித்திடும் என்னை சுத்திகரித்திடும்
பரிசுத்த ஆவியால் என்னை நிரப்பிடும்
பரிசுத்தமாய் என்னை மாற்றிடும்

1. அக்கினி போட வந்தேன் பற்றயெறியட்டும்
என்று சொன்னவரே இன்று அபிஷேகியும்

2. ஆவியினாலே சரீரத்தின் - பாவ
இச்சையை என்னில் சுட்டெரித்திடும்

3. உம்மைப் போலவே என்னை மாற்றிடும்
சுயம் என்னிலே சாம்பலாகட்டும்

4. அபிஷேகமே கற்றுக் கொடுத்திடும் - என்று
சொன்னவரே என்னை அபிஷேகியும்

C-Maj/Disco/T-120

1564. அக்கினி காற்றே தேற்றரவா

அக்கினி காற்றே தேற்றரவாளனே - பேரின்ப
நதியில் தாகம் தீர்த்திடும் ஜீவநதியே - 2
ஜீவநதியே என்னில் பாய்ந்து செல்லுமே - ஓ

1. வறண்ட நிலத்தில் ஆறுகள் ஓடும்
பாலைவனங்கள் செழிப்பாய் மாறும்
கண்ணீரின் பள்ளத்தாக்குகள் எல்லாம்
களிப்பாய் நீரூற்றாய் மாறுமே...மாறுமே

2. காடியைப் போல கசந்திடும் வாழ்க்கை
மதுரமாக மாற்றிடுவாரே - துன்பத்தின்
பாதையில் நடக்கின்ற போதும்
பாதையின் வெளிச்சம் அவரே...அவரே

D-Maj/Rock Ballad/T-85

1565. அக்கினிமயமானவரே நீர்

அக்கினிமயமானவரே நீர் வருக
அச்சாரமானவரே நீர் வருக
ஜீவ தண்ணீரின் ஊற்றே நீர் வருக
காற்றாய் வீசுபவரே நீர் வருக
எண்ணெய் அபிஷேகம் செய்பவரே நீர் வருக
முத்திரை அடையாளமானவரே நீர் வருக
புறாவைப் போல் இறங்குபவரே நீர் வருக

ஆவியானவரே நீர் வருக
எங்கள் மீது இறங்கி அருள் தருக
அல்லேலூயா அல்லேலூயா - 6

1. நீர் வரும்போது சுத்திகரிப்பு
எனக்கு உண்டாகும்
நீர் வரும்பொழுது சமாதானம்
எனக்கு உண்டாகும்

2. நீர் வரும்போது பரிசுத்தம்
எனக்கு உண்டாகும்
நீர் வரும்பொழுது பாதுகாப்பு
எனக்கு உண்டாகும்

E-Maj/Disco Soul/T-120

1566. அக்கினி ஜுவாலையாக்கும்

அக்கினி ஜுவாலையாக்கும் தேவா
கொளுந்து விட்டெறிய ஊற்றும் தேவா
பாவம் நெருங்கா அக்கினியால்
சாத்தானை ஜெயிக்க உதவும் தேவா

அல்லேலூயா பாடுவோம் - 4

1. எலியாவின் அக்கினி இறங்கட்டுமே
வானம் திறந்து பொழியட்டுமே
கர்த்தரே தேவனென்று அறியட்டுமே
சாத்தானின் சதிகள் சரியட்டுமே

2. பாவத்தின் கரைகள் நீங்கட்டுமே
சாபத்தின் நுகங்கள் முறியட்டுமே
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தேர
வெற்றியின் கீதங்கள் பாடிடுமே

E-Maj/6/8 Beat/T-95

1567. நான் உபத்திரவப்பட்டது எனக்கு

நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது
தேவ பிரமாணங்களை கற்றுக் கொள்ள உதவி செய்தது
நல்லது எனக்கு நல்லது-2

1. நான் புறக்கணிக்கப்பட்டது எனக்கு நல்லது
தேவனோடு இணைந்து வாழ இது தானே கிருபை செய்தது
நல்லது எனக்கு நல்லது-2

2. நான் தூசிக்கப்பட்டது எனக்கு நல்லது
தேவனை நேசிக்க இதுதானே உதவிச் செய்தது
நல்லது எனக்கு நல்லது-2

3. நான் நொறுக்கப்பட்டு வாழ்ந்தது எனக்கு நல்லது
தேவனோடு நெருங்கிப் பழக உதவிச் செய்தது.
நல்லது எனக்கு நல்லது-2

4. நான் ஏமாற்றப்பட்டு வாழ்ந்தது எனக்கு நல்லது
தேவக்கிருபையை அதிகம் பெறச் செய்தது
நல்லது எனக்கு நல்லது-2

5. நான் துரத்தப்பட்டு வாழ்ந்தது எனக்கு நல்லது
தேவனோடு நடக்க அது தானே உதவிச் செய்தது
நல்லது எனக்கு நல்லது-2

E-Maj/6/8 Beat/T-95

1568. யோசனையில் பெரியவரே உம்மை

யோசனையில் பெரியவரே உம்மைத் துதிக்கிறேன்
செயல்களில் வல்லவரே உம்மைத் துதிக்கிறேன்
சாரோனின் ரோஜாவே உம்மைத் துதிக்கிறேன்
சர்வ வல்ல தேவனே உம்மைத் துதிக்கிறேன்

1. எந்தன் கன்மலையே உம்மைத் துதிக்கிறேன்
எந்தன் கோட்டையே உம்மைத் துதிக்கிறேன்
எந்தன் சிருஷ்டிகரே உம்மைத் துதிக்கிறேன்
எந்தன் தேவனே உம்மைத் துதிக்கிறேன் (யோசனையில்)

2. நான் நம்பும் துருகமே உம்மைத் துதிக்கிறேன்
எனது கேடகமே உம்மைத் துதிக்கிறேன்
என் இரட்சணியக் கொம்பே உம்மைத் துதிக்கிறேன்
என் உயர்ந்த அடைக்கலமே உம்மைத் துதிக்கிறேன் (யோசனையில்)

3. பரிசுத்த ஆவியே உம்மைத் துதிக்கிறேன்
என் ஜீவனின் பெலனே உம்மைத் துதிக்கிறேன்
அக்கினி நாவே உம்மைத் துதிக்கிறேன்
என் அநாதி சிநேகிதரே உம்மைத் துதிக்கிறேன் (யோசனையில்)

4. கைத்தாள எக்காளத்தோடு உம்மைத் துதிக்கிறேன்
பத்து நரம்பு வீணையோடு உம்மைத் துதிக்கிறேன்
தாவீதைப் போல நடனம் ஆடி உம்மைத் துதிக்கிறேன்
தகப்பனே உம்மைத் தானே நாளும் துதிக்கிறேன் (யோசனையில்)

E-Maj/6/8 Beat/T-105

1569. அப்பா துதிக்கிறேன்

அப்பா துதிக்கிறேன் என் அன்பே துதிக்கிறேன்
ஆர்வமுடன் உம் நாமம் தொழுது கொள்கிறேன்

1. யேகோவா ஷம்மா உம்மைத் துதிக்கிறேன்
யேகோவா ஷாலோம் உம் நாமம் தொழுகிறேன்

2. யேகோவா ரூவா உம்மைத் துதிக்கிறேன்
யேகோவா ராஃப்பா உம் நாமம் தொழுகிறேன்

3. யேகோவாயீரே உம்மைத் துதிக்கிறேன்
யேகோவா நிசியே உம் நாமம் தொழுகிறேன்

4. எல்ஷடாய் எல்ரோயீ உம்மைத் துதிக்கிறேன்
எபிநேசரே உம் நாமம் தொழுகிறேன்

5. யேகோவா மெக்காதீஸ் உம்மைத் துதிக்கிறேன்
யேகோவா ஓமேகா உம் நாமம் தொழுகிறேன்

6. இயேசு கிறிஸ்துவே உம்மைத் துதிக்கிறேன்
இம்மானுவேலனே உம் நாமம் தொழுகிறேன்

7. பரிசுத்த ஆவியே உம்மைத் துதிக்கிறேன்
தேற்றரவாளனே உம் நாமம் தொழுகிறேன்

8. அக்கினிநாவே உம்மைத் துதிக்கிறேன்
அநாதி சிநேகிதரே உம் நாமம் தொழுகிறேன்

9. ஆதியே அந்தமே உம்மைத் துதிக்கிறேன்
அல்பா ஓமேகா உம் நாமம் தொழுகிறேன்

E-Maj/6/8 Beat/T-98

1570. வானப் பரியந்தம் உயர்ந்தி

வானப் பரியந்தம் உயர்ந்திருக்கும் கிருபைக்காக -நன்றி
வல்லவரே என்னை நடத்துகிற தயவுக்காக -நன்றி

நன்றி அப்பா நன்றி ... நன்றி ராஜா நன்றி

1. நீர் என்னை கொன்று போட்டாலும்
உம்மீது நம்பிக்கை வைப்பேன் (யோபு 13:15)
என் ஆவி உம் கையில் உள்ளது - இயேசையா (யோபு 12:10)
உம் கரம் தான் என்னைத் தாங்குது (நன்றி)

2. என் பிராண சிநேகிதனும் என் அப்பம் புசித்தவனும்
என் மேல் தன் காலைத் தூக்கினான் (சங் 41:9)
நீர் அதை அறிந்திருக்கின்றீர் -இயேசையா
எனக்காய் நியாயம் செய்கிறீர் - (நன்றி)

3. நீர் என்னை நினைப்பதற்கு
நீசன் நான் எம்மாத்திரம்
உம் கண்கள் என்னைப் பார்க்குது-இயேசையா
உம் இமைகள் சோதித்தறிகிறது- நன்றி

4. அனாதையாய் நான் வாழ்ந்தேன்
அப்பா நீர் தேடி வந்தீர்
உம்மோடு வைத்து கொண்டீர்-இயேசையா
உயர்த்தி மகிழ்கின்றீரே- நன்றி

E-Maj/6/8 Beat/T-98

1571. நான் மண்ணுக்குரியவன் அல்ல

நான் மண்ணுக்குரியவன் அல்ல நான் விண்ணுக்குரியவன்
நான் பூமிக்குரியவன் அல்ல என் தேவனுக்குரியவன்

அந்த பூமியிலே நான் பரதேசி
அந்த பரலோகத்தில் பணக்காரன்

1. நான் பூமியிலே சேர்த்து வைத்தால் கரையான் தின்னும்
அந்த திருடனும் கன்னமிட்டு அதையே திருடுவான்
நான் பரலோகத்தில் சேர்த்து வைப்பேன்
அங்கு பத்திரமாய் இருக்கும்

2. நான் ஒன்றும் கொண்டு வரல கொண்டு போவதற்கு
நான் போட்டிருக்கும் துணிகூட எனக்கு சொந்தமில்லை
பரமதகப்பன் மட்டும் எனக்கு போதும்
பரிசுத்தமாய் பூமியில் வாழ்வேன்

3. காட்டு புஷ்பம் எல்லாம் தேவனைத் துதிக்குது-அந்த
காக்கா குருவிக் கூட காலையில் துதிக்குது-நான்
அவற்றிலும் மேலானவன் தேவனைத் துதிப்பேன்-என்
தேவனுக்காய் ஓடி என் ஓட்டத்தை முடிப்பேன்

E-Maj/4/4 Beat/T-85

1572. நீரே என் ஏக்கமையா

நீரே என் ஏக்கமையா நீங்காத இன்பமையா
நித்திய தேவனே நீரே என் சொந்தமையா

இயேசையா -4

1. உம்மை விட்டு எங்கு போவேன்
உம்மையன்றி எப்படி வாழ்வேன்
உன்னத தேவன் நீரே
என் உயர்ந்த அடைக்கலம்

2. உம் வசனம் என் உணவு
உம் வார்த்தை என் வெளிச்சம்
அதிகாலை உட்கொண்டேன்
ஆன்மாவில் பெலனடைந்தேன்

3. அப்பா உம்மை நேசிக்கின்றேன்
அன்பே உம்மை வாஞ்சிக்கிறேன்
என்னை அனுதினம் தத்தம் செய்வேன்
எப்போதும் உம் சித்தம் செய்வேன்

E-Maj/6/8 Beat/T-85

1573. தகப்பனே தகப்பனே தயவு

தகப்பனே தகப்பனே தயவுள்ள தேவனே
உம்மையே (தொழுகிறேன்) துதிக்கிறேன்
உயிருள்ள நாளெல்லாம்

1. அப்பா பிதாவே என்று அழைக்கிற ஆவி தந்தீர்
மகனாய் தெரிந்து கொண்டு மார்போடு அணைத்துக் கொண்டீர்

2. தகப்பன் சுமப்பது போல் இம்மட்டும் சுமந்து வந்தீர்-என்
கரங்களை பிடித்துக் கொண்டு நடக்க பழகி வந்தீர்

3. சிறுவயது முதலாய் நீரே என் நம்பிக்கை
உம்மை விட வேறு ஒரு நம்பிக்கையில்லை
உம்மை விட்டு நான் எங்கும் செல்வதுமில்லை

1574. உம்மை மகிமைப் படுத்துகி

உம்மை மகிமைப் படுத்துகிறேன்
மகிமைப் படுத்துகிறேன் மகிமைக்குரியவரே
உம்மைத் துதித்துப் பாடுகிறேன்
துதித்துப் பாடுகிறேன் துதிக்குப் பாத்திரரே

உம்மை மகிமைப் படுத்துகிறேன்...
உம்மைத் துதித்துப் பாடுகிறேன்...

1. ஆயிரம் தலைமுறைக்கு இரக்கம் செய்பவரே
ஆபிரகாம் உடன்படிக்கை நினைவு கூர்பவரே

2. தாவீதுக்கு அருளிய நிச்சய கிருபையை
நித்திய உடன்படிக்கையாய் எனக்குத் தருபவரே

3. மோசேயோடு இருந்தது போல் என்னோடு இருக்கின்றீர்
எனக்கு எதிராக நிற்பவன் யார்

E-Maj/6/8 Beat/T-141

1575.சொல்லி அழ யாருமில்லை

சொல்லி அழ யாருமில்லை தேவனின் பாரத்தை
ஏற்றுக் கொள்ள யாருமில்ல தேவனின் ஏக்கத்தை

தேவன் தேடும் ஒரு மனிதன் தேசத்தில் இல்லையே
தேசம் அழிகின்றதே தேவக் கண்கள் தேடுகின்றதே
– (சொல்லி அழ)

1. இன்னும் ஒரு எலியா தேசத்தில் எழும்பாததால்
பாகால்கள் பலிபீடம் சுட்டெரிக்கப்படவில்லை – (சொல்லி அழ)

2. இன்னும் ஒரு நெகேமியா தேசத்தில் எழும்பாததால்
சபை கட்ட ஆளில்லை ஆராதிக்க இடமில்லை – (சொல்லி அழ)

3. இன்னும் ஒரு எசேக்கியல் தேசத்தில் எழும்பாததால்
ஆவிக்குள்ளாகவில்லை அருவருப்புக்காய் கதறுவதில்லை –
(சொல்லி அழ)

4. இன்னும் ஒரு தானியேல் தேசத்தில் எழும்பாததால்
கட்டளை வெளிப்படவில்லை தேசம் சந்திக்கப்படவில்லை –
(சொல்லி அழ)

5. இன்னும் ஒரு எஸ்தர் தேசத்தில் எழும்பாததால்
பாரம் அறியவில்லை பரிந்து பேச ஆளில்லை – (சொல்லி அழ)

E-Maj/2/4 Beat/T-94

1576.அழியுதே... தேசம் அழியுதே

அழியுதே... தேசம் அழியுதே
மடியுதே.. . என் ஜனம் மடியுதே

1. பசியால் ஒரு பக்கம் அழியுதே
பாவத்தால் மறுபக்கம் அழியுதே
நான் பரிந்து பேசாத காரணத்தால்
பாதாளம் நோக்கி தேசம் நடக்குதே

2. புயலால் ஒரு பக்கம் அழியுதே
பூகம்பத்தால் மறுபக்கம் அழியுதே
நான் திறப்பிலே நிற்காத காரணத்தால்
தடுப்போர் இல்லாமல் போகுதே

3. சாபத்தால் ஒரு பக்கம் அழியுதே
கோபத்தால் மறுபக்கம் அழியுதே

E-Maj/2/4 Disco/T-94

1577.ஏனோ ஏனோ ஏனோ

ஏனோ ஏனோ ஏனோ என் தேசம் அழிகின்றது
தேவனை அறியாமல் தானே அது வீணாய் போகிறது
இயேசுவை அறியாமல் அது தானே வீணாய் போகிறது

எஸ்றாவைப் போல் அழுகின்றேன்
நான் ஏங்கி உம் பாதம் வருகின்றேன்
மன்னியும் தேவனே.. மன்னியும் இயேசுவே

1. எங்களின் அக்கிரமங்கள் தலைக்கு மேல் பெருகிற்றே
எங்களின் குற்றம் வானளவு வளர்ந்திற்றே

2. நானும் என் வீட்டாரும் உம்முன் தீட்டாக நிற்கின்றோமே
எங்களின் நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை தானே

3. சோதோமின் பாவம் செய்து சோரமாய் போனோமே
ஏதேனின் வாழ்வை விட்டு ஏமாந்து போனோமே

E-Maj/2/4 Disco/T-113

1578.முதன்மைக்கே நான்

முதன்மைக்கே நான் முதலிடம் கொடுக்கிறேன்
முற்றிலும் என்னை உமக்கே தருகிறேன்

முதன்மையே என் இயேசுவே
முதலிடம் என்றும் உமக்கே

1. நீர் விரும்பும் பரிசுத்தம் எனக்கு தாரும்
உம்மோடு சஞ்சரிக்க கிருபை தாரும்
ஏனோக்கு உம்மோடு சஞ்சரித்தாரே
இயேசப்பா நாம் உம்மோடு சஞ்சரிக்கனும்

2. உம்மையன்று வேறு ஒரு விருப்பமில்லை
உம்மைவிட்டு எங்கு நான் செல்வதுமில்லை
உம்மை தானே என்றும் நான் நம்பியுள்ளேன்
உம்மோடு அனுதினம் நடந்திடுவேன்

3. உம்மையே மிகவும் அன்பு கூர்வேன்
என் கண்ணீரால் உம் பாதம் நன்றி சொல்வேன்
உம்மை நான் இன்று சரணடைந்தேன்
உன் மார்பில் (மடியில்) நான் என்றும் இளைப்பாறுவேன்

4. உம் சாயலாக தானே நீர் என்னை படைத்தீர்
உம் ரூபமாக என்னையும் வடிவமைத்தீர்
உம் ஆவியால் எனக்கு நீர் உயிர் கொடுத்தீர்
உயிர் உள்ளவரை நான் உம்மைப் பாடவே (உம்மைப் பாடுவேன்)

E-Maj/3/4 Beat/T-138

1579.உள்ளும் புறம்பும் என்னை

உள்ளும் புறம்பும் என்னை சுத்திகரியும்
உந்தன் சித்தம் மட்டும் செய்து (முடித்திடவே) வாழ்ந்திடவே

1. உம் இரத்தத்தால் என்னை இன்று சீர்படுத்தும்
என் சீழ்களை பிதுக்கி என்னை சுகப்படுத்தும்-2

2. உமது வார்த்தையினால் என்னை இன்று ஸ்திரப்படுத்தும்
உம் வசனத்தில் வேரூன்றி தழைத்திருக்க-2

3. உம் ஆவியினால் என்னை இன்று பலப்படுத்தும்
ஆவியோடு உண்மையோடு தொழுதிடவே-2

4. பிதாவே என்னை இன்று நிலைநிறுத்தும்
பிசாசின் வல்லமையை தகர்த்தெறிய-2

E-Maj/6/8 Beat/T-97

1580.பலத்தினாலும் அல்ல என்

பலத்தினாலும் அல்ல
என் பராக்கிரமும்அல்ல
உம் ஆவியினால் எல்லமாகுமே
நீர் வந்துவிட்டால் அதுவே போதுமே

ஆவியானவரே-8

1. ஒருமனப்பட்டபோது இறங்கி வந்த ஆவியே
ஒருமனமாய் நிற்கிறேன் இறங்கி வாருமே
எழுப்புதல் தாருமே

2. உம் ஆவி எனக்குள் வையும் உம்மால் உயிரடைவேன்
என்னை நீர் தேசத்தில் வையும்
உம் நாமம் உயர்த்திடுவேன்

3. எனக்குள்ளே வாசம்பண்ணி என்னோடு
இருப்பவரே உமக்குள்ளே வாசம்பண்ணி
உம்மோடு நடந்திடுவேன்

4. உலர்ந்த எலும்புகளை உயிரடைய பண்ணுகிற
உன்னதத்தின் ஆவியே எனக்குள்ளே வாருமே
உன்னதத்தின் ஆவியே என் சபைக்குள்ளே வாருமே

5. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வல்லமையின் ஆவியே
வாக்குத்தத்தம் நிறைவேற என்மேல வாருமே
உம் வார்த்தையின் படி நான் நடக்க கிருபையை தாருமே

E-Maj/2/4 Beat/T-71

1581. நீரே நீர் மாத்ரமே

நீரே நீர் மாத்ரமே இயேசு நீர் மாத்ரமே
என் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும்
என் நடையின் ஒவ்வொரு அடிகளிலும்– நீரே

1. மாயையான உலகத்தில்
மறைந்து போகும் வாழ்க்கையில் –2
நிஜமாக இருப்பவர் நீர் மாத்ரமே

2. சோர்ந்து போன வேளையிலே
பெலனற்று போகையிலே –2
துணையாக வந்தவர் நீர் மாத்ரமே

3. கண்ணீரின் பாதையில்
மனம் உடைந்த நேரத்தில்– 2
ஆறுதலாய் வந்தவர் நீர் மாத்ரமே

4. ஒதுக்கப்பட்டு நிற்கையில்
தனிமையில் நான் தவிக்கையில் –2
(துகப்பனாய்) தோழனாய் வந்தவர் நீர் மாத்ரமே

E-Maj/6/8 Beat/T-98

1582.உம்மைவிட்டு எதுவும்

உம்மைவிட்டு எதுவும் என்னை பிரிக்காது
உன்னதரே உம்மையன்றி வாழ்வேது

நான் நம்பும் கன்மலை நீர் தானையா
நான் தங்கும் கூடாரமே என் இயேசையா

1. வாழ்வோ சாவோ ஜீவனோ மரணமோ
எதுவும் பிரிக்காது பிரிக்கவும் முடியாது

2. உயர்வோ தாழ்வோ பேரோ புகழோ
எதுவும் பிரிக்காது பிரிக்கவும் முடியாது

3. வேதனை நெருக்கமோ சோதனை வருத்தமோ
எதுவும் பிரிக்காது பிரிக்கவும் முடியாது

4. உறவோ பாசமோ உலகமோ மாம்சமோ
எதுவும் பிரிக்காது பிரிக்கவும் முடியாது

5. துன்பமோ பசியோ நிர்வாணமோ நாசமோ
எதுவும் பிரிக்காது பிரிக்கவும் முடியாது

E-Maj/6/8 Beat/T-89

1583.நன்றியுள்ள இதயம்

நன்றியுள்ள இதயம் தாங்கப்பா –இயேசப்பா
நாளும் உம்மை துதித்து பாடவே
நல்லவரே எனக்குள் வாங்கப்பா –இயேசப்பா
உம்மை போல நானும் மாறவே

நன்றியுள்ள இதயம் தாங்க உம்மைத் துதிக்க
நாளும் நான் மாற வேண்டும் உம்மை போல

1. அனாதையாய் நான் திரிந்தேன்
அப்பா என்னை தேடி வந்தீர்
அடிமையாய் நான் வாழ்ந்தேன்
விடுதலை நீர் தந்தீர்

2. திக்கற்று நான் தவித்தேன்
நங்கூரமாய் நீர் வந்தீர்
பாவத்தில் நான் இருந்தேன்
பரிசுத்தமாக்கிவிட்டீர்

E-Maj/4/4 Beat/T-95

1584.ஆயுளுள்ள நாளெல்லாம்

ஆயுளுள்ள நாளெல்லாம் – என்
அப்பா உம்மை ஆராதிப்பேன்
ஜீவனுள்ள நாளெல்லாம் –என்
தேவா உம்மை தொழுதுகொள்வேன்

நீர் போதும் இயேசையா வேறே வேண்டாம்
நிரந்தரம் எனக்கு நீர் தானையா

1. உலகமும் மாயை உறவும் மாயை
உம் அன்பு மாறாதையா
அது ஒரு நாளும் குறையாதையா

2. கிச்சிலி மரமே உம் நிழலினிலே
தங்கி நான் இளைப்பாறுவேன்– தினம் உம்
அன்பில் களிகூறுவேன்

3. உன்னத நேசரே உம் நேசம் வேண்டும்(மே)
அறைக்குள் கொண்டு செல்லும்–நான்
உம் மார்பில் சாயும்படி

E-Maj/6/8 Beat/T-95

1585.நதியே ஜீவ நதியே

நதியே ஜீவ நதியே
நதியே தேவ நதியே

நான் மூழ்கனுமே
முழுவதுமே முழுக்கிடுமே
நான் நிரம்பனுமே நீந்தணுமே
உம்மில் மகிழனுமே

1. என்னை ஆழத்துக்குள் கொண்டுபோங்க
உம் அன்பை அறியனும்
அப்பா உம்மோடு நான் இருந்து
உம்மைத் துதிப்பேன்

2. ஈசோப்பினால் சுத்திகரியும்
நான் சுத்தமாவேன்
நீரே என்னை கழுவுமையா
நான் வெண்மையாவேன்

3. பலிபீட பலிபொருள் நான்
முற்றும் அர்ப்பணித்தேன்
தகப்பன் என்னை சுகந்ததாக
நுகர்ந்து கொள்ளுமே

E-Maj/6/8 Beat/T-118

1586.துதிக்கிறேனையா உம்மை

துதிக்கிறேனையா உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்
உம்மை மகிமைப்படுத்தி மகிமைப்படுத்தி மனமகிழ்கிறேன்

1. இருப்பவரே இருந்தவரே
இனியும் இராஜாவாய் வருபவரே

2. அல்பா ஓமேகா ஆனவரே
ஆதியும் அந்தமும் எனக்கு நீரே

3. பரிசுத்தரே பரிசுத்தரே
சேனைகளின் கர்த்தர் நீர் பரிசுத்தரே

4. நீதியின் சூரியனே எனக்கு
நித்திய வெளிச்சமே நீர் தானே

5. தூயாதி தூயவரே
தூய வாழ்வினைத் தருபவரே

6. தேவாதி தேவன் நீரே
தேனிலும் இனிமையானவரே

7. கர்த்தாதி கர்த்தர் நீரே
காருண்யம் நிறைந்த தகப்பன் நீரே

E-Maj/3/4 Pop/T-95

1587.இந்த பூமியிலே யார்

இந்த பூமியிலே யார் உண்டு
உம்மைப் போல் என்னை நேசிக்க
என் நேசமே என் பாசமே
நீங்காத நிரந்தரமே – என்னை விட்டு -2

அப்பா ஸ்தோத்திரம் ..
இயேசப்பா ஸ்தோத்திரம்

1. என் குறைகளைப் பார்த்து தூசித்து மகிழும்
இந்த உலகினிலே
என் குறைகளை மாற்றி நிறைவாக்கி மகிழும்
தேவன் நீர் தானையா

2. தகப்பனும் தாயும் கைவிட்டபோதும்
நீர் என்னை மறக்கவில்லை
தகப்பன் நீர் என்னை தேடி வந்து
இதுவரை சுமந்து வந்தீர்

E-Maj/3/4 Pop/T-60

1588.உம்மாலே உம்மாலே

உம்மாலே உம்மாலே எல்லாம் உம்மாலே
உம்மாலே உம்மாலே என் வாழ்வும் உம்மாலே

1. நான் நிற்பதும் நடப்பதும் உம்மாலே
இன்று நிலைத்திருப்பதும் உம்மாலே

2. நான் உண்ணுவதும் உறங்குவதும் உம்மாலே
இம்மட்டும் உயிரோடு இருப்பதும் உம்மாலே

3. நான் சேனைக்குள்ளாய் பாய்வதும் உம்மாலே
நான் மதிலையும் தாண்டுவதும் உம்மாலே

E-Maj/4/4 Beat/T-119

1589.நான் கர்த்தருக்கு பரிசுத்தம்

நான் கர்த்தருக்கு பரிசுத்தம்
என் தேவனுக்கு உகந்த பலி
அப்பாவின் செல்லப் பிள்ளை நான்
அவர் இதயம் அறிந்த தோழன் நான்

பரிசுத்தம் பரிசுத்தம்
கர்த்தருக்கு (நான்) பரிசுத்தம்

1. தீமையை என் கண் பார்ப்பதில்லை
கண் கர்த்தருக்கு பரிசுத்தம்
தீயதை என் வாய் பேசவில்லை
வாய் கர்த்தருக்கு பரிசுத்தம்

2. தீயதை என் செவி கேட்பதில்லை
செவி கர்த்தருக்கு பரிசுத்தம்
தீமையை என் கை தொடுவதில்லை
கை கர்த்தருக்கு பரிசுத்தம்

3. தீமைக்கு என் கால் போவதில்லை
கால் கர்த்தருக்கு பரிசுத்தம்
தீமைக்கு என் உணர்ச்சிவசப்படுவதில்லை
உணர்ச்சி கர்த்தருக்கு பரிசுத்தம்

4. தீயதை நான் என்றும் சிந்திப்பதில்லை
சிந்தை கர்த்தருக்கு பரிசுத்தம்
திருக்கான இதயம் எனக்கு இல்லை
இதயம் கர்த்தருக்கு பரிசுத்தம்

5. ஆத்துமாவில் பாவம் நான் செய்வதில்லை
ஆத்துமா கர்த்தருக்கு பரிசுத்தம்
ஆவியில் பாவம் நான் செய்வதில்லை
ஆவி கர்த்தருக்கு பரிசுத்தம்

E-Maj/6/5 Beat/T-95

1590.நேசத்திற்குரிய நேசரே உம்மை

நேசத்திற்குரிய நேசரே
உம்மை நான் நேசிக்கின்றேன்
பாசத்திற்குரிய தகப்பனே
உம்மை நான் அன்புகூறுவேன்

நேசத்திற்குரிய நேசரே -2

1. ஆவியோடும் உண்மையோடும்
அப்பா உம்மை ஆராதிப்பேன்
நீதியுள்ள தேவன் நீரே
உம்மையே தொழுதுகொள்ளுவேன்

2. உம்மைப் போல தெய்வத்தை
யாரும் இங்கு கண்டதில்லை
உம்மையன்றி பூமியிலே
வேறொரு தெய்வமில்லை

3. ஆபிரகாமின் தேவன் நீரே
ஈசாக்கின் தேவன் நீரே
யாக்கோபின் தேவன் நீரே
என்னுடைய தேவன் நீரே

4. ஏனோக்கு இருந்ததுபோல்
உம்மோடு இருந்திடுவேன்
இயேசப்பா உம் மார்பிலே
அனுதினம் சாய்ந்திடுவேன்

E-Maj/4/4 Beat/T-95

1591.நன்மைகள் செய்தவர்க்கு

நன்மைகள் செய்தவர்க்கு நன்றிபீடம் கட்டுவோம்
நாளெல்லாம் தேவனை துதித்து நாம் பாடுவோம்
நல்லவர் இயேசுவை உயர்த்தி நாம் பாடுவோம்

நன்மை செய்தீர் நல்லவரே-2
நன்மைகளின் நாயகரே -2
நன்றி பலிபீடம் கட்டுகிறோம்

1. தாயின் கருவில் உருவாகும் முன்
நம்மை பார்த்தவர் அவர் தானே
கருவில் நம்மை உருவாக்கி – இன்று
உயிருடன் நம்மை வைத்தாரே

2. எலும்புகளை உருவாக்கி அதனதன் இடத்தில் வைத்தீர்
என்னை நீரும் உருவாக்கி
உம் அருகில் இன்று நிறுத்தி வைத்தீர்

3. இருளில் நானும் அமர்ந்தாலும் அந்த இருளும்
உமக்கு வெளிச்சமாகும்
உம்மை விட்டு எங்கு போவேன்– நீர்
என்னை ஆளும் தெய்வம் தான்

4. ஏனோக்கைப் போல் உம் கையை பிடித்து
நானும் நடந்திடுவேன்
எல்லா நாளும் உம்மோடு சஞ்சரித்து
நான் மகிழ்ந்திடுவேன்

E-Maj/2/4 Beat/T-95

1592.இஸ்ரவேலே இஸ்ரவேலே

இஸ்ரவேலே இஸ்ரவேலே
நான் உன்னை மறப்பதில்லை
இந்தியாவே இந்தியாவே
உன்னை நான் கைவிடவில்லை

என்னிடம் திரும்பிவிடு உன்னை நான்
நினைத்துகொள்வேன்
என்னிடம் வந்துவிடு உன்னை நான்
அணைத்திடுவேன்

1. நீ என்னை விட்டு தூரம் போய்
சோரம் போனாயே
பாவத்தின் மேல் பாவம் செய்து
சாபமானாயோ

2. உன் சிருஷ்டிகரே மறந்து நீ துரோகம் செய்தாயோ
சிருஷ்டிப்பின் மேல் சாய்ந்து கொண்டு
மாய்ந்து போனாயோ

3. உன் சாபங்களை மாற்றி நான் சாபமானேனே
உன்னை பரிசுத்தமாக்கிட நான் பலியானனே

E-Maj/2/4 Beat/T-105

1593.இயேசு போதும் எனக்கு

இயேசு போதும் எனக்கு
இயேசு போதும் எனக்கு - (2)

உம்மை நோக்கி பார்த்தவர்கள்
வெட்கப்பட்டு போவதில்லையே
உம்மிடத்தில் வந்தவர்கள் சோர்ந்து
எங்கும் விழுந்ததில்லையே

1. கண்ணீரின் பாதையில் கடந்து போகையிலும்
துணையாய் வந்தவர் இயேசு தானே
கண்ணீரை களிப்பாய் மாற்றி எனக்கு
புது வாழ்வு தந்தவர் இயேசு தானே

2. தாவீதின் குமாரனே இரங்கும் என்றவுடன்
இரக்கம் கொண்டவரே இயேசு தானே
நோய்களெல்லாம் நீக்கி எனக்கு
சுக வாழ்வு தந்தவரே இயேசு தானே

E-Maj/4/4 Beat/T-145

1594.திருவிழாக் கூட்டமாக என்

திருவிழாக் கூட்டமாக என் ஜனம் போகுதே
சிறைப்பட்டு போன மாயம் தெரியாமல் வாழுதே

தேவனே என் ஜனத்தின்
கண்களைத் திறந்துவிடும்
சிறைப்பட்ட என் ஜனத்தின்
சிறையிருப்பை மாற்றிவிடும்

1. நதி நீரில் குளிக்கும் ஜனமும் சிறைப்பட்டுப் போகுதே
நரபலிகள் செலுத்தும் ஜனமும் சிறைப்பட்டுப் போகுதே

2. காவியுடை அணிந்த கூட்டம் சிறைப்பட்டுப் போகுதே
காவடியை சுமக்கும் கூட்டம் சிறைப்பட்டுப் போகுதே

3. மாவிளக்கு ஏந்தும் ஜனமும் சிறைப்பட்டுப் போகுதே
மடிப்பிச்சை கேட்கும் ஜனமும் சிறைப்பட்டுப் போகுதே

4. அலகு குத்தும் என் ஜனமும் சிறைப்பட்டுப் போகுதே
அர்ச்சனை செய்யும் கூட்டம் சிறைப்பட்டுப் போகுதே

E-Maj/3/4 Beat/T-148

1595.நீங்க மட்டும் போதும் ஆவியா

நீங்க மட்டும் போதும் ஆவியானவரே
(என்னில் நீர் வந்தால் மட்டும் போதும் ஆவியானவரே)
உம் சமூகம் மட்டும் போதும் ஆவியானவரே

1. பிதாவின் ஆவியானவரே கிறிஸ்துவின் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
மகிமையின் ஆவியானவரே கிருபையின் ஆவியானவரே
சத்திய ஆவியானவரே

2. உணர்வுள்ள ஆவியானவரே பெலனுள்ள ஆவியானவரே
உயிர்ப்பிக்கும் ஆவியானவரே
உன்னதரின் ஆவியானவரே தேற்றரவாளனாய் வந்தவரே
நித்திய ஆவியானவரே

E-Maj/4/4 Beat/T-148

1596.யேகோவா -3 நீர் இருக்கிறவர்

யேகோவா -3 நீர் இருக்கிறவர்
யேகோவா நீர் இருக்கிறவர்- யேகோவா-4

நேற்று மட்டும் இருந்தவரல்ல
இன்று மட்டும் இருப்பவரல்ல
நாளை என்றே வருபவரல்ல
நீர் இருக்கிறவர் இருப்பவராகவே இருக்கிறவர்
யேகோவா நீர் இருக்கிறவர்

1. நான் தாயின் கருவில் தோன்றும் முன்னே
உந்தன கண்கள் என்கை் கண்டதே-2
யேகோவா யீரே என்னை கண்டீரே-2

2. என் தனிமையதன வேளையிலே
நான் தள்ளப்பட்டு நிற்கைளிலே -2
யேகோவா கெத்மே என் அடைக்கலமானீரே-2

3. நான் சோர்ந்து போன நேரத்திலே
என் சோதனையின் மத்தியிலே-2
யேகோவா அடோனாய் என் பெலனானீரே- 2

4. தோல்வியில் நான் துவண்டபோது
நான் கேள்விக்குறியாய் மாறினபோது-2
யேகோவா நிசியே எனக்கு வெற்றி தந்தீரே-2

5. நேசத்திற்காய் ஏங்கினபோது
பாசத்திற்காய் கதறினபோது-2
யேகோவா ஷம்மா என்னை சூழ்ந்து கொண்டீரே-2

D-Maj/62 Beat/T-90

1597.என்னிடத்தில் யாதொரு

என்னிடத்தில் யாதொரு நன்மையில்லையே
ஆனாலும் தேடி வந்தீரே
தேடிப்பார்த்தேன் என்னிடத்தில் உண்மையில்லையே
ஆனாலும் நேசிக்கிறீரே

கண்டேன் நான் கண்டேன்
கலைந்து போகாத ஓர் அன்பை கண்டேன்
கண்டேன் நான் கண்டேன்
கல்வாரியில் அந்த நேசம் கண்டேன்

1. உம் ஆவிக்கு மறைவாய் நான் எங்கு போவேன்
உம் சமூகம் விட்டு எங்கு ஓடுவேன்
நான் கருவில் உருவாகும் முன் என்னை அறிந்தீரே
என் அவயம் உருவாகும் நாள் நீர் எழுதிவைத்தீரே

2. தொலைந்து போன என்னை மறந்துவிடாமல்
தேடி வந்தீர் தெரிந்து கொண்டீர்
இந்த உலகம் என்னை நினைத்தது
இவன் என்று தொலைவான் என்று (விழுவான்)
நீரே என்னை நேசித்தீர் என்று வருவேன்(எழுவேன்)

3. நெரிந்த நாணல் என்னை முறித்து போடவில்லை
மங்கின என் திரியை அணைக்கவில்லை
உம் நேச கயிராலே நீர் என்னை தூக்குகிறீர்
என்மேல் எண்ணெய் தினம் ஊற்றி என் விளக்கை ஏற்றுகிறீர்

4. என் மீறுதலுக்காய் காயப்பட்டீர்
எனது அக்கிரமத்திற்காய் நொறுக்கப்பட்டீர்
நான் அதிகம் கடன்பட்டேன் நீர் அனைத்தும் மன்னித்தீர்
அதனால் தான் நானும் உம்மை அதிகம் நேசிக்கின்றேன்.

C-Maj/2/4 Beat/T-90

1598.கண்ணார உந்தன் மகிமை

கண்ணார உந்தன் மகிமை காண
நான் வாஞ்சிக்கிறேன்
பொன்னான உந்தன் முகத்தை பார்க்க
நான் ஏங்குகிறேன்

உம் மகிமைக்குள் வாழவே
என் மனம் ஏங்குது

(மகிமையில் வாழவே என் மனம் விரும்புதே)
மணவாளன் உம்மோடிருக்க என் மனம் ஏங்குது
(மணவாளன் உம்மோடு சஞ்சரிக்க ஏங்குதே)

நான் மண்ணோடு ஒட்டியுள்ளேன்
என்னை விண்ணோடு எடுத்து கொள்ளும்
ஏனோக்கைப் போல என்னை
உம்மோடு வைத்துக் கொள்ளும்

1. என் பள்ளத்தாக்கின் வெட்டவெளியில் என் எலும்பு உலர்ந்திருக்கு
எந்த இடம் என்று எனக்கு தெரியும் அது உமக்கும் தெரியும்
உம் ஆவி எனக்குள்ளே வையும் நான் உயிரடைந்திடுவேன்
என்னை நீர் தேசத்தில் வையும் உமக்காய் வாழுவேன்
உம் நாமம் உயர்த்திடுவேன்)

2. கர்த்தாவே உந்தன் கையை என்மேலே அமரசெய்யும்
ஆவிக்குள் என்னையாக்கி நான்
என்னை அறிந்திட உம்மை புரிந்திட
உம் வார்த்தையை என் வாயில் வையும் நான் காலூன்றிட
என்னை நீர் தேசத்தற்கு அனுப்பும் உம் மகிமை சொல்லிட

நான் விரும்புவதை செய்யவில்லை
வெறுக்கிறதை செய்கிறேன்
நான் அல்ல என்னில் வாழும் பாவம் அதை செய்கிறது
உள்ளத்தில் உண்மை இருக்க நான் விரும்புகிறேன்
உம்மோடு அனுதினமும் சஞ்சரிக்க ஏங்குகிறேன்

D-Maj/2/4 Beat/T-90

1599.பிதாவே நீர் எத்தனை

பிதாவே நீர் எத்தனை பெரியவர்
இயேசுவே நீர் எத்தனை சிறந்தவர்
தூய ஆவியே நீர் எத்தனை உயர்ந்தவர்

பெரியவரே சிறந்தவரே உயர்ந்தவரே- உம்மை
போற்றுகிறேன் .... புகழுகிறேன் ... உயர்த்துகிறேன்...
உம்மை ஆராதிக்கின்றேன் -4

1. சாலமோனில் பெரியவர்
நீர் சர்வவல்லவர்
ஆதிமுதலாய் வீற்றிருக்கும் அல்பாவானவர்-
பிதாவே நீர் பெரியவர்

2. பதினாயிரம் பேர்களில்
நீர் சிறந்தவர்
பூரண அழகுள்ள என் புருஷனானவர்-
இயேசுவே நீர் சிறந்தவர்

3. மண்ணான எனக்குள்
உம் ஆவி தந்தவர்
விண்ணுக்கு என்னை உயர்த்த இறங்கி வந்தவர்-
தூயஆவியே நீர் உயர்ந்தவர்

D-Maj/62 Beat/T-80

1600.உம் சமூகம் வந்து நிற்கி

உம் சமூகம் வந்து நிற்கிறேன் – நான்
உம் சமூகம் வந்து நிறகிறேன்
உம் சாயலாக மாறத்தானையா – இன்று
உந்தன் முன்பாய் வந்து நிற்கிறேன்

1. மண்ணான என்னை நீர் குனிந்தெடுத்தீர்
விண்ணவர் உந்தன் சுவாசம் எனக்குள் வைத்தீர்
உம் சாயலாக தானே என்னை உண்டாக்கினீரே
உம் ரூபமாக தானே என்னை உருவாக்கினீர்

2. அனைத்தையும் ஆளுகை செய்ய என்னை படைத்தீர்
அன்பாய் நீர் ஒரு கனியை தொடாதேன்றீர்
உம் வார்த்தை மீறி நானும் பாவம் செய்ததாலே –நானே
சாபமாகி போனேன் தேவ சாயலை இழந்தேன் நானே

3. சாபமான என்னை நீர் பாவத்தில் விடவில்லை
என் பாவம் போக்க பரலோக தேவன் பூமிக்கு வந்தீர்
என் அக்கிரமங்கள் ஏற்றீர் என் மீறுதலை சுமந்தீர்
என்னை சாயலாக மாற்ற உம் ஜீவனையும் தந்தீர் –இயேசுவே

4. குமாரனின் சாயலுக்குள் ஒப்பாயிருக்க
முன்குறித்தீரே என்னை தெரிந்து கொண்டீரே
என்னை நீதிமானாக மாற்றுபவரும் நீரே
உந்தன் மகிமையில் என்னை கொண்டு சேர்ப்பவரும் நீரே

C-Maj/16 Beat/T-90

1601.உம்மை ஆராதிப்பதே என்

உம்மை ஆராதிப்பதே என் ஆசை – 2
உம்மை ஆராதிக்கிறேன்

இயேசு ராஜா உம்மை – என்
இயேசு ராஜா உம்மை – 3
உம்மை ஆராதிக்கிறேன் - 2
இயேசு ராஜா உம்மை

1. ஆதி அந்தமில்லா அனாதிதேவா
அனைத்தையும் படைத்தவரே

2. துக்கத்தை கலைத்து துதி உடை
தந்தீர் இயேசு ராஜாவே – 2

3. சாம்பலுக்கு பதிலாய் சிங்காரம்
தந்தீர் இயேசு ராஜாவே

D-Maj/16 Beat/T-95

1602.உம்மை போல தெய்வம்

உம்மை போல தெய்வம் இல்லை
நீர் இல்லை என்றால் நானும் இல்லை
கண்ணில் கண்ணாய் வாழும் பிள்ளை
உம் அன்பிற்கு அளவேயில்லை

1. முள்ளில் பாதையில் நடந்தேன் நான்
எந்தன் வாழ்க்கையை இழந்தேன் நான்

2. நீரில்லா மீனைப் போல் துடித்தேன் நான்
தாயில்லா பிள்ளை போல் அழுதேன் நான

3. மார்போடு அணைத்தீரே
ஒரு தாயைப் போல் காத்தீரே

4. உந்தன் வார்த்தையை வெறுத்தேன் நான்
உந்தன் பாதையை மறந்தேன் நான்

5. நீரே வாழ்வு என்று உணர்ந்தேன் நான்
எந்தன் ஜீவனை தந்தேன் நான்

6. வழி காட்டும் தெய்வமே
என்னைக் காக்கும் கர்த்தரே

E-Maj/Blues Rock/T-130

1603.உனக்கு விரோதமாய் எழும்பும்

உனக்கு விரோதமாய் எழும்பும் ஆயுதம் வாய்க்காதே(2)
ஒரு வழியாய் வருவான் எதிரி ஏழு வழியாய் ஓடுவான்
வெட்கப்பட்டுப் போவதில்லை நீ
எப்பக்கம் நெருக்கினாலும் ஒடுங்கி நீ போவதில்லை
கலக்கமடைந்தாலும் மன முறிவடைவதில்லை

இராஜா இயேசு நம்ம பக்கமே
அவர் சேனை என்றும் நம்ம பக்கமே
வெற்றி வெற்றி வெற்றி வெற்றியே (2)

1. துன்பப்படுத்தினாலும் கைவிடப்ப டுவதில்லை
கீழே விழுந்தாலும் மடிந்து நாம் போவதில்லை
- இராஜா இயேசு

2. எதிர்த்து வரும் எரிகோவை தகர்த்தெறியும் வல்லமை
தடுத்து நிற்கும் சாத்தானை முறித்தெறியும் வல்லமை
- இராஜா இயேசு

3. அக்கினியில் நடந்தாலும் எரிந்திடாத வல்லமை
தண்ணீரிலே நடந்தாலும் மூழ்கிடாத வல்லமை
- இராஜா இயேசு

G-Maj/Disco/T-125

1604.உன்னத தேவனுக்கே

உன்னத தேவனுக்கே மகிமை
உலகில் சமாதானமாமே
காரிருள் நீங்கிடக் காசினி மீதிலே
கதிரொளியாய் ஜெனித்தார்

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதியவர்க்கே
அல்லேலூயா துதியவர்க்கே

1. மானிடர் மேலிவர்க்கன்பிதுவோ
மனுக் கோலமாய் மனுவேலனார்
மாட்சிமை யாவையும் துறந்தே இவ்வுலகில்
மாணொளியாய் ஜெனித்தார்

2. தாரகையென அவர் தோன்றிடவே
நேர்ப் பாதையில் நடத்திடவே
தற்பரன் கிருபையும் சத்தியம் மீந்திட
தன் ஒளியாம் ஜெனித்தார்

1605.உன்னத வீட்டை

உன்னத வீட்டை சீக்கிரம் சென்று
அன்பரை சேர்ந்திடுவோம்
இயேசு இரட்சகர் ஏழையின் வாஞ்சை
யாவையும் தீர்த்துவிட்டார்

1. தூதரின் மத்தியில் மகிழ் கொண்டாடிட
தேவனை போற்றிடுவேன்
கமழ் வாசனை வீசும் பூக்களின் மத்தியில்
இன்பமாய் அயர்ந்திடுவேன்

2. வானோர்கள் பற்பல ஊழியஞ் செய்ய
ஏழையும் சேர்ந்து கொள்ளுவேன்
என் இயேசுவின் துதியை நாவினால் பாடி
நேசரால் அகமகிழ்வேன்

3. பளிங்கு நதியின் ஓரங்களில்
நான் ஓடியுலாவிடுவேன்
பொன் வீதியில் நானும்
அன்பருடன் கவியுடன் அடியெடுப்பேன்

4. பறவைகளனேகம் விருட்சங்களதிகம்
தானுமங்கே உண்டு
பராபரன் தாமே எனக்காக சேர்த்த
பொருட்களும் மெத்தவுண்டு

5. பேதுரு யோவான் பவுலும் கூட
அங்கே ஓய்ந்திருப்பார்
என் நேசரின் வீட்டில் மகாபெருமின்பம்
ஆ ஆ ஆனந்தமே

1606.எங்கள் ஆராதனைக்குரியவரே

எங்கள் ஆராதனைக்குரியவரே
எங்கள் ஆராதனை நாயகரே
எங்கள் ஆராதனை ஏற்றுக்கொள்ளுமே
எங்கள் யெகொவா தெய்வமே

1. துணையாளரே உம்மை துதிக்கையிலே
என் துன்பமெல்லாம் தூசியாக பறக்குதய்யா
துயரமெல்லாம் நீங்குதையா துள்ளிப்பாட
உள்ளமெல்லாம் ஏங்குதையா

2. அன்பின் இராஜனே உம் அபிஷேகத்தை
உம் பிள்ளைகளாம் எங்கள் மேல் ஊற்றும் ஐயா
பெலன் அடைந்து உம்மை உயர்த்திடவே
கிருபையை எங்களுக்கு தாருமையா

3. வல்ல தெய்வமே இப்போ வாரும்மைய்யா
உம் வல்லமையால் எங்களை நிரப்புமைய்யா
வறண்டு போன எங்கள் வாழ்க்கையிலே
வாழ்வெல்லாம் வசந்தம் ஆக்குமைய்யா

1607.எண்ணில்லா நன்மைகள்

எண்ணில்லா நன்மைகள்
இயேசுவே செய்திட்டார்
பாவ சாபம் நீக்கி,
தூய வாழ்வை தந்தார்

1. உடைந்துபோன பாத்தரம் போல
உருவம் இழந்து நின்றேன்
குயவனாக அருகில் வந்து
புதிதாய் வனைந்து விட்டார்

2. காணாமல் போன ஆட்டினைப் போல
கானக பாதை சென்றேன்
மேய்ப்பனாக தேடி வந்து
மந்தையில் சேர்த்துவிட்டார்

1608.எழுப்புதலின் வாசனை

எழுப்புதலின் வாசனை எங்கும் வீசட்டும்
எழுப்புதலின் அக்கினி பற்றி பிடிக்கட்டும்
எழுப்புதலாய் உள்ளங்கள் இன்றே மாறட்டும்
பிரிவினை அகலட்டும் தேவ அன்பு மலரட்டும்
தேவனின் ராஜ்ஜியம் கட்டப்படட்டும் - 2

ஒன்று சேர்ந்து நாம் உழைப்போம்
ஒன்று சேர்ந்து நாம் ஜெபிப்போம்
ஒன்று சேர்ந்து நாம் துதிப்போம்
தேவ ராஜ்ஜியம் கட்டுவோம்

1. பாரம்பரியங்களை நாம் விட்டு விடுவோம் - நம்
பாரதம் மீட்டிட நாம் பாடுபடுவோம்
கிறிஸ்துவின் சிந்தையே தரித்துக் கொள்வோம்
இயேசுவை உலகிற்கு காட்டிடுவோம்

2. சபையில் வித்தியாசம் களைந்து
ஒரே சரீரமாக உழைப்போம்
தேவனின் அன்பால் நிறைந்திடுவோம்
எழுப்புதல் மழையில் நனைந்திடுவோம்

3. பிரிவினை ஆவிகளை எதிர்ப்போம் - நம்
பிடிவாதங்களை தூக்கி எறிவோம்
சாத்தானின் சதிகளை அறிந்திடுவோம்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுப்போம்

4. சுயநலத்திற்காய் நாம் வாழாமல்
பறந்த மனதுடன் செயல்படுவோம்
பண ஆசை இச்சைகளை வெறுத்து விட்டு
பரலோகம் சென்றிட ஆயத்தமாவோம்

G-Min/Hard Rock/T-135

1609.என் ஆத்துமாவே என்

என் ஆத்துமாவே என் உள்ளமே
கர்த்தரை ஸ்தோத்தரி
என் ஆத்துமாவே என் உள்ளமே
அவர் நாமத்தை ஸ்தோத்தரி

1. அவர் செய்த நன்மை உதவிகளை
என்றென்றும் மறவாதே - 2
அவர் பரிசுத்தர் மகத்துவர்
ஆத்துமாவின் நேசரே - 2

2. வியாதியை எல்லாம் குணமாக்கினார்
கர்த்தரை ஸ்தோத்தரி - 2
அவரை போற்றுவோம் புகழுவோம்
என்றும் நல்லவர் -2

F-Maj/Pop Ballad/T-115

1610.என் கண்கள் உம்மை

என் கண்கள் உம்மை காணும்
என் காதுகள் உம்மை கேட்கும்
என் நாவு உம்மை பாடும்
என் இதயம் தியானிக்கும்

1. கைகள் கிரியை செய்யும்
உம் நாமம் உயர்ந்திட
கால்கள் சுற்றி திரியும்
உம் நாமம் அறிவிக்க

உம்மை ஸ்தோத்தரிப்பேன்
உம்மை துதித்திடுவேன்
என்றும் புகழ்ந்து பாடிடுவேன்

2. உதடு உம்மை போற்றும்
என்றும் உம்மை துதித்திடும்
நடைகள் உறுதிபடுமே
உம் வார்த்தையில் நிலைத்திடும்

1611.என் சமூகம் முன்பாக

என் சமூகம் முன்பாக செல்லும்
இளைபாறுதல் தந்திடுவேன்
உன்னை பெயர் சொல்லி அழைத்தவர் நானே
என் மகிமையைக் காண செய்வேன்
நான் ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்
என்றென்றும் உன் தேவன்

1. செங்கடல் உனக்காய் விலகிடும்
யோர்தான் நதியும் வழிவிடும - 2
மலைகள் மெழுகுபோல் உருகிட செய்வேன்
பாதைகள் புதிதாய் திறந்திடும-2

2. பகலில் மேகஸ்தம்பமும்
இரவில் அக்கினி வெளிச்சமும்-2
பாதம் கல்லில் மோதாமல் காப்பேன்
பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன்-2

3. கன்மலை உனக்காய் பிளந்திடும்
தண்ணீர் தாகம் தீர்ந்திடும்-2
ஒருவரும் காணாத அதிசயங்களை
நான் உந்தன் நடுவில் செய்திடுவேன்-2

B-Maj/British Pop/T-105

1612.என் தேவன் என் வெளிச்சம்

என் தேவன் என் வெளிச்சம் - என்னை
இரட்சிப்பவரும் அவரே
என் ஜீவனுக்கு அரணானவர் - நான்
யாருக்கும் அஞ்சமாட்டேன்

1. தாயும் தந்தையும் தள்ளி விட்டாலும்
தந்தை இயேசென்னை அணைத்துக் கொள்வார்
என்னை அவர் நிழலில் வைத்து காத்திடுவார்
கன்மலை மேல் ஏற்றி என்னை உயர்த்திடுவார்

2. சாத்தான் என்னை சோதித்திட்டாலும்
கர்த்தர் இயேசென்னை சேர்த்து கொள்வார்
என்னை ஒளிச்சுடராய் பயன்படுத்திடுவார்
என்னை தம் சாயலாய் என்றும் மாற்றிடுவார்

3. தீமை செய்கின்றவர்கள் எனக்கு
தீமை செய்ய விரும்புகையில்
என் தேவன் அருகில் வந்து என்னை காத்திடுவார்
என்னை பகைத்தவர்கள் தேவனை அறிவார்கள்

C-Maj/Slow Rock/T-105

1613.என்ன எனக்கு இல்லாமல்

என்ன எனக்கு இல்லாமல் போனாலும்
உங்க கிருபை எனக்கு போதுமையா
அன்னந் தண்ணீர் ஆகாரம் இல்லாமல் போனாலும்
உங்க கிருபை எனக்கு போதுமையா

1. உற்றோரும் பெற்றோரும் என்னை மறந்தாலும்
நீர் என்னை மறப்பதில்லையே
தாய் மறந்தாலும் தந்தை வெறுத்தாலும்
உள்ளங்கையில் என்னை வரைந்தீரே
உம் மகனாய் மாற்றி விட்டீரே

2. உயர்வேயானாலும் தாழ்வேயானாலும்
உம் அன்பை விட்டு பிரிப்பதில்லையே
எளியவனை நீர் மறப்பதுமில்லையே
நம்பினோரை கைவிடுவதில்லை
ஏழை என்னை மறப்பதில்லையே

1614.என்னை ஆட்கொண்ட இயேசுவே

என்னை ஆட்கொண்ட இயேசுவே
உமக்கே ஆராதனை
என்னை ஆளுகை செய்பவரே
உமக்கே ஆராதனை

ஆராதனை ஆராதனை - 2

1. என்னை தேடிவந்து இரட்சித்து
அபிஷேகித்த தெய்வம் நீரல்லவோ

2. என்னை பெயர் சொல்லி அழைத்து
உயர்த்தின தெய்வம் நீரல்லவோ

3. என்னை கருவிலே தெரிந்தெடுத்து
நிலைப்படுத்தினதெய்வம் நீரல்லவோ

C-Maj/16 Beat/T-90

1615.என்னை தாலாட்டி

என்னை தாலாட்டி சீராட்டி வளர்க்கின்றவர்
என் இதயத்தின் ஏக்கங்கள் அறிகின்றவர்
என் தாயென்னை மறந்தாலும் மறக்காதவர்
என் நிழல் போல என்னோடு நடக்கின்றவர்

1. நான் அழும்போது என்னோடு அழுகின்றவர்
என் இரணமான மனதுக்கு மருந்தானவர்
என் உயிரோடு உறவாடும் துணையானவர்
இந்த கசப்பான உலகத்தில் இனிப்பானவர்

2. என் அன்பான அண்ணனாக இருக்கின்றவர்
என் தோளோடு தோள் கோர்த்து மகிழ்கின்றவர்
தன் தோள் மீது எனை தூக்கி சுமக்கின்றவர்
நான் செய்த குற்றத்திற்காய் உயிரையே தந்தவர்

3. கண்ணின் மணிப்போல என்னை பாதுகாக்கின்றவர்
அன்பு என்றால் என்னவென்று சொல்லித்தந்தவர்
என்னை மேல் சாதி கீழ் சாதி என்று பிரிக்காதவர்
தம்மிடம் வரும் எல்லோரையும் ஏற்றுக் கொள்பவர் -
இயேசு

1616.ஓசன்னா பாடுவோம்

ஓசன்னா பாடுவோம் இயேசுவின் தாசரே
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா!

1. முன்னும் பின்னும் சாலேம் நகர்
சின்ன பாலர் பாடினார் - அன்றுபோல
இன்றும் நாமும் அன்பாய் துதிப்பாடுவோம்

2. சின்ன மறி மீதில் ஏறி, அன்பர்
பவனி போனார் - இன்னும் என்
அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்

3. பாவமதைப் போக்கவும் இப்பாவியைக்
கை தூக்கவும - பாசமுள்ள
ஏசையாப் பவனியாகப் போகிறார்

4. பாலகர்களின் கீதம் கேட்டுப் பாசமாக
மகிழ்ந்தார் - ஜாலர் வீணையோடு
பாடி தாளை முத்தி செய்குவோம்

5. குருத்தோலை ஞாயிற்றில் நம்
குருபாதம் பணிவோம் - கூடி அருள் பெற்று
நாமும் த்ரியேகரைப் போற்றுவோம்

D-Min/Waltz/T-145

1617.கடல் கொந்தளித்து

1. கடல் கொந்தளித்துப் பொங்க - கப்பலாடிச்
செல்கையில் புயல் காற்று சீறி வீச
பாய் கிழிந்து போகையில்
இயேசு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாய் இரும்
காற்றமர்த்தி துணைநின்று
கரைசேர செய்திடும்

2. கப்பல் ஏறி போவோருக்கு
கடும் மோசம் வரினும்
பாறைமேல் முழக்கும் காற்று
உமக்கெல்லாம் அடங்கும்
இருளில் நீர் பரம்ஜோதி
வெயிலில் நீர் நிழலே
யாத்திரையில் திசைக்காட்டி
கரைசேர செய்திடும்

3. எங்கள் உள்ளம் உம்மை நோக்கும்
இன்ப துன்ப காலத்தில்
எங்கள் ஆவி உம்மில் தங்கும்
இகப் பர ஸ்தலத்தில்
இருளில் நீர் பரம்ஜோதி
வெயிலில் நீர் நிழலே
யாத்திரையில் திசைக்காட்டி
கரைசேர செய்திடும்

1618.கடும் புயலிலே என்னை

கடும் புயலிலே என்னைக் காத்தவரே
கண்ணின் மணி போலக் காப்பவரே
தினந்தோறும் உம் கிருபையினால்
வழி நடத்திடுமே

என் அன்பு நேசரே
என் ஆருயிர் நண்பனே
வாழ்த்துவேன் வணங்குவேன் உம்மையே
என் வாழ்நாளெல்லாம் உமக்காய் ஜீவிப்பேன்
என் உயிருள்ள நாள் வரை
உம்மைப் போற்றிடுவேன்

1. இந்த நாளின் ஒவ்வொரு செயலிலும்
உம் ஞானத்தால் என்னை நடத்துமே
நான் நடக்கும் வழிதனைக் காண்பித்து
ஆலோசனை சொல்லுமே
-என் அன்பு

2. பழைய நினைவுகள் கசந்த நிகழ்ச்சிகள்
துயரமான பல தோல்விகள்
என்னை வாட்டுகின்ற வேளையில்
உம் சமூகத்தை நான் சாருவேன்

3. உடைந்த உறவுகள் மனதின் கசப்புகள்
என்னை நொறுக்கும் இதயத்தின் ஏக்கங்கள்
இருளாய் என்னைச் சூழ்கையில்
உம் பிரசன்னம் தான் என்

D-Min/70's Disco/T-115

1619.கண்ணோக்கி பார்த்த

கண்ணோக்கி பார்த்த தேவா
கலக்கங்கள் தீர்த்த தேவா
பாவ சேற்றில் வாழ்ந்த என்னை
உந்தன் கரம் நீட்டி மீட்ட தேவா

தாயே என் இயேசு நாதா
தந்தையே மா யெகோவா - 2

1. கற்பத்தில் நான் தோன்று முன்னே
என்னை பெயர் சொல்லி அழைத்தவரே
கருவிலே நான் தோன்று முன்னே
உந்தன் கரங்களில் வரைந்து கொண்டீர்

2. இரத்தத்தாலே மீட்டவரே
இரட்சிப்பு தந்தவரே
பாவமெல்லாம் தீர்த்தவரே
பரலோகில் சேர்த்தவரே

3. கண்மணி போல் காத்தவரே
கண்ணீரை துடைத்தவரே
எண்ணமெல்லாம் நிறைந்தவரே
இதயத்தை கவர்ந்தவரே

D-Min/6/8 Blues/T-125

1620.கரம்பிடித்து உன்னை

கரம்பிடித்து உன்னை என்றும்
நடத்திடுவார் கண்மணிபோல்
உன்னை என்றும் காத்திடுவார்

கலங்கிடாதே திகைத்திடாதே - கர்த்தர்
கரம் உனக்கு உண்டு பயந்திடாதே

1. படுகுழியில் நீ விழுந்தாலும்
பரத்திலிருந்து வந்து உன்னை தூக்கிடுவார்
அக்கினியில் நீ நடந்தாலும் எதுவும்
உன்னை சேதப்படுத்த முடியாதே

கலங்கிடாதே திகைத்திடாதே கர்த்தர் கரம்
உனக்கு உண்டு பயந்திடாதே

2. ஆறுகளை நீ கடந்தாலும் அவைகளை என்றும்
உன்மீது புரள்வதில்லை
காரிருளில் நீ நடந்தாலும்
பாதைக்கு வெளிச்சமாக இருப்பாரே

கலங்கிடாதே திகைத்திடாதே கர்த்தர் கரம்
உனக்கு உண்டு பயந்திடாதே

3. சுழல்காற்று உன்னை சூழ்ந்தாலும்
அவர் கிருபை உன்னை என்றும் தாங்கிடுமே
சோதனையில் நீ அமிழ்ந்தாலும்
சோர்ந்திடாதே உன்னை அவர் அணைப்பாரே

D-Maj/Swing Reggae/T-90

1621.கர்த்தர் செய்ய நினைத்தது

கர்த்தர் செய்ய நினைத்தது
ஒன்றும் தடைபடாது (2)
தடைகளை நீக்குவார்
ஜெயத்தை தந்திடுவார்
ஜெயமாய் நடத்துவார்

அல்லேலூயா…அல்லேலூயா

1. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே
நம் கர்த்தருக்கு பிரியமானதே
ஆபிரகாமை ஆசீர்வதித்தவர்
உன்னையும் இன்று ஆசீர்வதிப்பார்
சூழ்நிலைகளைப் பார்த்து
நீ சோர்ந்து போகாதே
கர்த்தர் உன்னை உயர்த்திடுவார்

2. வழியே இல்லா இடங்களிலும்
புது வழியை உனக்கு உண்டாக்குவார்
இருண்டு போன உந்தன் வாழ்க்கையில்
ஜீவ ஒளியை இன்று ஏற்றிடுவார்
வாசல்கள் எல்லாம் அடைக்கப்பட்டாலும்
புது வாசல் உனக்கு திறந்திடுவார்

E-Maj/8 Beat/T-110

1622.காணாமல் தியங்கிடும்

காணாமல் தியங்கிடும்
கல்வாரி ஒன்றுண்டே
கவலை கண்ணீர்
துடைக்கும் என்றென்றும் (2)

1. ஜீவதண்ணீர் ஓடையில்
ஜீவன் பெற மான்கள்
போல நாடி ஓடி வருவாயே
நாதன் இயேசு அழைக்கிறார்

2. ஜீவ ஊற்று இயேசுவே தாகம்
தீர வருவாயே இதயம் திறந்து
ஏற்றுக்கொள் ஈவார்
உனக்கு சமாதானம்

G-Maj/8 Beat/T-95

1623.காப்பார் உன்னை

காப்பார் உன்னைக் காப்பார்
காத்தவர் காப்பார் இன்னும்
இனிமேல் காத்திடுவார்
கலங்காதே மனமே காத்திடுவார்

1. கண்டுன்னை அழைத்தவர் கரமதைப்பார்
அவர் கைவிடாதிருப்பார்
ஆண்டுகள் தோறும் உனக்கவரளித்த
ஆசிகளை எண்ணிப்பார்
இன்றுமதை எண்ணிப்பார் - உனக்

2. மீட்கப்பட்டவர்க்கு வாக்குப்படி இன்பக்
கானான் அளிக்கவில்லலையோ
இப்போ நினிவேயை
நிர்மூலம் செய்வேனென்று
பின்னும் இரங்கவில்லையோ
இல்லையோ இல்லையோ இல்லையோ
மிக அன்பாய் இரங்கவில்லையோ

3. வீழ்ச்சியில் விழாதுன்னை காப்பதற்காய்
விரைவாய் வந்து சேர்ப்பவரும்
சிற்சில வேளையில் சிட்சையினால்
உன்னை கிட்டியிழுப்பவரும்
ஜெயமும் கனமும் சுகமும்
இரக்கமாய் உனக்களிப்பவரும்

4. தாயினக்கட்டிலே உன்னைத்
தனக்காய் தாம் தெரிந்தெடுத்தவரே
மாயையிலாகாது தாங்கியணைத்து
மந்தையிற் சேர்த்தவரே
அவரே (2) அன்பு கொண்டு மணந்தவரே

5. ஆதரவாய் பல ஆண்டுகளில் பரன்
அடைக்கலமாய் இருந்தார்
காதலெனோடவர் கைப்பணி செய்திட
கனிவுடன் ஆதரித்தார் தரித்தார் தரித்தார்
தரித்தார் பரிசுத்தத்தில் அலங்கரித்தார்

F-Maj/Disco/T-120

1624.கிருபை கிருபை

கிருபை கிருபை
நம் தேவனின் மாறாத கிருபை
கிருபை கிருபை
நம் இயேசுவின் மாறாத கிருபை

அனுதினமும் நம்மை நடத்திடும்
அற்புத தேவனின் கிருபை

1. நம் பாவத்தை மன்னிக்கும் கிருபை
நம் சாபத்தை போக்கிடும் கிருபை

2. பரிசுத்தமாக்கிடும் கிருபை
நம்மை பரலோகம் சேர்த்திடும் கிருபை

3. நமக்காய் ஜீவன் தந்த கிருபை
நாள்தோறும் பாதுகாக்கும் கிருபை

4. நம்மை விட்டு விலகாத கிருபை
நமக்காய் ஜீவன் தந்த கிருபை

1625.உயிர்த்து எழுந்த நம்

உயிர்த்து எழுந்த நம் இயேசு
மரணத்தை ஜெயித்து எழுந்தார்
இன்னும் உயிரோடு இருக்கிறார்
நம்மை என்றென்றும் நடத்துவார் - 2

அல்லேலூயா பாடுவோம்
ஆர்பரித்துப் போற்றுவோம் - 2
உயிரோடு எழுந்த இயேசுவை
என்றென்றும் ஆராதிப்போம் - 2

D-Min/Rock Shuffle/T-135

1626.சாத்தானுக்கு சவால்

சாத்தானுக்கு சவால் விடும்
சந்ததி நாங்க சேனைகளின் தேவனின்
போர் வீரர்கள் நாங்க -2
சவாலே சமாளி சாத்தானே நீ ஏமாளி -2

சவால் சவால் (2) சவாலே
நாங்க பவுல போல
சவால் விடுவோம் சவாலே -2

1. சாவுக்கு ஏதுவான எதுவும் ஒன்றும்
செய்வதில்லையே - ஆவியானவர்
எங்களோடு பயம் இல்லையே

சவால் சவால் (2) சவாலே
நாங்க தாவீதைப் போல சவால்
விடுவோம் சவாலே -2

2. சாத்ராக் மேஷாக் ஆபேத் நேகோ ஆவி
எனக்குள்ளே - ஏழு மடங்கு எரியும்
சூளை எனக்கு பயமில்லை

சவால் சவால் (2) சவாலே
நாங்க தானியேல் போல சவால்
விடுவோம் சவாலே -2

3. உலகத்தின் இச்சைகளுக்கு விலகி
ஓடியே - எங்கள் வாலிபத்தை
இயேசுவிற்கு சொந்த மாக்குவோம்

சவால் சவால் (2) சவாலே்
யோசேப்பைப் போல சவால்
விடுவோம் சவாலே -2

G-Maj/Guitar Ballad/T-90

1627.சுகம் உண்டு

சுகம் உண்டு
பெலன் உண்டு
ஜீவன் உண்டு
உம் பாதத்தில்

நேசிக்கிறேன் உம்மைத்
தானே - என் தெய்வமே
என் இயேசுவே - 2

1. நேசம் உண்டு பாசம் உண்டு
இரக்கம் உண்டு உம் பாதத்தில்

2. அடைக்கலமே அதிசயமே
அண்டி வந்தேன் உம் பாதமே

3. துக்கம் நீங்கும் துயரம் நீங்கும்
துன்பம் நீங்கும் உம் பாதத்தில்

4. வியாதி நீங்கும் வறுமை நீங்கும்
பாரம் நீங்கும் உம் பாதத்தில்

5. சுகப்படுத்தும் பெலப்படுத்தும்
திடப்படுத்தும் இந்நேரத்தில்
சுகம் பெற்றோம் பெலன் பெற்றோம்
ஜீவன் பெற்றோம் உம் பாதத்தில்
நன்றி ஐயா நன்றி ஐயா

உயர்த்துகிறோம் உம்மைத் தானே
என் தெய்வமே என் இயேசுவே

F-Maj/80's Fusion/T-120

1628.தந்தானைத் துதிப்போமே

தந்தானைத் துதிப்போமே
திருச்சபையோரே கவி பாடிப்பாடி
தந்தானைத் துதிப்போமே

விந்தையாய் நமக் கனந்தனந்தமான
விள்ளற்கரியதோர் நன்மை மிக மிக்

1. ஒய்யாரத்துச் சீயோனே நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,
ஒய்யாரத்துச் சீயோனே
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே, நாமும்

2. கண்ணாரக் களித்தாயே நன்மை
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து,
கண்ணாரக் களித்தாயே
எண்ணுக்கடங்காத எத்தனையோ
நன்மை இன்னுமுன்மேற் சோனா
மாரிபோற் பெய்துமே

3. சுத்தாங்கத்து திருசபையே உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சுத்தாங்கத்து திருசபையே
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தம்மின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம்

4. தூரம் திரிந்த சீயோனே உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி,
தூரம் திரிந்த சீயோனே
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை

5. சிங்காரக் கன்னிமாரே உம்
அலங்கார கும்மி அடித்து படித்து மங்காத உன்
சிங்காரக் கன்னிமாரே
மணவாளன் இயேசுதமை வாழ்த்தி
வாழ்த்தி ஏத்தி பணிந்திடும்

D-Maj/Disco/T-120

1629.துதி கனம் மகிமையுமக்கே

துதி கனம் மகிமையுமக்கே
ஓ எல்லாமமே ஓ எந்நாளுமே
துதி கனம் மகிமையுமக்கே
ஓ நீரே ராஜாவே அல்லேலூயா

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் மிக ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஓ நீரே ராஜாவே அல்லேலூயா

துதி கனம் மகிமையுமக்கே
ஓ எல்லாமமே ஓ எந்நாளுமே
துதி கனம் மகிமையுமக்கே
ஓ நீரே ராஜாவே

1630.துதி துதி இயேசுவை

துதி துதி இயேசுவை-3
என் நேசரை

1. காலை கல்லில் இடறாதபடி
காத்து நடத்துவார்
எந்தன் தெய்வம் என் இயேசுவை
என்றென்றும் பாடுவோம்

2. துன்ப இன்ப வேளையில்
தாங்கி நடத்துவார்
மாறா தெய்வம் என் இயேசுவை
என்றென்றும் பாடுவோம்

D-Maj/Soft Fusion/T-85

1631.துதித்திட வேண்டும்

துதித்திட வேண்டும்
துதித்திட வேண்டும்
துதிக்கத்தான் வேண்டும்
தூயவரை

அல்லேலூயா (8)

1. துன்பத்திலும் துதிக்க ஆசை
இன்பத்திலும் துதிக்க ஆசை
துயரத்திலும் துதிக்க ஆசை
மகிழ்ச்சியிலும் துதிக்க ஆசை

என்றென்றும் துதிக்க ஆசை
எப்போதும் துதிக்க ஆசை
அல்லேலூயா (8)

2. தாழ்விலும் துதிக்க ஆசை
வாழ்விலும் துதிக்க ஆசை
குறைவிலும் துதிக்க ஆசை
நிறைவிலும் துதிக்க ஆசை

3. வியாதியிலும் துதிக்க ஆசை
சுகத்திலும் துதிக்க ஆசை
சோதனையில் துதிக்க ஆசை
சாதனையில் துதிக்க ஆசை

A-Maj/80's Fusion/T-125

1632.துதியுங்கள் தேவனை

துதியுங்கள் தேவனை
துதியுங்கள் தூயோனை

1. அவரது அதிசயங்களைப் பாடி
அவர் நாமத்தை பாராட்டி
அவரையே ஆண்டவர் என்றறிந்து
அவரையே போற்றுங்கள்
ஆபிரகாமின் தேவனை ஈசாக்கின் தேவனை
ஆர்ப்பரித்து வணங்குங்கள்

2. இஸ்ரவேலின் மக்களின் மன்னவனே
இடையூற்றினை போக்கினோனே
கானானின் தேசத்தை காட்டினரே
கர்த்தரைப் போற்றுங்கள
ராஜாதி ராஜனை கர்த்தாதி கர்த்தனை
ஆர்ப்பரித்து வணங்குங்கள்

3. வானங்களிலெல்லாம் உள்ளவைகளே
நம் கர்த்தரை துதியுங்கள்
உன்னதத்தில் அவர் நாமத்தையே
என்றென்றும் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே கீழ்ப்படியும்
பெருங்காற்றே - ஆர்ப்பரித்து துதியுங்கள்

4. எக்காள தொனியுடன் அவர் நாமத்தை
எந்த காலமும் ஸ்தோத்தரிப்போம்
வீணையோடும் சுரமண்டலத்தோடும்
விண்ணோரை துதியுங்கள்
தம்புரோடும் தாளத்தோடும் யாழோடும்
குழலோடும் - ஆர்ப்பரித்து வணங்குங்கள்

E-Maj/Waltz/T-150

1633.தெய்வத்தின் சந்நிதானம்

தெய்வத்தின் சந்நிதானம் என
உள்ளத்தின் ஆனந்தமே
காருண்யமாம் அவர் சப்தம்
என் காதுகளுக்கின்பமே

1. தளர்ந்த மனம் புதிதாக்கும் நல்லன்பு
தகர்ந்த ஆன்மாவிற்கு சாந்தி தரும்
அவர்தரும் வாக்குத்தத்தங்கள் உன்னை
அனுதினம் வழிநடத்தும்
\- - தெய்வத்தின

2. உலகத்தில் உன் நிலை நிர்பந்தமே
நோக்கிடு கல்வாரி நாயகனை
இயேசுவின் பாதத்தில் வீழ்ந்திடுவாய்
ஆறுதல் கண்டடைவாய்
\- - தெய்வத்தின்

C-Maj/Waltz/T-140

1634.தேவனே என் ஜீவனே

தேவனே என் ஜீவனே
எந்தன் கன்மலையே
ஏசுவே என் நேசரே
என்றுமாய் நம்புவேன்

1. தீமை ஏதும் சூழ்ந்திடா
என்னைக் காக்கும் தெய்வமே
சாபம் யாவும் நீக்கியே
சாந்தியும் நல்கிடும்

அல்லேலூயா அல்லேலூயா - 2

2. என்னை முற்றும் தந்திட்டேன்
கிருபை சூழ தாங்குவீர்
எந்தன் மேன்மை நீரல்லோ
இயேசுவே பின் செல்வேன்

3. தாகம் தீர்க்கும் மீட்பரே
எந்தன் வாஞ்சை நீரல்லோ
உம்மைப் போல மாறிட
இயேசுவே செய்திடும்

4. உள்ளம் திறந்து வேண்டினேன்
என்னைக் கேட்டு இரங்குவீர்
தேவ நன்மை யாவையும்
தேவனே நல்கிடும் அல்லேலூயா 2

5. பாரில் உம்மைத் தேடினேன்
பயங்கள் யாவும் நீக்கினீர்
தேவ ராஜ்ஜியம் சேர்ந்திட
இயேசுவே செய்திடும் அல்லேலூயா 2

C-Maj/Funky Pop/T-100

1635.தேவாதி தேவன் இராஜா

தேவாதி தேவன் இராஜாதி இராஜன்
வாழ்க வாழ்கவே
கர்த்தாதி கர்த்தர் மன்னாதி மன்னன்
வாழ்க வாழ்கவே

மகிமை உமக்குத்தான்
மாட்சிமை உமக்குத்தான்
மகிமை உமக்குத்தான்
மாட்சிமை அதுவும் உமக்குத்தான்

1. திசை தெரியாமல் ஓடி
அலைந்தேன் தேடி வந்தீரே
சிலுவையில் தொங்கி இரத்தம் சிந்தி
இரட்சித்து அணைத்தீரே

2. எத்தனை நன்மை எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன்
வாழ்நாளெல்லாம் உமக்காய் வாழ்ந்து
உம் பணி செய்திடுவேன்

3. சோதனை நேரம் வேதனை வேளை
துதிக்க வைத்தீரே
எதிராய் பேசும் இதயங்களை
நேசிக்க வைத்தீரே

4. வேண்டுவதற்கும் நினைப்பதற்கும்
அதிகமாய் செய்பவரே
மீண்டும் மீண்டும் ஆறுதல் தந்து
அணைத்து மகிழ்பவரே

5. உளையான சேற்றில் வாழ்ந்த
என்னை தூக்கி எடுத்தீரே
கன்மலையின் மேல்நிறுத்தி - என்னை
பாட வைத்தீரே

E-Maj/Jive/T-135

1636.நம்பாதே நம்பாதே

நம்பாதே நம்பாதே
நண்பர்களை நம்பாதே

1. நாங்க இருக்கிறோம்
என்று சொல்வாங்க
பிரச்சனை வந்தா
ஓடி போவாங்க

2. அண்ணன் என்பார்கள்
தம்பி என்பார்கள்
பிரச்சன வந்தா
ஓடி போவாங்க

3. நம்பிடு நம்பிடு
இயேசுவை நம்பிடு
போஷித்திடுவார் தாங்கிடுவார்
நடத்திடுவார்

F-Maj/Blues Rock/T-130

1637.நம்புவேன் இயேசுவை

நம்புவேன் இயேசுவை நம்புவேன் (4)
இயேசு என் பெலனும் மீட்புமானார்
இயேசு என் கன்மலை கோட்டையானார்

நம்புவேன் (4)

1. நேசிப்பேன் இயேசுவை நேசிப்பேன் (4)
ஒப்பற்ற என் செல்வம் இயேசு தானே
ஓயாமல் அவர் புகழ் பாடிடுவேன் - 2

2. வாழுவேன் இயேசுவுக்காகவே (4)
ஆவியின் வல்லமையில் நிரம்பிடுவேன்
அல்லேலூயா துதிப்பாடி ஆர்ப்பரிப்பேன் - 2

3. வெல்லுவேன் சாத்தானை வெல்லுவேன் (4)
சாத்தானின் சேனைகளை வென்றிடுவேன்
வெற்றி கீதம் பாடி பாடி மகிழ்ந்திருப்பேன்

1638.நன்றியோடு அவர் வாசல்

நன்றியோடு அவர் வாசல் நுழைவோம்
துதியோடு பிரகாரம் வருவோம் - அவர்
சமுகம் மகிழ்ந்து கொண்டாடுவோம் - அவர்
நாமம் நல்லதென்று பாடுவோம்

கர்த்தர் நல்லவர் (3) அவர்
கிருபை என்றென்றுமுள்ளது

1. எக்காளத்தோடு அவரைத் துதிப்போம்
கின்னரம், தம்புரோடும் துதிப்போம்
வான் புவியிலுள்ள சிருஷ்டிகளும்
துதியின் தொனி உயர்த்திப் பாடுமே

2. இயேசு தேவ குமாரன் உன்னதர்
சர்வ சிருஷ்டிக்கும் காரணர்
அவர் முன்பாய் வந்து தொழுவோம்
கைகள் உயர்த்தி அவரைப் பாடுவோம்

ENTER HIS GATES WITH THANKS GIVING
COME INTO HIS COURTS WITH PRAISE
ENTER HIS PRESENCE REJOICING
SINGING GREAT AND MIGHTY IS HIS NAME

1. **PRAISE HIM WITH THE SOUND OF THE TRUMPET**
PRAISE HIM WITH THE TIMBREL AND HARP
LET EVERY CREATURE IN HEAVEN AND EARTH
LIFT THE SOUND OF PRAISE SING WITH ALL THEIR

HEART FOR THE LORD IS GOOD
AND HIS MERCIES ENDURETH FOR EVER

2. **JESUS THE SON IS EXALTED**
MAKER OF EVERYTHING
COME NOW AND BOW DOWN BEFORE HIM
**LIFT YOUR HANDS IN PRAISE **
RAISE YOUR VOICE TO SING
FOR THE LORD IS GOOD

G-Maj/Waltz/T-150

1639.நன்னாள் இதிலே ஆசீர்

நன்னாள் இதிலே ஆசீர் கூற வாரும் தெய்வமே
வருடங்கள் காலங்கள் கழிந்தாலும்
வழுவாமல் காத்த பரிசுத்தரே

1. உன் கைகளின் பலனை சாப்பிடுவாய்
பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்
உன் பிள்ளைகள் உன்னை சுற்றிலுமிருந்து
ஒலிவ மரக் கன்றுகளை போலிருப்பார்கள்

2. நித்திய ஜீவனை அளியும் தேவா
நித்தமும் உம்மை ஆராதிக்க
உம் செட்டைகள் மறைவில் குஞ்சுகள் போல
எந்நாளும் பாதுகாத்திடுவீரே

D-Maj/Swing/T-90

1640.நான் ஜெபிக்கும் போதெல்லாம்

நான் ஜெபிக்கும் போதெல்லாம்
உந்தன் சித்தம் செய்திட
உம்மைப்போல் மாற்றிடும்
வாஞ்சையோடு கதறுவேன்

கர்த்தருக்கு காத்திரு
புதுபெலன் அடைவாய்
நீ பறந்து போனாலும்
நீ நடந்து போனாலும்

கர்த்தருக்கு காத்திரு – 2
புது பெலன -2 அடைவாய்

1. உம் வசனம் தியானிக்கையில்
தேவ ஞானம் தாருமே
அப்பமாக மாற்றிடும்
புசித்து நான் சந்தோஷிப்பேன்

2. நான் நடக்கும் பாதைகளில்
தவறாமல் காத்திடும்
தூதர்களை அனுப்பி
பாதையை நீர் செம்மை செய்யும்

D-Min/Slow Ballad/T-100

1641.நான் பாட வருவீரய்யா

நான் பாட வருவீரய்யா
நான் போற்ற மகிழ்வீரய்யா
என் வாழ்விலே வந்தீரய்யா
புது வாழ்வு தந்தீரய்யா

1. தாய் தன் பாலனை மறந்தாலும்
நான் உன்னை மறவேன் என்றவரே
உள்ளங்கையில் என்னை வரைந்தீரே
எந்தன் மதில்கள் உமக்கு முன்னே

2. இமைப்பொழுது என்னை மறந்தாலும்
இரக்கத்தாலே என்னை சேர்த்துக்கொள்வீர்
உந்தன் அன்பை நான் மறப்பேனோ
ஜீவ நாளெல்லாம் பாடிடுவேன்

3. மலைகள் பர்வதங்கள் விலகினாலும்
உம் கிருபை என்னை விட்டு விலகாது
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்
உந்தன் வாக்குகள் மாறாதது

C-Min/Slow Rock/T-110

1642.நிச்சயமாகவே ஒரு முடிவு

நிச்சயமாகவே ஒரு முடிவு உண்டு
உன் நம்பிக்கை வீண் போகாது

நிச்சயமாகவே நிச்சயமாகவே -2

1. முந்தினவைகளை நினைக்க
வேண்டாம் வேண்டாம்
பூர்வமானதை சிந்திக்க
வேண்டாம் வேண்டாம்
புதிய காரியத்தை செய்வேன் என்றாரே
இப்பொழுதே தோன்றும் என்றாரே

2. துதியின் பலிகளை செலுத்தி செலுத்தி
கர்த்தர் மேல் நம்பிக்கையால் இருந்தால்
அவரே உன்னை விட்டு விலகுவதில்லை
உன்னை என்றும் கைவிடுவதில்லை

3. கர்த்தர் மேல் பாரத்தை நீ வைத்து விடு
காலமெல்லாம் அவரை துதித்து பாடு பாடு
அவரே நம்மை என்றும் ஆதரிப்பாரே
அனுதினம் நடத்திடுவாரே

1643.நித்தம் நித்தம் உம்மை

நித்தம் நித்தம் உம்மை நான்
நினைத்து நினைத்து பார்க்கிறேன்
நீர் செய்த நன்மை எண்ணி
ஓயாமல் துதிக்கிறேன்

நன்றி...... நன்றி (2)

1. தாயைப் போல தேற்றி என்னை
அரவணைத்து மகிழ்கிறீர்
தந்தையைப் போல தோள்களிலே
அனுதினமும் சுமக்கின்றீர்

2. கடந்து வந்த பாதைகளை
நினைத்து நினைத்துப் பார்க்கிறேன்
கண்ணீரோடு நன்றி சொல்லி
ஓயாமல் துதிக்கிறேன்

3. தாயின் கருவில் தோன்றுமுன்னே
முன் குறித்த தெய்வமே
நினைப்பதற்கும் மேலாய் என்னை
ஆசீர்வதித்த தெய்வமே

G-Min/Slow Rock/T-110

1644.நீங்க தான் தேவை

நீங்க தான் தேவை எனக்கு இயேசப்பா - 2
நீங்க இல்லாம (3) எதுவும் இல்ல இயேசப்பா
நீங்க தான் தேவை எனக்கு இயேசப்பா

நீரே என் அடைக்கலம்
நீரே என் அனுகூலம்
நீரே என் ஆறுதல்
எல்லாம் நீரப்பா

1. என் சூழ்நிலையை அறிந்தவரும் நீங்கதானப்பா
என் காலங்களை அறிந்தவரும் நீங்கதானப்பா

2. என் கண்ணீரை காண்பவரும் நீங்கதானப்பா
என் கதறலை கேட்பவரும் நீங்கதானப்பா

1645.நீரே என் தேவன்

நீரே என் தேவன்
உம்மை என்றும் துதித்திடுவேன்
அதிகாலையில் உம்மை தேடுவேன்
உந்தன் வழிகளில் நடந்திடுவேன்

1. எந்நாளும் நீர் என்னை நடத்துவீர்
உமக்காக நான் வாழ்ந்திடுவேன்

2. அல்லேலூயா அல்லேலூயா
உம்மையே என்றும் போற்றுவேன்
உம்மை பாடி மகிழுவேன்
அல்லேலூயா அல்லேலூயா

1646.பாடுவேன் பரவசமாகுவேன்

பாடுவேன் பரவசமாகுவேன்
பறந்தோடும் இன்னலே

1. அலை அலையாய் துன்பம் சூழ்ந்து
நிலை கலங்கி ஆழ்த்துகையில்
அலைகடல் தடுத்து நடுவழி விடுத்து
நடத்தியே சென்ற கர்த்தனை

2. என்று மாறும் எந்தன் துயரம்
என்றே மனமும் ஏங்குகையில்
மாராவின் கசப்பை மதுரமாக்கி
மகிழ்வித்த மகிபனையே

3. ஒன்றுமில்லா வெறுமை நிலையில்
உதவுவாரற்றுப் போகையில்
கன்மலை பிளந்து தண்ணீரைச் சுரந்து
தாகம் தீர்த்த தயவை

4. வனாந்திரமாய் வாழ்க்கை மாறி
பட்டினி சஞ்சலம் நேர்கையில்
வான மன்னாவால் ஞானமாய் போஷித்த
கானாத மன்னா இயேசுவை

D-Maj/Pop Bossa/T-130

1647.பூமியின் குடிகளே எல்லோரும்

பூமியின் குடிகளே எல்லோரும்
கர்த்தரை கெம்பீரமாகவே பாடுங்களேன்

1. சாரோனின் ரோஜா அவர்
பள்ளத்தாக்கின் லீலியே
பரிசுத்தர் மேய்ப்பரவர்
பதினாயிரங்களில் சிறந்தோர்

2. வார்த்தையில் உண்மையுள்ளோர்
வாக்குத்தத்தம் செய்திட்டார்
கலங்காதே திகையாதே ஜெயம்
ஈந்து உன்னை காத்திடுவார்

F-Maj/Rock Shuffle/T-120

1648.பெத்தலையில் பிறந்தவரை

பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித்துதி மனமே - இன்னும்

குளிரும் பனியும் கொட்டிடவே
கோமகனும் தொட்டினிலே
ஆரீரோ ஆரீரோ ஆரீராரோ
ஆரீரோ ஆரீரோ ஆரீராரோ

1. சருவத்தையும் படைத்தாண்ட
சருவவல்லவர் - இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில்
தலைசாய்க்கலானார்

2. சிங்காசனம் வீற்றிருக்கும்
தேவமைந்தனார் - இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில்
படுத்திருக்கிறார்

3. முன்னம் அவர் சொன்னபடி
முடிப்பதற்காக - இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள
முன்னணையிலே

4. ஆவிகளின் போற்றுதலால்
ஆனந்தங்கொண்டோர் - இங்கு
ஆக்களுட சத்தத்துக்குள்
அழுது பிறந்தார்

5. இவ்வளவாய் அன்புவைத்த
எம்பெருமானை – நாம்
எண்ணமுடன் போய்த்து
திக்க ஏகிடுவோமே.

A-Maj/Disco/T-120

1649.மகிபனையே அனுதினமே

மகிபனையே அனுதினமே
மகிழ்வுடனே துதித்திடுவேன்-தினம்

1. என்னை அன்பில் இணைத்திடவே
தந்தீர் பூ உருவாக்குமுன்னே
ஜோதியாய் தினம் மகிமையைப் பெறவே
தேவன் என்னைத் தெரிந்தெடுத்ததினால்

2. தூதராலும் செய்யவொண்ணா
தூய பணியை அற்புதமாய்
தூசியானும் செய்திடும் கிருபை
தூய கிறிஸ்து தந்தனரே (2)

3. அழைத்தாரே இயேசு சுவிசேத்தால்
அடைய தேவ சாயலையே
பயத்துடனே பரிசுத்தமதையே
பாரினில் பூரணமாக்கிடுவோம் (2)

4. ஆவலுடனே காத்திருந்தேன்
சேவை புரிவோம் இயேசுவுக்காய்
ஆசை இயேசு மணவாளன் வருவார்
சீயோனில் என்னை சேர்த்திடவே (2)

D-Maj/Disco/T-120

1650.மணவாழ்வு புவி

மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மங்கள வாழ்வு வாழ்வினில் வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

1. துணை பிரியாது தோகையுமாது
சுபமண மகளிர் இதுபோது
மணமுறை போது வசனம் விடாது
வந்தன ருமதள் பெறவேது
-நல்ல

2. ஜீவ தயாகரா சிருஷ்டியதிகாரா
தெய்விக மாமண வலங்காரா
தேவ குமாரா திருவெல்லயுரா
சேர்ந்தவர்க்கருள் தரா திருப்பீரோ
– நல்ல

3. குடித்தன வீரம் குணமுள்ளதாரம்
கொடுத்துக்கொண்டாலது சமுசாரம்
அடக்க மசாரம் அன்பு உதாரம்
அம்புவி தனில் மணைக்கலங்காரம்
- நல்ல

4. மன்றல் செய்தேவி மணாலனுக்காவி
அன்றியிப் புவிலமிர்த சஞ்சீவி
அவளை இல்லாதவன் ஒரு பாவி
–நல்ல

F-Maj/Swing Reggae/T-100

1651.மாறிடும் எல்லாம் மாறிடும்

மாறிடும் எல்லாம் மாறிடும்
என் இயேசுவாலே எல்லாம் மாறிடும்

1. அவர் ஆடையை தொட்ட மாத்திரத்தில்
பெரும்பாடு மாறிற்றே - ஆதியும்
அந்தமுமானவராலே அந்தகாரம் நீங்கிற்றே
கட்டுகள் உடைந்ததே கவலைகள் நீங்கிற்றே

2. இரையாதே என்று சொன்னாரே
திரைகடல் அடங்கிற்றே - அமைதலாயிரு
என்றாரே அலைகளும் ஓய்ந்ததே
பயங்கள் பறந்ததே நம்பிக்கை பிறந்ததே

3. லாசருவே நீ எழுந்து வா என்று சொன்னாரே
மரித்த லாசரு கல்லறை விட்டு எழுந்து
வந்தாரே - அழுகுரல் நின்றதே
ஆனந்தம் வந்ததே

மாறுதே எல்லாம் மாறுதே என்
இயேசுவாலே எல்லாம் மாறுதே

மாறுதே துக்கம் மாறுதே
என் இயேசுவாலே துக்கம் மாறுதே
மாறுதே கஷ்டம் மாறுதே
என் இயேசுவாலே கஷ்டம் மாறுதே
மாறுதே கடன் மாறுதே
என் இயேசுவாலே கடன் மாறுதே
மாறுதே வறுமை மாறுதே
என் இயேசுவாலே வறுமை மாறுதே
மாறுதே வியாதி மாறுதே
என் இயேசுவாலே வியாதி மாறுதே
மாறிற்றே எல்லாம் மாறிற்றே
என் இயேசுவாலே எல்லாம் மாறிற்றே

G-Maj/Pop Ballad/T-105

1652.முத்திரை மோதிரமே

முத்திரை மோதிரமே
என் இதயத்தின் முத்திரையே
பாதை காட்டியே பாதுகாப்பேனே
என் பிரியமே நீ கலங்காதே

1. உள்ளங்கையில் இருக்கின்றாய் நீ
எவரும் பறிக்க முடியாதே
எந்தன் நீதியின் வலக்கரத்தால்
உன்னை தாங்கி நடத்துவேன்
பிரியமே நீ பயப்படாதே

2. கன்மலை வெடிப்பில் உன்னை வைத்தேன்
கரத்தினால் உன்னை மூடுவேன்
எந்தன் மகிமை உன்முன் செ்ல்லும்
கிருபையால் உன்னை நடத்துவேன்
பிரியமே நீ பயப்படாதே

3. உந்தன் கண்ணீர் வேதனைகள்
வருத்தம் யாவும் அறிவேன் நான்
எந்தன் கரமே உன்னை தேற்றும்
மகிழ்ச்சியால் உன்னை நிரப்புவேன்
பிரியமே நீ பயப்படாதே

4. உந்தன் கரத்தை நான் பிடித்தேன்
உண்மையாய் உன்னை நடத்துவேன்
உன்னை எனக்காய் அற்பணித்தாயே
உன்னை எனக்காய் நியமித்தேன்
பிரியமே நீ எனக்கே செ்ாந்தம்

1653.யூதாவின் ராஜ சிங்கம்

1. யூதாவின் ராஜ சிங்கம் நீரே
அல்பாவும் ஓமேகாவும் நீரே
வல்லமை பெலன் ஞானம் மகிமையும்
துதியையும் பெற்றுக்கொள்ள பாத்திரர் நீரே

பாவமானீரே எம்மை நீதியாக்கிட
சாபமானீரே எங்கள் சாபம் போக்கிட
காயமானீரே எங்கள் நோய்கள் தீர்த்திட
ஏழையானீரே எங்கள் ஏழ்மை நீக்கிட

2. நீர் என்றும் எந்தன் நல்ல மேய்ப்பர்
எந்நாளும் தாழ்ச்சியடையேனே
அமர்ந்த தண்ணீர் பசும்புல் வெளியில்
என்னை மேய்த்து நித்தம் காக்கும்
நல்ல தேவனே

பகைவர் முன்பாக பந்தி ஆயத்தம் செய்தீர்
என் தலையை எண்ணையால்
அபிஷேகமும் செய்தீர் - ஜீவநாளெல்லாம்
நன்மை கிருபை தொடருமே நான் கர்த்தர்
வீட்டிலே நீடித்து வாழ்வேன்

3. என் நாவு உந்தன் நீதியையும்
நாளெல்லாம் உந்தன் துதியையும்
ஓயாமல் போற்றிப்பாடும் குறைவையெல்லாம்
நீக்கிப் போடும் கைவிடாத நல்ல தேவன் நீர்

உமது மகிமையின் ஐசுவரியத்தின்படி
குறைவுகளெல் லாம் நிறைவாக் கும்
தேவனே - யெகோவாயீரே நீர் எந்தன்
எல்ஷடாய் போதுமானவரிலும்
மிகவும் அதிகமானவர்

1654.வல்லமை வல்லமை

வல்லமை வல்லமை ஆவியே
என்னை அனலாக்கிடும்
வல்லமை வல்லமை ஆவியே
என்னை அபிஷேகியும்

1. சாத்தானின் கோட்டையை முறியடிக்க
வல்லமை தாருமே
தேவ ராஜ்ஜியம் எழும்பி கட்ட
வல்லமை தாருமே

2. ஆவியின் வரங்களினால்
என்னை நிரப்பிடும்
கனிகளை கொடுத்து சாட்சியாய்
வாழ்ந்தும்மை மகிமைப்படுத்துவேன்

E-Maj/Polka/T-120

1655.விடுதலை உண்டு இயேசு

விடுதலை உண்டு இயேசு நாமத்தில் - 3
இயேசு நாமத்தில்

1. தோல்விகள் மாறும் இயேசு நாமத்தில்-2
தோல்விகள் மாறும் ஜெயித்திடுவேன்
இயேசு நாமத்தில்

2. பெலவீனம் நீங்கும் இயேசு நாமத்தில்-2
பெலவீனம் நீங்கும் புதுபெலன் தங்கும்
இயேசு நாமத்தில்-2

3. வியாதிகள் தீரும் இயேசு நாமத்தில்-2
வியாதிகள் தீரும் வேதனை மாறும்
இயேசு நாமத்தில்-2

4. விடுதலை உண்டு இலவசமாய்
விடுதலை உண்டு நிச்சயமாய்
விடுதலை உண்டு இப்பொழுதே
உண்டு இயேசு நாமத்தில்

C-Maj/Disco/T-115

1656.விந்தை கிறிஸ்தேசு ராஜா

விந்தை கிறிஸ்தேசு ராஜா
உந்தன் சிலுவை என் மேன்மை
சுந்தரம் மிகும் இந்தப் பூவில்
எந்த மேன்மைகள் எனக்கு இருப்பினும்

1. திரண்ட ஆஸ்தி உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிக இருப்பினும்
குருசை நோக்கிப் பார்த்த எனக்கு
உரிய பெருமைகள் யாவும் அற்பமே

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம் வற்றா ஜீவ நதியாம்
துங்க இரத்த ஊற்றில் மூழ்கி
தூய்மையடைந்து மேன்மையாகினேன்

3. சென்னீர் விலா, கை, காலினின்று
சிந்துதோர் தூயரோடன்பு
மன்னா இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன்

4. இந்த விந்தை அன்புக் கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்
எந்த அரும்பொருள் ஈடாகும்
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன்

E-Min/Polka/T-120

1657.ஸ்தோத்திரம் செய்வேனே

ஸ்தோத்திரம் செய்வேனே இரட்சகனை
ஸ்தோத்திரம் செய்வேனே - 4
பாத்திரமாக இம்மாத்ரம் கருணை வைத்த
பார்த்திபனை யூதக் கோத்திரனை - என்றும்

1. அன்னை மரி சுதனை
புல் மீது அமிழ்து கழுதவனை,
முன்னனை மீதுற்ற சின்னக் குமாரனை,
முன்னுரை நூற்படி இந்நிலத்துற்றோனை

2. செம்பொன்னுருவானை
தேசிகர்கள் தேடும் குருவானை
அம்பர மேவிய உம்பர் கணத்தோடு
அன்பு பெற நின்று பைம் பொன்மலர் தூவி

3. கந்தை பொதிந்தவனை
வானோர்களும் வந்தடி பணிபவனை
மந்தையர்க்கானந்த மாட்சியளித்தோனை
வானபரன் என்னும் ஞான குணவானை

G-Maj/Hard Rock/T-130

1658.ஜெபமே ஜெயம் ஜெபம்

ஜெபமே ஜெயம் ஜெபம் ஜெயம்
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்

ஜெபித்திட ஜெபித்திட ஜெயம் வருமே-2
ஜெயம் ஜெயம் ஜெயம் அல்லேலூயா-4

1. சத்துரு கோட்டையை தகர்த்திடவே
நம் ஜெபமே போராயுதம் நித்திய
வழியில் வெற்றி சிறந்திட
ஜெபமே பேராயுதம் போராயுதம்
பேராயுதம் ஜெபமே சர்வாயுதம்

2. அக்கினி சூளையில் அழியாமல் காத்தது
அனுதின ஜெப ஜீவியம்
ஆண்டவர் சமூகத்தில் வல்லமை பெற்றிட
ஜெபமே பேராயுதம் போராயுதம்
பேராயுதம் ஜெபமே சர்வாயுதம்

3. அற்புத அடையாளம் நடந்திடவே - நம்
ஜெபமே போராயுதம் ஆண்டவர்
வருகையில் நாமும் பறந்திட
ஜெபமே பேராயுதம் போராயுதம்
பேராயுதம் ஜெபமே சர்வாயுதம்

1659.ஆராதனை நாயகர்

ஆராதனை நாயகர் நீரே – உம்மை
நான் ஆராதிப்பேன்
அபிஷேகத்தை தருபவரே - உம்மை
நான் ஆராதிப்பேன்

அல்லேலூயா (3) ஆமென் - 2

1. அன்பரும் நீரே ஆதாரம் நீரே
உம்மை நான் ஆராதிப்பேன் (2)
இன்பமும் நீரே ஈடில்லா
நேசரே உம்மை நான் ஆராதிப்பேன் (2)

2. உண்மையும் நீரே ஊக்கமும் நீரே
உம்மை நான் ஆராதிப்பேன் (2)
ஏண்ணமும் நீரே ஏக்கமும் நீரே
உம்மை நான் ஆராதிப்பேன் (2)

3. ஐங்காயம் ஏற்றவரே ஒப்பில்லா வேந்தரே
உம்மை நான் ஆராதிப்பேன் (2)
ஓங்கிய புயத்தவரே ஔஷதம் நீரே
உம்மை நான் ஆராதிப்பேன் (2)

1660.ஆனந்தமே ஆனந்தமே

ஆனந்தமே - 2 இயேசு எனக்கு ஆனந்தமே
அல்லேலூயா - 3 ஆனந்தமே

1. பாடுவேனே - 3
இயேசுவை போற்றுவேனே - 3 ஆசையாய்

2. புகழுவேனே - 3
இயேசுவை வாழுவேனே - 3 அவருக்காய்

3. நேசிப்பேனே - 3
இயேசுவை ஆசிப்பேனே - 3 வார்த்தையை

4. தேடுவேனே - 3
இயேசுவை ஓடுவேனே - 3 உண்மையாய்

5. நாடுவேனே - 3
இயேசுவை நன்றிசொல்வேன் - 3 நாளுமே

6. துதிசெய்வேனே - 3
இயேசுவை தூய்மையாவேன் - 3 என்றுமே

7. உயர்த்துவேனே - 3
இயேசுவை உருகுவேனே - 3 அன்பினால்

F-Maj/Disco/T-115

1661.ஆண்டவர் நம் இயேசுவை

1. ஆண்டவர் நம் இயேசுவை
ஆயிரம் துதிகளாலும் ஆர்ப்பரித்து
போற்றிட நாம் ஆயத்தமல்லோ
ஆவியின் சந்தோஸமே எமக்களித்தாரே

ஆதியும் நீரே என் அந்தமும் நீரே
மாறிடா நேசரே எந்தன் இயேசுவே

2. எண்ணில்லா எம் துன்பங்கள்
எங்கு போய் ஒழிந்ததோ - எம்முள்ளந்தான்
நன்றியால் நிறைந்து பொங்குதே - ஏகமாய்
எல்லோரும் கூடி ஸ்தோத்தரிப்போமே

3. சுயாதீன ஆவியால் சிலர் சத்தியம்
விட்டோடினும் - சக்தியீந்து சாட்சியாக
இன்றும் நிலைக்க - பக்தியில்
வைராக்கியம் எமக்களித்தாரே

4. இயேசு எம் பட்சம் நிற்க
ஈன சாத்தானும் தோற்க
ஆர்ப்பரிப்போடாரவாராம் எங்கும் தொனிக்க
அல்லேலூயா வல்லமையாய்ப் பாடிடுவோமே

5. இடுக்கமான வழியே இன்பக் கானான் ஏகவே
இன்னும் அவரோடு கூடப் பாடு சகிப்போம்
இன்றும் என்றும் இயேசுவோடு
ஆட்சி செய்வோமே

6. உன்னத மா தேவனின்
உயர்ந்த செட்டைகளின் கீழ்
தஞ்சமென அஞ்சிடாமல் தங்கி வாழுவோம்
தீங்கு நாட்கள் தீவிரம் எம் முன் நெருங்கிற்றே

7. எருசலேமே ஆர்ப்பரி சீயோனே
நீ கெம்பீரி - ஆயிரம் பதினாயிரம்
விண் தூதருடனே - ஆசை மணவாளன்
இயேசு தாம் வருகிறார்

C-Min/Disco Hands/T-120

1662.ஆராதனை ஆராதனை

ஆராதனை ஆராதனை
அப்பா என் இயேசுவுக்கே
அப்பா என் இயேசுவுக்கே

1. எங்கள் ஜெயகிறிஸ்துவே ஆராதனை
எங்கள் சேனை அதிபதியே ஆராதனை

ஆராதனை துதி ஆராதனை
ஆராதனை ஸ்தோத்ர ஆராதனை

2. பிராண சிநேகிதரே ஆராதனை
பரிந்து பேசும் கிறிஸ்துவே ஆராதனை

3. இஸ்ரவேலின் நம்பிக்கையே ஆராதனை
இஸ்ரவேலின் ஆறுதலே ஆராதனை

1663.ஆராதனை நாயகன்

ஆராதனை நாயகன் நீரே-2
ஆராதனை தேவனும் நீரே

1. என் அரணும் கோட்டையும் நீரே-2
என் கேடகம் பெலனும் நீரே

2. என் கன்மலையும் என் துருகமும் நீரே
உம்மை என்றும் ஆராதிப்பேன்

3. என் ஜீவனும் சத்தியமும் நீரே
என் வழியும் பாதையும் நீரே

4. என் மறைவிடமே என் புகலிடமே
உம்மை என்றும் ஆராதிப்பேன்

5. என் உயிருள்ள நாளெல்லாம்
துதிப்பேன் உள்ளளவும் உம்மை துதிப்பேன்

6. என் இறுதிவரை உம்மை துதிப்பேன்
உம்மை என்றென்றும் ஆராதிப்பேன்

1664.ஆராதனை செய்யும் நேரம்

ஆராதனை செய்யும் நேரம்
அப்பாவின் சந்தோஷ நேரம்
ஆராதனை (3) ஆராதனை –2

1. கண்களின் விருப்பமே ஆராதனை (2)
பலத்தின் முக்கியமே ஆராதனை (2)
அலங்கார மகிழ்ச்சியே ஆராதனை
ஆத்தும வாஞ்சையே ஆராதனை

2. ஆதார துரகமே ஆராதனை (2)
அடைக்கலப்பட்டணமே ஆராதனை (2)
ஆருயிர் தோழனே ஆராதனை
அனுகூல துணையே ஆராதனை

3. நேசத்தின் உச்சிதமே ஆராதனை (2)
பாசத்தின் பர்வதமே ஆராதனை (2)
உருக்கத்தின் சிகரமே ஆராதனை
ஆசீர்வாத மழையே ஆராதனை

4. ஏழையின் பெலனே ஆராதனை (2)
எளியோரின் திடனே ஆராதனை (2)
பெருவெள்ள அணையே ஆராதனை
வெயிலுக்கு நிழலே ஆராதனை

C-Min/Beat Ballad/T-85

1665.ஆராதிப்பேன் நான் ஆத்ம

ஆராதிப்பேன் நான் ஆத்ம மணாளன் என்
ஆண்டவர் இயேசுவை அனுதினமே
ஆனந்த கீதத்தால் அவர் நாமம் போற்றியே
அனுதினம் ஸ்தோத்தரிப்பேன் என் இயேசுவை
என் இயேசுவை - (2)

1. தூத சேனை போற்றும் தூயாதி தூயனை
துதிகளின் மத்தியிலே வாசம்
செய்யும் நேசனை - ஜெபமதை
ஜெயமாக்கும் தேவாதி தேவனை (2)
தினம் தினம் ஸ்தோத்தரிப்பேன்
என் இயேசுவை - (2)

2. அல்லேலூயா என்று ஆவியில் நிறைந்து
அந்நிய பாஷையிலே அவரோடே பேசி
நன்மையால் என் வாழ்வை
நாள்தோறும் நடத்தும் (2)
நாதனை ஸ்தோத்தரிப்பேன்
என் இயேசுவை - (2)

1666.ஆதியின் அன்பினையே

ஆதியின் அன்பினையே
வாழ்வினில் மறந்தேனே
துரோகங்கள் புரிந்தேனே,
தோல்விகள் அடைந்தேனே - நான்

1. என் சகோதரியே பிரியமே புறாவே
உத்தமியே திறப்பாய்
வெண்பனித் தூரலில் என் தலை நனைய
வெகு நேரம் நிற்கின்றேன்

2. எங்கே என் நேசர் என்றே அழுது
இன்று அலைகிறேன்
இதயக் கதவைத் திறவென்று கெஞ்சினார்
அன்றோ ஏற்க மறுத்தேன்

3. என் உள்ளம் பொங்க கதவைத் திறந்தேன்
அங்கே அவரில்லையே
அன்பான மொழியில் அவர் சொன்ன வாக்கால்
ஆத்துமா சோர்வுற்றதே

4. எருசலை மகளிர் பதினாயிரங்களில்
சிறந்த என் நேசரையே
ஒரு வேளை கண்டால் தூதொன்றை உரைப்பீர்
நேசத்தால் சோகமடைந்தேன்

5. மதுரமாய் பேசும் இவரே என் நேசர்
முற்றிலும் அழகுள்ளவர்
மங்கின திரியை அணையாமல் தூண்டும்
மகிமையின் மணவாளன்.

1667.ஆனந்தமே ஜெயா

ஆனந்தமே ஜெயா ஜெயா
அகமகிழ்ந்தனைவரும் பாடிடுவோம்
ஞானரட்சகர், நாதர் நமை . இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார்

1. சங்கு கனம், வளர் செங்கோலாசியை
தளராதுள கிறிஸ்தானவராம்
எங்கள் ரட்சகரேசு நமை - வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால்,

2. முத்து வருட மதினில் மனுடரில் வெகு
மோசகஸ்திகள் தனிலேயுழல,
தந்து நமக்குயிருடையுணவும் - வெகு
தயவுடன் யேசு தற்காத்ததினால் -

3. பஞசம்பசிக்கும் பட்டயத்துக்கும் வெகுகொடும்
பாழ் கொள்ளைநோய் விஷதோஷத்திற்கும்
தஞசரட்கர் தவிர்த்து நமை - இத்
தரைதனில் குறை தணித்தாற்றியதால்

1668.ஆண்டவரே உம்

ஆண்டவரே உம் சித்தம் என்ன
அர்ப்பணித்தேன் அதை செய்ய
எந்தனின் சித்தம் போல் ஆகட்டுமே
சித்தமே இன்பமே சித்தமே பாக்கியமே

1. பாடுகள் பட்டபோது காரணம் புரியவில்லை
ஆறுதல் கண்டிட வேறிடம் போகவில்லை
ஓர் அற்பூதம் செய்தீரை ஐயா.
உம் நீதியை கண்மேன் ஐயா
உம்மைப்போல தேவனை எங்கே நான் காணுவேன்

2. கெத்சமனே தோட்டத்தில் துயரத்தொனி கேட்கின்றதே
சித்தமே ஆகட்டும் என் சித்தமே போகட்டும்
உம்பாடுகள் கண்டேன் ஐயா
உம் பாதை நான் சென்றேன் ஐயா
நித்தம் என்னை தாழ்த்தியே உத்தமனாய் வாழுவேன்.

3. சிலுவை மீதினிலே சுந்தரமான தேவரீே
சிங்கார ரூபனே மங்கி ஏன் தொங்கினீர்
உம் நேசத்தை கண்டேன் ஐயா
உம் பாசத்தை சொல்வேன் ஐயா
சேர்ந்திடுவேன் சந்நிதி சியோன் மலை நிம்மதி

4. என் முன்னே செல்பவரே விண்பாதை ஜோதி நீரே
என்னை நான் வெறுத்தே உம்மையே துதிப்பேன்
கன்மலை போன்றவரே கைவிடா காவல் நீரே
உம்மை விட்டால் பூமியில் என்னை மீட்க யாருண்டு ?

1669.ஆராய்ந்து முடியாத

ஆராய்ந்து முடியாத பெரிய காரியம்
செய்பவர் நீர் ஐயா ஏசையா
எண்ணிமுடியா அதிசயங்கள்
செய்பவர் நீர் ஐயா ஏசையா

இயேசையா இயேசையா உம்மால் ஆகாத
காரியம் என்று ஒன்று ஏதையா

1. பூமியின் மேலே மழையை தருபவர் நீரையா
வெளி நிலங்களின் மேல் தண்ணீர் வரவிடுபவர்
நீரைய்யா - தாழ்ந்தோரை என்றும் உயரத்தில்
வைத்து - துக்கப்படுவோரை இரட்சிக்கும்
தேவன் நீரைய்யா

2. வானங்களை திரைபோல் விரித்தவர் நீர் ஐயா
சமுத்திர அலைகள் மேல் நடக்கிற தேவன்
நீர் ஐயா - துருவச்சக்கர நட்சத்திர
மண்டலங்களையும் - உண்டாக்கினவர்
பரிபாலிப்பவர் நீர் ஐயா

1670.ஆர்ப்பரிப்போம் ஆர்ப்பரிப்போம்

ஆர்ப்பரிப்போம் ஆர்ப்பரிப்போம்
அலங்கம் இடியும்வரை ஆர்ப்பரிப்போம்
எக்காளம் ஊதி எரிகோவை பிடிப்போம்
ஆரவார துதியோடு கானானுக்குள் நுழைவோம்
எழுப்புதலின் நேரமல்லோ - இது
யோசுவாவின் காலமல்லோ

1. துதிக்கும் நமக்கோ தோல்வி இல்லை
வெற்றி நிச்சயமே பெலன்
கொண்டு திடமனதாய் இருப்போமே
இந்த பாரதத்தை சுற்றி சுற்றி சுதந்தரிப்போமே

2. கர்த்தர் நாமம் சொல்லச் சொல்ல
தடைகள் விலகிடுமே
மாராவின் தண்ணீர் மதுரமாகுமே
யோர்தானின் தடைகள் எல்லாம் விலகிப் போகுமே

3. மாம்சத்தோடும் இரத்தத்தோடும்
நமக்கு யுத்தமில்லை
வல்லவரின் ஆயுதத்தை ஏந்திடுவோமே
சாத்தானின் ராஜ்யத்தை அழித்திடுவோமே

1671.ஆயிரம் நாவுகள் போதாதே

ஆயிரம் நாவுகள் போதாதே
உம்மை துதிக்க உம்மை போற்றிட
பல நாமங்களால் நீர் போற்றப்படும்
எங்கள் யெகோவா தெய்வம் நீங்க

உம்மையே பாடுவேன்
உம்மையே உயர்த்துவேன்
பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
உம்மையே நான் பாடுவேன்
உம்மையே நான் உயர்த்துவேன்
பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

1. தேவையெல்லாம் சந்தித்தீர்
யெகோவா யீரே
வெற்றிமேல் வெற்றி தந்தீர்
எங்கள் யெகோவா நிசி

2. சுகம் தந்து உயிர் கொடுத்தீர்
யெகோவா ர.்.ப்பா
சந்தோஷம் சமாதானம் தந்த
யெகோவா ஷாலோம்

G-Min/Slow Rock/T-105

1672.அபிஷேக நதியே என்

அபிஷேக நதியே என் மீது பாய்ந்திடும்
ஆராதனை வேளையில் - 2

உம்மை துதிக்கும் போது எந்தன்
உள்ளம் மகிழ்ந்து பொங்குது
உம்மை உயர்த்தும் போது எந்தன்
கவலை பறந்து போகுது
அல்லேலூயா - 8

1. புறாவைப் போல் இறங்கிடுமே
எங்கள் மத்தியில் கிரியை செய்யும்

2. தென்றலைப் போல வீசிடுமே
மெல்லிய சத்தத்தை கேட்கச் செய்யும்

3. அபிஷேக தைலத்தை ஊற்றிடுமே
உந்தன் அன்பினை உணரச் செய்யும்

1673.அதிசயமானவர் அற்புதமானவர்

அதிசயமானவர் அற்புதமானவர் ஆச்சரியமான தேவன்
துதிகளின் பாத்திரர் தூயவராம்
இயேசுவுக்கு புதியதோர் பாட்டுப் பாடுவோம்-
அல்லேலூயா புகழ்மாலை சூட்டிப்பாடுவோம்

1. இதுவரை காத்த தேவன் நம்மை இகமதில்
மீட்ட தேவன் புது ஜீவன் தந்த தேவன் - இனிய
புது மனம் தந்த தேவன் பெலவீன நேரத்தில் பெலன்
தந்து தேற்றிடும் கிருபையில் மாறா தேவன்
என்றும் விலகிடா நல்ல மேய்ப்பர்

2. கலங்கிடும் நேரமெல்லாம் அருகில் கனிவுடன் வரும்
தேவன் துயரங்கள் துக்கங்களை தூரம் எறிந்திடும்
எந்தன் தேவன் எதிரியை வீழ்த்தி ஜெயக்கொடி ஏற்றி
என் பயம் தீர்க்கும் தேவன் எனக்கு
என்றென்றும் துணை அவரே

3. தாழ்மையில் கிடந்த என்னை தூக்கி தோள்
மீது சுமக்கும் தேவன் - எளிமையும் சிறுமையுமான
எனக்கு ஆளுகை தரும் தேவன் என் நிந்தை நீக்கி
என் நிலை உயர்த்தி ஏக்கங்கள் தீர்க்கும்
தேவன் எந்தன் பட்சமாய் பேசும் தேவன்

4. சிங்கங்கள் எதிர் வந்தாலும் பலத்த சீறிடும் அலை
என்றாலும் அக்கினிச்சூளையிலும் என்னை அமிழ்த்திடும்
பகை என்றாலும் அங்கேயும் எனக்கோர்
அற்புதம் செய்வார் அவர் என்றும் மாறிடாரே
எந்தன் அழுகையை மாற்றுவாரே

5. காலையில் என் அருகில் வந்து கனிவுடன்
பேசும் தேவன் நாளெல்லாம் உடனிருந்து எதிலும்
ஞானத்தை தரும் தேவன் கிருபை மேல் கிருபை
பெலத்தின் மேல் பெலத்தை அளித்திடும்
அன்பு தேவன் என்னை இரவிலும் தாங்கும் தேவன்

F-Maj/Slow Rock/T-130

1674.அலையலையாய் பாய்ந்து

அலையலையாய் பாய்ந்து வரும்
தேவகிருபை என்னை நனைத்தது ஐயா

தேவனே உம் கிருபை
என்றென்றும் மாறாதது (2)

1. மலைகள் விலகினாலும்
மாசற்ற கிருபை பெருகுமே
மன்னவனை மகிழ்வித்தால்
மழையாக கிருபை ஊற்றுமே

2. அதிகாலை தேவசமூகமே
ஆசாரிய கிருபை பெருகுமே
ஆராதனை தூபத்தில்
அப்பாவின் ஜீவன் கிடைக்குமே

3. பலவீனத்தில் உம் கிருபை
பெலனாய் பாயுதையா
பலகோடி மைந்தர்களின்
வாழ்வு மாறும் கிருபை வேண்டுமே

1675.அல்லேலூயா கர்த்தரைத்

அல்லேலூயா கர்த்தரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
அவர் அதிசயம் அவர் அற்புதம்
ஆலோசனைக் கர்த்தரே

1. செங்கடலை பிளந்தவரைத் துதியுங்கள் (2)
யோர்தானை பிரித்தவரைத் துதியுங்கள் (2)
எரிகோவை தகர்த்தவரைத் துதியுங்கள் (2)
கன்மலையைப் பிளந்தவரைத் துதியுங்கள் (2)

2. சிலுவையை சுமந்தவரைத் துதியுங்கள் (2)
மரணத்தை வென்றவரை துதியுங்கள் (2)
சாத்தானை ஜெயித்தவரை் துதியுங்கள் (2)
பரலோகம் சேர்ப்பவரைத் துதியுங்கள் (2)

3. தாழ்வில் நினைத்தவரைத் துதியுங்கள் (2)
தயவோடு அணைத்தவரை துதியுங்கள் (2)
தோளில் சுமப்பவரைத் துதியுங்கள் (2)
மார்பில் அணைப்பவரைத் துதியுங்கள் (2)

4. ஆபிரகாமின் தேவனைத் துதியுங்கள் (2)
எலியாவின் தேவனைத் துதியுங்கள் (2)
என்றென்றும் வாழ்பவரை துதியுங்கள் (2)
யேகோவா தேவனைத் துதியுங்கள் (2)

D-Min/Disco Soul/T-125

1676.அபிஷேகம் என் மேலே

அபிஷேகம் என் மேலே
ஆவியானவர் எனக்குள்ளே
முழங்கிடுவேன் சுவிசேஷம்
சிறுமைப்பட்ட அனைவருக்கும்

அபிஷேகம் என் மேலே
ஆவியானவர் எனக்குள்ளே

1. இதயங்கள் நொறுக்கப்பட்டோர்
ஏராளம் ஏராளம் காயங்கட்டுவேன்
தேசமெங்கும் இயேசுவின் நாமத்தினால்

2. சிறையில் உள்ளோர் ஆயிரங்கள்
விடுதலை பெறனுமே
கட்டவிழ்க்கணும் கட்டவிழ்க்கணும்
கட்டுக்களை உடைக்கனும்

3. துதியின் உடை போர்த்தனுமே
ஒடுங்கின ஜனத்திற்கு
துயரத்திற்கு பதிலாக
ஆனந்த தைலம் வேண்டுமே

G-Maj/Waltz/T-150

1677.ஆசீர்வதிக்கும் இயேசு

ஆசீர்வதிக்கும் இயேசு
நம்மை ஆசீர்வதிப்பாரே

துதி ஸ்தோத்திரம் இயேசு நாதா
துதி உமக்கே என்றுமே

1. ஆபிரகாமை ஆசீர்வதித்தவர்
ஆசீர்வதிப்பாரே
ஈசாக்கை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

2. யாக்கோபை ஆசீர்வதித்தவர்
ஆசீர்வதிப்பாரே
யாபேசை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

3. எஸ்தரை ஆசீர்வதித்தவர்
ஆசீர்வதிப்பாரே
ரூத்தை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

4. அன்னாளை ஆசீர்வதித்தவர்
ஆசீர்வதிப்பாரே
ஆகாரை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

1678.ஆசீர்வதிக்கும் இயேசு உன்னை

ஆசீர்வதிக்கும் இயேசு உன்னை ஆசீர்வதிப்பாரே
ஆண்டுகள் நன்மைகளாலே முடி சூட்டி மகிழ்வாரே
உன் வாழ்வு செழிப்பாய் மாறும் உன் பாதைகள்
நெய்யாய் பொழியும் - நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்

1. வறண்ட நிலமும் மகிழ்ந்து பாடிடும் வயல்வெளி
செழித்திடுமே - கர்த்தரின் மகிமை தேவனின்
மகத்துவம் தேசங்கள் அறிந்திடுமே ஒருபோதும்
மறவாத நம் இயேசு நடத்திடுவார்-2

2. அனுதினமும் நடத்திடுவார் புது கிருபை
அளித்திடுவார் - மலைகள் விலகிடும் பர்வதம்
பெயர்ந்திடும் கிருபைகள் நிலைத்திடுமே காலங்கள்
மாறிடும் கவலைகள் மறைந்திடும் காத்திடுவார் என்றுமே

3. நிறைவேறும் அவர் வார்த்தை நம் இயேசு
நம்முடனே உன் நேசர் உன்னுடனே
கதவு திறந்திடும் கட்டுகள் உடைந்திடும்
செல்வங்கள் சுதந்தரிப்பாய் தாவீதின் கிருபைகள்
உன்னை நிரப்பிடும் ஆளுகை செய்திடுவாய்

G-Maj/Polka/T-125

1679.அதிகாலையில் பாலனைத்

அதிகாலையில் பாலனைத் தேடி
செல்வோம் நாம் யாவரும் கூடி
அந்த மாட்டையும் குடில் நாடி
தேவ பாலனைப் பணிந்திட வாரீர்
அதிகாலையில் பாலனைத் தேடி
வாரீர் வாரீர் வாரீர் நாம் செல்வோம் -2

1. அன்னை மரியின் மடிமேலே
மன்னன் மகவாகவே தோன்ற
விண்தூதர்கள் பாடல்கள் பாட
விரைவாக நாம் செல்வோம் கேட்க

2. மந்தை ஆயர்கள் யாவரும் அங்கே
அந்த முன்னனை முன்னிலை நின்றே
நம் சிந்தை குளிர்ந்திட போற்றும்
நல் காட்சியைக் கண்டிட நாமே.

1680.அதிசயமானவர் அற்புதங்கள்

அதிசயமானவர் அற்புதங்கள் செய்பவர்
விதியையும் வெல்பவர் அவர் பெயர்
இயேசு என்பார்

அல்லேலூயா அல்லேலூயா அவர் புகழ்
பாடிடுவோம் அவர் நாமம் போற்றிடுவோம்
வல்ல தேவன் இவர்போல் தெய்வமுண்டோ
நல்ல இயேசு ராஜனுக் இணையுண்டோ

1. நீரின் மேல் நடந்திடுவார்
புயல் காற்றையும் அதட்டிடுவார்
சீறிடும் பேய்களையும்
உடன் ஓடிட விரட்டிடுவார்

2. இழந்ததை மீட்டிடுவார்
கெட்ட இதயத்தை மாற்றிடுவார்
பிணிகளைப் போக்கிடுவார்
சவக்குழியின்றும் எழுப்பிடுவார்

E-Min/16 Beat/T-120

1681.அதிசயங்கள் செய்கிறவர்

அதிசயங்கள் செய்கிறவர்
நம் அருகில் இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர்
என்றும் நமக்குள் வசிக்கிறார்

1. தண்ணீரை இரத்தமாய்
மாற்றினார் அதிசயம்
வெறும் தண்ணீரை
திராட்சை ரசமாய் மாற்றினார் அதிசயம்

2. செங்கடலை இரண்டாக
பிரித்திட்டார் அதிசயம்
புயல் காற்றை
தம் ஆணையால் நிறுத்திட்டார் அதிசயம்

3. குருடருக்கும் செவிடருக்கும்
சுகம் தந்தார் அதிசயம்
ஒரு சொல்லாலே மரித்தோரை
எழுப்பினார் அதிசயம்

4. பாவியான என்னையும்
உயர்த்தினீர் அதிசயம்
ஏழை என் மீது நேசக் கரம்
நீட்டினீர் அதிசயம்

1682.அபிஷேகம் தாரும்

அபிஷேகம் தாரும் ஆவியானவரே
அபிஷேகம் ஊற்றும் ஆவியானவரே

ஆவியானவரே - 4

1. உன்னத பெலனால் நிரப்பிடுமே
சாட்சியாய் வாழ செய்திடுமே
உமது கனிகளால் நிரப்பிடுமே
அநுதின வாழ்வினிலே

2. அற்புத அடையாளம் செய்திடவே
வசனத்தை பலமாய் சொல்லிடவே
வல்லமை வரங்களைத் தந்திடுமே
ஊழிய பாதையிலே

3. ஞானமும் அறிவும் தந்திடுமே
நீதியின் பாதையில் நடந்திடவே
வாழ்வினிலே விடுதலை தந்திடுமே
ஜீவிய பாதையிலே

1683.பலமல்ல சக்தியல்ல

பலமல்ல சக்தியல்ல
தேவ ஆவியினால் ஆகும்

1. இந்த மலை பெயர்ந்து போகும்
தேவ ஆவியினால் ஆகும்

2. வியாதி மலை பெயர்ந்து போகும்
தேவ ஆவியினால் ஆகட்டும்

3. கடன் மலை பெயர்ந்து போகும்
தேவ ஆவியினால் ஆகும்

4. பிரச்சனை மலை பெயர்ந்து போகும்
தேவ ஆவியினால் ஆகம்

5. பேயின் மலை பெயர்ந்து போகும்
தேவ ஆவியினால் ஆகம்

NOT BY MIGHT
NOT BY POWER
BUT BY SPIRIT
THIS MOUNTAIN
SHALL BE MOVED
BY THE SPIRIT
SAYS THE LORD

0-Min/0000/T-000

1684.பலமுள்ள நகரமாம்

பலமுள்ள நகரமாம் இயேசுவண்டை
பயமின்றி ஓடி நீ வந்திடுவாய்
சஞ்சலத்திற் கொரு வழியில்லையே
சந்ததம் அவர் நம்மைக் காத்துக் கொள்வார்

1. நிலையில்லா உலகத்தின் அலைகளாலே
அலைந்திடும் பயனென்ன புதல்வனே நீ
விசுவாசக் கப்பலில் ஷேமமாக
யாத்திரை செய்பவர்க்கு லோகம் வேண்டாம்

2. கழுகு போல் பறந்து நீ உன்னதத்தில்
வாழ்கின்ற ஜீவியம் வாஞ்சித்துக்கொள்
காத்திருந்திடுகில் ஈந்திடுவார்
பெருக்கமுள்ள பெலன் மக்களுக்கு

3. மரணந்தான் வருகிலும் பயப்படாதே
விரைந்துன்னை கர்த்தர் தான் காத்திடுவார்
யாதொன்றுமுன்னை பயப்படுத்த
எங்குமில்லை என்று விசுவாசிப்பாய்

4. ஆறுதலடையு மந்நாடு சென்று
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்
பரம சுகம் தரும் ஊற்றுகளில்
பரனோடு நித்தியம் பானம் செய்வேன்

D-Min/Modern 6/8/T-110

1685.பலியிடு துதி பலியிடு

பலியிடு துதி பலியிடு
வலி விலகும் வாழ வழி பிறக்கும்

துதி பலி அது சுகந்த வாசனை
நன்றி பலி அது உகந்த காணிக்கை

1. துதி பலி செலுத்திட பொருத்தனை
செய்ததும் - மீன் அன்று கக்கியது
கரையிலே யோனாவை கக்கியது கரையிலே

2. நோவாவின் பலிதனை நுகர்ந்தார்
நம் கர்த்தர் சுகந்த வாசனையாய்
பலுகி பெருகச் செய்தார்

3. நல்லவர் கர்த்தர் என்று எல்லாரும்
துதிக்கையில் ஆலயத்தை மேகம் மூடியது
கண்டார்கள் கர்த்தர் மகிமையை

4. சீலாவும் பவுலும் சிறையிலே துதித்ததால்
கட்டுக்கள் கழன்று போயின
ஜெயிலர் இரட்சிக்கப்பட்டான்
அந்த அதிகாரி இரட்சிக்கப்பட்டான்

5. துதி செய்யத் தொடங்கினதும்
எதிரிகள் தங்களுக்குள் வெட்டுண்டு
மடிந்து போயினர் எல்லாரும் பிரேதமானார்கள்

1686.பாலும் தேனும் ஓடும்

பாலும் தேனும் ஓடும் தேசம் பரமன் தேசமிது
மீட்கப்பட்டோர் கூடும் சபைதான் மேலான தெசம்

பாலும் தேனும் ஓடும்...

1. ஜீவநதியின் தண்ணீர் பாயும் ஜீவதேசமிது
தேவ மகிமை எங்கும்வீசும்
தூயதேசமிது- தேவதிருச்சபையே - 2

2. ஆசையுடனே அன்பர் பாடும் ஆனந்த தேசம்
பூசைமலராய் துதிகள் பூக்கும்
பரிமளதேசம் நேசரின் தோட்டம் - 2

3. தேவபிரசன்னம் தேடும் எவரும் தேவனைக் காண்போம்
ஆவியில் நிறைந்து அன்பில் மூழ்கி
பரவசம் காண்போம் பாடி மகிழ்ந்திடுவோம் - 2

4. வேதவசனம் தேனாய்பாயும் தேற்றிபெலப்படுத்தும்
பாதம் அமர்ந்து தூய்மையடைந்து
மறுரூபமாவோம் - மகிமையில் சேர்வோம் - 2

5. நாங்கள் கூடிப்புகழும் ராஜா மகிமையின் ராஜா
எங்கள் நடுவில் வாசம் செய்யும்
இயேசுவே ராஜா - இராஜாதி ராஜா - 2

6. இயேசு வருவார் ஏக்கம் தீர்ப்பார் என்றும்
மகிழச்செய்வார் - அன்பர் எல்லாம் ஒன்றாய் கூடி
ஆர்ப்பரித்திடுவோம் - தூய மனவாட்டி நாம் - 2

7. ஆசீர் பொழியும் மகிமை புகையால் ஆலயம் நிரம்பும்
ஆவியாதனவர் அன்றே சொன்ன
எழுப்புதல் எழும்பும் - துாய தீ பரவும்

G-Maj/Rock/T-140

1687.பாரத தேசத்தின் ராஜா

பாரத தேசத்தின் ராஜா நீரே
ஆ... அல்லேலூயா
பார் போற்றும் எங்கள் தெய்வம் நீரே
ஆ... அல்லேலூயா
இந்திய தேசத்தின் இரட்சகரே
அல்லே அல்லேலூயா
இந்தியர் எங்களை காப்பவரே
ஆலேலூயா ஆலேலூயா (3)
ஆலே அல்லே அல்லேலூயா

1. பெருமழையின் சத்தம் கேட்டிடுதே
எழுப்புதல் எங்கும் பற்றிடுதே - 2
இரட்சிப்பு பெருகிட சபை நிரம்பிடுது
அல்லே... அல்லேலூயா

2. சாத்தானின் முகத்திரை கிழிந்திட்டதே
சாபங்கள் யாவும் தொலைந்திட்டதே
கர்த்தரே தெய்வமென்று தேசமே கண்டது
அல்லே... அல்லேலூயா

3. செவிடர்கள் யாவரும் கேட்கின்றாரே
குருடர்கள் யாவரும் பார்க்கினறாரே
இயேசுவின் நாமத்தில் அற்புதம் நடக்குது
அல்லே... அல்லேலூயா

இயேசுவே வெற்றி பெற்றாரே
சாத்தானின் சேனை தோற்றுப் போனதே
சிலுவைக் கொடி வெற்றி பெற்றதே
இயேசு நாமம் மகிமைப்பட்டதே
அக்கினியின் ஆவி ஊற்றப்பட்டதே
எழுப்புதலின் தீ பற்றி கொண்டதே

1688.பயப்படாதே நான் உன்னு

பயப்படாதே நான் உன்னுடனே இருக்கின்றேன்
என்று சொன்ன தெய்வமே
உம் பாதம் பணிந்து உம்மையே பூஜித்து
உம் புகழ் பாடுகிறேன்

1. வானம் படைத்த எம் மன்னவனே
பூமி படைத்த எம் புன்னியனே
மண்ணால் மனிதனை படைத்தவரே
நாசியில் சுவாசத்தை கொடுத்தவரே
மன்னவனே புண்ணியனே –உம்

2. இஸ்ரவேல் ஜனங்களை மீட்டவரே
செங்கடலை இரண்டாய் பிளந்தவரே
பார்வோனின் சேனையை கவிழ்த்தவரே
எரிகோவின் கோட்டையை தகர்த்தவரே
மீட்டவரே ஜெயித்தவரே

3. கடலுக்கு எல்லையை வகுத்தவரே
காற்றையும் கடலையும் அதட்டினீரே
சாத்தானின் தலையை நசுக்கினீரே
மரணத்தை ஜெயமாக விழுங்கினீரே
வல்லவரே நல்லவரே

1689.பாரதம் நமது பாரதம்

பாரதம் நமது பாரதம்
இயேசுவுக்கே சொந்தம் - 2

1. தேசம் அழிந்துபோகுதே
ஜனங்கள் நரகம் செல்கிறார்
இயேசுவுக்காய் யுத்தம் செய்யவே
எழுந்திரு வாலிபனே

2. வறண்ட நிலங்கள் உண்டு
வருகை சமீபமாகுதே
வாழ்வு தரும் இயேசுவுக்காக
உன் வாழ்வையே தியாகம் செய்வாயா

3. சிலுவை கொடி பறக்குதே
இயேசுவுக்காய் கோடி கோடிகள்
தேசமெங்கும் எழும்பிடவே
நேசருக்காய் இன்று ஓடிவா

F-Maj/Hard Rock/T-135

1690.போஷிப்பவர் நீரே பாது

போஷிப்பவர் நீரே பாதுகாப்பு நீரே – 2
பரிகாரி நீரே என் இரட்சகரும் நீரே –2

1. சோர்ந்து போனாயோ கவலைபடாதே – 2
இயேசு உன்னை சுமப்பார் மகிழ்ச்சியாக்குவார் – 2

2. இயேசு நீர் பெரியவர் எல்ஷடாய் நீர் வல்லவர் – 2
உலகம் வனாந்திரம் பரலோகம் மகிழ்ச்சியே – 2

3. தண்ணீர் மேல் நடந்தார் அற்புதங்கள் செய்திட்டார் – 2
உன் பிரச்சனை எம்மாத்திரம் எண்ணிப்பார் ஓர் நிமிடம் – 2

ஆல்லேலூயா பாடுவோம்
தேவனை துதிப்போம் – 2

YOU ARE MY PROVIDER
YOU ARE MY PROTECTOR
YOU ARE MY HEALER
YOU ARE MY SAVIOUR

WHEN YOU'RE IN WORRY
DON'T FEEL SORRY
JESUS WILL CARRY
MAKE YOUR LIFE MERRY

EDEN IS PRETTY
EL-SHADDAI YOU'RE MIGHTY
WILDERNESS IS LONELY
JESUS YOU'RE WORTHY

HE WALKED ON THE WATERS
WHAT DOES IT MATTER?
HE WILL DO A MIRACLE
CREATOR OF THE PINNACLE

F-Maj/Funny Pop/T-115

1691.பூமிக்கொரு புனிதம்

பூமிக்கொரு புனிதம் வந்தது இப்போ
மன்னவனின் பிறப்பால்
பூவுக்கொரு இரட்சிப்பு வந்தது இப்போ
விண்ணவனின் வரவால்

பாவம் இல்லை இனி சாபம் இல்லை
இன்பத்திற்கும் இனி எல்லையில்லை
இறைவன் பிறந்ததால்...

1. வானங்களும் வந்து வாழ்த்திடுதே
வசந்தத்தின் துவக்க நாள்
கானங்களும் காதில் கேட்டிடுதே
காரிருள் அகன்ற நாள்
இரவினில் தோன்றும் உதயமே
நம் இயேசுவும் பிறந்த நாள்
பாதகர் நம்மில் பாவத்தை
நீக்க பாலனாய் வந்த நாள்

2. தூதர்களும் கானம் ஒலிக்குதே
தூயவர் தோன்றும் நாள்
உயிர்களில் புத்துயிர் தோன்றுதே
உன்னதர் வந்த நாள்
பாலையில் வந்த சோலையே
நம் பாலகன் பிறந்த நாள்
பாதகர் நம்மில் பாவத்தை
நீக்க பாலனாய் வந்த நாள்

1692.தேவ தயாபரனைத்

தேவ தயாபரனைத் துதிப்பதில்
ஓய்வதில்லை இனிமேல்

1. அற்புத கரத்தைக்
கொண்டடியாரைக் காத்தணைத்தார்
அனுதினம் சாற்றிடுவேன்
அன்பருக்குத் தோத்திரமே

2. அண்டி நெருங்கினோரை
இன்று வரையும் தாங்கி
அன்றன்று வேண்டியதை
அன்புடன் அளித்து வைத்தார்

3. கண்ணிகளுக்குத் தப்பி
கண்மணிபோல என்னை
எண்ணியே ஆதரித்த
ஏகனையே தோத்தரிப்பேன்

4. அன்னை தந்தையின் மேலாய்
ஆதரித்தாரே தாங்கி
என்னைத் தன்
சொந்தமாக ஏற்றுக்கொண்டார்

5. மன்னவன் யேசுதாமே
மகிமையில் தோன்றுகையில்
மணவாட்டியாக நானும்
வானத்திலே சேர்ந்திடுவேன்

6. எப்படிப் போற்றுவேனோ
என்னரும் நேசரையே
ஏத்தியே எப்பொழுதும்
தோத்திரங்கள் ஏறெடுப்பேன்

1693.தேவ சத்தத்திற்கு

தேவ சத்தத்திற்கு உண்மையாய்
செவிகொடுத்து - அவர் சித்தம் செய்ய
உன்னை நீ ஒப்புகொடுத்தால்
விண்ணப்பத்திற்கு பதில் கொடுத்திடுவார்
உன் விருப்பங்கள் எல்லாம் நிறைவேற்றுவார் (2)

1. எல்லாரைப் பார்க்கிலும் ஆசீர்வதிப்பார்
உன் பெயரை பெருமைப்படுத்திடுவார் (2)

2. அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்
வியாதியை உன்னைவிட்டு விலகிடுவார் (2)

3. திராட்சை செடி இயேசுவின் கொடியாவாய்
திரளான கனிகளை கொடுத்திடுவார் (2)

1694.தேவாதி தேவனே

தேவாதி தேவனே
மகத்துவா ஸ்தோத்திரம்
தேசிகர் போதனே
ஜீவா ஸ்தோத்திரம்

வந்தனம் தந்துமைச் சொந்தமாய்ப் போற்றுவேன்
இந்த வேளைதனில் வந்தருள் ஈகுவாய்

1. ஈனப் பாவியெந்தன்
மீட்பா ஸ்தோத்திரம்
ஈனச் சிலுவையை
எடுத்தாய் ஸ்தோத்திரம் -வந்தனம்

2. வியாகுல நேரத்தில்
நேயனே ஸ்தோத்திரம்
வியாதி படுக்கையில்
சகாயனே ஸ்தோத்திரம் -வந்தனம்

3. ஆலோசனை தரும்
ஞானமே ஸ்தோத்திரம்
அல்லல்கள் தீர்த்திடும்
வல்லவா ஸ்தோத்திரம் -வந்தனம்

4. மாலை மயங்கையில்
ஜோதியே ஸ்தோத்திரம்
காலை சமயத்தில்
என் ஜீவனே ஸ்தோத்திரம் -வந்தனம்

5. அன்பர் விட்டோடினும்
மாறிடா நண்பனே
கொண்டாயுன் ரத்தத்தால்
கொற்றவா ஸ்தோத்திரம் -வந்தனம்

6. துன்பம் அகோரமாய்
சூழ்ந்திடும் நேரத்தில்
இன்பம் தந்து என்னை
ஏற்றவா ஸ்தோத்திரம் -வந்தனம்

1695.தேவன் நமக்கு அடைக்க

தேவன் நமக்கு அடைக்கலமும்
ஆபத்துக் காலத்தில் துணையுமானவர்
பூமிநிலை மாறினாலும் மலைகள்
நிலைசாய்ந்து போனாலும்

1. ஓர் நதியுண்டு அதின் நீர்க்கால்கள்
தேவனுடைய நகரத்தை சந்தோஷிப்பிக்கும்
அதின் நடுவில் அவர் அது அசையாது
அதிகாலையில் சகாயம் பண்ணுவார்

2. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்
யாக்கோபின் தேவன் நம்மடைக்கலமே
மனு உலகினிலே அவர் நடத்துகின்ற
கர்த்தருடைய செயல்களை வந்து பாருங்கள்

3. பூமியினுடைய கடைமுனை மட்டும்
யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்
வில்லை ஒடித்து ஈட்டியை முறித்து
ரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்

4. அமர்ந்திருந்து அறிந்துக் கொள்ளுங்கள்
நானே தேவன் ஜாதிகளுக்குள்ளே
உயர்ந்திருப்பேன் உயர்ந்திருப்பேன்
உயர்ந்திருப்பேன் நான் பூமியிலே

1696.தேவனை துதியுங்கள்

தேவனை துதியுங்கள் எப்பொழுதும்
தேவனை துதியுங்கள்

1. அவர் வல்லமை விளங்கும் ஆகாய
விரிவை பார்த்துத் துதித்திடுங்கள்

2. அவர் வல்லமையுள்ள கிரியைகட்காக
அவரைத் துதித்திடுங்கள்

3. மாட்சிமையான மகத்வத்திற்காக
அவரைத் துதித்திடுங்கள்

4. எக்காளத் தொனியுடன்
அவரைத் துதியுங்கள்

5. வீணை சுரத்துடனே தம்புரு
நடனத்தோடும் துதியுங்கள்

6. யாழும் தீங்குழலோடும்
ஓசை கைத்தாளத்தோடும் துதியுங்கள்
பேரோசை கைத்தாளத்தோடும்

7. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத்
துதியுங்கள் அல்லேலூயா ஆமேன்

1697.தேவ சமூகம் தேடிடும்

தேவ சமூகம் தேடிடும் ஆத்துமா மகிழும்
அன்பின் தேவன் அருள்ரூபம் கண்டானந்திக்கும்
தூயதேவன் பாதத்தில் இளைப்பாறிக் கிடக்கும்
தூய எண்ணம் இதயத்தில் பொங்கியே வழியும் - 2

அல்லேலுயா...........4

1. கண்ணீரில் வாழ்ந்தவர் எல்லாம்
களி கூர்ந்து இசையோடு கவி பாடுகின்றார்
துக்கங்கள் பறந்தோடிச்செல்ல - 2
துதிபாடி நடனமாடி மகிழ்கீதம் செய்வார்

2. கவலைகள் தீர்த்திட்டார் தேவன்
கனிவாக அணைத்திட்டார் கருணையின் நாதன்
துயரங்கள் இனி ஏதும் இல்லை - 2
திருப்பாதம் அடைந்தோர்க்குத் தீமைகள் இல்லை - 2

1698.எல்லா நாமத்துக்கும் மேல

எல்லா நாமத்துக்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமமே
எல்லா தலைமுறையும் என்றும் போற்றிடும் நாமம்
இயேசுவின் நாமமே

இயேசு நாமமே ஜெயம் ஜெயமே
சாத்தான் சக்தி ஒன்றுமில்லையே
அல்லேலூயா ஓசன்னா அல்லேலூயா
அல்லேலூயா ஓசன்னா அல்லேலூயா

1. சாத்தானின் மேல் அதிகாரம் தந்ததே
இயேசுவின் நாமமே
சத்ரு கோட்டைகளை தகர்த்தெரிந்ததே
இயேசுவின் நாமமே

2. சரீர வியாதிகளை குணமாக்குதே
இயேசுவின் நாமமே
தொல்லை கஷ்டங்கள் அனைத்தையும் நீக்கியதே
இயேசுவின் நாமமே

3. பாவத்திலிருந்தென்னை இரட்சித்ததே
இயேசுவின் நாமமே
நித்ய நரகத்திலிருந்தென்னை விடுவித்ததே
இயேசுவின் நாமமே

1699.இம்மானுவேலன் பிறந்தார்

இம்மானுவேலன் பிறந்தார்
என்னுடன் இருந்திடவே
எந்தனின் பாவமகற்ற
என்னுள்ளே உதித்துவிட்டார்

பாவங்கள் தொலைந்தன
சாபங்கள் நீங்கிற்று
சத்தியம் பிறந்தது
(சந்தோஷம் விளைந்தது - 3)

1. அடிமை என்னை நோக்கிப் பார்த்தார்
தாழ்ந்த என்னைத் தூக்கிவிட்டார்
அன்பின் தேவன் அவனி வந்தார்
அன்பால் என்னை அணைத்துக்கொண்டார்
அவரின் நாமம் அதிசயமே
ஆலோசனை தரும் கர்த்தரிவரே
வல்லமை தேவன் நித்தியபிதா
சமாதானப் பிரபு எனப்படுமே

2. இருளையகற்ற இயேசு பிறந்தார்
இனிமை நிறைந்த இதயம் தந்தார்
இவரே மீட்பர் இவரே கர்த்தர்
இவராலன்றி இரட்சிப்பு இல்லை
பாவம் போக்க பரமன் பிறந்தார்
பாசத்தாலே பலியாய் மரித்தார்
மரித்த இயேசு உயிர்த்து எழுந்தார்
மீண்டும் என்னை அழைக்க வருவார்

1700.தாய்கூட பிள்ளைகளை

தாய்கூட பிள்ளைகளை மறந்துபோகலாம்
சிங்கம்கூட குட்டிகளைப் பட்டினி போடலாம்
தாயினும் மேலாக அன்பு வைத்தவர்
இரத்தத்தையே சிலுவையிலே
உனக்குத் தந்தவர் - மறந்திடுவாரோ
உன்னை வெறுத்திடுவாரோ
நம்பிக்கையை விட்டு விடாதே - நீ
நம்பினவர் கைவிடமாட்டார்

1. நீ அவரைத் தெரிந்து கொள்ளவில்லை
அவரல்லவோ உன்னைத் தெரிந்து கொண்டார்
நேற்று அல்ல, இன்று அல்ல
தாயின் கருவில் தோன்றுமுன்னே

2. தேவன் உனக்குச் சொன்ன வார்த்தையெல்லாம்
ஒன்றுகூட மாறிப்போவதில்லை
நேற்றும் இன்றும் என்றும் மாறா
தேவன் இயேசு மாறிடாரே

3. நீ அவரின் முகத்தை நோக்கிப் பார்த்தால்
உந்தன் வாழ்வு வெளிச்சமாக மாறும்
கர்த்தருக்குக் காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை

D-Min/Slow Rock/T-115

1701.எனக்கு நேரம் கிடைக்கும்

எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம்
என் இயேசுவோடு நான் பேசுவேன் - (2)
நான் பேசுவேன் அவர் பேசுவார்
இருவரும் சந்தோஷிப்போமே - (2)

1. ஆபத்து நேரத்தில் கூப்பிடுவேன்
அருகில் வந்தெனக்கு உதவி செய்வார் - (2)
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவேன் - (2)
இனிமையாய் வந்தெனக்கு பதில் கொடுப்பார்

அல்லேலூயா... அல்லேலூயா... (6)

2. ஆராதனை நேரங்களில் கூப்பிடுவேன்
ஆவியின் அபிஷேகம் தந்திடுவார்
அந்நிய பாஷையில் நிரப்பிடுவார்
அபிஷேக தைலத்தை ஊற்றிடுவார்

3. அந்தி சந்தி மதியங்கள் கூப்பிடுவேன்
முந்தி வந்து எனக்கு அவர் உதவி செய்வார்
சபையிலே சாட்சியாய் வாழ்ந்திடுவேன்
சத்தியத்தை உணவாக்கி மகிழ்ந்தீடுவேன்

4. உற்சாகமாய் கர்த்தருக்குக் கொடுத்திடுவேன்
இரட்டிப்பான நன்மைகளைப் பெற்றிடுவேன்
ஜீவனின் அதிபதியானவரை - என்
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்திடுவேன்

F-Maj/0000/T-000

1702.என் அருள் நாதா

என் அருள் நாதா இயேசுவே
சிலுவைக் காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என்னுள்ளத்தில்

1. என் மீட்பர் சிலுவையல்லால்
வேறெதை நான் பாராட்டுவேன்
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்

2. கை தலை காலிலும் இதோ
பேரன்பும் துன்பம் கலந்தே
பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ
முள் முடியும் ஒப்பற்றதே

3. மாந்தர்க்கு மீட்பைக் கஸ்தியால்
சம்பாதித்தீந்த இயேசுவே
உமக்கு என்றும் தாசரால்
மா ஸ்தோத்திரம் உண்டாகவே

1703.என் கிருபை உன்னைவிட்டு

என் கிருபை உன்னைவிட்டு
என்றென்றும் விலகாது
என் அன்பு உன்னை விட்டு
என்றென்றும் மாறாது

1. பெலவீனத்தில் எனது பெலன்
பூரணமாய் விளங்கும்
பெலவீனன் என்று நீ சொல்லாதே
பெலத்தைக் கொடுப்பவர் நான் தானே

– என் கிருபை

2. என் காரியமாய் யார் போவார்
இதுவே என் ஏக்கம்
சிறுபிள்ளை என்று நீ சொல்லாதே
உன்னோடு இருப்பவர் நான் தானே

– என் கிருபை

3. பயப்படாதே சிறுமந்தையே
நான் உன் மேய்ப்பன்
கைவிடப்பட்டேன் என்று சொல்லாதே
எந்நாளும் காப்பவர் நான் தானே

– என் கிருபை

1704.ஓ ! ராஜரே ! நான்

ஓ ! ராஜரே ! நான் முற்றும் பிரமையால்
தம் கிரியை யாவும் நோக்குகின்றேனே
உன் வல்லமை விளங்கும் மின் முழக்கம்
வானாதி வெள்ளி காண்பித்திடுதே

என் நெஞ்சமே! நீ பாடி துதிப்பாய்
என் மீட்பரின் மா மேன்மையை

1. பூங்காவின் சோலையுள்ளே செல்லும் வேளை
இன்னிசைப் பட்சி பாடல் கேட்குதே!
மாமலை மீது நின்று நோக்கும் வேளை
சிற்றோடை மீது தென்றல் வீசுதே!

2. தம் நேச சேயை எந்தன் மீட்புக்கென்று
கொடுத்த காட்சி தாங்கக் கூடாதே
சிலுவை மீதென் பாவம் முற்றும் தாங்கி
ஐயோ! தம் ஜீவன் விட்டார் இயேசுவே!

3. மேகங்கள் மேல்- என் மீட்பர் வந்திடுவார்
மேல் வீட்டில் என்னைக் கொண்டு
சேர்க்கவே அப்போ மெய்த் தாழ்மை ஆவலோடு
என்றும் - என் நேசர் மேன்மை எண்ணிப் பாடுவேன்.

E-Maj/6/8 Blues/T-110

1705.என் நேசரேசுவை நான்

என் நேசரேசுவை நான் என்றும் பாடுவேன்
என் ஆத்துமாவை நித்தம் நேசிக்கின்றவர்
என் நேசர் லீலியிலும் வெண்மையானவர்
என் வாழ்வில் நறுமணமீந்தவர்

1. பெலனற்றுப் போகையில் என் பெலன் அவரே
இன்னல் துன்ப நேரத்தில் என் நன்பரவரே
பொற்றள வீதியில் பாடி மகிழ
என் நேசரேசு மீட்டுக் கொள்வாரே

2. கடும் புயல் சீறிடும் அலைகள் மோதிடும்
கண்ணுக்கெட்டா கரைதனில் உள்ளம் நாடிடும்
பொற்கரம் நீட்டி என் கரம் கொடுப்பேன்
என் நேசரேசு மீட்டுக் கொள்வாரே

3. எட்டியாய் கசந்திட்ட என் வாழ்வு இனித்திட
எத்தனாய் அலைந்திடாது நித்தம் பின் செல்ல
ஏந்திட்டார் பொற்கரத்தில் ஆவலாய் என்னை
எந்நாளும் இன்ப துதிகள் பாடவே

D-Maj/Cool Dance/T-125

1706.என் சமூகம் உன்

என் சமூகம் உன் முன் செல்லும்
ஒன்றுக்கும் கலங்காதே - உன்னை
ஒரு போதும் கைவிடமாட்டேன்
அழைத்தது நான் தானே

1. ஆடுகள் பின் அலைந்த அந்த
தாவீதை அழைத்தது நான் - (2)
அந்த தாவீதின் வேராய்
கிளையாய் துளிர்த்தவன் தலையை
நான் உயர்த்தவில்லையா - (2)

2. யாருக்கும் அடிமையில்லை
எவரேனும் தாழ்வதில்லை - (2)
ராஜாவை தள்ளி ராஜாவாய்
மாற்றும் ராஜாதி ராஜனும் நான் - (2)

3. ஆதி தகப்பனான அந்த ஆபிரகாமை
அழைத்தது நான் - (2)
கரம் பிடித்தவனை கடல் மணல் அளவாய்
கர்த்தர் நான் நடத்தவில்லையா - (2)

4. ஈசாக்கின் தேவனும் நான் அந்த
யாக்கோபின் தேவனும் நான் - (2)
அடிமையாய் போன யோசேப்பை
தேசத்து அதிபதி ஆக்கினதும் நான் - (2)

D-Maj/Slow Rock/T-95

1707.என் வாழ்வினை மாற்றிடும்

1. என் வாழ்வினை மாற்றிடும்
புதியதாய் படைத்திடும்
என் வாழ்வினை மாற்றிடும்

2. என் வாழ்வினை வனைந்திடும்
மகிமையாய் வனைந்திடும்
என் வாழ்வினை வனைந்திடும்

3. என் வாழ்வினை உயர்த்திடும்
மேன்மையாய் உயர்த்திடும்
என் வாழ்வினை உயர்த்திடும்

4. என் சாயலை மாற்றிடும்
இயேசுவை போலாக்கிடும்
என் சாயலை மாற்றிடும்

E-Min/6/8 Biues/T-95

1708.என் வாழ்க்கை எல்லாம்

என் வாழ்க்கை எல்லாம்
உம் பிரசன்னத்திலே
எந்நாளும் நடந்திட வேண்டும்
உந்தன் பிரசன்னம் எத்தனை இன்பம்
உந்தன் சமூகம் எத்தனை இன்பம்

1. என்னை விட்டு எடுபடாத நல்ல
பங்கு நீர் - எந்நாளும் எதற்காகவும்
இழந்திட மாட்டேன் - 2

2. உலகம் என்னை திருப்திபடுத்த
முடியாதையா - எந்தன் ஊற்று
உம்மிடத்தில் உள்ளதேயையா

3. இரவும் பகலும் உமது சமூகம்
விழுந்து கிடக்கனும் - இடைவிடாமல்
உம்மோடு என் தொடர்பு இருக்கனும்

4. வேறிடத்தில் ஆயிரம் நாள்
வாழ்வதை விட - உம்மிடத்தில் நான்
வாழும் நாட்கள் இன்பமே

1709.என் இயேசு கைவிடமாட்டார்

என் இயேசு கைவிடமாட்டார்
என்னை விட்டு விலக மாட்டார்
கவலையில்லை கண்ணீரில்லை
நீண்ட(வீணான) சிந்தனையில்லை

1. கரம்பிடித்து நடத்துபவர் நீரல்லவோ
பெயர் சொல்லி அழைத்தவர் நீரல்லவோ
தாயின் கருவில் உருவாகுமுன்னே
தெரிந்து கொண்டவர் நீரல்லவோ

2. ஆபத்திலே காப்பவர் நீரல்லவோ
துணையாய் இருப்பவர் நீரல்லவோ
கண்ணின் மணிபோல காப்பவரும்
என் அப்பன் நீரல்லவோ

3. வார்த்தையினால் பேசுபவர் நீரல்லவோ
வழிகாட்டி நடத்துபவர் நீரல்லவோ
சோதனையில் தப்பிச் செல்ல வழகாட்டிடும்
என் தெய்வம் நீரல்லவோ

1710.எனக்காய் இரத்தம் சிந்

எனக்காய் இரத்தம் சிந்தினவர்
எனக்காய் உயிரோடெழுந்தவர்
எனக்காய் பரிந்து பேசுபவர்
எனக்காய் வெற்றி பெற்றவர்

ஆடுவேனே உமக்காய்
பாடுவேனே உமக்காய்
சொல்லுவேனே உமக்காய்

1. எனக்காய் ஜீவனை கொடுத்தவர்
எனக்காய் பிசாசை வென்றவர்
எனக்காய் திரும்பவும் வருபவர்
எனக்காய் அற்புதம் செய்பவர்

2. எனக்காய் யுத்தம் செய்பவர்
எனக்காய் சேனையை கவிழ்ப்பவர்
எனக்காய் வழியை திறந்தவர்
எனக்காய் யாவையும் செய்பவர்

1711.எனக்கின்னு யாருமில்லை

எனக்கின்னு யாருமில்லை இயேசப்பா
உம்மையன்றி இந்த உலகத்தில் – 2
நீங்கதான் இயேசப்பா நீங்கதான் – 4

1. தாயும் நீங்கதான்
தந்தையும் நீங்கதான்
சொந்தமும் நீங்கதான்
சொத்தும் நீங்கதான்

2. தனிமையின்போது வந்த
நண்பனும் நீங்கதான்
தேவையின்போது உதவும்
தோழனும் நீங்கதான்

3. பாவங்கள் பண்ணினபோது
மன்னித்தவர் நீங்கதான்
இரத்தால் கழுவி என்னை
மாற்றியவர் நீங்கதான்

4. அழைத்தவர் நீங்கதான்
முன் குறித்தவர் நீங்கதான்
உமக்காக வாழ என்னை
பிரித்தவர் நீங்கதான்

5. நீதியாய் நியாயம் தீர்க்கும்
நீதிபதி நீங்கதான்
சீக்கிரமாய் வரப்போகும்
ராஜனும் நீங்கதான்

1712.எந்தன் ஜீவிய யாத்திரை

எந்தன் ஜீவிய யாத்திரையில்
எந்தன் நேசரின் சமூகமே
என்னை வழிநடத்தும் கிருபை
அதிசயம் அதிசயமே

1. என் மணவாளனின் அன்பினை நானே
மேன்மைபடுத்தி நான் உயர்த்திடுவேனே
அவரை எண்ணி நிதம் வாழ்ந்திடுவேனே
அவரேப் போதும் எந்தன் வாழ்நாளினிலே

2. நல்ல போராட்டம் நான் போராடுவேனே
ஓட்டத்தை ஜெயமாக முடித்திடுவேனே
விசுவாசத்தை நான் காத்திடுவேனே
ஜீவக்கிரீடம் நான் பெற்றிடுவேனே

D-Maj/Waltz/T-140

1713.எங்கே தேடுவேன் நான்

எங்கே தேடுவேன் நான் எங்கே தேடுவேன்
என் நேசரேசுவை நான் எங்கே தேடுவேன்

1. உன்னத ராஜனே ஆ என்
உத்தம நேசரே
உம் உன்னத அன்பாலே
ஆ என் உள்ளம் உருகுதே

2. காட்டு மரங்களுள் நேசர்
கிச்சிலி மரம் போலாம்
கமழும் மரங்களுள் நேசர்
இன்ப லீலியாம்

3. மலையின் நடுவிலோ
நேசரை மல்லிகை வனத்திலோ
மாடி மேடையிலோ இல்லையேல்
மன்னவர் மத்தியிலோ

4. அழகாய் மான்போல நேசர்
அலைந்து வாராரே
அரச குமாரருள் ஆ என்
அன்பர் ஒருவரே

5. அழகு வாய்ந்தவர் நேசர்
அன்பு மிகுந்தவர்
அறிவில் சிறந்தவர் நேசர்
அனைத்தும் அறிபவர்

6. காலை தேடுவேன் நேசரை
கண்டு மகிழுவேன்
கருத்தாய் பாடுவேன்
நேசரின் காதல் நாடுவேன்

1714.எழுப்புதல் எழுப்புதல்

எழுப்புதல் எழுப்புதல்
அது எங்கே இருந்து புறப்படுகிறதல்ல
எழுப்புதல் ஓ..ஓ.. எழுப்புதல்
அது எங்கோ இருந்து புறப்படுகிறதல்ல
அது உன்னிடத்திலே புறப்படும்
அது உனக்குள்ளிலிருந்தே புறப்படும்
நீ (நான்) எழுந்து விட்டால் எழுப்புதல் வந்திடும் - 4

1. பரிசுத்தமுள்ள தேவன் முன்பாய்
பரிசுத்தமாய் நான் வாழ்ந்தால் எழுப்புதல்
நான் பரிசுத்தமானால் தேசம் பரிசுத்தமாகும் -2

2. மகிமையான தேவன் அவரை (எபி 12 : 28)
பிரியமாய் நான் துதித்தால் (தொழுதால்) எழுப்புதல்
நான் தேவனை துதித்தால் (தொழுதால்)
தேசம் தேவனைத் துதிக்கும்

3. ஜெபத்தை கேட்கும் தேவனிடத்தில் சங் 65 : 2
தேசத்திற்காய் நான் ஜெபித்தால் எழுப்புதல்
(தினமும் நான் நின்றால் அதுவே எழுப்புதல்)
நான் திறப்பிலே நின்றால் தேசம் திறப்பிலே நிற்கும்

4. துதியின் மத்தியில் வாழும் தேவனை- நான்
உண்மையாய் தொழுதால் அதுவே எழுப்புதல்
நான் தேவனை தொழுதால் தேசம் தேவனை அறியும்

5. வார்த்தையான தேவன் அவரின்
வார்த்தையிலே நான் வாழ்ந்தால் எழுப்புதல்
நான் தேவ வார்த்தையை சொன்னால்
என் ஜம் வாழ்க்கை பெருகிடுமே

0-Maj/0000/T-000

1715.எல்லா நாமத்திலும் நீர்

எல்லா நாமத்திலும் நீர் மேலானவர்
எல்லா தேவரிலும் பெரியவரே
சர்வ சிருஷ்டிக்கெல்லாம் நீர் அதிபதி
சர்வ லோகத்திற்கும் ஆண்டவர்

நீரே தெய்வம் வேறே இல்லை
உம்மைப்போல இங்கு யாரும் இல்லை

1. கர்த்தருக்காய் பொறுமையுடன் காத்திருப்பேன்
அவர் என்னிடமாய் சாய்ந்து என் குரல் கேட்பார்
என் தேவனுக்கு புதுப்பாட்டை பாடிடுவேன்
என் தேசம் அதை கண்டு அவரை துதித்திடுமே (நம்பிடுமே) - 2

2. சிறுமைப்பட்ட என் மேல் அவர் சிந்தை வைத்தார்
என் வறுமைகளை மாற்றி என்னை வாழ வைத்தார்
என் பாவம் கழுவி பாசத்தோடு அணைத்துக் கொண்டார்
என் மீறுதல்கள் அனைத்தினின்றும் மீட்டிட்டார்

3. தேவனே உம் விருப்பம் செய்ய விரும்புகிறேன்
உம் மகிமை காண தினம் ஏங்குகிறேன்
மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளே அழைத்து செல்லும்
உம் மகிமைக்குள் தினம் என்னை வாழ செய்யும்

4. நீதியின் வலதுகரத்தால் தாங்குகிறீர்
நித்தமும் நீர் என்னை நடத்துகிறீர்
ஏனோக்கைப் போல நான் நடந்திடுவேன்
என்னை எடுத்துக்கொள்ளும் வரை காத்திருப்பேன்

1716.என்னை அழைத்தவர்

என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்
மாறிடாதவர் மகிமையானவர் – 2

1, என் நீதி உம் முன்பாய் அழுக்கான கந்தைதான் – 2
நான் இதுவரை நிற்பது உம் மாறாத கிருபை தான் – 2

2. எனக்காக யாவும் செய்து முடிக்கின்றவர் – 2
நீர் என்னோடு இருக்கின்ற சர்வவல்லவர் – 2

3. என்னை நீர் வெறுத்திடாமல் நேசிக்கின்றவர் – 2
உந்தன் நீதியின் வலதுகரத்தால் தாங்குகின்றீர் – 2

4. வாக்குத்தத்தம் செய்தவர் நீர் உண்மையுள்ளவர் – 2
என் வாழ்நாளெல்லாம் என்னை நடத்தும் தகப்பனவர் – 2

5. சிறியவன் என்னை புழுதியிலிருந்து எடுத்தவர் நீர் – 2
எளியவன் என்னை குப்பையிலிருந்து உயர்த்தினீரே – 2

1717.துதி ஓயாமல் செலுத்

துதி ஓயாமல் செலுத்திடுவேன்
பரிசுத்தராம் இயேசு கர்த்தர்க்கே
புவி எங்கும் அவர் நாமம் முழங்க

1. பாவ வலையில் மாளும் பாவியே
வா இவ்வேளையே, துதிக்க உன் பரனை
பார் அதோ பார், உன் நேசர் தொங்குகிறார்
பாதகரின் தீர்ப்பை தம்மில்
தாங்கியே தாம் மாள்கிறார் - துதி

2. நோயால் வாடியே, மாளும் ரோகியே
தேவ சுதன் உன் நோய் சுமந்தனரே
பார் அதோ? பார், கல்வாரி மீதிலே
சாபம் நீக்க, பாவமாகி
ஈந்தாரே தம் ஜீவனை - துதி

3. ஆதி அன்பிலே, வீழ்ந்த பேதையே
வா என்னுடனே துதின்ன உன் நேசரை
தாழ்த்தினாரே உன் தேவன் உனக்காய்
பாதாளம் வரையும் சென்றே
உயிப்த்தார், உன் மீட்புக்காய் - துதி

4. ஆதரவின்றி வாடும் தோழனே
பார் நேசரே நிற்கிறார் உன் அண்டையே
யார் கேட்டாலும் கர்த்தன் கையிலே
கருத்துடன் பரிசுத்தாவி
ஈந்ததால் ஜெயிப்போம் - துதி

1718.என்னை நீர் கழுவிவிடும்

என்னை நீர் கழுவிவிடும்
உம் மகிமையால் மூடிவிடும்
உம்மோடு நடக்க... உம்மோடு இருக்க...
உம் சாயலாய் மாறிவிட
உம் மகிமையில் சேர்ந்துவிட

அனுபல்லவி
கழுவும்... என்னை கழுவும்...
உம் இரத்தத்தால் (வார்த்தையால்)
என்னை கழுவும்

1. எனது குற்றத்தை நான் அறிந்துள்ளேன்
என் பாவங்கள் என் முன்பாய் நிற்கிறது
உம் நீதி விளங்க இதை சொல்லுகிறேன் (நிற்கிறேன்) -2
உம் பரிசுத்தம் விளங்க இன்று அறிக்கை செய்தேன்

2. ஈசோப்பினால் என்னை சுத்திகரியும்
உறைந்த மழையிலும் வெண்மையாவேன்
சந்தோஷத்தால் என்னை மகிழ செய்யும் -2 உம்
நீர் நொறுக்கின எலும்புகள் களிகூறட்டும்

3. நொறுங்குண்ட ஆவியோடு நிற்கின்றேன்
நருங்குண்ட இதயத்தோடு ஜெபிக்கின்றேன்
உம் நிலைவரமான ஆவி தாரும்- 2
உற்சாகத்தின் ஆவியால் என்னை நிரப்பும்

4. கர்த்தாவே நீர் என்னை அறிந்துள்ளீர்
நான் உட்காருதல் எழுதலையும் தெரிந்துள்ளீர்
உமக்கு வேதனை உண்டாக்கும் வழி வேண்டாம் -2
நித்திய வழியில் என்னை நடத்தி செல்லும்

5. ஆதாம் இழந்த தேவ சாயலை
மறுபடி கொடுக்க நீர் வெளிப்பட்டீர்
அதற்காய் சிலுவையை சுமந்தீர்-2
உம் ஜீவனை எனக்காய் தந்துவிட்டீர்

1719.உம் நேச தனல் எனக்குள்

உம் நேச தனல் எனக்குள் எரிகிறது
அது ஒரு நாளும் அணையாது ஐயா
அதை யாரும் அணைக்க முடியாதய்யா -2

அணையாது அணைக்கமுடியாது
உம் நேசம் விட்டுஎதுவும் பிரிக்காது.

1. உம் நிமித்தம் நான் படும் பெலவீனமோ
உம் நிமித்தம் நான் படும் நிந்தனையோ
உம் நிமித்தம் நான் படும் நெருக்கங்களோ
உம் நிமித்தம் நான் படும் துன்பங்களோ
இவைகளில் நான் இன்று பிரியப்படுகிறேன்
உம்மோடு நெருங்கி வாழ தினமும் துடிக்கிறேன்

2. உம் நிமித்தம் நான் படும் உபத்திரவமோ
உம் நிமித்தம் நான் படும் வியாகுலமோ
உம் நிமித்தம் நான் படும் நாசங்களோ
உம் நிமித்தம் நான் படும் மோசங்களோ
இவைகளில் நான் இன்று பிரியப்படுகிறேன்
உம்மோடு நெருங்கி வாழ தினமும் நினைக்கிறேன்

3. உலகத்தினால் வருகின்ற மரணமோ
உலகத்தினால் வருகின்ற ஜீவனோ
உலகத்தினால் வருகின்ற உயர்வோ
உலகத்தினால் வருகின்ற தாழ்வோ
உம் அன்பைவிட்டு எதுவும் என்னை பிரிக்காதய்யா
உம் சமூகத்தை எதுவும் என்னை மறைக்காதய்யா

1720.வருஷத்தின் நடுவே என்

வருஷத்தின் நடுவே என்னை (தேசத்தை) உயிர்ப்பிக்கமாட்டீரோ
வாழ ஒரு (சில) வயதைத் தந்து தேசத்தைக் காப்பீரோ-2

-அனுபல்லவி -
தேவனே..தேவனே..என் தேசம் தான் வேண்டுமே
என் ஜீவனுக்கு ஈடாக என் ஜனத்தைத் தாருமே

1.கர்த்தரின் பெரிய நாள் இதோ சமீபித்து வருகிறது சூரியன் இருள்டையும் ...சந்திரன் இரத்தமாகும் தேசத்தின் தலைவர்களபுலம்பி அழுவார்கள் தேவனை அறியாதோர் கதறி நிற்பார்கள்-(2) - ஜனத்திற்கு விரோதமாய் ஜனங்கள் எழுவார்கள் இராஜ்ஜியத்திற்கு விரோதமாய் இராஜ்ஜியம் எழும்பும் கொள்ளைநோயால் ஜனம் மாலவார்கள் நிலநடுக்கத்தால் ஜனம் சாவார்கள் வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் அது தேசத்திற்கு விரோதமாய் தேவன் ஊதுகிற எக்காளத்தின் நாள்......அது சீக்கிரம் வருகிறது -2

நீர் வெளிப்படும் நாளைக் கேட்டேன்
பயம் எனக்குள்ளே வந்தது
தேசத்தைத் திரும்பிப் பார்த்தேன்
திகில் என்னை மூண்டது

2. சர்வவல்லவரின் மகா சங்கார நாள் சமீபித்து வருகிறது அது கிட்டிச் சேர்கின்றது அது தீவிரித்து வருகின்றது எல்லா மனுஷரின் கைகளும் நெகிழ்ந்து போகும் எல்லா மனுஷரின் இதயமும் கரைந்து போகும் -(2) - அது உக்கிரத்தின் நாள் .. அது இக்கட்டின் நாள்..அது இடுக்கத்தின் நாள்.. அது அழிவின் நாள்..
அது திகிலின் நாள்...அது மகா வேதனையின் நாள்..
அது கொடுமையின் நாள்..அது மூர்க்கத்தின் நாள்..
அது பூமிக்கு விரோதமாய் தேவன் வெளிப்படுத்தும் கடுங்கோபத்தின் நாள் - அது சீக்கிரம் வருகிறது -2

கோபம் வேண்டாம் இரக்கம் கொள்ளும்
சாபம் வேண்டாம் மனமிரங்கும்
தேவனே நீ இல்லையென்றால்
தேசம் இங்கு பாழாய்போகும்

3. மனுஷன் தனக்கு தேவர்களை உண்டுபண்ண கூடுமோ? மனிதன் படைத்தது மனிதனுக்கு தெய்வமாகுமோ? அது சித்திரக்காரனின் வேலை தானே ...அவன் சிந்தையில் தோன்றின மாயைதானே... -2 மரத்தைப்பார்த்து விழியென்று சொன்னால் மரமும் விழிப்பதில்லை ஊமை கல்லைப்பார்த்து எழும்பென்று சொன்னால் கல்லும் எழுவதில்லை பொன்னால் வெள்ளியால் மூடிவைத்தாலும் சுவாசம்அதற்கில்லை அதை செய்கிற மனிதனும் அதைப்போல் இருக்கிறான் அவனுக்கு உணர்வில்லை கர்த்தரோவென்றால் பரிசுத்த தெய்வம் அவர் உயிருடன் இருக்கின்றார் கர்த்தரோவென்றால் சர்வ வல்லவர் அவர் சீக்கிரம் வருகின்றார்-2

இந்த தேசம் எனக்கு வேண்டும்
இந்த இந்து தேசம் எனக்கு வேண்டும்
இந்த தேசம் இயேசுவுக்கு
சொந்த தேசம் ஆக வேண்டும்

1721.என்ன செய்வேன் என்ன

என்ன செய்வேன் என்ன செய்வேன்
செய்திட்ட நன்மைக்காய் என்ன செய்வேன்

1. மனிதரின் நேசம் மாயையென் அறியாமல்
மாறா உம் நேசம் மறந்தேனையா
ஆனாலும் என்னை மன்னித்தீர் தயவாய்
மெய்யான நேசத்தை அறிந்து கொண்டேன் - அதற்காய்

2. தாயவள் கருவினில் தெரிந்தெடுத்த
நோக்கத்தை மறந்த மூடனானேன்
ஆனாலும் என்னை மன்னித்தீர் தயவாய்
மெய்யான நோக்கத்தை அறிந்து கொண்டேன் -அதற்காய்

3. மனிதரின் வார்த்தைகள் தேனென்று கருதி
நேசரின் சத்தத்தை மறந்து போனேன்
ஆனாலும் என்னை மன்னித்தீர் தயவாய்
மெய்யான சத்தத்தை அறிந்து கொண்டேன் - அதற்காய்

E-Maj/8 Beat/T-90

1722.என்ன சுகம் ஆஹா

என்ன சுகம் ஆஹா என்ன சுகம்
என் இரட்சகரின் சமுகம் பேரானந்தம்
பரமானந்த மோட்சசுகானந்தம்
அதைப் பெற்று அனுபவித்தால் என்ன சுகம்!

1. பொன்னகர் மேடையில் எந்நேரம் பாடலாம்
கின்னரம் தம்பூர் வீணை இன்னிசைக் கொட்டலாம்

2. ஜீவ நதியில் குளித்துக் களிக்கலாம்
ஜீவ விருட்சக் கனியும் புசிக்கலாம்

3. தங்கக் கிரீடம் தலையில் தரிக்கலாம்
இங்கீதக் காரரோடு சங்கீதம் பாடலாம்

4. பக்தர்கள் கூட்டத்தில் பாடிக் களிக்கலாம்
பரம பிதாவின் பணிவிடை செய்யலாம்

5. பட்டினி பசி தாகம் சாவு வாட்டமல்லை
கேட்டின் மக்களோடு கூட்டினுறவு மில்லை

6. துன்பம் ஒழிந்துமே இன்ப மடையலாம்
தூயரின் சமுகத்தில் துதி கொண்டாடலாம்

7. இயேசுவின் ரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள்
சிங்காசனத்தினின்று ஜெயகீதம் பாடலாம்

1723.என்னை கண்டவரே

என்னை கண்டவரே என்னைக் காண்பவரே
என்னைக் காத்தவரே என்னைக் காப்பவரே

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

1. பாவியாய் இருந்த என்னைக் கண்டு கொண்டீரே
பாசமாய் மார்போடு அணைத்துக் கொண்டீரே

2. நெருக்கத்தில் இருந்த என்னைத் தேடி வந்தீரே
நெருங்கி அன்பாக சேர்த்துக் கொண்டீரே

3. கடந்த காலமெல்லாம் காத்துக் கொண்டீரே
வருகிற காலத்திலும் காத்துக் கொள்வீரே

4. கொடுத்த வாக்குத்தத்தம் பூர்த்தி செய்தீரே
புதிய வாக்குறுதி கொடுத்து விட்டீரே

5. தள்ளாடி நடந்த என்னைத் தேடி வந்தீரே
மதில்களை தாண்டும்படி தூக்கிவிட்டீரே

6. நெறிந்த நாணலைப் போல் வாழ்ந்து வந்தேனே
எரியும் தீப்பிழம்பாய் மாற்றி விட்டீரே

D-Maj/16 Beat/T-95

1724.என்னை நேசிக்கின்றாயா?

என்னை நேசிக்கின்றாயா?
என்னை நேகிக்கின்றாயா?
கல்வாரி காட்சியை கண்டபின்னும்
நேசியாமல் இருப்பாயா?

1. வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால் தேடி
இரட்சிக்க பிதா என்னை அனுப்பினதால்
ஓடி வந்தேன் மானிடனாய்

2. பாவம் பாரா பரிசுத்தன் நான்
பாவி உன்னை அழைக்கின்றேன் பார்
உன் பாவம் யாவும் சுமப்பேன் எந்தன்
பாதம் தன்னில் இளைப்பாற வா

3. பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப் பார்
பரிகாசச் சின்னமாம் சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய்

உம்மை நேசிக்கின்றேன் நான் உம்மை
நேசிக்கின்றேன் நான் கல்வாரிக் காட்சியைக்
கண்ட பின்னும் நேசியாமல் இருப்பேனோ???

1725.என்னை படைத்தவர்

என்னை படைத்தவர் என்னுடன் இருக்கிறார்
நன்றாய் சோதித்து சுத்தம் செய்கிறார்

1. உள்ளம் முழுவதும் உற்று பார்க்கிறார்
கள்ளம் யாவுமே முற்றும் நீக்குவார்
தம்மை போலவே என் குணம் மாற்றவே
தம்கரம் நீட்டுகின்றாரே தந்தையாம் பரம குயவனே

2. பாதைகள் யாவுமே பரிசுத்தமாக்குவார்
பாசத்தை கொட்டியே பரிவுடன் வளர்க்கிறார்
எந்தன் கால்களை தீமைக்கு விலக்கியே
சுந்தர சீயோன் சேர்க்கவே நித்தமும் நேசர் காக்கிறார்

3. என் மனம் பதறினால் ஆற்றியே தேற்றுவார்
கண்மணிபோலவே காத்தென்னை நடத்துவார்
துயர்புயல் எழும்பினால் துரிதமாய் அதட்டுவார்
வாழ்வினில் கூட வருகிறார் வீழ்ச்சியில் தூக்கி விடுகிறார்

4. என்றுமே மாறிடா இம்மானுவேலரே
என்மணவாளரே என் எஜமானரே இனியொரு
பயமில்லை இயேசுவே மீட்பரே கனிவுடன் காக்கும்
கர்த்தரே கிருபையை பற்றிக் கொள்வேனே

1726.எண்ணி எண்ணி பார்

எண்ணி எண்ணி பார்க்கிறேன்
எண்ணில்லா கிருபை - தினம்
சொல்லி சொல்லி மகிழ்கிறேன்
சொல்லொன்னா தயவை

1. கண்மணிப் போல் காத்தீரே
இன்னல் யாவும் தீர்த்தீரே
ஜீவனுள்ள சாட்சியாய்
என்னை மாற்றி வைத்தீரே

2. வந்த துன்பம் போனதே
வாழ்வில் இன்பம் சேர்ந்ததே
நிந்தை யாவும் நீக்கின்றே
நித்தம் உம்மை போற்றுவேன்

3. வாசல் ஒன்று அடைந்தாலும்
வழி பிறக்க செய்தீரே
நீசன் என்றே தள்ளாமலே
நேசமாய் அணைத்தீரே

1727.எண்ணிலா நன்மைகள்

எண்ணிலா நன்மைகள் எனக்கு செய்ததால்
எந்தன் வாழ்வைத் தந்தேன் இன்ப இயேசுவே
காலம் உள்ளவரை மறக்க முடியுமா
உந்தன் தயவாலே நீர் என்னை நடத்துமே

1. மனம்போன போக்கில் நடந்த மனிதன்
நான் மறைவான ஓர் நண்பனாய்
என்னைக் காத்தீரே வரைந்தீரே
அன்பாலே வலக்கையில் என்னையே
வாழ்நாள் என்றுமே உம்மை சேவிப்பேன்

2. தீய மனிதர் என்னைத் தூற்றித் திரிந்தனர்
தேவ மைந்தா என்னைத் தூக்கி எடுத்தீரே
தந்தீரே கிருபைகள் அழைத்தீரே சேவைக்கு
நன்றி சொல்லியே உம்மைப் பாடுவேன்

3. சுத்த வெள்ளியும் சொக்க பொன்னும்
நீரே தான் மண்ணின் தூளை போல்
மனிதரை எனக்கு தாருமேஆசைகள் வேறில்லை
உம் சித்தம் என்னிலேவருகைக்காய்
ஆவலாய் காத்திருப்பேன்

1728.இன்பமே இன்பமே

இன்பமே இன்பமே இயேசு நாமம் இன்பமே
இரவெல்லாம் பகலெல்லாம்
பாடிப்பாடி போற்றுவேன்

1. துாயர் நாமம் பாடப்பாட துாதர் கூட்டம் சேர்ந்துப்பாடும்
மோட்சலோகம் உயர்த்திப்பாடும் நேசர் நாமம்
துாய நாமம் துன்பங்கள் நீக்கிடும்
அன்பர் நாமம் இன்ப நாமம்

2. பாசமிகுந்த இயேசு நாமம் பாக்கியம் என் பொக்கிஷம்
ஆனந்தம் என் ஆத்ம கானம்
ஆசைநேசர் நாமமே உயர்த்துவேன்
ஊரெல்லாம் உன்னதரின் நாமமே

3. அவரின் நாமம் அதிசயமே அவரின் நாமம் அற்புதமே
அவரின் நாமம் ஆச்சர்யமே
அவரின் நாமம் பரிசுத்தமே கனியிலும்
இனிமையே தேனிலும் மதுரமே

4. காலம் மாறும் காட்சி மாறும் இயேசு நாமம்
மாறாது வானம் மாறும் பூமி மாறும்
வார்த்தை ஒன்றும் மாறாது என்றுமே
இனியது இதயராஜன் நாமமே

1729.எந்தன் ஜெபங்கள்

எந்தன் ஜெபங்கள் தூபம் போல
உம் முன் எழ வேண்டுமே

1. ஜெபிக்கும் எலியாக்கள்
தேசமெங்கும் எழ வேண்டும் - உடைந்த
பலிபீடம் சரி செய்யப்பட வேண்டும்

தகப்பனே ஜெபிக்கிறோம்

2. பரலோக அக்கினி எங்கும்
பற்றி எரிய வேண்டும் - பாவ செயல்கள்
சுட்டெரிக்கப்பட வேண்டும்

3. தூரம் போன ஜனங்கள்
உம் அருகே வர வேண்டும் - கர்த்தரே
தெய்வமென்று காலடியில் விழ வேண்டும்

4. பாகால்கள் இந்தியாவில் இல்லாமல்
போக வேண்டும் - பிசாசின் கிரியைகள்
முற்றிலும் அழிய வேண்டும்

5. பாரத தேசத்தை ஜெப மேகம்
மூட வேண்டும் - பெரிய காற்றடித்து
பெருமழை பெய்ய வேண்டும்

1730.எந்தன் இயேசு வெற்றி

எந்தன் இயேசு வெற்றி பெற்றாரே
எனக்காக வெற்றி பெற்றாரே
ஜீவனே இல்லாமல் இருந்த என்னை
ஜீவனை கொடுத்து வாழ வைத்தாரே

உமது அன்பு பெரியதய்யா
எந்நாளும் போற்றி பாடிடுவேன்
நான் பாடுவேன் ஆட்டம் ஆடுவேன்
ஓட்டம் ஒடுவேன் இயேசுவே தெய்வம்

1. எந்தன் இயேசு பெலன் தந்தாரே
எந்தன் இயேசு பெலன் தந்தாரே
பெலனே இல்லாமல் இருந்த என்னை
புது பெலன் தந்த்து ஊக்குவித்தாரே

2. எந்தன் இயேசு நடத்தினாரே
என்னை என்றும் நடத்தினாரே
வழியே இல்லாத இடங்களிலும்
புது வழியை உண்டாக்கி நடத்தினாரே

3. எந்தன் இயேசு சொந்தமாக்கினார்
எந்தன் இயேசு சொந்தமாக்கினார்
சொந்தமே இல்லாமல் இருந்த என்னை
சொந்தமாய் மார்பில் அனைத்து கொண்டார்

ஆலேலூயா ஆலேலூயா
ஆலேலூயா ஆலேலூயா

D-Maj/Disco/T-109

1731.ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரம் துதி உமக்கே
பாத்திரரே உம்மை துதித்திடுவேன்
பாரில் ஜீவனுள்ள நாளெல்லாம்

1. நானுண்டு உனக்கு நானிலத்தில் என்று
நயமாய் பேசி அழைத்தீர் என்னை
நாளும் என் குறைகள் போக்கிட உமது
நல்கிருபையை எனக்கு அளித்ததினால்

2. வெள்ளம்போல் சோதனை புரண்டு வந்திடினும்
நல்லதோர் புகலிடம் ஆகினீரே
காற்றுக்கு ஒதுக்காய் வறண்ட நிலமதில்
கன்மலையாய் என்றும் இருப்பதினால்

3. ஓடுவோர் அநேகர் பந்தய சாலையில்
ஒருவன் பந்தய பொருள் பெறுவான்
பெற்றுக்கொள்ள நமக்கும் அனுதினமும்
வற்றாத கிருபையை அளித்ததினால்

4. தாழ்வினின்று உயர்த்தி நற்கிரியையுடன்
வாழ்வினில் தொடங்கி அருள் புரிந்தீர்
முற்றும் முடியவே நடத்தி உம்முன்பு
நிறுத்திட வல்லவரானதினால்

5. ஜீவனின் ஆவியை பகிர்ந்து நீர் எனது
ஜீவியமதையே மாற்றுகிறீர்
பூவினில் முதற்பலனாகவே எழும்பிட
பூரண பாதை நீர் நடத்துவதால்

F-Maj/Hard Rock/T-130

1732.எரிகோ கோட்டை

எரிகோ கோட்டை விழுகுதே
துதியால் ஜெயமும் கிடைக்குதே
இரும்பு தாழ்ப்பாள் முறியுதே
வெண்கல கதவுகள் உடையுதே

ஓ ஓ விடுதலை – 3
என்னும் விடுதலை

1. தோமா கனவு பலிக்குதே
இந்திய தேசம் எழும்புதே
வாலிபர் உள்ளம் ஒளிருதே
தேசத்தில் எழுப்புதல் பரவுதே

2. பாவத்தில் விடுதலை கிடைக்குதே
தேவனின் கிருபை பெருகுதே
புதிய சிந்தை வளருதே
என் உள்ளம் இயேசுவில் பறக்குதே

C-Maj/16 Beat/T-90

1733.இதுவரை செய்த

இதுவரை செய்த செயல்களுக்காக
இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம் – 2

1. உவர் நிலமாக இருந்த என்னை
விளைநிலமாக மாற்றிய உம்மை
அலைகடல் அலைந்து ஓய்கின்ற வரையில்
நாவினால் புகழ்ந்து பாடுவேன் நன்றி – 2

2. தனி மரமாக இருந்த என்னை
கனி மரமாக மாற்றிய உம்மை
திசைகளும் கோள்களும் அசைகின்ற வரையில்
இன்னிசை முழங்கியே பாடுவேன் நன்றி – 2

3. உம் சித்தம் செய்திட அழைத்தவர் நீரே
சொந்தமாய் என்னையே ஏற்றுக் கொண்டீரே
சோர்விலும் தாழ்விலும் சோதனை யாவிலும்
தாங்கினீர் தயவாய் பாடுவேன் நன்றி – 2

1734.இது ஆராதனை

இது ஆராதனை நேரம்
துதி பாடி மகிழும் நேரம்
திரியேக தேவனுக்கு
புகழ்மாலை சூட்டும் நேரம்

1. தேவ சமூகம் மூடும் நேரம்
தேவ அன்பால் நிரம்பும் நேரம்
பாதப்படியில் அமரும் நேரம்
இன்ப சத்தம் கேட்கும் நேரம்

2. கண்ணீர் கவலை மறக்கும் நேரம்
சமாதானத்தால் நிறையும் நேரம்
இன்ப ஆலோசனை அடையும் நேரம்
சுயம் பறந்திடும் ஜெய நேரம்

3. வாக்குத்தத்தங்கள் நினைக்கும் நேரம்
நிறைவேற படைக்கும் நேரம்
சித்தம் செய்ய அர்ப்பணிக்கும் நேரம்
தத்தம் செய்து ஆர்ப்பரிக்கும் நேரம்

4. அபிஷேகத்தால் ததும்பும் நேரம்
புது கிருபைகள் பெரும் நேரம்
அனலாக்கப்படும் மகிமையின் நேரம்
தரிசனங்கள் காணும் நேரம்

5. வெற்றி கோஷத்தால் முழங்கும் நேரம்
தோற்ற சாத்தானை துரத்தும் நேரம்
நேசர் மார்பில் சாய்ந்து மகிழும் நேரம்
முகம் பார்த்திட ஏங்கும் நேரம்

D-Maj/16 Beat/T-100

1735.விண்ணக காற்றே நீ

விண்ணக காற்றே நீர்
என்னை நோக்கி வீசிடும்
வெண்புறாவைப் போல
என்மேல் வந்தமர்ந்திடும்

1.ஜலத்தின்மேல் அசைவாடிய
தூயதேவ ஆவியே
பெலத்தின்மேல் பெலனடைய
என்மேல் அசைவாடிடுமே

2.அக்கினி அபிஷேகம்
இன்று வேண்டும் தெய்வமே
எந்நாளும் என் பாத்ரம்
நிரம்பி வழியவேண்டுமே

3.அக்கினி ரதத்தின் மேல்
என்னைக் கொண்டு செல்லுமே
பரலோகத் தூதருடன்
ஆராதிக்கச் செய்யுமே

4.முழங்காலை முடக்கியது
முழங்கால் அளவு அல்ல
நீச்சல் ஆழம் வேண்டுமே
இழுத்துச்செல்லும இயேசுவே

5.மறுரூப அனுபவம்
எனக்கு வேண்டும் தெய்வமே
மறுரூப மலைதனிலே
அழைத்துச் செல்லும் என்னையே

1736.இன்பம் தந்திடும்

இன்பம் தந்திடும் இயேசு பிறந்தார்
இனி இன்னல் என்பது நமக்கு இல்லை
மேளம் கொட்டி பாட்டு பாடி
மேசியாவை வாழ்த்திடுவோம்

இன்பம் இன்பம் இன்பம்
இன்பம் தரும் கிறிஸ்துமஸ் 3

1. வறன்டு போன நம் வாழ்விலே
வற்றாத நீரூற்றாய் இயேசு பிறந்தார்
வருந்தி சுமந்திடும் பாரம் போக்கவே
வார்த்தையின்று மாம்சமானாரே

2. தினமும் நம்மை போசிக்கவே
தீர்க்கர் உரைப்படி பாலன் பிறந்தார்
பரிசுத்த நம்மிலே என்றும் நிலைக்கவே
பரிசுத்த ஆவியால் கருவானார்

3. வார்த்தையின்று மாம்சமானாரே
கும்மாளம்தான் போடுங்க
துள்ளி துள்ளி ஆடுங்க
வின் தூதர் போல பாட்டுபாடுங்க – இன்பம்

E-Min/Rock Shuffle/T-135

1737.இந்தியாவை அரசாளும்

இந்தியாவை அரசாளும் இயேசுவே
நீர் என்றென்றும் வீற்றிருப்பீர்
ஆளுகைகள் அகன்று போகும்
வல்லமைகள் மாறிப்போகும் நீரோ
என்றென்றும் வீற்றிருப்பீர் (2)

1. ஒளி படைத்த உலகமைக்க எழுந்து வா
உறுதி கொண்ட நெஞ்சுடன் உணர்ந்து வா
அலைகளால் கலங்கி நிற்கும் அன்பர்கள்
நிலையான இயேசு வாழ்வு காண்பார்கள்

2. பாரதத்தின் உயிர்துடிப்பே எழுந்து வா
பாரெங்கும் பணி செய்ய பாய்ந்து வா
சிலுவைகொடி தேசங்களில் பறக்கட்டும்
பரலோகத்தை பக்தர்கள் நிரப்பட்டும்

3. வீறுகொண்ட வாலிபனே எழுந்து வா
வீர இயேசுவை வாழ்வில் தொழுது வா
இந்தியர்கள் அவர் நாமம் போற்றும் தொனி
இல்லங்களில் ஒலிக்கட்டும் அது நம் பணி

E-Min/Blues Rock/T-140

1738.இந்தியாவில் இயேசு நாமம்

இந்தியாவில் இயேசு நாமம்
முழங்கட்டுமே முழங்கட்டுமே – 2

இந்தியா - 3 இயேசுவுக்கே

1. சாத்தானின் கோட்டைகளை
உடைத்திடுமே இயேசு நாமம் - 2

2. மேய்ப்பரெல்லாம் ஒன்றாகச்
சேரட்டுமே சேரட்டுமே –2

3. எழுப்புதல் தீ இந்தியாவிலே
எரியட்டுமே எரியட்டுமே – 2

4. சபைகள் எல்லாம் ஒன்றாக
வளரட்டுமே வளரட்டுமே –2

5. சுவிசேஷம் தீவிரமாய்
அறிவிப்போமே அறிவிப்போமே –2

6. அற்புதங்கள் அதிசயங்கள்
நடக்கட்டுமே நடக்கட்டுமே -2

1739.கசந்த மாரா மதுரமாகும்

கசந்த மாரா மதுரமாகும்
வசந்தமாய் உன் வாழ்க்கை மாறும்
இன்று கண்ட எகிப்தியனை
என்றுமே இனிக் காண்பதில்லை - 2

1. இஸ்ரவேலை காக்கும் தேவன்
உறங்கவில்லை தூங்கவில்லை
கண்ணீரோடே நீ விதைத்தால்
கெம்பீரமாய் இறுத்திடுவாய்

2. தண்ணீரை நீ கடக்கும் போது
கண்ணீரை இவர் துடைத்திடுவார்
வெள்ளம் போல சத்ரு வந்தால்
ஆவியால் கொடி ஏற்றிடுவார்

3. வாதை உந்தன் கூடாரத்தை
அணுகிடாமல் காத்திடுவார்
பாதையிலே காக்கும் படிக்கு
தூதர்களை அனுப்பிடுவார்

4. சோர்ந்து போன உனக்கு அவர்
சத்துவத்தை அளித்திடுவார்
கோரமான புயல் வந்தாலும்
போதகத்தால் தேற்றிடுவார்

1740.இன்று கிறிஸ்து

1. இன்று கிறிஸ்து எழுந்தார், அல்லேலூயா!
இன்று வெற்றி சிறந்தார், அல்லேலூயா!
சிலுவை சுமந்தவர், அல்லேலூயா!
மோட்சத்தைத் திறந்தவர், அல்லேலூயா!

2. ஸ்தோத்ரப் பாட்டுப் பாடுவோம் அல்லேலூயா!
விண்ணின் வேந்தைப் போற்றுவோம் அல்லேலூயா!
அவர் தாழ்ந்துயர்ந்தாரே அல்லேலூயா!
மாந்தர் மீட்பர் ஆனாரே அல்லேலூயா!

3. பாடனுபவித்தவர், அல்லேலூயா!
இரட்சிப்புக்குக் காரணர் அல்லேலூயா!
வானில் இப்போதாள்கிறார் அல்லேலூயா!
தூதர் பாட்டைக் கேட்கிறார் அல்லேலூயா!

A-Maj/Disco/T-125

1741.இந்த ஆண்டின்

இந்த ஆண்டின் நன்மை யாவும்
உந்தன் வாழ்வில் பலிக்குமே
இதயம் நிறைந்து துதித்திடுவோம்
இயேசு ராஜனையே

நல்லவர் இயேசு வல்லவர்
அவர் மாட்சிமை உள்ளவரே

1. எல்லாவற்றிலும் ஜெயம் தந்திடுவாரே
கண்ணீரின் ஜெபத்தை தள்ளவேமாட்டார்
எதிர்பார்க்கும் நன்மைகளை தந்திடுவாரே
கரம் தட்டி பாடிடுவோம்

2. பொல்லாப்பும் வாதையும் அணுகிடாதே
கரங்களினால் நம்மை தாங்கிடுவாரே
செட்டையின் மறைவில் மறைத்துக்
கொள்வார் - அடைக்கலம் புகுந்திடுவாய்

3. சத்துரு எய்திடும் ஆயுதங்களை ஒன்றையும்
வாய்த்திடாமல் செய்திடுவாரே
உந்தனின் வாழ்வினில் ராஜா அவரே
தீங்கை இனி காணமாட்டாய்

1742.இஸ்ரவேலின் தேவனை

இஸ்ரவேலின் தேவனை
என்றென்றும் ஸ்தோத்தரி அவர்
அற்புதம் என்றும் செய்பவர்
அற்புதம் என்றும் செய்பவர்

ஸ்தோத்தரி,அவர் மகிமையின் நாமத்தை
பூமி பாயும் மகிமையால்
நிறையும் என்றென்றுமாய்
ஆமென், ஆமென், ஆமென்.....
இஸ்ரவேலின் தேவனை......

Blessed be the Lord God
The God of Israel
Who only doeth wondrous things
Blessed be, His glorious name forever
And let the whole earth be filled
With His glory Amen
Amen Amen and Amen…..

D-Maj/Disco hands/T-125

1743.ஜீவ நதியே எந்தன்

ஜீவ நதியே எந்தன் உள்ளத்தில்
பாய்ந்து செல்லட்டுமே

1. மாம்சத்தின் எண்ணங்களெல்லாம்
என்னில் மறைந்து போகட்டுமே

2. உலர்ந்த எலும்புகளெல்லாம்
இன்று உயிர்பெற்று எழும்பட்டுமே

3. பெலவீன பகுதியெல்லாம்
என்னில் பெலனாய் மாறட்டுமே

4. ஆவியின் வரங்களினால்
என்னை அபிஷேகம் செய்திடுமே

5. வறட்சி இடங்களெல்லாம்
இன்று வளமாக மாறட்டுமே

6. கனிதரா மரமெல்லாம்
இன்று கனிகளால் நிரம்பட்டுமே

7. மாதந்தோறும் புது கனிகள்
தந்து மகிமையாய் வாழட்டுமே

A-Min/Disco/T-125

1744.ஜெபம் கேட்டீரையா

ஜெபம் கேட்டீரையா ஜெயம் தந்தீரையா
தள்ளாட விடவில்லையே தாங்கியே நடத்தினீரே
புகழ்கின்றேன் பாட்டுப்பாடி
புயல் இன்று ஓய்ந்தது
புதுராகம் பிறந்தது

நன்றி அப்பா நல்லவரே
இன்றும் என்றும் வல்லவரே

1. கண்ணீரைக் கண்டீரையா கரம் பிடித்தீரையா
விண்ணப்பம் கேட்டீரையா விடுதலை தந்தீரையா–
புகழ்கின்றேன்

2. எபிநேசர் நீர்தானையா இதுவரை உதவினீரே
எல்ரோயீ நீர்தானையா என்னையும் கண்டீரையா

3. உறுதியாய் பற்றிக் கொண்டேன் உம்மையே நம்பி
உள்ளேன் – பூரண சமாதானமே
போதுமே உம் சமூகமே

4. யெகோவாயீரே நீரே எல்லாம் பார்த்துக் கொள்வீர்
யெகோவாநிசி நீரே வெற்றி மேல் வெற்றி தந்தீர்

5. யெகோவா ராஃபா நீரே சுகம் தந்தீரையா
யெகோவா ரூவா நீரே நல்மேய்ப்பர் நீர்தானையா

6. யெகோவா ஷம்மா நீரே என்னோடே (கூடவே)
இருக்கின்றீர் – யெகோவா ஷாலோம் நீரே
சமாதானம் தந்தீரையா

1745.ஜெபிக்கின்ற நேரம்

ஜெபிக்கின்ற நேரம் நினைவும்,
மனமும் மதுரமாகின்றதே – 2
மதுரமாகின்றதே, எங்கள்
சுகவாழ்வு துளிர்க்கின்றதே 2 – ஜெபிக்கின்ற

1. தேன் கூடும், அதின் தெளிதேனும் – 2
உம் வசனத்திற்கிணையாகுமா ?
உகந்த பலியாய் உயிர்கொடுத்தாலும்
உம் அன்புக்கு ஈடாகுமா – 2
உம் பேரன்புக்கு இணையாகுமா – 2

2. உம் மனதுருக்கம், உம் மா இரக்கம் – 2
நான் வாழ போதுமையா
உயிருள்ள வரையும் உமை பாட ஆசை
என் ஆயுள்தான் போதாதையா – 2
ஆயிரம் ஆண்டுகள் போதாதையா – 2

3. ஜெபம் கேட்கும் இயேசு நீர்
பதில் பேசும் நேரம்
மாராவும் இனிக்கின்றதே,
வனாந்திரம் செழிக்கின்றதே
வறண்ட நிலம் களிக்கின்றதே – 2

F-Min/Disco/T-125

1746.ஜீவ பாதையில் வீசும்

ஜீவ பாதையில் வீசும் பிரகாசத்தில்
தீவிரம் நடப்பதே எனதாத்திரம்
பாவ உலகத்துடன் நான் சேர்ந்திடேன்
தேவாட்டுக்குட்டி பின்னே போக துணிந்தேன்

நான் போகிறேன் நான் போகிறேன்
இன்னலென்னும் குன்று கண்டு
நான் அஞ்சிடேன் - நிந்தை படும்
சில தேவ மைந்தர்களுடன்
நான் போகிறேன் ஏசுவே - 2

1. ஓட்டம் தொடங்கின பேர் அதிகம்
மீட்பருடன் போனார் மெத்த மெதுவாய்
கூட்டம் புதிதென்று சிலர் கூடினார்
நாட்கள் போனதால் பலர் வாட்டமடைந்தார்

2. கெட்ட உலகத்தின் கட்டுகளில் நான்
பட்டுப் பரம பாதை விட்டு விலகேன்
கற்களை என் தலையின் அணையயாக்கினும்
வெட்கமடையேன் மீட்பர் பின் செல்லுவேன்

3. நித்திய சந்தோஷங்களின் ராஜ்ஜியம்
நிச்சயம் சேரில் கஷ்ட பாதை நடப்பீர்
அட்சயனழைத்த சிறு மந்தையைச் சேர்த்து
இரட்சகருடன் போவோம் முற்று முடிய

1747.ஜீவனுள்ள தேவன் என்னோ

ஜீவனுள்ள தேவன் என்னோடிருப்பதால்
எனக்கு என்ன கவலை
ஜீவனுள்ள தேவன் என்னோடிருப்பதால்
எனக்கு ஏது கவலை

1. அஞ்சாதே முதலும் முடிவும் நான் என்றதால்
எனக்கு ஏன் கவலை
ஆபத்து காலத்தில் தப்புவிப்பேன் என்றதால்
பயமே எனக்கு இல்லை

2. வாக்கு மாறா வல்லவர் என்னோடிருப்பதால்
எனக்கு ஏன் கவலை
சர்வ வல்லவரின் நிழலில் நான் உள்ளதால்
பயமே எனக்கு இல்லை

3. வாதை உந்தன் கூடாரத்தை அணுகாது என்றதால்
எனக்கு ஏன் கவலை
வழிகள் எல்லாம் என்னைக் காக்க தூதர்கள்
உள்ளதால் கலக்கம் எனக்கு இல்லை

4. நித்தம் என்னை நடத்துவேன் என்று நீர்
சொன்னதால் எனக்கு என்ன கவலை
என் கிருபை போதும் என்ற வாக்கு இருப்பதால்
பயமே எனக்கு இல்லை

5. என்னை விசுவாசி அற்புதங்கள் காண்பாய்
என்றதால் எனக்கு என்ன கவலை
பரிசுத்தமாய் வாழ்ந்து பலர் பரத்துக்கு வரணுமே
அதுதான் எந்தன் கவலை

1748.ஜீவனுள்ள தேவன் தூதர்

ஜீவனுள்ள தேவன் தூதர் கூடி அங்கே துதிக்கின்றனர்
சீயோன் மலைக்கு வந்து சேர்ந்துவிட்டோம்

பரலோகம் (நம்) தாயகம்
விண்ணகம் (நம்) தகப்பன் வீடு

1. கோடான கோடி தூதர் கூடி அங்கே துதிக்கின்றனர்
பரிசுத்தரே என்று பாடி மகிழ்கின்றனர்
பரிசுத்தர் பரிசுத்தர்
பரலோக தேவன் பரிசுத்தர்

2. பெயர்கள் எழுதப்பட்ட தலைப்பேறானவர்கள்
திருவிழாக் கூட்டமாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்
அல்லேலூயா ஓசன்னா கொண்டாட்டம்
கொண்டாட்டம் தகப்பன் வீட்டில்

3. பூரணமாக்கப்பட்ட நீதிமான்கள் ஆவி அங்கே
எல்லாரையும் நியாயம் தீர்க்கும் நியாயாதிபதி அங்கே
நீதிபதி கர்த்தரே
எல்லாரையும் நியாயம் தீர்க்கும் நீதிபதி

4. புதிய உடன்பாட்டின் இணைப்பாளர் இயேசு அங்கே
நன்மை தரும் ஆசீர்வாதம் பேசும் இரத்தம் அங்கே
இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்
இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஜெயம்

1749.ஜீவனுள்ள என்

ஜீவனுள்ள என் தெய்வமே
உம் பாதத்தில் நான் சரணடைந்தேன்
உம்மைத் தவிர வேறு நாதியில்ல
நீங்க மட்டும் எனக்கு போதுமையா

1. வாழ்க்கை என்னும் படகினிலே
நீங்க வந்து அமரணுமே
படகினிலே நீங்க தூங்கினாலும்
சேதமில்லை பயமுமில்லை
பேதுரு படகை தெரிந்து கொண்டீர்
என்னையுமே தெரிந்து கொள்ளும்
என் இதயத்திலே அமரணுமே
சத்தியத்தை போதிக்கணுமே

2. இல்லத்துக்கு நீங்க வரணுமே
வந்து இங்கே தங்கணுமே
உம் பாதத்தில் நான் அமரணுமே
உம் போதகத்தை நான் கேட்கணுமே
என் இயேசு வந்திடுவார்
அவர் சொல்லுமிடம் வலை விரிப்பேன்
சுயமுயற்சி வீண் தானே
வலை கிழிய மீன் பிடிப்பேன்

C-Min/Disco/T-120

1750.ஜீவனுள்ள நாட்களெல்லாம்

ஜீவனுள்ள நாட்களெல்லாம்
இயேசுவுக்காய் வாழ்வோம்
இருப்பதுவோ ஒரு வாழ்வு–அதை
அவருக்குக் கொடுத்திடுவோம்

வாழ்ந்திடுவோம் நாம் வாழ்ந்திடுவோம்
இயேசுவுக்காய் நாம் வாழ்ந்திடுவோம்

1. இயேசுவும் தனக்காய் வாழாமல் அவர்
நமக்காய் தானே வாழ்ந்தாரே
உயிரையும் கூட நமக்கு தந்தாரே
இதற்கு பதிலாய் என்ன செய்வோமே
நாமும் வாழ்ந்திடுவோம் இயேசுவுக்காய்

2. ஊழியம் செய்வது பாக்கியமே – அதின்
பலனோ இன்று நாம் அறியோமே
கர்த்தர் ஓர் நாள் வந்திடுவாரே
அன்று இதன் பலன் கொண்டு வருவாரே
கண்டு மகிழ்ந்திடுவோம் துள்ளிடுவோம்

3. யாரோ செய்யட்டும் எனக்கென்ன – நான்
நலமாயிருந்தால் அது போலும்
என்றே சுயமாய் வாழ்வதினாலே
பின்னால் நீயும் வருந்திடுவாயே
என்று உயர்வாயோ இன்றே வா

4. உலகத்தையே சொந்தமாக்கினாலும்
அதினாலே லாபம் ஒன்றுமில்லையே
இயேசுவுக்காய் நீ எதை செய்தாயோ
அதுவே உனக்கு உதவிடும் என்றும்
ஓயாது உழைத்திடுவோம் இயேசுவுக்காய்

F-Min/3/8beat/T-110

1751. துதிக்க துதிக்க இன்பம்

துதிக்க துதிக்க இன்பம் பெருகுதே உம்மை
துதிக்க துதிக்க கிருபை பெருகுதே
துதிக்க துதிக்க உயர்த்தப்படுகிறேன் உம்மை
துதித்து துதித்து மதிலைத் தாண்டுவேன் (2)

1. பவுலும் சீலாவும் இரவெல்லாம் துதித்தாங்க
துதிச்சது இரண்டு பேர் விடுதலை பலபேர்க்கு (2)
துதிக்க துதிக்க தான் விடுதலை உண்டு
துதிக்க துதிக்க தான் இரட்சிப்பு உண்டு (2)

2. அசைவில்லா இராஜ்யத்தை
பெறப்போகும் நாமெல்லோரும்
பயத்தோடும் பக்தியோடும்
ஆராதனை செய்யணும் (2)
துதிக்க துதிக்க தான் விடுதலை உண்டு
துதிக்க துதிக்க தான் இரட்சிப்பு உண்டு (2)

3. சாம்பலுக்கு பதிலாக சிங்காரம் தருவாரே
அழுகைக்கு பதிலாக களிப்பை தருவாரே (2)
துதிக்க துதிக்க தான் விடுதலை உண்டு
துதிக்க துதிக்க தான் இரட்சிப்பு உண்டு (2)

1752. ஜீவியமே ஒரே

ஜீவியமே ஒரே ஜீவியமே
அண்ட சராசரம் அனைத்திலுமே
மேவி வசிக்கும் மனிதர் அனைத்தும்
பூமியில் வாழ்வது ஒரே தரமே

1. பிறப்பதும் இறப்பதும் தெய்வசெயல்
இடையில் இருப்பது வாழ்க்கை ஆகும்
இயேசுவில் சார்வதால் பரிசுத்தம் காணும்
பரிசுத்தர் ஆட்சியில் சாட்சி கூறும்
இதை விடில் முடிவது வீழ்ச்சியாகும்

2. நித்தம் நமைவிட்டுச் செல்வார் பாரீர்
அவர் யாரும் செல்லும் அவ்விடமும் பாரீர்
அலறலும் புலம்பலும் உடல்தனைக் கீறலும்
நரகத்தின் தினசரிக் காட்சி கேளீர்
இரக்கத்தின் வழி காணார் கதியும் காண்பீர்

3. திறப்பின் முகம் நிற்க ஆட்கள் தேவை
தியாகத்தின் பாதைக்குச் செல்வோர் தேவை
என் ஜனம் அழியுதே என ஏங்கும் ஆண்டவர்
துக்கத்தை தணிக்கும் சீஷர்தேவை
முன்வருவோர் யார்க்கும் இதுவே வேளை

4. எண்ணிப்பார் கழிந்திட்டக் காலமதை
கதையைப் போல் மனிதரின் நாட்கள் செல்லும்
உலகத்துச் சேவை சாகையில் ஓயும்
உன்னுடன் மரித்தபின் வருவதேது
கிறிஸ்துவின் சேவை நிலைத்து நிற்கும்

5. அர்ப்பணம் தந்தையே கைஅளித்தேன்
கல்வி செல்வம் சுகம் பொருள் அனைத்தும்
செல்வேன் சொல்வேன் இயேசுவே வழி என
வாழ்க்கையில் தம்மையே கொண்டு வாழ்வேன்
என்றுமே அங்கே நான் உம்மில் வாழ்வேன்

D-Maj/0000/T-000

1753. ஜோதி தோன்றும் ஓர்

ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம் பிதா அழைக்கும் பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம

இன்பராய் ஈற்றிலே மோட்சக்கரையில்
நாம் சந்திப்போம் (2) - அல்லேலூயா

1. அந்த வான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களை பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரின் ஆறதல் அடைவோம்

2. நம் பிதாவின் அன்பை நினைத்து அவரில்
மகிழ்ந்து பூரிப்போம் மீட்பின் நன்மைகளை
உணர்ந்து அவரை வணங்கித் துதிப்போம்

3. அந்த மோட்ச கரை அடைந்து வான்
சேனையுடன் நாம் களிப்போம்
நம் தொல்லை யாத்திரை
முடித்து விண் கிரீடத்தை நாம் தரிசிப்போம

4. சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில் சந்திப்போம்
பாடுவோம் ஆளுவோம் துக்கம் நோவழிந்த
ஸ்தலத்தில் ஷேமமாய் நாம் இளைப்பாறுவோம்

5. அங்கே நம் ரட்சகர் என்றென்றும் ஆளகை
செய்து வீற்றிருப்பார் துக்கம் நோய் சாவுகள்
நீங்கிடும் தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார்

6. தூதர் சூழ்ந்து நின்று பாடுவார் கேட்டு நாம்
யாவரும் மகிழ்வோம் பக்தர் அங்கே
முடி சூடுவார் ஓர் முடி அங்குண்டு எனக்கும்

7. என் உற்றார் போய்விட்டார் முன் அங்கே
ஆயின் நான் மீளவும் சந்திப்பேன் அவர்
கூட்டத்தில் நான் விண்ணிலே
ஓய்வற்ற பேரின்பம் கொள்ளுவேன்

8. ஏழைக்கும் மாளிகை இங்குண்டு என்று நல்
மீட்பர் அழைக்கிறார் மாந்தர் யாவருக்கும்
இடமுண்டு எல்லோரும் வாருங்கள் என்கிறார்

E-Maj/Disco/T-120

1754. கேரீத் ஆற்று நீர்

கேரீத் ஆற்றுநீர் வற்றினாலும்
தேசம் பஞ்சத்தில் வாடினாலும்
பானையில் மா எண்ணெய் குறைந்திட்டாலும்
காக்கும் தேவன் நமக்கு உண்டு

கர்த்தர் உண்டு,
அவர் வார்த்தை உண்டு
தூதன் உண்டு,
அவர் அற்புதம் உண்டு

1. இல்லை என்ற நிலைவந்தாலும்
இருப்பதைப்போல் அழைக்கும் தேவன்
உயிர்பிக்கும் ஆவியினால்
உருவாக்கி நடத்திடுவார்

2. முடியாததென்று நினைக்கும் நேரம்
கர்த்தரின் கரம் உன்னில் தோன்றிடுமே
அளவற்ற நன்மையினால்
ஆண்டு நடத்திடுவார்

F-Maj/Rock Shuffle/T-115

1755.கடினமாது உமக்கு எதுவு

கடினமாது உமக்கு எதுவுமில்லை
முடியாதது உமக்கு எதுவுமில்லை
எதுவுமில்லை இயேசப்பா எதுவுமில்லை
முடியாதது எதுவுமில்லை

1. ஓங்கிய உம் புயத்தாலே
வானம் பூமி உண்டாக்கினீர்
நீட்டப்பட்ட உம் கரத்தாலே
அகிலத்தையே ஆட்சி செய்கின்றீர்

2. உம்மாலே செய்ய முடியாத
அதிசயங்கள் ஒன்றுமில்லை
ஆயிரமாயிரம் தலைமுறைக்கும்
அன்புகாட்டும் ஆல்மைட்டி காட்

3. மனிதர்களின் செயல்களையெல்லாம்
உற்று நோக்கிப் பார்க்கின்றீர்
அவனவன் செயல்களுக்கேற்ப
தகுந்த பரிசு தருகின்றீர்

4. யோசனையில் பெரியவர் நீர்
செயல்களிலே வல்லவர் நீர்
சேனைகளின் கர்த்தர் நீரே
எல்ஷடாய் உம் நாமமே

5. எகிப்து நாட்டில் செய்த அதிசயம்
இன்றும் செய்ய வல்லவர் நீர்
அற்புத அடையாளங்களினால்—உம்
ஜனங்கள் புறப்படச் செய்தீர்

1756.கலங்கிடாதே.. திகைத்திடாதே.

கலங்கிடாதே... திகைத்திடாதே...
கர்த்தர் கரம் உனக்கு உண்டு பயந்திடாதே– 2

1. படுகுழியில் நீ விழுந்தாலும்
பரத்திலிருந்து வந்து உன்னை தூக்கிடுவார்
அக்கினியில் நீ நடந்தாலும்
எதுவும் உன்னை சேதப்படுத்த முடியாதே
கரம்பிடித்து உன்னை என்றும் நடத்திடுவார்
கண்மணி போல் உன்னை என்றும் காத்திடுவார்

2. ஆறுகளை நீ கடந்தாலும்
அவைகள் என்றும் உன்மீது புரளுவதில்லை
காரிருளில் நீ நடந்தாலும்
பாதைக்கு வெளிச்சமாக இருப்பாரே

F-Maj/Country Ballad/T-80

1757.கண்களை ஏறெடுப்பேன்

கண்களை ஏறெடுப்பேன்
என் கண்களை ஏறெடுப்பேன்
அல்பா, ஒமேகா,என் தேவன் நீர்
கண்களை ஏறெடுப்பேன்

கைகளை ஏறெடுப்பேன்
என் கைகளை ஏறெடுப்பேன்
அல்பா, ஒமேகா, என் தேவன் நீர்
கைகளை ஏறெடுப்பேன்

1. துன்பங்கள் வரும்போது
உன் வேதனைகளில்
திடன்கொள் மகனே
உன்னை அழைத்தவர் காத்திடுவார்
(கண்களை)

2. நம்பிக்கை அற்ற (இழந்த)
நேரம் நீ தனிமையில்
இருக்கும் போது என் அப்பா அருகில்
வருவார் கலங்காதே மகனே
(கண்களை)

F-Maj/Hard Rock/T-130

1758.கரம் பற்றி நடந்திடுவேன்

கரம் பற்றி நடந்திடுவேன் – கர்த்தர்
இயேசுவில் மகிழ்ந்திடுவேன் (2)
அவர் காட்டும் வழியில் உண்மையாய்
நடந்து ஆவியில் மகிழ்ந்திடுவேன் – 2

இராஜாதி இராஜாவுக்கே – மகிமை
இயேசு இராஜனுக்கே
இறங்கிடும் தேவ ஆவியே – என்னை
நிரப்பிடும் வல்ல ஆவியே

1. சத்துரு கோட்டைகளை இயேசு
இரத்தத்தால் ஜெயித்திடுவேன்
சத்திய ஆவி துணைகொண்டு என்றும்
புதுபெலன் அடைந்திடுவேன்

2. நெருக்கங்கள் வரும்போது – என்
நேசர் என் பட்சமுண்டு
துதித்திடுவேன் என்றும் புகழ்ந்திடுவேன்
அவர் நாமத்தில் ஜெயம் எடுப்பேன்

3. அற்புதம் நடந்திடுமே – என்றும்
மாறிடா தேவ அன்பால்
அல்லேலூயா பாடிடுவோம் – நம்
அதிசய தேவனுக்காய்

D-Maj/Disco/T-120

1759.காரிருள் வேளையில்

காரிருள் வேளையில்
கடுங்குளிர் நேரத்தில்
ஏழைக் கோலமதாய்
பாரினில் வந்தது மன்னவனே
உம் மாதயவாம் தயவே

1. விண்ணுலகில் சிம்மாசனத்தில்
தூதர்கள் பாடிடவே –2
வீற்றிருக்காமல் மானிடனானது
மாதயவாம் தயவே –2

2. விண்ணில் தேவனுக்கே மகிமை
மண்ணில் சமாதானம் –2
மானுடரில் பிரியம் மலர்ந்தது
உந்தன் மாதயவாம் தயவே

F-Min/Polka/T-120

1760.கர்த்தர் ஆவி என்னில்

1. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் துதிப்பேன்
துதிப்பேன் துதிப்பேன் தாவீதைப்
போல் துதிப்பேன் – 2

2. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் பாடுவேன்
பாடுவேன் பாடுவேன் தாவீதைப்
போல் பாடுவேன் – 2

3. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் ஆடுவேன்
ஆடுவேன் ஆடுவேன் தாவீதைப்
போல் ஆடுவேன் – 2

3. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் தட்டுவேன்
தட்டுவேன் தட்டுவேன் தாவீதைப்
போல் தட்டுவேன் – 2

4. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் ஜெபிப்பேன்
ஜெபிப்பேன் ஜெபிப்பேன் தாவீதைப்
போல் ஜெபிப்பேன் – 2

5. கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் இசைப்பேன்
இசைப்பேன் இசைப்பேன் தாவீதைப்
போல் இசைப்பேன் – 2

E-Min/Slow Rock/T-90

1761.கர்த்தர் என் பெலனும்

கர்த்தர் என் பெலனும் கீதமும் அவரே
ஆபத்தில் அரும்பெரும் அடைக்கலமே
உன்னத ஒளியாய் முன்னுரைப்படியே
முன்னணை உதித்தனரே

1. விண்ணவர் போற்ற மண்ணவர் மகிழ
மன்னவன் வந்தனரே
மாயிருள் நீக்கும் மாபெரும் கிருபையை
மானிடர்க் கீந்திடவே
தாழ்மையாய் வந்த தற்பரன் அன்பை
தாரணி போற்றிடுவோம்

2. பாவியை மீட்கும் பரமனின் சுதனாய்
பிறந்தனர் பெத்தலையே
பேயதை வென்று பரலோகம் திறந்தெம்
பாதைக்கு தீபமானார்
இம்மானுவேலனாய் இயேசென்னும் உருவில்
நம்முடன் வாசஞ்செய்தார்

3. கண்ணீர்கள் துன்பங்கள் துயரங்கள் நீக்கி
அன்புடன் அரவணைத்தார்
பெருவெள்ளம் பாய்திடின் புகலிடமீந்து
பரிவுடன் நடத்திடுவார்
காற்றுக்கு ஒதுங்கும் கன்மலை நிழலும்
கர்த்தனேசு அல்லலோ

1762.கர்த்தர் நல்லவர் அவர்

கர்த்தர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது - 4
பரலோகம் திறந்திடும் நேரம்
தேவ மகிமை இறங்கிடுதே - 2

1. கர்த்தர் நல்லவர்
கர்த்தரை துதித்து ஸ்தோத்தரித்தால்
பரிசுத்த ஸ்தலத்தில் நாம் கூடினால் - 2
அபிஷேகத்தால் நம்மை நிரப்பிடுவார்
மகிமையினால் நம்மை மூடிடுவார் - 2

பரலோம் திறந்திடும் நேரம்
தேவ மகிமை இறங்கிடுதே - 2

2. அன்னிய பாஷைகள் தந்திடுவார்
அக்கினி அபிஷேகம் ஊற்றிடுவார் - 2
வரங்களினால் நம்மை நிறைத்திடுவார்
ஆயுதமாய் நம்மை மாற்றிடுவார் - 2

பரலோம் திறந்திடும் நேரம்
தேவ மகிமை இறங்கிடுதே - 2

F-Maj/Swing Reggae/T-90

1763.கர்த்தர் நல்லவர் ருசித்து

கர்த்தர் நல்லவர் ருசித்துப் பாருங்கள்
யுத்தத்தில் வல்லவர் யோசித்துப் பாருங்கள்
கர்த்தர் பெரியவர் துதித்துப் பாடுங்கள்
அவர் நல்லவர் அவர் வல்லவர் அவர் பெரியவர்

1. உன்னதமானவர் மறைவிலிருப்பவன்
சர்வ வல்லவர் நிழலில் தங்குவான்
அவர் சிறகுகளால் உன்னை மூடுவார்
அவர் செட்டையில் அடைக்கலம் தருவார்

2. வல்லமையானவர் கரத்தில் இருப்பவன்
வாழ்வில் மேன்மையை அடைந்தே வாழுவான்
அவர் கிருபையினால் உன்னை நிரப்பிடுவார்
அவர் மகிமையில் தங்கிடுவாய்

3. பரிசுத்தமானவர் பாதத்தில் இருப்பவன்
பாரில் இயேசுவைப் பாடிப் போற்றுவான்
அவர் அன்பினால் உன்னை அணைத்திடுவார்
அவர் ஆறுதல் பெற்றிடுவாய்

1764.கர்த்தர் நீர் செய்த

கர்த்தர் நீர் செய்த நன்மைகளுக்காய்
என்னத்தை செலுத்துவேன்
இரட்சிப்பின் பாத்திரம் கையினில் எடுத்தே
நாமத்தை தொகின்றேன் – தூய

துதிப்பேன் இயேசுவே துதிப்பேன்
பாசமாய் துதிவிழா ஏறெடுப்பேன்
நிதம் நிதம் புதுபுது துதிகளை செலுத்தி
திருவிழாப்போல் மகிழ்வேன்

1. தாயவள் கருவினிலே அன்றொருநாள் தேவா
தூயவர் கூட்டத்தில் சேர்ந்திடு என்றே
தயவுடனே படைத்தீர் யா
உம்திரு அன்பினையே
உலகினில் நான் மறந்தே
ஓடினேன் விந்தேன்
மாயையில் அமிழ்ந்தேன்
திரும்பவும் கரம் பிடித்தீர் – அன்பாய்
பாசத்தால் தேடி வந்தீர்
பாவத்தை மன்னித்தீரே
நேசமாய் என்னை நேசத்தில் சேர்த்து
ஆசையாய் அணைத்துக்கொண்டீர்

2. கொடியவர் கூட்டமெல்லாம் கொல்கொதா
மலைநடுவே கோரமாய் உம்மை
சிவவையில் அறைந்ததேன்
அடிமை நான் மீட்படைய
அகையின் நேரமெல்லாம் அருகினில் வருபவரே
அழுதிட வேண்டாம் அற்புதம் செய்வேன்
அமர்ந்திரு என்றவரேஉறவினர் உடன் பிறப்பும்
உற்ற நல்நண்பர்களும்
மறந்திட்ட வேளை மறவாத தேவா
உம் அன்பு மாறாதய்யா

1765.கர்த்தரை தேடின நாட்க

கர்த்தரை தேடின நாட்களெல்லாம்
காரியம் வாய்க்கச் செய்தாரே
எத்தனை எத்தனை நன்மைகளோ
இயேசப்பா செய்தாரே
இறுதிவரை என் வாழ்வு – 2
இயேசப்பா உமக்குத்தானே

1. கால்கள் தள்ளாடவிடமாட்டார்
காக்கும் தேவன் உறங்கமாட்டார்
இஸ்ரவேலை காக்கிறவர்
எந்நாளும் தூங்கமாட்டார்

2. கர்த்தர் என்னை காக்கின்றார்
எனது நிழலாய் இருக்கின்றார்
பகலினிலும் இரவினிலும்
பாதுகாக்கின்றார்

3. போகும் போதும் காக்கின்றார்
திரும்பும்போதும் காக்கின்றார்
இப்போதும் எப்போதும்
எந்நாளும் காத்திடுவார்

D-Maj/6/8/-T-110

1766.கைவிடாத நேசர் இயேசு

கைவிடாத நேசர் இயேசு – நமக்கு
இருக்கையிலே பயம் இல்லையே

1. கூப்பிடுகிற காக்கை குஞ்சுக்கும்
பிழைப்பூட்டும் தேவன் அல்லவா
அவைகளை பார்க்கிலும் மேன்மையான
நம்மையே போஷிப்பதும் நிச்சயம் அல்லவா

2. மனித உதவிகள் அற்று போனாலும்
பரத்திலிருந்து உதவி கிடைக்குமே
பலவழிகள் திறந்துமே பாரில் நம்மை
நடத்துவார் வாக்குமாறா தேவன் அல்லவா

3. ஐந்து அப்பமும் இரண்டு மீனையும்
பெருக செய்த தேவன் அல்லவா
ஆயிரம் ஆயிரம் அற்புதங்கள் செய்தவர்
நன்மையினால் திருப்தியாக்குவார்.

4. மகிமை பொருந்திய மகத்துவ தேவன்
சதாகாலம் நமது தேவன்
வருகை பரியந்தமும் ஆதரித்து தாங்கிடும்
மனதுருகும் தேவனல்லவா

D-Maj/Techno/T-104

1767.கிருபை வேண்டும் நாதா

கிருபை வேண்டும் நாதா இயேசுவே உம் திவ்ய
கிருபை வேண்டும் நாதா இவ்வாராதனையில்

1. உம் கிருபை தான் வேண்டும்
சொர்க்கிய ராஜாவே
உம் கிருபையல்லாது எங்களால் ஆகாது

2. ஏழு பிசாசுகள் ஓட்டிய இயேசுவே
மரியாளை நேசித்து அன்பாலே நிரப்பிய

3. இருவாரம் சீஷரின் சஞ்சலங்கள் நீக்கி
இருதயம் குளிர்ந்திட இனிமையாய் பேசின

4. பாவத்தை இனிமேல்
செய்யாதே என்றுமே
பாவியாம் ஸ்திரீக்கு நேசமாய் கூறின

5. பெந்தேகோஸ்தின் நாளில்
அன்பராம் சீஷர் மேல்
உந்தன் வரங்களை மாரிபோல் பொழிந்த

6. தாசனாம் ஸ்தேவானின் சாயலை மாற்றின
நேசமாம் கிருபையை என்மேலும் ஊற்றிடும்

7. வருகிறேன் சீக்கிரம் என்றுரைத்த நேசரே
தருகிறேன் என்னையே ஆசீர்வதித்திட

1768.துதிகள் செலுத்தி பாடி

துதிகள் செலுத்தி பாடி புகழ்ந்து
கர்த்தரை வாழ்த்திடுவேன்-2

1. ஆராதனை செய்ய ஆயத்தமாக்கிய
பரலோக தேவன் என் தந்தையானார்

2. பாவத்தை மன்னித்து பரிசுத்தமாக்கிய
பரலோக தேவன் என் மீட்பரானார்

3. வியாதியை நீக்கி சுகமளித்த
பரலோக தேவன் என் வைத்தியரானார்

4. கலங்கி தவித்த வேளைகளில்
பரலோக தேவன் என் தஞ்சமானார்

5. சோர்ந்துபோன நேரங்களில்
பரலோக தேவன் என் பெலனானார்

6. அறிவில் குறைந்த பேதை எனக்கு
பரலோக தேவன் என் ஞானமானார்

7. ஆவியில் நிறைந்து அனலைமூட்ட
பரலோக தேவன் என் தீபமானார்

E-Maj/2/4 Dolak/T-200

1769.நல்ல போராட்டம் போராடு

1. நல்ல போராட்டம் போராடு எல்லையை நாடு
அல்லல் தொல்லை அணுகிடினும் நில்லாமல் ஓடு

பாரம் பாவம் தள்ளி இலக்கை நோக்கியே
நேராய் ஓடு தேவன் நியமித்த ஓட்டம்

2. பின்னானவை மறந்தே முன்னோக்கியே ஓடு
கன்மலைக் கிறிஸ்துவை நோக்கியே ஓடு – பாரம்

3. நிச்சயத்துடனே ஓடி கிரீடம் பெறுவாய்
அச்சமின்றி இயேசுவை நோக்கியே ஓடு – பாரம்

4. காடு, மேடு ஓடி அஞ்சாய் கிரீடம் பெறுவாய்
தேடி தேடி நல்ல இயேசு அருளைப் பெறுவாய்

5. அசைவில்லாத நாட்டில் சேர ஓடுவாய் நீயும்
ஆசை இச்சைகளை வெறுத்து ஓடுவாய் நீயும்

6. அக்கம் பக்கம் பார்த்திடாமல் ஓடுவாய் நீயும்
எக்காளம் தொனிக்கும் வேளை வந்திதோ பாராய்

7. பாட்டுப்பாடி காத்திருப்பாய் பரனின் கிருபைக்கே
ஓட்டம் ஓட பரனின் செயல் உனக்கு அவசியம்

8. நல்ல விசுவாசம் காத்தால் நீதியின் கிரீடம்
மந்தைகளை மேய்ப்பாயானால் மகிமையின் கிரீடம்

1770.நல்ல தேவனே இயேசு

நல்ல தேவனே; இயேசு எங்கள் மீதிலே!
ஆவியானவரைத் தாரும் நித்திய தேவனே!!

1. பெந்தேகொஸ்தின் நாளில் வந்த நல்ல தேவனே!
இந்த வேளை வரந்தாரும் எங்கள் தேவனே

2. தாகமுள்ள எல்லோரும் திருப்தியடைய
தனித் தனியாய் சந்திக்கவே வேண்டும் ஐயனே

3. சாந்த முடனே பரிசுத்த தேவனே
சார்ந்தெங்களை யுத்தத்திற்கு உயிர்ப் பித்தருளும்

4. தூக்கம் மயக்கம் துயர் சோம்பலும் ஓட;
ஸ்தோத்திர மனதின் உற்சாகத்தைத் தாரும்

5. சென்ற காலத்தில் ஜெயம் பெற்றிடச் செய்த
ஜெபத்தின் ஆவியானவரை எங்களில் ஊற்று

6 அன்புடன் தாழ்மை சமாதானம் பொறுமை
தயவும் எங்களுக்குள் நிதம் பெருக அருளும்

G-Maj/6/8/T-100

1771.வாரும் எங்கள் நல்ல

வாரும் எங்கள் நல்ல தேவனே!
வந்து எம்மில் கிருபை தாருமே!

1. மகிமை சொரூபரே! மாவல்ல தேவனே!
மன்னா வந்தாசீர்வாதம் தாருமே – வாரும்

2. தாய் தந்தை நீர் தானே, தற்பரா எங்கட்கு
தரணியில் வேறோர் துணையில்லையே – வாரும்

3. பாவத்தை வெறுத்துப் பாவியை நேசிக்கும்
பரிசுத்த ராஜாவே நீர் வாருமே – வாரும்

4. பக்தரும் முத்தரும், பாடித் துதிக்கின்ற;
பரலோக தேவனே நீர் வாருமே – வாரும்

5. காருண்ய தேவனே கதியும்மை அண்டினேன்
கடைசி வரையும் காத்து, இரட்சியும் – வாரும்

6. மன்னா உம் வரவை எண்ணி நான் ஜீவிக்க
ஏவுதல் தினம் தாரும் தேவனே – வாரும்

7. விழிப்புள்ள ஜீவியம், விமலா நீர் ஈந்துமே
வெற்றியடையக் கிருபை தாருமே – வாரும்.

G-Maj/Pop Ballad/T-124

1772.கர்த்தரை துதிப்பேன்

கர்த்தரை துதிப்பேன்
என் தேவனை ஆராதிப்பேன்

1. யூதா கோத்திரமே துதிப்பேன்
இம்மானுவேலனை துதிப்பேன்

2. இயேசுவே உம்மை நான் துதிப்பேன்
பரிசுத்தரே உம்மை துதிப்பேன்

3. உந்தன் பெலனால் துதிப்பேன்
எந்தன் கீதமே துதிப்பேன்

4. நல்லவரே நான் துதிப்பேன்
நாள் முழுதும் உம்மை துதிப்பேன்

1773.கர்த்தருக்கு புதுப்பாட்டு

கர்த்தருக்கு புதுப்பாட்டு பாடிடுங்கள்
அவர் கருணையை போற்றிடுங்கள் -ஆ
நித்தமும் புதுக்கிருபை அளித்திடும்

1. நாதன் நீதியின் வலக்கரத்தால்
நடத்திடும் தூயன்-2
சத்தியம் தவறாத உண்மையின் நேயன்-2
நித்தியமாய் என்றும் அரசாளும் தேவன் -2

2. காற்றும் கடலும் அவர் சொல் கேட்கும் -2
கனிவான அவர் வார்த்தை துன்பம் தீர்க்கும் -2
வானமும் வையமும் அவர் புகழ் பாடும் -2
வற்றாத அவர் கிருபை வளம் என்றும் சேர்க்கும்-2

1774.கர்த்தாவே யுகயுகமாய்

கர்த்தாவே, யுகயுகமாய்
எம் துணை ஆயினீர்;
நீர் இன்னும் வரும் காலமாய்
எம் நம்பிக்கை ஆவீர்

1. உம் ஆசனத்தின் நிழலே
பக்தர் அடைக்கலம்;
உம் வன்மையுள்ள புயமே
நிச்சய கேடகம்

2. பூலோகம் உருவாகியே
மலைகள் தோன்றுமுன்,
சுயம்புவாய் என்றும் நீரே
மாறா பராபரன்

3. ஆயிரம் ஆண்டு உமக்கு
ஓர் நாளைப் போலாமே;
யுகங்கள் தேவரீருக்கு
ஓர் இமைக்கொப்பாமே

4. சாவுக்குள்ளான மானிடர்
நிலைக்கவே மாட்டார்;
உலர்ந்த பூவைப்போல் அவர்
உதிர்ந்து போகிறார்

5. கர்த்தாவே, யுகயுகமாய்
எம் துணை ஆயினீர்;
இக்கட்டில் நற் சகாயராய்
எம் நித்திய வீடாவீர்

D-Maj/Modern 6/8/T-130

1775.கர்த்தாவின் ஜனமே கைத்

கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே
களிகூர்ந்து கீதம் பாடு
சாலோமின் ராஜா நம் சொந்தமானார்
சங்கீதம் பாடி ஆடு

அல்லேலுயா அல்லேலுயா
அல்லேலுயா அல்லேலுயா

1. பாவத்தின் சுமையகற்றி கொடும்
பாதாள வழி விலக்கி
பரிவாக நம்மை கரம் நீட்டி காத்த
பரிசுத்த தேவன் அவரே அல்லேலுயா

2. நீதியின் பாதையிலே அவர்
நிதம் நம்மை நடத்துகின்றார்
எது வந்த போதும் மாறாத இன்ப
புதுவாழ்வைத் தருகின்றாரே அல்லேலுயா

3. மறுமையின் வாழ்வினிலே இயேசு
மன்னவன் பாதத்திலே
பசி தாகமின்றி துதிகானம் பாடி
பரனோடு நிதம் வாழுவோம் அல்லேலுயா

1776.காத்திடும் காத்திடும்

காத்திடும் காத்திடும் –உம்மில்
என்னை நீர் காத்திடும்
தந்திடும் தந்திடும் – தாரும்
எப்போதும் உம் பெலனை

1. உம்மை விட்டு எங்கு நான்
செல்லுவேன் என் இயேசுவே
நிரப்பும் நிரப்பும் – நிரப்பும்
உம் பெலனால்

2. தாவீது தேடினான்
அவன் பெலன் உம்மிலே
தேடுவேன் தேடுவேன் உம்
சித்தம் செய்ய தேடுவேன் –.உம்மைவிட்டு

0-Maj/0000/T-000

1777.கொல்கதா மலை மேல்

கொல்கதா மலை மேல் தோன்றுதோர் சிலுவை
அல்லல் பழிப்பின் சின்னமதாம்
நீசபாவிகட்காய் நேசர் மாண்டாரதில்
நேசிப்பேன் அத்தொல் சிலுவையை

1. அந்தச்சிலுவையை நேசிப்பேன்
பெலன் ஓய்ந்து நான் சாகும் வரை
தொல் சிலுவையை நான் பற்றுவேன்
பின் அதால் கீரீடத்தை அணிவேன்

2. தேவாட்டு குட்டி தன் மாட்சிமை வெறுத்து
உலகோர் பழித்த குருசை
கல்வாரி மலைக்கே சுமந்தார் எனக்காய்
கவர்ந்த தென்னுள்ளத்தையது

3. என்பாவம் மன்னிக்க என்னை சுத்தமாக்க
நேசர் மாண்ட சிலுவையதோ தூய இரத்தம்
தோய்ந்த அந்த சிலுவையின்
தியாகக் காட்சியின் மாட்சிமை பார்

ே

4. குருசின் இழிவை மகிழ்வாய் சுமந்தே
மேன்மை பாராட்டுவேன் நிந்தையில் பின்னால்
மோட்சலோகில் நேசர் கூட்டி சென்று
பங்களிப்பார் தம் மகிமையில்

G-Maj/Guiter Ballad/T-80

1778.குயவனே உம் கையில்

குயவனே உம் கையில் களிமண் நான்
உடைத்து உருவாக்கும்
என் சித்தம் அல்ல உம் சித்தம் நாதா
தருகிறேன் உம் கையிலே – 2

என்னை தருகிறேன் தருகிறேன்
உம் கரத்தில் படைக்கிறேன்
படைக்கிறேன் உம் பாதத்தில் (2)
குயவனே உன் கையில் (2)

1. உம் சேவைக்காக என்னை தருகிறேன்
வனைந்திடும் உம் சித்தம் போல் (2)
எனக்காக வாழாமல் உமக்காக வாழ்ந்திட
உருவாக்குமே உருவாக்குமே (2)

2. உமக்காகவே நான் வாழ்ந்திட
வனைந்திடும் உம் சித்தம் போல் (2)
உம் சித்தம் செய்திடவே உம் சித்தம் கேட்டிடவே
உருவாக்குமே உருவாக்குமே (2)

3. உம் வருகையில் உம்மோடு நான்
வந்திட என்னை மாற்றுமே (2)
ஓய்வின்றி உம்மைப்பாட ஓயாமல்
உம்மைத் துதிக்க உருவாக்குமே (3)

F-Maj/Disco/T-120

1779.மகிமையின் ராஜா மகிமை

மகிமையின் ராஜா மகிமையோடு
வருகின்றார் மேகமீதில் ஆ.... ஆ....
ஆனந்தமே ஆனந்தமே
ஆனந்தமே பேரானந்தமே

1. பூமி அதிசயிக்க வானோர்ஆர்ப்பரிக்க
தூதர் தொனியுடனே மேகமீதில் வருவார்
அன்பர்கள் நாங்கள் இயேசுவை
சந்திப்போம் ஆனந்தம் ஆனந்தமே

2. ஆசை மகிபனவர் பிதாவின் மகிமையோடு
நேச மணவாட்டியை மறுரூபமாக்க வருவார்
ஆவலாய் நாமும் இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே

3. சுத்த பிரகாசமாய் சித்திரத்தையலாடை
தூய நீதியுடனே வெண்வஸ்திரம் தரிப்போம்
விண்ணவர் சாயலில் இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே

4. ஆவியும் மணவாட்டியும் அழைத்திடும்
நேரமல்லோ ஆயத்த விழிப்புடனே
பூரணமடைந்திடுவோம் காலமும் சென்றது
நேரமும் வந்தது ஆனந்தம் ஆனந்தமே

D-Min/Polka/T-120

1780.மாலையில் துதிப்போம்

மாலையில் துதிப்போம்
மகிழ்வுடனே மனக்களிப்புடனே
மாண்புகழ் இயேசுவை வானவரோடே

1. காலை மாலை உறங்காரே – நம்
காவலனாய் இருப்பாரே
ஆவலுடன் துதி சாற்றிடுவீரே

2. கிருபையின் வாக்கு தந்தாரே அதை
அருமையாய் நிறைவேற்றினாரே
உரிமையுடன் புகழ் சாற்றிடுவீரே

3. சோதனை வந்திட்ட நேரம் – அவர்
போதனை செய்தார் அந்நேரம்
சாதனையாகவே நிற்கச் செய்தாரே

4. அழைத்த மெய் அழைப்பிலே தானே – நாம்
உழைத்திட பெலன் தந்ததேனே
பிழைத்திட ஜீவன் கிறிஸ்துவில் தானே

5. வயல் நிலம் ஏராளம் காட்டி – அதின்
அறுவடை தாராளம் ஏற்றி
அரிக்கட்டோடே வர கிருபை செய்தாரே

6. உன்னதருக்கு மகிமை இந்தப்
பூமியிலே சமாதானம்
மனுஷரில் பிரியம் உண்டாகச் செய்தாரே

D-Maj/Disco/T-120

1781.மண வாழ்வு புவி

மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மங்கள வாழ்வு வாழ்வினில் வாழ்வு
மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

1. துணை பிரியாது தோகையிம்மாது
சுப மண மகளிவர் இதுபோது
மணமுறை யோது வசனம் விடாது
வந்தனர் உமதருள் பெறவேது

2. ஜீவ தயாபரா சிருஷ்டியதிகாரா
தெய்வீக மாமண அலங்காரா
தேவ குமாரா திருவெல்லையூரா
சேர்ந்தவர்க்கருள் தராதிருப்பீரா?

3. குடித்தன வீரம் குணமுள்ளதாராம்
கொடுத்துக் கொண்டால் அது சமுசாரம்
அடக்கம் ஆசாரம் அன்பு உதாராம்
அம்புவி தனில் மனைக் கலங்காரம்

4. மன்றல் செய் தேவி மணாளனுக்காவி
மந்திரம் அவர்க்குரை மேதாவி
அன்றி யிப்பூவிலமிர்த சஞ்சீவி
அவளை யில்லாதவ னொரு பாவி

D-Maj/Reggae/T-95

1782.மனம் சுத்தி சுத்தி

மனம் சுத்தி சுத்தி வருதே தானா
இயேசு ராஜாவை - 3
நான் உம்மை விட்டு தூரம்போனா
மனம் நல்லால்லே - 3 (என்)

மனம் சுத்தி சுத்தி சுத்தி சுத்தி
மனம் சுத்தி சுத்தி சுத்தி சுத்தி - 4

1. இயேசு தானே ஜீவனும் பெலனும்
யாருக்கு நான் இனி அஞ்சி அஞ்சி வாழனும் - 2

2. உந்தன் வேதம் உடலுக்கு ஜீவன்
அதுவே எனக்கு அனுதின கீதம் - 2

3. இயேசுவும் நானும் ஜாடிக்கேத்த மூடி
நா இனி தேடமாட்டேன் வேற ஒரு ஜோடி - 2

4. அற்புதர் இயேசு எனக்குள் இருக்க
அனுதின தேவையின் பயம் எனக்கில்லையே-2

5. தேனைப் போலப் பாவம் வந்தாலும்
இயேசு திருப்தியில் எட்டி எட்டி உதைப்பேன் - 2

6. மனதை மயக்கும் கவர்ச்சி வந்தாலும்
இயேசுவில் மகிழ்ச்சியாயிருப்பேன் -2

D-Min/8 Beat/T-105

1783.மனித அன்பு மாறிப்

மனித அன்பு மாறிப் போகும்
மாறாத அன்பு இயேசுவின் அன்பு - 2
நிலையில்லாத இந்த உலகினிலே
நிலைத்திருக்கும் இயேசுவின் அன்பு - 2

1. கானல் நீராய் கண்ணுக்குத் தெரியும்
கடந்து போனால் காணாமல் மறையும்
பிரிந்து போகாமல் பரிந்து பேசும்
பரமன் இயேசுவின் அன்பைப் பார்

நிலையில்லாத இந்த உலகினிலே
நிலைத்திருக்கும் இயேசுவின் அன்பு
மனித அன்பு மாறிப் போகும்
மாறாத அன்பு இயேசுவின் அன்பு

2. பாசம் காட்டி வேஷம் போடும்
மனித அன்பு மாயைதானே
ஆணிகள் ஏற்று அழகை இழந்த
அன்பர் இயேசுவின் அன்பைப் பார்

3. வாழத் துடிக்கும் மானிடனே
சாகத் துடித்த இயேசுவைப் பார்
உதிரம் சிந்தி உயிரைத் கொடுத்த
உன்னதர் இயேசுவின் அன்பைப் பார்

D-Maj/Slow Rock/T-120

1784.மன்னன் இயேசு வருகி

மன்னன் இயேசு வருகிறார்
நீ மகிழ்ந்து பாடிடு
மணவாளன் வருகிறார்
நீ ஆயத்தப்படு

அல்லேலூயா ஆனந்தமே (2)
ஆடிப்பாடி நடனமாடி ஆனந்தித்திடு

1. மகிமையானவர் மறுரூபமானவர்
கிச்சிலிப்பழம் அவர் கின்னரத்தோட்டம்
லீலி புஷ்பமே சாரோனின் ரோஜாவே
மென்மையானவர் மகா மேன்மையானவர்

2. பொற்தளவீதி அது பொற்பரன்வீதி
பளிங்கு கற்களும் அங்கு பளிச்சிடுதே
இரத்தினங்களும் இளநீலமும்
படிகப்பச்சை மரகதமும் பாடி போற்றுதே

3. வெண்குதிரை மேல் உலாவ வருகின்றார்
வெண் கிரீடமும் தலையில் ஜொலித்திடுதே
வெண் சிங்காசனம் புன்சிரிக்குது
நட்சத்திரங்கள் கைகொட்டிப்பாடுது

1785.மௌனமாய் இருக்காதே

மௌனமாய் இருக்காதே -நீ
மௌனமாய் இருக்காதே
இது சிந்திக்கும் காலம்
செயல்படும் நேரம்
மௌனமாய் இருக்காதே

1. அறுவடை காலத்தில் மௌனமாய்
இருந்தால் அறுவடை இழப்பாயே
ஆண்டவர் காலத்தில் மௌனமாய்
இருந்தால் ஆத்துமா இழப்பாயே

இது சிந்திக்கும் காலம்
செயல்படும் நேரம்
மௌனமாய் இருக்காதே

2. இந்தியா இயேசுவை அறிந்திடும் காலம்
இது தான் இது தானே
இந்த காலத்தில் மௌனமாய் இருந்தால்
இரட்சிப்பு தான் வருமோ

3. வரட்டு வாழ்வோ பரமனின் அன்போ
எது உன்னை இழுக்கிறது
கணக்கு கேட்கும் கர்த்தர் வருவார்
வெறுங்கையாய் நிற்பாயோ

F-Min/Jive/T-115

1786.மேகமீதில் தூதரோடி

மேகமீதில் தூதரோடிதோ இதோ
மேசையா கிறிஸ்தேசையா
எனதாசை நேசையா
வாறார் வாறார் மகிழ் கெம்பீரமாய்

1. மேகத்தோடு போனவர் இவர் இவர்
திரும்பவும் பதினாயிரம் கணதூதர் சூழ்ந்திட
சீக்கிரம் வாறர் ஜெகத்தை நோக்கியே

2. மணவாளன் இயேசு வருகிறார் இதோ இதோ
மணவாட்டி சேர்த்திட மரித்தவர்
எழ மகிமையோங்கவே
மாதேவ தூதன் முழங்கவே

3. ஆரவாரம் கேட்குதே அதோ அதோ
ஆட்டுக்குட்டியின் பாட்டோடெக்காளம்
அதிர்ந்தொலிக்கவே
அல்லேலூயா வென்றார்ப்பரிப்போமே

4. ஜீவ முடி சூடி நாமங்கே அங்கே
தேவ சாயலாகி அவரோடு வாழ்வோமே
ராஜ ராஜராக ஆள்வோமே

D-Min/16 Beat/T-90

1787.நான் என்னை தந்தேனே

நான் என்னை தந்தேனே இன்று தந்தேனே
அன்பரின் சேவைக்கென்றே
அர்ப்பணித்தேன் என்னை இன்றே
அன்பரின் சேவைக்கென்றே

1. என் பட்டங்கள் படிப்புகள் பதவி எல்லாம்
ஆண்டவர் பாதத்தில் அர்ப்பணித்தேன்

2. ஆவி ஆத்மா சரீரமெல்லாம்
ஆண்டவர் பாதத்தில் அர்ப்பணித்தேன்

3. என் எண்ணங்கள் ஏக்கங்கள் நோக்கமெல்லாம்
எல்லாம் ஆண்டவர் ஆளகை செய்திடுமே

F-Min/Disco/T-120

1788.நான் எதற்காய் பிடிக்க

நான் எதற்காய் பிடிக்கப்பட்டேனோ
அதை பிடித்துக் கொள்ளும்படி
ஆசையாய் தொடர்கிறேன்

பாடுகள் வந்தாலும்
நஷ்டங்கள் நேர்ந்தாலும்
தொடர்ந்து ஓடுவேன்

1. நல்ல போராட்டம் போராடி
ஓட்டத்தை முடிக்கும்வரை
விசுவாசம் காத்துக் கொள்வேன்

2. பின்னானவை மறந்து
முன்னானவை நோக்கி
தொடர்ந்து ஓடுகிறேன்

3. நான் விசுவாசிக்கும் தேவன்
இன்னார் என்று அறிவேன்
ஆசையாய் தொடர்கிறேன்

1789.நான் உம்மைப் பற்றி

1. நான் உம்மைப் பற்றி இரட்சகா!
வீண் வெட்கம் அடையேன்
பேரன்பைக் குறித்தாண்டவா!
நான் சாட்சி கூறுவென்

சிலுவை அண்டையில்
நம்பி வந்து நிற்கையில்
பாவ பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்
எந்தநேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்

2. ஆ! உந்தன் நல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்
நீர் கைவிடீர் இவ்வேழையைக்
காப்பீர் தேவாவியால்!

3. மா வல்ல வாக்கின் உண்மையைக்
கண்டுணரச் செய்தீர்
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்

4. நீர் மாட்சியோடு வருவீர்
அப்போது களிப்பேன்
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்
மெய்ப் பாக்கியம் கொடுப்பீர்

E-Min/70's Disco/T-120

1790.நான் உனக்கு துணை

நான் உனக்கு துணை நிற்கிறேன்
என்றவரே ஸ்தோத்திரம் -2
வலக்கரம் பிடித்து துணையாய் நிற்பவரே
வல்ல தேவனே ஸ்தோத்திரம் -2

1. பாவத்தை ஜெயிக்க பரிசுத்தமாய் வாழ
துணை நிற்பவரே ஸ்தோத்திரம் -2
இரத்தத்தால் கழுவி ஆவியினால் நிரப்பி
அரவணைத்தவரே ஸ்தோத்திரம் -2

2. பாடுகள் ஜெயிக்க மகிழ்ச்சியாய் நான் வாழ
துணை நிற்பவரே ஸ்தோத்திரம் -2
வார்த்தையால் தேற்றி வல்லமையால் நிரப்பி
நடத்துபவரே என்றும் ஸ்தோத்திரம்-2

3. சாத்தானை ஜெயிக்க வெற்றியாய் என்றும் வாழ
துணை நிற்பவரே ஸ்தோத்திரம் -2
அன்பினால் அணைத்து அபிஷேகத்தால் நிரப்பி
ஆதரிப்பவரே என்றும் ஸ்தோத்திரம் -2

E-Min/2/4 Dolak/T-109

1791.நித்திய நித்தமாய்

நித்திய நித்தியமாய்
உன் நாமம்(NAME)நிலைத்திருக்கும்
தலைமுறை தலைமுறையாய்
உன் புகழ்(FAME) பேசப்படும்

நித்தியமே சத்தியமே
நிரந்தரம் நீர்தானய்யா(2)

1. யாக்கோபை உமக்கென்று
தெரிந்தெடுத்தீரே
இஸ்ரவேலை பிரித்தெடுத்து
துதிக்க செய்தீரே (2)
வல்லவர் நீர்தானே
நல்லவர் நீர்தானே

நான் பாடும் பாடல் நீர்தானே
தினம் தேடும் தேடல் நீர்தானே (2)

2. வானத்திலும் பூமியிலும்
விருப்பம் செய்கின்றீர்
மேகங்கள் எழ செய்து
மழை பொழிகின்றீர் (2)
பெரியவர் நீர்தானே
பிரியமும் நீர்தானே(2)- நான் பாடும்

3. வார்த்தையினால் வானங்கள்
தோன்ற செய்தீரே
சுவாசத்தினால் விண்மீன்கள்
பெருக செய்தீரே (2)
சகலமும் படைத்தவரே
சர்வ வல்லவரே (2) - நான் பாடும்

4. வருடத்தை நன்மையினால்
முடிசூட்டுகிறீர்
பாதையெல்லாம் நெய்யாக
பொழியச் செய்கின்றீர் (2)
காண்பவர் நீர்தானே
காப்பவர் நீர்தானே (2)- நான் பாடும்

D-Min/Root Rock/T-140

1792.கழுகு போல

கழுகு போல காத்திருந்து புதபெலன் அடைவேன்
கர்த்தருக்கே காத்திருந்து உயர எழும்பிடுவேன்
நடந்தாலும் சோர்வடைவதில்லை
ஓடினாலும் இளைப்படைவதில்லை

உந்தன் சமுக காற்று
என்னை உயர உயர எழுப்பிடுமே
அல்லேலூயா (2) உயர எழுப்பிடுவேன் (2)

1. கர்த்தர் உமக்கு காத்திருப்போர்
வெட்கப்பட்டு போவதில்லை
நீதிமானின் கால்களை நீர்
தள்ளாட விடுவதில்லை (2) - உந்தன்

2. கர்த்தர் உம்மை தேடுவோர்க்கு
குறைவே இருப்பதில்லை
இஸ்ரவேலை காக்கும் தேவன்
நீர் உறங்கிப் போவதில்லை (2) - உந்தன்

3. கர்த்தர் உரைத்த வார்த்தை என்றும்
தவறிப் போவதில்லை
நீதீமானின் வாக்குத்தத்தம்
தரையில் விழுவதில்லை (2) - உந்தன்

E-Majj/Slow Rock/T-100

1793.என் ஜெபத்தை கேட்க

என் ஜெபத்தை கேட்கிறார் எனக்கு அருள்கிறார்
கன்மலையில் என்னை வைத்து பாதுகாக்கிறார்
அலைகள் என் மேல் புரண்டாலும் அஞ்சிட மாட்டேன்
மலைகள் என் மேல் விழுந்தாலும் பயப்படமாட்டேன்

1. வறண்ட நிலத்தில் நான் நடந்து சென்றாலும்
வழி அறியாமல் நான் திகைத்து நின்றாலும்
வருத்தம் தாகம் பசியும் என்னை நெருங்கவில்லையே
வழி நடத்தும் தேவன் கரம் குறுகவில்லையே

2. வியாதி வறுமையால் சோர்ந்து விட்டாலும்
வாசல் கதவுகள் அடைத்துவிட்டாலும்
ஒன்றும் என்னை கலங்க வைக்க முடியவில்லையே
கர்த்தர் கிருபை என்னை விட்டு விலக வில்லையே

3. கடலின் அலையில் நான் பயணம் செய்தாலும்
காற்றும் புயலுமாய் என்னை எதிர்த்து நின்றாலும்
எதுவும் என்னை தடுத்து நிறுத்த முடியவில்லையே
கர்த்தர் முன்னே செல்வதாலே கவலையில்லையே

4. அத்தி மரங்களில் இலை உதிர்ந்தாலும்
திராட்சை கொடிகளில் கனி அழிந்தாலும்
சுற்றி பஞ்சம் நேர்ந்த போதும் கலக்கமில்லையே
கர்த்தர் கருணை என்னை தாங்கும் வருத்தம்மில்லையே

E-Maj/Polka/T-120

1794.நம் இயேசு கிறிஸ்து

நம் இயேசு கிறிஸ்துவினாலே
நாம் முற்றிலும் ஜெயம் கொள்ளுவோம் (2)
நம்மில் அன்பு கூர்ந்து நம்மை நடத்திடுவார்
அவர் நாமத்தில் ஜெயம் கொள்ளுவோம்

1. பாடுகள் நிந்தைகள் வந்தாலும்
கிறிஸ்துவின் சிலுவையை சுமந்து செல்வோம்
பரிசுத்தர் தேவன் நம் இயேசுவை
பார் எங்கிலும் பறை சாற்றிடுவோம்

முற்றிலும் ஜெயம் கொள்ளுவோம்
நம் இயேசுவின் நாமத்திலே–நம்இயேசு

2. பட்டயமோ மரணமோ வந்தாலும்
கிறிஸ்துவின் அன்பை விட்டு விலகிடோம் (2)
பரலோக தேவன் நம் இயேசுவின்
நாமத்தை உயர்த்திட எழுந்து செல்வோம் (2)

3. தேவன் எங்கள் பட்சத்தில் இருக்கின்றார்
யார் எமக் கெதிராய் நிற்க கூடும்
அழைத்தவர் என்றும் உண்மையுள்ளவர்
மரண பரியந்தம் நடத்திடுவார் (2) நம்மை

E-Maj/Slow Rock/T-110

1795.நான் என் நேசருடை

நான் என் நேசருடையவன்
என் நேசர் என்னுடையவர்
சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
இவரே என் நேசர் இவரே என் சினேகிதர்
இவரே என் பிரியமானவர்

1. பாவியான என்னையும்
அவர் தேடி வந்தாரே
மணவாளனும் என் தோழனும்
என்கெல்லாமானாரே
அவர் சேவை செய்வேன்
அவர்க்காகவே வாழ்வேன் – நான்

2. தனிமையான நேரத்தில்
என் துணையாய் வந்தாரே
பெலவீனமான நேரத்தில்
தம் கிருபை தந்தாரே
அவர் நாமம் உயர்த்துவேன்
அவர் சாட்சியாய் வாழ்வேன் – நான்

3. எனக்காகவே யாவையும்
அவர் செய்து முடித்தாரே
ஏற்ற நேரத்தில் என் தேவைகள்
யாவும் சந்தித்தார்
உயிருள்ள நாளெல்லாம்
அவர் நாமம் பாடுவேன் – நான்

4. என்னையும் அவருடன் அழைத்துச் சென்றிட
மேகங்கள் மீதிலே வேகம் வருவாரே
அவரோடு வாழ்வேன்
நான் நித்திய நித்தியமாய் – நான்

1796.நீ தேடும் நிம்மதி

நீ தேடும் நிம்மதி
இயேசுவிடம் உண்டு ஓடி வா
நீ தேடும் அமைதி
இயேசுவிடம் உண்டு ஓடி வா

1. உனக்காக சிலுவையில் மரித்தவர்
உன்னையே மீட்டிட வந்தவர்
கரம் நீட்டி அழைக்கிறார்
உலகம் தராத சந்தோஷத்தை
இயேசு தருகிறார் உன்னில் இருக்கும்
பாரங்களை இயேசு சுமந்திட்டார்
ஏழையின் ஜெபத்தை தள்ளாதவர்-2

2. ஏங்கிடும் உனக்கு பதில் கொடுப்பார்
உனக்கு பதில் கொடுப்பா
மனிதர் உன்னை கைவிடலாம்
இயேசு கைவிடார் மலைபோன்ற
துன்பம் சூழ்ந்திடலாம் ˙ இயேசு
விடுவிப்பார்தாயினும் மேலாய் காப்பவரே−2
தாங்கியே உன்னை நடத்திடுவார்
உன்னை நடத்திடுவார்

1797.நீங்கதான் இயேசப்பா

நீங்கதான் இயேசப்பா எங்களுக்குப் போதும்
உங்க மகிமை எங்களை மூடும்
உங்க கிருபை உங்க இரக்கம்
உங்க தயவு எங்களுக்குப் போதும்
போதும், போதும், போதும், போதும்

1. தாய் மறந்தாலும் நான் மறவேனே என்று சொன்னீரே
எனதேசுவே – இரக்கம் நிறைந்த எங்களது தாயே
உந்தன் சேய் என்னை நீர் மறவீரே

2. உமது வாக்குகளில் உண்மையுள்ளவரே
ஒருவார்த்தையும் தரையில் விழவில்லையே விழவிட
வில்லையே – வாக்கு செய்ததை நிறைவேற்ற வல்லவர்
வழுவாது காக்கும் தூயாதி தூயவர்

3. என் வாழ்க்கைப் படகிலே வாழ்கின்ற இயேசுவே
எதிர்ப்படும் புயலை எல்லாம் அடக்கிடுவீரே
காற்றையும் அதட்டி கடலையும் அமர்த்தி
ஜெயமாய் வாழ கற்றுத் தந்தீரே

D-Maj/Waltz/T-140

1798.நீர் இல்லாத நாளெ

நீர் இல்லாத நாளெல்லாம் நாளாகுமா?
நீர் இல்லாத வாழ்வெல்லாம் வாழ்வாகுமா?

1. உயிரின் ஊற்றே நீயாவாய்
உண்மையின் வழியே நீயாவாய்
உறவின் பிறப்பே நீயாவாய்
உள்ளத்தின் மகிழ்வே நீயாவாய்.

2. எனது ஆற்றலும் நீயாவாய்
எனது வலிமையும் நீயாவாய்
எனது அரணும் நீயாவாய்
எனது கோட்டையும் நீயாவாய்

3. எனது நினைவும் நீயாவாய்
எனது மொழியும் நீயாவாய்
எனது மீட்பும் நீயாவாய்
எனது உயிர்ப்பும் நீயாவாய்

F-Maj/16 Beat Ballad/T-90

1799.நீர் மாத்ரம் எனக்கு

நீர் மாத்ரம் எனக்கு – 2
நீர் அல்லால் உலகில் யார் உண்டு எனக்கு
மாறிடாத உலகில் நீர் மாத்ரம் எனக்கு
மாறிடும் உலகில் நீர் மாத்ரம் எனக்கு

1. அரணும் என் கோட்டையும்
நீர் மாத்ரம் எனக்கு – கோட்டையும்
துருகமும் நீர் மாத்ரம் எனக்கு
துருகமும் கேடகமும் நீர் மாத்ரம் எனக்கு
கேடகமும் கன்மலையும் நீர் மாத்ரம் எனக்கு.

2. ஆசை வேறு உம்மையன்றி
யாருமில்லை எனக்கு – ஆதரவு
உம்மையன்றி யாருமில்லை எனக்கு
ஆனந்தம் உம்மையன்றி ஒன்றுமில்லை
எனக்கு – எண்ணங்களில் உம்மையன்றி
யாருமில்லை எனக்கு

A-Maj/Rock/T-170

1800.நீர் நல்லவர் என்பதில்

நீர் நல்லவர் என்பதில் சந்தேகம் இல்லை
பெரியவர் என்பதில் மாற்றமே இல்லை
உயர்ந்தவர் என்பதில் மாற்றம் இல்லை (2)

கல்லறை திறந்தது உண்மைதான்
உயிரோடு எழுந்தது உண்மைதான்
பரலோகம் சென்றது உண்மைதான்
மீண்டும் வருவது உண்மைதான்
உண்மைதானே உண்மைதானே

1. எனக்காக சிலுவையில் மரித்தது உண்மை
காலாலே சாத்தானை மிதித்தது உண்மை
இரத்ததால் என்னை மீட்டது உண்மை
இரட்சிப்பை எனக்கு கொடுத்தது உண்மை
உண்மைதானே உண்மைதானே

2. உண்மைதானே உண்மைதானே
ஆதியில் வார்த்தையாய் இருந்தவர் நீரே
மாம்சத்தில் உலகில் வந்தவர் நீரே
தேசங்கள் தேடிடும் பிரபலமும் நீரே
ராஜாக்கள் நடுங்கிடும் ராஜனும் நீரே
உண்மைதானே உண்மைதானே

D-Min/6/8 Beat/T-93

1801.கலங்குவதேன் கண்ணீர்

கலங்குவதேன் கண்ணீர் விடுவதுமே - 2
நேசரின் கரங்களே தேற்றுமே
இயேசுவின் காயங்கள் ஆற்றுமே

1. சோர்ந்து போன உன்
உள்ளம் பார்க்கிறார்
உடைந்து போன உன்
நெஞ்சம் காண்கிறார் - 2
அழைத்த தேவன் உன்னை
நடத்தி செல்வார் - 2
கண்ணீரை துடைப்பார்
கவலைகள் மாற்றுவார் - 2
புது ஜீவன் ஊற்றுவார்
புது சிருஷ்டியாய் ஆக்குவார்
- கலங்குவதேன்

2. அவருக்கான உன்
இழப்புகள் பார்க்கிறார்
அவருக்கான உன்
வலைச்சல்கள் காண்கிறார் - 2
நீதி தேவன் உனக்கு
நியாயம் செய்வார் - 2
நிச்சயம் பலன் தருவார்
உறுதியாய் உயர்த்திடுவார் - 2
தோல்வியால் ஜெயம் தருவார்
வியாதியில் சுகம் தருவார்
- கலங்குவதேன்

D-Maj/Rumba/T-110

1802.நீங்க மட்டும் இல்லாத

நீங்க மட்டும் இல்லாதிருந்தா என் துக்கத்தில்
நான் அழிந்து இருப்பேன் - 2
உங்க வார்த்தை மட்டும் தேற்றாதிருந்தா
மன சஞ்சலத்தில் மரித்து இருப்பேன் - 2

இயேசய்யா உம் அன்பு போதுமே
என் நேசரே உம் கிருபை போதுமே - 2

1. தண்ணீர்களின் மத்தியில் நடந்த போது
முழ்காமல் காத்தது உம் கிருபையப்பா - 2
அக்கினியில் நடந்த போது...
கடும் அக்கினியில் நடந்த போது
என்னை மீட்டதும் கிருபையப்பா - 2

2. நிந்தைகள் அவமானம் சூழ்ந்த போது
ஆற்றியே அணைத்தும் கிருபையப்பா - 2
விக்கினங்கள் சூழ்ந்த போது...
மரண விக்கினங்கள் சூழ்ந்த போது
என்னை மீட்டதும் கிருபையப்பா - 2

3. அன்னையின் கருவிலே தெரிந்து கொண்டு
இம்மட்டும் காத்ததும் கிருபையப்பா - 2
வழி தப்பி அலைந்த போது...
உந்தன் வழி தப்பி அலைந்த போது
மீட்டு இரட்சித்தலும் கிருபையப்பா - 2

1803.நீர் என்னை தேடிவரா

நீர் என்னை தேடிவராதிருந்தால்
நான் என்றோ மரித்திருப்பேன்
உம் கிருபை என்னில் தராதிருந்தால்
நான் என்றோ அழிந்திருப்பேன்

என் தேவா என் ராஜா
உம் கிருபை போதுமே

1. தட்டு தடுமாறி நான் தள்ளாடி நடந்தேன்
என்னை தொட்டு தூக்கிவிட
நீரோ ஓடோடி வந்தீரே

சொத்தோ சுகமோ தேவையில்லை
சொந்தம் பந்தம் நாடவில்லை

2. உளையான சேற்றினிலே நான்
உழன்ற கிடந்தேன்
உன்னதத்தின் தேவா என்னை
உயர்த்தி வைத்தீரே

பேரோ புகழோ தேவையில்லை
பேர் சொல்லி அழைத்தவர் நீர் போதும்

3. தாயின் கருவில் என்னை
தெரிந்து கொண்டீரே
தாங்கி தாங்கி உந்தன்
தோளில் சமந்தீரே

அன்பே எந்தன் ஆருயிரே
ஆயுள் முழுதும் ஆராதிப்பேன்

D-Min/8 Beat/T-90

1804.நீரே எல்லாம் நீரே

நீரே எல்லாம் நீரே எல்லாம்
நீரே எல்லாம் இயேசுவே
உயர்வோ தாழ்வோ,
மரணமோ ஜீவனோ
நீரே எல்லாம் இயேசுவே

1. ஆராதிப்பேன் ஆராதிப்பேன்
ஆராதிப்பேன் இயேசுவே
இன்பமோ துன்பமோ
சுகமோ வியாதியோ
ஆராதிப்பேன் இயேசுவை

2. நேசிப்பேன் நேசிப்பேன்
நேசிப்பேன் இயேசுவே
நன்மையோ தீமையோ
செல்வமோ வறுமையோ
நேசிப்பேன் இயேசுவே

3. பின்தொடர்வேன் பின்தொடர்வேன்
பின்தொடர்வேன இயேசுவே
வெற்றியோ தோல்வியோ
நிந்தையோ புகழ்ச்சியோ
பின்தொடர்வேன் இயேசுவே

F-Min/16 Beat/T-95

1805.நீரின்றி வாழ்வேது

நீரின்றி வாழ்வேது இறைவா
உம் நினைவின்றி மகிழ்வேது தேவா
உலகத்தில் நூறாண்டு
நான் வாழ்ந்த போதும்
உம் இல்லத்தில் வாழும்
ஒரு நாளே போதும்

1. பலகோடி வார்த்தைகள் நான் கேட்ட போதும்
இயேசுவே நீர் பேசும் ஒரு வார்த்தை போதும்
ஓராயிரம் ஜீவன் உயிர் வாழுமே
உம் வார்த்தையில் தான் உண்டு அற்புதமே

2. கல்லுக்குள் தேரையை வைத்தவர் நீர்
அதற்குள்ளும் ஜீவனை தந்தவர் நீர்
உம்மையன்றி அணுவேதும் அசையாதையா
உம் துணையின்றி உயிர் வாழ முடியாதையா

3. எத்தனை நன்மைகள் செய்தீரையா
அதில் எதற்கென்று நன்றி சொல்லி துதிப்பேனையா
அத்தனையும் சொல்ல வேண்டுமென்றால்
ஆயிரம் ஆண்டுகள் போதாதையா

4. அன்பென்னும் சொல்லுக்கு அர்த்தம் நீரே
அடிமை நான் நம்பினேன் உம்மை நானே
தேனிலும் இனிமையாய் நீர் இருக்க
தேடி நான் போவதங்கே சொல்லும் ஐயா

1806.நித்தியானந்தருள்ள ஏக

நித்தியானந்தருள்ள ஏக சக்ராதிபதியே
உம்மை ஆராதனன செய்கிறோம்

ராஜாதி ராஜன் நீரே
கர்j;தாதி கார்j;தர் நீரே

1. சாவாமை உள்ளவரே
சாவையும் வென்றவரே
சேரக்கூடாத ஒலியில்
வாசம் செய்பவரே
ஒருவனும் கண்டிராதவர்
காணக் கூடாதவருமே

1807.அம்மையப்பன் உந்தன்

1. அம்மையப்பன் உந்தன்
அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உம்
உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை
இருப்பது நிரந்தரம்
நான் வாழ்ந்த பின்பும் உம்மில்
உயிர்ப்பதும் நிரந்தரம்

நிரந்தரம் (2) நீரே நிரந்தம்

2. தாயின் அன்பு சேய்க்கு
இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு
நீரேநிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை
நீரே நிரந்தரம்
நான் சாயும் போது காப்பது
நீரே நிரந்தரம்

3. செல்வங்கள் கொணரும் இன்பத்தில்
இல்லை நிரந்தரம்
பதவியும் புகழும் தருவது
இல்லை நிரந்தரம்
நிறைவாழ்வு என்னும் நிஜமான
நீரே நிரந்தரம்
அதன் விலையாக எனை நீர் உம்மில்
இணைப்பீர் நிரந்தரம்

G-Min/Raggae/T-90

1808.நிச்சயமாக நான் உன்னை

நிச்சயமாக நான் உன்னை
ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன்
நிச்சயமாக நான் உன்னை
பெருகவே பெருக பண்ணுவேன்

என்று வாக்குறைத்த தேவன்
என்றும் வாக்குமாறாத தேவன்
தம்மில் ஆணையிட்ட தேவன்
எவ்வளவும் பொய்யுரையாத தேவன்

1. (அவர்) ஆபிரகாமின் தேவன்
(அவர்) ஈசாக்கின் தேவன்
(அவர்) யாக்கோபின் தேவன்
அவர் உனக்கும் எனக்கும் தேவன்

2. (அவர்) தேடுவோரின் தேவன்
(அவர்) நம்புவோரின் தேவன்
(அவர்) ஜெபம் கேட்கும் தேவன்
அவர் உனக்கும் எனக்கும் தேவன்

1809.ஓ எந்தன் உள்ளம்

ஓ எந்தன் உள்ளம் நீர் வந்ததால்
என் வாழ்க்கையில் எல்லாம்
நிறைந்திருப்பதால் - 2

உம்மை துதிப்பேன் நான்
உம்மை துதிப்பேன் - 2
இன்றும் என்றும் உம்மை
போற்றி பாடி துதிப்பேன் - 2

1. கண்மணி போல காத்துக்கொள்வதால்
உம் கரங்களில் சுமந்து
செல்வதால்

உம்மை துதிப்பேன் நான்
உம்மை துதிப்பேன - 2
இன்றும் என்றும் உம்மை
போற்றி பாடி துதிப்பேன் - 2

2. பெயர் சொல்லி என்னை அழைத்திருப்பதால்
உம் கரங்களில் என்னை
வரைந்திருப்பதால்

உம்மை துதிப்பேன் நான்
உம்மை துதிப்பேன - 2
இன்றும் என்றும் உம்மை
போற்றி பாடி துதிப்பேன் - 2

3. ஆவியில் என்னை நிறைத்திருப்பதால்
ஆச்சரியமாக நடத்திச்
செல்வதால்

உம்மை துதிப்பேன் நான்
உம்மை துதிப்பேன - 2
இன்றும் என்றும் உம்மை
போற்றி பாடி துதிப்பேன் - 2

D-Maj/8 Beat/T-84

1810.தடுமாறும் கால்களை

தடுமாறும் கால்களைக் கண்டு
கண்கள் குலமாகி போனதைய்யா - 2

1. பாரமான சிலுவை என்று
இறக்கி வைக்கவில்லை
கூர்மையான ஆணி என்று
புறக்கணிக்கவில்லை - 2

என்னை யோசித்தீரே
என்னை நேசித்தீரே
எனக்காக ஜீவன் தந்தீரே - 2

2. ஒரு விசை நீர் பாடபட்டும
மறுதலிக்கவில்லை
மரணம் சூழ்ந்த நேரத்தில்
விட்டுக்கொடுக்கவில்லை

என்னை யோசித்தீரே
என்னை நேசித்தீரே
எனக்காக ஜீவன் தந்தீரே - 2

D-Maj/Disco/T-102

1811.அன்பு தேவ அன்பு

அன்பு தேவ அன்பு - உன்னை
தேடும் அன்பு - 2
உருக்கம் நதிபோல
உள்ளம் நிறையுமே
கல்மனம் உருகுதே
கல்வாரி அன்பிலே - 2

1. பரலோகம் துறந்தாரே
பூலோகம் வந்தாரே
உன் நண்பனாய்
உன் தோழனாய்
உன் மேய்ப்பராய்
உன் மீட்பராய்

ஜீவன் தந்த அன்பை
மறப்பாயோ உனக்காய - 4
- அன்பு தேவ அன்பு

2. சிலுவை சுமந்தாரே
வாலடி ஏற்றாரே
எல்லா பாவங்கள்
எல்லா சாபங்கள்
முற்றும் நீக்கினார்
சுத்தமாக்கினார்

ஜீவ புஸ்தகத்தில் பெயரை
எழுதவே என்றும் - 4
- அன்பு தேவ அன்பு

3. அன்பின் எண்ணையால்
அபிஷேகம் செய்தாரே
உன்னை அழைக்கிறார்
சேவை செய்யவே
மிக அன்புடன்
பின் செல்வாயா

அன்பு அன்பைத்
தேடுகின்றதே அந்த - 4
- அன்பு தேவ அன்பு

0-Maj/6/8 Beat/T-000

1812.ஜெயித்தாரே ஜெயித்தாரே

ஜெயித்தாரே ஜெயித்தாரே
இயேசு சாத்தான ஜெயித்தாரே
ஜெயித்தாரே ஜெயித்தாரே
இயேசு மரணத்த ஜெயித்தாரே

வானகத்தோர் பூதலத்தோர்
எல்லா முழங்கால் முடங்கிடுமே
வானகத்தோர் பூதலத்தோர்
எல்லா நாவும் அறிக்கையிடும்

1. நமக்கு எதிராய் எழுதப்பட்ட
கையெழுத்தைக் குலைத்தாரே
சத்துருவின் கையிலிருந்து
நம்மை விடுதலையாக்கினாரே

கைதட்டிப் பாடிடுவோம்
இயேசு இராஜாதி ராஜாவ
நன்றி சொல்லி பாடிடுவோம்
இயேசு இராஜாதி ராஜாவ –வான

2. எல்லா இடங்களில் நம்மைக் கொண்டு
வெற்றி சிறக்கப் பண்ணுகிறார்
மரண வாசனை எடுத்துவிட்டு
ஜீவ வாசனைக் கொடுத்தாரே -கைதட்டிப்

3. ஜீவனுள்ள கல்லாய் மாற்றி
மகிமையின் ஆலயம் கட்டுகிறார்
இந்தக் கல்லில்லில் மோதுகிறவன்
நொறுங்கி நொறுங்கிப் போவானே

4. மரண பயத்தில் இருந்த நம்மை
முற்றிலும் விடுதலையாக்கினாரே
மரணத்தின் கூரை சிலுவையிலே
உடைத்து ஜெயித்து எழுந்தாரே

1813.நன்றி சொல்லி உம்மை

நன்றி சொல்லி உம்மை பாட வந்தோம்
உம் காருண்யத்தை எண்ணி போற்ற வந்தோம் (2)
வார்த்தையினால் நீர் சொன்னதெல்லாம்
கரங்களினால் இன்று நிறைவேற்றினீர் (2)

நன்றி நன்றி சொல்வோம் உயிர் உள்ளவரை
ஒன்றும் குறையாமல் காத்திடும் நல்லவரை (2)

1. காற்றுமில்ல மழையுமில்ல
ஆனாலும் வாய்க்காலை நிரப்பினீரே (2)
- நன்றி நன்றி சொல்வோம்

2. உடன்படிக்கை செய்து நடத்தி வந்தீர்
மாறாமல் எப்போதும் காத்துக் கொண்டீரே (2)
- நன்றி நன்றி சொல்வோம்

3. கைவிடாமல் விட்டு விலகிடாமல்
நெருங்கின பாதையிலும் கூட வந்தீர் (2)
- நன்றி நன்றி சொல்வோம்

4. வெட்கப்பட்ட தேசத்திலே
கீர்த்தியும் புகழ்ச்சியுமாக்கினீரே (2)
- நன்றி நன்றி சொல்வோம்

0-Maj/6/8 Beat/T-000

1814.ஊற்றுண்ட பரிமள

ஊற்றுண்ட பரிமள தைலம்
நீர் இயேசு
ஊற்றுவீர் உன்னத வல்லமையால் (2)
உம்மை நான் நேசிப்பேன்
என்றும் நான் நேசிப்பேன்
உயிருள்ளவரை ஆராதிப்பேன்

1. என்னை நீர் இழுத்துகொள்ளும்
உம்மிடம் ஓடி வருவேன்
உம் பாதம் சரண்டைந்தேன்
உமக்காய் நான் வாழ்ந்திடுவேன்

2. என் ஆத்மா மரணத்திற்கும்
என் கண்ணை கண்ணீருக்கும்
என் கால்கள் இடறாமலும்
தப்புவியும் இயேசுவே

3. பாவத்தை வெறுத்திடுவேன்
பலியாகத் தந்திடுவேன்
பரிசுத்தர் பரிசுத்தரே உம்
பரிசுத்தம் தாருமையா

0-Maj/6/8 Beat/T-000

1815.பாடும் பாடல் இயேசு

பாடும் பாடல் இயேசுவுக்காக
பாடுவேன் நான் எந்த நாளுமே
என் ராஜா வண்ண ரோஜா
பள்ளத்தாக்கின் லீலி அவரே

1. அழகென்றால் அவர் போலே
யார்தான் உண்டு இந்த லோகத்தில்
வண்ண மேனியோனே எண்ணிப் பாடிடவே
என் உள்ளம் மகிழ்வாகுதே

2. அன்பினிலே என் நேசர்க்கே
என்றென்றுமே இணையில்லையே
என்னை மீட்டிடவே தம் ஜீவன் தந்தார்
என் நேசர் அன்பில் மகிழ்வேன்

3. தெய்வம் என்றால் இயேசுதானே
சாவை வென்று உயிர்த்தெழுந்தாரே
என் பொன் நேசரின் மார்பில் சாய்ந்தோனாக
நான் பாடுவேன் பாமாலைகள்

1816.பாவத்தின் பலன் நரகம்

பாவத்தின் பலன் நரகம் நரகம்
ஓ பாவி நடுங்கிடாயோ
கண் காண்பதெல்லாம் அழியும்
காணாததல்லோ நித்தியம்

இயேசு ராஜன் வருவார்
இன்னும் கொஞ்சம் காலம் தான்
மோட்ச லோகம் சேர்ந்திடுவோம்

1. உலக இன்பம் நம்பாதே நம்பாதே
அதின் இச்சை யாவும் அழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே
ஓர் காசும் கூடவராதே

2. உன் காலம் எல்லாம் போகுதே
உலக மாய்கையிலே
ஓ தேவ கோபம் வருமுன்னே
உன் மீட்ப ரண்டை வாராயோ?

3. தேவ அன்பின் வெள்ளம் ஓடுதே ஓடுதே
கல்வாரி மலை தனிலே
உன் பாவம் நீங்கிப் போகுமே
அதில் ஸ்நானம் செய்வதாலே

4. மாபாவியான என்னையும் என்னையும்
என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா
தேவ ஆசீர்வாதம் பெறுவாய்

D-Maj/P-Waltz/T-110

1817.பகல்நேரப் பாடல் நீரே

பகல்நேரப் பாடல் நீரே
இரவெல்லாம் கனவு நீரே
மேலான சந்தோஷம் நீரே
நாளெல்லாம் உம்மைப் பாடுவேன்

1. எருசலேமே உனை மறந்தால்
வலக்கரம் செயல் இழக்கும்
மகிழ்ச்சியின் மகுடமாய் கருதாவிடில்
நாவு ஒட்டிக் கொள்ளும்

மகிழ்ச்சியின் மகுடம் நீர்தானய்யா
மணவாளரே உமை மறவேன் (2)

2. தாய்மடி தவழும் குழந்தைபோல
அமைதியாய் இருக்கின்றேன்
இப்போதும் எப்போதும் நம்பியுள்ளேன்
உம்மைத்தான் நம்பியுள்ளேன்
– மகிழ்ச்சி

3. கவலைகள் பெருகி கலங்கும்போது
மகிழ்வித்தீர் உம் அன்பினால்
கால்கள் சறுக்கி தடுமாறும்போது
தாங்கினீர் கிருபையினால்

4. பார்வையில் செருக்கு எனக்கில்லை
இறுமாப்பு உள்ளத்தில் என்றுமில்லை
பயனற்ற உலகத்தின் செயல்களிலே
பங்கு பெறுவதில்லை

1818.பரலோகத்தின் பிதாவே

பரலோகத்தின் பிதாவே
உமது நாமமே
பரிசுத்தப்படுவதாக
உம் இராஜ்யம் வருவதாக

1. உமது சித்தம் பரத்தில்
செய்யப்படுவது போல
பூமியிலேயும் அதுவே
செய்யப்படுவதாக

2. அன்றன்று வேண்டிய அப்பம்
இன்றும் எங்கட்கு தாரும்
ஜீவ அப்பம் நீரே
அதுவே எங்கட்கு போதும்

3. எங்கள் கடனாட்களை
நாங்கள் மன்னிப்பது போல
எங்கள் கடன்களையெல்லாம்
தயவாய் மன்னியும் தேவா

4. எங்களை தீமையினின்றும்
எல்லா சோதனையினின்றும்
என்றுமே இரட்சித்துக் கொள்ளும்
எங்கள் இரட்சகன் நீரே

கனமும் மகிமையும்
இராஜ்யமும் வல்லமையும்
என்றென்றும் உம்முடையதே
ஆமென் அல்லேலூயா (2)

1819.பிரார்த்தனை கேட்கனும்

பிரார்த்தனை கேட்கனும்
என் அன்பு இயேசப்பா

கண்ணீரின் ஜெபத்துக்கு
பதில் தாங்க இயேசப்பா
தாங்கப்பா இப்போ தாங்கப்பா – 2
தாங்கப்பா பதிலை தாங்கப்பா – 2

\`

1. எலியா என்னை கேட்டருளும்
என்று ஜெபித்தாரே எளியவன் நானும்
இன்று ஜெபிக்கிறேனையா

2. ஆகாரின் அழுகைக்கு
பதில் கொடுத்தீங்க அடிமையின்
கதறலுக்கு செவிசாய்ங்கப்பா

3. பர்திமேயு கூப்பிடுதலை
கேட்டீங்களேயப்பா என் பரிதாப
நிலையை எல்லாம்
மாற்றுங்க இயேசப்பா

C-Maj/Waltz/T-144

1820.வாழ்ந்தாலும் உம்மோடு

வாழ்ந்தாலும் உம்மோடு தான்
மரித்தாலும் உம்மோடுதான்

1. உமக்காகத்தானே
உயிர் வாழ்கிறேன்
உம்மைத்தானே நேசிக்கிறேன்

2. ஆத்தும பாரத்தை
தாருமையா - அபிஷேகத்தால்
என்னை நிரப்புமையா

3. உம்மைப் போல என்னை
மாற்றுமையா - உமக்காக
என்னையே தந்தேனையா

0-Maj/8 Beat/T-000

1821.என்னைத் தருகிறேன்

என்னைத் தருகிறேன் தருகிறேன்
உம் கரத்தில்
என்னைப் படைக்கிறேன் படைக்கிறேன்
உம் பாதத்தில் - 2
உருவாக்குமே என்னை உருவாக்குமே
குயவனே உம் கையில் களிமண் நான்
உடைத்து உருவாக்கும் - 2
என் சித்தமல்ல உம் சித்தம் நாதா
தருகிறேன் உம் கையிலே - 2

1. உம் சேவைக்காய் எனை தருகிறேன்
வனைந்திடும் உம் சித்தம் போல் - 2
உம் சித்தம் செய்திடவே
உம் சத்தம் கேட்டிடவே - 2
- உருவாக்குமே

2. உமக்காகவே நான் வாழ்கிறேன்
வனைந்திடும் உம் சித்தம் போல் - 2
எனக்காக வாழாமல்
உமக்காக வாழ்ந்திட - 2
- உருவாக்குமே

1822.பிறந்தார் பிறந்தார்

பிறந்தார் பிறந்தார்
கிறிஸ்து பிறந்தார்
விண்ணிலும் மண்ணிலும்
வெற்றி முழங்க ஓ - 2

அவரே வெளிச்சம்
அவரே சத்தியம்
அவரே நிச்சயம்
அவரே நித்தியம் - 2

1. மண்ணில் சமாதானம்
விண்ணிலும் மகிழ்ச்சி
என்றென்றும் தொனிக்க
என் மன்னன் பிறந்தார்

மாந்தர் யாவரும்
போற்றி பாடுங்கள்
மன்னன் யேசுவை
வாழ்த்தி பாடுங்கள் - 2

2. தூதர் சேனைகள்
எக்காளம் முழங்க
எந்நாளும் தொனிக்க
எம் மன்னன் பிறந்தார் - 2

1823.பிசாசானவன் தோற்றுப்

1. பிசாசானவன் தோற்றுப்போனவன்
சிலுவையில் அவன் தலை நசுங்கினதே
வல்லமையும் அதிகாரம் நம் கையிலே
சிலுவையில் இயேசு நமக்குத்தந்தார்

2. பிசாசானவன் நம் காலின் கீழே
தேவப் பிள்ளை மேல் அவனுக்கதிகாரமில்லை
ஒன்று சேர்ந்து நாம் இயேசுவை துதிக்கும்போது
அவன் கிரியைகளை நாம் அழித்திடலாம்

3. ஆவியானவர் என்மேலே இருக்கின்றார்
அனுதினமும் என்னை நடத்துகின்றார்
பரிசுத்த அக்கினி எனக்குள்ளே
அனைத்திட யாராலும் முடியாது

4. பிசாசானவன் பொய்யன் தானே
அவனின் வார்த்தைகள் நம்பவேண்டாம்
சத்திய ஆவி நமக்குள்ளே – 2
சகலமும் போதித்து நடத்திடுவார் - 2

E-Min/Waltz/T-000

1824.இஸ்ரவேலின் ராஜாவே

இஸ்ரவேலின் ராஜாவே
என் தேவனாம் கர்த்தரே
நான் உம்மை வாழ்த்துகிறேன்
நன்மைகள் நினைக்கிறேன் - 2

இயேசுவே இயேசுவே
நன்றி நன்றி நாதா
அளவில்லா அன்பிற்காக - 2

1. திருக்கரம் என்னைத் தாங்கி
கடும் பிரச்சனைகளிலும்
முன்னேறி செல்வதற்கு
பெலத்தை நீர் தந்ததற்காய் - 2

இயேசுவே இயேசுவே
நன்றி நன்றி நாதா
அளவில்லா அன்பிற்காக - 2

2. எதிர்கிறவர்கள் முன்பிலும்
தள்ளினவர் மத்தியில்
பந்தி ஆயத்தப்படுத்தி
அன்பாக கனம்பண்ணிணீர் - 2

இயேசுவே இயேசுவே
நன்றி நன்றி நாதா
அளவில்லா அன்பிற்காக - 2

3. என்ன நான் செய்திடுவேன்
ஆயிரம் பாடல்களோ
என் உயிர் காலம் முழுதும்
இரட்சிப்பை உயர்த்திடுவேன் - 2

இயேசுவே இயேசுவே
நன்றி நன்றி நாதா
அளவில்லா அன்பிற்காக - 2

1825.சொந்தம் என்று சொல்லிக்

சொந்தம் என்று சொல்லிக் கொள்ள
உம்மைவிட யாரும் இல்லை
சொத்து என்று அள்ளிக்கொள்ள
உம்மை விட ஏதும் இல்லை

இயேசுவே இயேசுவே எல்லாம் இயேசுவே-2

1. உம் தழும்புகளால்
சுகமானேன்
உம் வார்த்தையினால்
பெலனானேன் - 2

2. உம் கிருபையினால்
நான் பிழைத்துக் கொண்டேன்
உம் பாசத்தினால்
நான் திகைத்துப் போனேன்-2

3. உம் ஆவியினால்
நான் பிறந்துவிட்டேன்
உம் நாமத்திற்காய்
உயிர் வாழ்வேன் -2

F-Maj-2/4-T-100

1826.ஓயாமல் துதிப்போம்

ஓயாமல் துதிப்போம்
காலமெல்லாம் பாடுவோம்
ராஜாதி ராஜாவாம்
இயேசுவையே- என்றும்

பாடு ஓசன்னா ஓசன்னா ஓசன்னா
என்றும் ஓசன்னா ஓசன்னா ஓசன்னா

1. சத்துருவை மிதிப்பாய்
எதரி அடங்குவான்
இயேசுவே ஜெயிப்பார்
ராஜரீகம் பண்ணுவார்
நீயோ கரங்களை தட்டியே
துதித்துக்கொண்டிரு

2. கட்டுகளை அறுப்பார்
சாபங்களை முறிப்பார்
வேதனையை மாற்றுவார்
புதுபெலன் தருவார்
நீயோ கரங்களை அசைத்து
துதித்துக்கொண்டிரு

3. விண்ணப்பத்தைக்கேட்பார்
கிருபையை பொழிவார்
வாக்குத்தத்தம் செய்தார்
நிறைவேற்றி முடிப்பார்
நீயோ கரங்களை உயர்த்தி
துதித்துக்கொண்டிரு

G-Maj-8beat-T-80

1827.எல்லாவற்றிலும் மேலானவர்

எல்லாவற்றிலும் நீர் மேலானவர்
எல்லோரிலும் பெரியவர்
சகலவற்றையும் சிருஷ்டித்தவர்
சர்வத்தில் உயர்ந்தவர்

உம்மைப் போல் ஓர் தெய்வம் இல்லை
நீரே நீர் மாத்திரமே
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே-4
நீரே நீர் மாத்திரமே-2

F-Maj-2/4-T-100

1828.நாங்கள் ஆராதிக்கும் தேவன்

நாங்கள் ஆராதிக்கும் தேவன்
ஜீவனுள்ளவர் ஜீவனுள்ளவர் ஜீவனுள்ளவர்
அவர் நேற்றும் இன்றும் என்றும்
மாறாதவர் மாறாதவர் மாறாதவர்

1. அவர் ஒருவார்த்தை சொன்னால்
காற்றடங்கும் காற்றடங்கும் காற்றடங்கும்
அவர் மறுவார்த்தை சொன்னால்
கடலடங்கும் கடலடங்கும் கடலடங்கும்

மனுசனால் கூடாதது என் தேவனால் கூடுமே
மனுசனால் கூடாதது என் இயேசுவால் கூடுமே

2. அவர் பாடையை தொட்டால் உயிர்பிழைக்கும்
உயிர்பிழைக்கும் உயிர்பிழைக்கும்
அவர் ஆடையை தொட்டால் சுகம்கிடைக்கும்
சுகம்கிடைக்கும் சுகம்கிடைக்கும்

3. அவர் அனுதினம் செய்வார் அதிசயங்கள்
அதிசயங்கள் அதிசயங்கள்
நீ அவரிடம் வந்தால் நீங்கிவிடும்
உன் பயங்கள் உன் பயங்கள்

F-Maj-2/4-T-100

1829.தேவரீர் நீர் சகலமும் செய்ய

தேவரீர் நீர் சகலமும் செய்ய வல்லவர்
தேவனே உமக்கு ஒப்பான தேவன் யார்
நீர் செய்ய நினைத்தது நிறைவேறும்
நீர் செய்வதை தடுப்பவன் யார்

1. தரிசனம் தந்தவர் நீர் அல்லவோ
தவறாமல் நிறைவேற்றி முடிப்பீரே
சவால்கள் என்றும் ஜெயித்திடுவேன்
சர்வ வல்லவர் நீர் தானே

2. தடைகளை உடைப்பவர் நீர் தானே
தடுப்பவர் எவரும் இங்கில்லையே
கடலையும் ஆற்றையும் கடந்திடுவேன்
கன்மலையே உம்மை துதித்திடுவேன்

E-Maj-S.Rock-T-115

1830.உம்மோடு செலவிடும்

உம்மோடு செலவிடும் ஒவ்வொரு நிமிடமும்
வீணாக போகாதையா (என்னை)
பெலவானாய் மாற்றுதையா
ஓ தேவ பிரசன்னம் ஆ என்ன ஆனந்தம்-2
ஆகாயம் கொண்டு செல்லுதே-2 (என்னை)

1. வானத்திலே தூதர் எல்லாம்
பரிசுத்தரே என்று பணிகின்றார்களே
பூமியிலே மண்ணான நான்
உம் நாமம் வாழ்க என்று தொழுகின்றேன் ஐயா

2. தாயானவள் தன் பாலனை
மறந்தாலும் நம்மை மறவாதவரே
தகப்பனைப்போல் இரக்கமுள்ள பரிசுத்தரே
உம்மை துதிக்கிறேன் ஐயா்

3. என் இயேசுவே உம் ஆவியால்
ஒரு விசையாய் என்னை நிரப்பிடும் ஐயா
உலகத்திலே உமக்காக நான்
உயிருள்ள நாள்வரையும் உழைத்திடுவேன் ஐயா

1831.எல்லையற்ற அன்பினாலே்

எல்லையற்ற அன்பினாலே
என்னை அழைத்தார்
எண்ணிலடங்கா நன்மைகளால்
என்னை நிரப்பினார்

துதிப்பேன் போற்றுவேன்
பாடுவேன் கெம்பீரிப்பேன்
ஆ...அல்லேலூயா...ஆ...அல்லேலூயா

1. நீர் செய்த நன்மைகள் ஒவ்வொன்றாய் எண்ணி
நித்தமும் உம்மை நான் துதித்திடுவேன்
இதற்கீடாக நான் என்ன செய்வேன்
என் ஜீவனை பலியாக படைக்கிறேன் நான்

2. உம் அன்பிற்கு இணையேதும் ஒன்றுமே காணேன்
உண்மையாய் உணர ஓர் இதயம் தாரும்
திறந்தருளும் என் மனக்கண்களை
இப்பூவிலே வேறொரு விருப்பமில்லை

3. புழுதியினின்றெம்மை தூக்கியே மீட்டீர்
நறுமணம் நல்கும் நல் மலராக்கினீர்
உம் கல்வாரி அன்பன்றோ மாற்றியது(2)
என் சுயம் வெறுத்து உந்தன் சித்தம் செய்வேன்

1832.நீரே போதும் நீரே போதும்

நீரே போதும் நீரே போதும்
நீரே போதும் இயேசுவே – 2

1. கழுகைப்போல என்னை
எழும்பச் செய்வீர்
உயரங்களில் என்னை பறக்கச் செய்வீர்
- நீரே போதும்

2. சிங்கத்தின் பிள்ளையாய்
என்னை மாற்றினீர்
சாத்தானை ஜெயித்திட
பெலன் அளித்தீர் - நீரே போதும்

3. பணையைப் போல என்னை
செழிக்கச் செய்தீர்
கேதுருப்போல் என்னை வளரச் செய்தீர்
- நீரே போதும்

இயேசு நீரே நீரே போதும்
நீரே போதும் இயேசுவே

1833.வாலாக்காமல் என்னை தலை

வாலாக்காமல் என்னை தலையாக்குவீர்
கீழாக்காமல் என்னை மேலாக்குவீர் - 2

அல்லேலூயா துதி உமக்கே
அல்லேலூயா துதி உமக்கே - 2

1. அரக்கன் கோலியாத்தை
அழிக்கும் வல்லமையை
சிறிய தாவீதுக்குள் வைத்தவரே
ஆடுகள் மேய்த்தவனை
ஜாதிகள் மத்தியிலே
ஊயர்த்தி தூக்கினீரே
மேலே மேலே மேலே மேலே - 2

2. கை நீட்டி தூக்கி விட்டீர்
உயரத்தில் என்னை வைத்தீர்
பிள்ளையாய் மாற்றி விட்டீர் நிரந்தரமாய்
தூசியை தட்டிவிட்டீர்
சாம்பலை நீக்கிவிட்டீர்
சிங்காரம் தந்துவிட்டீர் நிரந்தரமாய் - 2

1834.உம்மை நம்பி வந்தேன்

உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல
உம் தயை என்னை கைவிடல-2
வெறுங்கையாய் நான் கடந்து சென்றேன்
இரு பரிவாரங்கள் எனக்குத் தந்தீர் -2
ஏல்-எல்லோஹே(3) உம்மை துதிப்பேன்

1. காயப்பட்டு நின்றேன் கண்ணீரில் சென்றேன்
கலங்கின எனக்காய் இறங்கி வந்தீர்
உடன்படிக்கை என்னோடு செய்து
இழந்திட்ட யாவையும் திரும்பத் தந்தீர்
ஏல்-எல்லோஹே(3) உம்மை துதிப்பேன்

2. வேண்டினோரெல்லாம் விடைபெற்ற போதும்
வேண்டியதெல்லாம் எனக்குத் தந்தீர்
பரதேசியாய் நான் தங்கினதை
சுதந்திரமாக மாற்றித் தந்தீர்
ஏல்-எல்லோஹே(3) உம்மை துதிப்பேன்

G-Maj-TAB-T-90

1835.திறந்த வாசலை எனக்கு

திறந்த வாசலை எனக்கு முன்னாலே
வைத்தவரே உம்மையே ஆராதிப்பேன்
ஆராதிப்பேன் உம்மை ஆராதிப்பேன்
இன்றும் என்றும் உம்மையே ஆராதிப்பேன்

1.ஒருவரும் பூட்ட முடியாத
வாசலை எனக்காய் திறந்தவரே
வாழ்நாள் எல்லாம் உமக்காகவே-என்
வாழ்ந்திட என்னையும் ஏற்றுக்கொள்ளுமே
ஆராதிப்பேன் உம்மை ஆராதிப்பேன்
வாழ்நாள் எல்லாம் உம்மை ஆராதிப்பேன்

2.மேன்மக்கள் வாசல் வழியாக
நடந்திட சைகை காட்ட சொன்னீர்
ஐசுவரியத்தின் வாசல்களை - உம்
திறந்த வாசலாய் எனக்கு வைத்தீரே
ஆராதிப்பேன் உம்மை ஆராதிப்பேன்
திறந்த வாசலுக்காய் உம்மை ஆராதிப்பேன்

3.வெண்கல கதவை உடைப்பவரே
இருப்புத் தாழ்ப்பாளை முறிப்பவரே
கோணலானதை செவ்வையாக்கியே
பெயர் சொல்லி என்னையும் அழைத்துக் கொண்டீரே
ஆராதிப்பேன் உம்மை ஆராதிப்பேன்
பெயர்சொல்லி அழைத்ததால் ஆராதிப்பேன்

4.சுகம் தரும் பெதஸ்தா குளத்தினையே
தினம் தினம் எனக்காக திறந்தவரே (கலக்குவீரே)
வார்த்தையென்னும் மருந்தாலே- உம்
சுகம் தந்து என்னையும் காத்து வந்தீரே
ஆராதிப்பேன் உம்மை ஆராதிப்பேன்
சுகம் தந்ததால் உம்மை ஆராதிப்பேன்

5.உள்ளங்கையில் என்னை வரைந்தவரே
உமக்காக என்னையும் தெரிந்தவரே
உயிருள்ள வரையிலும் உமக்காக-என்
உழைத்திட என்னையும் ஏற்றுக்கொள்ளுமே
ஆராதிப்பேன் உம்மை ஆராதிப்பேன்
உயிருள்ள வரையிலும் ஆராதிப்பேன்

6.பரலோக வாழ்வை கண்டடைய
நானே வாசல் என்றவரே
உங்க வழியில் நான் நடந்து-தினம்
பரலோகம் வந்து மகிழ்ந்திடுவேன்
ஆராதிப்பேன் உம்மை ஆராதிப்பேன்
பரலோகம் வந்தும்மை ஆராதிப்பேன்

1836.என்னை நடத்திடும் தேவன்

என்னை நடத்திடும் தேவன் என்னோடு இருக்க
பயமே எனக்கில்லையே
நான் நம்பிடும் தேவன் என் துருகமாய் இருப்பதால்
கலக்கம் எனக்கில்லையே

பயமில்லை பயமில்லை பயமில்லையே
நம் சார்பில் கர்த்தருண்டு பயமில்லையே
பயமில்லை பயமில்லை பயமில்லையே
நமக்காக யுத்தம் செய்வார் பயமில்லையே - 2

1.சிறுகூட்டமே நீ பயப்படாதே
கர்த்தர் என்றும் சம் துணை நிற்கிறார்
எதிரிகள் வெள்ளம்போல் எதிராக வந்தாலும்
ஆவியானர் கொடியேற்றுவார்

2.பாதைகள் எனறும் தடைக்கற்களோ
தாமதம் மட்டும் பதிலானதோ - 2
நேர்வழியாய் நம்மை நடத்திடும் தேவன்
நிச்சயம் நடத்துவார் பயமில்லையே - 2

1837.சந்தோஷமாய் புதிய ஆண்டிலே

சந்தோஷமாய் புதிய ஆண்டிலே
ஆடிப்பாடியே அவரைப் போற்றுவோம்
ஆனந்தமே அல்லேலூயா - 2

1. ஜாதிகளும் நீதியை(யும்) காண்பார்
உந்தன் மகிமையை இராஜாக்கள் காண்பார்
புதிய நாமம் தரித்து அவர்
புதிய நன்மை அளித்திடுவார் - 2
உன்னை உயர்த்தி மகிழ்ந்திடுவார் (இயேசு) - 2

சந்தோஷமாய் புதிய ஆண்டிலே
ஆடிப்பாடியே அவரைப் போற்றுவோம்
ஆனந்தமே அல்லேலூயா - 2

2. நன்மை செய்யும் இயேசு தேவன் அவரே
உன்னை நானிலத்தில் வாழவைக்கும் தேவன்
அலங்கார மகுடமாவாய்
அவர் செய்யும் இராஜமுடி - 2
உன்னை மேன்மைப் படுத்திடுவார் - 2

1838.என் சிறுமையை கண்ணோக்கி

என் சிறுமையை கண்ணோக்கி பார்த்தவர் நீா
என் எளிமையை கைதூக்கி எடுத்தவர் நீர்

துரத்தப்பட்ட என்னை
மீண்டும் சேர்த்துக் கொண்டீர்
ஒதுக்கப்பட்ட என்னை
பெரிய ஜாதியாய் மாற்றினீர்

ஓ ஓ ஏல் லகாய் ரோயீ
என்னைக் காண்கின்ற தேவன் நீர்
ஏல் லகாய் ரோயீ
எங்கள் ஜீவ நீர் ஊற்று நீர்

1. வனாந்திரம் என் வாழ்வானதே
பாதைகள் எங்கும் இருளானதே
எந்தன் அழுகுரல் கேட்டு
நீர் ஊற்றாய் வந்தவரே

2. புறஜாதி என்னைத் தேடி வந்தீர்
சுதந்திரவாளியாய் மாற்றி விட்டீர்
வாக்குத்தத்தம் செய்தீர்
நீர் சொன்னதை நிறைவேற்றினீர்

Em-S.Rock(2/4)-T-100

1839.இதுவரை நடத்தி குறைவின்றி

இதுவரை நடத்தி குறைவின்றிக் காத்து
மகிழ்வைத் தந்தீரே நன்றி ஐயா

1. தண்ணீரைக் கடந்தேன் சோதனை ஜெயித்தேன்
மதிலைத் தாண்டினேன் உம் பெலத்தால்

நன்றி ஐயா நன்றி ஐயா
உம்மை உயர்த்திடுவேன்-2

2. ஆபத்து நாளில் அனுகூலமான
துணையுமானீரே நன்றி ஐயா

3. உம்கரம் நீட்டி ஆசீர்வதித்து
எல்லையைப் பெருக்கினீர் நன்றி ஐயா

4. அபிஷேகம் தந்து வரங்களை ஈந்து
பயன்படச் செய்தீரே நன்றி ஐயா

5. கிருபைகள் தந்து ஊழியம் தந்து
உயர்த்தி வைத்தீரே நன்றி ஐயா

1840.அலங்கார வாசலிலே

அலங்கார வாசலிலே
பிரவேசிக்க வந்து நிற்கிறோம்
தேவ வீட்டின் நன்மையாலே
நிரம்பிட வந்து நிற்கிறோம் (2)

ஆராதிக்க வந்தோம் அன்புகூற வந்தோம்
யெகோவா தேவனையே
துதித்திட வந்தோம் தொழுதிட வந்தோம்
தூயவர் இயேசுவையே (2)

1. ஆலயம் செல்லுவதே
அது மகிழ்ச்சியைத் தந்திடுதே (2)
என் சபையுடனே உம்மைத் துதித்திடவே
கிருபையும் கிடைத்திட்டதே (2)

2. பலிகளை செலுத்திடவே
ஜீவ பலியாக மாறிடவே (2)
மறுரூபத்தின் இதயத்தை தந்தீரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே (2)

3. நன்மை செய்தவர்க்கே
நன்றியை செலுத்துவோமே (2)
எம் காணிக்கையை உம் கரங்களிலே
உற்சாகமாய் விதைக்கிறோமே (2)

1841.ஆவியானவரே எங்கள்

ஆவியானவரே எங்கள் ஆவியானவரே
உந்தன் கனிகளினால் என்னை நிரப்பிடுங்க

விசுவாசத்தால் கிருபை கொண்டு
என்னை இரட்சித்த தேவன் நீரே

1. அன்பு சந்தோசம் அமைதி வாழ்வினையும்
எந்தன் வாழ்வினிலே என்றும் தந்திடுங்க

2. நீடியபொறுமை தயவுடனே நற்குணம்
என் வாழ்வில் நிரம்பட்டுமே

3. விசுவாசம் சாந்தம் இச்சையடக்கம்
உயிருள்ளவரையிலும் எனக்கு தாரும்.

F-Maj/Tabla 6/8/T-101

1842. உன்னத தேவனுக்கு மகிமை

உன்னத தேவனுக்கு மகிமை செலுத்துங்க
வானிலும் பூமியிலும் உயர்ந்த ராஜனுக்கு

1. உம் நாமம் பாட பாட
   உள்ளத்தில் சந்தோஷம் பொங்குதம்மா-2
   உம் நாமம் துதிக்க துதிக்க
   தடைகளெல்லாம் நீங்குதய்யா-2

அல்லேலுயா அல்லேலுயா அல்லேலுயா (3)

2. பூமியின் குடிகளெல்லாம்
   பணிந்து துதித்து பாடிடுங்க-2
   அதிசயமானவர் அவர்
   வல்லமையுள்ள தேவனவர்-2
   (அல்லேலுயா)
3. சேரக்கூடா ஒளியினிலே
   வாசம் செய்யும் தெய்வமவர்-2
   நீதியின் சூரியனவர்
   செட்டைகளின் கீழ் ஆரோக்கியம்-2
   (அல்லேலுயா)

F-Maj/Sloe Rock/T-115

1843.நீரே என் பெலன்

நீரே என் பெலன் நீர் என் அடைக்கலம்
ஆபத்துக் காலத்தில் என் துணை
சுற்றி நின்று என்னைக் காக்கும் கன்மலை-2
- நீரே என்

1. யாக்கோபின் தேவனே என் அடைக்கலம்
யெகோவா தேவனே என் பெலம் - 2
கலக்கமில்ல பயங்களில்ல வாழ்விலே
நான் இருப்பதோ கர்த்தரின் கரத்திலே - 2
- நீரே என்

2. அமர்ந்திருந்து தேவனை நான் அறிகிறேன்
அவர் கரத்தில் வலிமை நித்தம் பார்க்கிறேன்-2
தாய்ப்பறவை செட்டை கொண்டு மூடியே
கண்மணிப் போல் என்னைப் பாதுகாக்கிறீர்-2
- நீரே என்

3. பசும்புல் வெளியில் என்னை தினம் மேய்க்கிறீர்
அமர்ந்த தண்ணீர் ஊற்றில் தாகம் தீர்க்கிறீர்-2
சத்துருவின் கண்கள் காண எண்ணெயால்
என் தலையை அபிஷேகம் செய்கிறீர் - 2
- நீரே என்

D-Maj/Jive 6/8/T-110

1844.வாழ்வு தந்த வள்ளலே வாழ்க

வாழ்வு தந்த வள்ளலே வாழ்க வாழ்க
என்னை வாழ வைத்த இயேசுவே வாழ்க வாழ்க
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க - 2
இன்றும் வாழ்க நீர் என்றும் வாழ்க

1. பாவம் போக்கிய பரிசுத்தரே வாழ்க வாழ்க
வியாதி தீர்த்த வைத்தியரே வாழ்க வாழ்க

2. தேடி வந்த தெய்வமே வாழ்க வாழ்க
தேற்றுகின்ற தேவனே வாழ்க வாழ்க

3. ஜீவன் தந்த தேவனே வாழ்க வாழ்க
ஜீவிக்கின்ற இயேசுவே வாழ்க வாழ்க

4. வல்லமை தந்தவரே வாழ்க வாழ்க
வரங்களாலே நிறைத்தவரே வாழ்க வாழ்க

1845.பலத்தினாலும் அல்ல

பலத்தினாலும் அல்ல பராக்கிரமம் அல்ல
ஆவியினால் எல்லாம் ஆகும்

1. செங்கடலைக் கடந்திடுவோம்
எரிகோவைக் தகர்த்திடுவோம்
கால்மிதிக்கும் தேசம் சுதந்தரிப்போம்
ஜெயத்தின் மேல் ஜெயம் எடுப்போம்

2. துக்கத்தில் என் ஆறுதல் அவர்
துன்பத்தில் துணை அவரே
பக்கத்திலே ஆயிரம் பேர் விழுந்தாலும்
பாதுகாக்கும் துணை அவரே

3. விழித்தெழு விசுவாசியே
ஒற்றுமையாய் செயல்படுவோம்
மகிமையான ஊழியம் தந்திடுவார்
மகிழ்ச்சியோடு ஆராதிப்போம்

4. பயப்படாதே விசுவாசியே
இயேசு ராஜா முன்னே செல்கிறார்
வெண்கல கதவுகளை உடைத்திடுவார்
பொக்கிஷங்கள் தந்திடுவார்

5. ஆவியினால் பெலனடைவோம்
இலக்கை நோக்கி ஓடிடுவோம்
மணவாட்டி சபையே ஆயத்தப்படு
மணவாளன் வருகின்றார்

000/000000/T-000

1846.இயேசு இயேசு இயேசு ராஜாவே

1. இயேசு இயேசு இயேசு ராஜாவே - 4
   இயேசு இயேசு இயேசு
   இயேசு இயேசு ராஜாவே - 2

2. துதித்து துதித்து துதித்து பாடுவோம் - 4
   துதித்து துதித்து துதித்து
   துதித்து பாடுவோம் - 2

3. நன்றி நன்றி நன்றி இயேசுவே - 4
   நன்றி நன்றி நன்றி
   நன்றி இயேசுவே - 2

4. பாடிப் பாடி நடனமாடுவோம் - 4
   பாடிப் பாடி பாடி பாடி
   நடனமாடுவோம் - 2

5. இரத்தம் இரத்தம் இரத்தம் ஜெயமே - 4
   இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்
   இரத்தம் ஜெயமே - 2

1847.பெருக்கத்தின் தேவனே

பெருக்கத்தின் தேவனே
என்னைப் பெருகிட செளிணியுமே
வளர்ச்சியின் தேவனே
என்னை வளர்ந்திட செளிணியுமே

பெருகுவேன் (2) வளருவேன் (2)
தேசத்தை நான் சுதந்தரிப்பேன்

1. அன்பின் தேவனே அனைத்து நடத்துமே
கிருபையின் தேவனே கிருபையால் நடத்துமே

2. இரங்கும் தேவனே கண்ணீர் துடைத்து நடத்துமே
சுமக்கும் தேவனே தாங்கி நடத்துமே

3. பெலப்படுத்தும் தேவனே பெலன் தந்து நடத்துமே
பரிகாரி தேவனே சுகம் தந்து நடத்துமே

4. உருவாக்கும் தேவனே உருவாக்கி நடத்துமே
போஷிக்கும் தேவனே போஷித்து நடத்துமே

5. போதிக்கும் தேவனே போதித்து நடத்துமே
உயர்த்தும் தேவனே உயர்த்தி நடத்துமே

6. மகிமையின் தேவனே மகிமையாய் நடத்துமே
வரப்போகும் தேவனே பரத்தில் சேர்ப்பீரே

D-Maj/R.Rock 2/4/T-155

1848.ஜெபிக்க ஜெபிக்க மனம்

ஜெபிக்க ஜெபிக்க மனம் புத்த புதிய
நல்ல இருதயமாய் மாறும்
துதிக்க துதிக்க மனபாரம் நீங்கி
நம் துக்கமெல்லாம் தீரும்
கவலையெல்லாம் மறையும்
கண்ணீரெல்லாம் தீரும்
கழுகுபோலப் புதுபெலனடைந்து
நம்மை பெலவானாய் மாற்றும்.

1.இடைவிடா ஜெபத்தினால்
பெரும் தடைகளைத் தகர்த்திடலாம்
நாம் கருத்துடன் ஜெபிப்பதினால்
நம் கண்ணீரைத் துடைத்திடலாம்
ஊக்கமான ஜெபம் ஏக்கங்கள் தீர்க்கும்
வெற்றியைத் தந்திடும்
புது மனிதனாக்கி நல்கிருபைகள் தந்து
மகிமையில் சேர்த்திடும்
பெலவானாய் மாற்றிடும் சுகத்தைத் தந்திடும்.

2.ஜெபத்தின் வல்லமையால்
நாம் சாத்தானை வென்றிடலாம்
துதியின் வல்லமையால்
பெரும் சதிகளை முறித்திடலாம்
ஜெபிக்கிற மனிதன் வெற்றியைப்
பெறுவான் தோல்விக்கு அஞ்சிடான்
கரடு முரடான வாழ்வைக் கூட
இலகுவாயக் கடந்திடுவான்
கலங்கி நின்றிடான்.

1849.பெரிய காரியங்கள் செய்யும்

பெரிய காரியங்கள் செய்யும் வல்லதேவனை
களிகூர்ந்து துதித்திடுவேன்
துதித்திடுவேன் புகழ்ந்திடுவேன்
வல்லவரை ஆராதிப்பேன்

1. நினைப்பதற்கும் வேண்டுவதற்கும்
மிகவும் அதிகமாய் செய்ய வல்லவரே
உம் விருப்பம் போல் என்னை ஆசீர்வதித்திடும்
உண்மையுடன் ஆராதிப்பேன்.

2. செய்ய நினைத்ததை தடைபடாமல்
செய்திடும் சர்வ வல்லவர்
ஆவியினாலே எல்லாம் ஆகுதே
ஆவியுடன் அராதிப்பேன்.

E-Maj/000000/T-110

1850.ஆராய்ந்து முடியாத

ஆராய்ந்து முடியாத
ஆற்புதங்கள் செய்யும் தேவனே
எண்ணி முடியா அதிசயங்கள்
செய்திடும் எங்கள் தேவனே
இருந்தவர் இருப்பவர் வருகின்றவர்
நேற்றும் இன்றும் என்றுமே மாறிடாதவர்

1. அவர் ஒருவரே வானங்களை விரித்தவர்
கடலின் அலை மேலே நடப்பவர்
நீ போகும் பாதையை அறிந்தவர்-உன்னை
தப்புவிக்க வேகமே வருபவர்.

2. இயேசுவே உன்னதமானவர்
சமாதானம் உனக்குத் தருபவர்
சதாகாலம் உன்னோடு இருப்பவர்
சாத்தானை காலின் தந்தவர்.

1851.நீர் எங்கள் மீட்பர்

1. நீர் எங்கள் மீட்பர் நீர் எங்கள் நேசர்
நீர் எங்கள் மேய்ப்பர் பரிசுத்தர்-2
பரிசுத்தர் பரிசுத்தர்
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் - 2

2. நீர் எங்கள் நம்பிக்கை நீர் எங்கள் வல்லமை
நீர் எங்கள் மகிமை ஒப்பற்றவர் - 2
ஒப்பற்றவர் ஒப்பற்றவர்
சேனைகளின் கர்த்தர் ஒப்பற்றவர் - 2

3. நீர் எங்கள் அன்பர் நீர் எங்கள் நண்பர்
நீர் எங்கள் வாழக்கை அன்புள்ளவர் - 2
அன்புள்ளவர் அன்புள்ளவர்
சேனைகளின் கர்த்தர் அன்புள்ளவர் - 2

1852.உங்க வசனம் மனமகிழ்ச்சியாய்

உங்க வசனம் மனமகிழ்ச்சியாய் இல்லாமற்போனா
என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன் - 2
பாதைக்கு வெளிச்சமல்லோ பேதைக்கு தீபமல்லோ-2

1. மரண இருளில் நடக்கின்றபோது
கோலும் தடியுமாக தேற்றுதய்யா உம் வசனம்-2
துன்பத்தின் பாதையிலே நடக்கின்றபோது -2
உயிர்ப்பித்து உயர்த்துதய்யா உம் வசனம்தானய்யா-2

2. உமது வேதத்தை இரவும் பகலும்
தியானம் செய்வதினால் பாக்கியமாய் உயர்த்துதய்யா-2
பச்சையான மரமாக இலையுதிராமல் - 2
காலமெல்லாம் கனிகொடுத்து
உயர்த்துதய்யா உம் வசனம்-2

3. உமது வசனம் உட்கொள்ளும்போது
இதயம் அனலாக கொளுந்துவிட்டு எரியுதய்யா -2
உலர்ந்த எலும்பெல்லாம் உயிர்ப்பித்து எழும்புதய்யா-2
சேனையாய் எழும்பி நின்று
சத்துருவைத் துரத்துதய்யா-2

1853.ஆராதனைக்கு உரியவர்

ஆராதனைக்கு உரியவர்
ஆராதனைக்குப் பாத்திரர் - 2
ஆராதனை நாயகர் - 2
நான் ஆராதிப்பேன் என் இயேசுவை - 2

1.செங்கடல் பிளந்து வழிகொடுத்தார்
சத்தமாய் துதித்திடுவேன் - 2
யோர்தானை உடைத்து கானான் தந்தார் - 2
யேகோவாவை துதித்திடுவேன் - 2

2.மகிமை துறந்து மண்ணில் வந்தார்
மன்னனைத் துதித்திடுவேன் - 2
என் வாழ்வின் பிரச்சனைகள் புரிந்து கொள்வார்-2
பிரதான ஆசாரியரே - மகா (2)

3.கல்லறைத் திறந்து உயிர்த்தெழுந்தார்
கர்த்தரைத் துதித்திடுவேன் - 2
பிதாவின் வலப்பக்கம் சென்றமர்ந்தார் - 2
ராஜாவைத் துதித்திடுவேன் - இயேசு (2)

1854.ஓசையுள்ள கைத்தாளம்

ஓசையுள்ள கைத்தாளம் போடுங்க
உற்சாகமாய் நடனமாடுங்க
நடனமாடுங்க நடனமாடுங்க
நன்றிசொல்லி நன்றிசொல்லி நடனமாடுங்க

1. உடன்படிக்கை பெட்டியின் முன்பு
அன்று தாவீது நடனமாடினான் - 2
சுரமண்டல வாத்தியத்தோடு
அவன் சுழன்று சுழன்று நடனமாடினான் - 2
நடனமாடுங்க நடனமாடுங்க - உங்க
கவலைகளை மறந்துவிட்டு நடனமாடுங்க -2

2. நடனமாடித் துதிக்கிற போது
அட நம்மை நெருக்கும் நுகங்களும் ஏது - 2
துள்ளித் துள்ளி துதிக்கிற போது
நம்மைத் தொட்டுப்பார்க்கும் எதிரிகள் யாரு-2
நடனமாடுங்க நடனமாடுங்க - உங்க
தோல்விகளை உதறிவிட்டு நடனமாடுங்க -2

3. ஆடிப்பாடித் துதிக்கிறபோது
அசுத்த ஆவிகளும் ஓடுது பாரு - 2
எக்காளங்கள் முழங்கிடும் போது
எரிகோ கோட்டைகளும் நொறுங்குது பாரு-2
நடனமாடுங்க நடனமாடுங்க - அந்த
மிரியாமைப் போல நடனமாடுங்க -2

1855.என் சமூகம் உன் முன்

என் சமூகம் உன் முன் சென்றிடும்
இளைப்பாறுதல் நான் தந்திடுவேன்
கலங்கிடாதே பயப்படாதே
கரம்பிடித்து உன்னை நடத்திடுவார்

1. செங்கடல் உனக்காய் வழிதிறக்கும்
சாத்தானின் சேனைகள் அழிந்து போகும்
யோர்தான் நதியும் விலகியோடும்
ஜீவ வாசல் உன்னை வரவேற்கும்

2. வாதை உன் கூடாரம் அணுகிடாது
வழிகளிலெல்லாம் தூதர் காத்திடுவார்
பாதங்கள் கல்லில் இடறாது
தூதர்கள் கைகளில் ஏந்திச் செல்வார்

3. மாராவும் உனக்காய் மதுரமாகும்
எரிகோ கோட்டையும் இடிந்து விழும்
சூரியன் சந்திரன் தரித்து நிற்கும்
ஜீவஒளி உன்னை நடத்திச் செல்லும்

4. பகைவர்கள் நல்லோராய் மாறிடுவார்
வெறுத்தோர் உன்னை வரவேற்பார்
கோணலான எல்லாம் செவ்வையாகும்
மகிழ்வுடன் என்றும் வாழ்ந்திருப்பாய்.

1856.வழி சொன்னவர்

வழி சொன்னவர் வழியுமானவர்
வழியும் சத்தியமும் ஜீவனுமாய் வந்தவர்
வார்த்தை என்றவர் வார்த்தையானவர்
உலகினிலே ஒளியாக வந்தவர்

மண்ணோர் போற்றும் மன்னாதி மன்னன்
விண்ணோர் போற்றும் ராஜாதி ராஜன்
சான்றோர் போற்றும் தூயாதி தூயன்
ராஜாதி ராஜன் இவர் - 4

1. இயேசுவே தெய்வம் ஒரே ஒரு தெய்வம்
இயேசுவே தேவன் மெய்யான தேவன்
இயேசுவே தெய்வம் தேடி வந்த தெய்வம்
இயேசுவே தேவன் மீட்க வந்த தேவன்
இயேசுவே ராஜா ராஜாதி ராஜா - 2

2. இயேசுவே இரட்சகர் உயிர் தந்த இரட்சகர்
இயேசுவே ஆண்டவர் உயிர்த்தெழுந்த ஆண்டவர்
இயேசுவே கர்த்தராம் கர்த்தாதி கர்த்தராம்
இயேசுவே ராஜனாம் ராஜாதி ராஜனாம்
இயேசுவே ராஜா ராஜாதி ராஜா - 2

1857.ஆவியை அருளுமே சுவாமி

ஆவியை அருளுமே சுவாமி - எனக்காய்
உயிர்கொடுத்த வானத்தினரசே

1. நற்கனி தேடிவரும் காலங்களல்லவோ
நானொரு கனியற்ற பாழ்மரமல்லவோ
முற்கனி முகங்காணா வெம்பயிரல்லவோ
முழுநெஞ்சம் விளைவற்ற உவர்நிலமல்லவோ

2. பாவிக்கு ஆவியின் கனியெனும் சிநேகம்
பரம சந்தோஷம் நீடிய சாந்தம்
தேவ சமாதானம் நற்குணம் தயவு
திட விசுவாசம் சிறிதெனுமில்லை

3. தீபத்துக்கெண்ணையை சீக்கிரமூற்றும்
திரியவியாமலே தீண்டியே போற்றும்
பாவ அசூசங்கள் விலக்கியே மாற்றும்
பரிசுத்தவரத் தந்தென் குறைகளைத் தீரும்

1858.மேலே வானத்திலும்

மேலே வானத்திலும் கீழே பூமியிலும்
அதிகாரம் நமக்கு உண்டு - 2
அவர் நாமம் இயேசு ராஜா - ஆமென் - 2

1. புறப்பட்டுப் போங்கள் என்றார்
புறப்படுவோம் தேவ ஜனமே
ஜனங்களை ஆதாயம் செய்து
அவரண்டை நடத்திடுவோம் - 2

அதிகாரம் நமக்குத் தந்தார் இயேசு
அதிகாரம் நமக்குத் தந்தார்

2. உலகின் இறுதி நாள் வரைக்கும்
நம்மை நடத்திடுவார்
வாக்குகள் உரைத்த நம் தேவன்
வார்த்தையை காத்திடுவார் - 2

3. பரிசுத்த ஆவியால் நிறைந்து
சாட்சியாய் வாழ்ந்திடுவோம்
உலகம் முழுவதும் சென்று
ஊழியம் செய்திடுவோம்

1859.கொண்டுவாருங்கள்

1. கொண்டுவாருங்கள் கொண்டுவாருங்கள்
என் மக்களை என் பக்கமாக கொண்டுவாருங்கள்
ஆற்றித்தேற்றுங்கள் ஆசீர்வதியுங்கள்
வாழப்பிறந்த மனிதர்களைக் கொண்டுவாருங்கள்

குற்ற உணர்வைக் கொல்லும் உணர்வு கொண்டுவாருங்கள்
சுத்தம் செய்யும் எந்தன் இரத்தம் கொண்டுவாருங்கள்
தாகம் உள்ளோர் அனைவரையும் கொண்டுவாருங்கள்
பாவம் தீர்க்கும் சிலுவைப்பக்கம் கொண்டுவாருங்கள்

2. மதமாற்றம் வேண்டாம் மனமாற்றம் தேவை
விரும்பி வரும் ஜனங்கள் மட்டும் கொண்டுவாருங்கள்
வருகை வரும் வரை கிருபை சிலுவையில்
வாழப்பிறந்த மனிதர்களைக் கொண்டுவாருங்கள்

3. என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டவன்
வருந்தி வாழும் ஜனங்கள் யாரும் கொண்டுவாருங்கள்
வரும் எவரையும் தள்ளவே மாட்டேன்
வாழப்பிறந்த மனிதர்களைக் கொண்டுவாருங்கள்

4. பொறுப்பை உணர்ந்தோரே திருச்சபையாரே
தீவிரமாய் ஓடிச்சென்று கொண்டுவாருங்கள்
அனுப்பத் தகுதியோ ஆட்கள் இல்லையே
காலம் சிறிது கடமை பெரிது கொண்டுவாருங்கள்

E-Maj/000000/T-110

1860.எருசலமே கர்த்தரை ஸ்தோத்தரி

எருசலமே கர்த்தரை ஸ்தோத்தரி
சீயோனே உன் தேவனைத் துதி
துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது

1. துதிகளிலே வாசம் செய்யும் இயேசு பெரியவர்
துதிப்பதினால் எரிகோ கோட்டை இடிந்து விழுமே-2
சத்துருவை மேற்கொள்ளும் துதியின் வல்லமை
சாத்தானை ஓடவைக்கும் துதியின் ஆயுதம்-2

2. துதி நிறைந்த உள்ளம் மகிழ்ந்து பாடுமே
துதிக்கின்ற குடும்பம் செழித்து வாழுமே-2
துதி நிறைந்த ஆராதனை ஆசீர்வாதமே
துதியுள்ள சபைகள் வளர்ந்து பெருகுமே-2

1861.உலகமாம் பெருங்கடலில்

உலகமாம் பெருங்கடலில்
உல்லாசமாய் என் படகு
இயேசு நாதருடன் இன்பமாக ஓடுதுபார்
அல்லேலூயா(6) ஓசன்னா (3)

1. எத்தனை முறை புயல் வந்தது
அத்தனை முறையும் இருள் சூழ்ந்தது - 2
கர்த்தர் இயேசு இருப்பதால்
கவிழ்ந்திடாமல் ஓடுது - 2

2. சோதனைகள் பலமாய் வந்தது
வேதனையால் மனமும் தளர்ந்தது - 2
போதனையால் தேற்றினார்
சாதனையாய் ஓடுது - 2

3. அலைகள் வந்து மூழ்கப்பார்த்தது
மலைபோல உயர்ந்து நின்றது - 2
ஜெபத்தோடு சென்றதால்
ஜெயமாய் இன்னும் ஓடுது - 2

1862.பெலத்தினாலுமல்ல

பெலத்தினாலுமல்ல பராக்கிரமுமல்ல
ஆவியாலே என்றும் ஜெயம் வந்திடும்

1. குதிரை என்பது யுத்த நாளுக்காய்
ஆயத்தமாக்கப் பட்டிருந்தாலும் - 2
ஜெயத்தைத் தருபவர் இயேசுவல்லவா - 2
அவரின் பாதத்தை முத்தம் செய்யுங்கள்

2. கிழக்கு மேற்கிலும் தெற்கு வடக்கிலும்
நம்பும் திசைகளில் ஜெயம் வராதே - 2
ஜெயத்தைத் தருபவர் இயேசுவல்லவா - 2
அவரின் பாதையில் என்றும் நடப்போம்

3. மனுஷன் முகத்தைப் பார்த்து நடந்தால்
முடிவிலே உன்னை வெட்கப்படுத்தும் - 2
ஜெயத்தைத் தருபவர் இயேசுவல்லவா - 2
அவரின் ஒளியிலேஎன்றும் வாழ்வோம்

1863.ஆவியாய் என் நடுவில்

ஆவியாய் என் நடுவில்
வாசம் செய்யும் தேவனே - ஆயிரம்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் தேவ தேவனுக்கு
ஸ்தோத்திரம் இயேசு ராஜனுக்கு
ஸ்தோத்திரம் ஆவியானவர்க்கு - 2

1. கர்த்தவே என்னை நீரே
ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்
உட்கார்ந்து எழுந்திருந்தாலும்
நினைவுகளை முன்னே அறிகிறீர்
ஆவிக்கு மறைவாக எங்கே நான் போவேன்
உமது சமூகம் விட்டு எங்கே ஓடுவேன்

2. நடந்தாலும் படுத்திருந்தாலும்
என்னை சூழ்ந்திருக்கின்றீர்
என் நாவில் சொல் வருமுன்னே
கர்த்தர் நீர் அறிந்திருக்கிறீர்
முற்புறமும் பின்புறமும் நீர் என்னை நெருக்கி
உமது வல்ல கரத்தை என்மேல் வைக்கிறீர்

1864.ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் பாடிடுவோம்
இயேசுவின் நாமத்தில் கூடிடுவோம் - 2

1. கண்ணுறங்காமலே இராமுழுவதும்
கண்மணிபோல் நம்மை காத்தனரே - 2
இயேசு நல்லவர் என்றும் வல்லவர்
அல்லேலூயா துதி சாற்றிடுவோம் - 2

2. கூப்பிடும் ஏழை எளியவர்க்கும்
மாறாமல் பதிலைத் தருபவரே - 2
இயேசு நல்லவர் என்றும் வல்லவர்
ஓசன்னா கீதங்கள் முழங்கிடுவோம் - 2

3. ஆபத்துக் காலத்தில் அடைக்கலமும்
அனுகூலமான துணையவரே - 2
இயேசு நல்லவர் என்றும் வல்லவர்
மகிழ்ந்து தினமும் போற்றிடுவோம் -2

1865.ஆராதனை உமக்குத்தான்

ஆராதனை உமக்குத்தான்
அப்பா அப்பா உமக்குத்தான் - 2
எஜமான் நீர் இருக்க
அடிமை நான் ஆராதிக்க - 2
இரத்த்தால் கழுவி என்னை
சுத்தமாக மாற்றினீரே - 2

1. சாரோனின் ரோஜாவே
பூத்துக்குழுங்கும் வாசனையே
உம்மைப் போல மணம் வீச
யாருண்டு உலகினிலே - 2

2. சீலோவாம் குளத்தினிலே
கழுவும் போது கண்திறந்தீர்
எப்பத்தா என்று சொல்லி
செவிகளையே திறந்துவிட்டீர் - 2

3. அப்பாவின் பாதத்தில் நான்
அமர்ந்திருந்து பெலனடைந்து
கழுகுபோல் சிறகடித்து
உயர உயர பறந்திடுவேன் - 2

1866.எந்தன் நேசர் இயேசுவை

எந்தன் நேசர் இயேசுவை நான் ஆராதிப்பேன்
என்னைத் தேடி வந்தவரை ஆராதிப்பேன் - 2
எந்தன் பாவம் போக்கியவரை ஆராதிப்பேன்
என்னோடு இருப்பவரை ஆராதிப்பேன் - 2
ஆராதிப்பேன் ஆராதிப்பேன் ஆராதிப்பேன் - 12

1. கைகளை நான் உயர்த்தி உயர்த்தி ஆராதிப்பேன்
கரங்களை நான் தட்டி தட்டி ஆராதிப்பேன் - 2
கால்களாலே நடனமாடி ஆராதிப்பேன்
கண்களை மூடியே உம்மை ஆராதிப்பேன் - 2

2. தூதரோடு சேர்ந்து உம்மை ஆராதிப்பேன்
துதிகளாலே நிறைந்து நிறைந்து ஆராதிப்பேன் - 2
பாடல் பாடி பரிசுத்தரை ஆராதிப்பேன்
பரலோக தேவனை நான் ஆராதிப்பேன் - 2

3. கவலைகளை மறந்து உம்மை ஆராதிப்பேன்
கண்ணீரைத் துடைத்தவரை ஆராதிப்பேன் - 2
தேவைகளை சந்ததித்தவரை ஆராதிப்பேன்
தினந்தோறும் காப்பவரை ஆராதிப்பேன் - 2

1867.சீயோன் தேசத்தில் நான்

சீயோன் தேசத்தில் நான் மகிழ்ந்திருந்து
சேனைகளின் கர்த்தரோடு வாழ்ந்திருப்பேன்-2

1. கவலையில்லை அங்கு கண்ணீரில்லை
வருத்தமும் பசியும் அங்கு இல்லை-2
ஆட்டுக்குட்டியானவர் என்னை மேய்த்து
ஜீவத்தண்ணீர் ஊற்றண்டை நடத்திடுவார்-2

2. மரணமில்லை அங்கு துக்கமில்லை
அலறுதல் சத்தமும் அங்கு இல்லை-2
கர்த்தரேசு எந்தன் கண்ணீர் துடைத்து
ஜீவ விருட்சக் கனி தந்து நடத்திடுவார்-2

3. பாவமில்லை அங்கு சாபமில்லை
சூரிய சந்திரன் அங்கு இல்லை-2
ஆட்டுக்குட்டியானவர் வெளிச்சத்திலே
ஆடிப்பாடி என்றும் மகிழ்ந்திருப்பேன்-2

E-Maj/000000/T-110

1868.என் அன்பின் இயேசு ராஜா

என் அன்பின் இயேசு ராஜா
உம்மையே என்றும் துதிப்பேன்
நடனங்களால் கீதங்களால்
நாளெல்லாம் புதுப்பாட்டு
நான் பாடி மகிழ்ந்திடுவேன்

1. அந்தி சந்தி மத்தியான
வேளைகளில் உம்மைத் துதிப்பேன்
உம் நாமம் வல்லமை உள்ளதென்று
ஊரெல்லாம் சொல்லி வருவேன்

2. புதுகிருபை தருபவரே
உம்மையே என்றும் துதிப்பேன்
என் தலையை எண்ணெயினால்
அபிஷேகம் செய்பவரே
உம்மையே பாடி மகிழ்வேன்

3. சாத்தானை ஜெயித்தவரே
உம்மையே என்றும் துதிப்பேன்
சாபங்களை நீக்கியே சமாதானம் தருபவரே
சாட்சி சொல்லி மகிழ்ந்திடுவேன்

1869.மகிழ்ந்திருங்கள் மகிழ்ந்திருங்கள்

மகிழ்ந்திருங்கள் மகிழ்ந்திருங்கள்
கர்த்தரில் மகிழ்ந்திருங்கள் - 2
இதயத்தின் வேண்டுதல்
நிறைவேற்றுவார்- நம் - 2
அல்லேலூயா(3)அல்லேலூயா (3)

1. எல்லைகளை விரிவாக்குவார்
தொல்லைகள் போக்கிடுவார் - 2
எல்லாமே நமக்குத் தந்திடுவார்
இனி தோல்வியில்லை தோல்வியில்லை
வெற்றி வெற்றியே - 2

2. துயரங்களை நீக்கிடுவார்
காயங்கள் ஆற்றிடுவார் - 2
பயங்களைப் போக்கி நடத்திடுவார்
இனி தோல்வியில்லை தோல்வியில்லை
வெற்றி வெற்றியே - 2

3. ஆசீர்களைப் பொழிந்திடுவார்
சந்தோஷம் தந்திடுவார் - 2
கரங்களைப் பிடித்து நடத்திடுவார்
இனி தோல்வியில்லை தோல்வியில்லை
வெற்றி வெற்றியே - 2

E-Maj/000000/T-110

1870.இருள் கடந்து போயிற்று

இருள் கடந்து போயிற்று
ஒளி இங்கே வந்திற்று
எழும்பி பிரகாசி
நீ எழுந்து பிரகாசி

1. சுட்டெரிக்கும் தேவ ஆவி
சுற்றி நிற்பார் நம்மையே

2. கிருபை தேவன் நம்மையே
கரம் பிடிப்பார் சூழ்ந்துமே

3. வல்ல தேவன் நம்மையே
வலம் வருவார் நாளுமே

4. மகிமை தேவன் நம்மையே
நிரப்புவாரே மகிமையால்

5. சாத்தான் கோட்டை நொறுங்குமே
இயேசு என்னும் நாமத்தால்

6. இயேசு நாமம் போதுமே
ஜெயக்கொடியைப் பிடிப்பேனே

1871.ஒப்பில்லாத இன்பம் எங்க

ஒப்பில்லாத இன்பம் எங்க அப்பா மடியிலே
தப்பாமலே தருவார் எங்க ஆவியானவரே - 2
எப்போதும் அவர் பாதம் அமர்ந்திருந்தாலே
அப்பா இயேசு அபிஷேகத்தால் நிரப்பிடுவாரே - 2

1. ஓசையுள்ள கைத்தாளம் போற்றிப் பாடிடு
ஆசையோடு அன்பரோட பாதம் சேர்ந்திடு - 2
பாசம் உள்ளவரு வசதி நிறைந்தவரு
வானம் பூமி கடல் மலை
எல்லாவற்றிற்கும் சொந்தக்காரரு - 2

2. எகிப்து தேச கசப்புத் தண்ணீர் மாற்றிடுவாரே
ருசித்துப்பார்க்க ஜீவத்தண்ணீர் தந்திடுவாரே-2
சொன்னா செய்திடுவாரு மன்னா பெய்திடுவாரு
பாலும்தேனும் ஓடும் பரம கானானுக்குள் நடத்துவாரு-2

3. நம்பாமலே நின்று விட்ட தோமாவாகதே
நீ நிற்காமலே ஓடிப்போன யோனாவாகாதே-2
பாதத்தில் மரியாள் பாரு பாடுபட்ட பவுலப் பாரு
பாவ உலகில் பரமனோடே ஊழியத்த செய்யப்பாரு-2

1872.இராஜா என் தேவா

இராஜா என் தேவா உம் நாமம்
என் வாழ்வில் ஆனந்த ராகம்
அது எந்நாளும் என் இன்ப கீதம் - 2

1. இரட்சிப்பின் பாத்திரம் நான் எடுத்துக்கொண்டு
இரட்சகரே உந்தன் நாமம் தொழுதிடுவேன் - 2
சொல்லி முடியா ஈவுகள் தந்தீர் - 2
நல்லோனே வல்லோனே நெஞ்சாரப் போற்றுவோமே

2. உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்த்த
உன்னதங்களிலிருந்து வந்த நாமம் - 2
என் ஜீவன் பாடும் என் இயேசு நாமம் - 2
எந்நாளும் என் வாழ்வில் சந்தோஷம் தந்திடும்

3. விசுவாசக் கேடயத்தால் பெலன் தருவார்
வெற்றிக்கொடி பிடித்து நான் வலம் வருவேன் - 2
ஜீவாதிபதி என் இயேசு ராஜன் - 2
என் வாழ்வில் இருக்கும்போது எந்நாளும் ஜெயமே

1873.அதிசயம் கண்டிடுவேன்

அதிசயம் கண்டிடுவேன்
அற்புதம் பெற்றிடுவேன்
அதிசயம் இயேசுவே
நீரே அதிசயம் (8)
Marvellous Jesus You
are Marvellous (8)

1. துதித்திடும் போதெல்லாம்
அதிசயம் கண்டிடுவேன்
ஆபத்தில் அழைக்கையில்
விடுதலை அளிப்பீரே!

2, ஆராதிக்கும் போதெல்லாம்
அதிசயம் கண்டிடுவேன்
உம்மை நோக்கிப் பார்க்கையில்
நெருங்கி வருவீரே

3. இதுவரை கண்டிராத
அதிசயம் கண்டிடுவேன்
உம்மை நோக்கிப் ஜெபிகையில்
பதிலைக் கொடுப்பீரே

4. மனுஷரால் கூடாத
அதிசயம் கண்டிடுவேன்
பெலன் அற்ற வேளையில்
பெலத்தால் நிறைப்பீரே

5. ஆராளினிந்து முடியாத
அதிசயம் கண்டிடுவேன்
தாழ்மையில் இருக்கையில்
தூக்கி உயர்துமே!

1874.இராஜா ராஜா இயேசு ராஜா

இராஜா ராஜா இயேசு ராஜா
என்னை நீர் ஆண்டுகொண்டீர்

1. வாயின் வார்த்தைகளும் - என்
இதயத்தின் தியானங்களும்
உமது சமூகத்திலே பிரியமாகட்டும்

2. காலை மாலையிலும்
இரவு நேரத்திலும்
எந்தன் நினைவெல்லாம் பிரியமாகட்டும்

3. பரிசுத்தம் நீதி உண்மை
பரலோக தேவனே
எந்தன் வாழ்வினிலே என்றும் காணட்டும்

4. செல்லும் இடமெல்லாம்
என் கண்ணின் பார்வைகள்
உமது பார்வைக்கு பிரியமாகட்டும்

5. பாடும் பாட்டெல்லாம்
உமது நாமத்திற்கே
மகிமையுண்டாவதாக என்று சொல்லட்டும்

1875.இயேசு எந்தன் மேய்ப்பர்

இயேசு எந்தன் மேய்ப்பர்
எனக்கொன்றும் குறைவில்லை
அவரே எந்தன் நேசர்
நான் தாழ்ச்சி அடைவதில்லை
குறைவில்லை - 3
நான் தாழ்ச்சி என்றும் அடைவதில்லை-2

1. புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்தி-2
அவர் எந்தன் ஆத்துமவை தேற்றி
நீதியின் பாதையில் நடத்தி - என்னை

2. மரண இருளின் பள்ளத்தாக்கு
பொல்லாப்புக்கு ஒருபோதும் பயப்படேன்-2
தேவரீர் என்னோடு இருக்கிறீர்-2
உம்கோலும் உம்தடியும் என்னைத் தேற்றும்-2

3. சத்துருவின் முன்பு ஒரு பந்தி
தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணி-2
பாத்திரம் வழிந்தோட செய்வீர்-2
பரலோகில் இடம் ஒன்று தந்தீர்

E-Maj/000000/T-110

1876.இன்று கண்ட எகிப்தியனை

இன்று கண்ட எகிப்தியனை காண்பதில்லை
இன்று கண்ட துன்பம் இனி வருவதில்லை - 2
வாதை உந்தன் கூடாரத்தை அணுகிடாது-2
உன் பாதம் கல்லில் இடறாது-2

1. செங்கடல் பிளந்து வழிகொடுக்கும்
யோர்தான் இரண்டாக பிரிந்துவிடும்-2
எரிகோ தூளாக இடிந்து விழும்
கர்த்தரே தெய்வம் என்று முழுங்கிடுவாய்-2

2. நோய்கள் உன்னை நெருங்குவதில்லை
பேய்கள் உன்னை அணுகுவதில்லை-2
யாக்கோபுக்கு விரோதமான மந்திரமில்லை
இஸ்ரவேலுக்கெதிரான குறியுமில்லை

3. மலைகளை மிதித்து நொறுக்கிடுவாய்
குன்றுகளை தவிடு பொடியாக்குவாய்-2
சேனைகளின் தேவன் உன்னோடு இருக்கும்போது
மனித சக்தி உன்னை ஒன்றும் செய்யாது-2

E-Maj/000000/T-110

1877.கல்வாரியே கல்வாரியே

கல்வாரியே கல்வாரியே
கல்மனம் உருக்கிடும் கல்வாரியே

1. பாவி துரோகி சண்டாளனானாயினும்
பாதகம் போக்கி பரிவுடன் இரட்சித்த

2. எண்ணும் நன்மை ஏதம்
என்னிலே இல்லையே
பின்னையேன் நேசித்தீர்
என்னயென் பொன் நாதா

3. இவ்வித அன்பை
நான் எங்குமே காணேனே
எவ்விதம் இதற்கீடு ஏழை நான் செய்குவேன்

1878.மரணமே உன் கூர் எங்கே

மரணமே உன் கூர் எங்கே
பாதாளமே உன் ஜெயம் எங்கே-2
கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவு எனக்கு ஆதாயம் -2
மரணம் என்னைத் தொடுவதில்லையே-2
இரத்தம் ஜெயம் இயேசுவின் இரத்தம் ஜெயம்-4

1. கர்த்தரின் கரம் என்னோடு
நான் எதற்கும் அஞ்சிடேனே
அவர் உள்ளங்கையில் வரைந்தள்ளதால்
நான் எதற்கும் கலங்கிடேனே
இவ்வுலக பாடுகள் என்னை என்ன செய்திடும்
ஆண்டவரின் கிருபை என்னோடு

2. சேனைகளின் தேவன் என்னோடு
எதிரிபடை அணுகுவதில்லை
சாத்தானின் சதி நாசங்கள்
எனை ஒருபோதும் நெருங்குவதில்லை
கர்த்தரின் கரம் பராக்கிரமம் செய்யும்-2
ஆண்டவரின் வல்லமை என்னோடு-2

3. ஆவியான தேவன் என்னோடு
அசுத்தாவி அணுகுவதில்லை
கிறிஸ்துவின் சிந்தை என் மேலே
நான் ஓடி ஓடி ஊழியம் செய்வேன்
பரலோகமே எங்கள் இல்லமே - 2
மரித்தாலும் பிழைப்போமே - 2

1879.கர்த்தரை நான் எக்காலத்திலும்

கர்த்தரை நான் எக்காலத்திலும்
ஸ்தோத்தரிப்பேன் என் வாழ்வினிலே - 2
எப்போதும் அவர் துதி நிறைந்திருக்கும்
என் நாவினிலே - 2

1. நித்தம் என் உள்ளம் கர்த்தருக்குள்ளே
இத்தரை மீது மேன்மை பாராட்டும் - 2
சிறுமைப்பட்டோரதை கேட்கின்ற நேரம்
பெருமிதம் கொள்வார் பேரின்பம் காண்பார்- 2
என்னோடே மன்னவனை
மகிமைப்படுத்துங்கள் உயர்த்திடுங்கள் - 2

2. ஆண்டவர் அவரை தேடிநின்றேனே
வீண்பயம் நீங்க செவிகொடுத்தாரே - 2
வேண்டுதலோடே வேந்தனின் முகத்தை
காண்கின்ற வேளை திடனளித்தாரே - 2
நல்லவர் கர்த்தர் என்பதை
நாளும் ருசித்து களித்திடுங்கள் - 2

3. சிங்கத்தின் சிசுக்கள் தங்களின் இரைக்காய்
தாழ்ச்சியடைந்தே ஏங்கிடக் கூடும் - 2
துங்கவன் அவரை நம்பிடுவோர்க்கு
குறைவின்றி வாழ்வில் நன்மைகள் கூடும் - 2
காக்கும் நல்தேவனை நம்பிடுவேன்
பாக்கியவான் என வாழந்திருப்பேன் - 2

E-Maj/000000/T-110

1880.அனைத்தையும் அருளிடும்

அனைத்தையும் அருளிடும்
எனக்கெனத் தந்திடும்
வலக்கரம் என்னை உயர்த்திடும்
என் தேவனே - 2

யெகோவாயீரே யெகோவாயீரே
யெகோவாயீரே யெகோவாயீரே
- அனைத்தையும்

1. புல்லுள்ள இடங்களில் எந்தனை
நித்தமும் சுகமாய் நடத்திடும்
கழுகினைப் போல் என்னை சுமந்திடும்
என் தேவனே - 4

2. செட்டையின் நிழலில் அடைக்கலம்
தீங்குகள் நேராமல் காத்திடும்
கழுகினைப் போல் என்னை சுமந்திடும்
என் தேவனே - 4

3. சிலுவையில் எந்தன் நோய்களை
சுமந்தீர் உந்தன் சரீரத்தில்
அன்பே நான் சுகமானேனே
என் தேவனே - 4

4. தேவனால் பிறந்தவன் எவனுமே
உலகத்தை ஜெயிப்பவன் என்றுமே
மலைகளையும் பகலாக்குதே
என் தேவனே - 4

1881.இயேசு நல்லவர் பாட்டுப்

இயேசு நல்லவர் பாட்டுப் பாடுங்கள்
என்றும் நல்லவர் தாளம் போடுங்கள் - 2
ஆனந்த கீதங்கள் பாடிடுங்கள்
ஆண்டவர் இயேசுவை உயர்த்திடுங்கள் - 2

1. இரக்கத்தில் ஐசுவரிய சம்பன்னரவர் - அவர்
இரக்கங்கள் காலைதோறும் புதியவைகள் - 2
மனதுருக்கம் நிறைந்தோரவர்
மன்னிப்பதில் தயைபெருத்தோரவர் - 2
கர்த்தர் நல்லவர் என்று பறை சாற்றுங்கள் -2

2. கர்த்தர் நல்லவர் என்று ருசித்துப்பாருங்கள
அவர் மேல் நம்பிக்கை வைப்போர்
பாக்கியவான்கள் - 2
உலகெங்கும் சென்றிடுங்கள்
ஊரெங்கும் சொல்லிடுங்கள் - 2
கர்த்தர் நல்லவர் என்று பறை சாற்றுங்கள் -2

3. சாத்தானை சிலவை மீது ஜெயித்தாரவர்
சாவின் கூர் முற்றுமாய் முறித்தாரவர் - 2
பாதாள வல்லமைகள்
பரிகரிக்க பிறந்தார் அவர் - 2
கர்த்தர் நல்லவர் என்று பறை சாற்றுங்கள் -2

1882.உமது சமூகம் வரும்

உமது சமூகம் வரும்போதெல்லாம்
எங்க கண்ணீரெல்லாம் மாறுகின்றது - 2
உமது சமூகத்தில் நித்திய மகிழ்ச்சி
உமது சமூகத்தில் பேரானந்தம்
ஒரு நாளும் மாறாதய்யா
ஒரு நாளும் ஒருபோதும் மாறாது மாறாது
உம் சமூகமே உம் சமூகமே

1. மேற்கிலும் கிழக்கிலும் வடக்கிலும் தெற்கிலும்
அலைந்து நான் திரிந்தாலும் விடுதலை இல்லையே-2
நித்திய ஜீவனுள்ள வார்த்தைகள் உம்மிடம் உண்டு-2
உமது வார்த்தையால் திருப்தியாகிறேன் - 2

2. பன்னிரெண்டு வருடமாய் பெரும்பாடுள்ள ஒரு பெண்
அனேக வைத்தியரால் கைவிடப்பட்டவளாய் - 2
இயேசுவின் சமூகத்திற்கு ஓடோடி வந்தாளே - 2
இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டதால் சுகமானாள்-2

3. இஸ்ரவேலின் சேனைகள் முன்னே
கடந்திட்ட தேவசமூகம்
ஒருவரும் பெலவீனனாய் இருந்ததும் இல்லையே - 2
இரவினில் அக்கினிஸ்தம்பம் பகலில் மேகஸ்தம்பம் -2
பாதுகாத்து நடத்தினீரே சேனைகளின் தேவனே -2

4. உமது சமூகத்திலே வாசமாயிருப்பவர்கள்
திருப்தியாய் சாப்பிடவும் நல்ல வஸ்திரம் தரிக்கவும்-2
கையிட்டு செயகின்ற வேலையெல்லாம் ஆசீர்வதிப்பார்-2
ஆசீர்வாத வாய்க்காலாய் எங்களை மாறச்செய்வார்-2

1883.இஸ்ரவேலின் துதிகளில்

இஸ்ரவேலின் துதிகளில் வாசஞ்செய்யும்
எங்கள் தேவன் நீர் பரிசுத்தரே-2
உம்வாக்குள் பல தந்து அழைத்து வந்தீர்
ஒரு தந்தையைப் போல என்னை தூக்கிசுமந்தீர்-2

நீர்மாத்ரமே (3) எங்கள் சொந்தமானீர்
உம்மை ஆராதிப்போம் ஆர்ப்பரிப்போம்
உம் நாமத்தினால் என்றும் ஜெயமெடுப்போம்-2

1. எதிர்காலம் இல்லாமல் ஏங்கி நின்றோம்
காலத்தைப் படைத்தவர் தேடி வந்தீர்-2
சிறையிருப்பை மாற்றித் தந்தீர்
சிறுமையின் ஜனம் என்னை உயர்த்தி வைத்தீர்-2

2. செங்கடலைக் கண்டு சோர்ந்து போனோம்
யோர்தானின் நிலைகண்டு அஞ்சி நின்றோம்-2
பயப்படதே முன்செல்கிறேன்
என்றுரைத்து என்னை நடத்தி வந்தீர்-2

3. எதிரியின் படை என்னை சூழும்போது
ஓங்கிய புயம்கொண்டு யுத்தம் செய்வீர்-2
பாடச் செய்தீர் குதிக்கச் செய்தீர்
எரிகோவின் மதிலை மிதிக்கச் செய்தீர்-2

1884.என்னதான் ஆனாலென்ன

என்னதான் ஆனாலென்ன
என்மீட்பர் உயிரோடுண்டு-2
தொடர்ந்து பயணம் செய்வேன்
என் துணையாளர் முன் செல்கிறார்

1. காடு மேடு கடந்து சென்றாலும்
கரம்பிடிதென்னை நடத்துகின்றாரே-2
ஆறுகளை நான் கடக்கும் போதும்
மூழ்கி நானும் போவதில்லை
அக்கினியில் நடக்கும் போதும்
எரிந்த நானும் போவதில்லை-2

2. மரணமே ஆனாலுமென்ன
ஜீவனே ஆனாலுமென்ன-2
பரிசுத்தரின் பின்னே செல்வேன்
திரும்பி நானும் பார்க்கமாட்டேன்
எனது ஜீவன் உமது கரத்தில்
ஒருவரும் பறிப்பதில்லை-2

3. கிறிஸ்து எனக்கு ஜீவன் தானே
சாவு எனக்கு ஆதாயமே-2
தேவனின் அன்பிலிருந்து
பிரிப்பவர்கள் யாருமில்லை
உமது பாதம் எனது தஞ்சம்
எனது கோட்டை நீர்தானே-2

E-Maj/000000/T-110

1885.அப்பா உம் சமுகத்திலே

அப்பா உம் சமுகத்திலே
எப்போதும் ஆராதனை
அப்பாவைத் துதிக்கையிலே
எங்க உள்ளமெல்லாம் பொங்குதய்யா

1. தாயைப் போல தேற்றுகிறீர்
தகப்பனைப் போல சுமக்கின்றீர்-2
சோதனை வருகின்ற நேரமெல்லாம்
தாங்கி எங்களை நடத்துகிறீர்-2
தாங்கி எங்களை நடத்துகிறீர்

2. கூப்பிடும் காக்கைக் குஞ்சுகட்கும்
ஆகாரத்தை தருகின்றீர்-2
அவைகளைப் பார்க்கிலும் எங்களையே
மிகவும் நேசித்து நடத்துகிறீர்-2
மிகவும் நேசித்து நடத்துகிறீர்

3. எங்கள் மீது கண்ணை வைத்து
ஆலோசனை சொல்லுகிறீர்-2
தீங்கு வருகின்ற நேரமெல்லாம்
கூடார மறைவில் மறைக்கின்றீர்-2
கூடார மறைவில் மறைக்கின்றீர்

4. உம்மாலே சேனைக்குள் பாய்ந்திடுவேன்
உம்மாலே மதிலையும் தாண்டிடுவேன்-2
தீயையும் தண்ணீரையும் கடந்திடுவோம்
செழிப்பான தேசத்தில் கொண்டு வைப்பீர்-2
செழிப்பான தேசத்தில் கொண்டு வைப்பீர்

1886.எல்ஷடாய் என்ற நாமம்

எல்ஷடாய் என்ற நாமம் உடையவர்
எங்கள் மத்தியிலே அவர் வந்திருக்கிறார்-2
வானம் போற்றுது பூமி வாழ்த்துது-2
சகல ஜீவன்களும் வாழ்த்தி உம்மைப் பாடுது
சர்வ வல்லவர் நித்தியமானவர்
சகலத்தையும் செய்ய வல்லவர்

1. ஒருவரும் சேராத ஒளியினிலே வாழ்பவரே
நீதியின் சூரியனே செட்டைகளின் ஆரோக்கியம்-2
சர்வ வல்லவர் நித்தியமானவர்
சகலத்தையும் செய்ய வல்லவர்-2

2. வானாதி வானங்கள் போற்றுகின்ற தெய்வம் நீரே
அகில உலகத்தையும் ஆளுகின்ற தெய்வம் நீரே-2
சர்வ வல்லவர் நித்தியமானவர்
சகலத்தையும் செய்ய வல்லவர்-2

3. யார் உம்மை மகிமைப்படுத்தாமல் இருக்கலாம்
தேவரீர் ஒருவரே பரிசுத்தர் பரிசுத்தர்-2
சர்வ வல்லவர் நித்தியமானவர்
சகலத்தையும் செய்ய வல்லவர்-2

1887.மலைகளெல்லாம் வழிகளாக்கு

மலைகளெல்லாம் வழிகளாக்குவார்
நம் பாதையெல்லாம செவ்வையாக்குவார்-2
கலங்காதே திகையாதே
நிச்சயமாகவே முடிவு உண்டு
ஆபிரகாமின் தேவன் அவர் ஈசாக்கின் தேவன்
யாக்கோபின் தேவன் அவர் நம்முடைய தேவன்-2

1. பெரிய பர்வதமே எம்மாத்திரம்
செருபாபேல் முன்னே சமமாகுவாய்-2
முத்திரை மோதிரமாய் தெரிந்து கொண்டாரே-2
இயேசுவின் நாமத்தாலே ஜெயம் பெறுவோமே-2

2. பூமி அனைத்திற்கும் ராஜாதி ராஜன்
உன்னதமானவரை துதியாலே உயர்த்திடுவோம்-2
வெண்கல கதவெல்லாம் உடைத்திடுவாரே-2
இருப்புத் தாழ்ப்பாளை முறித்திடுவாரே-2

3. தடைகளை உடைப்பவர் நம்முன்னே போவார்
ஓசன்னா ஜெயமென்று ஆர்ப்பரிப்போமே-2
வில்லை உடைத்திடுவார் ஈட்டியை முறித்திடுவார்-2
இரதங்களை அக்கினியால் சுட்டெரிப்பாரே-2

E-Maj/000000/T-110

1888.ஒருகோடி ஸ்தோத்திரங்கள்

ஒருகோடி ஸ்தோத்திரங்கள் ஏறெடுப்போமா
பரிசுத்தரின் பாத்திலே அர்ப்பணிப்போமா-2
மனதார வாழவைப்பார் மகிமையின் தேவனவர்
பரலோகம் சேர்த்திடுவார் பரலோக ராஜனவர்-2
துதியும் கனமும் மகிமை செலுத்திப் பாடிக்கொண்டாடு-2

1. மனுகுல மீட்புக்காக வந்தவரும் இவரே
பாவங்கள் சாபங்கள் மன்னித்தவர் இவரே-2
பரலோக வாசலைத் திறந்தவர் இவரே
நித்திய ஜீவனையும் தந்தவரும் இவரே-2

2. உலகத்தில் வந்துதித்த மெய்யான ஒளியே
நீதியின் சூரியனாய் வந்தவரும் இவரே-2
பாவ இருளை நீக்கியவர் இவரே
பரிசுத்த வாழ்க்கையை தந்தவரும் இவரே-2

3. வானிலும் பூமியிலும் உயர்ந்தவர் இவரே
எல்லா நாமத்திலும் மேலான நாமமே-2
பேய்களும் நோய்களும் நடுங்கியே ஓடுதே
வல்லமையுள்ள தேவனும் இவரே-2

E-Maj/000000/T-110

1889.ஜோரா கைய தட்டிப் பாடுங்க

ஜோரா கைய தட்டிப் பாடுங்க
இஸ்ரவேலின் பரிசுத்தர பாடுங்க-2
துதிக்குப் பாத்திரர் கனத்துக்குப் பாத்திரர்
மகிமைக்குப் பாத்திரர் நீர்தானய்யா-2

ஜோரா ஜோரா ஜோரா கைய தட்டிப் பாடுங்க
இஸ்ரவேலின் பரிசுத்தர பாடுங்க-2

1. நீதிமான்கள் துதிக்கும் போது
வெற்றி கொண்டாட்டம் பெருகுதுங்க-2
நீதிமான்கள் பெருகும் போது
பட்டணமெல்லாம் களிகூறுதே-2
உன்னதமான கர்த்தரையே
உயர்த்தி பாடிடுவோம்-2
மகிழ்ந்து பாடி கொண்டாடுவோம்-2

2. நமது தேவன் பெரியவரும்
ஸ்தோத்தரிக்கத் தக்கவரும்-2
தமது மகிமையின் பிரசன்னத்தால்
பர்வதம் மெழுகுபோல் உருகிடுதே-2

3. நமது தேவன் எழுந்தருளி
சத்துருக்களை சிதறப்பண்ணி-2
சீயோனுக்கு தயை செய்து
சிறையிருப்பைத் திருப்பிடுவார்-2

1890.என் பெலனாகிய கர்த்தாவே

என் பெலனாகிய கர்த்தாவே
நான் உம்மையே நம்பியுள்ளேன்
நான் கைவிடப்படுவதில்லை-2

1. என் கால்கள் சறுக்கும் போதெல்லாம்
தாங்குதய்யா உம் கிருபை-2
நான் அழுது புலம்பும் நேரமெல்லாம்-2
அணைக்குதய்யா உம் கிருப-2

2. நான் மரண இருளில் நடந்தாலும்
பொல்லாப்புக்குப் பயப்படேன்-2
உங்க கோலும் தடியும் தேற்றுதய்யா-2
அனுதினம் வெற்றிப் பாதை காட்டுதய்யா-2

3. உம்மாலே ஒரு சேனைக்குள்ளே
பாய்ந்து நானும் சென்றிடுவேன்-2
உம்மாலே ஒரு மதிலையுமே-2
தாண்டி நானும் சென்றிடுவேன்-2

4. நான் போகின்ற பாதை எல்லாமே
உம் சமுகம் செல்லுதய்யா-2
கோணலான வழிகளெல்லாம்-2
செவ்வையாக மாறுதய்யா-2

1891.திறந்த வாசல் நமக்குண்டு

திறந்த வாசல் நமக்குண்டு
ஒருவனும் பூட்ட முடியாது
தேவன் திறந்திட்ட வாசலது
ஆசீர்வாதம் பெருவோம்

1. கர்த்தர் நமக்கு முன்னே சென்று
கோனலானதை செவ்வையாக்கி
தடைகளை முற்றிலும் நீக்கியே
வாசலில் பிரவேசிக்க கிருபை செய்வார்

2. கர்த்தர் நமது பெயரைச் சொல்லி
அழைத்து ஆசீர்வதித்திடுவார்
உள்ளங்கையில் வரைந்தென்னை
நித்தம் காத்து நடத்திடுவார்

3. வெண்கல கதவை உடைத்திடுவார்
இருப்புத் தாழ்ப்பாளை முறித்திடுவார்
பொக்கிஷங்களும் புதையல்களும்
தேவன் நமக்கு தந்திடுவார்

4. தேவனின் பரிசுத்த நாமத்தை
நமக்குத் தரித்து மகிழ்ந்திடுவார்
தெய்வீக வெளிப்பாடு பெற்று நாமும்
அவருக்கு ஊழியம் செய்திடுவோம்

5. வெட்கப்படாமல், கலங்கிடாமல்
இன்றும் என்றும் வாழ்ந்திடுவோம்
எக்காள சத்தம் தொனிக்கையில்
அவரோடு நாமும் பறந்திடுவோம்

1892.இராஜாதி ராஜன் தேவாதி தேவன்

இராஜாதி ராஜன் தேவாதி தேவன்
அதிசயமானவரே - இயேசு
விடுவித்துக் காப்பவரே - 2
அல்லேலூயா அல்லேலூயா

அல்லேலூயா ஆமென் அல்லேலூயா - 2

1. செம்மறி ஆடு கூட்டம் நாங்க
இயேசுவின் பின்னே சென்றிடுவோம் - 2
பலவித சோதனை வந்தாலும்
எதுவும் எங்கள அசைப்பதில்லை - 2

2. என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்துவினால்
எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு - 2
பாடிடுவோம் துதித்திடுவோம்
சாத்தான மிதித்திடுவோம் - 2

3. ஆட்டுக்குட்டி இரத்தத்தாலே தோய்க்கப்பட்டோம்
தோய்த்து நாங்கள் வெளுக்கப்பட்டோம் - 2
கழுகுபோல பெலனடைந்து
கர்த்தருக்குள் பறந்திடுவோம் - 2

1893.எல்லோரும் வாருங்கள்

எல்லோரும் வாருங்கள் ஒன்றாக கூடுங்கள்
பரலோக ராஜாவை வாழ்த்துவோம்
இந்த பூமியெல்லாம் பரலோகமாக்குவோம்-2
வாருங்கள் ஒன்றாய்க் கூடுங்கள்
பரலோக ராஜாவை வாழ்த்துங்கள் - அல்லேூயா

1. காலம் இனி செல்லாது தேவ கோபம் நெருங்குது
பூமியின் குடிகளே வாருங்கள்-2
பரலோக ராஜ்ஜியம் சமீபமாய் இருக்குது
மனந்திரும்பி எல்லோரும் வாருங்கள்

2. எதிரியான சாத்தானை தேவனின் வார்த்தை கொண்டு
முற்றிலுமாய் அவனைத் தோற்கடிப்போம்-2
ஆட்டுக்குட்டி இரத்தத்தாலும் சாட்சியின் வசனத்தாலும்
முற்றிலுமாய் அவனைத் தோற்கடிப்போம்

3. மரண இருள் தேசத்திலே குடியிருக்கும் யாவர்மேலும்
நீதியின் சூரியன் உதித்து விட்டார் - 2
மரணத்தை ஜெயித்தவராம் மகிமையின் ராஜாவாம்
இயேசுவை நோக்கி வாருங்கள்

1894.பரலோகத் தந்தையே

பரலோகத் தந்தையே (2) பரிசுத்த தெய்வம் நீரே
பலகோடி தேவர்களில் உயர்ந்தவர் உன்னதர்
பரிசுத்த தெய்வம் நீரே
பூமிக்கெல்லாம் ஆண்டவரும் நீரே
பரலோகத்தில் உயர்ந்தவரும் நீரே
ஒருமனதோடு கூடி வந்தோம்
உன்னத தேவனைத் தொழுதிடவே-2

ஓயாத புகழ்ச்சி ஓயாத கனமும்
நிறைந்த என் தேவனைத் தொழுக வந்தோம்-2

1. அப்பத்தைக் கேட்டா கல்லைக் கொடுப்பானா
மீனைக் கேட்டா பாம்பைக் கொடுப்பானா
முட்டையைக் கேட்டா தேளைக் கொடுப்பானா
பொல்லாத தகப்பனே நல்ல ஈவை அறியும்போது
இம்மைக்கும் மறுமைக்கும் பரம தகப்பன் நீர்தானே

2. பறந்து காக்கும் பட்சியைப் போல
தேவன் தினமும் காத்திடுவாரே
தகப்பன் பிள்ளையை சுமப்பது போல
தேவன் தினமும் சுமந்திடுவாரே
தாயைப்போல் தேற்றுவார்
தகப்பனைப் போல சுமந்திடுவார்

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவாரே
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவாரே
கர்த்தா என் மேய்ப்பராய் இருக்கின்ற போது
தாழ்ச்சி என்பது வாழ்வினில் இல்லை
நன்மையும் கிருபையும்
வாழ்நாள் எல்லாம் தொடர செய்வார்

1895.இயேசு ராஜாவோடு போகத்

இயேசு ராஜாவோடு
போகத் துணிந்துவிட்டேன்-2
பொய்யான வாழ்க்கை விட்டு
மெய்யான வாழ்வைக் காண-2
இந்த உலகத்தை மறந்துவிட்டு
இயேசுவின் பின் செல்லுவேன்-2

1. மான் நீரோடையை
வாஞ்சித்து கதர்வதுபோல் - 2
என் நேசரின் சமூகம்
இருப்பதையே நாடுவேன் - 2

2. மரணமே ஆனாலும்
ஜீவனேயானாலும் - 2
என் இயேசுவுக்காக நான்
பாடுகள் அனுபவிப்பேன் - 2

3. நல்ல போராட்டத்தை
போராடி முடித்திடவே - 2
அனுதினம் சிலுவைதனை
சுமந்து நான் சென்றிடுவேன் - 2

1896.பறக்குது (4) சிலுவைக்கொடி

பறக்குது பறக்குது பறக்குது பறக்குது சிலுவைக்கொடி
எங்கள் தேசமெங்கும் தமிழ்நாடெங்கும்
எங்கள் வீடெங்கும்
தேவனின் ராஜ்ஜியம் வந்தது - 2
ஜெசேனை எழும்பிடுங்க(2) துதிசேனை எழும்பிடுங்க(2)
எக்காளம் ஊதிடுங்க எதிரிகளைத் துரத்திடுங்க-2

ஒன்றுகூடுங்கள் ஒருமனமாகிடுங்கள்-2 - ஒன்றுசேர்ந்து
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்-2

1. அனலுமின்றி குளிருமின்றி வாழ்ந்த காலம் போயாச்சு-2
எழுந்து நின்று போரடிக்கும் காலம் இனி வந்தாச்சு-2
தேவனின் ஆவியால் நிரம்பிடுவோமே-2
பெலத்தின் மேலேதான் பெலன் அடைந்திடுவோமே-2
அந்த சத்துரு கோட்டை எல்லாமே தகர்த்திடுவோமே-2

2. தூங்கி தூங்கி விழுந்த போனகாலம் எல்லாம் போயாச்சு-2
விழித்திருந்து ஜெபிக்கின்ற காலம் இனி வந்தாச்சு-2
ஜெபத்தின் ஆவியால் நிரம்பிடுவோமே - 2
நம் தேசத்திற்காக கதறிடுவோமே - 2
நம் தேசமெல்லாம் பரலோகமாய் மாற்றிடுவோமே - 2

3. சுயநலமாய் வாழ்ந்து வந்த காலம் எல்லாம் போயாச்சு-2
தேவனுக்காய் எழும்பி நிற்கும் காலம் இனி வந்தாச்சு-2
எங்கள் வாழ்க்கையின் நோக்கமெல்லாம்
தேவனின் ராஜ்ஜியமே - 2
அவர் சித்தம் செய்வதே
எங்கள் வாழ்க்கையின் நோக்கமே-2
அவர் சித்தம் ஒன்றே பூமியிலே செய்வது முடிப்போமே-2

1897.ஏகமாய் துதித்திடுவோம்

ஏகமாய் துதித்திடுவோம்
இயேசுவை உயர்த்திடுவோமே
சத்துருவின் வேர் அறுக்கும் நாளிது
இன்று கண்ட எகிப்தியனை
இனிமேல் காண்பதில்லை
சத்துருவின் வேர் அறுக்கும் நாளிது

1. ஆட்டுக்குட்டி இரத்தமும் சாட்சியின் வசனமும்
நமக்குள் இருப்பதால்
முற்றிலும் ஜெயம் கொள்ளுவோம் - 2
நமக்குள் இருப்பதால்
முற்றிலும் ஜெயம் கொள்ளுவோம் - 2

2. நம்மை பெலப்படுத்தும் கிறிஸ்துவினாலே
எல்லாமே செய்திட பெலனை தந்திடுவார்-2
எல்லாமே செய்திட பெலனை தந்திடுவார்-2

3. கர்த்தர் நம்சார்பாய் இருக்கின்ற போது
நமக்கு எதிராய் நிற்பவன் யாருமில்லை-2
நமக்கு எதிராய் நிற்பவன் யாருமில்லை-2

4. நாம் நம்மில் அன்புகூறும் கிறிஸ்துவினாலே
முற்றிலும் ஜெயம் கொண்டு வாழ்ந்திடுவோமே-2
முற்றிலும் ஜெயம் கொண்டு வாழ்ந்திடுவோமே-2

1898.எல்லாமே நீர்தானய்யா

எல்லாமே நீர்தானய்யா
எல்லாமே நீர்தானய்யா - 2
என்துவக்கமும் நீர் என் முடிவும் நீர்
எல்லாமே நீர்தானய்யா - 2

1. இந்த பூமியில் உம்மையல்லாமல்
யாருமே இல்லை நாதா - 2
பூமியில் வாழ்ந்தாலும்
பரலோகம் நான் சென்றாலும் - 2
நீரின்றி யாருமில்லை - 4

2. என் ஜீவனைப் பார்க்கிலும்
கிருபை போதுமே இயேசுநாதா - 2
பரிசுத்தமானவரே ஜீவனின் அதிபதியே - 2
கிருபையைத் தாருமய்யா - 4

3. இந்த பூமியும் சொந்தமுமில்லை
எனக்கு எல்லாமே நீரே - 2
எனக்கென்று எதுவுமில்லை
கூடவும் வருவதில்லை -2
கடைசி வரை நீரே - 4

1899.உங்க கிருபை இல்லாம

உங்க கிருபை இல்லாம வாழ முடியாதப்பா
உங்க கிருபை இல்லாம வாழ தெரியாதப்பா
நான் நிற்பதும் உங்க கிருபை தான்
நான் நிலைப்பதும் உங்க கிருபை தான்
நான் நிற்பதும் நிலைப்பதும் உங்க கிருபைதானப்பா

1. காலையில் எழுந்தவுடன் புதுகிருபை தாங்குது
வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சிக்குள்ளே நடத்துது - 2
நிர்மூலமாகாமலே இதுவரை காத்தீர் ஐயா
பெலவீன நேரங்களில் உம் கிருபை தாங்கினதய்யா
என் அரணும் என் கோட்டை
உயர்ந்த அடைக்கலம் நீரே-2

2. உமது கிருபையினால் சத்துருக்களை அழித்திடுவீர்
ஆத்துமாவை சஞ்சலப்படுத்தும் யாவரையும் சங்கரிப்பீர்-2
உமது அடிமை நான் ஐயா எனது தெய்வம் நீர் ஐயா
நான் நம்பும் கேடகம் நீரே
என் கோட்டை துருகம் நான் நம்பும் கேடகம் நீரே-2

3. எப்பக்கம் நெருக்கப்பட்டும்
ஒடுங்கி நானும் போவதில்லை
கிருபை மேல் கிருபை தந்து
கால் ஊன்றி நடக்கச் செய்தீர் - 2
மான்களின் கால்களைப் போல
பெலனாய் ஓடச்செய்தீரேஉயர்ந்த ஸதலங்களில்
என்னை திடனாய் நடக்கச் செய்தீரே
என் அரணும் என் கோட்டை
உயர்ந்த அடைக்கலம் நீரே-2

1900.உம்மை உறுதியாய் பற்றிக்

உம்மை உறுதியாய் பற்றிக் கொண்டோம்
உம்மை உறுதியாய் நம்பி உள்ளோம்
என் உயர்ந்த கன்மலை என் இயேசுவே

பெரும் காற்றோ பெரும் மழையோ
பெரும் வெள்ளமோ மோதியே அடிக்கையில்
அசைக்கப்படுவதில்லை
அசைக்கப்படுவதில்லை - 3

1. உறுதியான கன்மலைமேல்
எனது கால்களை நிற்கச் செய்தீர்
உம்மைத் துதிக்கும் புதுப்பாடல்
நாவில் தந்து மகிழச் செய்தீர்
கோணலான வழியெல்லாம்
செவ்வையாக மாறுதே
நம்மை அழைத்தவர் கைவிடமாட்டார்
நித்தம் நம்மை நடத்துவார்

